PSGR Krishnammal College for Women

# PRANAV JOURNAL OF TAMIL

ISSN: 2582-9599

தமிழ்த்துறை (சுயநிதிப்பிரிவு)

பூசாகோஅர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி

மற்றும்

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

இணைந்து நடத்திய

இணையவழிப் பன்னாட்டுக் கருத்தரங்கம்

கட்டுரைகளின் தொகுப்பு நூல்

## பகுதி- 1

# பாராட்டுரை



**டாக்டர். நந்தினி ரங்கசாமி,**

**கல்லூரித் தலைவர்,**

**பூசாகோஅர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி,**

**கோயம்புத்தூர் - 641 004**

**மெய் வருத்தம் பாரார் பசிநோக்கார் கண் துஞ்சார்**
**எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் - செவ்வி**
**அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்**
**கருமமேகண் ஆயினார். - நீதிநெறி விளக்கம்**

எண்ணி முடிப்பதில் பேரார்வமும் அதை முடிக்கும் வல்லமையும் பெற்றவர்கள் கோவை மாநகரில் சிறந்த பெண்கல்வி நிறுவனமாக விளங்கும் பூசாகோஅர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி. 1963ஆம் ஆண்டு தெய்வத்திரு ஜி.ஆர்.கோவிந்தராஜுலு அறக்கட்டளையின் கீழ் நிறுவப்பட்டது. நிறுவனரின் தாயார் பெயரால் அழைக்கப்படும் இக்கல்லூரி அறுபதாண்டுகளுக்கு முன்பே தொலைநோக்குப் பார்வையோடு பெண்களுக்கென உருவாக்கப்பட்ட தனித்துவம் வாய்ந்த முதன்மைக் கல்லூரியாக விளங்குகிறது. இக்கல்லூரியின் தமிழ்த்துறை நீண்ட நெடிய பாரம்பரியத்தையுடையது. பூசாகோஅர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி தோன்றிய நாள் முதல் இன்று வரை பல சிறப்பான செயல்பாடுகளைச் செய்துவருகிறது.

தமிழ்த்துறை சந்திரகாந்தம் தமிழ்மன்றம், தொல்காப்பியர் தமிழ் ஆய்வுமையம் ஆகியவற்றின் மூலம் மாணவிகளின் அறிவுத்திறனை மேம்படுத்தி வருகிறது. கல்விப்பணி மட்டுமின்றி சமூகப்பணியிலும் இணைந்து செயல்பட்டுவரும் தமிழ்த்துறை பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் மற்றும் தமிழ் வளர்ச்சி மன்றம், ஆஸ்திரேலியா, தமிழ்நாடு உளவியல் சங்கம், சென்னை ஆகியவற்றுடன் இணைந்து நடத்திய **“தமிழ் இலக்கியங்களில் உளவியல் சிந்தனைகள்”** என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடத்துவது மகிழ்வுக்குரியது மட்டுமல்ல பெருமைக்குரியதுமாகும். மனித சமுதாயத்தின் வளர்ச்சியையும் பண்பாட்டையும் அறிந்துகொள்ள உதவும் ஆவணங்களுள் ஒன்று இலக்கியம். காலத்தின் பிரதிபலிப்பாக விளங்கும் இலக்கியங்கள் வெளிப்படுத்தும் உளவியல் சிந்தனைகளை நாம் ஆய்வுக்குட்படுத்தும்போது அவற்றைப் பற்றிய தெளிவும் பெருமிதமும் மேலோங்குகிறது. தமிழ்த்துறையினரின் முயற்சிக்கு பாராட்டுக்கள். மேலும் மேலும் வளர வாழ்த்துக்கள்.

**டாக்டர். நந்தினி ரங்கசாமி**

# <u>மகிழ்வுரை</u>



**முனைவர் நா.யசோதாதேவி,**

**கல்லூரிச் செயலர்,**

**பூசாகோஅர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி,**

**கோயம்புத்தூர் - 641 004.**

**"நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்**
**பண்புபா ராட்டும் உலகு"**

என்ற வள்ளுவனின் வாக்கிற்கு ஏற்ப வாழ்ந்து காலங்களால் அழிக்கமுடியாத புகழைப் பெற்றோர் தெய்வத்திரு ஜி.ஆர்.கோவிந்தராஜுலு, தெய்வத்திருமதி சந்திரகாந்தி அம்மையார் அவர்கள் ஆவர். பெண்கல்வி உயர்வை சிந்தையில் நிறைத்து செயலிலும் மறுமலர்ச்சியை ஏற்படுத்தி புதுவாழ்வு பிறக்க வழி செய்தவர். அகில இந்திய அளவில் சிறந்ததொரு பெண் கல்வி நிறுவனமாகவும், ISO தரவரிசை தனிச்சிறப்புத் திறன் கல்லூரி,NAAC,NIRF போன்ற தகுதிகளைப் பெற்று நாடு போற்றும் கல்லூரியாக தலைசிறந்து விளங்கும் பூசாகோஅர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரியை நிறுவியவர் . அறிவொளி பரப்பிய ஞாயிறு, பெண் கல்விக் காவலர், கோவை மாநகர கல்வி நிறுவனங்களின் நந்தாவிளக்கு, ஜி.ஆர். ஜி கல்வி நிறுவனத்தின் குலவிளக்கு தெய்வத்திரு ஜி. ஆர். கோவிந்தராஜுலு அவர்கள்.

எம் கல்லூரி தேசிய அளவில் மட்டுமின்றி பன்னாட்டு அளவிலும் டொலிடோ பல்கலைக்கழகம், சாண்டியாகோ பல்கலைக்கழகம் போன்ற பல பல்கலைக்கழகங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து மாணவிகள் வளம்பெற ஓயாது உழைத்து வருகிறது.

இத்தகு சிறப்பு வாய்ந்த கல்லூரியில் தனித்துவமிக்க துறையாக தமிழ்த்துறை விளங்குகிறது. இலக்குகளை இயம்புவதே இலக்கியத்தின் நோக்கம் என்பதற்கிணங்க "சந்திரகாந்தம் தமிழ் மன்றம்", "தொல்காப்பியர் தமிழாய்வு மையம்", "வேலைவாய்ப்புக் கல்வி" ஆகியவற்றின் மூலம் பல நிகழ்ச்சிகளை நடத்தி மாணவிகளின் தரத்தை முன்னேற்றி வருகின்றனர். கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான போட்டிகளில் பல மாணவிகள் சாதனை படைத்து வருகின்றனர். மலேசியா, இலங்கை, ஜெர்மன் போன்ற நாடுகளுடன், பல தமிழ் அமைப்புகளுடன் சேர்ந்து பன்னாட்டுக் கருத்தரங்குகளை நடத்தி வருகின்றனர். இதன் தொடர்ச்சியாக பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் மற்றும் தமிழ் வளர்ச்சி மன்றம், ஆஸ்திரேலியா, தமிழ்நாடு உளவியல் சங்கம், சென்னை ஆகியவற்றுடன் இணைந்து நடத்திய "**தமிழ் இலக்கியங்களில் உளவியல் சிந்தனைகள்**" என்ற தலைப்பில் இணையவழி பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கிற்கு ஆணி வேராக இருந்து செயல்பட்டு வரும்

தமிழ்த்துறையினருக்கு எனது வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் தெரிவிப்பதில் உள்ளம் மகிழ்கின்றேன். இக்கருத்தரங்கம் தமிழ் இலக்கியங்களில் காணலாகும் உளவியல் பதிவுகளையும், சிந்தனைகளையும் மொழி கடந்து எல்லை கடந்து உலகமே அறியும் படி செய்யும் என்பதில் ஐயமில்லை.

இக்கருத்தரங்கில் இலங்கை, மலேசியா, ஆஸ்திரேலியா போன்ற மேலைநாட்டு பேராசிரியர்களும், ஆர்வலர்களும், ஆய்வு மாணவர்களும் ஆய்வுக் கட்டுரைகள் எழுதி இருப்பதும், கருத்தரங்கத்தின் நோக்கினை மெய்ப்பிக்கும் வகையில் கட்டுரைகளை வாசிக்க இருப்பதும், இவை அனைத்தும் தொகுத்து மலராக வெளியிட்டு இருப்பதும் போற்றுதலுக்குரியது. தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் ஆற்றிய பெரும் பணியை உளமாரப்பாராட்டி இது போன்ற பல நிகழ்வுகள் தொடர்ந்து நடத்த வேண்டும் என்று வாழ்த்தி மகிழ்கிறேன்.

**முனைவர் நா.யசோதாதேவி**

# வாழ்த்துரை




**முனைவர் எஸ். நிர்மலா,**
**கல்லூரி முதல்வர்,**
**பூசாகோஅர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி,**
**கோயம்புத்தூர்- 641 004.**

தமிழ் என்னும் சொல்லுக்கு இனிமை என்று பொருள். “எத்திசையும் புகழ்மணக்க இருந்த பெரும் தமிழணங்கே” என மனோன்மணியம் சுந்தரனாரும், “யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்” என மகாகவி பாரதியும், “தமிழுக்கும் அமுதென்றுபேர் – அந்தத்தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்” என புரட்சிக்கவி பாரதிதாசனும், கொண்டாடி மகிழும் நமது அன்னைத் தமிழின் சிறப்புகள் சொல்லிமாளாது. தமிழ் மொழியின் சிறப்பு அளவிடற்க்கரியது. தமிழின் தொன்மை, இனிமை, எளிமை, இலக்கண வளம், இலக்கியச் செழுமை என எண்ணற்ற சிறப்புகளைத் தமிழாய்ந்த பெருமக்கள் மட்டுமின்றிப் பிற மொழி அறிஞர்களும் புலவர் பெருமக்களும் தமிழ்மொழியை வியந்து போற்றுகின்றனர்.’வானம் அளந்தது அனைத்தும் அளந்திடும் வண்மொழி என்பார் மகாகவி பாரதி. அத்தகைய வளம் நிரம்பியது தமிழ் மொழியாகும். இலக்கியம் என்பது மக்களின் வாழ்வியலைப் படம் பிடித்துக் காட்டும் கண்ணாடி என்பர். அப்படிப்பட்ட சங்க இலக்கியப் பாக்களில் கருத்துச் செறிவு கொண்ட வாழ்வியல் விழுமியக் கருத்துகள் எல்லாம் அகம் சார்ந்த ஆளுமைகளாக இருக்கின்றன.

அகம் என்பது மனம் சார்ந்த செயல்பாடுகள் இச்செயல்பாட்டுடன் தொடர்பு உடையது உளவியல் ஆகும். இக்கருத்தைக்கொண்டு நல்தலைப்பைத் தேர்ந்தெடுத்த தமிழ்த்துறைக்கு மனமார்ந்த பாராட்டுக்கள். ‘தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவச் செய்தல் வேண்டும்’ என்ற கனவினை நனவாக்கும் வகையில் எமது கல்லூரியின் தமிழ்த்துறை நடத்தும் “**தமிழ் இலக்கியங்களில் உளவியல் சிந்தனைகள்**” என்னும் தலைப்பில் பன்னாட்டுக் கருத்தரங்கினை ஏற்பாடு செய்திருப்பது மிகுந்த பெருமைக்குரியது. இப்பெரும் பணியை நிறைவேற்றிட பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் மற்றும் தமிழ் வளர்ச்சி மன்றம், ஆஸ்திரேலியா, தமிழ்நாடு உளவியல் சங்கம், சென்னை ஆகியவற்றுடன் கரம் கோர்த்து செயல்படும் தமிழ்த்துறையினருக்கு மனமார்ந்த பாராட்டுக்களுடன் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்வடைகிறேன். இந்நன்முயற்சியைத் தமிழ் கூறும் நல்லுலகம் வரவேற்கும்.

**வாழ்த்துதலுடன்**



**முனைவர் எஸ். நிர்மலா**

# என்னுரை

**முனைவர் கோ. சுகன்யா,**
**உதவிப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர் (பொ.),**
**தமிழ்த்துறை (சுயநிதிப்பிரிவு),**
**பூசாகோஅர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி,**
**கோயம்புத்தூர் - 641 004.**



சங்க இலக்கியங்கள் தமிழில் கிடைத்த காலத்தால் முற்பட்ட இலக்கியங்கள். அவை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவை. உளவியல் அண்மையில் உருவாகிய புத்தறிவுத்துறை. தமிழ், தமிழர், தமிழ்ப் பண்பாடு என்ற உரிமையையும், தனித்தன்மையையும் கால்கொள்ளக் களம் அமைத்துக் கொடுத்தது சங்ககாலம். அவ்விலக்கியங்களை பாட்டும் தொகையும் சேர்ந்த தொகை இலக்கியம் என்பர். சங்க இலக்கியத்திற்கு பிறிதொரு பெயர் சூட்டுக என்று கேட்டால் தயங்காமல் உளவியல் இலக்கியம் என குறிப்பிடலாம். அந்த அளவுக்கு அகத்திணைப் பாடல்கள் நூற்றுக்கு நூறும், புறத்திணைப் பாடல்கள் நூற்றுக்கு எழுபத்தைந்து சதவிகிதமும் உளவியல் பற்றினயவே என்று தமிழண்ணல் கூறுகிறார். சங்க இலக்கியங்கள் அகப்பாடல்கள், புறப்பாடல்கள் என்னும் வகைமைக்குள் அடங்கியவை. சங்கப்பாடல்கள் முழுவதும் உளவியல் குறித்த ஆய்வுக்கு வழிவகுக்கின்றன. இலக்கியமென்பது ஒருவகையில் ஒரு அறிதல் முறை. படைப்பின் நேர்மையோடு உருவான எந்த ஒரு இலக்கியமும் ஒரு வரலாற்று ஆவணமே. மனித வாழ்வின் ஒவ்வொரு செயல்பாடுகளிலும் உளவியல் செல்வாக்கு செலுத்துகின்றது. உளவியல் அறிஞர்கள் மனித நடத்தை பற்றி ஆராய்கின்ற துறையை உளவியல் என வரைவிலக்கணம் செய்வார். மனித உள்ளத்தின் உணர்வே ஆக்கம், அழிவு போன்ற செயல்களுக்கு ஊற்றுக்கண்ணாக விளங்குகின்றது. மனிதனுக்குள் தோன்றும் உள்ளுணர்வுகளே உளவியல் எனப்படுகிறது. சமுதாயத்தில் மனிதன் நடந்து கொள்ளும் பாங்கு, அவனது செயல்பாடுகள், அறிதல் திறன், நினைவாற்றல், மறதி போன்றவைகளைக் கண்டு ஆராய்வது உளவியல் துறை. மனித மன வளர்ச்சிக்கு ஏற்ப அவனது சிந்தனைகள் அமைகின்றன.

உளவியலுக்கும் இலக்கியத்திற்கும் மிக நெருங்கிய தொடர்பு உண்டு. இலக்கியம் கவிஞனின் உணர்ச்சிப் பிழம்பாய் ஆன வெளிப்பாடு. கவிதை உடலியல் சம்பந்தமானது. நல்ல கவிதையைக் கேட்கும் போது உடலில் ஏற்படும் மெய்சிலிர்ப்பைக் கொண்டு இதை உணரலாம். “உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாம்” என்கிறார் பாரதி. கவிஞனின் அக உணர்வில் ஆழமாகப் பதிந்திருக்கும் அழகுணர்வு, காதல், வேட்கை, அவலம், வெற்றிப்பெருமிதம் முதலானவையே செய்யுள்களாக, கவிதையாக வளர்கின்றன. வாழ்க்கையின் ஒவ்வொரு செயல்களிலும் உளவியலுக்கு தொடர்பு உண்டு. இலக்கியங்களில் காட்டப்படும் மனித மனங்களை ஆராய உளவியல் அணுகுமுறை பயன்படுகிறது. உளவியல் நோக்கில் தமிழ் இலக்கியங்களை பல்வேறுபட்ட கோணங்களில் அணுகி ஆராய்ந்துள்ளனர் கட்டுரையாளர்கள். இலக்கியங்களில் மனித நடத்தைகளை மையப்படுத்தி

எழுதப்பட்ட 75 கட்டுரைகள் ஆய்வாளர்களால் உளவியல் கண்ணோட்டத்தில் அணுகி அவற்றை கட்டுரைகளாக ஆக்கியுள்ளனர். இலக்கியத்தைத் தான் சார்ந்த துறைகளில் இன்றைக்கு பலரும் ஒப்பிட்டு ஆய்வு செய்து வருகின்ற வேளையில் இலக்கியங்களில் உளவியல் சிந்தனைகள் பற்றிய இந்த ஆய்வுக் கட்டுரைத் தொகுப்பு நூலானது மிகுந்த வரவேற்புக்குரியதாகின்றது. இத்தொகுப்பில் உள்ள கட்டுரைகள் வாயிலாக உளவியலின் சுவையை நீங்கள் நுகர முடியும். இந்நூலிலுள்ள கட்டுரைகளில் கூறியது கூறல் இடம்பெறுவது தவிர்க்க முடியாததாகி உள்ளது. பல்வேறு எழுத்தாளர்களின் படைப்புகளை உளவியல் நோக்கில் திறனாய்வு செய்து கட்டுரைகளை அளித்துள்ள கட்டுரையாளர்கள் ஒவ்வொருவருமே உளவியல் தேர்ச்சியில் முதலிடம் பெறுகின்றனர். திறனாய்வில் உளவியல் கொள்கைகளை எளிமையாகவும், தெளிவாகவும், இலக்கியங்களுக்குப் பொருந்தும் வகையிலும் கையாண்டுள்ள ஆற்றலும் ஆய்வாளர்கள் ஒவ்வொருவரது கட்டுரைகளிலும் வெளிப்பட்டுள்ளது சிறப்பிற்குரிய ஒன்றாகும். **"தமிழ் இலக்கியங்களில் உளவியல் சிந்தனைகள்"** என்ற தலைப்பிலான இணையவழிப் பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கிற்கு கட்டுரைகளை உரிய காலத்தில் அனுப்பி உதவிய ஆய்வாளர்கள் ஒவ்வொருவருமே போற்றுதலுக்குரியவர்கள். ஏனெனில் பொதுவாக இந்த மாதிரியான தலைப்புகளில் ஆய்வுலகப் பெருமக்கள் கட்டுரைகள் எழுதுவதில்லை. இவ்வாறான ஆய்வுகளை மேற்கொள்பவர்கள் அரிதாகவே காணப்படுகிறார்கள். எனினும் பெரும்பேராசிரியர்கள் முதல் ஆய்வு மாணவர்கள் வரை இந்தத் தலைப்பில் தங்கள் கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள். அவர்களின் முயற்சி பாராட்டுகளுக்குரியது.

தமிழ் ஆய்வு மையத்தின் ஒவ்வொரு செயல்பாடுகளுக்கும் ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகின்ற கல்லூரித் தலைவர் நந்தினி ரங்கசாமி அவர்கள் தம் பல்வேறு பணிகளுக்கிடையே நூலுக்கு பாராட்டுரை வழங்கியுள்ளார்கள். அவர்களுக்கு என் உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டுள்ளேன். எப்பொழுதும் தமிழின் மீதும், தமிழ்த்துறையினர் மீதும் பற்றுக்கொண்டு, தமிழ்த்துறை சுயநிதிப்பிரிவினரான எம் முதல் முயற்சிக்கு மிகுந்த ஈடுபாட்டுடன் வழிநடத்திவரும் கல்லூரிச் செயலர் முனைவர் நா. யசோதாதேவி அவர்கள் மகிழ்வுரை வழங்கிச் சிறப்பித்துள்ளார்கள். அவர்களுக்கும் என் நெஞ்சம் நிறை நன்றிகளை உரித்தாக்கிக் கொள்கிறேன். தமிழ்துறையின் செயல்பாடுகளுக்கு அடித்தளம் அமைத்துக்கொடுத்து, எம்மை வெற்றிப்பெருமிதத்தோடு நாளும் நடை போட வைக்கும் மிகச் சிறந்த நிர்வாகி, கல்லூரி முதல்வர் முனைவர் எஸ். நிர்மலா அவர்கள் வாழ்த்துரை வழங்கியுள்ளார்கள். அவர்களுக்கு என் சிரம் தாழ்ந்த நன்றிகள்.

இந்த கல்வியாண்டுக்குரிய கருத்தரங்கம் நடத்தவேண்டும் என்றவுடன் எம் கல்லூரியோடு இணைந்து இவ்வறப் பணியாற்ற பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழின் நிறுவனர் மற்றும் தலைவர் முனைவர் இராஜ. சீதாலஷ்மி அவர்களை அணுகியபோது, எவ்வித தயக்கமும் இன்றி, ஒப்புதல் அளித்தார். அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றிகள். அதேபோல பிரணவ் தமிழியல் ஆய்விதழின் பதிப்பாளர் திருவாளர் மோகன்குமார் மாணிக்கவேலு அவர்களும் அழைப்பிதழ் தொடங்கி, கருத்தரங்க நூலாக்கம் வரை மிகவும் பொறுமையுடன் நடந்து, அச்சுப்பிழைகள் இல்லாமல் ஒவ்வொன்றையும் மிகநேர்த்தியாக வடிவமைத்துக் கொடுத்தமைக்காக, அவர்களுக்கும் என் சிறப்பான நன்றிகள். மேலும் எங்களுடன் கரம் கோர்த்து பலம் சேர்த்த ஆஸ்திரேலியா, தமிழ் வளர்ச்சி

மன்றத்தின் நிறுவனர் முனைவர் சந்திரிகா சுப்பிரமணியன் அவர்களுக்கும், தமிழ்நாடு உளவியல் சங்கத்தின் தலைவர் திரு க. பாலமுருகன் ஐயா அவர்களுக்கும் என் நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

கருத்தரங்கம் இவ்வளவு சிறப்பாக நடந்தேறியமைக்கு மிக முக்கிய காரணகர்த்தாவாக இருந்து, என்னுடன் தோளோடு தோளாக இருந்து, நூலின் பணிச்செம்மைக்கு உறுதுணையாக இருந்தவர் முனைவர் ந. பிரதீபா அவர்களுக்கு நான் மிகுந்த நன்றிக்கடப்பாடுடையவள் ஆவேன். இக்கருத்தரங்க நூலின் உருவாக்கத்தில் பிழை திருத்தம் செய்தும், கருத்தரங்கப் பணிகளை சுணங்காது செய்து முடித்த தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்கள் அனைவருமே பாராட்டுதலுக்குரியவர்கள். அவர்களுக்கும் என் முத்தான நன்றிகள். இன்னும் எத்தனையோ அன்புக்கரங்களின் உதவியால் தான் இப்பணி இனிதே நிறைவடைந்தது. அவர்கள் அத்தனை பேருக்கும் நன்றி மலர்களைக் காணிக்கையாக்கிக் கொள்கிறேன். நன்றி என்பதை நிறைவாய் உணர்ந்து, நெகிழ்ந்து நன்றி கூறிக்கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

கோ. சுகன்யா.

**முனைவர் கோ.சுகன்யா**

# பொருளடக்கம்


| வ எண் | பொருளடக்கம் | கட்டுரையாளர் பெயர் | பக்கம் எண் |
|---|---|---|---|
| 1 | தமிழ் இலக்கண, இலக்கியங்களில் உளவியல் சிந்தனைகள் | முனைவர் க. அமுதா | 1 - 5 |
| 2 | திருக்குறள் கூறும் கல்வி உளவியல் | முனைவர் நா. அனிதா | 6 - 11 |
| 3 | துருக்கித் தொப்பி புதினம் வெளிப்படுத்தும் குழந்தை மன உளவியல் | முனைவர் செ. ஆமினா பானு | 12 - 18 |
| 4 | எனது உலகம் எனது உலகியல் எனது உண்மைகள் நூல் வெளிப்படுத்தும் உளவியல் சிந்தனைகள் | முனைவர் சி. ஆரோக்ய தனராஜ் | 19 - 29 |
| 5 | கலித்தொகையில் தோழி கூற்று -ஓர் உளவியல் ஆய்வு | முனைவர் அ. இராஜலட்சுமி | 30 - 38 |
| 6 | குறுந்தொகையில் அக வாழ்வியல் விழுமியங்கள் | இரா. இராஜா | 39 - 46 |
| 7 | படிமவியல் பார்வையில் தலைவியின் உடற்கூற்றுப் புனைவியல் | முனைவர் பா. கவிதா<br>முனைவர் ந.இராஜேந்திரன் | 47 - 56 |
| 8 | இலக்கியம் உணர்த்தும் நகை என்னும் மெய்ப்பாடுகள் | முனைவர் க.உமா மகேஸ்வரி | 57 - 63 |
| 9 | இலக்கியத்தில் கனவும் ஃ பிராய்டின் கனவுக் கொள்கையும் | முனைவர் கா. உமாராஜ் | 64 - 69 |
| 10 | எட்டுத்தொகை அக இலக்கியங்களில் உளவியல் | ஞா.கலையரசி | 70 - 76 |
| 11 | சங்க கால இலக்கியங்களில் ஔவையின் ஆளுமைத்திறன் | முனைவர் ஜெ. கவிதா | 77 - 87 |
| 12 | உளவியல் நோக்கில் திருப்பாவை ஓர் ஆய்வு | முனைவர் செ. கார்த்திகா | 88 - 98 |

| | | | |
|---|---|---|---|
| 13 | சமகால இலக்கியங்களில் திருநங்கையர் குறித்த வாழ்வியல் உளப்பதிவுகள் | ஈ. கீதா | 99 - 111 |
| 14 | புறநானூற்றில் உளவியல் நோக்கும் போக்கும் | நா. குமுதா | 112 - 117 |
| 15 | பெரிய புராணக் காப்பியபடைப்பாளி சேக்கிழாரின் படைப்புத் திறனுக்கான உளவியல் பின்னணி | அ. ர. சத்திய பிரகாஷ் | 118 - 124 |
| 16 | கவிக்கோவின் கஸல் கவிதைகளில் வெளிப்படும் உளவியல் சிந்தனைகள் | முனைவர் ஜா. சலேத் | 125 - 133 |
| 17 | சமூக உளவியல் பார்வையில் தொல்காப்பியமும் திருக்குறளும் | முனைவர் து. சவிதா | 134 - 143 |
| 18 | தமிழ் இலக்கியங்களில் உளவியல் சிந்தனைகள்- பெண்ணியப் பார்வை | முனைவர் இரா. சீதா | 144 - 151 |
| 19 | பெரியாழ்வாரின் நான்காம் திருமொழியில் உளவியல் | முனைவர் சு. சுகாசினி | 152 - 155 |
| 20 | தேவை ஒரு தேவதை நாவலில் தனிமனித உளவியல் | முனைவர் பா.றோ. சுபத்ரா | 156 - 161 |
| 21 | சங்க கால மகளிரின் கல்வி உளவியல் | ந. சுமதி | 162 - 166 |
| 22 | கலாப்ரியாவின் கவிதைகளில் உளவியல் சிந்தனை | ப. தாணப்பன் | 167 - 171 |
| 23 | தமிழ் இலக்கியங்களில் உளவியல் சிந்தனை | பா. தாரா | 172 - 176 |
| 24 | எஸ் . அர்ஷியா பாத்திரங்கள் வெளிப்படுத்தும் உடல்மொழி | முனைவர் சி. தேவி | 177 - 182 |
| 25 | உளவியல் நோக்கில் சூழலியல் பெண்ணியம் | முனைவர் வெ. நிர்மலா | 183 - 188 |
| 26 | சங்க இலக்கியத்தில் பாலைத்திணை காட்டும் உளவியல் சிந்தனைகள் | வெ. பாரதி | 189 - 192 |
| 27 | குறிஞ்சித்தேன் நாவலில் உளவியல் பார்வை | முனைவர் சு. பால்பாண்டி | 193 - 200 |

| | | | |
|---|---|---|---|
| 28 | வள்ளுவப் பெருந்தகையின் உளவியல் சிந்தனைகள் | முனைவர் ந. பிரதீபா | 201 - 206 |
| 29 | நெடுநல்வாடையில் உளவியல் சிந்தனைகள் | முனைவர் ரா. பிரபா | 207 - 214 |
| 30 | எட்டுத்தொகை அகநூல்களில் உளவியல் | முனைவர் சே. பிரேமா | 215 - 222 |
| 31 | பகவத்கீதையில் உளவியல் | லெ. புவனேஸ்வரி | 223 - 228 |
| 32 | உளவியல் நோக்கில் புலம்பெயர்ந்தோர் சிறுகதைகள் | முனைவர் ஞா. பெஸ்கி | 229 - 236 |
| 33 | நேசத்துணை நாவலில் உளவியல் சிந்தனை | முனைவர் வ. மாலிக் | 237 - 241 |
| 34 | தமிழ் இலக்கியங்களில் ஊக்கக் கோட்பாடுகள் | செல்வி மா. மீரா | 242 - 249 |
| 35 | உளவியல் நோக்கில் மணிமேகலை காப்பியத்தின் பெண் மாந்தர்கள் | ர. மேனகா | 250 - 255 |
| 36 | சங்க இலக்கியத்தில் உள்ளுணர்வுகள் | முனைவர் பா. ரமணி | 256 - 261 |
| 37 | சுந்தரர் தேவாரத்தில் உளவியல் சிந்தனைகள் | இரா.ரெதிகா | 262 - 267 |

ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# தமிழ் இலக்கண, இலக்கியங்களில் உளவியல் சிந்தனைகள்

**முனைவர் க.அமுதா, உதவிப்பேராசிரியர்**
**தமிழ் உயராய்வு மையம்,**
**அழகப்பா அரசு கலைக் கல்லூரி, காரைக்குடி.**

1

**ஆய்வுச்சுருக்கம்:**

சங்க இலக்கியங்கள் அந்நாளைய மக்களின் உளவியலை வெளிப்படுத்தும் பெட்டகங்கள். அகநூல்கள் அனைத்தும் மாந்தர்களின் உளவியலைச் சூழலியல் தன்மையோடு வெளிக்காட்டுகின்றன. தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் அகத்திணையியல், களவியல், கற்பியல், மெய்ப்பாட்டியல் போன்ற இயல்களில் இலக்கண எல்லையோடு தொல்காப்பியர் கூறும் ஆண், பெண் இருபாலரின் உணர்வுகளை உளவியல் பார்வையோடு வெளிப்படுத்தியிருப்பது சிறப்பானதாகும். அவர் கூறும் மெய்ப்பாடுகளுக்கு உதாரணமாக சங்க அகநூல்களில் இருந்து பாடல்களைச் சான்றாகக் காட்டியிருப்பது அன்றைய புலவர்களின் உளவியல் சிந்தனைகளை அறியச் சான்றாக அமைகின்றன.

**கடவுச்சொற்கள்:** உளவியல் - நகை - இளிவரல் - மருட்கை.

**முன்னுரை**

மனிதர்கள் காடுகளைத் திருத்திக் களனிகளாக்கி தனித்தனிக் குடும்ப அமைப்பினை உருவாக்கத் தொடர்ந்து போராடி ஒவ்வொன்றாய் உருவாக்கியது உளவியலின் உச்சமாகும். உளவியல் என்பதற்குப் பின்னாளில் மேலைநாட்டு அறிஞர்கள் பல்வேறு படிநிலைகளை அமைத்துக் கொண்டு ஆய்வினை மேற்கொண்டு நிரூபித்தனர். ஆனால், ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பண்டைத் தமிழர்கள் பற்றி அறிய உதவும் சங்க கால நூல்களில் வாயிலாக தனிமனிதன், சமூகம், அரசியல், தொழில் சார்ந்து பல நிலைகளிலும் உளவியல் கூறுகள் வெளிப்படுவதைக் காணமுடிகிறது. பண்டைய இலக்கண இலக்கியங்களில் வெளிப்படும் உளவியல் சிந்தனைகள் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

**தொல்காப்பியமும் - உளவியலும்**

எழுத்துக்கும் சொல்லிற்கும் இலக்கணம் வகுத்த தொல்காப்பியர் தமிழர்களின் பொருள் பொதிந்த வாழ்க்கைக்குப் பொருளதிகாரம் வகுத்தார். அகவாழ்க்கைக்கு இலக்கணம் வகுத்ததில் உளவியல் தன்மை வெளிப்பட்டிருப்பது சிறப்பானதாகும். ஒவ்வொரு மனிதனும் மெய்ப்பாடுகளின் வழியே உள்ளத்தை வெளிப்படுத்துகிறான். அதனை அறிந்தே,

> **“நகையே அழுகை இளிவரல் மருட்கை**
> **அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று**
> **அப்பால் எட்டாம் மெய்ப்பா டென்ப”[1]**

என்று மனித உணர்வுகளை தொல்காப்பியர் சுட்டுகின்றார். அக்காலத்திற்கு முன்பே தமிழர்கள் மெய்ப்பாடுகள் பற்றி அறிந்திருந்ததை 'என்ப' என்று குறிப்பிடுவது உணர்த்தும். இவ்வாறு தோன்றும் மெய்ப்பாடுகள் ஒருவனின் உள்ளத்தில் உண்டாகும் உளவியல் மாற்றத்தால் விளைவது என்பதற்கு,

**"எள்ளல் இளமை பேதமை மடனென்று**
**உள்ளப்பட்ட நகை நான் கென்ப"** [2]

என்று எள்ளுதற்பொருண்மை முதலாகச் சொல்லப்பட்ட நான்கும் நகைப்பொருளாம் என்பது உணர்த்தும். இலக்கணம் நகைக்கு இவ்வாறு உளவியல் தன்மையாகக் கூற அதற்கு சங்க அகநூல்களில் வரும் பல்வேறு பாடல்களும் சான்றாகின்றன. காதல் வாழ்க்கையைப் பாடும் புலவர்கள் காதலில் தலைவன், தலைவியரின் உளவியலைப் பாடல்கள் மூலம் வெளிப்படுத்துகின்றனர். காதலில் எள்ளல் என்பது இயல்பாக நடக்கும் நிகழ்வு.

**"நகையா கின்றே தோழி"** என்னும் நெடுந் தொகைப் பாட்டினுள்,

**"தண்துறை ஊரன் திண்தார் அகலம்**
**வதுவை நாளணிப் புதுவோர்ப் புணரிய**
**பரிவோடு வரூஉம் பாணன் தெருவிற்**
**புனிற்றாப் பாய்ந்தெனக் கலங்கி யாழிட்**
**டெம்மனைப் புகுந் தோனே அதுகண்டு**
**மெய்ம்மலி உவகை மறையினென் எதிர்சென்**
**றிம்மனை அன்றஃ தும்மனை யென்ற**
**என்னும் தன்னும் நோக்கி**
**மம்மர் நெஞ்சினோன் தொழுது நின்றதுவே"**[3]

என்ற பாடலில் எள்ளல் பற்றி நகை தோன்றியது என்றாலும், இப்பாடலில் தலைவியை மறந்து பரத்தையர் மனைக்குச் சென்ற தலைவனுக்கு உதவிய "பாணன் வந்தபோது, தெருவில் ஈன்ற அணிமையையுடைய பசு தன்னைப் பாய்ந்தமையாற் கலக்கமுற்று யாழினைக் கீழே போட்டுவிட்டு நம் வீட்டின்கண் புகுந்தான். அதுகண்டு உடல் பூரிக்கும்படி எழுந்த மகிழ்ச்சியை மறைத்துக் கொண்டேன். அவன் எதிரே சென்றேன்; உங்கள் மனை இம்மனையன்று அதுவாகும் என்று கூறினேன். அப்பாணனும் என்னையும் தன்னையும் பார்த்தவனாய் மயங்கிய உள்ளத்தோடு என்னைத் தொழுது நின்றான். அவன் நின்ற நிலையை நினைக்க எனக்கு நகைதான் பிறக்கிறது"[4] என்ற பாடல் மனையாளின் உளவியலைக் காட்டுகிறது. ஒருபுறம் தலைவன் பிறர் மனைக்கண் சென்று வருவது அதனால் ஏற்படும் உளவேதனை அதனை மறைத்துக்கொண்டு பாணனை எள்ளியது போன்று பேசினாலும் அவளின் நிலை அறிந்து பாணன்

தலைவியைத் தொழுது நின்றனன் என்று கூறுவது தலைவியின் வேதனைக்கு மருந்திட்டது போல் இருந்ததைக் காட்டுகிறது.

தொல்காப்பியர் அகவாழ்வில் தலைவன் தலைவியரின் உளவியல் சார்ந்த மெய்ப்பாட்டினைச் சிறப்பாக எழுதியுள்ளார். தொல்காப்பியர் உளவியலின் தந்தை எனில் தகும்.

**"புதுமுகம் புரிதல் பொறிநுதல் வியர்த்தல்**
**நகுநய மறைத்தல் சிதைவுபிறர்க் கின்மையோடு**
**தகுமுறை நான்கே ஒன்றென மொழிப" [5]**

என்று காதல் வயப்படும் தலைவன், தலைவிக்கு உள்ளத்தின் கிளர்ச்சியினால் ஏற்படும் உடல் மாறுபாட்டினை தொல்காப்பியர் எழுதியிருப்பது உளவியல் அறிந்ததால் கூறப்பட்டதாகும். "கூழை விரித்தல் தொடங்கி கையறவுரைத்தல்" எனும் ஆறாம் அவத்தை வரை "பெண்பாலார் எல்லார்க்கும் பொது. இவை புணராதவழித் தோன்றுதல் பெரும்பான்மை"[6] என்ற இளம்பூரணரின் கருத்து தொல்காப்பியர் களவு வாழ்வில் பெண்குலம் அனைத்திற்குமான உளவியலைக் கூறியிருப்பதைக் காட்டும்.

**பாடுக பாட்டே இன்னும் பாடுக பாட்டே**

"சங்க இலக்கியத்திற்குப் பிறிதொரு பெயர் சூட்டு என்று கேட்டால், தயங்காமல் உளவியல் இலக்கியம் எனக் குறிப்பிடலாம். அகத்திணைப் பாடல்கள் நூற்றுக்கு நூறும், புறத்திணைப் பாடல்கள் நூற்றுக்கு எழுபத்தைந்தும் உளவியல் பற்றியனவே ஆகும். ஏதேனும் ஒரு மனநிலை விளைவுக்குரிய சூழலை மட்டுமே அவை பாடுபொருளாய்க் கொண்டவை. எனவே, உளவியற் கொள்கைகளையும் பிராய்டு (இ)யங்கு என்பாரின், பாலியல், உளவியற் ஆய்வுகளையும் கற்றுணர்ந்தால் சங்க இலக்கியக் கல்விக்கு அது பெரிதும் துணை புரியும்"[7] என்ற தமிழண்ணலின் கருத்து தமிழர்களின் பண்பட்ட இலக்கியங்களான பண்டைய இலக்கியங்கள் அந்நாளைய மக்களின் பலதரப்பட்ட உளவியலை வெளிப்படுத்துவன என்பதைக் காட்டும்.

தலைவியின் காம நோயின் உண்மைக் காரணத்தை அறியமாட்டாத தாயார், அதனை அறிய விரும்பிக் கட்டுப்பார்ப்பது வழக்கம். அவ்வாறு சங்க இலக்கிய காலத்தில் தலைவியொருத்தியின் உடல் மாற்றத்தின் காரணத்தைச் செவிலித்தாய் அறியும்படித் தோழி அறத்தோடு நிற்கும் பாடலில் கட்டுவிச்சியிடம்,

**"அகவன் மகளே அகவன் மகளே**
**மனவுக் கோப்பு அன்ன நல்நெடுங் கூந்தல்**
**அகவன் மகளே பாடுக பாட்டே**
**இன்னும் பாடுக பாட்டே - அவர்**
**நல் நெடுங்குன்றம் பாடிய பாட்டே" [8]**

என்ற பாடல் கட்டுவிச்சியின் உளவியல், தலைவியின் உளவியல், செவிலித்தாயின் உளவியல், அதன்வழி தாய்க்கு உணர்த்துவதும் தாயின் உளவியலும் என்று ஐந்து அடிகளுக்குள் சங்க காலப் பெண்பாற் புலவர் ஔவையார் பாடியிருப்பதுப் படைப்பாளனின் உளவியலையும் தீர்க்கமாக வெளிக்காட்டுவதாய் உள்ளது.

**கையில் ஊமன் கண்ணில் காக்கும் வெண்ணெய் உணங்கல் போல**

பண்டைய புலவர்கள் பாடல்களை எழுதும் போதும், அகப்பாடல்களில் கூற்றுக்களை அமைக்கும்போதும், மாந்தர்கள் அச்சூழலில் அவர்களின் உளவியல் எவ்வாறு இருக்கும் என்பதை மனக்கண் நிறுத்திப் பாடல்களை எழுதுகின்றனர். வெள்ளிவீதியாரின் பாடல்களில் மாந்தர்களின் உளவியலைக் காட்சிப்படுத்தி வெளிப்படுத்தும் திறன் சிறப்பானதாகும்.

தலைவன் ஒருவன் தலைவி மீது கொண்ட காதலால் அவன் மிகுந்த துன்பப்படுகிறான் தன் நிலையை யாரிடமும் கூற இயலவில்லை. அதைப்பாடும் வெள்ளிவீதியார்,

**"இடிக்கும் கேளிர் நும்குறை ஆக**
**நிறுக்கல் ஆற்றினோ நன்றுமன் தில்ல**
**ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கில்**
**கைஇல் ஊமன் கண்ணின் காக்கும்**
**வெண்ணெய் உணங்கல் போல**
**பரந்தன்று இந்நோய் நோன்று கொளற்கு அரிது"**[9]

என்று பாடுகிறார். தலைவியின் காதலால் தலைவன் படும் வேதனையை அவனின் நிலையை வெளிப்படுத்தும் அழகான பாடலாகும். வெள்ளிவீதியார் தலைமகள் உடன்போக்காக தலைவனுடன் சென்றுவிட்ட நிலையில் செவிலித்தாய் இடைச் சுரத்தில் தலைமகளைத் தேடி கையற்று நிற்கின்ற நிலையைப் பாடுகிறார்.

**"காலே பரிதப்பினவே; கண்ணே**
**நோக்கி நோக்கி வாள் இழந்தனவே**
**அகலிரு விசும்பின் மீனினும்**
**பலரே மன்ற இவ் உலகத்துப் பிறரே"**[10]

என்று இரு கால்களும் நடந்து, நடந்து செலவு தடுமாறின. இரு கண்களும் தேடிப் பார்த்துத் தனக்குரிய புலமாகிய ஒளியை இழந்தன என்று கூறுவது தாயின் பரிதவிப்பின் உளவியலைக் காட்டுவதாய் அமைந்துள்ளது. சங்க அகப்பனுவல்கள் அனைத்தும் தமிழண்ணல் கூறுவது போல உளவியல் தன்மையோடு பாடப்பட்டிருப்பது என்பது சரியானதேயாகும்.

**முடிவுரை**

தொல்காப்பியர் கூறும் மெய்ப்பாடுகள் அனைத்தும் மனிதர்களின் உளவியலை அறிய உதவும் வாயில்களாகும்.தொல்காப்பியத்தில் அகத்திணையியல், களவியல், கற்பியல் போன்ற இயல்கள் அகவாழ்வில் தலைவன் தலைவியரின் உளவியலைக் காட்டுவதாய் அமைந்துள்ளன. சங்க இலக்கியங்களில் அக இலக்கியங்கள் தமிழண்ணல் கூறுவது போல உளவியல் இலக்கியங்களாகும்.

புற இலக்கியங்களும் உளவியல் கூறுகளை வெளிக்காட்டுவதாய் அமைந்துள்ளன.

**சான்றெண் விளக்கம்**

1. தொல். பொருள். மெய்ப். நூற்பா. 3.
2. தொல். பொருள். மெய்ப். நூற்பா. 4.
3. அகநா. 56
4. தொல். பொருள். மெய்ப். ப-167. (இளம்பூரணர் உரை)
5. தொல். பொருள். மெய்ப். நூற்பா. 13.
6. தொல். பொருள். மெய்ப். ப-25. (இளம்பூரணர் உரை)
7. தமிழண்ணல், சங்க இலக்கிய ஒப்பீடு, பக்கம்.138
8. குறுந். 23.
9. குறுந். 58.
10. குறுந். 44.

**துணை நூற்பட்டியல்**

1. தொல்காப்பியம் - இளம்பூரணம் - பொருளதிகாரம், களவியல் - கற்பியல் - பொருளியல் -இரண்டாம் பகுதி, பதிப்பாசிரியர் - பேரா. மு.சண்முகம்பிள்ளை, முல்லை நிலையம், தி.நகர், சென்னை - 600 017.

2. தொல்காப்பியம் - இளம்பூரணர் - (முதற்பகுதி) பொருளதிகாரம் - அகத்திணையியல் -புறத்திணை இயல், முதற் பதிப்பு 1995, பதிப்பாசிரியர் - பேரா. மு.சண்முகம்பிள்ளை, முல்லை நிலையம், 43, புதுத்தெரு, மண்ணடி, சென்னை -600 001.

3. தொல்காப்பியம் - இளம்பூரணர் - பொருளதிகாரம் - மெய்ப்பாட்டியல் - உவமயியல் - பதிப்பாசிரியர் - பேரா. மு. சண்முகம்பிள்ளை. முல்லை நிலையம், சென்னை - 600 001.

4. சங்க இலக்கியம் - குறுந்தொகையும் மூலமும் உரையும் உரையாசிரியர் - முனைவர் வி. நாகராசன், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட் அம்பத்தூர் - சென்னை 600 098. மூன்றாம் பதிப்பு - பிப்ர - 2007.

ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

2

# திருக்குறள் கூறும் கல்வி உளவியல்

**முனைவர் நா. அனிதா, உதவிப்பேராசிரியர்**

**தமிழ்த்துறை, எஸ்.ஆர். எம் அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்**

**திருச்சிராப்பள்ளி**

**ஆய்வுச் சுருக்கம்**

மனிதனின் புறச்செயல்களை உற்றுநோக்கி முறையாக ஆராய்ந்து அதன் மூலம் அவை, எங்ஙனம் அகத்தே நிகழும் சிந்தனை ஓட்டங்களுடன் தொடர்பு கொண்டுள்ளன என்றும், சுற்றுச்சூழலில் ஏற்படும் நிகழ்வுகளால் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்றும் விளக்குவதே உளவியலாகும்.

திருக்குறள் ஒரு முழுமையான உளவியல் நூலாகும். உளவியல் கருத்துக்களை மனச்செயல்கள், மனவெழுச்சிகளான கோபம், துயரம், மகிழ்ச்சி, அன்பு போன்ற சொற்களில் வெளிப்படுவதைக் காணலாம்.

கல்வி என்பது மாணவரது தனிப்பட்ட மற்றும் சமூக தேவைகளின் அடிப்படையில் நமது பண்பாட்டு பாரம்பரியத்தையும், முன்னோர்கள் நமக்களித்த அறிவுத் திறன்கள், நியமங்கள் ஆகியவற்றையும் அளிக்கும் செயல் கல்வி எனப்படும். இது வளர்ச்சி, முன்னேற்றம், மேம்பாடு, முழுமை ஆகிய கூறுகளை உள்ளடக்கிய தொலைநோக்குச் செயலாகும். உளவியலின் ஓர் உட்பிரிவான கல்வி உளவியல் என்பது கல்வியில் மேற்கொள்ளப்படும் செயல்முறைகளிலும் பின்பற்றப்படும் வழிமுறைகளிலும் உளவியல் கோட்பாடுகளையும், விதிகளையும் புகுத்தி, கற்றல் கற்பித்தலை மேம்படுத்துதலே ஆகும். பள்ளி வகுப்பறையே கல்வி உளவியலாளர்களின் ஆய்வுக்கூடம், கற்றல், கற்பித்தல், பயிற்சியளித்தல் போன்றவற்றால் ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முற்படுவதே கல்வி உளவியல். திருக்குறள் கல்விக்கு மட்டுமல்ல உளவியலுக்கும் முக்கியத்துவம் தருகிறது. திருக்குறள் ஊக்கத்தையும், ஆளுமைப் பண்பையும், கல்வி தருகின்றது என்பதை எடுத்துரைக்கின்றது. மேலும் திருக்குறள் வழிகாட்டியாகவும் , அறிவுரையும் மனித மனநலம் அறிந்து கருத்துக்கள் கூறுவதாக உள்ளது. அவற்றினையே இவ்வாய்வு கூறுகிறது.

**முன்னுரை**

திருக்குறள் சங்கம் மருவிய காலத்தில் திருவள்ளுவரால் எழுதப்பட்ட உலகப் பொதுமறை ஆகும். தமிழ்நாட்டவர் மட்டுமன்றி இந்தியாவைக் கடந்து திருக்குறள் புகழ் பெற்றுள்ளது. கல்வி என்னும் தமிழ்ச் சொல்லுக்கு இணையான ஆங்கிலச் சொல் எஜுகேஷன் (Education) ஆகும். இதன் மூலச்சொல் இலத்தீன் மொழியில் உள்ள எஜுகேர் (Educare) என்பதாகும். கல்வி என்பதற்கு வளர்ப்பது அல்லது வெளிக்கொணர்வது என்னும் பொருள் புலப்படுகிறது. வான்புகழ் வள்ளுவர் 'கண்ணென்ப வாழும் உயிர்க்கு',

'கேடில் விழுச்செல்வம் கல்வி', 'கற்றனைத்தூறும் அறிவு', 'அறிவு அற்றம் காக்கும் கருவி' என்றெல்லாம் கல்வியை விவரித்துள்ளார்.( குறள் : 392 , 400 , 396 , 421 )

கல்வி என்பது மாணவரது தனிப்பட்ட மற்றும் சமூகத் தேவைகளின் அடிப்படையில் நமது பண்பாட்டு பாரம்பரியத்தையும், முன்னோர்கள் நமக்களித்த அறிவுத் திறன்கள், நியமங்கள் ஆகியவற்றையும் அளிக்கும் செயல் கல்வி எனப்படும். இது வளர்ச்சி, முன்னேற்றம், மேம்பாடு, முழுமை ஆகிய கூறுகளை உள்ளடக்கிய தொலைநோக்கு செயலாகும்.

கல்விக்காகத் தனி அதிகாரத்தைப் படைத்து பத்து குறளில் அதன் மேன்மையை விளக்கியுள்ளார். கல்வி கற்றவன் மட்டும் கண்ணுடையவர் என்றும் மற்றவர் புண் உடையவர் என்ற கருத்தைப் படிக்கும்போது கல்வி கற்றவர் அறிவுடையோர் என்றும் மற்றவர் அறிவிலார் என்பதை உணரமுடிகிறது. கல்வி போல் சிறந்த செல்வமில்லை என்பதற்கு கற்றலினும் கேட்டலே நன்று.

**"செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்**
**செல்வத்துள் எல்லாம் தலை'** **( குறள் : 411 )**

என்பது எல்லாம் கல்வியின் மேன்மையை பறைசாற்றுகின்றன.

கேட்டல், பார்த்தல், படித்தல், எழுதுதல் என நான்கு திறன்களிலும் கேட்டல் திறனை சிறந்ததெனக் கூறியுள்ளார்.

**தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்**
**கற்றனைத் தூறும் அறிவு"** **( குறள் : 396 )**

என்ற குறளில் கல்வி நுட்பவியல் கருத்து இழையோடுவதைக் காணலாம் . கேணி என்ற நடைமுறை வார்த்தை பயன்படுத்தியதை அறியமுடிகிறது.

**உளவியல்**

மனிதனின் புறச்செயல்களை உற்றுநோக்கி முறையாக ஆராய்ந்து அதன் மூலம் அவை, எங்ஙனம் அகத்தே நிகழும் சிந்தனை ஓட்டங்களுடன் தொடர்பு கொண்டுள்ளன என்றும், சுற்றுச்சூழலில் ஏற்படும் நிகழ்வுகளால் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்றும் விளக்குவதே உளவியலாகும்.

திருக்குறள் ஒரு முழுமையான உளவியல் நூலாகும். உளவியல் கருத்துக்களை மனச்செயல்கள், மனவெழுச்சிகளான கோபம், துயரம், மகிழ்ச்சி, அன்பு போன்ற சொற்களில் வெளிப்படுவதைக் காணலாம்.

**'குழலினிது யாழினிது என்பதம் மக்கள்**
**மழலைச்சொல் கேளா தவர்"** **(குறள் 66)**

என்ற குறள் மூலம் குழந்தை கல்வியை ஊக்கப்படுத்துவதைக் காணமுடிகிறது. ஒரு இசைக்கலைஞனின் கருவியைவிட மழலைச்சொல் மேன்மையானது எனக் கூறுகிறார்.

**கல்வி உளவியல்**

உளவியலின் ஓர் உட்பிரிவான கல்வி உளவியல் என்பது கல்வியில் மேற்கொள்ளப்படும் செயல்முறைகளிலும் பின்பற்றப்படும் வழிமுறைகளிலும் உளவியல் கோட்பாடுகளையும், விதிகளையும் புகுத்தி, கற்றல் கற்பித்தலை மேம்படுத்துதலே ஆகும் என்று கோலொஸ்னிக் (Kolesnik) என்ற இரஷ்ய அறிஞர் கூறுகிறார். பள்ளி வகுப்பறையே கல்வி உளவியலாளர்களின் ஆய்வுக்கூடம், கற்றல், கற்பித்தல், பயிற்சியளித்தல் போன்றவற்றால் ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முற்படுவதே கல்வி உளவியல்.

திருக்குறள் கல்விக்கு மட்டுமல்ல உளவியலுக்கும் முக்கியத்துவம் தருகிறது. உளவியலில் மாணவர் மனதை அறிதல் என்ற கருத்தைப் பார்க்கும்போது மீத்திறமானவர். கல்வியில் பின்தங்கிய மாணவர்கள் ஆகியோரைக் கீழ்க்காணும் குறளில் காணமுடிகிறது.

**“அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்**
**என்னுடைய ரேனும் இலர்"** **( குறள் 430 )**
**“அறிவுடையார் ஆவது அறிவார் அறிவிலார்**
**அஃதுஅறி கல்லா தவர்”** **( குறள் : 427 )**

**<u>திருக்குறளில் ஆளுமை</u>**

திருக்குறளில் கல்வி உளவியலோடு நேரடித் தொடர்பு கொண்டு ஆங்கில வார்த்தை Personality. தமிழில் இதை ஆள்வினையுடைமை (ஆளுமை) என்கிறோம். ஆங்கிலத்தில் ஆளுமையைக் குறிக்கும் ‘பர்ஸனாலிடி’ (Personality) என்னும் சொல் லத்தீன் மொழியிலுள்ள 'Persona' என்ற சொல்லிலிருந்து பிறந்தது. நாடக மேடையில் அக்காலத்தில் நடிப்பவர்கள் தாங்கள் ஏற்றிருக்கும் பாத்திரத்தின் இயல்புக்குத் தக்கபடி அணித்திருந்த முகமூடியை 'பர்ஸொனா' என்ற லத்தீன் சொல் குறித்தது முன்பு "ஒருவனது பண்புகளைக் குறிக்கும் வெளித்தோற்றம் என்பதாக இருந்தது. ஆனால் இன்று ஆளுமை என்ற சொல் வழக்காற்றில் பல பொருளில் எடுத்தாளப்படுகிறது.

ஆளுமை என்பது ஒருவனிடம் காணப்படும் உடற்கவர்ச்சியின் அளவு என்று பலர் எண்ணுகின்றனர். ஆளுமையானது ஒருவனது பண்புகளின் தனித்தன்மை வாய்ந்த அமைப்பு என்கிறார் கில்போர்ட். ஆளுமையைப் பற்றிய வள்ளுவரின் கருத்து ஆங்கில அறிஞர்கள் சொன்னதைவிட உயர்வானது.

**"முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை**

**இன்மை புகுத்தி விடும்"** **(குறள் 616)**

ஒருவனது ஆளுமை செல்வத்தைப் பெருக்கும். முயற்சி இல்லாதவன் வறுமையைச் சேருவான்.

**"தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்**

**மெய்வருத்தக் கூலி தரும்"** **(குறள் 619)**

தன் உடல் வருந்திய வருத்தத்தின் கூலியை முயற்சி ஈடுசெய்து தரும். இதுபோன்ற திருக்குறள் கருத்துக்கள் மேற்கத்திய உளவியல் அறிஞர்களைத் திரும்பிப் பார்க்க வைக்கும் தன்னம்பிக்கை தரும் வார்த்தைகளாகும்.

**திருக்குறளில் ஊக்கமுடைமை**

ஊக்கமுடைமை ஆங்கிலத்தில் Motivation என்றழைக்கப்படுகிறது. ஊக்கமுடைமை என்பதற்கு ஓர் இடத்தில் நிலையாக நின்று கொண்டிருக்கும் ஒரு பொருளைத் தள்ளி விடுவதைப் போன்றதாகும். தள்ளப்பட்ட பொருள் சக்தியைப் பெறுவதைப் போல் ஊக்கப்படுத்தப்படும் நபர் அதிக சக்தியைப் பெறுவதுண்டு.

ஊக்கம் என்பது உயிரிகளது நடத்தை, இலக்கை தோக்கி மேற்கொள்ளப்படும் செயலாகும். இத்தகைய இலக்கு நோக்கிய நடத்தையைத் தொடங்கி வைத்தலினும், தொடங்கிய நடத்தை தொடர்ந்து இயங்குவதற்கும், இறுதியில் இந்நடத்தை முடிவு பெறுவதற்கும் காரணமாக இருப்பது ஊக்கமாகும். இவ்வாறு ஊக்கம் என்ற செயல் அதாவது ஊக்குவித்தல் நடைபெறத் தூண்டும் காரணிகளை ஊக்கிகள் (Motives) என்று குறிப்பிடுகிறோம். இதனைத் திருக்குறளில் ஊக்கமுடைமை என்ற அதிகாரத்தில் பத்து குறள்களில் குறிப்பிட்டுள்ளார்.

**"உள்ளுவது எல்லாம் உயர்வுள்ளல் மற்றது**

**தள்ளினும் தள்ளாமை நீர்த்து"** **(குறள் 596)**

**"சிதைவு இடத்து ஒல்கார் உரவோர் புதையம்பின்**

**பட்டுப்பாடு ஊன்றும் களிறு"** **(குறள் 597)**

உடம்பை மறைக்குமளவு அம்புகளால் புண்பட்டும், யானை தன் பெருமையை நிலைநிறுத்தும். அதுபோல் ஊக்கம் உடையவர் அழிவு வந்தவிடத்திலும் தளரமாட்டார் என்று சிறப்பாக ஊக்கத்தைப் பற்றி வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

**திருக்குறளில் மனநலம்**

மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம் தரும் என்ற குறளில் மனநலத்தின் அவசியத்தை வலியுறுத்துகிறார் வள்ளுவர். மனநலம் என்பது பொருத்தப்பாடுடைய இவ்வுலகத்தை உயர்த்துவர் என்பது திருவள்ளுவர் இதைத்தான் மேற்கண்ட குறளில் மேற்கத்திய அறிஞர்களுக்கு இணையாக மனநலத்தைப் பற்றிக் கூறியுள்ளார். மனநலம், மனப்பிறழ்வு, நெறிபிறழ்வு ஆகியவற்றையும் ஆங்காங்கே காண இயலும்.

**உடுக்கை இழந்தவன் கைபோல** **( குறள் : 788 )**

என்ற குறளில் நட்பைப் பற்றி எழுதியிருந்தாலும் மனப்பிறழ்வு நிலையை காண்கிறோம். நெறிபிறழ் நடத்தையைப் பற்றி அழுக்காறாமை என்ற அதிகாரத்தில் முழுமையாகக் காணமுடிகிறது.

**திருக்குறளில் வழிகாட்டலும் அறிவுரை பகர்தலும்**

**"அறன் அறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை**
**திறன்அறிந்து தேர்ந்து கொளல்"** **( குறள் 441 )**

தக்க வழிகளை ஆராய்ந்து கூறும் அறிவுரை பகர்தலில் ஆற்றல் உள்ளவர்களை மாணவர்கள் ஆராய்ந்து நட்பு கொள்ள வேண்டும். இதையே மேலைநாட்டு அறிவுரை பகர்தலின் மறைமுக அறிவுரை பகர்தலின் தந்தை என அழைக்கப்படும் காரல் ரோஜர் தன்னுடைய அறிவுரை பகர்தலை பாதிக்கப்பட்டவரே தனது குறைகளைக் காணுதல் மறைமுக அறிமுக அறிவுரை பகர்தல் என்பதைக் காண்கிறோம். தொழில்வழிகாட்டல் பகுதியையும் திருவள்ளுவர் குறிப்பிட்டுள்ளதைக் காணமுடிகிறது. பெரியோரைத் துணைகோடல் என்ற அதிகாரத்தில்,

**முதல்இலார்க்கு ஊதியம் இல்லை மதலையாம்**
**சார்புஇலார்க்கு இல்லை நிலை"** **(குறள் 449)**

தொழில் வழிகாட்டல் மாணவர்களுக்கு இன்றியமையாதது என்பதை, கல்விக் கருத்தரங்குகள் வாயிலாக நாம் காண்பதுண்டு. அதையேதான் மாணவர்களுக்கு உரிய பொருள் இல்லாதபோது அதை ஈட்டத் தகுந்த தொழில் வல்லுநர்களின் அறிவுரையைப் பெற்று உயரவேண்டும் என்பதைத் திருவள்ளுவர் உணர்த்தியுள்ளதை அறிவோம்.

**மேற்கோள்**

1. திருக்குறள் - பரிமேலழகர் உரை , திருமகள் நிலையம்

**துணைநூற்பட்டியல்**

1. திருக்குறள் - பரிமேலழகர் உரை , திருமகள் நிலையம்
2. திருக்குறள் - மு.வ.உரை , பாரி நிலையம்
3. கல்வி உளவியல் - வ.விஜயலட்சுமி , சாரதா பதிப்பகம்

ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# துருக்கித் தொப்பி புதினம் வெளிப்படுத்தும் குழந்தை மன உளவியல்

**முனைவர் செ.ஆமினா பானு, உதவிப்பேராசிரியர்,**
**தமிழ்த்துறை (சுயநிதிப்பிரிவு), சதக்கத்துல்லா அப்பா கல்லூரி,**
**ரஹ்மத் நகர், திருநெல்வேலி.**

3

**ஆய்வுச் சுருக்கம் (Abstract)**

உயிரிகளின் வெளிப்படையான நடத்தைகள் பற்றிய ஆய்வு உளவியல் எனப்படுகிறது. இத்தகைய உளவியலும் இலக்கியமும் மிக நெருங்கிய தொடர்பு உடையவை. இலக்கியம் வாழ்வியல் அடிப்படையில் அமைந்துள்ளதால் அதனுள் உளவியல் கூறுகளை அதிக அளவில் காண முடிகிறது. வாழ்வில் எதிர்கொண்ட சிக்கல்களில் உருவான ஒரு மனநிலையின் எதிரொலியாகவே இலக்கியங்கள் அதிலும் குறிப்பாக புனைவிலக்கியங்கள் அமைகின்றன. அந்த அடிப்படையில் இசுலாமியப் படைப்பாளரான கீரனூர் ஜாகிர்ராஜாவின் "**துருக்கித் தொப்பி**" புதினத்தில் உள்ள குழந்தை உளவியல் குறித்த செய்திகளை எடுத்துரைப்பதாய் இக்கட்டுரை அமைகிறது.

**திறவுச் சொற்கள் (Key Words)**

கீரனூர் ஜாகிர் ராஜா - உளவியல் - உளவியல் பிரிவுகள் - குழந்தை உளவியல் - சமூகச் சூழல் - குடும்பம் - ரகமத்துல்லாவின் உள் மன வெளிப்பாடு.

**தொடக்கமாக**

ஒரு படைப்பாளி தான் சொல்லவரும் கருத்தை பல்வேறு உத்திகளில் சொல்ல முனைவார். அத்தகைய உத்திகளில் ஒன்றுதான் "**உளவியல் உத்தி**" என்பது பற்றி, தமிழின் முதல் நூலான தொல்காப்பியம் மிக விரிவாகப் பேசுகிறது. இதனடிப்படையில் உளவியல் என்பது "**ஒரு தனி மனக்கூறு**" என்பதாகப் பொருள் கொள்ளலாம். இத்தகைய "**தனி மனக்கூறு**" தான் தமிழின் அக இலக்கியங்கள் அனைத்திலும் விரவிக் கிடக்கின்றன. அக இலக்கியங்களில் விரவிக் கிடக்கின்ற இத்தகைய கூற்றின் மீது தான் புனைவிலக்கியங்கள் கட்டமைக்கப்படுகின்றன. அந்த வகையில் இத்தகைய உளவியல் உத்தியை எடுத்துரைப்பியலில் மிகவும் லாவகமாக செயல்படுத்துகின்ற இசுலாமியப் படைப்பாளர்களின் வரிசையில் குறிப்பிடத்தக்கவராக "**கீரனூர் ஜாகிர்ராஜாவைச்**" சொல்லலாம். இசுலாமியப் படைப்பாளர்களில் தனது ஆதர்சமான படைப்பின் வழி தனக்கென தனி முத்திரையைப் பதித்துள்ள இவரின் "**துருக்கித் தொப்பி**" (2008) எனும் புதினம் காட்டும் "**குழந்தை மன உளவியல்**" குறித்து ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**படைப்பாளர் கீரனூர் ஜாகிர்ராஜா**

கீரனூர் என்ற ஊரைச் சார்ந்த சதக்கத்துல்லா, மெஹருன்னிஷா தம்பதியருக்கு மகனாகப் பிறந்த கீரனூர் ஜாகிர்ராஜா தமது எழுத்துலகப் பணியை 1995 ஆம் ஆண்டு தொடங்கினார். குமுதம், தீராநதி, புதிய பார்வை, கணையாழி உள்ளிட்ட 50 - க்கும் அதிகமான இதழ்களில் எழுதியுள்ளார். 50 சிறுகதைகள், 5 நாவல்கள், 30 - க்கும் மேற்பட்ட கட்டுரைகள். கவிதைகள், குறும்படத் திரைக்கதைகள், குழந்தைக் கதைகள், பாடல்கள் என எல்லாத் தளங்களிலும் தடம் பதித்தவர். அவர் தனது புதினங்களின் வழி இலக்கிய உலகில் மட்டுமல்லாது இசுலாமியச் சமூக வெளியிலும் பெரும் அதிர்வினை ஏற்படுத்தியவர். இத்தகைய படைப்பாளர் கீரனூர் ஜாகிர்ராஜாவின் மூன்றாவது நாவலான **"துருக்கித் தொப்பி"** காட்டும் குழந்தை மன உளவியலை எடுத்துரைப்பதாக இக்கட்டுரை முன்னகர்கிறது.

**உளவியல்**

உளவியல் என்பது மனதின் செயல்பாடுகள் மற்றும் நடத்தைகளைஅறிவியல் முறையில் ஆய்வு செய்யும் கற்கை மற்றும் பயன்பாட்டு ஒழுங்கு முறையாகும்.

**உளவியலின் பிரிவுகள்**

உளவியலைப் பற்றி ஆய்வு செய்யும் அறிஞர்கள் அதனைப் பல்வேறு பிரிவுகளாக பாகுபடுத்துகின்றனர். அவற்றை,

*பொது உளவியல்

*குழந்தை உளவியல்

*மானிட உளவியல்

*விலங்கு உளவியல்

*நெறி பிறழ் உளவியல்

*தொழில் உளவியல்

* சட்டரீதியான உளவியல்

*இராணுவ உளவியல்

*அரசியல் உளவியல்

*மருத்துவ உளவியல்

*கல்வி உளவியல்

என்பதாக வகைப்படுத்தலாம். இவற்றில் **"குழந்தை உளவியல்"** குறித்து ஆய்வுக்குட்பட்ட புதினத்தில் தொனிக்கும் செய்திகளை இக்கட்டுரையில் காணலாம்.

**குழந்தை உளவியல்**

குழந்தை உளவியல் என்பது குழந்தைகளின் வளர்ச்சி, முன்னேற்றம், குழந்தைகளின் அகப் பண்புகள், புறப் பண்புகள் இவற்றைத் தீர்மானிக்கும் காரணிகளான மரபு மற்றும் சூழல் ஆகியவற்றை விரிவாக விளக்கும் பிரிவு என்பதாக பொருள் கொள்ளலாம். மேற்கண்ட காரணிகளை கீரனூர் ஜாகிர் ராஜாவின் "**துருக்கித் தொப்பி**" புதினத்தில் இடம்பெற்றுள்ள சிறுவன் "**ரகமத்துல்லா**" எனும் பாத்திரத்தின் வழி பின்வரும் தலைப்புகளில் அடையாளங் காண்பதாக இக்கட்டுரை அமைகிறது.

**சமூகச் சூழல்**

குழந்தைகள் மற்றும் பெரியவர்களுடனான உறவுகளை குழந்தைகள் எப்படிக் கருதுகின்றன, கற்றுக் கொள்கின்றன மற்றும் அபிவிருத்தி செய்கின்றன என்பதை அறிந்து கொள்ள முடிகிறது. குழந்தைகள் கற்றுக் கொள்ளும் சமூகச் சூழ்நிலைகளில்,

*குடும்பங்கள்

*பள்ளிகள்

*சக குழுக்கள்

ஆகிய பிரிவுகள் முக்கிய அங்கமாகத் திகழ்கின்றன. இத்தகைய சமூகச் சூழலில் குடும்பம் என்ற பிரிவு துருக்கித் தொப்பி புதினத்தில் இடம்பெற்றுள்ள "**ரகமத்துல்லா**" கதாபாத்திரத்தில் எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்துகின்றன என்பதை பின்வருமாறு ஆராயலாம்.

**குடும்பம்**

பாரம்பரியமிக்க வசதி படைத்த எட்டுக்கல் பதித்த வீட்டின் பட்டத்துராணி பட்டம்மாள் என்கிற சகர்பான் பீவியின் மகன் அத்தாவுல்லா. அவனுக்கும் குட்டிலெவையின் மகள் நூர்ஜஹானுக்கும் மூத்த மகனாகப் பிறந்தவன் தான் ரகமத்துல்லா. இவனின் மனப் பிறழ்வான நடத்தைகளுக்கு இவனின் குடும்பம் எவ்வாறு காரணமாகின்றன என்பதை உளவியல் சார்ந்து கீழ்க்கண்ட நிகழ்வின் அடிப்படையில் ஆராயலாம்.

**ரகமத்துல்லாவின் வன்ம உணர்வு**

ரகமத்துல்லா தனது தம்பி இக்பாலின் மீது வெளிப்படுத்தும் வன்மத்தை புதினம் பதிவு செய்கிறது. முபாரக் அலிக்கு ரகமத்துல்லாவின் பேச்சும் போக்கும் புதிராகவே தெரிந்தது. இப்போதைக்கு அந்த வீட்டுச்

சுவர்மீது கற்களை வீசிக்கொண்டிருக்கின்றான். வெளித் தெரியும் செங்கல்லின் மீது அவன் ஆக்ரோஷத்துடன் வீசிக் கொண்டிருந்த கற்கள் பட்டு செங்கல் சிவப்புப் பொடியாய்த் தரையில் சிதறிவிழுந்தது. அதைக் கையில் அள்ளி எச்சிலைத் துப்பிக் குழைத்து தம்பியின் ரத்தம் என்று கூறி தன் வன்ம உணர்வை வெளிப்படுத்துகிறான். இதனைப் புதினம்,

**"ரத்தம் ….. ரத்தம்….. எந்தம்பியோட ரத்தம் என்றான். முபாரக் அலிக்கு அவனைப் பார்க்கவே பயமாயிருந்தது. எந்தம்பி எதுக்குடா பொறந்தா…? எனக் கென்னடா தெரியும்…..எல்லாம் எங்கத்தாவோட வேல….. இப்ப எதுக்கு எனக்குத் தம்பி? வேண்டாம்…கருமம் புடிச்சவேங் எங்கம்மாட்டப் பால் குடிக்கறாண்டா. நெசமாவா? ஆமாடா…வயிசு ஏழாச்சு. எங்கம்மாவும் அவுனுக்கும் போயித் தொறந்துக்குட்டு இன்னம் பால்குடுக்கறா"** (ப.105)

எனும் வரிகளில் எடுத்துரைக்கின்றன. இதன்மூலம் தனது உடன் பிறந்த தம்பியை எதிரியாக நினைத்துப் புறக்கணிக்கிற சிறுவனின் மன உணர்வைப் புரிந்து கொள்ள முடிகிறது. சிறுவனின் இம்மன உணர்விற்கு இவனது தாயின் புறக்கணிப்பே காரணம் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

**ரகமத்துல்லாவின் காம உணர்வு**

பன்னிரு வயதிலே சொந்தத் தாய் குளிப்பதை மறைந்து நின்று பார்க்கும் காமக் கிளர்ச்சி உடையவனாக ரகமத்துல்லா திகழ்கிறான். இதனை,

**"அம்மா சாவியை ரவிக்கைக்குள் ஒளித்திருப்பாள். அவளுடைய பருத்த மார்களின் பிளவில் சாவி ஒண்டிக்கிடக்கும். சிலமுறை அப்பள்ளத்தாக்கிலிருந்து சாவி இவன் கைக்கு வரும் பொழுது மறைவாகச் சென்று இனம்புரியாத மோகத்துடன் அதை நுகர்வான். அம்மாவின் முலைவாசனை இவனைக் கிறக்கத்தில் ஆழ்த்திவிடும். பத்துவயதிலேயே கைப்பழக்கம் தொற்றிக் கொள்ள அம்மாவைத்தவிர வேறு எவரும் காரணமில்லை என்றுதான் அவன் சொல்லக்கூடும்"** (ப.107)

எனும் புதின வரிகள் பதிவு செய்கின்றன. மேலும் மகனின் முன்பு தாய் ஈரப்புடவையுடன் வருதல், குழந்தைக்குப் பால் கொடுத்தல், ரவிக்கையைக் கழற்றி மாட்டுதல், கணவனுடன் உறவு கொள்ளல் போன்ற செயல்பாட்டின் காரணமாக சிறுவயதிலேயே குழந்தைகளுக்கு காம உணர்வுகள் மேலிட வழிவகுக்கிறது என்பதை புதினத்தின் வழி அறிய முடிகிறது.

**தாயின் அரவணைப்புக்காக ஏங்குதல்**

பொதுவாக பெற்றோர்கள் முதல் குழந்தையை அன்போடும் அரவணைப்போடும் வளர்க்கின்றனர். ஆனால் இரண்டாவது ஒரு குழந்தை பிறந்து விட்டால் மொத்த அன்பையும், கவனிப்பையும் இரண்டாவது

குழந்தையின் மீது திருப்புகின்றனர். முதல் குழந்தையைக் கவனிப்பதே இல்லை. இது குழந்தைகளின் மனநிலையை எவ்வாறு பாதிக்கின்றன என்பதை ஆய்வுக்குட்பட்ட புதினம் பதிவு செய்கின்றன. இதனை,

**"அவனுக்கு, நினைவு தெரிந்த நாளிலிருந்து பரிவான அழைப்புக்காகவும் அரவணைப்புக்காகவும் ஏங்கித் தவித்திருக்கிறான். அம்மா தன் பாசம் எல்லாவற்றையும் இக்பாலுக்கே வாரி வழங்கிக் கொண்டிருக்கிறாள். அத்தாவுக்கு அவனிடம் பேசக்கூட நேரமில்லை. சதா கட்சி வேலைகள். சீட்டு விளையாட்டு" (ப.114)**

என்பதாக எடுத்துரைக்கிறது.

இவ்வாறாக பெற்றோர்கள் குழந்தைகளை அடித்தல், பட்டினி போடுதல், புறக்கணித்தல் போன்ற செயல்பாடுகளில் ஈடுபடுவதால் ஒரு இதமான அரவணைப்பை விழைகிறது அந்தக் குழந்தை மனம். அது எங்கே கிடைக்கும் என்று அலைபாய்கிறது. அது தான் அந்த குழந்தை பிற பாலினத் துணையைத் தேர்ந்தெடுத்தல், நண்பர்களுடன் தனது பொழுதைக் கழித்தல் என்பதான நடவடிக்கைக்குக் காரணம் எனலாம். இத்தகையதொரு பாலின கிளர்ச்சி தன்னைவிட ஐந்து வயது பெரிய மல்லிகா மீது ரகமத்துல்லாவுக்கு ஏற்படுகிறது என்பதை ஆய்வுக்குட்பட்ட புதினம் பதிவு செய்துள்ளது. இதனை,

**"அவனையே வெறித்துக் கொண்டிருக்கும் குப்பிமகள் மல்லிகா. அழகுப் பிம்பமாக வளர்ந்திருக்கிறாள். அவளுடைய வட்ட முகத்தில் கண்களும் கன்னங்களும் கவர்ச்சிகரமான துருப்புகளாயிருந்தன. இவனைப் பார்த்து ஒரு புன்சிரிப்பைச் சிந்துகிறாள். தாவணியில் மறைக்கப்பட்ட இடத்துக்குத்தாவி சட்டென்று ஒரு தயக்கத்தில் நடுக்கத்துடன் கால்களுக்கு இறங்கி விட்டன அவன் கண்கள்." (பக்.114-115)**

எனும் வரிகள் எடுத்துரைக்கின்றன.

**கொலைக் குற்றத்திற்கு உள்ளாதல்**

ரகமத்துல்லாவுக்கும் அவனது தம்பி இக்பாலுக்கும் இசுலாமிய சமய முறைப்படி **"சுன்னத்"** எனும் சடங்கு மேற்கொள்ள முடிவு செய்யப்படுகிறது. இத்தருணத்தில் இக்பால் காணாமல் போகிறான் . இதற்குக் காரணம் தன் மகன் ரகமத்துல்லா தான் என்று தாய் சந்தேகிக்கிறாள். இதனை,

**"அவனையே ஆழமாகப் பார்த்துவிட்டுக் கேட்டாள், பையன ஏதும் செஞ்சுபோட்டியாடா? .....அவனுக்குத் தூக்கிவாரிப்போட்டது. உடனே கண்களில் நீர் கசியத் தொடங்கியது. எப்படிக் கேட்டுவிட்டாள். தம்பி மீது வன்மம் பாவிக்கிறவன்தான். தாயிடம் அவனுக்கு இருக்கும் உரிமையும் தன்மீதான புறக்கணிப்பும்தான் இக்பாலை வெறுக்க வைத்தது..... எப்படிக் கேட்டுவிட்டாள். கிணற்றை**

**நோட்டம் விட்டு தன்னிடம் வந்து இப்படி ஒரு கேள்வியைக் கேட்க எப்படி மனம் வந்தது இவளுக்கு? தானென்ன உடன்பிறப்பைக் கொலைப் பாதகம் செய்து விடுமளவு கொடூரமான இருதயம் படைத்தவனா? இதைத் தாயே கேட்பதா? கொட்டத்துக்குப் போய் உட்கார்ந்து ஆத்திரம் தீர அழுதான்" (பக்.155-156)**

என்பதாக புதினம் பதிவு செய்துள்ளது.

**இளம் வயதில் காதல் வயப்படுதல்**

ரகமத்துல்லா இளம் வயதிலேயே அனைத்து தவறான நடவடிக்கைகளிலும் ஈடுபடுகிறான். தாயின் அந்தரங்கத்தை ஒளிந்து கொண்டு பார்வையிடுவது, தன்னோடு வயது மூத்த அத்தை மகளைக் காமக் கிளர்ச்சியோடு பார்ப்பது, காதலிப்பது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுகிறான். இதனை,

**"சின்னப்பொட்டு என்றால் இவனுக்கு கொள்ளை இஷ்டம். உலகின் பேரழகிப் பட்டியலில் சின்னப் பொட்டுக்கு ஒரு தனியிடம் கொடுத்து வைத்திருந்தான். ஆப்பிளைப்போல அவள் சிரித்தால் கன்னங்கள் இரண்டும் சிவந்துவிடும். அவனுக்கு ஒன்றுவிட்ட காலாம்மாள். சிற்றன்னை, அதனாலென்ன? ரகமத்துல்லா அவளைக் காதலிக்கிறான். இப்போதும் வயது வித்தியாசம் உறவின் பேதம், எதுவும் தெரியாது அவனுக்கு" (ப.163)**

எனும் புதின வரிகள் எடுத்துரைக்கின்றன.

**இளம் வயதில் புகைப் பழக்கத்திற்கு உள்ளாகுதல்**

இளம் வயதிலேயே தீய பழக்கத்திற்கு ஆளாகும் குழந்தையின் மன உணர்வை ஆராய்ந்து பார்த்தால் குடும்பம் மற்றும் சமூகத்தின் புறக்கணிப்பே அக்குழந்தையை அச்செயல்களில் ஈடுபடுவதற்குக் காரணமாக அமைகின்றன. இதற்கு **"குழந்தை மன உளவியலை ஆராயும்போது பலரோடு பழக வேண்டும் என்ற ஆசை: யாருக்காவது உரிமைப் பட வேண்டும் என்ற தேவை , பிறர் தன்னை ஏற்க வேண்டும் என்ற தேவை, தனக்கென்று ஓர் இடம், தன் வயதினர் குழுவில் ஒரு மதிப்பு வேண்டும் என்ற தேவை போன்றவை ஏற்படும். இந்த ஆசைகள் குழந்தைக்குக் குழந்தை வேறுபடுகின்றன. அறிவும் அனுபவமும் இவற்றைப் பாதிக்கின்றன" 1** எனும் ஜெர்சில்டு ஆர்தரின் கருத்து இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. இத்தகைய உளவியலின் தன்மையை ஆய்வுக்குட்பட்ட புதினத்தில் பொருத்திப்பார்க்கும் பொழுது ரகமத்துல்லா தனது நண்பனுடன் சேர்ந்து புகைப் பிடிக்கும் பழக்கம் கொண்டவனாக இருக்கிறான் என்பதை புதினம் பதிவு செய்துள்ளது. இதனை,

**" டேய் முபாரக்கு எங்கடா இருக்கிற…பதிலில்லை. ஆனால் ஒரு மூலையில் மெல்லிய தீக்கங்கு தெரிந்தது. தொடர்ந்து அஜீஸ்மைனர் பீடியின் ரம்மியமான வாசனை. தாய்லி. நம்மள**

**விட்டுட்டு குடிக்கிறேம் பாரு. முனங்கியவாறு தீக்கங்கை நோக்கி வேகமாக நகர்ந்தான். அவன் நெருங்கியதும் ஓடிவந்து கையில் ஒரு பீடியைத் தந்து "பத்தவை" என்றான் முபாரக் அலி. இருவரும் ரசித்து பீடி வலிக்க ஐந்து நிமிடங்கள் பிடித்தது"** (ப.123) எனும் வரிகள் எடுத்துரைக்கின்றன.

**முடிவாக**

குழந்தைகளை ஒன்றை நாம் புரிந்து கொள்ள வேண்டுமானால் அதனுடைய வெளிப்படைச் செயல்கள், தனிப்பட்ட கருத்துக்கள், உணர்ச்சிகள், ஊக்கிகள் ஆகிய நான்கு வகை அனுபவ நிலைகளைப் பற்றியும் அறிந்திருக்க வேண்டும். அந்த வகையில் ஆய்வுக்குட்பட்ட புதினத்தில் இடம்பெற்றுள்ள ரகமத்துல்லாவின் வெளிப்படைச் செயல்களை ஆராயும் போது இளம் வயதிலேயே தாயால் புறக்கணிக்கப்படல், தந்தையின் அரவணைப்பு இல்லாமை, பாட்டி, தாத்தா போன்ற உறவுகள் அந்நியப்படல், தனிமை, விரக்தி போன்றவையே அவனது பிறழ்வான நடத்தைக்குக் காரணமாக அமைகின்றன என்பதை அறியமுடிகிறது.

**பயன்பட்ட நூல்கள்**

1) ஆர்தர் டி.ஜெர்சீல்டு, கி.ர.அப்புள்ளாச்சாரி (மொ.பெ) , குழந்தை உளவியல், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை,1964.
2) கீரனுார் ஜாகிர்ராஜா, துருக்கித் தொப்பி, அகல் வெளியீடு, சென்னை, 2008.

ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# எனது உலகம் எனது உலகியல் எனது உண்மைகள் நூல் வெளிப்படுத்தும் உளவியல் சிந்தனைகள்

4

**முனைவர் சி.ஆரோக்கிய தனராஜ், உதவிப்பேராசிரியர்,**
**தமிழாய்வுத்துறை, தூய வளனார் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.**

**ஆய்வுச் சுருக்கம்**

கவிஞர் வ.ஈசுவரமூர்த்தி தமது கவிதைகள் நூலில் இந்த உலகில் கண்ட தத்துவச்செய்திகளோடு வாழ்க்கையில் நடந்த நிகழ்வுகளோடும் தமது அறிவினால் கண்ட செய்திகளை, அக-புற உலகத்தையும் கூர்ந்து நோக்கி உலகியல் நடப்பில் காணலாகும் உளவியல் செய்திகளை ஆராய்ந்து வாழ்வியல் செய்திகளாக உணர்த்திய செய்திகள் ஆகும்.

**கலைச்சொற்கள்:** ருவா, நைமா, ஸ்பிதித்தஸ், நனவு மனம், இடைநிலை மனம், நனவிலி மனம்.

**முன்னுரை**

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றி 20ஆம் நூற்றாண்டில் ஒரு முழுமையான இலக்கிய வளர்ச்சி அடைந்த இலக்கியவகை வாழ்க்கை வரலாறு. இலக்கியம், மேலைநாட்டினரின் வருகைக்குப் பிறகு உரைநடைவடிவில் சிறுகதை, புதினம், உரைநடை, வசனக்கவிதை, உரைவீச்சு ஆகியன வகைமை வளச்சி பெற்றன. இவற்றுள் தன்வரலாறு வேறொருவர் எழுதும் வாழ்க்கைவரலாறு என்ற வாழ்க்கை வரலாற்று இலக்கியம் இருவகைப்படும். 2004ஆம் ஆண்டு கவிஞர் வ. ஈசுவரமூர்த்தி தமது வாழ்வியல் செய்திகளை மையமாகக் கொண்டு 'எனது உலகம் எனது உலகியல் எனது உண்மைகள்' என்னும் கவிதை நூலைப் படைத்துள்ளார். அந்த நூலில் காணலாகும் உளவியல் சிந்தனைகள் இக்கட்டுரையில் தொகுத்து ஆராயப்பட்டுள்ளன.

**உளவியல் தத்துவம் பற்றிய செய்திகள்**

மனிதனின் மனம் எதனால் விடுதலைபெறமுடியும் தத்துவத்தின் தலையாய பணி என்று மனிதனுக்கு அவனுடைய அரியசெல்வம் எது? என்ற நிலையில் உளவியல் தத்துவமாகச் செய்திகளைக் கூறுகிறார்.

மனம் எதனால் விடுதலை பெறுகிறது என்பதை,

**"மனங்களை விடுதலை செய்வதே தத்துவத்தின் மகத்தான பணி!**

**இதை அறியாது தாம் வாழும் வாழ்க்கை ஒரு பேரிருளே!"**[1] என்று குறிப்பிட்டுள்ள வரிகளை நோக்கும்போது 'மனம்' 'மனித்தின் அடிமை' என்பதன் விளக்கத்தைக் காண்போம்.

**'மனம்' - 'மனத்தின் அடிமை'- என்பதன் விளக்கம்**

'உன்னையே நீ அறிவாய் என்று கிரேக்க நாட்டுப் பேரறிஞரான சாக்ரடீஸ் ஒருவன் தன்மை அறிந்து கொள்ளாத போதுதான் வழிதவறி ஒருவன் திகைப்பான். அதனால், தவிப்பான் தடுமாற்றத்தால் அவன் மனம் அமைதியிழந்து பல இன்னல்களுக்கு மனம் அடிமைப்பட்டு விடுகிறது. இத்தன்மையை மனத்தின் அடிமை என்று குறிப்பிடலாம். இந்தக் கருத்தின் அடிப்படையில் சைவ சித்தாந்தம் ஒருவன் மனம் அடிமைத் தனத்திலிருந்தும் பாவத்திலிருந்தும் விடுதலைபெற முதலில் ஆணவம், கன்மம், மாயை இவற்றிலிருந்த விடுதலை பெறவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது.

மனம் பற்றி உளவியலாளர்கள் குறிப்பிடுகையில் கண், மூக்கு, செவி போன்ற உறுப்புகள் போல் மனம் என்ற ஒரு பகுதி கிடையாது அவனுடைய எண்ணமே மனம் என்று குறிப்பிடுகின்றார். இந்த எண்ணத்தின் நினைப்பு மேலோங்கும் போது மனம் ஆசையில் விழுந்து அடிமைப்படுகின்றது. இவ்வாறு அடிமைப்பட்ட மனம் விடுதலை; பெறுவதற்குத் தற்காலத்தில், தியானப் பயிற்சிகள், உடற்பயிற்சிகள் யோகா போன்றவை பயன்படுகின்றன.

இந்நிலையில் மனிதனின் மனம் விடுதலை பெறமுடியும் என்றாலும் சில சமயங்களில் மேலே கண்ட நிலையில் விடுதலை பெறமுடியாத சூழ்நிலைகளில் மனிதர்களின் மனத்தினைத் தத்துவவாதிகள் தங்களின் தத்துவச் சிந்தனைகளின் மூலம் மனிதமனங்களுக்குச் சிறந்த விடுதலை அளிக்கவேண்டும் என்றும் குறிப்பிடுகின்றார். அடுத்த நிலையில்,

"ஆன்மீகம் பேசி வாழ்வது ஒரு சோம்பேறி வாழ்க்கையே"[2] எனக் குறிப்பிடும் ஆசிரியரின் உரைவீச்சு வரிகளில் கவிஞர் வ. ஈசுவரமூர்த்தி இன்றைய உலகில் ஆன்மீகம் பேசி வாழ்க்கை நடத்தும் தன்மையை ஒரு சோம்பேறி வாழ்க்கை என்ற குற்றசாட்டை முன் வைக்கிறார்.

**ஆன்மீகம் - விளக்கம்**

ஆன்மா என்பது ஆத்மா என்னும் வடசொல்லின் மரூஉ சடப் பொருள்களின் வரையறைகள் முட்டுக்கட்டைகள், தடங்கல்கள் இவற்றிலிருந்து விடுப்பட்டுத் தன்னியல்பாக இயங்கக்கூடிய ஒன்றே ஆன்மாவாகும்.

**ஆத்மா - சொல்லாய்வு பற்றிய செய்திகள்**

'ஆத்மா' என்னும் வட சொல்லும், 'ருவா' என்னும் எபிரேயச் சொல்லும், 'நைமா' 'நூஸ்' என்னும் சொற்களும், 'ஸ்பிதித்தஸ்' என்னும் இலத்தீன் சொல்லும் 'ஆவி' என்னும் தமிழ்ச்சொல்லும் ஒரு பொருளின. 'மூச்சிவிடுதல்' என்பதே இவற்றின் அடிப்படைப் பொருள். மூச்சு நின்றுவிட்டால் உயிர்

இல்லை. ஆகவே, மூச்சு உயிராக எண்ணப்பட்டது"[3] என்று ஆத்மா என்ற சொல்லுக்கு விளக்கம் அளிக்கின்றார்.

ஆன்மா என்னும் சொல்லை அடிப்படையாகக் கொண்டு ஆன்மீகம் என்று குறிப்பிடுபவர்களில் இறையியல் சிந்தனையாளர் ஏரோணிமுசு என்பார். "மனிதனின் உடல்-ஆன்மா என்று கூறுபோட்டு உடல் சாராதவற்றை புறம் சாராதவற்றை ஆன்மீகமாகக் கொள்கின்றனர். சிலர் உலகைத் துறந்து தம்மையே ஒறுத்துக் கடும் தவமுயற்சிகளில் ஈடுபடுவதை ஆன்மீகமாகக் கொள்வர். இன்னும் சிலருக்கு நீண்ட இறைவேண்டல்களிலும் ஆழ்ந்த தியானங்களிலும் ஈடுப்பட்டிருப்பது ஆன்மீகமாகத் தெரிகிறது. வேறு சிலர் தாம் சேர்ந்துள்ள சமய வழிபாடுகளிலும் சடங்குகளிலும் முழுமையாய் ஈடுபடுவதை ஆன்மீகமாகக் கருதுகின்றனர்"[4] என்று குறிப்பிட்டுள்ளார்.

**பல்சமயவியலார் நோக்கில் ஆன்மீகம்**

சமூகச் செயல்பாட்டாளர் ச.தே.செல்வராசு என்பார், "ஆன்மீகம் என்பது ஒரு வாழ்க்கைமுறை, வாழ்வுநெறி இறைவனின் திருவுளத்தைத் தேர்ந்து தெளிந்து செயலாக்குவதில் தம்மையே பலியாக்கும் நிலை வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் தம்மை வழிநடத்தும் இறைவனுக்கு ஒருவர் கொடுக்கும் பதில்மொழி. அது இளைவர் திருமுன் இருந்து, அவர் விருப்பத்தைப் புரிந்து கொண்டு அதை நிறைவேற்றும் நோக்கில் வாழ்வது"[5] என்று குறிப்பிடுகின்றார்.

ஆன்மீகம் பற்றிச் சுசிகரன் தங்கசாமி குறிப்பிடும்போது, "ஆன்மீகம் என்பது சமயங்களுக்க அப்பாற்பட்டது. அது தனிப்பட்ட நபர்கள் இறைவனோடு ஏற்படுத்திக் கொள்ளும் ஓர் உறவு. இதற்கு இலக்கணங்களோ, கோட்பாடுகளோ கிடையாது. ஆனால், அதில் ஈடுபடுவர்களுக்க அளவிடமுடியாத நிம்மதியும், மனநிறைவும் கிடைக்கிறது. அவர்கள் வாழ்க்கையில் தேவை என்று உணரும் எல்லா விஷயங்களும் நிறைவேறியதாகக் கருதுகின்றனர்"[6]

ஆனந்தஜோதி என்பார், "உள்ளத்தையும் உயிரையும் தூய்மைபடுத்த வல்லது எதுவோ அதுவே ஆன்மீகம் நம்மை நாமே தெரிந்து தெளிவாக உணர்ந்து கொள்ளுதல் ஆன்மீகம்."[7] "உள்ளத்தையும், உயிரையும் தூய்மைப்படுத்த வல்லது அதுவே ஆன்மீகம். நம்மைநாமே தெரிந்து தெளிவாக உணர்ந்து கொள்ளுதல் ஆன்மீகம். நேர்மையான எண்ணங்களை உள்ளத்தில் வளர்த்து எவ்வுயிர்க்கும் தீங்கு செய்யாமல் அன்பே உருவாய்த் திகழ்வதே ஆன்மீகம்."[8] பல்சமயவியலார் கூற்றின் வாயிலாக ஆன்மீகம் இறைவனோடு ஏற்படுத்தும் உறவு நிலை, மனித உள்ளத்தைத் தூய்மைப்படுத்துவதும் தான் என்று புலப்படுகிறது. இதனையே திருவள்ளுவர் அருளுடைமையில் குறிப்பிடுகையில்,

**"மன்னுயிர் ஓம்பி அருளாள்வாற்கு இல்லென்ப**
**தன்னுயிர் அஞ்சும் வினை"** (திருக்குறன் எண் - 244)

அதாவது இந்த உலகியல் நிலைபெற்ற உயிர்களைப் பாதுகாத்து அவற்றின்பால் அருள் செய்வானுக்குத் தன் உயிர் அஞ்சத்தக்க தீவினை எதுவும் உண்டாகது எனத் திருவள்ளுவர் குறிப்பிட்டுள்ளார்.

இறையில் மலர் குறிப்பிடும் செய்தியாக, "ஆன்மீகம் என்பது இறை-மனித இணைவைக் குறித்தாகும். இதனை மனாற்றம் என்பது ஆன்மீக வாழ்வின் மையக்கூறு மனாற்றம் என்பது கடவுளுக்கும் தனியொரு மனிதனுக்கும் இடையேயுள்ள பிரச்சனையாகவே கருதப்பட்டு வந்துள்ளது. எனவே, கடவுளை நோக்கித் திருப்புவது என்பது பிறரை நோக்கித் திருப்புவதாகும் என்பதே ஆன்மீக வாழ்வின் நடைமுறை உண்மை."[9]

'அன்னம்' சிற்றிதழில் ஆன்மீக ஈடுபாட்டு வாழ்வு எப்படிப்பட்டது என்பதை, "கடவுள் மீதும் உலகில்பிறர் மீதும் ஏற்படும் உறவு பலவிதங்களால் வெளப்படுகிறது. இந்த உறவு தூய ஆவியின் வழிநடத்தும் போது பிறக்கிறது. இறை அரசியல்வாழ, பிறருக்காக ஈடுபட அதற்குரிய மனநிலையைக் கொள்ளும்போது அந்த உறவு ஆன்மீகம் எனப்படுகிறது"[10] என்று குறிப்பிடப்படுகிறது. சிற்றிதழ்களில் ஆன்மீகம் என்பதற்கு மனிதனுக்கும் இறைவனுக்கும் இடையே மனமாற்றத்தை ஏற்படுத்துவதும் பிறர் மீது ஏற்படும் உறவு பெற்றும் தெளிவுபடுத்துகிறது.

**இறையிலார் நோக்கில் ஆன்மீகம்**

ச.இன்னாசி சே.ச. என்பார், "இன்றைய சமூகத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வுகள் அனைத்தையும் வேரறுத்துப் புரட்சிக்கர மாறுதல்களை உருவாக்கி, இறையரசின் மதிப்புகளை மண்ணகத்தில் நிலைநிறுத்த வல்லது விடுதலை ஆன்மீகம்"[11] என்றும், "உளவியல் விடுதலை பெறுவதன்மூலம், தாழ்வு மனோபாவத்திலிருந்தும் கையாலாகத் தன்மையிலிருந்து விடுதலை பெற்றவர்களாக: அனாவசியமான மரபுகளிலிருந்து அடிமைப்படுத்தும் வழிபாட்டு முறைகளிலிருந்தும் விடுதலை பெறுகின்றனர்."[12]

ஞா. கசிமீர் சே. ச. என்பார், "ஆன்மீகப் பயிற்சி செய்வோர் முதலில் தன்னலம், தற்பெருமை ஆகியவற்றை வென்று தன்னையே, வெல்லவேண்டும். பிறகு உலகப் பொருட்கள், செல்வம் ஆகியவற்றின்மீது கொண்ட பேராசையினை வெறுக்கவேண்டும், அதோடு மட்டும் நின்று விடக்கூடாது. ஆன்மாவின் அழிவுப் புதைகுழியில் தள்ளும் புகழ், பெருமை, அதிகாரம் போன்றவற்றையும் வென்று கிறித்துவின் மலரடியில் சரணடையவேண்டும்."[13] என்று குறிப்பிடுகின்றார்.

தே. அல்போன்சுவின் கருத்தாக,"ஆன்மீகம் என்பது வாழ்வுக்கலை. அது மனிதர் உண்மை மனிதராக வாழும் முறை, முழுமையை அடைய அவர்கள் செய்யும் முயற்சி. அதுவே ஏனைய உயிர்களிலிருந்து மனிதனை உயர்த்தி வேறுபடுத்திக் காட்டுகிறது. சாதாரண மனிதரையும் சான்றோர் ஆக்குகிறது."[14]

குன்றக்குடி அடிகளார்,"ஆன்மீகம் என்பது ஆன்மாவின் உயிரின் தரத்தை வளர்த்துக் கொள்ளுதல் 'நான்' 'உள்ளம்' 'ஞானம்' என்ற மூன்றும் இணைந்த வளர்ந்த ஒன்றே ஆன்மீகம்."[15] என்று பொருள் கூறுகின்றார்.

இறையிலார் பார்வையில் ஆன்மீகம் என்பது, மக்கள் வாழ்வில் காணலாகும் ஏற்றத்தாழ்வுகளைக் களைந்து இறையாட்சியை மண்ணுலகிற்குக் கொண்டு வருவதும் மனதளவு விடுதலைப் பெறுவதும், மனிதன் வாழ்விற்கு ஏற்றொரு கலை என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

ஆன்மீகம் என்பதற்குத் திருமூலர் தரும் விளக்கமாக,

**"நடமாடக் கோயில் நம்பார்க்கு ஒன்றீயில்**
**படமாடக் கோயில் பகவற்று அது ஆமே"**[16]

என்பதில் ஏழைக்குச்செய்யும் உதவி இறைவனுக்குச் செய்யும் பூசை என்றும் இந்தத் திருமந்திரத்திர வரிகளுக்கு விளக்கம் கொடுத்த இரா. இளங்குமாரனார் 'நடமாடக் கோயில்' என்பது உயிர்கள் என்றும், 'படமாடக் கோயில்' என்பது நாம் வணங்கும் கோயில் என்றும் விளக்கம் கூறி உயிர்களுக்குச் செய்யும் தொண்டு தான் சிறந்த ஆன்மீகத் தொண்டு என்று பொருள் கூறியுள்ளார். மேலும், தவநெறி பற்றிக் குறிப்பிடும்போது,

**"வேட நெறியில்லார் வேடம்பூண்டு என்பயன்**
**வேட நெறிநிற்போர் வேடம் மெய்வேடம்"**[17]

போட்டுக் கொண்டிருக்கும் வேடத்திற்கும் ஏற்ற நெறி முறைகளை மேற்கொண்டு, அதன்படி நடக்க இயலாதவர்கள் அந்த வேடம் போட்டுக்கொண்டிருப்பதால் என்ன பயன் போட்டுக்கொண்டிருக்கும் வேடத்திற்கு ஏற்ப விதிமுறைகளை மேற்கொண்டு ஒழுகுபவர்களே உண்மையான வேடம் தரித்தவர்கள் ஆவார்கள் என்று பொருள் கொள்ளலாம்.

இதைனையே திருவள்ளுவர்,

**"மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்**
**பழித்த தொழித்து விடின்"** (திருக்குறள் எண் - 280)

மேலே கண்டகுறளில் தவம் செய்பவர்களின் ஒழுக்கம் கூறப்பட்டிருகின்றது. தவம் செய்பவர்கள் தலைமயிரை மழித்துக்கொண்டும் சடையை வைத்தலும் ஒழித்தலர் சிறப்பன்று மேலும், தவத்திற்குச் சிறந்த ஒழுக்கத்தைக் கடைபிடிக்கவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதனைப்பற்றித் திருநாவுக்கரசர் குறிப்பிடுகின்றபோது,

**“தொண்டலால் துணையும் இல்லை தோலலாது உடையும் இல்லை**

**கண்டலாது அருளும் இல்லை கலந்தபின் பிரிவதில்லை”**[18]

ஈசர்க்குத் திருத்தொண்டர்களே துணையால் விளங்குவர்கள் அவர்கள் தோலுடையை உடுத்துபவர் இப்பிரானை வணங்கிப் போற்றி வணங்களே அருளாகும் அவரைக்கண்டு வணங்கியபின் பிரிவு என்பது இல்லை என்ற நிலையில் இருப்பதுதான் சிறந்த தவமுயற்சி என்று பறைசாற்றியுள்ளார்.

இதனையே ஔவையார்,

**“தொண்டர் தம் பெருமை சொல்லவும் ஒன்னாதே”**

என்றும் குறிப்பிட்டுள்ளார். தவம் என்பது எப்படிப்பட்டது என்று நேர்காணலில் இரா. இளங்குமரனார் குறிப்பிடும்போது, “தவம் என்பது தன் தேவையைக் குறைத்தல் என்றும் பிறர் சேவையைப் பெருக்குதல்” என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதன் இறுதி நிலையாக, மனிதன் முதல் நிலைப்படுத்தவேண்டும் மனிதநேயம் உடையவன் ஆன்மீகன் அதனினும் எல்லா உயிர் மீதும் நேயம் உடையவன் மிகப் பெரிய ஆன்மீகன் அவனுக்கு “அன்பர் பணிசெய்ய என்னை ஆளாக்கி விட்டுவிட்டால் இன்ப நிலைதானே வந்து எய்தும் பரபரமே” என்று தாயுமானவர் வேண்டுவதையும் நினைவில் கொள்ளவேண்டும். எல்லா சமயத்தினரும் இதனைத் தத்தம் சமயங்களோடு இணைத்துக் காண்கின்றனர். இதனால் சமயம் தொடர்பான நம்பிக்கைகள், வழிபாட்டு முறைகள், சடங்குகள் அனைத்தும் ஆன்மீகத்துள் அடக்கப்படுகின்றன. இதனால் தான் சமயக் கொள்கைகளும் ஆன்மீகமும் வேறுபாடின்றி மக்களால் பின்பற்றப்படுகின்றன. இதனால் சமயவாதிகளையும் ஆன்மீகவாதிகள் என விளக்கும் நிலை தற்போது ஏற்பட்டுள்ளது.

மேலே கண்ட கருத்து தொகுப்புகளின் அமைப்பில் ஆன்மீகம் என்பதற்குப் பலநிலைகளில் பல கருத்துக்கள் காணப்படுகின்றன. இதனால் தான் இன்றைய காலக்கட்டத்தில் ஆன்மீகம் பேசி வருகின்றவர்களைப் பார்த்து நூலாசிரியர் முன்வைக்கம் ஒரே வரி குற்றச்சாட்டு “ஆன்மீகம் பேசி வாழ்வது ஒரு சோம்பேறி வாழ்க்கையே” என்ற உரைவீச்சு வரிதான் இங்கு நம் சிந்தனையைத் தூண்டுகிறது ‘ஆன்மீகம்’ என்பதற்குப் பலசமயவிலாளர்களின் கருத்தையும் இறையியல், அன்னம் சிற்றிதழ்கள் குறிப்பிடும் கருத்தையும் இறையிலார்களின் சிந்தனைகளையும் நோக்கும் போது, இன்றைய ஆன்மீகவாதிகளிடம் உடலுழைப்பு இருக்கிறதா? என்றால் இல்லை என்று குறிப்பிடலாம். மற்றொன்று இன்றைய ஆன்மீகவாதிகள் சிலரிடம் தவறான ஆன்மீகமும் ஆன்மீகச் சிந்தனைகளும் காணப்படுகின்றன. இத்தைகைய நிலையிலிருந்து மனமாற்றம் காண விரும்புகின்ற மனிதன் தனக்கு விடுதலை அல்லது தெளிவு தரக்கூடிய ஒரு பொருளை நாடிச்செல்கிறான். அத்தகைய நாட்டத்தற்கு ஆன்மீகவாதிகள் என்று சொல்லித் திரிகின்றவர்களின் கருத்துக்கள் தற்காலிக நிவாரணம் அளிப்பதுபோல் அவனுக்குத்

தோன்றுகின்றன. எனவே, ஆன்மீகவாதிகள் கூறுகின்ற கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்துவிட்டு வாழ்க்கையில் அன்றாடப் பணிகளை மறக்கத் தொடங்குகிறான். ஆன்மீகவாதிகளோ மக்களின் இத்தகைய மனப்பிரச்சனைகளை முதலீடாகக் கருதிக்கொண்டு பயிற்சி, யோகம், சொற்பொழிவு ஆகியவற்றால் தங்களின் தங்களின் வருமானத்தைகப் பெருக்கிக் கொள்கின்றனர். இவ்வாறு மனத்தளவிலும் உடலளவிலும் உழைப்பு இல்லாமல் ஆன்மீகவாதிகள் அவர்களின் பேச்சைக் கேட்டு உழைப்பை மறந்து விடக்கூடயவர்களாக மக்களும் இருப்பதால் தான் நூலாசிரியர் ஆன்மீகம் பேசி வாழ்வது ஒரு சோம்பேறி வாழ்க்கை என்ற குறிப்பிடுகின்றார்.

**மனிதனின் மனத்தின் விடுதலைப் பற்றிய செய்திகள்:**

மனிதனின் மனத்தின் விடுதலைப்பற்றிய செய்திகளைத் தமது உரைவீச்சில்,

**"தத்துவம் மனக்கவலைகளிலிருந்து மனிதனை விடுவிக்கும்**
**மற்றவை எல்லாம் மனச்சிறையில் நம்மை அடைக்கும்"**

என்று தத்துவத்தின் சிறைப்பை உணர்ந்த முறையில் வெளியிட்ட செய்தியின் சிறப்பாகும். மேலும், மனித மனம் பற்றிப் பிளோட்டோவின் கூற்றின் அடிப்படையில் 'மனம் ஒரு மாயக்குகை' என்றும்,

**"மனிதன் பிரபஞ்சத்தின் பூலோத்தை அளந்தான்**
**மனித மனத்தின் எல்லையை மனிதன் இன்றும் அறியான்**
**மனம் என்பது என்ன? என்ற கேள்வி கேட்டவர் பலர்**
**மனம் மனிதனைக் கடந்த தனியான உலகமா?**
**இல்லை, மனித உடலின் ஒரு பகுதி மனமா?**
**மனிதன் இல்லாது மனம் தனித்து இயங்குவது சாத்தியமா?**
**இப்படிக் கேட்ட தத்துவாதிகள், நிபுணர்கள் பலர்**
**இவர்களில் எனது தத்துவ ஆசிரியர் சிறப்பானவர்.**
**பெயர் கில்பெர்ட்ரைல் அவர் நூல்**
**இக்கேள்வி எனது அடிப்படைத் தத்துவமானது"**[19]

மனிதனின் மனம் பற்றியும் மனத்தின் தத்துவம் பற்றியும் நூலாசிரியர் தமது உரைவீச்சில் கையாளும் போது தன்னுடைய ஆசிரியரான 'கில்பெர்ட்ரைல்' எழுதிய உளவியல் நூலான 'மனத்தின் கோட்பாடு' என்னும் என்னும் நூலைச் சுட்டுகிறார். சாக்ரடீசு, பிளேட்டோ, அரிசுடாட்டில் தொடக்க காலத்தில் மனம் பற்றிய செய்திகளைத் தொகுத்துக் கூறும்போது மனம், உடல் என்பது வேறானவை

என்று குறிப்பிட்டுள்ளனர். இதற்குப் பிறகு வந்த 'தெக்கார்த்து' என்பவர் மனம் என்பதற்கு ஆரம்பத்தில் நிலவி வந்த கருத்தை மனத்தில் கொண்டு ஒரு நிலை நிறுத்தப் பெற்ற கருததை வெளியிட்டார்.

மனம் வேறு உடல் வேறு என்று முதலில் தெளிவாகக் குறிப்பிட்டவர் ஆவார். இதற்கு முன்னால் திருவிலிலியத்தின் தொடக்கநூலான ஆதியாகமத்தில் கடவுள் மனிதனைப்படைத்தார். ஆனால், அவனுக்கு உயிர் இல்லை பிறகு, தனது ஆவியை ஊதினார். அதன் பிறகு அவனுக்கு உயிர் கிடைத்தது. இதுதான் மனமும் உடலும் வேறுவேறு என்ற நிலைக்கு அடிப்படையான தர்க்கம். கில்பெர்ட்ரைல் என்பார் இந்தக் கருத்திற்கு மாறுபாடான கருத்தை முன்வைக்கிறார். “இதுவரை புரிந்து கொள்ளுதலில் தவறு ஏற்பட்டுள்ளது. தெக்கார்த்து என்ற அறிஞர் மனிதன் இறந்தவுடன் உடல் மட்டும் அழிந்து விடுகிறது. ஆனால், மனம் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறது. என்ற கூற்றை வெளியிட்டார். ஆனால், 'கில்பெர்ட்ரைல்' கூற்றுப்படி மனம் பற்றிய செய்திகயை அறிய முற்படும்போது அவர் குறிப்பிடும் கருத்து மனத்தை நாம் வகைப்படுத்தலில் தவறு ஏற்படுத்துகிறது. என்பதைக் குறிப்பிட்டுள்ளார். அவர் 'மனத்தின் கோட்பாடு' என்னும் தமது நூலில் மனத்தின் கோட்பாட்டைப் பற்றி விளக்குவதற்கு இரண்டு எடுத்துக்காட்டுகளைத் தருகின்றார்.

1. பல்கலைக்கழகம்
2. மட்டைப் பந்து விளையாட்டு

பல்கலைக்கழகம் என்பதை ஒருவர் காணும்போது, முதலில் அதற்கு உட்பட்ட கல்லூரிகள், நூலகங்கள், மைதானங்கள், அருங்காட்சியகம், ஆய்வுத்துறைகள், நிர்வாகக்கட்டங்கள் போன்றவற்றைத் தனிதனியாகப் பார்வையிட்ட பின்பு பல்கலைக்கழகம் எங்கே? என்று கேட்கிறார். இதில் அவருக்கு மேலே; கண்டவையெல்லாம் பல்கலைக்கழகத்தின் ஓர் அங்கம் என்ற புரிதல் இல்லை.

மட்டைப்பந்து - முதல் முறையாக மட்டைப்பந்து விளையாட்டைப் பார்க்கும் ஒருவருக்குப் பந்து வீசுபவர், மட்டையைப் பிடித்திருப்பவர். பந்தை பிடிப்பவர்கள் இவர்களின் செயல்களைத் தனித்தனியே பார்த்தவர். பந்தை வீசுபவர் தனது அணிக்குத்தான் பந்து வீசுகிறோம் என்ற மன உணர்வு எங்கே? இருக்கிறது என்பது பார்வையாளரின் வினாவாக? உள்ளது. (பந்து வீசும் செயலில் உணர்வு கலந்து இருப்பதை, உணரமுடியவில்லை) பந்து வீசுபவரின் உடலைப் பார்க்கமுடிகிறது. உணர்வைப் பார்க்கமுடியவில்லை. ஆனால், இரண்டுமே பந்து வீசுபவரின் செயலிலல் இரண்டற கலந்து இருப்பது தெரியவில்லை. இதில் மனிதனின் உடலைப் பார்க்க முடிகிறது. மனத்தினை அறியமுடியவில்லை என்று தமது நூலில் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு மனிதனின் மனத்திற்கும் உடலுக்கும் சிறந்த விளக்கத்தைக் குறிப்பிட்டு விளக்கம் அளித்த விதத்தைக்கொண்டு நூலாசிரியர் தமக்குப் பாடம் சொல்லிக் கொடுத்த ஆசிரியரான கில்பர்ட்ரைலசை சிறந்த ஆசிரியர் எனக் குறிப்பிட காரணம் மனிதனின் மனம் பற்றிய பேசிய

முறைகளில் இருக்கவேண்டும் மேலும், மனிதன் பற்றியும் அவனின் மனத்தைப் பற்றியும் குறிப்பிடுகையில்,

**"மனிதனை அறிய மனத்தை அறியவேண்டும்**
**மனிதனை அறிவது எளிது: மனத்தை அறிவதோ முடியாது"**[20]

என்று குறிப்பிட்டுள்ள உரைவீச்சின் பொருளை ஆராயும்போது, மனம் பற்றி தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ள செய்தியை அறிய முற்படவேண்டும். மனித மனம் பற்றித் தொல்காப்பியம் 'ஆறறிவதுவே அவற்றொடு மனனே' என்றும் 'மக்கள் தாமே ஆற்றிவுயிரே' என்று கூறுவதன் மூலம் மனித மனம் என்பது மனிதனின் செயல்பாட்டிற்கு அடிப்படை என்பது தெளிவாகப் புலனாகிறது. மனம் என்பது மனித உடலில் ஒரு கூறு என்று திருவள்ளுவர் உணர்ந்து,

**"புறத்துறுப்பு எல்லாம் எவன் செய்யும் யாக்கை**
**அகத்துறுப்பு அன்பில வர்க்கு"**[21]

என்ற திருக்குறளின் வாயிலாகத் திருவள்ளுவர் மனத்தின் செயலை அகத்துறுப்பு என்று குறிப்பிட்டுள்ளார். இதே கருத்தினை அடிப்படையாகக் கொண்டு சாக்ரடீசு, பிளேட்டோ போன்ற தத்துவவாதிகள் முன்பே தம்முடைய கருத்தை வெளியிட்டிருந்தாலும் மனத் தத்துவங்களைப் பற்றிய செய்திகள் முதன்முதலில் கிடைக்கும் நூல் அரிஸ்டாட்டில் எழுதிய 'ஆன்மாவின் இயல்புகள்' அதில் மனிதனின் வெளிப்புறத்தில் செயல்படுகின்ற செயல்கள் அனைத்துக்கும் அடிப்படையாக அமைவது அவனுடைய உள்மன இயக்கமே என்று குறிப்பிட்டுள்ளார். அந்த உள்மனம் பற்றிச் சிக்மண்ட் பிராய்டு மனத்தின் படிநிலைகளை மூன்றாகப் பகுத்துக் கூறுகின்றார். அவை.

1. நனவு மனம்
2. இடைநிலை மனம்
3. நனவிலி மனம்

இந்த மூன்று நிலைகளிலும் மனிதனின் மனத்தை அறிந்து கொள்ளலாம் என்று குறிப்பிட்டுள்ளார். இந்த மூன்று நிலை மனங்களின் செயல்பாடுகள் பற்றிக் குறிப்பிடும்போது நனவுமனம் - மேலோட்டமான நிலையில் செயல்படுகிறது. என்றும் இடைநிலைமனம் - துன்பப்படும் போது திடீரென்று வெளிப்படுதல் என்றும் மூன்றாவது நிலையில் உள்ள நனவிலிமனம் - புதைந்துபோய் இருக்கும் அதாவது (பாதிப்பு வந்தால் ஒழிய வெளிளே வரா) என்று குறிப்பிடலாம். என்று காணப்படுவதன் அமைப்பில் மனிதனின் மனத்தை அறியமுடியும் என்பது தெளிவு, ஆனால், 'கில்பர்ட்ரைல்' என்பார் மனமும் உடலும் எவ்வாறு செயல்படுகிறது என்பதை, இந்தப் பிரபஞ்சத்தின் வாயிலாக விளக்கியுள்ளார். இந்தப் பிரபஞ்சத்தின்

செயல்பாடுகளின் தன்மையில் மனிதனின் மனம் செயல்படும் விதத்தினை வெளிப்படையாகக் கண்டுகொள்ளலாம்.

ஆனால் மனித மனம் இந்தப் பிரபஞ்சத்தை மீறிய கடந்த நிலையில் அதாவது புலன்கடந்தநிலையில் மனிதனின் மனத்தின் செயல்பாடுகளை யாராலும் உணரமுடியாது என்று 'மனத்தின் கோட்பாடு' என்ற நூலின் கருத்தைக் கூறியிருப்பதை மையமாகக் கொண்டுதான் 'மனிதனை அறிவது எளிது 'மனிதனின் மனத்தை அறிவதோ முடியாது' என்று குறிப்பிட்டுள்ள வரியை நோக்கும் போது தம்முடைய தத்துவ ஆசிரியரின் கருத்தின் அடிமைப்படையாகக் கொண்டு நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார் என்பது தெள்ளத்தெளிவாகிறது.

**முடிவுரை**

மனிதனை ஒழுங்கு படுத்தும் உளவியல் சிந்தனைகளாக வ. ஈசுவரமூர்த்தி, ஆன்மீகத்தை சோம்பேறி வாழ்க்கையாகக் குறிப்பிட்டுள்ளார். இதன் அடிப்படையில் மக்கள் ஆன்மீகவாதிகளை நம்பி தம்முடைய உழைப்பை மறந்துவிட்டனர் என்ற செய்தியையும், மனத்தின் கோட்பாடு என்ற நிலையில் மனிதனின் மனத்திற்கும் உடலுக்கும் உள்ள தொடர்பை பிரித்தறிய முடியாது என்ற கருத்தையும் முன் வைத்துள்ளார்.

**சான்றெண் விளக்கம்**

1. வ. ஈசுவரமூர்த்தி, எனது உலகம் எனது உலகியல் எனது உண்மைகள், வடமலை மீடியா (பி) லிட், (கோயமுத்தூர்; 2004), ப. 67
2. மேலது, ப. 67.
3. இருதயம் இஞ்ஞாசியார் சே.ச. கிறித்தவ இந்திய ஞான வாழ்வு தோற்றுவாய். ப. 1
4. கு. ஏரோணிமுசு, இயேசுவின் ஆன்மிகம், பாறையைப்பிளக்கும் வேர்கள் ச.தே. செல்வராசு, (தொ.ஆ) ப. 60
5. ச.தே. செல்வராசு, பாறையைப் பிளக்கும் வேர்கள், முன்னுரை
6. த. ஆனந்த ஜோதி, தமிழ் இலக்கியத்தில் ஆன்மீகம் - ப. 9.
7. மேலது, ப. 9.
8. மேலது, ப. 9.
9. இறையியல் மலர், மலர் 20, இதழ் 2, ஏப்ரல்-ஜூன், 1989, ப. 4.
10. அன்னம் சிற்றிதழ் 1988, ஜனவரி 1 இதழ் 1, ப. 21.
11. மேலது, ப. 78.
12. ச. இன்னாசி முத்து சே.ச. அ. அந்தோனிகுருசு (மொ.பெ) விடுதலை ஆன்மீகம்,ப. 75.
13. ஞா. கசிமீர் சே. ச., ஆன்மீகப் பயிற்சி, ப. 13.
14. தே. அல்போன்சு, விழிப்புகள் விடியும் வரை, பாறையைப் பிளக்கும் வேர்கள், ச. தே செல்வராசு, ப. 12
15. குன்றக்குடி அடிகளார், சமயம் - நூல்வரிசை தொகுதி - 12 ப. 476
16. திருநாவுக்கரசர், தேவாரம், 119, திருவையாறு பதிகம், பக். 24-28.
17. திருமூலர், திருமந்திரம், முதல் தந்திரம் 13, 240.
18. க. நெடுஞ்செழியன், சங்க காலத் தமிழர் சமயம், பாலம் பதிப்பகம், சென்னை-2006, ப. 119
19. வ. ஈசுவரமூர்த்தி, மு.கு.நூ., ப. 64

20. மேலது, ப. 64.
21. திருக்குறள், அன்புடைமை, குறள் எண்.79.

**துணை நின்ற நூல்கள்**

1. **இன்னாசி ச., விடுதலை ஆன்மீகம், அந்தோனிகுருசு அ. (மொ.ஆ)**, வைகறைப் பதிப்பகம், திண்டுக்கல்

2. **ஈசுவரமூர்த்தி. வ. எனது உலகம் எனது உலகியல் எனது உண்மைகள்**, பிச்சனூர், கோயமுத்தூர்.2004.

3. **கசிமீர் ஞா. சே.ச., ஆன்மீகப் பயிற்சிகள்**, வைகறைப் பதிப்பகம், பெஸ்கி கல்லூரி (அஞ்சல்), திண்டுக்கல்.

4. **குன்றக்குடி அடிகளர் சமயம்**, நூல் வரிசை தொகுதி - 12, மணிவாசகர் பதிப்பகம், சென்னை முதற்பதிப்பு, 2002.

5. **நெடுஞ்செழியன். க., சங்க காலத் தமிழர் சமயம்**, பாலம் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 2006.

ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# கலித்தொகையில் தோழி கூற்று - ஓர் உளவியல் ஆய்வு

5

**முனைவர் அ. இராஜலட்சுமி, முனைவர்பட்ட மேலாய்வாளர்,**
**செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை.**

**ஆய்வுச்சுருக்கம்**

**"கற்றோர் ஏத்தும் கலி"** என்று புகழப்படும் கலித்தொகையானது ஐந்து நிலங்களுக்கும் தனித்தனியே திணை வகுத்து அவற்றிற்கென தனித்தனியே புலவர்களால் பகுத்தும் வகுத்தும் தொகுத்தும் கலிவெண்பாவால் பாடப்பட்ட பாடல்களின் தொகை நூலாகும். கலித்தொகை. பாலைக்கலியில் அமைந்த தோழி கூற்றுகளில் கூறப்பட்டுள்ள முப்புரம் எரித்த சிவபெருமான் வரலாற்றுச் செய்திகளும், கானல்நீர், அருந்ததி மற்றும் சந்திரன் ஒளி இழப்பு போன்ற அறிவியல் செய்திகளைக் கூறும் தோழியின் கூற்றுப் பாடல்களை உளவியல் வழி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

**Synopsis**

Kalithokai is sung by Kalivenpa, who divides the five lands into separate departments and compiles and compiles them separately by poets. The purpose of this article is to psychologically examine the historical news of Lord Shiva who was burnt three times in the statements of a friend in Palaikali and the scientific news such as the loss of canal water, Arundhati and the light of the moon

**கடவுச் சொற்கள்**

கலித்தொகை,தோழி கூற்றும் பாடல்கள், அறிவியல் செய்திகள், இட், மனவியல்

**முன்னுரை**

சங்க அகப்பாடல்கள் கூற்று வடிவிலானவை. அகக்கோட்பாடுகளுக்கு உட்பட்டு முதன்மை மாந்தர்களான தலைவன், தலைவி மற்றும் துணைமை மாந்தர்களான தோழி, செவிலி, நற்றாய், பரத்தை ஆகியோரின் கூற்று வழியாகவும் பல சிந்தனைகள் இக்காலச் சமூகம் அறிந்து கொள்ளும் வகையில் பல புலவர்களால் மரபு நடையில், யாப்பு கட்டுப்பாட்டுக்குள் நால்வகைப் பாக்களால் இயற்றப்பட்ட பாடல்கள், தொகை நூல்களாகத் தொகுக்கப்பட்டுள்ளன. சங்க நூல்கள் என்பன பாட்டும் தொகையும். பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் வரலாற்றுக் கருவூலங்களாகத் திகழ்கின்றன. அதுமட்டுமன்றி இன்றைய உலகமே வியந்து பார்க்கும் துறையாக வளர்ந்து வரும் உளவியல் சார்ந்த கருத்துகளும் அதில் விரவிக் காணப்படுகின்றன. பண்டைய வரலாற்றுச் செய்திகளும் இன்று உலகமே ஆராய்ந்து கொண்டிருக்கும்

வானவியல் சார்ந்த பல உண்மைகளும் கூறப்பட்டுள்ளன. எந்த தொலைநோக்கு சாதனங்களும் அற்ற காலத்திலேயே அன்று வாழ்ந்த மக்கள் வானியல் பற்றிக் கூறியிருப்பது பெரும் வியப்பாக உள்ளது. தலைவன் என்பவன் பிரிவின் காரணமாக பல்வேறு இடங்களுக்குச் செல்வதால் பல திணை பற்றிய செய்திகளும் பல விடயங்களையும் பற்றியும் அறிந்து கொள்வது இயல்பு. ஆனால் தூர தேசங்களுக்குச் செல்லாமல் தன் நிலத்தை விடுத்து வேறு எதையும் அறியாதவர்களாக இருக்கும் தலைவியும் தோழியும் காணாததை எல்லாம் கண்டதுபோல கூறும் இடங்களும் அந்தக் கூற்றில் பொதிந்து இருக்கும் பல சுவையான நிகழ்வுகள் பற்றியும் இக்கட்டுரை எடுத்தாள்கின்றது.

**தோழி கூற்றில் காணப்படும் அறிவியல் செய்திகள்**

நாடோடிகளாக வாழ்ந்த மனிதன் ஆற்றங்கரைப் படுகைகளில் சமுதாயத்தைக் கட்டியெழுப்ப ஆரம்பித்தான். மனிதன் முதலில் கண்டுபிடித்த அறிவியல் கண்டுபிடிப்பான தீயைத் தொடர்ந்து இன்று விண்ணாளவும் கடலைக் கட்டியாளவும் பல தொழில் நுட்பங்களைக் கண்டுள்ளான். இன்றும் பலருக்குப் புரியாத புதிராக இருக்கக்கூடிய வானியல் பற்றிய பல செய்திகளைச் சங்கப் புலவர்களின் மூலம் கூற்று வாயிலாக அறியலாம். முதல், கரு, உரிப்பொருள்கள் பற்றி மட்டுமே அறிந்த ஒரு பெண்ணிற்கு அறிவியல் அறிவு எப்படி வந்தது என்று எண்ணி எண்ணி வியக்கத் தக்க வகையில் தோழியின் கூற்றுச் செய்திகள் உள்ளன. அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற இயல்புடைய பெண்ணிற்கு அறிவியல் அறிவு சார்ந்த விடயங்கள் தெரிந்திருப்பது வியக்கத்தக்கது மட்டுமன்றி உளவியல் சிந்தனையின் ஆளுமை க் கூறாகவும் உள்ளது.

**தோழியின் ஆளுமைக் கூறுகள்**

தலைவன் தனது உடல் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளத் தலைவியின் துணையை நாடுகின்றான். அவன் தலைவியின் அருகில் இல்லாத பொழுது, அவனது இன்பத்தை நினைந்து தலைவி வருந்துவாள் என்பதை உணர்ந்த தோழி, தலைவனானவன் தலைவியை விட்டுப் பிரியக் கூடாது எனும் தனது உள்ளத்தின் நோக்கத்தைத் தலைவனிடம் நேரிடையாகவும் மறைமுகமாகவும் கூறுவதாகப் பல பாடல்கள் அமைந்துள்ளன. தோழியின் இந்தத் தேவையானது ஆளுமையின் வழி நோக்கத்தக்கது.

**ஆளுமை**

கருத்தாக்கத்தின்படி உளவியலின் மையக்கருவாக ஆளுமை விளங்குகிறது. மேலும் அறிவாற்றலைவிட ஆளுமையை வரையறுப்பதில் சிரமங்கள் மிகுதி. எளிமையாகச் சொல்ல வேண்டுமென்றால் நடத்தைகளின் குணங்கள் விருப்பு, வெறுப்புகள், ஆர்வங்கள், ஊக்கிகள், உலகம் பற்றிய உணர்வுகள் முதலியவற்றை ஆளுமை பிரதிபலிக்கின்றது.

ஆளுமையானது ஒருவனது பண்புகளின் தனித்தன்மை வாய்ந்த அமைப்பு (Unique pattern) என்கிறார் கில்போர்ட்.

"ஒரு மனிதன் பாரம்பரியத்தினாலும் சூழ்நிலையாலும் பெற்றுள்ள உள்ளார்ந்த மனப்போக்குகள், உள்ளத்துடிப்புகள், செயல்முறைகள், உடல்வேட்கைகள் மற்றும் இயல்பூக்கங்கள் ஆகியவற்றின் தொகுப்பே அவனது ஆளுமையாகும் என்கிறார்" உட்வொர்த்.

**ஆளுமையைப் பற்றிய மனவியற் கொள்கைகள் (Theroies of Personality Development)**

உளப்பகுப்பாய்வுக் கோட்பாட்டினர் (Psychoanalysis) நனவிலி (Unconscious) உளச் செயல்களின் செல்வாக்கினைச் சிறப்பாகக் குறிப்பிடுகின்றனர். தோழியின் மனதில் அடங்கியுள்ள ஊக்கிகள், மனவெழுச்சிகள் போன்றவை ஒருவரது சிந்தனையையும், செயல்களையும், இவற்றின் அடிப்படையில் உருவாகும் அவளது ஆளுமையையும் தீர்மானிக்கின்றன.

உளப்பகுப்புக் கோட்பாட்டினை உருவாக்கிய ஃப்ராய்ட் (Sigmund Freud) என்பவரின் கருத்துப்படி ஆளுமை அமைப்பு, தனித்தியங்கும் செயல்களையும், அதே சமயத்தில் ஒன்றோடொன்று அடைவினையாற்றிப் பாதித்துக் கொள்ளும் தன்மை பெற்ற மூன்று உள்ளமைப்புகளையும் கொண்டாதாகும். அவை முறையே

1.இட் (Id) என்ற அடி நிலை மனம்

2.தன்னுணர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட ஈகோ (Ego)

3.சமூகப் பண்பாட்டுச் சூழ்நிலைகளால் உருவாகும் மேனிலை மனம்

(Super Ego) ஆகியவை ஆகும்.

**இட் (Id) (I would, I could, I should - Id)**

இதுவே ஆளுமையின் அடித்தளமாகும். இதிலிருந்து பின்னர் 'ஈகோ' 'சூப்பர் ஈகோ' எழுகின்றன. 'இட்' சின்னஞ்சிறு குழந்தைகளிடமும் உள்ளது. மரபுநிலை வழியே பெறப்படும் எல்லா ஊக்கிகளும் இதனுள் அடங்கும். அவற்றுள் பாலூக்கம் (Sex) பிறர்பால் வலுவந்தம் (Aggression) ஆகியவை ஆதிக்கம் பெறுபவை. 'இட்' எனப்படும் அஃது நிலை மனம் அல்லது விலங்கியல் மனம் பிற மனநிலைகளின் இயக்கத்துக்குத் தேவைப்படும் சக்தியினைக் கொண்டது. இச்சக்தி 'லிபிடோ' (Libido) எனப்படும்.

**ஈகோ (Ego)**

தன்னுணர்வு நிலை எனப்படும் இது தொடக்கத்திலேயே தோன்றுவதில்லை. பின்னர் சூழ்நிலையின் உண்மை நிலைமைகளுடன் நடத்தை பொருந்திப் போக வேண்டிய தேவையின்

காரணமாகவே 'ஈகோ' எழுகிறது. எனவே இதன் செயல்கள் உண்மை நிலைமைக் கொள்கையைச் (Principle of Reality) சார்ந்து அமைபவை."

**தோழியின் ஆளுமை**

தலைவன் தலைவியை விட்டுப் பிரியக் கூடாது என்ற தனது உள்நோக்கத்தை அவனிடமே நேரடியாகக் கூறாமல் உலகில் நடந்த பல செய்திகளையும் புராணச் செய்திகளையும் அறிவியல் சிந்தனைகளையும் மேல் ஏற்றிக் கூறுவது ஈகோவின் வழி நின்றது. தனது அடி மனதில் உள்ள எண்ணங்களை நேரடியாகக் கூறாமல் பிறர் மேல் ஏற்றி வலுவான சிந்தனைகளாகக் கூறும் நிலை ஈகோவின் வழிப்பட்டது.

**அருந்ததி விண்மீன் பற்றிய அறிவு**

சப்தரிஷி மண்டலத்தின் ஒரு பகுதியான விண்மீன் குழு வடக்கு வானில் இரவு நேரத்தில் மிக எளிதாக அடையாளம் காணக்கூடிய நட்சத்திரக் கூட்டங்களில் ஒன்று. மேலும் வசிட்டர் விண்மீன் குடும்பத்தில் நான்கு மீன்களும் அருந்ததி விண்மீன் குடும்பத்தில் இரண்டு விண்மீன்களும் உள்ளன. சப்தரிசி மண்டலத்திலுள்ள ஏழு விண்மீன்களின் தொடர்ச்சியாக எட்டாவதாக கடைசி விண்மீன் அருந்ததி என அழைக்கப்படுகின்றது. சப்தரிஷிகள் என்ற ஏழு ரிஷிகள் நட்சத்திரங்களாக உள்ளனர் என்றும் ஏழாவதாக உள்ள சப்தரியினைத் தவிர மற்ற ரிஷிகள் தனது மனைவிமார்களைத் தவிர்த்து மற்ற பெண்களைக் கருத்தில் நினைத்ததாகவும் அவர்களது மனைவிமார்களும் கணவரைத் தவிர இந்திரனை மனதில் நினைத்ததால் கணவனை விட்டு பிரிந்து இருப்பதாகவும், சப்தரிஷியும் அவரது மனைவி அருந்ததியும் கணவன், மனைவியைத் தவிர பிற மனையின் மேல் நோட்டம் கொள்ளாதவர்களாக இருந்தனர் என்பதால் என்றும் பிரியாமல் வாழ்கின்றனர் என்றும் புராணக் கதை உள்ளது.

புராணங்கள் ஒரு பக்கம் கூறினாலும் வசிட்டர் நட்சத்திரம் மிஸார் எனவும் அருந்ததி நட்சத்திரம் அல்கோர் எனவும் அழைக்கப்படுகின்றன. வசிட்ட நட்சத்திரம்தான் வானியல் வரலாற்றில் முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட்ட இரட்டை நட்சத்திரம் ஆகும்.

புராணக் கதைகள் வழியாகவும் அறிவியல் வழியாகவும் அறியப்படும் இச்செய்தி ஒரு தோழியின் வழியாகவும் அறியப்படுகிறது.

**“வடமீன்போல் தொழுதுஏத்த வயங்கிய கற்பினாள்**
**தடமென்றோள் பிரியாமை பொருள் ஆயின் அல்லதை’**

**(பாலைக்கலி.2:21,22)**

அருந்ததி போன்ற வணங்கத்தக்க கற்பனையுடைய தலைவியின் பிரியாமையைக் கருத்தாகக் கொண்டு இருக்க வேண்டும் என்று தலைவனுக்கு அறிவுரை கூறும் இடத்தில் வடமீன் என்று அருந்ததியைச் சுட்டுகின்றாள். பூமியின் சுழற்சிக்குத் தகுந்தாற்போல விண்மீன்கள் இடம் மாறும். ஆனால் துருவ நட்சத்திரங்கள் இடம் மாறாது என்பதை ஆய்வாளர்கள் கண்டறிந்து காட்டியுள்ளனர். தோழி ஒருத்தி இயல்பாகக் கூறிய பாடல் ஒன்றில் கற்புக்கு எடுத்துக்காட்டாக நிலை மாறாமல் இருக்கும் அருந்ததி விண்மீன் பற்றிக் கூறுகின்றாள். பல ஆய்வுகளுக்குப் பின் கண்டறிந்த நிலை மாறா விண்மீன் பற்றி சங்க இலக்கியத்தில் தோழி கூறியுள்ளாள் என்பது இங்கு அறியப்படுகின்றது.

**சந்திர கிரகணம் அல்லது நிலவு மறைப்பு**

சூரிய ஒளியால் ஏற்படும் புவியின் நிழலிற்குள் நிலவு கடந்து செல்லும் போது ஏற்படுவது சந்திரகிரகணம். இது சூரியன், பூமி மற்றும் நிலவு ஆகிய மூன்றும் ஒரே நேர்க்கோட்டில் வரும்போது மட்டுமே நிகழ்கிறது. எனவே ஒரு முழு நிலவு நாளில் மட்டுமே நிலவு மறைப்பு ஏற்படுகிறது. நிலவின் இடம் மற்றும் அதன் பாதையைப் பொறுத்து நிலவு மறைப்பின் வகையும் அது நீட்டிக்கும் கால அளவும் வேறுபடும். முழுமையான நிலவு மறைக்கப்படும் போது நிலவின் மீது விழும் கதிரவன் ஒளியால் புவி முற்றிலும் தடுக்கும். அப்போது சூரிய வெளிச்சத்தின் மிகச் சிறிய அளவு புவியின் வளிமண்டலத்திலுள்ள தூசு கதிரவ ஒளியைச் சிதறடிக்கிறது. இதனால் ராலே ஒளிச்சிதறல் ஏற்பட்டு நிலவு சிவப்பு நிற ஒளியில் தோற்றமளிக்கும்.எனவே இது குருதி நிலவு என்றும் அழைக்கப்படுகிறது. இவ்வாறெல்லாம் பலவாறாக ஆராயப்பட்ட சந்திர கிரகணம் பற்றி ,

**“மைஅற்ற படிவத்தால் மறுத்தரல் ஒல்வதோ?**
**தீங்கதிர் மதிஏய்க்கும் திருமுகம்; அம்முகம்**
**பாம்புசேர் மதிபோலப் பசப்பு ஊர்ந்து தொலைந்தக்கால்”**

(**பாலைக்கலி.**15;15-17)

தலைவன் பொருள்வயிற் பிரியக் கருதியவுடன் தலைவியின் பல்வேறு பண்பு நலன்களை எடுத்துக்காட்டிய தோழி, தலைவனைத் தடுக்கிறாள். இவ்வுலகத்தின் வழி பொருள் தேடச் செல்லும் தலைவியிடம் சந்திரனைப் போன்ற தலைவியது முகம் கிரகணம் வரும் போது ஒளி இழப்பது போல் பொலிவு அழியுமே எனக் கூறுகின்றார். தலைவியின் முகம் இனிய ஒளிக்கதிர்களை உடைய திங்களைப் போன்றது. பாம்பு சேர்க்கும் திங்களைப் போன்று நீ நீங்கும்போது தலைவியின் முகம் பசலை படர்ந்து காணப்படும் என்கிறாள்.

திங்களைப் பாம்பு கொள்ளும் என்று திருவள்ளுவர் கூறியுள்ளார்.

**“கண்டது மன்னும் ஒருநாள் அலர்மன்னும்**

**திங்களைப் பாம்புகொண் டற்று “ (குறள். 1147)**

திங்களைப் பாம்பு கொண்டற்று என்ற தொடருக்கு ‘நிலவைப் பாம்பு விழுங்கியது போல’ என்று பொருள். முழுநிலவு நாள் ஒன்றில் மதி சிறிது சிறிதாகக் குறைந்து முழுவதும் மறைந்து போய்விடுகிறது. மதி மறைந்ததால் ஊரெல்லாம் இருளும் படர்ந்தது. இதைக் கண்ட மக்கள் ‘நிலவைப் பாம்பு கவ்விக் கொண்டு செல்கிறது’ என்பதனைக் கற்பனை செய்து சொல்கிறார்கள்.

ஞாயிற்றின் மறைவை கேது என்ற செம்பாம்பு கவ்வுவதாகவும், திங்கள் மறைவை இராகு என்ற கரும்பாம்பு கவ்வுவதாகவும் வழக்கு வந்தது எனக் குறிக்கிறார் தேவநேயப் பாவாணர்.

தோழி தனது மனக் குறிப்பில் குறித்து வைத்த செய்தியான தலைவன் தலைவியை விட்டுப் பிரியக் கூடாது என்ற தனது எண்ணம் நிறைவேற வேண்டும் என்ற வகையில் பல பொருளின் மீது ஏற்றி கூறி அவனைச் சிந்திக்க வைக்கக்கூடிய அந்த ஆளுமை திறன் மேல் மன நிலையின் வழி இங்கு ஆளுமை கூறாக அணுகப்படுகிறது.

**கானல் நீர்**

கானல் நீர் என்பது வெப்பமான கால நிலைகளில் பாலைவனங்களிலும் நேரான தார்ப்பாதை போன்றவற்றிலும் நீர்த்தடாகம் போன்று தோற்றமளிக்கும் தோற்றப்பாடு. இது காற்றில் ஒளியின் ஒளிமுறிவு (ஒளிவிலகல்) மற்றும் முழு அகத் தெறிப்பு நிகழ்ந்து தாரின் எதிரொளிப்பால் தோன்றும் ஒரு மாயத்தோற்றம்.

கோடை காலங்களில் மிகுந்த வெப்பம் காரணமாக தரையை ஒட்டிய வளிப்படை சூடு அடைகின்றது. இதனால் இப்பகுதியில் உள்ள வளிப்படையின் வெப்பநிலை குவிவு அடைந்து இருப்பதால் வெவ்வேறு விரிவு நிலையில் வளி காணப்படுகின்றது. இதன் காரணமாக வெவ்வேறு ஊடகம் போல் செயல்படுகின்றது. இதில் ஒளி ஊடுருவும் போது முழு அகத்தெறிப்பு நிகழ்வதால் ஒளி முறிவடைந்து போலித் தோற்றப்பாடு நிகழ்கின்றது. (வெயில் தரும் மாய தண்ணீர். தி இந்து (தமிழ்) 2016 மே 12. 13 மே 2016)

இந்தக் கானல் நீர் பற்றி ,

**“வேனில் உழந்த வறிது உயங்கு ஓய்களிறு**
**வான்நீங்கு வைப்பின்**
**வழங்காத் தேர்நீர்க்கு அவாஅம் “ (பாலைக்கலி. 7:1-2)**

"மழையில்லாத காட்டில் மெலிந்து உடல் ஓய்ந்த ஆண்யானை தண்ணீருக்காக கானல் நீரைப் பார்த்து அதை உண்ண விரும்பும் நிலையை உடையது காடு" என்று தோழி ஒருத்தி கூறுகிறாள்.

காட்டின் வழியே தலைவன் சென்றால் தலைவி என்னாவாளோ என்ற தனது அடி மன நிலையினை நினைத்து தலைவனைச் செல்லவிடாமல் தடுக்கும் மேல் மனநிலையில் நிற்கும் ஆளுமைக் கூறின் வழி அறிவுரை பகர்தல் இப்பாடலில் வெளிப்படுகிறது.

இந்தக் காலத்தில் பல அறிவியல் ஆய்வுகளுக்குப் பின் கண்டு பிடிக்கப்பட்ட கானல் நீரின் தன்மையைப் பற்றி அந்தக் காலத்திலேயே காட்டு வழியில் பயணம் செய்த ஆண்மகன்கள் கூறக்கேட்டு மனதில் நிறுத்திக் கொள்ளும் பெண்கள், காட்டைக் குறித்து பேசும் போது அதனை மீட்டுருவாக்கம் செய்து கூறுகின்றனர் என்பதனையும் அறியலாம்.

**முப்புரம் எரித்த சிவபெருமான்**

புறநானூறு, பரிபாடலில் திரிபுரம் எரித்த சிவன் பெயர்கள் கூறப்பட்டாலும் கலித்தொகையில் திரிபுரம் எரித்த சிவனின் வரலாறு கூறப்படுகிறது.

மால்யவான், சுமாலி, மாலி என்ற அசுர சகோதரர்கள் பொன், வெள்ளி, இரும்பு கோட்டைகளோடு கூடிய மூன்று பறக்கும் நகரங்களையும் அவை கோடி வருடத்திற்கு ஒருமுறை ஒன்றாக சேரும் போது ஒரு அம்பினால் எரிப்பவரால் தான் தங்களுக்கு ஆயுள் முடிய வேண்டும் என்றும் வரம் பெற்றதோடு நல்லவர்களையும் துன்புறுத்த ஆரம்பித்துவிட்டனர். தேவர்களின் வேண்டுகோளின் பேரில் சிவன் வேதங்களைக் குதிரைகளாக, நான்முகனைத் தேரோட்டியாகவும், மேருமலையை வில்லாகவும், மகாவிஷ்ணுவை வில்லின் தண்டு பகுதியாகவும், அக்னி வாயு தேவர்களைத் தேர் சக்கரங்களின் கடையாணிகளாகவும் கொண்ட தேரில் ஓட்டிச் செல்லும்போது அச்சாணி முறிந்தது. பிறகு விநாயகரை வழிபட்டு மீண்டும் அக்னி, வாயுவை அம்பின் நுனி, அடி பகுதிகளாக மாற்றியும் காஷ்டை, முகூர்த்தத்தை அச்சாணிகளாக மாற்றி பயணத்தைத் தொடர்ந்தார். மூன்று கோட்டைகளும் ஒரே நேரத்தில் வரும் பொழுது சிவபெருமான் தனது சிரிப்பால் மூன்று நகரங்களையும் ஒரு கணநேரத்தில் எரித்து விட்டார். இது திரிபுரந்தகர் வரலாறு என்றும், முப்புரம் எரித்த சிவன் வரலாறு என்றும் புராணங்கள் கூறுகின்றன.

இந்தப் புராண செய்தியைத் தோழி ஒருத்தி கூறுவதாக கலிப் பாடல் ஒன்று அமைந்துள்ளது. தலைவன் தலைவியை விட்டுப் பிரியக் கருதிய இடத்தில் காட்டுவழியின் கொடுமையைக் கூற வந்த இடத்தில் முப்புரம் எரித்த சிவனின் கோபத்திற்கு ஒப்பான சிவந்த சூரியன் எனவும், மூன்று கோட்டைகளின் மதில் இடிந்து விழுந்ததைப் போன்ற மலை பிழந்தது எனவும் கூறுகிறாள்.

முன்பின் தான் சென்றிராத காட்டினைக் கண்ணால் கண்டது போல கூறுவதோடு மட்டுமல்லாமல் ஒரு புராணச் செய்தியையும் இடையில் செருகி அதன் தன்மையை உவமையாக்கி சூரியனையும் மதிலையும் அதில் காட்சிப்படுத்தியது இங்கு குறிப்பிடத்தக்கது.

**........மாயம்செய் அவுணரைக்**
**"கடந்து அடு முன்பொடு முக்கண்ணான் மூவெயிலும்**
**உடன்றக்கால் முகம்போல் ஒண்கதிர் தெறுதலின்**
**சீறு அருங் கணிச்சியோன் சினவலின், அவ்எயில்**
**ஏறுபெற்று உதிர்வன போல் வரைபிளந்து"** **(பாலைக்கலி. 2; 3-7)**

மேற்கண்ட பாடலில் குறிப்பிடும் செய்தியில் இருந்து ஒரு பெண் தான் அடி மனதில் நினைத்ததை (தலைவன் பிரிந்து செல்லாமல் இருக்க) தன்னால் எதையெல்லாம் பொருத்திக் கூற முடியுமோ (மேல் மனநிலையில்) அனைத்தையும் கையாண்டுள்ளாள் என்பதும் தெரிகிறது.

**முடிவுரை**

அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு என்ற மனிதர்கள் விழுந்தவுடன் தான் பெண்ணுரிமை மேலெழ ஆரம்பித்தது என்பர். சங்க காலத்தில் வாழ்ந்த பெண்களை அரசரும் மதித்தனர். சங்க காலப் பெண்பாற் புலவர்கள் எழுதிய பாடல்கள் சங்க இலக்கியத்தில் பெரும் மதிப்பு மிக்க கருவூலங்களாகக் காணப்படுகின்றன. மேலும் சங்க அகப்பாடல்களில் காணப்படும் பெண் கூற்றுப் பாடல்கள் பல வரலாற்றுச் செய்திகள், உளவியல் உண்மைகள், வாழ்வியல் தத்துவங்களைத் தாங்கி வருகின்றன. பெண்ணிற்கு பெருமதிப்பளித்த சமுதாயமான அக்காலத்தில் வாழ்ந்த பெண்கள் தங்களது கருத்தோட்டங்களைக் கேட்பவர்களை ஈர்க்கும் விதத்தில் அமைத்துப் பேசியுள்ளாள் என்றும் ஆழ்ந்து அறிவு பூர்வமாகப் பேசும் பேச்சுக்கலை வித்தகர்களாகவும் இருந்திருக்கின்றனர் என்பதையும் பல பாடல்களின் வழி அறியலாம். தலைவியை விட அதிக பாடல்களில் இடம்பெறும் தோழி, பல சமயங்களில் தலைவனுக்கும் தலைவிக்கும் அறிவுரை பகர்பவளாகவும், வழிகாட்டியாகவும், நெறிப்படுத்துபவளாகவும், அவர்களின் கற்பு வாழ்விற்கு இன்றியமையாதவளாகவும் விளங்கியுள்ளாள்.

தனது அடி மனதில் எழக்கூடிய செயல்களை மேல்மட்ட நிலைக்குக் கொண்டு வந்து அதைச் செயல்படுத்தும் தோழியின் ஆற்றல் இங்கு குறிப்பிடத்தக்கது.

பல பாடல்களை ஆழ்ந்து சிந்திக்கையில் பல அறிவியல் கருத்துக்கள் பொதிந்து இருப்பதையும் காணமுடிகிறது. பண்பட்ட சமூகமாக இருந்த சங்க காலச் சமுதாயத்தின் ஆணிவேராகவும் முக்கியத் தூணாகவும் பெண்கள் விளங்கி இருந்தனர் என்பதையும் நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

**துணை நூற்பட்டியல்**


- கலித்தொகை, கழகப் பதிப்பு. சென்னை.
- இரவிச்சந்திரன் தி.கு., உளவியல் மிகக்கருக்கமான அறிமுகம், அடையாளம் பதிப்பகம், 1205/1கருப்பர் சாலை, புத்தநாதம்- 621310, மு.ப.2007
- இரவிச்சந்திரன் தி .கு. ஃப்ராய்ட் யூங் லக்கான் அறிமுகமும் நெறிமுகமும், அடையாளம் பதிப்பகம், புத்தநாதம்-621310. மு.ப. ,2007
- இராசமாணிக்கம் .மு. உளவியல் துறைகள், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை. மு.ப.1973
- இராசமாணிக்கம் மு..உளவியல் துறைகள், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை. இரண்டாம் பதிப்பு, 1974
- இராமலிங்கம். பா.ஞ., கல்வியும் உளவியலும், ராஜகுமாரி பதிப்பகம், சென்னை - 600058. மு.ப. 2000
- இளம்பூரணர் (உ.ஆ),தொல்காப்பியம், பொருளதிகாரம், கழக வெளியீடு. சென்னை- 18. மு.ப. 1956
- இளமதி கே .எஸ். குழந்தைகளின் மனநலம் காக்க ஒரு உளவியல் நூல், நர்மதா பதிப்பகம், சென்னை - 600017. மு.ப.2003.

ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# குறுந்தொகையில் அக வாழ்வியல் விழுமியங்கள்

இரா. இராஜா, முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழியல் மற்றும் பண்பாட்டுப் புலம்,
தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், சென்னை.

6

**ஆய்வுச் சுருக்கம்:**

எட்டுத்தொகை நூல்கள் அகவாழ்வு முறையினைத் திருமணத்திற்கு முந்தைய ஆண், பெண் இணைவைக் களவு' என்றும் திருமணத்திற்குப் பின் ஆண் பெண் இணைவைக் 'கற்பு' என்றும் குறிப்பிட்டது. இவ்விரண்டும் ஏற்புடைய மரபுகளாகச் சங்க காலத்தில் இருந்தன. பெண்ணின் வாழ்வு, மகிழ்ச்சி, வாழ்வதன் அர்த்தம் அனைத்தும் ஆண் மகனை மையமிட்டதாக ஆண்வழிச் சமூகம் கட்டமைத்திருந்தன.

இத்தகையக் கட்டமைப்பின் வழி தமிழரின் அகமரபினுள் காணப்படுகின்ற இயற்கைப் புணர்ச்சி, தோழிற் புணர்ச்சி, குறை நயத்தல், பசலைநோய், தலைவனைத் தேடி தேடி, பிரிவுத் துயரால் வாடும் தலைவி, பிரிவு வாட்டம் கொண்டுப் புலம்புதல், தோழியின் தேற்றுதல் மொழி என்று அகநூல்களில் சொல்லப்படுகின்ற அக வாழ்வு முறையினைக் கட்டமைப்பது நோக்கமாகும்.

எட்டுத்தொகை நூல்களில் மரபுகள் என்ற மேற்கண்ட வழியாக பல்வகை அகமரபுக் உணர்த்தப்படுகின்றன. திருமணத்திற்கு முந்தைய ஆண் பெண் இணைவைக் 'களவு' என்றும் திருமணத்திற்குப்பின் ஆண் பெண் இணைவைக் 'கற்பு' என்றும் குறிப்பிட்டுள்ள அகவாழ்வியல் பண்புமுறைகள் அறியப்படுகின்றன.

சங்க கால மக்கள் வாழ்க்கை நிகழ்வுகளை அகம் என்றும் புறம் என்றும் வகுத்துரைத்துள்ளனர் சங்கச் சான்றோர். உள்ளம் ஒன்றிய காதலர்களின் அக வாழ்க்கை நிகழ்வுகளைச் சொல்லும் பகுதி களவு - கற்பு ஆகும். இவற்றிற்குரிய பாடற்புனைவுக் கூறுகளைத் தொல்காப்பியர் இலக்கண விதிகளாக வகுத்துரைத்துள்ளார். தொல்காப்பிய இலக்கணக் கொள்கைகளுக்கு விளக்கம் தரும் பாடல்களாகக் குறுந்தொகை அமைந்துள்ளதனை இக்கட்டுரையின்வழி உணரமுடிகின்றது. இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், தோழியிற்புணர்ச்சி என்பன களவு வாழ்க்கையின் முதற்பகுதியாக அமைந்துள்ள திறத்தினையும் அவற்றிற்கு விளக்கம் தரும் குறுந்தொகைப் பாடல்களின் வழி அறியலாம்.

**முன்னுரை**

பழந்தமிழர், அகம் காதலைப் பற்றியும், புறம் காதலின் தொடர்பாக விளையும் பிறவற்றையும் குறிக்குமெனப் பொருள் கொண்டு அதன் அடிப்படையிலேயே இலக்கியங்களைப் படைத்துள்ளனர்.

காதலென்னும் அன்பு நிலையே உலகத்தின் உயிர் இயக்கத்திற்குத் துணைபுரிகின்றது. உலகப் பெருக்கத்திற்கும் வளத்திற்கும் காதல் தான் அடிப்படை என்பதனைக் கருத்தில் கொண்டே சங்கப் புலவர்கள் காதல் நிலைப்பாட்டினை எடுத்துரைத்துள்ளனர். சங்கச் சமூக வாழ்வினைத் தொல்காப்பியர் அகம் - புறம் என்று இருநிலையில் பகுத்துரைத்தார். இவற்றுள், அகம் என்பது புறத்தார்க்கு உரைக்கப்படாத காதல் நிலைப்பாடு ஆகும். திணை என்பது ஒழுக்கம். ஒருவனுக்கும் ஒருத்திக்கும் உளதாகிய காதல் ஒழுக்கமே அகத்திணை எனப்படும். அது பண்டைத் தமிழ் மக்களால் மூவகையாகப் பகுக்கப்பட்டது. அவை ஒருபாற்காதல். ஒத்த காதல். ஒவ்வாக்காதல் என்ற முத்திறச் சார்பாய ஒழுக்கங்களாகத் திகழ்ந்தது. சங்க இலக்கியத்தில் உள்ளம் ஒன்றியகாதல் நிலைப்பாடே பாடலுக்குப் பொருண்மையாக அமைந்துள்ளது. இவற்றுள் தொல்காப்பியர் வகுத்துரைக்கும் களவுக் கோட்பாடும், அதன்வழி இடம்பெறும் குறுந்தொகைப் பாடல் நிலைப்பாடும் குறித்து ஆராயப்படுகின்றது.

**இயற்கைப்புணர்ச்சி**

களவு, கற்பு என்னும் உணர்ச்சியைச் சிறந்த முறையில் படைத்துக் காட்டும் இன்பவாழ்வில் முதன்முதலாக நடைபெறுவது இயற்கைப் புணர்ச்சியாகும். அஃதாவது தலைவனும் தலைவியும் ஊழ்வலியால் ஒருவரையொருவர் கண்டு காதல் கொள்வது. இதனை இலக்கண நூல்கள் எதிர்ப்பாடு என்று குறிப்பிடும்.

இயற்கைப் புணர்ச்சி என்பது கூட்டுவாரின்றி ஒருவனும் ஒருத்தியும் தாமே எதிர்ப்பட்டு, ஒருவரையொருவர் காதலிப்பது ஆகும். இதனைத் தொல்காப்பியர்,

**"ஒன்றே வேறே என்றிரு பால்வயின்**
**ஒன்றி உயர்ந்த பாலது ஆணையின்**
**ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப"** [1]

என்னும் நூற்பா வழி தெளிவுறுத்துகின்றார். இந்நூற்பாவில் கிழவன் கிழத்தியைக் காண்பான் என்றோ, கிழத்தி கிழவனைக் காண்பாள் என்றோ எழுவாயும் செயற்படு பொருளுமாகக் கூறவில்லை என்பது நோக்கத்தக்கது ஆகும். யார் முதலில் காதலித்தார்கள் என்பதற்கு இடம் எதனையும் குறிக்காமல், இருவர் பார்வையும் ஒரே நேரத்தில் விழுந்தது என்ற காதல் இயல்பு புலப்பட, கிழவனும் கிழத்தியும் காண்ப என இருவரையும் எழுவாயாக வைத்துக் கூறியுள்ளார் தொல்காப்பியர். இக்கூட்டம் அறத்தொடு நிற்கும் வகையுள் ஒன்றாகிய தலைப்பாடாகும். தலைப்பாடு என்பது இருவரும் தாமே எதிர்ப்படுதல் ஆகும். இயற்கைப் புணர்ச்சிக்குரிய இலக்கண விளக்கத்தை,

**'இவனிவள் ஐம்பால் பற்றவும் இவளிவன்**
**புன்தலை ஓரி வாங்குநள் பரியவும்**

**காதற் செவிலியர் தவிர்ப்பவும் தவிராது**

**ஏதில் சிறுசெரு உறுப மன்னோ**

**நல்லைமன் றம்ம பாலே மெல்லியல்**

**துணைமலர்ப் பிணையல் அன்னவிவர்**

**மணமகிழ் இயற்கை காட்டி யோயே"**[2]

என்னும் பாடல் வழி உய்த்தறியலாம் சிறுவன் சிறுமியராக இருந்த பருவத்தில் இவ்விருவரும் தலைமுடி பிடித்து இழுத்து அடித்துக் கொண்டு விளையாடிக் கொண்டிருந்தனர். செவிலியர் வந்து இடைமறித்து விலக்கவும் விலகாது சண்டையிட்டனர். இன்றோ இணைத்த மலர் மாலை போல, மணமக்களாக விளங்குகின்றனர். இது நல்லூழின் விளையாட்டே அன்றி வேறு எதாக இருக்க இயலும்? என்று இப்பாடல் கருத்துரைத்தலைக் காணலாம்.

**தோழியிற் புணர்ச்சி**

பாங்கி எனப்படுபவள் தோழி ஆவாள். பாங்கியால் கூட்டப்பெறும் கூட்டம், 'பாங்கியற் கூட்டம்' எனவும் 'தோழியிற் புணர்ச்சி' கூறப்படும். தலைவிபால் கொண்ட காதல் உறவைத் தோழியிடம் குறையுற்று நின்ற தலைமகனின் குறையை நேர்ந்து தலைவனோடு தலைவியைக் கூட்டுவித்தலே தோழியிற் புணர்ச்சியாகும்.

தோழியிற் புணர்ச்சியாகிய இத்துறை தோழியின் உளவியல் அறிவைச் சிறப்பாகக் காட்டுகிறது. அகப்பொருள் இலக்கியத்தில் இன்றியமையாத சிறந்த இடம் பெறுபவள் தோழி. தலைவியது வாழ்வின் அனைத்து நிலைப்பாடுகளிலும் அவளுக்குத் துணை புரிபவளாகத் தோழி விளங்குகிறாள். குறுந்தொகைப் பாடலில்,

**"அம்மவாழி தோழி! கொண்கன்**

**தான் அது துணிகுவன் அல்லன். யான் என்**

**பேதைமையால் பெருந்தகை கெழுமி**

**நோகதச் செய்தது ஒன்று உடையேன்**

**கொல்லோ?**

**வயச்சுறா வழங்கு நீர் அத்தம்**

**தவச் சில நானினன் வரவு அறியானே!"**[3]

என்று தலைவியிடம் தனக்கு உள்ள உரிமையையும், இருதலைப் புள்ளின் ஓருயிர் போலத் தானும் தலைவியும் வாழ்வதாகத் தோழி குறிப்பிடுகின்றாள்.

"தலைவியின் களவொழுக்கமும், தோழியின் துணையாலேயே தொடர்கிறது. களவு, கற்பொழுக்கமாக மாறுகிறது, பாங்கற் கூட்டத்தின் பின்னர், தலைவனும் தலைவியும் கூடுவதற்குத் துணைபுரிகின்ற அவள், அவர்களை மணவாழ்க்கையில் ஈடுபடுவதற்குச் செய்யும் முயற்சிகள் அனைத்தும் அவளுடைய அறிவுச் சிறப்பையும் பண்புநலத்தையும் சிறப்புற வெளிப்படுத்துகின்றன.

தலைவன் தலைவியிடத்து நிகழ்ந்திருக்கக் கூடிய செயலைத் தன்னிடத்து நிகழ்ந்ததாகக் கூறி. அதன் வாயிலாக அவன் உளக்கருத்து அறிகிறாள் அறிவுடைத் தோழி.

**"ஒருநாள் வாரலன், இருநாள் வாரலன்**
**பன்னாள் வந்து பணிமொழி பயிற்று என்**
**நன்னர் நெஞ்சம் நெகிழ்ந்த பின்றை,**
**வரைமுதிர் தேனின் போகியோனே**
**ஆசுஆகு எந்தை யாண்டு உளன் கொல்லோ?**
**வேறுபுலன் நல்நாட்டுப் பெய்த**
**ஏறுடை மழையின் கலுழும் என் நெஞ்சே"[4]**

தலைவியின் நெஞ்சில் இரக்கம் தோன்றுவதற்காகத் தோழி தலைவன் பல நாள் வந்தான் என்பதை வகுத்து, ஒருநாள், இருநாள், பலநாள் என அவன் அன்புடைமை தோன்றக் கூறுகிறாள். வரைமுதிர்தேன் எனச் சுட்டிக் காட்டித் தோழி, தலைவன் நமக்கு அரியவன் என்பதைப் புலப்படுத்துகிறாள். தலைவனது பெருமைகளை எடுத்துரைத்து, அவர்களை ஒன்றுவிக்கும் பணியில் தோழி சிறந்து விளங்குவதனை இப்பாடலில் காணலாம்.

**குறை நயத்தல்**

தலைவி, தலைவனுடன் கொள்ளும் களவொழுக்கம் வருங்கால விளைவைப் பற்றிய தலைவியின் அச்ச மனநிலையால் நெடிது நாள் நீடிப்பதில்லை . தலைவி, தன் நாண மனநிலையால் தலைவனுடன் கொண்ட தொடர்பை வேற்றுவரைவு, அலர், ஆற்றாமை இகிய சூழல்களைத் தவிர, தானே தன் வேட்கையைக் குறிப்பினாலும், இடத்தினாலும் அன்றிப் புலப்படுத்தமாட்டாள் எனத் தலைவிக்குரிய கிளவியை வரையறுக்குங்கால் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார்.

**மெய்யினும் பொய்யினும் வழிநிலை பிழையாது**
**பல்வேறு கவர்பொருள் நாட்டத் தானும் [5]**

தலைவியின் களவொழுக்கத்திற்குத் துணையாக அறிவுத் திறனோடு செயல்படுவாள் தோழி. களவில் தலைவி. தலைவன் எதிர்ப்பட்டது முதல் வரைவு நிகழும் வரை, தோழியின் கடமைகள் அளவிறந்தன, தலைவியின் களவொழுக்கத்தை வரைவு நிகழும் வரை காக்க வேண்டியது தோழியின்

கடமையாகும். தலைவனின் விரும் தலைவியின் விருப்பு, வெறுப்பு ஆகியவற்றைக் குறிப்பினால் அறிந்து செயல்படும் மதிநுட்பம் மற்றும் நெஞ்சுரம் கொண்டு விளங்குபவள் தோழியாவாள்.

தலைவியின் நல்வாழ்வுக்காக எதையும் செய்வது என்ற துணிவு கொண்டவள் தோழி. தலைவனுக்கும் தலைவிக்கும் எக்காரணத்தினாலும் மன வேற்றுமை உண்டாகக் கூடாது என்ற எண்ணம் படைத்தவள். அதனால் தலைவன் இதுவரை தலைவியைச் சந்திக்காமல் போனதற்கு அவன் மீது பழி சுமத்தக் கூடாது என்று நினைத்தாள். தலைவனைக் குற்றமற்றவளாகவே காட்ட வேண்டும் என்று கருதினாள் என்பதை

**"அம்ம வாழி. தோழி! கொன்கண்**
**தான் அது துணிகுவன் அல்லன்; யான் என்**

**பேதைமையால் பெருந்தமை கெழுமி**
**நோதகச் செய்தது ஒன்று உடையேன்.**
**கொல்லேற**
**வயச்சுறா வழங்குநீர் அத்தம்**
**தவச்சில் நாளினன் வரவு அறியானே"[6]**

என்ற குறுந்தொகைப் பாடல் வழி அறியலாம்.

**பசலைநோய்**

பசலை நோய் என்பது, காதல் கொண்ட தலைவியானவள், தலைவனைக் காணாதபோது அவளுக்கு ஏற்படுகின்ற ஒருவகை உள நலக் குறைவு என்று கருதலாம். இந்நோய் மிகுந்த சூழ்நிலையில் தலைவி வழக்கத்திற்கு மாறாக சரியாகச் சாப்பிடாமல் இருந்து உடல் மெலிந்து உள்ளத்தில் தலைவன் அன்பிற்கு ஏங்கி நிற்கும் நிலையாக இருக்கிறது. அத்தகைய பசலை நோய் பற்றி தன் உடல் சார்ந்து நிகழும் மாற்றங்களைத் தானே உணர்த்தும் போக்கை வெளிப்படுத்துகிறது. இவ்வரிகள்.

**கன்றும் உண்ணாது கலத்தினும் படாது**
**நல் ஆன் தீம்பால் நிலத்து உக்கா அங்கு**
**எனக்கும் ஆகாது என்னைக்கம் உதவாது**
**பசலை உணீ இயல் வேண்டும்.**
**திதலை அல்குல் என் மாயைத் கவினே.[7]**

தலைவி தன் உடல் சார்ந்து உணர்வுகளை அல்லது பாதிப்புகளை கூற தயக்கம் காட்டும் நிலையைப் பெண்களிடம் இன்றும் உள்ளதைக் காணமுடிகிறது.

**தலைவனைத் தேடித் தேடி**

தலைவனைத் தேடித் தேடி அலைந்து திரிந்து தலைவியின் கால்கள் நடக்கமுடியாமல் ஓய்ந்தன. அவனைத் தேடிப்பார்த்துப் பார்த்து கண்கள் ஒளியிழந்து போயின. வானில் காணப்படுகின்ற விண்மீன்களின் எண்ணிக்கையை விடவும் அதிகமுள்ள மக்கள் கூட்டத்திடையில் எப்படித் தலைவனைக் காண்பேன் என்று வருந்துவதை,

**'அகல் இரு விசும்பின் மீனினும்**
**பலரே மன்ற, இவ உலகத்துப் பிறரே'[8]**

என்றடிகள் உறுதிப்படுத்துகின்றன. மற்றொருப் பாடலிலோ தலைவனைத் தேடும் தன் தேடல் செலை அங்கதச் சுவையுடன் வெளிப்படுத்துகிறார். அது இயற்கையோடு இயைந்த மனநிலையோடுக் கூடிய புலம்பலாக வெளிப்படுகிறது.

**பிரிவுத் துயரால் வாடும் தலைவி**

தலைவனின் மீதான தலைவியின் காதல் எல்லையற்ற நிலையில் பரவிச் செல்கிறது. தலைவி அடைந்திருக்கும் காதல் ஏக்கத்திலன் வலியை அறிந்திராத தென்றல் காற்று அவளை அலைக்கழிக்கிறது. இவள் எத்தகு துயருற்றாள் என்பதை அறியாமல் ஊர் அயர்ந்து தூங்கிக் கொண்டிருக்கிறது. ஊரார்க்குத் தனது நிலையை எவ்வாறு வெளிப்படுத்துவது என்று சிந்திக்கும் தலைவி முட்டுவதா? தாக்குவதா? அல்லது ஓவென்க கதறுவதா? எதனைச் செய்வது என்பதை அறியாமல் திணறுவதை, தலைவியே தன் பிரிவுத் துயரால் வாடும் மன வருத்தத்தை வெளிப்படுத்துவதை

**'முட்டுவேன் கொல்? தாக்குவேன் கொல்?**
**ஓரேன், யானும் : ஓர் பெற்றி மேலிட்டு**
**'ஆ.அ ஒல்' எனக் கூவுவேன் கொல்?**
**அலமரல் அசைவளி அலைப்ப, என்**
**உயவு நோய் அறியாது. துஞ்சும் ஊர்க்கே'[9]**

என்று குறுந்தொகைப் பாடலில் ஔவையார் கூறுகிறார். இதனைப் போன்றே தலைவன் பிரித்துச் சென்று திரும்பி வராத நிலையில் தலைவி - தனது மன வேதனையாது கன்று இழந்த பசுவின் பாலைப் போன்று பயனற்ற வாழ்வினை அடைந்ததாக உணர செய்துள்ளதை அறிய முடிகிறது.

தலைவி தன் பிரிவுத் துயரைத் தானே வெளிப்படுத்துவதாக ஔவைப் புலவர் பாடியுள்ளமைக் கொண்டு தன் கருத்தைப் புலப்படுத்தும் பெண்ணின் மனநிலை இருந்துள்ளமையை உணர்த்துகிறது.

**பிரிவு வாட்டம் கொண்டுப் புலம்புதல்:**

தன் உயிர் வருத்தவும், நலம் தொலையவும், தன் உடலழகு வாடிடும் வண்ணம் தன்னை விட்டுப் பிரிந்த சென்ற தலைவன் தனக்கு யார்? என்ன உறவு என்று கேட்கும் தலைவி, தன் வருத்தத்தின் உச்சித்தில் அவன் தனக்கு அம்மாவும் இல்லை, அப்பாவும் இல்லை, பின் எதற்காகத் தான் அவனோடு ஊடல் கொள்ள வேண்டும் என்கிறாள். இக்குறிப்பை

**'அவர் நமக்கு**
**அன்னையும் அத்தனும் அல்லரோ?**
**புலவி அஃது எவனோ, அன்பிலங் கடையே'[10]**

**தோழியின் தேற்றுதல் மொழி:**

தலைவி தோழியிடம் நம் காதலர் நிலத்தைத் தோண்டி அதனுள் புகுந்திடவும் மாட்டார். வானினுள் சென்று மறைந்து விடவும் மாட்டார். குறுக்கீடு செய்யும் பெருங்கடலின் மீது காலினால் நடந்து செல்லவும் மாட்டல். எனவே அவரை ஏதாவது ஒரு நாட்டில, ஏதாவது ஒரு ஊரில், ஏதாவது ஒரு குடியில் தேடிப்பார்ப்போம். அவர் அகப்படாமல் தப்புவதுண்டோ என்கிறார். இதனை,

**'நிலம் தொட்டுப் புகாஅர் வானம் ஏறார்**
**விலங்கு இரு முந்நீர் காலின் செல்லார்**
**நாட்டின் நாட்டின் ஊரின் ஊரின்**
**குடி முறை குடிமுறை தேரின்**
**கெடுநடும் உளரோ? - நம்காதலோரோ'[11]**

என்றப் பாடல் தெளிவுப்படுத்துகிறது. தலைவன் நெடுந்தூரத்தில் இல்லை. மிக அண்மையில் தான் உள்ளான். ஆனாலும் அவனைக் காணமுடியாத வருந்தத்தை,

**'கண்ணில் கன நண்ணுவழி இருந்தும்,**
**கடவுள் நண்ணிய பாலோர் போல'[12]**

என்ற பாடல் வரிகளில் யான் கண்ணால் காண்பதற்கும் உடலால் செல்வதற்கும் உரிய அண்மையில் அவன் இருந்தும், தெய்வத்தை நெருங்கிய குலத்தோரைப் போல என்னை நெருங்காது சேய்மையில் உள்ளான் என்கிறாள். தலைவி பிரிவுத்துயர் வாட்டும் போது மனதிலுள்ளதைப் புலப்படுத்தி தன்புலம்புதலை அன்பின் பிணைப்பினால் ஏற்படும் காதல் ஏக்கத்தைப் வெளிப்படுத்துகிறாள் என்பைதக் காட்டுகிறது.

**முடிவுரை**

சங்க கால மக்கள் வாழ்க்கை நிகழ்வுகளை அகம் என்றும் புறம் என்றும் வகுத்துரைத்துள்ளனர் சங்கச் சான்றோர். உள்ளம் ஒன்றிய காதலர்களின் அக வாழ்க்கை நிகழ்வுகளைச் சொல்லும் பகுதி களவு - கற்பு ஆகும். இவற்றிற்குரிய பாடற்புனைவுக் கூறுகளைத் தொல்காப்பியர் இலக்கண விதிகளாக வகுத்துரைத்துள்ளார். தொல்காப்பிய இலக்கணக் கொள்கைகளுக்கு விளக்கம் தரும் பாடல்களாகக் குறுந்தொகை அமைந்துள்ளதனை இக்கட்டுரையின்வழி உணரமுடிகின்றது. இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், தோழியிற்புணர்ச்சி என்பன களவு வாழ்க்கையின் முதற்பகுதியாக அமைந்துள்ள திறத்தினையும் அவற்றிற்கு விளக்கம் தரும் குறுந்தொகைப் பாடல்களையும் இக்கட்டுரையால் உணர முடிகின்றது.

**அடிக்குறிப்புகள்**

1. தொல், பொருள், நூ.120
2. குறுந்தொகை, பா. 229
3. குறுந்தொகை, பா. 230
4. குறுந்தொகை, பா. 126
5. தொல், பொருள், நூ.1041
6. குறுந்தொகை, பா.230
7. குறுந்தொகை, பா.27
8. குறுந்தொகை, பா.44:3-4
9. குறுந்தொகை, பா.28
10. குறுந்தொகை, பா.67
11. குறுந்தொகை, பா.130
12. குறுந்தொகை, பா.203;3-4

**துணைநூற்பட்டியல்**

1. சாமிநாதையர் உ.வே. (உரை), குறுந்தொகை, கபீர், அச்சுக்கூடம், சென்னை,1974
2. இராகவையங்கார ரா. (உரை) ,குறுந்தொகை விளக்கம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர், 1993.
3. இராமசுப்பிரமணியன். வ.த, தொல்காப்பியம் பொருளாதிகாரம் மூலமும் உரையும், பூம்புகார் பதிப்பகம், சென்னை.

ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# படிமவியல் பார்வையில் தலைவியின் உடற்கூற்றுப் புனைவியல் (குறிஞ்சிக்கலியை முன்வைத்து)

**(Paṭimaviyal pārvaiyil talaiviyiṉ uṭaṟkūṟṟup puṉaiviyal (kuṟiñcikkaliyai muṉvaittu))**

**முனைவர் பா.கவிதா, தமிழ் - உதவிப்பேராசிரியர்,**
**பூசாகோஅர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி, கோயம்புத்தூர்.**
**முனைவர் ந.இராஜேந்திரன், தமிழ் - உதவிப்பேராசிரியர்,**
**இந்துஸ்தான் கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்**

7

**ஆய்வுச் சுருக்கம்**

கற்பனையும் கனவும் பொய்யும் புனைவும் அற்ற தமிழ்ச் சமுதாயத்தை உள்ளது உள்ளபடி காட்டும் காலக் கண்ணாடியாக விளங்குவது சங்க இலக்கியங்கள். இத்தகு சங்க இலக்கியம் பாட்டும், தொகையும் என இரு பெரும் பிரிவாகப் பிரிக்கப்பட்டுள்ளது. தொகை நூல்களுள் ஒன்றான கற்றறிந்தார் ஏத்தும் கலித்தொகையில் இரண்டாவதாக அமையப்பெற்ற கபிலர் பாடிய குறிஞ்சிக்கலியில் தலைவியின் கூந்தல், முகம், தோள், மார்பு, இடை, கை, அல்குல், மேனி, போன்ற உடல் உறுப்புகளை ஆராய்வதாக அமைகிறது இக்கட்டுரை.

**திறவுச் சொல்**

கலித்தொகை, குறிஞ்சிக்கலி, கபிலர், காட்சி, படிமவியல், புனைவியல், தலைவியின் கூந்தல், முகம், தோள், மார்பு, இடை, கை, அல்குல், மேனி.

**முன்னுரை**

பெண்களின் உடலழகு பற்றிய விளக்கங்கள் சங்க இலக்கியத்தில் மிகுதியாக இடம்பெற்றுள்ளன. ஆண்களின் தோற்ற விளக்கத்தைவிடப் பெண்களின் தோற்றப்பொலிவு பலவாறாகப் பாடப்பட்டுள்ளன. இவ்வகையான உடற்கூற்றுப் புனைவுகளைப் படிமம் என்னும் கவிதைத் திறனைக் கொண்டு சங்க இலக்கியங்களிலுள்ள பாடல்களில் பொருத்திக் காண்கையில் செறிவான உவமை, உருவகம், உள்ளுறை, போன்றவற்றைப் பயன்படுத்தி நுண் பொருளைப் பருப்பொருளாக்கிப் பொருளாழம் மிக்க காட்சிகளைச் சங்கப்புலவர்கள் படைத்துள்ளமையை உணரமுடிகிறது. '**படிமம்**' என்று பெயரிட்டு அதனைத் தனி இலக்கியக் கொள்கையாக வளர்க்கவில்லையே தவிர படிமத்திற்குரிய அடிப்படையான காட்சிப்படுத்திப் பொருள் புலப்படுத்துதலைச் சங்கப்புலவர்கள் செவ்வனே கையாண்டுள்ளனர். அவ்வகையில் கலித்தொகை, குறிஞ்சிக்கலியில் இடம்பெற்றுள்ள தலைவியின் உடற்கூறுகளைக் கபிலர் எவ்வாறு காட்சிப்படுத்தியுள்ளார் என்பதனைப் படிமவியல் பார்வையில் ஆராய்வதாக அமைகிறது இக்கட்டுரை.

**படிமம்**

இமேஜ் (Image) என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு இணையாகத் தமிழில் வழங்கப்படும் சொல் 'படிமம்' என்பதாகும். அகப்பொருள்கள் அனைத்தும் அடிப்படையில் காட்சித் தன்மையைச் சுட்டுகின்றன. இலக்கியத்துறையில் இச்சொல் 'காட்சித் தன்மையுடைய கவிதைத் திறன்' என்ற பொருளில் கையாளப்படுகிறது. இக்கருத்தை மேலை நாட்டவர்கள் உருவாக்கினர். இவர்களைப் படிமவியலாளர் (Imagists) என்றும், இவர்களது கொள்கைகளைப் படிமவியல் (Imagism) என்றும் கூறுவர். ஆங்கில அறிஞர்கள் படிமங்களைத் தன்னுணர்வற்ற நிலையில் மனத்தில் சேகரிக்கப்பட்டு, வகைப்படுத்தப்பட்ட அனுபவங்கள் என்று வரையறை செய்துள்ளனர்.

"அறிவானும் உணர்ச்சியானும் ஆன ஒரு மன பாவனையை ஒரு நொடிப்பொழுதில் தெரியக் காட்டுவதுதான் படிமம். ஓர் ஓவியமோ சிற்பமோ தன்னை வேறுவித ஊடகங்களின் மூலமாக வெளிப்படுத்திக் கொள்கின்ற ஒரு கவிதையாகும்", "தன்னில் இருந்தும் தன் வழியாகவும் தொடர்ந்து புதுப்புதுச் சிந்தனைகளை எழுப்பிக் கொண்டிருக்கும் நீர்ச்சுழலே படிமம்" என்று கூறும் எஸ்ரா பவுண்டின் கருத்தைக் க.பூரணச்சந்திரன் சுட்டிக்காட்டுகிறார் (2010.11)

பிரின்ஸ்டன் கலைக்களஞ்சியம் படிமத்தைப் "பொறிகளின் வழியாகப் புறவுலகப் புலனுணர்வுத் தூண்டுதல்களால் மனதில் எழும் பிரதிபலிப்பே படிமம்" என்று வரையறை செய்வதாக இரா.சம்பத் கூறுகிறார் (1992.136).

படிமத்தைப் பற்றிப் பாகல் குறிப்பிடுகையில் "படிமம் என்பது புலன் வழி அனுபவம், கவிஞரின் கவித்துவத்தால் கவிதையாக்கப் பெறுகிறது. கவிஞரின் உள்ளத்தில் தோன்றும் இப்புலன் அனுபவம் படிப்பவரின் மனங்களை அடைகிறது. இவ் அனுபவத்தின் தன்மை சிறிதும் சிதறாமல் படிப்பவர்க்கு அறிவுறுத்த வரிவடிவம் ஒன்றைத் தருவதே படிமம் என்னும் உத்தியாகும்" என்று வரையறை செய்வதாக சொ.மணிவண்ணன் கூறுகிறார் (2004.19).

ஆங்கிலக் கலைச்சொல் அகராதி படிமத்திற்குத் தரும் விளக்கம் குறிப்பிடத்தக்கது. அது பின்வருமாறு, "சுருங்கக் கூறின் படிமம் என்பது ஓர் ஆசிரியன் தான் உணர்ந்த எண்ணங்களை வெளியிட முயலும்போது கையாளும் கருவியாகும்" எனும் கருத்தை எடுத்தாளுகிறார் ஏ.ஆர். பொன்னையா(1992.15).

கவிஞர்களின் உள்ளக் கருத்துக்களைத் தெளிவாக அறிந்து கொள்வதற்குப் படிமக் காட்சிகள் பெரிதும் பயன்படுகின்றன. உவமை, உள்ளுறை போன்றவைப் புலப்படுத்தும் கருத்துக்களைவிடப் படிமம் அதன் நுண்பொருளைக் காட்சிப்படுத்திப் பருப்பொருளாக்கிக்காட்டி வாசகனின் மனக்கண்முன் எளிதில் கருத்தைப் பதியவைத்துவிடுகிறது.

'சுருக்கமாகச் சொன்னால் கவிஞன் ஒரு பொருளைக் காணுகின்ற பொழுது அவனுக்குச் சில எண்ணங்கள் உணர்ச்சிகள் ஏற்படுகின்றன. அப்பொருளைத் தன் கவிதையில் படைக்கின்ற வகையில்

கவிஞன் அடைந்த எண்ணங்களை, உணர்ச்சிகளைப் பிரதிபலிக்கச் செய்கின்றான். அப்பிரதிபலிப்பே படிமம் எனப்படுகிறது'.

**அகப்பொருள் மரபு**

பிறருக்குக் கூற இயலாத அக உணர்வான காதலால் ஏற்படும் இன்ப, துன்பங்களை இயற்கைப் பொருட்களோடு ஒப்பிட்டுக் குறிப்பால் உணர்த்தும் நாகரீகம் தமிழின் அகப்பாடல் மரபிற்கே உரியது. அகவாழ்வின் சிறப்பை விளக்கும் போது பின்புலம் பற்றிய உணர்வு சிறப்பாக அமைய வேண்டும். சங்க இலக்கியத்தில் பெரும்பாலும் முதல் மற்றும் கருப்பொருள்கள் ஆகியவைப் பின்புல வருணனைக்காகக் கூறப்பட்டுப் படிமக் காட்சிகளாய்த் தோன்றுகின்றன.

மகளிரை வருணிக்கும் இடத்துச் சங்க இலக்கியத்தில் முழு வருணனையைத் தருவதில்லை. முகம், கூந்தல், தோள், முறுவல், விழி என்று இவற்றில் ஏதேனும் ஒன்றினைக் கூறிக் கோடிட்டுக் காட்டுவது போல அமைகின்றன. அவ்வுறுப்புகளும் பாடலின் உரிப்பொருளுக்கு ஏற்றனவாக அமைந்திருக்கும். இவ்வாறு வருணிப்பதும் விரிந்த அளவில் அமையாது பொருள் செறிந்த ஓரிரு சொற்களால் மட்டும் வருணிப்பதாக உள்ளது. எனினும், ஒரு சில இடங்களில் மகளிரின் முழு வடிவமும் தீட்டப்பட்டுள்ளன. பெண்ணுடலின் பல்வேறு உறுப்புகளைத் தனித்தனியேயும் இணைத்தும் குறிக்கும் சங்க இலக்கியப் பாடல்கள் பலவாகும். சங்க இலக்கியங்களில் பெண்களின் அங்கங்கள் குறித்தான வருணனைகள் உச்சம் தொட்டாலும் அவை இரசிக்கத்தக்க வகையிலேயே இருந்திருக்கின்றன. முகச்சுளிப்பை ஏற்படுத்துவதில்லை.

**கூந்தல்**

பெண்களின் உறுப்பு நலன்களை வருணிக்கும் போது கேசாதிபாதமாக வருணிக்கும் மரபு உண்டு. பெண்ணின் அழகிற்கு முக்கிய பங்களிப்பது அவளின் கூந்தலாகும்.

**படிமம்**

**"இருள் உறழ் இருங்கூந்தல்"** (49:18)

**"மாரிவீழ் இருங்கூந்தல்"** (60:2)

**படிமம் உருவாக்கும் காட்சி**

இருளினை ஒத்த கரிய நிறமுடைய கூந்தலை உடையவள் என்றும், மழை மேகம் போன்ற கரிய கூந்தலை உடையவள் என்றும் கபிலர் படிமக் காட்சிகளின் வழிப் புலப்படுத்தியுள்ளார்.

**படிமம் பயின்று வந்துள்ள இலக்கியத்தின் அடிப்படைப் பொருண்மையுடன் கொண்டுள்ள உறவு**

இரவு நேரத்தில் தலைவன் தலைவியைச் சந்திக்க விரும்புகிறான். இதனையறிந்த தோழி இரவு நேரத்தில் வந்தால் துன்பம் நேரிடக்கூடும் என்று தலைவனை இரவுக்குறியிலிருந்து விலக்குகிறாள். இச்சூழலில் இருளின் காட்சி அவளின் மனதில் ஆழமாகப் பதிந்துவிடுகிறது. எனவே தலைவி கூந்தலின்

கருமை நிறத்தினை வருணிக்குமிடத்துத் தான் கண்ட இருளின் கருமை நிறத்தோடு ஒப்பிட்டுக் கூறுகிறாள்.

மாரிவீழ் இருங்கூந்தல் என்பதில் மழை பெய்வதற்கு முன்பு மேகம் கரிய நிறத்துடனும் திரட்சியுடனும் காணப்படுவதைப் போன்று தலைவியின் கூந்தலும் கருமையும் திரட்சியும் கொண்டது. மழையின் அருளால் உயிர்கள் பயனடைவதைப் போல, தலைவியின் அருளென்னும் மருந்தினால் தலைவன் பயனடைவான் என்பதனைப் படிமக் காட்சியின்வழி விளக்குகிறாள்.

**புதிய சிந்தனை அல்லது கருத்து**

தலைவன் தலைவியைச் சந்திக்க வரக்கூடிய வழியானது மிகவும் கொடியது. துன்பம் தரக்கூடியது. எனவே இரவு நேரத்தில் சந்திக்காது இருளோடு மாறுபடுகின்ற பகல்பொழுதில் தலைவியைச் சந்திக்க வரவேண்டும் என்பதே இப்படிமத்தின் கருத்தாக அமைகிறது. கூந்தலின் கருமை நிறத்தின் வழித் தலைவியின் இளமைத் தன்மையையும் பதியவைத்துவிடுகிறார் கபிலர்.

**முகம்**

மனித வாழ்க்கையினை அவ்வப்போது படம்பிடித்துக் காட்டுவது போன்ற பண்பு வாய்ந்தது முகம். உள்ளத்து உணர்வுகளை மிக விரைவாக உணர்த்தும் ஆற்றல் படைத்தது முகம் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**படிமம்**

**"துகள் அறு வான் முகம்"** **(64:15)**

**படிமம் உருவாக்கும் காட்சி**

மாசற்ற முழுமதியினைப் போன்ற ஒளியுடைய முகம்

**படிமம் பயின்று வந்துள்ள இலக்கியத்தின் அடிப்படைப் பொருண்மையுடன் கொண்டுள்ள உறவு**

தலைவன் தலைவியின் எழில் நலன்களைப் பாராட்டிக் கூறுகிறான். தலைவன் கூறிய உயர்மொழியால் தலைவியும் கூட்டத்திற்கு உடன்படுகிறாள். இடைவிடாது கூடிய கூட்டத்தால் தலைவியும் தோற்றப்பொலிவினைப் பெறுகிறாள். இந்நிலையில் தலைவியின் முகமானது கலங்கமற்ற ஒளியுடைய முழுமதியினைப் போன்று காணப்படுகிறது.

**புதிய சிந்தனை அல்லது கருத்து**

தலைவியானவள் தலைவனுடன் சேர்ந்திருந்த காலத்தில் முகம் ஒளிபடர்ந்து பிரகாசமாக விளங்கியதையும் தலைவனைப் பிரிந்த நிலையில் முகத்தில் ஒளிகுன்றிக் காணப்பட்டதையும் இன்பநிலை, துன்பநிலை என்கிற பின்புல நிலைகளையும் இப்படிமக்காட்சிகளின் வழி அறியமுடிகிறது.

**நுதல் (நெற்றி)**

குறிஞ்சிக்கலியில் தலைவியின் நுதல் கபிலரால் மிகவும் அழகாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

**படிமம்**

> **"ஊர் அலர் தூற்றலின், ஒளி ஓடி, நறுநுதல்**
> **பீர் அலர் அணி கொண்டு பிறை வனப்பு இழுவாக்கால்?"** (53:14-15)

**படிமம் உருவாக்கும் காட்சி**

தலைவியின் களவு வெளிப்பட்ட நிலையில் ஊரார் அலர் தூற்றுகின்றனர். இதனால் தலைவியின் நறிய பிறை போன்ற நுதலில் ஒளி மறைந்து, பீர்க்கம் பூவினது நிறத்தைப் போன்று பசலை பாய்ந்து அழகை இழந்து வாடியிருந்தது.

**படிமம் பயின்று வந்துள்ள இலக்கியத்தின் அடிப்படைப் பொருண்மையுடன் கொண்டுள்ள உறவு**

இயற்கைப் புணர்ச்சியின்போது தலைவன் தலைவிக்கு அருள் செய்தான். பின்னர் தலைவியைப் பிரிந்து அவளுக்கு வருத்தம் அளித்தான். இதனை அறிந்த தோழி தலைவி தீராத காதல் நோயினால் வருந்தி வாடுகிறாள் என்பதைத் தலைவனுக்கு உணர்த்தும் பொருட்டு, உன்னுடைய மலையிடத்து வறட்சியால் வருந்தி முளைக்கும் பருவத்தை அடைந்த சிறுதினை, மழையைப் பெற்றதும் அழகு பெற்றாற் போல, இவளது நுதலும் உன்னுடைய அருளால் அழகு பெறும்.

**புதிய சிந்தனை அல்லது கருத்து**

இயற்கைப் புணர்ச்சி, களவு வெளிப்படுதல், ஊரார் அலர் தூற்றுதல் போன்றவை இன்பப் புணர்ச்சி நிகழ்ந்தமையைக் காட்டுகிறது. இதன் வழித் தலைவனுடன் இருந்த நிலையில் இன்பமும், தலைவனைப் பிரிந்த நிலையில் துன்பமும் ஆகிய அகவொழுக்கப் பின்னணிகளையும் அறிந்துகொள்ள முடிகிறது. உயர்ந்த நிலையில் இருக்கும் நிலவோடு ஒப்பிட்டுக் கூறுவதால் தலைவியும் உயர்வானவள் என்பதை இப்படிமக்காட்சி உணர்த்துகிறது.

**கண்கள்**

கண்கள் மனிதனின் மன எண்ணத்தை, உணர்வினை, உணர்ச்சியை வெளிப்படுத்தும் கருவியாகவும் கண்ணாடியாகவும் விளங்குகின்றன. தலைவியினுடைய கண்ணையும் நுதலையும் கூந்தலையும் மேனி எழிலையும் புனைந்திடும் மிகச்சிறு சொற்றொடரிலும் அகப்பொருள் கருத்துக்களை அமைத்துவிடும் நுட்பத்தைக் கபிலர் மிகவும்

நேர்த்தியாகக் கையாண்டுள்ளார். அவ்வகையில் குறிஞ்சிக்கலியில் தலைவியின் கண்களைப் பற்றிய பல இடங்களில் படிமக் காட்சிகளைப் பதிய வைத்திருக்கிறார் கபிலர்.

ஊரார் அலர் தூற்றும் நிலையில் தலைவியின் கண்களானது மீன்கள் நீரினை உண்டு உமிழுவதைப் போல, கண்கள் நீரினை உமிழ்ந்து நின்றன என்பதனை,

**"அயல் அலர் தூற்றலின், ஆய் நலன் இழந்த கண்**

**கயல் உமிழ் நீர் போல கண்பனி கலுழாக்கால்" (53:10-11)**

என்னும் அடிகள் விளக்குகின்றன. இதன்வழி அயலார் அலர் தூற்றுவதற்கு அஞ்சிய தலைவியின் கண்கள் தன் அழகு நலனை இழந்து வாடி நீரினைச் சொரிந்தன என்பதனை அறியமுடிகிறது. இவற்றின் வழித் தலைவியின் கண்கள் பூப்போல் மென்மையானது என்பதும் பொலிவினை உடையது என்பதும் அதில் மையிடப்பட்டுள்ளது என்பதும் தெரிகிறது. தலைவியின் பிற உறுப்புகளைக் காட்டிலும் கண்களே மிக விரிவாகப் பேசப்பட்டுள்ளன.

**பற்கள்**

தலைவியின் பற்கள் வெண்மையான வண்ணத்தாலும் கூர்மையான வடிவத்தாலும் முத்து, முல்லைமலர் ஆகியவற்றோடு ஒப்புமைப் படுத்தப்பட்டுள்ளன. இதழ்களின் சிவந்த நிறம் பவளம் போன்று இருந்ததாகவும் கூறப்பட்டுள்ளது. பவளம் போன்ற சிவந்த வாயினை உடையவள் என்பதை,

**"இன்நகை, இலங்குஎயிற்று, தேமொழி, துவர்ச்செவ்வாய்" (55:4)**

என்னும் அடி விளக்கும். மேலும், முத்தினை ஒக்கும் முறுவலை உடையவள் (64:29) என்றும், விளங்குகின்ற வெள்ளிய எயிற்றினை உடையவள் (56:21), (58:4) என்றும், முல்லை முகையோடு மாறுபாடு கொள்ளும் எயிற்றினை உடையவள் (64:17) என்றும் கூறப்பட்டுள்ளன. முத்தின் பளபளக்கும் ஒண்மைப் பண்பும் வெண்மை நிறமும் தலைவியின் பற்களுக்குக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இம்முத்தின் படிமத்தால் தலைவி உயர்வானவள். கிடைத்தற்கு அரிதானவள் என்பதைக் கபிலர் சுட்டிக்காட்டியுள்ளார். இப்படிமங்களால் தலைவி இளமையானவள், இனிமையானவள், இனிமையான நகையினை உடையவள் என்பதும் யாரிடமும் அதிகம் பேசி அறியாதவள், வெண்மையான பற்களை உடையவள், பவளம் போன்ற சிவந்த வாயினை உடையவள் என்பதும் பெறப்படும்.

**தோள்கள்**

நல்ல வடிவத்துடன் கூடிய தோள்கள் பெண்ணின் அழகை மேம்படுத்தும். குறிஞ்சிக்கலியில் தலைவியின் தோளுக்கு மூங்கிலின் வளவளப்புத் தன்மையை ஒப்பிட்டுக் காட்சிப்படுத்தியுள்ளார் கபிலர். அவ்வாறு காட்சிப்படுத்தும் போதெல்லாம் மூங்கிலின் கணுக்களுக்கு இடையே உள்ள பகுதியை ஒப்புமைப்படுத்தியுள்ளார்.

நிறத்தாலும் திரட்சியாலும் நுண்மையை உடைய மூங்கில் போன்றும், மென்மையால் நுண்ணிய துகிலினை உடைய அணை போன்றும், காமக் கடலை நீந்துவதற்கு வேழக் கோலால் செய்த தெப்பம் போன்றும் அமைந்து விளங்குகின்ற மெல்லிய தோள்களை உடையவள் தலைவி என்பதனைக் கபிலர்.

**"நுணங்கு அமைத்திரள் என, நுண் இழை அணைஎன,**

**முழங்கு நீர்ப் புணைஎன, அமைந்தநின் தடமென்தோள்," (56:20-21)**

என்னும் அடிகளின் வழிப் படிமக் காட்சியாக்கியுள்ளார். மேலும் மூங்கில் போன்ற தோள்கள் (38:26), (39:15), (39:48), (40:8), (45:15), (55:11), (57:1) என்று கூறுவதன் வழி, மூங்கிலின் வளவளப்புத் தன்மையும் வளைந்து கொடுக்கக்கூடிய தன்மையும் மூங்கிலின் நிறமும் தலைவியின் தோள்களுக்கு ஒப்புமை கூறப்பட்டுள்ளன. இதன் வழித் தலைவியின் இளமை நலனும் சுட்டப்பெற்றுள்ளது. மூங்கில் வேகமாக வளர்ந்து பயன்தரக்கூடிய தாவரம். இளம்பருவ மூங்கிலைக் காட்டிலும் பருவமடைந்த மூங்கில் திரட்சியுடன் காணப்படும். இதனைப் போன்றே தலைவியும் வேகமாக வளர்ந்து தன் திரட்சியான தோள்களால் தலைவனுக்கு இன்பம் தரக்கூடியவள். குறிஞ்சிநிலக் கருப்பொருள்களுள் உயர்வானதாகக் கருதப்படும் மூங்கிலைப் போன்று தலைவியும் உயர்வானவள் என்பதனைக் குறிக்கக் கபிலர், தலைவியின் தோள்களுக்கு மூங்கிலை உவமையாக்கிக் காட்சிப் படுத்தியுள்ளார்.

**மார்பு**

குறிஞ்சிக்கலியில் தலைவியின் மார்பு நலனைக் கபிலர் அழகாகப் புனைந்துள்ளார். இதனை,

**"முதிர்கோங்கின் முகையென முகஞ்செய்த குரும்பை எனப்**
**பெயல்துளி முகிழ் எனப் பெருத்தநின் இளமுலை"** **(56 : 23-24)**

என்னும் அடிகள் உணர்த்தும். தலைவியின் மார்பினைக் காட்சிப்படுத்த நினைத்த கபிலர் அதே வடிவமைப்பினை உடைய கோங்கமலரின் மொட்டு, தென்னங்குரும்பை, மழைத்துளியால் உண்டாகும் குமிழி போன்றவற்றோடு ஒப்பிட்டுக் காட்சிப்படுத்தியுள்ளார். இத்தகைய காட்சிப்படுத்துதலின் வழித் தலைவியானவள் பேதை, பெதும்பைப் பருவம் யாவும் நீங்கி மங்கைப் பருவத்தை அடைந்துவிட்டாள் என்பதனையும் அவளுடைய இளமை நலத்தையும் உணர்த்துகின்றன.

முயங்கியமையாத மார்பு என்பது, தலைவி பருவமடைந்து சில காலமே ஆன நிலையையும் தலைவனால் முயங்கப் பெறாமையையும் குறிக்கும்.

**இடை**

இடை, நுசுப்பு என்னும் சொல்லால் சுட்டப் பெறுகின்றது. மென்மையும் நுண்மையும் இடையின் பண்புகளாகும். குறிஞ்சிக்கலியில் தலைவியின் இடையின் அழகினைக் கபிலர்,

**"கொடியென மின்னென அணங்கென யாதொன்றும்**
**தெரிகில்லா இடை"** **(57:4-5)**

என்று குறிப்பிடுகிறார். நுடக்கத்தால் கொடியைப் போன்றும் விளக்கத்தால் மின்னலைப் போன்றும் கட்புலன் ஆகாமையினால் வருத்தம் தருகின்ற அணங்கினைப் போன்றும் உள்ளது தலைவியின் நுண்மையான இடை. நுடக்கம், விளக்கம், கட்புலனாகாமை போன்ற தலைவனுக்கு வருத்தத்தைத் தரக்கூடிய பொது நிலையில் இடையைப் படிமமாக்கியுள்ளார் கபிலர். பெண்களின் இடையழகைக் கவிஞர்கள் பாடும்போது மெல்லிடை, நூலிடை, கொடியிடை, சின்ன இடை என்று பல வகையாகக் குறிப்பிடுகின்றனர். இவை இடையின் நுணுக்கத்தினையே காட்சிப்படுத்திக் காட்டுகின்றன.

மேலும் கொடியைப் போன்ற நுண்ணிய இடை (58:4) என்றும், நோக்கினார் உளதோ இலையோ என நுழைந்து பார்க்கும் மிக நுண்ணிய, பிறர்க்கு அறியாமையைக் கொடுக்கும் இடையினை உடையவள் தலைவி (60:3) என்றும் குறிஞ்சிக்கலியில் கபிலர் குறிப்பிடுகின்றார்.

**கை - விரல்கள்**

காந்தள் பூவை நல்லிலக்கணம் அமைந்த மகளிரின் கைக்கும் இதழ்களைக் கைவிரல்களுக்கும் உவமையாக அமையுமாறு புலவர்கள் புனைந்துள்ளனர். காந்தள் மலர் மொட்டாக இருக்கும்போது குவிந்து நீண்டிருக்கும். இதனாலேயே அது கைவிரலுக்கு உவமையாக அமைகிறது. காந்தள் என்றாலே கை என்று கொள்ளும்படிச் சங்க இலக்கியங்கள் காட்சிப்படுத்துகின்றன. மெல்லிய மகளிரின் கைகளுக்கே உவமையாக எடுத்தாளப்பட்டுள்ளன. காந்தள் கை என்று சொல்வதற்கும் மிகப் பொருத்தமுண்டு. துடுப்பாக நீண்ட காம்பு முழங்கையிலிருந்து நீண்டிருக்கும் முன்னங்கை போன்றது. அக்காம்பில் மெல்லிய இதழ்கள் வண்ணந்தோய்ந்த விரல்களாகும். இக்கைவிரல்கள் சங்கப்புலவர்களது உள்ளத்தை ஈர்த்துள்ளன. அவ்வகையில் குறிஞ்சிக்கலியில் கபிலரும் தலைவியின் விரல்களைக் காந்தள், நறவம் முதலிய மலர்களுடன் ஒப்பிட்டுள்ளார். இதனை,

**“நறாஅ அவிழ்ந்தன்ன என்மெல் விரற் போது கொண்டு”** **(54:9)**

**“அடுக்கம் நாறு அலர் காந்தள் நுண் ஏர் தண் ஏர் உருவின்**
**துடுப்பு எனப் புரையும் நின் திரண்ட, நேர் அரி முன்கை”** **(59:3-4)**

என்னும் அடிகள் விளக்குகின்றன. தலைவி, நறவம்பூ மலர்ந்தாற் போன்ற மெல்லிய விரல்களை உடையவள் என்றும், அலர்ந்து மணம் நாறும் காந்தள் மலர் போன்ற விரல்களையும் கூரிய அழகுடையதாகிய குளிர்ந்த எழுச்சி உடையதாகிய வடிவினை உடைய துடுப்புப் போலத் திரண்டு நீண்ட இணையொத்த மெல்லிய முன்கைகளையும் உடையவள் என்றும் விளக்குகிறார் கபிலர்.

மற்றுமொரு பாடலில் தலைவியின் கைவிரலில் செறிந்த நீலக்கல் மோதிரமானது பார்ப்பதற்கு அழகிய காந்தள் முகையின் மேலே தும்பிகள் அமர்ந்திருப்பதனைப் போன்று உள்ளது. இதனை,

**“தகையவர் கைச் செறிந்த தாள் போல, காந்தள்**
**முகையின் மேல் தும்பி இருக்கும்”** **(43:8-9)**

என்கிறார். தும்பியானது காந்தளின் முகை மீது அமர்ந்து அது அலரும் காலத்தைப் பார்த்திருத்தல் போல, தலைவியும் தன் சுற்றத்தார்கள் மனம் நெகிழ்ந்து வரைவிற்கு உடன்படும் காலத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறாள் என்னும் அகச்செய்தியானது இதனால் உணர்த்தப் படுகின்றது. மேலும் கைகளில் ஆராய்ந்த தொடிகளை அணிந்தவள் (50:8), (58:5), 59:19) என்றும், அழகிய மயிர் வரிசையையும் வளையல்களும் அணிந்த முன்கையினை உடையவள் (56:25), 60:14) என்றும் தலைவியின் கைகள் கபிலரால் புனையப்பட்டுள்ளன.

**அல்குல்**

குறிஞ்சிக்கலியில் தலைவியின் அல்குலினைக் கபிலர்,

**"இழை அணி அல்குல் என் தோழியது கவினே"** (50:24)

**"ஐது அகல் அல்குலால்"** (52:16)

**"ஒண் தித்தி..., வரி ஆர்ந்த அல்குலாய்"** (60:3-4)

என்னும் அடிகளின் வழி விளக்கியுள்ளார். இதன் வழித் தலைவியின் அல்குலில் மேகலை அணிந்திருந்ததும், மெல்லிய அகன்ற அல்குலை உடையவள் என்பதும், ஒள்ளிய தித்தியாகிய வரி நிறைந்த அல்குலை உடையவள் என்பதும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. தலைவியின் நலத்தினைப் பாராட்டும் இடங்களில் இத்தகைய அல்குல் காட்சிகள் இடம்பெறுகின்றன. தலைவியின் வனப்பினைத் தலைவனும் தோழியும் பாராட்டுவதென்பது அவர்கள் தலைவியின் மீது கொண்ட அன்பினை வெளிப்படுத்துவதாக உள்ளது.

**மேனி**

பொதுவாக மாந்தளிரின் நிறத்தைப் பெண்களின் மேனி நிறத்திற்கு ஒப்பிடுவர். அவ்வகையில் குறிஞ்சிக்கலியில் கபிலர் தலைவியின் மேனியை இளந்தளிருடன் ஒப்பிட்டுக் காட்சிப்படுத்தியுள்ளார்.

மழையைப் பெற்ற இளந்தளிர் போன்ற நிறத்தை உடையவள் (40:19), (58:3) என்றும், தலைவனுடன் இருக்கும்பொழுது ஞாயிற்றின் முன் இருள் கெட்டு மறைவது போலத் தலைவியின் பசலை மறைந்தது (42:31) என்றும், தலைவனைப் பிரிந்த நிலையில் ஒளியற்ற தளிர் போல் நிறம் கெட்டு மெலிந்த தலைவியின் மேனி பசலை நோயால் உண்ணப்பட்டது (48:19) என்றும், மேனியின் நிறத்தினைக் காட்சிப்படுத்தியுள்ளார் கபிலர். இதனை,

**"கழிகவின் இளமாவின் தளிர் அன்னாய்"** (57:13)

என்னும் அடி விளக்கும். இவ்வாறு மழையையப் பெற்றுப் புதிதாகத் துளிர்த்த இளந்தளிரினைத் தலைவியின் மேனி நிறத்திற்கு எடுத்துக்காட்டியிருப்பதன் வழித் தலைவனின் அருளால்தான் தலைவி புதுக் கவினுடன் விளங்குகிறாள் என்பதை அறியமுடிகிறது. தலைவனுடன் சேர்ந்திருந்த காலத்தில் மேனியில் பசலை மறைந்து காணப்பட்டதும் தலைவனைப் பிரிந்த நிலையில் மேனியில் பசலை நோய் படர்ந்ததும் முறையே தலைவியின் இன்பம் மற்றும் துன்ப நிலைகளை உணர்த்துவதாகக் கொள்ளலாம்.

**நிறைவாக**

கலித்தொகை, குறிஞ்சிக்கலியில் இடம்பெற்றுள்ள தலைவியின் உடற்கூறுகள் நலம் பாராட்டலின் வழி, முடி முதல் அடி வரைக் கபிலரால் மிக அழகாகப் படிமக்காட்சிகளாகப் படைக்கப்பட்டுள்ளன.

தலைவியின் அங்கங்களை வருணிக்கும் இடங்கள் அனைத்தும் அழகுணர்ச்சி வெளிப்பாடாகவே உள்ளன. தலைவியின் உறுப்பு நலன்களைத் தன்னுடைய பாடல்களில் படிமப்படுத்துவதன் வழி, அகப்பாடல்களின் பொருட் சிறப்பினையும் அகமாந்தர்களின் உணர்ச்சிகளையும் கபிலர் வெளிப்படுத்தியுள்ளார் என்பது புலனாகிறது,

தலைவியின் உறுப்பு வருணனையில் குறிஞ்சிநிலக் கருப்பொருட்களே மிகுதியாக உவமிக்கப்பட்டுள்ளன. இத்தகைய வருணனைகள் தலைவன் கூற்றிலும் தோழி கூற்றிலும் காணப்படுகின்றன.

அக இலக்கியப் பின்புலத்திற்குக் கருப்பொருட்கள் உறுதுணையாக அமைந்து கருத்துகளைக் காட்சிகளாக்கிக் காட்டுகின்றன. இக்காட்சிகள் செய்யுளின் நீரோட்டத்திற்குத் துணை செய்கின்றன.

தலைவியின் உடற்கூற்றுப் புனைவியலைப் படிமவியல் பார்வையில் அணுகும் பொழுது சங்கத் தலைவியின் முழுத் தோற்றப் பொலிவும் வாசகனின் மனக்கண்முன் விரிவதை அல்லது காட்சிப்படுவதை அறியமுடிகிறது.

இத்தகைய படிமக்காட்சிகளின் வழிக் கபிலரின் படைப்பாற்றலையும் குறிஞ்சி நிலம் சார்ந்த ஆழ்ந்த நுண்ணறிவையும் உய்த்துணரமுடிகிறது.

**துணை நின்ற நூல்கள்**

1. ஆ.விசுவநாதன் (உ.ஆ), 2004, கலித்தொகை (மூலமும் உரையும்), NCBH, சென்னை - 98.
2. க.பூரணச்சந்திரன், 2010, படிமம் பற்றிச் சில கருத்துக்கள், கருப்பை மாத இதழ், மலர் -1, இதழ் -3.
3. இரா.சம்பத், 1992, புக்கவிதையில் இலக்கிய இயக்கம், உமா பதிப்பகம், புதுச்சேரி - 4.
4. சொ.மணிவண்ணன், 2004, வில்லிபாரதத்தில் படிமங்கள், தி பார்க்கர், சென்னை - 14.
5. ஏ.ஆர்.பொன்னையா, 1992, திருவாசகத்தில் காணலாகும் உருக்காட்சிக் கொள்கைகள் - ஒரு திறனாய்வு, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் கல்லூரி, மேலநீலிதநல்லூர்.

ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# இலக்கியம் உணர்த்தும் நகை என்னும் மெய்ப்பாடுகள்

8

**முனைவர் க. உமாமகேஸ்வரி,உதவிப்பேராசிரியர்,**
**தமிழ்த்துறை,**
**பூசாகோஅர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி, கோயம்புத்தூர்.**
ORCID – 0000-00034814-7661

**ஆய்வுச்சுருக்கம்**

தொல்காப்பியம் சங்கஇலக்கியம் இரண்டும் தமிழ்ப் பண்பாட்டின் கருவூலமாகத் திகழ்கின்றன. இலக்கண நிலையில் தொல்காப்பியமும், இலக்ககியமும் தலைமைச் சிறப்புடையன. இதனால்தான் தொல்காப்பியமும், இலக்ககியமும் தமிழின் இரண்டுகண்களாகப் போற்றப்படுகின்றன. எனவே பண்பாட்டுச் செழுமை கொண்ட தமிழ்ச் சமூகத்தைத் தொல்காப்பியமும், இலக்ககியமும் என்ற இரண்டு கண்கள் கொண்டு நோக்குவது பொருத்த முடைமையின் இவ்விரண்டும் ஆய்வுக்களங்களாக அமைகின்றன.

**ஆய்வு முதன்மைச் சொற்கள்**

மெய்ப்பாட்டியல்- எண்வகைமெய்ப்பாடுகள்- நகை - எள்ள- இளமை -பேதமை-மடன்-நகைச்சுவை-,அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி,உவகை- குறுந்தொகை உணர்த்தும் இளமை

**தொல்காப்பியம் - விளக்கம்**

வாழ்க்கைக்கு இலக்கணம் வகுத்தவன் தமிழன். அந்த இலக்கணம் தான் ஒல்காப்புலமைத் தொல்காப்பியன் என உரையாசிரியர்களால் புகழப்படும் தொல்காப்பியர் படைத்த தொல்காப்பியம் என்னும் இலக்கண நூல், மானுடவாழ்க்கையை அகமென்றும், புறமென்றும், களவென்றும், கற்பென்றும் பிரித்து விளக்கியமை வியப்புக்குரிய ஒன்றாகும்.

**தொல்காப்பியர் உளவியல் கோட்பாடுகள்**

தொல்காப்பியர்ஒரு மிகச்சிறந்த உளவியல் அறிஞர்.இதற்கு அவருடைய மெய்ப்பாட்டியல், அகத்திணையியல்,களவியல்,கற்பியல்ஆகியவை சான்றாய் அமைகின்றன. அகத்திணைக்குரிய மெய்ப்பாடுகளை, மிகவிரிவாக விளக்கி இருப்பதனைக் கொண்டு தொல்காப்பியர் காலத்தில் முறைமைப்படுத்தப்பட்ட தோர் உளவியல் நோக்கு இலக்கிய உலகில் நிலவிவந்ததனை அறுதியிட்டு உரைக்க முடியும். அந்தவகையில் தொல்காப்பியம் மனிதனின் நடத்தைகளை அகம்புறம்சார்ந்த இருநிலைகளிலும் எடுத்துரைக்கிறது தனிமனிதனின் செயல்பாடுகாதல் வீரம் என்னும் இருதன்மைகளில்

உட்படுத்தப்படும் போது அவனது உள்ள உணர்வுகளின் வெளிப்பாடு எவ்வாறு அமையும் என்பதைத் தெளிவாக விரித்துரைக்கிறது. தொல்காப்பியர் உளவியல்கோட்பாடு அகநோக்குமுறை என்னும் வகையைச்

சார்ந்தது. "அகநோக்குமுறை" என்பது மனிதன் தன்னுடைய உணர்வுகளையும், பட்டறிவையும் தானே உணரும் முறை ஆகும். மனிதனுடைய வாழ்வியல் இன்பத் துன்பங்கள் சமூக இயக்கங்கள் எட்டு வகை உணர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டே அமைகின்றன என்பது தொல்காப்பியர்கருத்து. ஒரு மனிதன் எட்டுவகை உணர்ச்சிகளையும் முழுமையாக அறிந்து கொண்டால் அவன் சமநிலையை அடைகின்றான்.சமநிலையை அடைந்த மனிதன்தான் முழுமை பெற்றமனிதன்.சமநிலையை அடையாதவரை அதாவது எட்டுவகை உணர்வுகளையும் புரிந்துகொள்ளாதவரை வாழ்க்கையில் சிக்கல்கள் மிகுந்தேகாணப்படும்.இந்தச்சமநிலையை அடையப் பெற்றால் உளம்பாதுகாக்கப்படும். இல்லையேல் 'உளம்' பாதிப்படையும். சிக்கல்கள்

பெருகும் என்பதே தொல்காப்பியர் உளவியல் கோட்பாடு.

**தொல்காப்பியம் - மெய்ப்பாடு**

உள்ளத்தில் நிகழ்வது; உள்ளநிகழ்வுகளை அகஉணர்வுகள் உடம்பின் உறுப்புகளால் வெளிப்படுதல். தமிழ்மரபில் எட்டு மெய்ப்பாடுகள் தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ளன. அவை நகை ,அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி,உவகை ஆகையவை.

விளையாட்டு ஆயத்தின் கண்தோன்றிய முப்பத்திரண்டு பொருளையுங் குறித்ததன் புறத்து நிகழும் பொருள் பதினாறு என்று கூறுவர்.

**'பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருளும்**
**கண்ணிய புறனே நானான் கென்ப.' (பொருள். 245)**

மேற்கூறப்பட்ட பதினாறு பொருளும்,எட்டாக வரும் இடமும் உண்டு. அவையாவன,குறிப்புப் பதினெட்டனையும் சுவையுள் அடக்கிச் சுவையை எட்டாக்கி நிகழ்த்துவதாகும்.

**'நாலிரண்டாகும்பாலுமாருண்டே.' (பொருள். 246)**

**எண் வகை மெய்ப்பாடுகள்**

**நகையே அழுகை இளிவரல் மருட்கை**
**அச்சம் பெருமிதம் வெகுளி உவகைஎன்று**
**அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப**
**(தொல்காப்பியம் - மெய் 3 பொருள் :247)**

**அகச்சுவைகள்**

நகை - எள்ளல் இளமை பேதமை மடன்

அழுகை - இளிவு இழவு அசைவு வறுமை

இளிவரல் - மூப்பு பிணி வருத்தம் மென்மை

மருட்கை - புதுமை பெருமை சிறுமை ஆக்கம்

அச்சம் - அணங்கு விலங்கு கள்வர் தம்-இறை

பெருமிதம் - கல்வி தறுகண் புகழ்மை கொடை

வெகுளி - உறுப்பறை குடிகோள் அலை கொலை

உவகை - செல்வம் புலன் புணர்வு விளையாட்டு

இவை அனைத்தும் உள்ளத்தின் கண் நிகழ்கின்ற உணர்வு நிலைகள் ஆகும்

**மெய்ப்பாடுகளுள் நகை**

**அடுத்தது காட்டும் பளிங்கு போல்நெஞ்சம்**
**கடுத்தது காட்டும்முகம்** **(குறள். 706)**

என்கிறது வள்ளுவம்.முகம் வெளிப்படுத்துகின்ற முதன்மை மெய்ப்பாடுகளுள் நகை குறிப்பிடத்தக்கது. தொல்காப்பிய மெய்ப்பாட்டுவகை வைப்புள் நகை முதலாவதாக இடம் பெற்றுள்ளது.எங்ஙனமாயினும் சுவைக்குரித்தாததால் நகை 'சுவை' என்னும் பின்னொட்டு கொண்டு 'நகைச்சுவை' என்றநிலை பேற்றைக் கொண்டு விலங்குகின்றது.இத்தகு நகை என்னும் மெய்ப்பாடு, இகழ்ச்சியிற் பிறப்பது என்று பேராசிரியர்தம் உரையில் குறிப்பிடுகின்றார். 'நகை படுபொருள் கண்டவழி முறுவலோடு வரும் மகிழ்ச்சிப் பொருளாமாறு நகையென்பது' என இளம்பூரணர் விளக்கம் தருகின்றார்.

**நகை**

உணர்வு மனிதவாழ்வை உயிர்ப்புடன் வைக்கின்றது. நம் உடல்மொழிகளுள் நகையும் ஒன்று .உள்ளத்தையும் உடலையும் ஒருசேர மகிழ்விக்கும் ஆற்றல் நகைக்கு உண்டு. மெய்ப்பாடென்பது உடல்பாடு தோன்றுதல் என விரிகின்றது. உடலில்தோன்றுகின்ற வெளிப்பாட்டுமொழிக்கு உளஉணர்வுகள் ஆதாரமாகின்றன. தொல்காப்பியர்,

**உய்த்துணர் வின்றித் தலைவரு பொருண்மையின்**
**மெய்ப்படமுடிப்பது மெய்ப்பாடாகும் (மெய்ப். செய். நூற். 505)**

என விளக்கம் தருகின்றார். மெய்ப்பாடென்பது உய்த்து உணர்தலின் வழி உடலில் வெளிப்படுகின்ற குறியீட்டு மொழியாகும். குறிகளால் புலப்படுகின்ற உடல்மொழியே மெய்ப்பாடெனக் கொள்ளலாகும். இளமை குழந்தைத்தனம் பேதமை அறிவின்மை மடன் கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமை எள்ளல் என்னும் கருத்தாக்கம் அமைகின்றது.பேராசிரியர் கூற்றுப்படி,நகையென்பதை முறுவலித்து நகுதல்,அளவேசிரித்தல்,பெருகச்சிரித்தல் என மூவகைப்படுகின்றது.

**இகழ்ச்சி**

இகேலி.இதுபிறரைஎள்ளி நகுதலும் பிறரால் எள்ளப்பட்ட இடத்துத்தான் நகுதலும் என இருவகைப்படும். எள்ளல் வசையை நகையாகத்தருதல் - பிறரை எளிதாகத்திருத்து அதற்கான உத்தியெனக் கொள்ளலாம்.

**இளமை**

தன் இளமையால் பிறரை நகுதலும் பிறர் இளமை கண்டு தான் நகுதலும் இளமை பற்றியது என்பர். சிறுபிள்ளைத் தனமாக குழந்தைத்தனமாகச் செய்கின்ற செய்கைகள் இளமையின் பொருட்டாக விளைந்தது எனலாம்.

**பேதைமை**

அறிவின்மையால் ஏற்படுகின்ற அறிவீனச் செயல்களும் பேதைமையின் பொருட்டு ஏற்படுதலாகும்.

**நகைனென்னும் மெய்ப்பாடு**

இகழ்தல்,இளமை,அறிவின்மை,மடமை என்று சொல்லப்பட்ட நான்கிடத்திலும் நகை தோன்றும். எள்ளல் என்பது தான் பிறரை எள்ளி நகுதலும்,பிறரால் எள்ளப்பட்ட விடத்துத் தான் நகுதலும் என இருவகைப்படும்.

**எள்ளல் இளமை பேதைமை மடனென்று**

**உள்ளப் பட்ட நகை நான்கென்ப**.' - (பொருள். 248)

நகைதோன்றுவதற்கான .நிலைக்களன்.

எள்ளல் - இகழ்ச்சி

இளமை - விளைவறியாத இளம்பருவம்

பேதமை - அறியாமை

மடமை - ஐயமின்றிநம்புதல்

**நகை ஆகின்றே தோழி நெருநல்**

**……..**

**மெய்மலி உவகை மறையினென் எதிர்சென்று**

**இம்மனை அன்று அஃது உம்மனை என்ற-(அகநநூனூறு 56)**

சிரிப்பை உண்டாக்குகின்றது தோழி, நேற்று பளிங்கைப் போன்ற தெளிந்த நீருள்ளகுளம் அலையடித்துக் கலங்க இரும்பினால் செய்தது போன்ற கரிய கொம்பை உடைய எருமை ஆம்பலின் மெல்லிய இலைகள் கிழியுமாறு,குவளையின்அப்போது மலர்ந்த பலமலர்களை நிறைய உண்டு,கரையிலிருக்கும் காஞ்சி மரத்துப்பூவின் நுண்ணியதாதுக்கள் ஈரமான முதுகில் உதிர்ந்துவிழ, மெல்லும் கதுப்புகளையுடைய வாய்த்தன்கொட்டிலுக்குள் நுழையும் குளிர்ந்ததுறை யினையுடைய ஊரனின் செறிந்த மாலையணிந்த மார்பினில் மணக்கோலத்திலிருக்கும் புதிய பெண்களைச் சேர்க்க ஆசையுடன் வந்த பாணன் ,தெருவில் அண்மையில் ஈன்ற ஒரு தாய்ப்பசு தன்மீது பாய்ந்ததால் கலங்கிப்போய், யாழினைக்கீழே எமது வீட்டுக்குள் புகுந்துவிட்டான் அதனைக் கண்டு மனத்தில் தோன்றிய மிகுந்த மகிழ்ச்சியை மறைத்து, அவனை எதிர்கொண்டு இந்தவீடுஅல்ல அதுவே உமதுவீடு என்ற என்னையும் தன்னையும் நோக்கி மருண்ட மனத்தினனாய் (என்னைத்) தொழுதுநின்ற நிலையே!

**குறுந்தொகை உணர்த்தும் இளமை**

**கழனி மா அத்து விளைந்துகு தீம்பழம்**

**பழன வாளை கதூஉ மூரன்**

**எம்மிற் பெருமொழி கூறித் தம்மிற்**

**கையும் காலும் தூக்கத் தூக்கும்**

**ஆடிப் பாவை போல**

**மேவன செய்யுந்தன் புதல்வன் தாய்க்கே.**

**- ஆலங்குடி வங்கனார் குறுந்தொகை - 8**

வயல் அருகில் உள்ள மாமரத்தினது கனிந்து வீழ்கின்ற இனிய பழத்தை பொய்கையில் உள்ள வாளைமீன்கள் கவ்வி உண்ணுதற்கு இடமாகிய ஊரை உடைய தலைவன் எம்முடைய வீட்டில் எம்மை வயமாக்குதற்குரிய பெருமொழிகளைக்கூறிச் சென்று தம்முடை வீட்டில் முன்னின்றார் தம் கையையும் காலையும் தூக்க தானும் தூக்குகின்ற கண்ணாடியுள் தோன்றுகின்ற பாவையைப் போல தன்னுடைய மனைவிக்கு அவள் விரும்பியனவற்றைச் செய்வான்.

**பேதமை**

நகைச்சுவை தரும் பாடாலாக கீழ்வரும் பாடலைக் கூறலாம். இது நந்திக்ககலம்பக நகைச்சுவை.

**ஈட்டு புகழ்நந்தி பாண!நீ எங்கையர்தம்**

` **வீட்டிருந்து பாட விடிவளவும் - காட்டிலமும்**

**பேயென்றாள் அன்னை பிறர்நரியென் றார்தோழி**

**நாயென்றாள் நீஎன்றேன் நா. (நந்திக் கலம்பகம்)**

பாணன் (பாடகன் ) தன் காதலியின் வீட்டின் முன் நின்று விடிய விடிய பாடுகிறான். அதை கிண்டல் செய்து நாயகி கூறுவது போன்ற நகைச்சுவைப்பாடல். காதலியின் கோபம் தனிய ப்பாடியதைக் கேட்டு காதலி பாடுகிறாள் -- நீ விடிய விடிய பாடியது கேட்டு என் தாய் காட்டில் அழும் பேயின் அலறல் என்றார். என் தோழிகளோ நரி என்றனர்.நானோ நாயின் ஊளை என்றேன்.

**மடமை**

**நகை நீ கேளாய் தோழி! அல்கல்**

**………………….**

**'அருவழி விலக்கும் எம் பெருவிறல் போன்ம்' என**

**எய்யாது பெயரும்**

**அகநானூறு (பாடல் எண் 248 -பாடியவர்:**

**கபிலர்**

குறிஞ்சித் திணை. காதலன் வாசலில் நிற்கிறான். அவன் காதில் விழும்படி காதலியிடம் பேசுகிறாள் தோழி, தோழி நேற்று ஒரு வேடிக்கையான விஷயம் நடந்தது. அதைச் சொல்கிறேன் கேள்!

காட்டில் வேட்டையாடுவதற்காகச் சிலர் வந்தார்கள். அவர்கள் தங்களுடன் ஒன்றிரண்டு வேட்டை நாய்களையும் அழைத்துவந்தார்கள்.அந்தக் காட்டின் ஓரத்தில் ஒரு பன்றிக் கூட்டம். வருபவர்கள் தங்களைதான் கொல்லப்போகிறார்களோ என்று நினைத்துவிட்டது.உடனே, அந்தக் குடும்பத்தின் தலைவனாகிய ஆண் பன்றி தைரியமாக எழுந்தது. தன் துணையாகிய பெண் பன்றிக்கு ஆறுதல் சொன்னது. அதையும் குட்டிகளையும் பத்திரமாகக் காட்டுக்குள் அனுப்பிவைத்தது. பின்னர், அந்த ஆண் பன்றி வேட்டைக்காரர்களை எதிர்கொள்ளத் தயாராக முன்னே வந்தது. முதல் வேலையாகஇ அவர்கள் அனுப்பிவைத்த நாய்களைக் கடித்து வீழ்த்தியது. இதைப் பார்த்த வேடர்களுக்குக் கோபம். ஒரு வேடன் அந்தப் பன்றியைக் கொல்வதற்காக வில்லில் அம்பு தொடுத்தான்.ஆனால் ஏனோ, அவன் அந்தப்

பன்றியைக் கொல்லவில்லை. தயங்கினான். ஏன்? ஒரு தேசத்தின்மீது பகைவன் படையெடுத்து வருகிறான். உடனே, அந்த நாட்டின் தலைவன் ராணுவத்தைத் திரட்டிக்கொண்டு அந்த எதிரியுடன் மோதுகிறான். ஆனால், போர்க்களத்தில் அந்தப் பகைவனைப் பார்த்ததும், அவனுடைய படையில் உள்ள வீரர்கள் எல்லாரும் பயந்துவிடுகிறார்கள். புறமுதுகு காட்டி ஓடிவிடுகிறார்கள்.ஒரே ஒரு வீரன்மட்டும், அப்படி ஓடவில்லை. தைரியமாகப் பகைவனை எதிர்த்து நிற்கிறான்.இந்த ஆண் பன்றியைப் பார்த்தவுடன், வேடனுக்கு அந்த வீரனின் ஞாபகம்தான் வருகிறது. ஆகவே, அதைக் கொல்லாமல் திரும்பிச் சென்றுவிடுகிறான்.

மாந்தர்களின் மன உணர்வுகள் கூறுவோரின் இன்பதுன்பமனநிலைக்கு ஏற்பவும் கேட்போரின் முறைகளுக்கு ஏற்பமாறுபட்டு ஒலிக்கின்றன. உணர்வுகள் சூழ்நிலையால் நெறிப்படுத்தப்பட்ட மனம் மனநிலையை உணர்த்தி நிற்கின்றன. கேட்போர்க்கு அமைந்தபின் புறங்களில்தன்மைக் கேற்ப கூறுவோர் உள்ளுறை இறைச்சிகளை பயன்படுத்தி குறிப்பாக உவமைகளை பயன்படுத்தி விளக்கமாகவும் சொற்களைப் பயன்படுத்தி வெளிப்படையாகவும் தம்மன உணர்வுகளை வெளிப்படுத்த காண்கிறோம்.அகமந்திரங்கள் அமைந்த பின்புறங்களில் மாறுபாட்டுக்கு ஏற்ப அவ்வுணர்வு வெளியீடு வன்மை மென்மை கொண்டு விளங்குகிறது..இம்மன உணர்வுகள் உளவியல்அணுகு முறையும் கொண்டு புலவர்களால் வரன் முறைபடுத்தப்பட்ட அறநெறி மரபு சார்ந்து விளங்குகின்றன இலக்கணம் உணர்த்தி நிற்கின்ற மெய்ப்பாடுகளின் வழியாக அகத்திணைமாந்தர், மாந்தர் உணர்வு சூழல்ஆகியபின் புறங்களில் மாறுபாட்டுக்கு ஏற்ப வேறுபடும் பாங்கினை உளவியல் நோக்கில் காண்பது மகிழ்ச்சியை தருகின்றது எனலாம்.

**துணைநூற்பட்டியல்**

1.புலவர்நா.இராமையாபிள்ளை.,உரையாசிரியர்.,நற்றிணை,(மூலமும் உரையும்), வர்த்தமானன் பதிப்பகம் ஏ.ஆர்.ஆர்.காம்ப்ளெக்ஸ்141, உஸ்மான் சாலைதி.நகர், சென்னை - 600 017 .முதல் பதிப்பு : 1999

2.பேராசிரியர்முனைவர்இரா.பிரேமா.,குறுந்தொகை (மூலமும் உரையும்) உரையாசிரியர் வர்த்தமானன் பதிப்பகம்,உஸ்மான் சாலை தி.நகர், சென்னை - 600017.,முதல் பதிப்பு : 1999

3. பதிப்பாசிரியர் பேராசிரியர் மு.சண்முகம் பிள்ளை,பொருளதிகாரம், முல்லைநிலையம் 9, பாரதி நகர் முதல் தெரு,தி.நகர், சென்னை - 600 017.முதற்பதிப்பு : டிசம்பர் 1995

4. திருக்குறள் பரிமேலழகர் உரை,சாரதா பதிப்பகம்ஜி-4, சாந்தி அடுக்ககம்3, ஸ்ரீ கிருஷ்ணாபுரம் தெரு, ராயப்பேட்டை, சென்னை - 14 முதல் பதிப்பு : 200217ஆம் பதிப்பு : 2014

5. உரையாசிரியர்புலவர் அ. மாணிக்கனார் அகநநூனூறு(மூலமும் உரையும்) வர்த்தமானன் பதிப்பகம்,ஏ.ஆர்.ஆர்.காம்ப்ளெக்ஸ்,141, உஸ்மான் சாலை தி.நகர், சென்னை - 600 017,முதல் பதிப்பு : 1999.

ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

9

# இலக்கியத்தில் கனவும் ஃ பிராய்டின் கனவுக் கொள்கையும்

**முனைவர் கா. உமாராஜ், உதவிப்பேராசிரியர்,**
**மொழியியல்துறை**
**மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.**

**ஆய்வுச் சுருக்கம்**

இறைவனின் படைப்புகள் எல்லாவற்றிலும் உயர்ந்ததாகக் கருதப்படுவது மனிதப் படைப்பு. மனிதனைப் படைத்த இறைவன் அவனையும் படைப்பாளி ஆக்கிவிட்டானோ என்று எண்ணத் தோன்றுகிறது. காரணம் படைப்பினின்று வெளிவரும் மனிதக் கண்டுப்பிடிப்புகள் ஏராளம். இறைவனது படைப்புகளை அசல் என்றால், மனித கண்டுபிடிப்புகளை நகல் எனலாம். பெரும்பாலும், உலகில் நகலுக்கு இருக்கின்ற கவர்ச்சி அசலுக்கு இல்லை. சுத்தமான தங்கத்தைக் காட்டிலும் தங்கமுலாம்தான் அதிகம் ஒளிரும். பொருளில் மட்டுமல்ல வாழ்க்கையிலும் கூட மக்கள் தன்னிலை மறந்து கனவு காணும் வாழ்க்கையை விரும்பி வாழ்க்கின்றனர். மனிதனின் மனத்தில் உயிர்த்தெழும் கனவுகள், அவனது 'உள்ள உணர்வுகளையே' பிரதிபலித்துக் காட்டும் தன்மையுடையனவாகும் என்று சிக்மண்ட் ஃபிராய்டு கோட்பாட்டை விளக்குவதாக இவ்வாய்வுக் கட்டுரை விளக்குகிறது.

**ஆய்வு முன்னுரை**

சங்க இலக்கியத்தில் புறப்பாடல்களைவிட அகம் பற்றிய பாடல்களே மிகுதி. சங்கப் பாடல்களில் ஆயிரத்து எண்ணூற்று அறுபத்திரண்டு பாடல்கள் அகப்பாடல்கள். இப்பாடல்கள் முழுதும் தன்னுணர்வு வெளிப்பாடாக அமைந்துள்ளன. இத்தன்னுணர்ச்சிப் பாடல்களில் களவுகளும் அக உணர்வை வெளிப்படுத்தும் உத்திகளாக அமைந்துள்ளன. இப்பாடல்களை ஆய்வுப் பொருளாகக் கொண்டவர் சிக்மண்ட் ஃபிராய்டு. ஆழ்மனத்தில் உறைந்து கிடக்கும் நிறைவேறாத ஆசைகள், விருப்ப விழைவுகள் கனவுகளாக வருகின்றன. மேலும், இதனை அடித்தளமாகக் கொண்டே உளப்பகுப்பாய்வு கோட்பாட்டை ஆராய்ந்துள்ளார். இக்கனவுக் கோட்பாடுன் இலக்கியம் இணைந்து செல்லும் நிலையை விளக்குவதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது.

**கனவு - பொருள் விளக்கம்**

திராவிட மொழிகளில் 'கென்', 'கின்', 'கொன்' போன்ற அடிச்சொற்கள் கனா என்ற சொல்லின் அடிச்சொற்களாகக் காணப்படுகின்றன. இவற்றுள் 'கன்' என்ற அடிச்சொல் துளு, தமிழ், கோட்டா, கன்னடா ஆகிய திராவிட மொழிகளில் காணப்படுகின்றன. பிற திராவிட மொழிகளின் கொடகில் 'கென்' என்றும் 'கொன்' என்ற சொல் தோடாவிலும் 'கின்' என்ற சொல் மலையாளத்திலும் காணப்படுகின்றன. எனவே, 'கன்' என்பதே திராவிட மொழிகளில் கனவு என்பதற்கு அடிச்சொல்லாகும்.

**கனவுகளின் விளக்கம்**

கனவு என்பது எண்ணக் கோவை; பிரதிபிம்பம் அல்லது உறக்கத்தின்போது மனத்தின் வழியே தோன்றும் கற்பனை உறக்கத்தில் தோன்றும் மனக்காட்சி என்று ஆங்கில அகராதிகள் பொருள் தருகின்றன. கணற்றுதல், கல்லுதல், உள்ளத்து உணர்வுகளைத் தோண்டி வெளிப்படுத்துதல் எனச் சுட்டுகிறது தமிழ் அகராதி. ஆகவே, கனா என்பது திராவிடச்சொல் என்றும், உறக்கத்தின்போது தோன்றும் கற்பனையே கனவு ஆகும். இக்கருத்தையே கீழ்க்காணும் கூற்று விளக்குகிறது.

> ***"ஆழ்ந்த உறக்கமில்லாத போதே கனவுகள் தோன்றுகின்றன. புறக்கண்ணில் காண்பது நனவு. அகக்கண்ணில் காண்பது கனவு என்றும் விளக்குவர்." (சுப்பிரமணியன்,ச.வே., சங்க இலக்கியக் கனவுகள் ,ப.38)***

கனவு என்பது, விழிப்பு நிலைக்கும், உறக்க நிலைக்கும் இடைநிலையில் உணர்வு தோய்கிறபோது உண்டாவதாகும். அடி மனத்தில் தோய்ந்த எண்ணங்களின் விளைவுகளும் தொடரும் நினைவுகளும் கனவுகளாக வரும் என்பர்.

**ஃபிராய்டின் கனவுக் கொள்கையும் உளப்பகுப்பாய்வுக் கருத்துக்களும்**

மனத்தின் செயல்பாடுகளின் அடிப்டையில் ஆழ்மனத்தில் உறைந்து கிடக்கும் ஆழ்மன உணர்வுகளை வெளிக்கொணர்வதே உளப்பகுப்பாய்வின் இன்றியமையா நோக்கமாகும்.

மனிதனின் உணர்வுத் தளங்களை மூன்று நிலைகளாகப் பிரிப்பர். அவை,

1. **நனவு நிலை** (Conscious or Waking State)
2. **கனவு நிலை** (Sub Conscious or Dream State)
3. **உறக்க நிலை** (Unconscious or Sleep state)

ஃபிராய்டு உளப்பகுப்பாய்வு நோக்கில் கனவுகளின் அமைப்பை விளக்குகின்றார். மேலும், இவர் உளநோயாளியின் நடத்தையை அறியவே கனவுகளைத் தம் ஆய்வில் பயன்படுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

**பழந்தமிழரும் கனவும்**

தமிழ் இலக்கியத்திற்கும் இலக்கணம் வகுத்த ஆசிரியர்கள் கனவைப் பற்றியும் ஆராய்ந்துள்ளனர். இலக்கியங்கள் மனிதனின் வாழ்வியலை உணர்த்தும் வரலாற்று மூலங்கள் என்பதை,

*“காதல் கைம்மிகக் கனவின் அரற்றுலும்*

*தோழியை வினவலும் தெய்வம் வாழ்த்தலும்*

*போக்கு உடன் அறிந்தபின் தோழியொடு கெழீஇக்”*

*(தொல், பொருள், களவு, நூ.25)*

என்ற நூற்பா மூலம், காதல் உணர்வு பெருகும்போது கனவு ஏற்படும் என்பதைத் தொல்காப்பியர் விளக்குகின்றார்.

சங்க இலக்கியப் பாடல்களிலும் கனவுப் பற்றிய செய்திகள் பொதிந்திருக்கின்றன. காதலர் பிரிவிலே கனவுத் தலைவிக்கு மட்டும் உரியதல்ல தலைவனுக்கும் பொருந்தும் என்கிறது. சங்க தலைவன் பொருள்வயிற் பிரிகின்றான். அவ்வாறு அவன் செல்லுமிடங்களில் வேனிற் காலத்து மலரும் பரிதி மலரைக் காண்கின்றான். அம்மலரின் துய்யைக் (மகரந்தத் தாளை) கண்டபோதெல்லாம் பாலையில் பசுநீர் காட்சி போன்று தலைவியின் மயிரொழுகிய மாமைநிறமேனி தலைவன் மனத்தில் நிழலாடுகின்றது. கனவில் அம்மானின் நிறத்தாளைக் கண்ணாரக் காண்கிறான். துயில் கலைகிறது. இடைச்சுரத்து அரிதாகப் பெற்ற துயில் நீங்கிவிட்டதே எனத் இத்தலைவன் வாடவில்லை. தலைவியைச் சில நொடிகளேனும் காட்டிய கனவை வாழ்த்துகின்றான்.

*“வேனிற் பாதிரிக் கூன்மல ரன்ன*

*மயிரேர் பொழுகிய அங்கலுழ் மாமை*

*நுண்பூண் மடந்தையைத் தந்தோய் போல*

*இன்றுயி லெடுப்புதி கனவே*

*எள்ளா ரம்ம துணைப்பிரிந் தோரே” (குறுந், பா.147)*

சிறிது நேரம் தலைவன் விரும்பிய தலைவியைக் காட்டியமையினாலே தலைவனின் விருப்பமானது கனவில் நினைவேறிற்று. எனவே கனவுப் பற்றிய சிந்தனை பண்டைய காலத்திலிருந்தே தொடர்ந்து வந்துள்ளது என்பது புலனாகிறது.

கண்களை மூடியவுடன் ஒரு வியத்தகு உலகத்தை நம்முன் காட்டுகின்றது கனவு. அதே வேளையில் இருந்த இடத்திலிருந்து கொண்டு கனவின் மூலம் உலகத்தையெல்லாம் சுற்றி வருகிறோம். இதனையே புறக்கண்ணால் காண்பது நனவு. மனக்கண்ணால் காண்பது கனவு என்கிறது நற்றிணை பாடல்,

*“வெறியென வுணர்ந்த அரிய அன்னையைக்*

*கண்ணினுங் கனவினுங் காட்டி இந்நோய்*

*என்னினும் வாராது மணியிற் றோன்றும்*

*மைம்மலைக் கிழவோன் செய்தன னிதுவெனிற் ” (நற்றி, பா.173)*

என்ற நற்றிணைப் பாடல் கனவையும் நனவையும் வேறுபடுத்திக் காட்டுவதாக அமைந்துள்ளது.

**நனவும் கனவும் ஒப்பீடு**

ஃபிராய்டு ஒடுக்கப்பட்ட நனவிலி, நனவு மன அமைப்புக்களே கனவுகளின் இயக்கக் காரணிகளாக அமைந்துள்ளன. இவ்விரண்டும் ஒடுக்கப்படுதலுக்கான எதிர்ப்புணர்வினால் பிரிக்கப்படுகின்றன. இவ்விரண்டின் முரண்பட்ட செயல்பாடுகளே கனவுகள் எழுக் காரணங்களாக அமைகின்றன. என்கிறார்.

இலக்கியங்களிலும் கனவு நனவு என்ற இருவித சொல்லாட்சிகளும் முறையே நனவிலி, நனவு என்ற இரு மனங்களைத்தான் குறிக்கின்றன. 'கனவில் வந்த கானலஞ் சேர்ப்பன் நனவில் வருதல் உண்டென'(கலித், பா.128) என்ற அடிகளும்,

*"கனவினாற் காணிய கண்படாவயின்*
*நனவினால் ஞாயிறேகாட்டாய்" (கலித், பா. 147)*

*"நனவினுள் உதவாது நள்ளிருள் வேறாகுங்*
*கனவின் நிலையின்றாற் காமம் ஒருத்தி" (கலித், பா.145)*

என்ற அடிகளும், கனவில் என் கையகப்பட்டவன். யான் விழித்தவுடன் மறைந்துவிட்டான் என்ற கருத்துக்களும் நனவிலும் கனவிலும் நடந்த செயல் முரண்களை விளக்குகின்றன. இச்செயல் வேறுபாடுகளும், விழித்துக் கொண்டிருக்கும் நனவு மனத்தினையும் துயிலும்போது விழித்துக் கொள்ளும் நனவிலி மனத்தினையும்தான் தோழி கனவுபோலத் தெருளும், மருளும் மயங்கும் என்கிறாள்.

காட்சிகள் இரண்டு இடங்களில் மட்டுமே தோன்றும். ஒன்று நனவு, மற்றொன்று கனவாகும். தலைவனைப் பிரிந்த தலைவி, தலைவன் கார்காலத்தில் வருகிறேன் என்று தலைவியிடம் கூறிச் செல்கிறான். செல்வத்தையுடைய சிறுவர்களது அடியிடத்து விளங்கிய தவளையின் வாயைப்போல அங்காந்த வாயையுடைய கொன்றைகள், குருத்தத்தோடு சுழலும் பெரிய குளிர்ந்த காலத்தையும் காணுகின்ற தலைவி, தலைவன் சொன்ன குறித்த பருவம் வந்துவிட்டதாகத் தோழியிடம் உரைக்கிறாள். அவ்வாறு பருவம் இல்லையென்றால் கண்ணால் காணுகின்ற காட்சி பொய்யென்றால் கனவில் தோன்றிய காட்சிகளா? என வினவுகிறாள்.

*"செல்வச் சிறாஅர் சீறடிப் பொலிந்த*
*தவளை வாஅய பொலஞ்செய் கிண்கிணிக்*
*காசின் அன்ன போதீன் கொன்றை*
*குருத்தோடு அலம்வரும் பெருந்தண் காலையும்*
*காரன்று என்றி யாயிற்*
*கனவோ மற்றிது வினவுவல் யானே" (குறுந், பா.148)*

புறக்கண்ணால் காணுகின்ற நனவு காட்சி பொய்யென்றால் அகக்கண்ணால் காணுகின்ற கனவு காட்சியா என்றுரைப்பதாக இவ்வடிகள் அமைந்துள்ளன.

பரத்தையரிடம் பிரிந்து வந்த தலைவன் கற்பனைக் கனவைப் படைக்கிறான். அவன் கனவைக் கேட்ட தலைவி, கொட்டுகின்றவன் தன் மனத்தின் ஓர்த்த விருப்பப்பட்ட ஓசையைத் தானும் ஒலிக்கும் பறைபோல அவனுடைய நெஞ்சத்து விருப்பமே கனவாகத் தோன்றியதாகக் கூறுகின்றாள். இதனையே,

*"ஓர்த்த திசைக்கும் பறைபோல்நின் நெஞ்சத்து*
*வேட்டதே கண்டாய் கனா*
*கேட்டை விரையல்நீ மற்று*
*வெகுள் வாயுரையாண்டு" (கலித், பா)*

என்ற கலித்தொகை பாடலடி உணர்த்துகின்றது.

**கனவின் தன்மை**

தலைவியின் கனவை ஐயுற்ற செவிலிக்கு நனவினிடத்து வாய்க்கின்ற தன்மையைப் போன்று கனவானது தூங்குகின்றவர்களைப் பலவற்றையும் காணச் செய்து மயக்கம் கொள்ளச் செய்வதைப்போலக் கனவு கண்டிருப்பாய் என்று உரைத்துத் தலைவியின்பால் ஐயத்தைப் போக்குகின்றாள். இதையே அகப்பாடல்,

*"சூருடைச் சிலம்பிற் சுடர்ப்பூ வேய்ந்து*
*தாம்வேண் டுருவி னணங்குமார் வருமே*
*நனவின் வாயே போலத் துஞ்சுநர்க்*
*கனவாண்டு மருட்டலு முண்டே" (அகம், பா.158)*

என்ற அகப்பாடல், பலவற்றைக் காணச்செய்து மயக்கம் கொள்ளச் செய்வது கனவின் தன்மை எனக் கூறுகின்றது.

பொருள் வயிற் பிரிவு, வரைவிடை வைத்துப் பிரிதல், வரைவிடைப் பிரிவு, களவுக்காலத்துத் தலைவி கலங்கிக் கூறியது முதலான காரணங்களிலும், தலைவன் சொன்னக் கனவைத் தலைவித் தோழிக்கு ஆறுதலாகக் கூறுதல், தலைவன் பிரிந்த பொழுதும் கவின் அழியாது இருக்கிறார் என்பதைக் கூறும்போதும், நனவில் மறைத்ததினால் வந்த ஏமாற்ற உணர்வின்போதும், தலைவனைப் பிரிந்த வருத்தத்தில் இருக்கும் தலைவியின் நிலையைப் பிறர் கூறும்போதும், தலைவனை நினைத்து அழுது, நாளும் நன்மைக் குணங்களை மறந்து காமம் ஒன்றையே நினைத்து குமுறும் போதும் இன்னும் பிறக் காரணங்களினாலும் கனவுகள் தோன்றுகிறது என்பதை அறிய முடிகிறது.

**முடிவுரை**

மேற்குறிப்பிட்ட அனைத்துக் கருத்துக்களும் தலைவியின் கனவு (நனவிலி) நனவு மனப் போராட்டத்தையும் கனவு காண்பதற்குரிய கனவு (நனவிலி) நனவு. மனங்களின் இருவேறுபட்ட செயல்பாடுகளையுமே காட்டுகின்றன. எனவே நனவிலி- நனவு மனத்தூண்டுதல்களும், போரட்ட உணர்வுகளுமே கனவுகள் வரக் காரணங்களாக அமைகின்றன. நனவிலி மன உணர்வுத் தூண்டுதல்களே கனவுகளை உண்மையாக உருவாக்குவல்லன என்ற கருத்துகளை இவ்வாய்வு கட்டுரையின் மூலம் அறியலாம்.

**துணைநின்ற நூல்கள்**

1. இலக்கியமும் உளப்பகுப்பாய்வும், சாரதாம்பாள், செ., ஹரிஹரன் பதிப்பகம், 1, தென்றல் நகர், நாகமலை (மேற்கு), மதுரை-19

2. நினைவின் நிழல்கள், பாக்கியலட்சுமி, ந.சு., முத்துக்குமரன் பதிப்பகம், 342, பெரியார் நகர், விருத்தாசலம், கடலூர் மாவட்டம்.

3. சங்க இலக்கியத்தில்உளவியல், சிவராஜ், து., சிவம் பதிப்பகம், 2/82 Q9 காந்தி நகர், விருபாட்சிபுரம், வேலூர்.

4. பெண்ணிய உளப்பகுப்பாய்வும் பெண் எழுத்தும், சாரதாம்பாள், செ., உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், இரண்டாவது முதன்மைச் சாலை, மையப் பல்தொழில் நுட்பப் பயிலக வளாகம், தரமணி, சென்னை.

ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# எட்டுத்தொகை அக இலக்கியங்களில் உளவியல்

10

**ஞா.கலையரசி, கௌரவ விரிவுரையாளர்**
**தமிழ்த்துறை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,**
**சேந்தமங்கலம்,வெட்டுக்காடு.**

**ஆய்வுச்சுருக்கம்**

உளவியல் என்பது இன்று காணப்படும் பல்வேறு துறைகளுக்குள்ளும் அகலக்கால் பதித்துள்ளது. உளவியலும் இலக்கியமும் என இன்று பல்வேறு ஆய்வு முயற்சிகள் இடம் பெற்றாலும் அவை பிராய்ட், யுங், லக்கான் போன்ற உளவியலாளர்கள் கலை இலக்கியம் தொடர்பாக முன்வைத்துள்ள கருத்தியல்களுக்கும் வரன்முறைகளுக்கும் ஏற்ப இன்னமும் முழுமை பெறவில்லை என்று கூறலாம். அவற்றுள் சங்க இலக்கியங்களில் எட்டுத்தொகை அக நூல்களில் காணப்படும் அக மன உணர்வு உளவியல் அணுகுமுறை, மனவெழுச்சி பற்றியும் விளக்கப்பட்டுள்ளது. இத்தகைய பல உளவியல் சிந்தனைகளை விளக்கும் முகமாக இக்கட்டுரை ஆராயப்பட்டுள்ளது.

**திறவுச்சொற்கள்** : சங்க இலக்கியமும், உளவியல், மனவெழுச்சி

**முன்னுரை**

சங்ககாலப் புலவர்கள் காதல், வீரம், கொடை முதலியவற்றைப் பொருளாகக் கொண்டு பாடல்களை இயற்றியுள்ளனர். அவற்றிலும் அக இலக்கியங்களில் பெரும்பான்மையான பாடல்கள் உளவியல் சிந்தனை நிறைந்த பாடல்களாகவே காணப்படுகின்றன. உளவியல் குறித்த வரையறையும், எட்டுத்தொகை அக இலக்கியங்களில் உளவியல் சிந்தனைகளையும் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**உளவியல்**

உளவியல் என்பது உயிரினங்களின் நடத்தையைப் பற்றி அறியும் மைய முயற்சியாகும். குறிப்பாக நம்மை நாமே அறியும் தனிப்பட்ட தேடுதலாகும். நமது உணர்வு, எண்ணங்கள், நாம் செய்யும் செயல்கள் போன்றவற்றோடு தொடர்புடையது உளவியல். இதனை **"உள்ளத்தை பற்றிய அறிவியல் அல்லது உளவியல் (Science of mind) என்கிறார் சிக்மண்ட் ஃபிராய்ட்"**[1] இவ்வுளவியலை வயது வாரியாக பத்துப் பருவங்களாகப் பிரித்தும் ஆராய்வர்.

**இலக்கியத்தில் உளவியல் அணுகுமுறை**

சங்க இலக்கியத்தைப் பொறுத்தவரையில் புலவர்கள் தாம் உரைக்கும் கருத்துக்களைப் பாடல்களைப் பயில்வோரும் கேட்போரும் விரும்பிக் கற்கும் வகையில் உளவியல் நுட்பத்தோடு உரைத்துள்ளனர். சங்க அகப்பாடல்கள் அனைத்தும் உளவியல் தாங்கி நிற்கும் உணர்ச்சிக் குவியல்களாக உள்ளன.

**இலக்கியத்தில் உளநோய் மருத்துவம்**

உளவியல் ஆலோசனையும் உளநல மருத்துவமும் தொடர்ந்து வளர்ச்சி நிலையில் செல்கின்றன. மக்களுக்கு மனநிலையில் ஏற்படும் சிக்கல்கள் அதிகரித்துக் கொண்டு செல்வதே இதற்கு காரணமாகும். கல்வி, வேலை, குடும்பம், நிறுவனம், சமுதாயம், பொருளாதாரம் போன்ற பல நிலைகளில் பல சிக்கல்களும் உருவாவதால் உளநல, மனநல ஆலோசனைகள் தேவைப்படுகிறது. இந்நிலையில் சங்க இலக்கிய அகப் பாடல்கள் பல உளவியல் நோக்கில் எளிமையான ஆலோசனை கூறும் தன்மையிலும் அமைந்திருக்கின்றன.

**தலைவனின் உளநோய்**

புணர்தல், நீங்குதல், அல்லகுறிப்படுதல், தோழியை இரந்துப்பின் நிற்றல், இடித்துரைக்கும் பாங்கனிடம், மடல் ஏறும்போது, உடன்போக்கு, பாசறைகள், பிரிவு வலித்தல், இடைச் சுரத்த நிற்றல், வினை முற்றி மீளுதல் எனப் பல்வேறு சூழல்கள் தலைவனின் மனநிலையை வெளிக்காட்டுகின்றன.

களவில் தலைவனுக்கு ஆற்றாமையினால் ஏற்படக்கூடிய மாற்றங்களாக

**‘வேட்கை ஒருதலை உள்ளுதல், மெலிதல்**
**ஆக்கம் செப்பல், நாணுவரை இறத்தல்**
**நோக்குவ எல்லாம் அவையே போறல்**
**மறத்தல், மயக்கம்,சாக்காடு’ - (தொல்.பொருள்.களவு.97)**

என்பனவற்றைப் பட்டியலிடுகிறார் தொல்காப்பியர். இவை மனநோயின் படிநிலை வளர்ச்சியாகும். இந்நிலை ஒவ்வொன்றும் மனச்சார்பு உடையதாகவும் மனச்சிதைவின் வளர்ச்சி நிலைகளாகவும் அமைவதைக் காணமுடிகிறது.

காம மிகுதியால் வருத்தமுற்ற தலைவனை நோக்கி காமம் காமம் என்று உயர்த்திக் கூறுவர். அக்காமமானது வருத்தமும் நோயுமன்று, அது நினைக்க நினைக்க புதிய இன்பத்தைத் தருவதாகும் என்று

அறிவுறுத்துகிறான் தோழன். மனதோடு தொடர்புடைய காமத்தை நம்மால் கட்டுப்பாட்டிற்குள் வைக்க முடியும் என்று தெளிய வைக்கிறான் என்பதற்கு,

**'காமம் காமம் என்பர் காமம்**
**அணங்கும் பிணியு மன்றே நினைப்பின்**
**முதைச்சுவற் கலித்த முற்றா இளம்புல்**
**மூதா தைவந் தாங்கு**
**விருந்தே காமம் பெருந்தோ ளோயே' - குறு.204:1-5**

என்ற அடிகள் சான்றாக அமைகிறது.

தலைவன் குடும்பத் தலைவனாக மாறுகிறபோது தலைவியின் மீது கொண்ட காதலால் அவனை பிரிய மனம் மறுக்கிறது பொருளா? தலைவியா? என்று மனம் தடுமாறுகிறது. இந்தநிலையில் அவனுக்கான ஆலோசனைகளையும் வாழ்வியல் நெறிகளையும் சான்றோர்கள் வழங்குகின்றனர். 'வினையே ஆடவர்க்கு உயிர்' (குறு.135) என்று சமூகக் கடமையால் வலியுறுத்தப்படுகிறான். தனிமனிதனான தலைவன் சான்றோர்களின் அறிவுறுத்தல், ஆற்றுப்படுத்தல், சமூகச் சிந்தனையை ஊட்டுதல் போன்ற மனவளத் தேற்ற முறைகளால் சமூகப் பொறுப்பாளனாக உருப்பெறுகிறான்.

மேலும் **"சங்கப் பாடல்களில் 346 பாடல்கள் தலைவன் கூற்றாக அமைந்துள்ளன. தலைவி, தோழி, பாகன் ஆகியோருக்கு உரைக்கும் பாடல்கள் 143, தன் நெஞ்சிற்கு உரைப்பவை 163 பாடல்கள், பாங்கனுக்கு உரைப்பது 21 பாடல்கள் இவையனைத்தும் தலைவியைச் சுமந்து நிற்கும் தலைவனின் மனநிலையை உறைக்கின்றன."[2]**

**தலைவியின் உளநோயும் மருத்துவ முறையும்**

**'செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்**
**அறிவும் அருமையும் பெண்பாலான' - (தொல்.பொருள்.210)**

என்று தொல்காப்பியர் தலைவியின் குணநலன்களை வரிசைப்படுத்துகிறார்.

இளையோர் பருவத்தில் ஆண்களைவிட பெண்களே அதிகம் உணர்ச்சி வயப்படுகின்றனர் என உளவியலாளர் கருத்துத் தெரிவிக்கின்றனர். இதனைத் தொல்காப்பியர்,

**'புறஞ்செயச் சிதைத்தல் புலம்பித் தோன்றல்**
**கலங்கி மொழிதல் கையற உரைத்தலொடு**
**புலம்பிய நான்கே ஆறென மொழிப' - (தொல்.மெய்.267)**

என்னும் மெய்ப்பாட்டியல் நூற்பா வழி தெளிவுபடுத்துகிறார்.

இயற்கைப் புணர்ச்சியில் தலைவனோடு இணைந்த தலைவி, அவன் உரைத்த சூளுரைகளை மட்டுமே ஒற்றைப் பிடிப்பாக நம்பி இருக்கிறாள். தலைவன், குறித்த காலத்து வராது காலம் நீட்டித்தபோது, இயற்கையிடமும், தோழியிடமும் புலம்பித் தன் ஆற்றாமையை வெளிப்படுத்துகிறாள்.

**'யாருமில்லை தானே கள்வன்**
**தானது பொய்ப்பின் யானெவன் செய்கோ"** - **(குறு.**252)

என தலைவன் தெரியாது என்று கைவிட்டால் தன் நிலைமை என்னவாகும் என்று நம்பிக்கை இழந்த மனநிலைக்குத் தள்ளப்படுகிறாள். இனி நினைத்து ஆவது ஒன்றுமில்லை என்றெண்ணி தலைவனை மறந்துவிடலாம் என்று தனக்குத்தானே உறுதிகொள்ளும் போது,

**'உள்ளின் உள்ளம் வேமே உள்ளது**
**இருப்பினெம் அளவைத் தன்றே'** - **(குறு.**102,1-2)

என்று தன்மனம் தன் கட்டுப்பாட்டில் இல்லாமல் முழுமையாகத் தற்சார்பும் தன்னிலையும் இழந்ததை உணர்கிறாள் என்று தலைவியின் உள்ள (மன) நிலையையே வெளிப்படுத்துவதாக அமைகின்றன.

**மனவெழுச்சி**

மனவெழுச்சி பற்றி உளவியல் அறிஞர் சந்தானம் அவர்கள் உணர்ச்சிகள் மேலோங்கி நிற்கும் நனவு நிலையாகும். **"இம்மனவெழுச்சிக்கு உட்பட்ட ஒருவனின் உடலும் உள்ளமும் கிளர்ச்சியுறும், மனவெழுச்சி என்பது மன உணர்ச்சிகளும், இதயம், வயிறு, நுரையீரல், குடல் போன்ற உள்ளுறுப்புகளினின்றும் எழும் புலனுணர்ச்சிகளும் இணைந்த ஒரு கலப்பு அனுபவம் என்கின்றனர்."**[3]

**தொல்காப்பியர் குறிப்பிடும் மனவெழுச்சிகள்**

தொல்காப்பிய பொருளதிகாரத்தில் இடம்பெறும் மெய்ப்பாட்டில் மனவெழுச்சிகளைத் திறம்பட விளக்கும் பொருளதிகார மெய்ப்பட்டியலில் ஏழு நூற்பாக்களைத் தவிர 20 நூற்பாக்களுமே மெய்யில் தோன்றும் மெய்ப்பாடுகளைப் பற்றியும் அதனால் உடலில் ஏற்படும் மாற்றங்களைப் பற்றியும் விவரிக்கின்றன. மெய்ப்பாடுகளை,

**'நகையே அழுகை இளிவரல் மருட்கை**
**அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று**
**அப்பால் எட்டே மெய்பாடு என்ப'** - **(தொல்.பொருள்.**252)

என்று வகைப்படுத்துகிறார் தொல்காப்பியர். இதனையே உளவியல் அறிஞர்கள் **"உணர்ச்சி பல வகைப்பட்டன. அவை அச்சமும் அச்சம்சார் உணர்ச்சிகளும் - அச்சம், கவலை, பீதி, வெட்கம் போன்றவை. சினமும் சினம் சார் உணர்ச்சிகளும் - சினம்,பொறாமை வெறுப்பு ஆகியவை. அன்பு**

**அன்புசார் உணர்ச்சிகளும் - அன்பு, காதல், மகிழ்ச்சி, நகை, உற்சாகம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்"4.** தொல்காப்பியர் கூறும் எட்டுடன் உளவியல் அறிஞர்கள் கூறும் மூன்று பிரிவு மனவெழுச்சிகளும் இயைந்திருக்கின்றன. இங்கு கவலையும் அச்சமும் கலந்த உள்ளுணர்வைக் காணலாம்.

**கவலை (அச்சம்)**

கவலையால் உள்ள விறைப்பு நிலை, உள்ள விறைப்பு நிலையால் கவலை என ஒன்று காரணமாகவும் மற்றொன்று விளைவாகவும் மாறி மாறி அமைகின்றது. தலைவனுக்கு வழியிடை நேரும் துன்பம் பற்றிய அச்சம், இரவுக்குறி மறுத்ததால் தலைவனுக்கு நேரும் வருத்தமும், தலைவியைக் காண விருப்பம் ஆர்வம் கலந்த அன்பு, கண்டால் பெறலாகும் இன்பம் பற்றிய விளைவு ஆகிய பல்வேறு உணர்வுகளின் மோதலில் உள்ளம் இறுக்கம் அடைகின்றது. அடிப்படை உணர்வுகள் சில தம்முன் ஒன்றை ஒன்று பாதித்து செயல்பட்டு சிக்கல் உருவாவதே கவலையாகும். மணம் புரியும் வேட்கையால் தலைவனை வரைவு கடாவுதற்காகத் தலைவியும் தோழியும் இரவுக்குறி மறுப்பர். அந்நிலையில் குறைவற்ற தலைவனின் மனக்குமுறலாக ஔவையார்,

**'பெயல்நீர்க் கேற்ற பசுங்கலம் போல**
**உள்ளம் தாங்கா வெள்ளம் நீங்கி**
**அரிசுவா உற்றனை' - (குறு.பா.29)**

என்று குறிப்பிடுகின்றார். அன்புடையாராலேயே மறுக்கப்பட்டமையே தலைவனால் எதிர்த்து போராட இயலவில்லை. தலைவனின் மன நெருக்கடியானது மழைநீரில் உருகும் பச்சை மண் பாத்திரத்திற்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது. இக்கருத்து பிறல்நிலை உளவியலுக்குச் சான்றாக அமைகிறது.

**புணர்தலில் உளவியல்**

ஒரு நெய்தல் நிலத்துத் தலைவி மருத நிலத்துத் தலைவன் மீது காதல் கொண்டுள்ளாள். தலைவனோ வரவு நீட்டிக்கிறான். இந்நிலையில் நம்மைப் பற்றிய அலர் ஊர் முழுவதும் பரவிவிட்டது. இதனை அன்னை அறிந்தால் நாம் களவில் நீடிக்க முடியாது என்று கூறினாள். அவன் தனது ஊருக்கு தன்னைக் கூட்டுச் செல்வானோ? எனத் தோழியிடம் வினவுவதாக அமைந்துள்ளது.

**'கானல்அம் சிறுகுடிக் கடல்மேம் பரதவர்**
**கருங்கால் வெண்குருகு வெரூஉம்**
**இருங்கழிச் சேர்பிற்றம் உறைவின் ஊர்க்கே' - (நற்.பா.134)**

என்னும் பாடலிலே தலைவி புணர்தலின் நிமித்தம் ஆசை கொள்ளும் மனவெழுச்சி நிலை வெளிப்படுத்தப்படுகிறது.

**நட்புப்பெறும் சமூக மதிப்பீட்டு உளவியல்**

உளவியல் சிந்தனைகளின் சமூக மதிப்பீடுகள், ஒழுக்க நியமங்களில் நட்பு என்பது முக்கிய இடத்தினைப் பெருகின்றது. ஒரு நண்பனைத் தேர்ந்தெடுப்பதிலும், நட்புப் பாராட்டுவதிலும் அந்த வகையில் நண்பர்களைத் தேர்ந்தெடுப்பது பற்றியும் நட்புப்பாராட்டும் தன்மை குறித்தும் நற்றிணைச் செய்யுட்கள் இயம்புகின்றன.

**’அறிய வாழி தோழி பெரியார்**
**நாடி நட்பின் அல்லது**
**நட்டு நடார்தம் ஒட்டியோர் திறந்தே’ - (நற்.பா.32)**
**’முந்தை இருந்த நட்டோர் கொடுப்பின்**
**நஞ்சும் உண்பர் நனிநாகரிகர்’ - (நற்.பா.355)**

மேற்குறிப்பிட்ட பாடல்கள் இரண்டிலும் நட்பாராயும் உளவியல் குறித்தும் ஆய்ந்து நட்புக் கொண்டபின் நண்பன் நஞ்சைக் கொடுத்தாலும் அதை மகிழ்வோடு பருகும் நிலையையும் சமூக மதிப்பீட்டு உளவியல் என்றே கொள்ளலாம்.

**முடிவுரை**

இலக்கியத்தை உளவியல் அணுகுமுறையோடு நோக்குவது மேலைநாட்டுக் கல்வி முறை ஆயினும், இத்தகைய உளவியல் சங்க இலக்கியங்களில் எவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளன என்று ஆராயப்பட்டுள்ளது. இதில் உளவியல் மருத்துவம், தலைவன், தலைவயின் அக உளவியல் பார்வை, மனவெழுச்சியல், தொல்காப்பியம், அச்சம்(கவலை), மெய்ப்பாடு, புணர்தலில் உளவியல் பார்வை, நட்பு கூறும் சமூக மதிப்பீட்டு உளவியல் போன்ற தலைப்புகளில் சங்க இலக்கியத்தை ஆராய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

**சான்றென் விளக்கம்**

1. விஸ்வநாதன்.ந - உளவியலும் வாழ்வியலும், ப.எ,18
இன்லேண்ட் புக்ஸ்
சென்னை. மு.ப.2002.
2. மணவழகன்.ஆ. முனைவர் - சங்கத்தமிழரின் உளநோய் மருத்துவம் ப.7
அனிச்சம், ஆய்வுக் கட்டுரைகள்

வெளியீடு - 2020.

anichem.blogspot.com/2020/08/blog.post.96.html

3. சந்தானம்.எஸ் - கல்வியின் உளவியல் அடிப்படைகள் ப.எ.98
பழனியப்பா பிரதர்ஸ், திருச்சி, முப.1981

4. மணவழகன்.ஆ. முனைவர் - சங்கத்தமிழரின் உளநோய் மருத்துவம் ப.3
அனிச்சம், ஆய்வுக் கட்டுரைகள்
வெளியீடு - 2020.

anichem.blogspot.com/2020/08/blog.post.96.html

ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# சங்க கால இலக்கியங்களில் ஔவையின் ஆளுமைத்திறன்

**முனைவர் ஜெ.கவிதா, உதவிப்பேராசிரியர்,**
**தமிழ்த்துறை**
**பூசாகோஅர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி, கோயம்புத்தூர்.**

11

**ஆய்வுச்சுருக்கம்**

சங்ககாலப் பெண் புலவர்களில் சிறந்தவர் ஔவை. இவர் தம் பாக்கள் மூலம் தமது பன்முக ஆளுமை திறமையை வெளிப்படுத்தி உள்ளார். அவர்தம் ஆளுமை பண்புகளை கொள்கை ஆளுமை, பொருளாதார ஆளுமை, அழகுணர்ச்சி ஆளுமை, சமூக ஆளுமை, ஒருமைப்பாடுடைய ஆளுமை என பல வகை ஆளுமைப் பண்புகளை தம் பாக்கள் மூலம் தமிழ்மொழிக்கு அடையாளம் கொடுத்துள்ளார். இவ்வாளுமைப் பண்புகளை கட்டுரையின் வழி வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

**ஆய்வு நோக்கம்**

சங்கப் புலவர்களில் தலைசிறந்த பெண்பாற் புலவரான ஔவையார் ஆளுமைத்திறம் மிக்கவர். அவர் பல்வேறு வகையான ஆளுமைகளில் சிறந்து விளங்குவதை பலபாடல்கள் சான்றுடன் எடுத்துரைக்கின்றன. இப்பாடல்களில் தூயநெஞ்சம், நட்பு, உண்மையுரைத்தல், அஞ்சாமை, நன்றிமறவாமை, நற்செயலில் ஆர்வம், இயற்கையோடு இயந்த வாழ்க்கை, விலங்குகள், பறவைகள், உணவு, உடை, திருமணமுறைகள் ஒருமைப்பாட்டுணர்வு போன்ற பல்வேறு தலைப்புகளில் பல்வேறு விதமான ஆளுமைகளை ஔவையார் வெளிப்படுத்தியுள்ளார். அவற்றை இவ்வாய்வுக் கட்டுரையின் மூலம் வெளிப்படுத்துவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**முதன்மைச் சொற்கள்** - தூயநெஞ்சம், நட்பு, உண்மையுரைத்தல், அஞ்சாமை, நன்றிமறவாமை, நற்செயலில் ஆர்வம்.

**முன்னுரை**

சங்கப் புலவர்களில் தலைசிறந்த பெண்பாற் புலவரான ஔவை தமது சங்க இலக்கியப் பாக்கள் வாயிலாகத் தமது ஆளுமைத் திறத்தை வெளிப்படுத்துகிறார். பல்வேறு வகையான ஆளுமைகளில் அவர் சிறந்து விளங்குவதைக் காண முடிகிறது. அவர்தம் ஆளுமைப் பண்புகளை கொள்கை ஆளுமை, பொருளாதார ஆளுமை, அழகுணர்ச்சி ஆளுமை, சமூக ஆளுமை, ஒருமைப்பாட்டு ஆளுமை எனப் பலவகை ஆளுமைகளை உரைப்பதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

**ஔவையின் கொள்கை ஆளுமை**

ஔவை சிறந்த பல கொள்கைகளை உடையவர். உண்மையைத் தேடி அறிவதில் இவ்வகை ஆளுமை உடையோர் மிகுந்த ஆர்வம் காட்டுகின்றனர். தனக்கெனத் தனிப்பாதையை வகுத்து எந்நேரத்திலும் சூழலிலும் தன் கொள்கையிலிருந்து மாறாதிருப்பதே இவ்வாளுமையுடையார் பண்பாகும். அவரது கொள்கையாளுமையை, தூய நெஞ்சம், உண்மை, அஞ்சாமை, நன்றி மறவாமை, நற்செயலில் ஆர்வம், புலவர் சமுதாயத்தை மதித்தல், வரலாற்றுணர்வு ஆகிய தலைப்புகளில் காணலாம்.

**தூயநெஞ்சம்**

குழந்தைகளின் மழலை மொழி போன்றது தன் வாய்ச் சொற்கள் என்பதை,

**"யாழொடுங் கொள்ளா பொழுதொடும் புணரா**
**பொருளறி வாரா வாயினும் தந்தையர்க்**
**கருள்வந் தனவாற் புதல்வர்தம் மழலை**
**என்வாய்ச் சொல்லு மன்ன"** (புறம் - 92, 1-4)

என ஔவை பாடுகிறார்.

குழந்தையின் களங்கமற்ற தூய தன்மையுடைய நெஞ்சுடையவராய் வாழ்வதே சிறந்தது என்ற கொள்கையுடையவர் ஔவை என்பதை இப்பாடலடிகளால் அறியலாம்.

**உண்மை**

ஔவை நாஞ்சில் வள்ளுவனைப் பாடும் போது புலவர்களைச் "செந்நாப் புலவர்" என்று அழைக்கிறார். "மறந்தும் பொய்கூறா நாவினராகலின் புலவரைச் செந்நாப் புலவர். என்றார்". புலவர்கள் உண்மை பேசுபவர்கள் என்று குறிப்பிடுவதால் ஔவை உண்மைக் கொள்கையுடையவர் என்பது விளங்குகிறது.

**நன்றி மறவாமை**

ஔவை தான் பாடிய முப்பத்து மூன்று புறநானூற்றுப் பாடல்களில் இருபத்திரண்டு பாடல்களில் அதியனைப் பாடுவதோடு அகப்பாடல் ஒன்றிலும் அதியனைப் பாடுவது ஔவையின் நன்றியுணர்வை உணர்த்துவதாகும். ஔவை தனக்குச் சாவா நிலைதரும் நெல்லிக்கனி தந்த அதியனை,

**நீல மணிமிடற் றொருவன் போல**
**மன்னுக பெரும நீயே** (புறம் - 91- 6,7)

என்று வாழ்த்துவது ஔவையின் நன்றியுணர்வைத் தெளிவாக விளக்குகிறது.

**நற்செயலில் ஆர்வம்**

இரவலர்க்கு வேண்டுவன நல்கி இவ்வுலகில் வாழ்தற்கென வரையறுக்கப்பட்ட வாழ்நாள் முழுவதும் வாழ்தல் வேண்டும். இதுவே நீவிர் செய்யத் தக்க நல்வினை. இந்நல்வினையே நும்மை இனிது வாழச் செய்யும். இந்நல்வினையொழிய இறக்கும்போது உயிர்க்கு வேறே துணையில்லை என்பதை,

**இரவலர்க் கருங்கல மருகாது வீசி**
**வாழ்தல் வேண்டுமிவண் வரைந்த வைகல்**
**வாழச் செய்த நல்வினை யல்ல**
**தாழுங் காலைப் புணைபிறி தில்லை** (புறம் - 367 - 8,7)

என்று ஔவை குறிப்பிடுகிறார்.

**பொருளாதார ஆளுமை**

வாழ்க்கைக்குப் பயன் தருபவற்றில் ஆர்வம் காட்டுவதே இவ்வாளுமையுடையோரின் பண்பாகும். ஒருபொழுதும் ஓயாமல் உண்ணவும் மெழுகால் செய்யப்பெற்ற மெல்லிய அடை போலக் கொழுத்த இறைச்சி மிகுமாறு உலகம் வறுமையுறுதலையுடைய காலமாயினும் அதியன் குடிகளைப் பாதுகாக்கும் பண்பினன் என்ற பொருளில்,

**“பொழுதிடைப் படாஅப் புலரா மண்டை**
**மெழுகுமெல் லடையிற் கொழுநிணம் பெருப்ப**
**அலத்தற் காலை யாயினும்**
**புரத்தல் வல்லன்”** (புறம் - 103, 9-12)

என்று அதியன் குடிகளைப் பாதுகாக்கும் திறத்தைப் புலவர் குறிப்பிடுகிறார். உணவு பொருள் தொடர்பானது. ஆகையால் இது ஔவையின் பொருளாதார ஆளுமைத் திறத்தை எடுத்துக்காட்டுகிறது.

தம் நாட்டின் பொருளாதாரத்தைப் பெருக்க சங்க கால மன்னர்கள் பெரிதும் முயன்றனர். அதியன் மூதாதையர் பெருமுயற்சியால் கரும்பு பயிரிடுவதைத் தம் நாட்டில் அறிமுகப் படுத்தினர். இச்செய்தியினை ஔவை இரு பாடல்களில் சுட்டிக் காட்டுகிறார். தேவர்களைப் போற்றியும் வழிபட்டும் அவர்களுக்கு வேள்விக்கண் ஆவுதியை வழங்கியும் பெறுவதற்கரிய முறைமையினையுடைய கரும்பை விண்ணுலகத்தினின்று உன் முன்னோர் கொண்டு வந்தனர் என்ற பொருளில்,

**அமரர்ப் பேணியு மாவுதி யுருத்தியும்**

**அரும்பெறன் மரபிற் கரும்பிவட் டந்தும்** (புறம் - 99, 1-2)

என்று ஔவை பாடுகிறார்.

அதியன் மகன் பொகுட்டெழினியைப் பாடிய ஔவையார். பெறுதற்கரிய அமுதம் போன்ற கரும்பை இந்நாட்டுக்குக் கொண்டு வந்தவனுடைய பெரிய வழித்தோன்றலே என்ற பொருளமைய,

**…. ……… யந்தரத்**

**தரும்பெற லமிழ்த மன்ன**

**கரும்பிவட் டந்தோன் பெரும்பிறங் கடையே** (புறம் - 392, 19-21)

என்கிறார்.

அதியன் முன்னோர் தங்கள் நாட்டிற்குக் கரும்பைக் கொண்டு வந்து நாட்டின் பொருளாதாரம் வளக் காரணமாயினர். கரும்பு பணப்பயிர். வேளாண் விளை பொருள்களில் அது சிறப்பிடம் பெறுகிறது. கரும்புப் பயிர் பற்றி இரு பாடல்களில் குறிப்பிடுவதால் ஔவையின் பொருளாதார ஆளுமை விளங்குகிறது.

**அழகுணர்ச்சி ஆளுமை**

அழகு, தோற்றம் இவற்றின் மீது இவ்வகை ஆளுமையுடையோர் மிக்க ஆர்வம் காட்டுகின்றனர். "இன்று வரையில் மனிதனின் எண்ணங்களிலும் உணர்வுகளிலும் இயற்கை ஏற்படுத்தியிருக்கும் தாக்கத்தை யாரும் புறக்கணிக்க இயலாது. தமிழகம் இசைப் பறவைகளின் உறைவிடமாக இருந்த சங்க காலத்தில் இயற்கை அக்காலச் சான்றோரிடையே பெருந்தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பது கருதத் தக்கது" என்ற மு.வரதராசனாரின் கூற்றால் சங்கப் புலவர்கள் அழகுணர்ச்சியுடன் இயற்கையில் ஈடுபட்டதைத் தெளிவாக அறியலாம்.

**……. ………… ………… மாமரம் புட்பறை** (தொல் நூற் - 20)

என்பன பருப்பொருளாகும் என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். சங்கப் புலவர்கள் தொல்காப்பியர் குறிப்பிட்ட விலங்கு, மரம், பறவை போன்றவற்றைக் கருப்பொருளாகக் கொண்டு அழகுணர்ச்சி வெளிப்படுமாறு தம் அகப்பாடல்களைப் பாடியுள்ளனர். இயற்கையில் மிகுந்த ஈடுபாடுடைய ஔவையின் அகப் புறப்பாடல்களில் அழகுணர்ச்சித் திறம் அமைந்திருக்கிறது.

விலங்குகள், நீர்வாழ்வன, பறவைகள், பூக்கள், பொறிகளுக்கு விருந்தளிப்பன, ஆற்றல் மிக்க இயற்கைச் சக்திகள், பொழுது, இயற்கையை மக்கள் வாழ்வோடு இணைத்தல் ஆகிய கீழ்க்காணும் தலைப்புகளில் ஔவையின் அழகுணர்ச்சி ஆளுமையை அறியலாம்.

**மந்தியும் குட்டியும்**

பெண் குரங்கு உயர்ந்த மரக்கிளையில் தன் குட்டியால் தழுவப்பெற்று அமர்ந்திருந்த காட்சியை,

**…. …. உயர்கோட்டு**

**மகவுடை மந்தி** (குறுந் - 183)

என ஔவை சுட்டிக்காட்டுகிறார். இப்பாடல் மூலம் தாய் மற்றும் குட்டியின் பாசபிணைப்பை அழகுடன் வெளிப்படுத்தியுள்ளார்.

**பெருமிதப் பகடு**

மனச் செருக்குடைய பகட்டினை ஔவை குறிப்பிடுகிறார். பாரத்தின் மிகுதியால், பார் அச்சு மரத்தோடு தாக்கியதால், நிலத்தில் குளித்த பண்டத்தையுடைய சகடத்தின் ஆழ்ச்சியைப் போக்குவதற்கு மணல் பரக்கவும் கல் பிளக்கவும் நடக்க வல்ல மிக்க மனச் செருக்குடைய காளைக்குப் போற்றுதற்குரிய துறை யாதும் இல்லை என்பதை,

**அச்சொடு தாக்கிப் பாருற் றியங்கிய**
**பண்டச் சாகாட் டாழ்ச்சி சொல்லிய**
**வரிமணல் ஞெமரக் கற்பக நடக்கும்**
**பெருமிதப் பகட்டுக்குத் துறையு முண்டோ** (புறம் - 90) என ஔவை பாடுகிறார்.

**நீர்வாழ்வன**

நீரில் வாழும் மீன், நாய் குறித்த குறிப்புகளும் ஔவையின் அழகுணர்ச்சித் திறத்தால் வெளிப்படக் காணலாம்.

**வாளைமீன்**

**வாளை மீன்கள் வாள் போல் பிறழும் என்பதை**
**வாளை வாளின் பிறழ** (நற்றி - 390)
என ஔவை எடுத்துக்கூறுகிறார்.

**நீர்நாய்**

நீர்நாய் பிணக்கையுடைய கொடிப் பிரம்புகளைப் போன்ற கோடுகள் பொருந்திய புறத்தையுடையது என்பதையும் அந்த நாளுக்குரிய இரையாக வாளை மினைப் பெறும் என்பதையும்

**அரிற்வார்ப் பிரம்பின் வரிப்புற நீர்நாய்**
**வாளை நாளிரை பெறூஉம்** (குறுந் - 364)
என்ற அடிகளில் ஔவை விளக்குகிறார்.

**பறவைகள்**

ஔவை மயில், குயில், குருவி, குருகு ஆகிய பறவைகளைத் தம் பாடல்களில் குறிப்பிடுகிறார். அவற்றைப் பின்வருமாறு வகைப்படுத்திக் காணலாம்.

**மயில்**

மழை பெய்வதற்கு முன் பொலிவற்றிருந்த காயாவின் மலர்கள் பொருந்திய பெரிய கிளை மழை பெய்தபின் மெல்லிய மயிலினது கழுத்தைப் போலத் தோன்றுவதை,

**புல்லென் காயாப் பூக்கெழு பெருஞ்சினை**

**மென்மயி லெருத்திற் றோன்றும்** (குறுந் - 364)

என ஔவை உணர்த்துகிறார்.

கார்காலம் தொடங்கிய பின் காயா மலர்கள் மலர்வதையும், மயில்கள் அழகிய நிறமமைந்த கழுத்துடன் உலாவுவதையும் கண்டு மகிழ்ந்த ஔவை கற்போரையும் தன் அழகுணர்ச்சியால் அக்காட்சியில் ஈடுபடவைக்கிறார்.

**குருகு**

வளங்கொழிக்கும் கடற்கரையில், காலைப் பொழுதில் பசிய கால்களையுடைய வெள்ளாங் குருகுகள் விண்ணில் வேகமாக எறியப்பட்ட கூதாளியின் மாலை போலத் தம் சிறகுகளை வளைத்து வரிசையாகப் பறந்து வந்து ஆரவாரத்துடன் பரவலாக வந்து அமர்வதை,

**விசும்பு விசைத்தெறிந்த கூதளங் கோதையின்**

**பசுங்கால் வெண்குருகு வாப்பறை வளைஇ**

**ஆர்கலி வளவையிற் போதொடு பரப்ப** (அகம் - 273)

எனப் பாடுகிறார்.

குருகுகள் தமது சிறகுகளை வளைத்து வரிசையாக ஆரவாரத்துடன் பறந்த அழகில் ஔவை ஈடுபடுவதை இவ்வடிகள் உணர்த்துகின்றன.

**பூக்கள்**

பூக்களின் பல்வேறு இயல்புகளில் ஔவையின் மனம் ஈடுபடுகிறது. அவற்றைத் தம் பாடல்களில் ஔவை பதிவு செய்கிறார்.

**வேங்கை**

**வேங்கை பூ தேன் நிறைந்தது என்பதை,**

**அகடுநனை வேங்கைவீ** (புறம் - 390)

என ஔவை குறிப்பிடுகிறார்.

**அதிரல்**

அதிரல் புனலிக்கொடியாகும். இக்கொடியில் குயிலின் கூர்மையான வாய் போன்ற மொட்டுகள் காணப்படுவதை,

**குயில்வா யன்ன கூர்முகை யதிரல்** (புறம் - 269)

என ஔவை விளக்குகிறார்.

இவற்றின் மூலம் குயிலின் மூக்கின் அழகிலும் அதிரலில் மொட்டின் அழகிலும் ஈடுபடும் ஔவையின் அழகுணர்ச்சி ஆளுமை தெளிவாகிறது. இவ்வாறு ஔவை இயற்கை பொருட்கள் மீதும் விலங்குகள், பறவைகள் மீதும் தன் அழகுணர்ச்சியை வெளிப்படுத்தியுள்ளார்.

**சமூக ஆளுமை**

ஔவை சங்க காலச் சமுதாயத்தில் மிகுந்த ஈடுபாடுடையவர். அவரது சமூக ஆளுமைத் திறத்தை ஒன்றுணர்வு, நட்பு, கொடை, இரக்க உணர்வு, வீரர்கள், தொழிலாளர்கள், வணிகர், பெண்கள், திருமணம், உணவு, உடை, அணிகலன், விழா, விளையாட்டு, பழக்க வழக்கம் ஆகிய தலைப்புகளில் காணலாம்.

**ஒன்றுணர்வு**

பிறர் துயரைத் தம் துயராகக் கருதுவதே அதியனைத் தாக்கிய வேல் இரப்போர் கையைத் துளைத்தது என்பதை,

**இரப்போர் கையுளும் போகி**
**சென்று வீழ்ந் தன்றவன்**
**அருநிறத் தியங்கிய வேலே** (புறம் - 235)

எனப் பாடியுள்ளார். இவ்வடிகளில் இரப்போர் துயரைத் தன் துயராகவே கருதிப் பாடியிருப்பதால் ஔவையின் ஒன்றுணர்வுக் கொள்கையை அறியலாம்.

**நட்பு**

சமுதாய உணர்வுகளுள் நட்பும் ஒன்றாகும். நட்பை ஔவை தம் பாடல்களில் விளக்குகிறார்.

**ஔவை அதியன் நட்பு**

ஔவை அதியனிடம் மிகுந்த நட்புடையவர். அதியனிடம் கொடை அன்பின் மிகுதியால் ஔவை அதியன் மீது மிகுதியான பாடல்களைப் பாடுகிறார். அதியன் தன் மீது கொண்ட நட்பின் பெருக்கினால் அரிய மலையுச்சியில் கிடைத்த சாவா நிலைதரும் நெல்லித் தீங்கனியைத் தானுண்ணாது ஔவைக்கீந்தான். அவனது தன்னலமற்ற அன்பின் சிறப்பைக் கூறி நீடூழி வாழ்க என்று ஔவை வாழ்த்துகிறார்.

**மன்னுக பெரும நீயே தொன்னிலைப்**
**பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட**
**சீறியிலை நெல்லித் தீங்கனி குறியா**
**தாத னின்னகத் தடக்கிக்**
**சாத னீங்க வெமக்கீந் தனையே** (நற் - 394)

என்பதே ஔவையின் அவ்வாழ்த்து ஆகும்.

**இரக்க உணர்வு**

ஏழைகள் மீது இரக்கம் கொண்டு அவர்களைப் பாதுகாப்பவன் என்ற பொருளில் "இல்லோரொக்கல் தலைவன்" என்று அதியனை ஔவை குறிப்பிடுகிறார். அதியனின் இரக்க உணர்வை விளக்குவதன் வாயிலாக ஔவை தன் இரக்க உணர்வைப் புலப்படுத்துகிறார்.

**பொற்கொல்லன்**

பொற்கொல்லரைப் "பொன் செய் கொல்லன்" என்று ஔவையார் அழைக்கிறார். அவர் பொன்னைத் தட்டி அணிகலன் செய்யும் போது எழுந்த ஓசை இனிமையாயிருப்பதை,

**"பொன் செய் கொல்லனின் இனிய தெளிர்ப்ப"** (புறம் - 87)

எனக் குறிப்பிடுகிறார்.

**தச்சன்**

ஒரு நாளில் எட்டுத் தேரைச் செய்யும் தச்சன் ஒரு மாதம் கூடிக் கருதிச் செய்யப்படும் தேர்க்கால், விரைவிலும் திண்மையிலும் சிறந்து விளங்கும் என்பதை,

**….. வைகல்**

**எண்டேர் செய்யுந் தச்சன்**

**திங்கள் வலித்த கால்** (குறுந் - 388)

எனக் கூறுகிறார்.

தச்சன் ஆரக்கால்களைச் சேர்ந்திருக்கும் குடத்தையுடைய தேர்ச் சக்கரத்தைச் செய்தான் என்பதை,

**…… தச்சன்**

**அடுத்தெறி குறட்டி** (குறுந் - மேலது பாடல்)

எனப் புலவர் தச்சன், பொற்கொல்லன் இவர்களின் தொழில்நுட்பத்தை இப்பாடலின் மூலம் விளக்குகிறார்.

**வணிகர்**

“வணிகர்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வாணிகம் செய்தனர். கடல் கடந்த வாணிபமும் இவர்களிடம் இருந்தது.

**உப்பு வணிகர்**

**“உப்பு வணிகர் உமணர்”** (குறுந் - 15)

என்று அழைக்கப்பட்டனர். உமணர் காளைகள் பூட்டிய வண்டிகளி உப்பேற்றிச் செல்வதை,

**உமணெருந் தொழுகை…**

என ஔவை பாடுகிறார்.

**திருமணம்**

சங்க காலத்தில் நிகழ்ந்த திருமணம் பற்றி ஔவை கூறுகிறார். முரசு முழங்க, சங்கு ஒலிக்கத் திருமணம் நிகழ்ந்ததை,

**பறைபடப் பணில மார்ப்ப** (புறம் - 235)

என்ற பாடல்வரியில் திருமணமுறைகள் பற்றி விளக்குகிறார்.

**உணவு**

சங்க கால உணவு முறையினை ஔவை பாடல்களாலறியலாம். அரிசியாலான சோற்றுணவு கலன்களில் படைக்கப்பட்டு உண்ண பெறுவதை,

**சிறுசோற் றானு நனிபல கலத்தன்மன்னே**
**பெருஞ்சோற் றானு நனிபல கலந்தன் மன்னே** (புறம் - 311)

என்ற அடிகளால் உணவைப் பற்றி ஔவையார் உணர்த்துகிறார்.

**உடை**

அறுவை, உடை, மடி, கலிங்கம் என்று ஆடை அழைக்கப்பட்டது. கந்தல் துணி சிதார் என்று அழைக்கப்பட்டது. தூய வெள்ளாடையை ஆடவர் அணிவதை,

**.... தூவெள் அறுவை**

என்ற தொடரால் உடைப்பற்றி உணர்த்துகிறார்.

**ஒருமைப்பாடுடைய ஆளுமை**

மனிதன் என்றும் விரிந்து வரும் ஈடுபாடுகளை வளர்ப்பவனாக இருத்தல் வேண்டும். பிறருடைய நலத்திற்கும் இன்பத்திற்கும் அவன் எவ்வளவிற்கு பாடுபடுகிறானோ அவ்வளவிற்கு அவன் தன்னுடைய ஆளுமையை விரியச் செய்து செப்பமாக்குகிறான் என்று கோடன் ஒல்போட் கூறுவது ஒருமைப்பாடுடைய ஆளுமையுடையவரின் இயல்பை விளக்குவதாக அமைகிறது.

**நல்லவா் வாழும் நாடே சிறந்தது**

ஔவை, நல்லவர்கள் வாழும் நாடே நல்ல நாடு என்ற உயர் கருத்துடையவர். இக்கருத்தை அவர் புறப் பாடலொன்றில் விளக்குகிறார். நிலமே! நீ நாடே ஆகுக! காடே ஆகுக! பள்ளமே ஆகுக! மேடே ஆகுக! நீ எந்நிலையிலிருப்பினும் நல்ல ஆண் மக்கள் எவ்விடத்திருக்கிறாரோ அவ்விடத்தில்தான் நீ நல்லை என்று பொருள்பட,

**நாடா கொன்றோ காடா கொன்றோ**
**அவலா கொன்றோ மிசையா கொன்றோ**
**எவ்வழி நல்லவ ராடவர்**
**அவ்வழி நல்லை வாழிய நிலனே** (புறம் - 187)

என்ற பாடல்வரியை ஔவை பாடுகிறார்.

**முடிவுரை**

சங்கப் புலவர்களில் தலைசிறந்த பெண்பாற் புலவரான ஔவையார் ஆளுமைத் திறம் மிக்கவர். அவர் பல்வேறு வகையான ஆளுமைகளில் சிறந்து விளங்குவதைப் பாடல் சான்றுகள் எடுத்துரைக்கின்றன. தூய நெஞ்சம், உண்மையுரைத்தல், அஞ்சாமை, நன்றி மறவாமை, நற்செயலாற்ற வேண்டும் என்ற கொள்கை, புலவரைப் போற்றும் பண்பு, வரலாற்றுணர்வு ஆகிய கொள்கையாளுமைப் பண்புகளுடன் ஔவை திகழ்கிறார். ஔவை குழந்தை போல் தூய நெஞ்சுடன் வாழ வேண்டும் என்ற கொள்கையுடையவர். அவர் மறந்தும் பொய் பேசாத உண்மைக்கொள்கையை போற்றுபவர். அவர் தன்மான உணர்வும் அஞ்சா நெஞ்சத்துடன் வாழ வேண்டும் என்ற கொள்கையும் கொண்டவர். "வாயிலோயே வாயிலோயே" என்று தொடங்கும் பாடல் வாயிலாகத் தம் அஞ்சா நெஞ்சக் கொள்கையை அவர் வலியுறுத்துகிறார். சாவா நிலைதரும் நெல்லிக்கனி தந்து தம்மை ஆதரித்த கொடை வள்ளல் அதியன் மீது மிகுதியான பாடல்களைப் பாடித் தம் நன்றி மறவாக் கொள்கையை அவர் உறுதி செய்கிறார். இரவலர்க்கு வேண்டுவன நல்குவதாகிய நல்வினையை வாழ்நாள் முழுவதும் செய்து வாழ வேண்டும் என்ற தம் கொள்கையை ஒரு புறப்பாடல் வாயிலாக ஔவை தெளிவுபடுத்துகிறார். ஔவை புலவர் சமுதாயத்தைப் போற்றும் கொள்கையுடையவர் என்பதை அகப் புறப்பாடல்களில் செந்நாப் புலவர், அஞ்சொல் நுண்தேர்ச்சிப் புலவர் போன்ற தொடர்களால் புலவர்களைப் போற்றுவதால் அறியலாம். இவ்வாறு ஔவையானவர் பல்வேறு வகையான ஆளுமைகளை கொண்டவர் என்பதில் இக்கட்டுரையின் வாயிலாக அறிந்துக்கொள்ளலாம்.

**துணைநூற்பட்டியல்**

1. அறிஞர் ச.வே.சுப்பிரமணியன், சங்க இலக்கியம் எட்டுத்தொகை மூலமும் தெளிவுரையும், மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை, முதல் பதிப்பு - 2010
2. தமிழண்ணல், தொல்காப்பியம், மீனாட்சி பதிப்பகம், முதற் பதிப்பு - 1948

ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# உளவியல் நோக்கில் திருப்பாவை ஓர் ஆய்வு

12

முனைவர் செ.கார்த்திகா, உதவிப்பேராசிரியர்,
முதுகலைத் தமிழ்த்துறை,
டாக்டர் சாகிர் உசேன் கல்லூரி, இளையான்குடி, சிவகங்கை மாவட்டம்.

**ஆய்வுச் சுருக்கம்**

ஆண்டாள் அருளிச் செய்த திவ்வியப் பிரபந்தங்கள் இரண்டு. 1.திருப்பாவை 2.நாச்சியார் திருமொழி. இவற்றுள் திருப்பாவை முப்பது பாசுரங்களும் திருமாலின் பெருமைகளைப்பாடி, அவனுடைய திருவருளைப் பெற்ற வரலாற்றை எடுத்துக் கூறுவது. இப்பிரபந்தத்தின் உட்கருத்து.கண்ணனின் திருவருளைப் பெறுவதையே இறுதி இலட்சியமாகக் கொண்டு ஆயர் சிறுமிகள் தங்களுக்கும்,உலகத்தார்க்கும் எல்லாவித நன்மைகளும் கிடைப்பதற்காக மேற்கொண்டதொரு நோன்பைக் குறிப்பதாகும்.இந்நூலைப் படிக்கும்போது ஏற்படும் உணர்வு **“யாவர் என்னை எங்ஙனம் வேண்டுகிறார்களோ அவர்களைநான் அங்ஙனமே சார்கிறேன்”** (4-11) என்ற கீதையின் வாக்கு இதற்கு முற்றிலும் பொருந்தும் என்று குறிப்பிட இடமளிக்கிறது.இத்தகைய திருப்பாவை நூலின் உளவியல் சார்ந்த கருத்துக்களை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**முன்னுரை**

திருப்பாவை பாடல்கள் இளம் உள்ளங்களில் நல்லொழுக்கத்தையும்,இல்லற வாழ்க்கையிலுள்ளவர்களுக்கு அறநெறியையும்,பரகதியை நாடுபவர்களுக்கு இறைவனை அடைவதற்கான பக்தி மார்க்கத்தையும் எடுத்தியம்புகின்றன.திருப்பாவை சொல் நயமும் பொருள் நயமும் கற்பனை அழகும் கொண்ட ஒரு சிறந்த இலக்கியப் படைப்பு. சமயக்கருத்தைக் கூறும் சமய நூல்; சமுதாய நூல்; தத்துவ நூல் என ஒவ்வோர் அடிப்படையிலும் திருப்பாவை பாடல்களைப் படித்து மகிழலாம். இனி **‘உளவியல் நோக்கில் - திருப்பாவை’** என்ற தலைப்பின் வழி உள்ள உளவியல் செய்திகளைக் காணலாம்.

**உளவியல் என்பதன் பொருள்**

1. சைகி(Psyche),லாகோஸ்(Loges)என்னும் இரு கிரேக்கச் சொற்களின் இணைப்பே சைகாலஜி(Psychology)
2. ‘சைகி’ என்பது ஆன்மா அல்லது மனம்.
3. ‘லாகோஸ்’ என்பது அதுபற்றி ஆராய்தலைக் குறிக்கிறது.
4. எனவே ‘சைகாலஜி’ என்பது ஆன்மாவை அல்லது மனத்தைப் பற்றி ஆராய்தல் என்னும் பொருளுடையதாகிறது.

**உளவியல் விளக்கம்**

உளவியல் என்பது மனிதர்களின் மன மற்றும் நடத்தை செயல்முறைகள் மற்றும் உடல் மற்றும் சமூகசூழலுடனான அவர்களின் தொடர்புகளை பகுப்பாய்வு செய்வதை நோக்கமாகக் கொண்ட ஒரு ஒழுக்கம் ஆகும். நம் சிந்தனைத் தொடர்புடையது. உளவியல், சுருங்கச் சொன்னால் நாம் சிந்திப்பது உள்ளத்தால்,எனவே உள்ளம் + இயல் என்பதே உளவியல்.

**ஆண்டாள் வளர்ந்த சூழ்நிலை**

ஆண்டான் ஸ்ரீவில்லிபுத்தூரில் வாழ்ந்த விஷ்ணுசித்தர் என்ற பெரியாழ்வாரின் அருமைத் திருமகள் என்பதைத் திருப்பாவையிலும்,திருமொழியிலும் உள்ள பாடல்கள் தெரிவிக்கின்றன.திருப்பாவை '**பட்டர்பிரான் கோதை**' என்றும்;திருமொழி '**விட்டுச்சித்தன் கோதை**' '**வில்லிப்புத்தூர்க்கோன் கோதை**' என்றும் ஆண்டாளைக் குறிப்பிடுகின்றன. கண்ணபிரானின் அவதார மகிமைகளைப் பெரியாழ்வார் மனமுருகிப் பாடுவதைக் கேட்டுக் கேட்டு,ஆண்டாளின் உள்ளமும் அவற்றில் பெருமளவு ஈடுபட்டிருத்தற்கூடும்.ஆண்டாள் தந்தையின் ஆன்ம ஞான அறிவைப் பெற்று வளர்த்தவள்.பொதுவாக

**"குழந்தைப் பருவத்தில்தான் மூளையும் மனமும் வெளியுலகத்துச் செய்திகளால் எளிதாகத் தாக்கப் படுகின்றன.மிகவும் ஆழமான பதிவுகளும் அப்பொழுதுதான் ஏற்படக்கூடும்."**[1] (ஆர்.சண்முகம்,மனிதனும் மனமும்,பக்.34) மேலும்,சராசரியிலிருந்து குறிப்பிடத்தக்க முறையில் வேறுபடும் குழந்தைகளுக்குப் '**பொதுநிலைமீறும்**' என்ற பெயரைச் சாதாரணமாக நாம் சூட்டுகிறோம்.அவர்களுள் **"தலைசிறந்த அறிவுக் கூர்மை உள்ளவர்களை மீத்திறம் பெற்ற**(Gifted) **குழந்தைகள் எனக் குறிப்பிடுகிறோம், மீத்திறம் உள்ள குழந்தை சிறுவனாக (அல்லது சிறுமியாக) இருக்கும்பொழுதே அறிவார்வம் மிக்கவனாக இருப்பான். வயதாக ஆக அறிவின் பல் துறைகளில் தலையிடும் போக்குடையவன் ஆவான். மொழியைக் கையாளுவதில் திறமையுள்ள போக்குடையனாக இருப்பான். சொற்களின் கருத்து நுட்பத்தை உணர்வான்.பல மீத்திறம் பெற்ற குழந்தைகளிடம் வேறு தலைசிறந்த தேற்றங்களுள் நினைவு ஆற்றலும், பழைய அனுபவங்களால் கற்பதும், வருங்காலத்தைத் திட்டமிடுவதில் முன்னறிவும் உள்ளன. மேலும் அடிக்கடி தங்கள் அறநெறித் தீர்ப்புகளில் சராசரிக்கு மிக உயர்ந்தவர்களாக இருப்பர்."**[2] (டி.ஜெர்சீல்டு,குழந்தை உளவியல் (இரண்டாம் பகுதி, ப.238) குழந்தைப் பருவத்திலிருந்தே ஆண்டாளின் உள்ளத்தில் முளையிட்ட பக்தி உணர்ச்சி அவள் வளர்ந்த நிலையில் தானும் மலர்ந்து மணம் பரப்பியது. அவள் வளர்ந்த தெய்வீகச் சூழ்நிலை பின்னர் ஆண்டாளைப்பக்திநெறிமிக்க ஒரு தெய்வீகப் பெண்ணாக உருவாக்கியது என்று கூறலாம். **"அடிமனத்தில் உறையும் உணர்வுகள் மனிதனின் ஆளுமையை உருவாக்குவதில் பெரும்பங்கு கொள்கின்றன.**

**இளமைப்பருவத்தில் ஏற்படும் உணர்வுகள் பிற்காலத்தில் யாதாகிலும் ஒரு வடிவில் வெளிப்படும்.இதன் விளைவாக மனித ஆளுமை வலிவும் பொலிவும் பெறக்கூடும் அல்லது சிதைவுறவும் பெறலாம்.இத்தகைய அடிமன உணர்வுகள் கலைஞனுடைய படைப்புகளில் ஏதேனும் ஒரு விதத்தில் தம்மை வெளிப்படுத்தக் கூடும் என்பது 'பிராய்டு' தரும் விளக்கமாகும்."**[3] (க.த.திருநாவுக்கரசு,உளவியல் நோக்கில் இலக்கியத் திறனாய்வு,வெள்ளிக்கிழமை கருத்தரங்கு,உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,13-1-84,ப.6)

**திருப்பாவையின் சிறப்புகள்**

திருப்பாவை பிரபந்தம் ஆண்டாளின் அமுத வாக்காகத் தோன்றியதன் சிறந்த நோக்கம் திருமாலே பரம்பொருள்; அவனை அகப்புறத் தூய்மையுடன் வாயினால் பாடி, மனத்தினால் சிந்திக்க,தீவினை அனைத்தும் தீயிலிட்ட தூசு போலாம்; எத்தனைப் பிறவி எடுத்தாலும் திருமாலுக்குத் தொண்டு செய்து வாழ்வதே பேரின்ப வாழ்வு என்பவற்றை உலக மக்கள் அனைவரும் அறியும் வண்ணம் எடுத்துரைக்க விழைந்தமையே ஆகும்.அதற்கு ஆண்டாள் தெரிந்தெடுத்த வழியென்ன? திருமால் கண்ணனாக அவதரித்த காலத்தில், ஆயர்பாடிச் சிறுமியர் நோன்பிருந்து தாம் நினைத்தபடி கண்ணனை அடைந்தார்கள் அல்லவா?என்ற எண்ணம் எழத்தானும் ஆயச் சிறுமியர் போல் நோன்பிருந்து தன் எண்ணங்களை ஈடேற்ற விழைந்தாள் எனக் கருதலாம்.

**ஆண்டாளின் மன பாவனை**

**"பாவனை ஒருவகை சிந்தனையே.பாவனை மன எழுச்சி பிரச்சனைகளைச் சமாளிக்கும் ஒரு வழியே"**[4] (குழந்தை உளவியல்,மேற்படி.ப.158) என்பர் உளவியலார்.ஆண்டாள் பாவனை மிகுதியால் தானும் ஆயச் சிறுமிகளின் தன்மையை அடைந்தாள். அவள் வாழ்ந்த இடமே ஆயர்பாடியாக மாறியது.ஒரு சிறுமி தன் வயதை ஒத்த தோழிகளுடன் கூடி மகிழ்வதுதானே இயற்கை. **"மிக நுண்ணறிவு உள்ள குழந்தைகளுக்குக் கற்பனைத் தோழர்கள் இருக்கக் கூடும்.சிறுவர்களைவிடச் சிறுமியர்கள் இத்தகைய தோழர்களை உடையவர்களாகக் காண்கின்றனர்."**[5] (மேலது ப.171) ஆண்டாளும் ஆயச் சிறுமிகளுடன் சேர்ந்து நோன்பு நோற்பதை ஒரு(வியாஜமாக)பாவனையாகக் கொண்டு உலக மக்கள் அனைவரும் அறிந்து உய்யுமாறு திருப்பாவை பிரபந்தத்தைப் பாடி அருளியிருக்கிறாள்.ஆண்டாளின் தன்னலமற்ற பரந்த உலக நோக்கை இப்பாடல்களில் காணலாம்.

**தெளிந்த உள்ளமும் ஆண்டாள் நோன்பும்**

பாவனை ஆயர்பாடியில்,பாவனை நோன்பு நோற்கிறாள் ஆண்டாள்.தோழியரும் தானும் ஆய்க்குலச் சிறுமியர் ஆகி விட்டதை உணர்கிறாள்.திருப்பாவை ஒரு கற்பனை இலக்கியப் படைப்பாகப்

பாடப்பட்டாலும் அதிலும் இளம்பருவத்தினர்க்கு இருக்க வேண்டிய ஒழுக்க நெறிகள், கட்டுப்பாடு போன்றவை வரையறுத்துக் கூறப்பட்டுள்ளன. இப்பாவைப்பாட்டின் ஆண்டாள் தனக்காக மட்டுமல்லாது பிற கன்னியரது நல் வாழ்வுக்காக அவர்களையும் இறைவன்பால் ஆற்றுப்படுத்துகின்றாள்.இந்நிலையில் ஒரு கன்னியர் கூட்டமே எழுகிறது. **"ஒரு குழுவாக ஒரு செயலை மேற்கொள்ளும் பொழுது குழு உறுப்பினர்கள் தற்கட்டுப்பாடும் தன்னுறுதியும்,கட்டுப்பாட்டு உணர்வும் கொண்டிருத்தல் வேண்டும்.குழுவின் செயல்களுக்கு மற்ற எல்லோரும் தங்களுடைய முழுத் திறமையாலும் உதவி அளிக்கின்றனர் என்று ஒவ்வொருவரும் உணர்ந்தாலும்,குழுச் செயல்களின் வடிவங்கள் எல்லாம் விரும்பப்படுகின்ற பயன் தருபவை என்று அங்கு ஒரு பொதுவான உடன்பாடு இருந்தாலும் மட்டுமே மனவுறுதி மிகுந்திருக்கும்.நல்லதொரு மனவுறுதிக்கு சில இன்றியமையாத காரணிகள் இருத்தல் வேண்டும்."**[6] (சமூக உளவியலுக்கு ஓர் அறிமுகம்,ப.224) என சமூக உளவியலார் வலியுறுத்துகின்றனர். சான்றாக,குழு அடைவதற்கான ஒரு ஒருமித்து நிற்கும் உணர்ச்சி போன்றவையாகும். இவ்வடிப்படையில் பாவையின் முதல் ஐந்து பாடல்களில் நோன்பு நோற்பார் யார்,நோன்பு மேற்கொள்ளக் காரணம்,நோன்புக்காலத்து பின்பற்ற வேண்டிய விதிமுறைகள்,நோன்பின் பயன்கள் ஆகியவை கூறப்படுகின்றன.

நோன்பைக் காரணமாகக்கொண்டு கண்ணனுக்குத் தொண்டு செய்ய வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்ட பெண்கள்,

**நீர் ஆடப் போதுவீர்!**
**போதுமினோ நேர் இழையீர்!**
**சீர்மல்கும் ஆய்ப்பாடிச்**
**செல்வச் சிறுமீர்காள் (பா.1)**

என்று வருகிறவர்கள் எல்லாம் வரலாம் என்று அழைக்கின்றனர். இவ்வாறு அழைப்பதிலிருந்தே பக்திக்கும் இறைத் தொண்டிற்கும் விருப்பம் மாத்திரமே போதும். வேறெதுவும் தேவையில்லை என்பது புலனாகும்,உலகமெலாம் புகழும் வண்ணம் நாம் மேற்கொள்ளும் நோன்பிற்கு ஓர் உறுப்பாகிய பறை என்னும் வாத்தியத்தை நாராயணனிடம் பெற்றுக்கொண்டு நோன்பு நோற்போம் என்று புறப்படுகின்றனர்.

**நோன்பின் பலன்கள்**

**"நோன்பு உளக்கட்டுப்பாட்டு நிலையில் அமைவது தாம் விரும்பியது நிறைவேற, இன்ன செயல்களைச் செய்கிறேன் என்றோ, இன்ன செயல்களை செய்ய மாட்டேன் என்றோ உள்ளத்தைக் கட்டுப்படுத்துவது நோன்பு"** [7] (தமிழ் இலக்கியத்தில் மகளிர் விளையாட்டுகளும் நோன்புகளும்,ப.205) எடுத்த செயலை முடிக்கச் சில நியமங்களை மேற்கொள்கிறோமல்லவா? அதுபோல ஆய்குலச்

சிறுமியரும் இத்தகைய சில விதிகளையும்,விலக்குகளையும் நோன்பை முன்னிட்டுக் கடைப்பிடிக்கத் தீர்மானிக்கிறார்கள்.இவர்கள் மேற்கொள்வன:1.பரமன் அடி பாடுதல், 2. காலை நீராடுதல், 3. ஐயமும் பிச்சையும், 4. உய்யும் வழி எண்ணி உகந்திருத்தல், இவர்கள் விலக்குவன: 1. நெய்,பால் உண்ணாதிருத்தல், 2. மையாலும் மலராலும் அலங்கரித்துக் கொள்ளுதல், 3. செய்யத் தகாத செயல்களைச் செய்தல், 4. கோள் சொல்லுதல்.

இப்படி நீராடி நோன்பு நோற்றல்,அதன் பயனாகத் தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து நாடு ஆகிய எல்லாம் செழிக்கும். நீர்வளம், நிலவளம், நெல்வளம், பால்வளம் ஆகிய எல்லா வளங்களும் நிறைந்து நீங்காத செல்வம் பெருகும் என்கிறார்கள்.

இவர்கள் நோன்பு நோற்றுக் கண்ணனுக்குத் தொண்டு செய்யும் பேற்றையும்,உலகம் தழைக்கவும் விரும்புகிறார்களல்லவா? ஆனால் அவரவர் ஏற்கனவே செய்த பிழைகள் இந்த நோன்பு மேற்கொள்ள இடையூறு ஆகாதா என்ற ஐயம் உள்ளத்தில் எழக்கூடும்.அவ்வாறு ஐயுற்ற உள்ளங்களுக்கு விடையாக,

**தூ யோமாய் வந்துநாம்**
**தூ மலர்தூ வித்தொழுது,**
**வாயினால் பாடி,**
**மனத்தினால் சிந்திக்க**
**போய பிழையும்**
**புகுதருவான் நின்றனவும்**
**தீயினில் தூசு ஆகும்** (பா.5)

என்ற மனவுறுதியோடு கூறுகின்றனர். இவ்வடிகளில் மனம்,மொழி,மெய் என்ற மூன்றினாலும்.இறைவனை வழி படும் கிரியை நெறியும்,மனத்தை ஒருமுகப்படுத்தும் யோக நெறியும்,இறைவனை வழிபட்டால் பிழைகள் யாவும்நீங்கும் என இறைவனை முழுமையாக அறிந்த அவர்களது ஞான நெறியும் ஒருங்கே அமைந்திருப்பதைக் காணலாம். இவ்வாறு தாங்கள் மேற்கொள்ளப் போகும் இலட்சியத்தின் நோக்கமும் அதன் பயனும் என்ன என்பதைத் திட்டமிட்டு முன்னுரையாகக் கூறி,திருப்பாவை பிரபந்தத்தைத் தொடங்கும் பான்மை ஆண்டாளின் தெளிந்த சிந்தையைப் புலப்படுத்துகிறது.

**பெண் உள்ளத்தின் பல்வேறு நிலை**

தனியே பக்தியனுபவம் பண்ணித் திருப்தி அடைவதைக் காட்டிலும்,பிறருடன் கூடி உள்ளம் குளிர இறைவனுடைய அன்பு நெறியைப் பற்றி நிற்பதே உத்தமபக்தரின் உண்மை மனநிலையாகக் கூறப்பெறும். திருப்பாவையின் ஆறாம் பாசுரம் முதல் பத்துப்பாடல்கள் இவ்வாறு செல்லும் பொழுது பெண்களுக்கே இயல்பான அன்புப் பேச்சும், பரிகாசப் பேச்சும்,உரையாடல்கள் அமைந்திருப்பதும்,இளஞ்சிறார் வழியில் செல்லும் பொழுது காண்பனவற்றில், கேட்பனவற்றில் எல்லாம் உள்ளம் ஈடுபட, அவற்றை ரசித்தும்

தங்களுக்குத் தெரிந்த கண்ணனின் பெருமைகளைச் சொல்வதும் ஆகியவை ஒன்றோடு ஒன்று இணையப் பாடியிருக்கும் இப்பாடல்கள் ஒரு நாடக நிகழ்ச்சி நடைபெறுவது போலவே அமைந்துள்ளன. இந்தப் பத்துப் பாடல்களிலும் பத்துக் குணச் சித்திரங்களை இந்தப் பெண்களிடையே காண்கிறோம்.துயிலுணர்ந்த சிறுமியர் தாம் எழுப்பும் சிறுமியின் உளப்பண்பை உணர்ந்தே அதற்கு ஏற்பத் துயிலெழுப்புவதைக் காணலாம்.

**ஆயர்ச் சிறுமிகளை துயிலெழுப்பும் விதம்**

துயிலுணர்ந்தவர்கள் முதலில் சென்று துயிலெழுப்பும் தோழி வயதில் சிறியவளாக இருக்கலாம்.எனவே அவளைப் '**பிள்ளாய் எழுந்திராய் புள்ளும் சிலம்பின காண்**' என்று பொழுது விடிந்ததற்கு முதல் சாட்சியாகப் பறவைகள் கூவுதலைச்சுட்டிக் காட்டுகின்றனர்.பறவைகளின் ஒலி கூர்ந்து கவனித்தால்தானே கேட்கும்.எனவே கோயிலில் பெரிதாக ஒலிக்கும் சங்கொலி கேட்கவில்லையா எனக் கூறி எழுப்புகின்றனர்.

மற்றொரு பெண்,அவளை எழுப்ப மெல்லிய ஓசையே போதும் என,

**வாச நறுங்குழல்**
**ஆய்ச்சியர் மத்தினால்**
**ஓசைப் படுத்த**
**தயிர் அரவம் கேட்டிலையோ?...... (பா.7)**

எனக் கேட்கின்றனர்.

இவர்கள் எழுப்பும் மற்றொரு தோழி செல்வம் படைத்த குடும்பத்தைச் சேர்ந்தவள் என்று தெரிகிறது அந்தத் தோழியை,

**தூ மணி மாடத்துச்**
**சுற்றும் விளக்கெரிய**
**தூ பம் கமழ**
**துயிலணைமேல் கண்வளரும்**
**மாமன் மகளே!**
**மணிக்கதவம் தாள் திறவாய்..... (பா.9)**

என்று உறவுகொண்டாடி எழுப்புகின்றனர்.அவ்வாறு பாசத்தோடு அழைத்தும் அவள் எழுந்திருக்காததால் இவள் என்ன '**ஊமையோ? அன்றிச் செவிடோ? அனந்தலோ? ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ?**' என்று சந்தேகப் படுகிறார்கள். ஏதோ ஒரு பெருந்துயில் மந்திரத்தால் கட்டுப்பட்டுக் கிடக்கிறாளோ என்று இவர்கள் கேட்பது இந்நாளில் ஹிப்னாடிச வசிய நித்திரையை நமக்கு நினைவூட்டுவதாகும்.இவளது பெருந்துயில் மந்திரத்திற்கு எதிர் மந்திரம் கூறுவது போல் இச்சிறுமியர் '**மாமாயன்,மாதவன்,வைகுந்தன்**' என்று பலமுறை இறைவனின் நாமங்களைச் சொல்கிறார்கள்.

அடுத்து எழுப்பப்படும் பெண் தூக்கத்தில் கும்பகர்ணனையும் மிஞ்சியவள் **'பண்டொரு நாள் கூற்றத்தின் வாய் வீழ்ந்த கும்பகருணனும் தோற்றும் உனக்கே பெருந்துயில் தந்தானோ'** (பா.10) என்று நகைச்சுவையோடு வினவுகின்றனர்.

மற்றொருத்தி,திறம் படைத்த வீரனின் மகள்.அவளைப் பொற்கொடியே என்று அழைக்கின்றனர்.இவள் உள்ளமும் கண்ணனைத் தேடிப் படர வேண்டும் என்று எண்ணியே அவ்வாறு அழைக்கின்றனர்.அதற்குப் பதில் இல்லாததால் மீண்டும் **'புன மயிலே'** என அழைக்கிறார்கள்.நாங்கள் முகில் வண்ணன் பேர் பாடுகிறோம்.அப்போது அவள் மயில் போல் ஆடிவர வேண்டாமா என எதிர்பார்க்கிறார்கள் மேலும் உடம்பு அசையாமல்,வாய் பேசாமல் என்ன பயன்கருதியோ உறங்குகின்ற இச்செய்கை? செல்வமும் பெண்மையும் வாய்க்கப் பெற்றவளே எழுந்து வருவாய் என்று இப்பெண்ணிடம் சிறிதும் சினவாமல் பலவாறு கூறியே எழுப்புகின்றனர்.

இன்னொரு பெண் நற்செல்வன் தங்கை இவளைத் துயில் எழுப்பும் பாசுரத்தில், **'மேலே பணி வெள்ளமிட, காலடியில் பால் வெள்ளமிட,எங்களது உள்ளத்தில் கிருஷ்ண பக்தி வெள்ளமிட,நாங்கள் உன்வீட்டு வாசற்படியின் மேற்கட்டையைப் பற்றி நிற்கிறோமே'** என்று கூறுவது ஓர் அருமையான உணர்ச்சிச் சித்திரம்.

கடைசியாக இளங்கிளியை ஒத்த ஒரு பெண்ணை எழுப்புகின்றனர். **'எல்லே இளங்கிளியே இன்னும் உறங்குதியோ'** என்று கேட்கின்றனர்.

**சில் என்று அழையேன்மின்**
**நங்கைமீர்! போதர்கின்றேன்**

என்று பதில் உள்ளே இருந்து வருகின்றது.அதில் அதிகாரம் தொனிக்கிறது.

**வல்லை உன் கட்டுரைகள்**
**பண்டே உன்வாய் அறிதும்**

என்று வெளியிலிருப்பவர்கள் சொல்ல,

**வல்லீர்கள நீங்களே**
**நானேதான் ஆயிடுக**

என்று கிளிமொழியாள் சுடச்சுடப் பதில் சொல்லத் தொடங்கினாலும் பின்னர் பணிந்து பதில் சொல்கிறாள்.(நானே தான் ஆயிடுக என்பதில் பிறருக்கு உரிய குற்றத்தையும் தன் குற்றமாக ஏற்றுக்கொள்ளும் ஸ்ரீவைஷ்ணவ இலட்சணம் இதன் புதைபொருள் என்பர் பெரியவாச்சான் பிள்ளை)இவ்வாறு இவர்கள் அழைத்துச் செல்லும் தோழிகள் வெவ்வேறு குண இயல்புள்ளவர்களாகவும் வெவ்வேறு குடியில் பிறந்தவர்களாகவும் இருப்பதைக் கவனிக்கையில் சமுதாய வாழ்க்கையில் ஒற்றுமையைக் காட்ட,அன்பின் அவசியத்தை இளம் உள்ளங்களுக்கு அறிவுறுத்த இப்பகுதியை ஆண்டாள்

பாடினாளோ என எண்ணத்தோன்றுகிறது.தெ.பொ.மீனாட்சிசுந்தரம் அவர்கள் **"பாவைப் பாடல்களில் கன்னியர் ஒருவரை ஒருவர் எழுப்பிச் வெல்லும் சமுதாயக் கூட்டுறவு வாழ்க்கையின் குழந்தை உள்ளம் வெளியாகிறது."**(8) (திருப்பாவை,சயாமில் திருவெம்பாவை,ப.54) எனக் குறிப்பிட்டுள்ளார்.

**ஆயச்சிறுமியரும் திருமாளிகைக் காப்பாளனும்**

ஆயச்சிறுமியர் திரண்டு நந்தகோபர் திருமாளிகைக்குப் போகிறார்கள் அங்கு வாயில் காப்பானிடம் இவர்கள் வெகுவினயமாக மிக உசிதமாகப் பேசுவது கூர்ந்து கவனிக்கத்தக்கது.வாயில் காப்போனுக்கு இருக்கக் கூடிய மனநிலையை அறிந்து அதற்கு ஏற்றவாறு பேசி,தங்கள் எண்ணத்தை ஈடேற்றிக் கொள்ளும் திறம் வியத்தற்குரியது.

**"நாயகனாய் நின்ற**
**நந்தகோபன் உடைய**
**கோயில் காப் போனே!**
**கொடித் தோன்றும்**
**வாயில்காப் போனே**
**மணிக்கதவம் தாள்திறவாய்**
**ஆயற் சிறுமிய ரோமுக்கு……" (பா.16)**

இவர்கள் கதவு திறக்கச் சொல்லும் போதே கண்ணன் நேற்றே பறை தருவதாக வாக்களித்தான் என்ற செய்தியையும் தெரிவிக்கின்றனர்.கண்ணன் அவ்வாறே வாக்களித்திருந்தாலும் எங்கள் கடமையைச் செய்ய வேண்டாமா? வந்தவர்கள் நிலை அறிதல் எங்கள் கடமை அல்லவா? என்று வாயில் காப்போன் கேட்கக் கூடுமே என்று முன்கூட்டி நினைத்து அதற்கும் விடையாக இவர்கள்,

**தூ யோமாய் வந்தோம்**
**துயில்எழப் பாடுவான்**

என்கிறார்கள்.இப்படிக் கூறிய பின்பும் வாயில் காப்போன் மறுப்புக் கூறினால் என்ற எண்ணம் எழ,உடனே,

**"வாயால் முன்னம் முன்னம்**
**மாற்றாதே,அம்மா! நீ**
**தேய நிலைக்கதவும்**
**நீக்கு……" (பா.16)**

என வினயமாக வாயில் காப்போன் கருத்தறிந்து வேண்டிக் கொள்கின்றனர்.அவர்கள் எண்ணம் ஈடேறியது மேலும் **"இவர்கள் கோயில் காப்போனே! என்றும் வாயில் காப்போனே! என்றும் தொழிலை இட்டு அழைப்பது,வேறு வகையாக அழைக்க அறியாச் சிறுவர் சிறுமியரின் மனநிலை தொண்டர்களின்**

**குழந்தை உள்ளத்திற்கு ஓர் அறிகுறி"**[9] (பி.ஸ்ரீஆசார்யா,கோதை அல்லது காதல் வெள்ளம்,ப.170) என்கிறார் திரு.பி.ஸ்ரீஆசார்யா அவர்கள்.

**ஆயச்சிறுமியர் கண்ணனுடன் மகிழ்ந்து கொண்டாடும் விதம்**

ஆயச் சிறுமியர் நோன்பு முடிந்தபின் அதனால் ஏற்படும் மகிழ்ச்சியை எப்படியெல்லாம் கொண்டாடுவோம் என்பதையும் கூறுகின்றனர்.

**கூடாரை வெல்லும் சீர்க் கோவிந்தா! உன்தன்னைப்**
**பாடிப் பறைகொண்டு யாம்பெறு சம்மானம்**
**நாடு புகழும் பரிசினால் நன்றாகச்**
**சூடகமே,தோள்வளையே,தோடே,செவிப்பூவே**
**பாடகமே;என்றனைய பல்கலனும் யாம் அணிவோம்**
**ஆடை உடுப்போம்; அதன்பின்னே பாற்சோறு**
**மூடநெய் பெய்து முழங்கை வழிவாரக் (பா.27)**

கூடியிருந்து அகம் குளிர்வோம் என்கிறார்கள்.கண்ணனுடன் கூடியிருப்பதிலேயே பசி தீர்ந்து உள்ளம் குளிர்ந்து போகிறார்கள் என்பது குறிப்பு. இப்பாடலில் ஆண்டாள் தன் பெண்ணியல்புக்கு ஏற்ப பல அணிகலன்களின் பெயர்களைக் குறிப்பிட்டனள் போலும் அல்லது நோன்பு நல்ல முறையில் முடிந்தால் எல்லா அணிகலன்களையும் அணிந்து, மகிழ்வோடு, கண்ணனுடன் கூடியிருந்து பாற்சோறு போன்ற கண்ணனுக்குப் பிடித்த உணவு உண்ணலாம் என்ற உள்ள விருப்பின் காரணமாகவும் கன்னியர் நோன்பில் பங்கு கொள்வர் என்ற எண்ணமும் காரணமாக இருக்கலாம்

**நம்பிக்கையும் மனவுறுதியும்**

இவ்வாறு சன்மானங் கேட்கும் கன்னியர் உள்ளத்தில் கண்ணன் தங்களுக்கு அருள் செய்வான் என்ற தளராத நம்பிக்கை வேரூன்றி நிற்கிறது.

**உன்தன்னோடு**
**உறவேல் நமக்கிங்கு ஒழிக்க ஒழியாது (பா.28)**

என்றும்,

**எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு**

**உற்றாமே ஆவோம்**

என்றும் கூறும்போது கன்னியருடைய நம்பிக்கையை அறியலாம்.

**உனக்கே நாம் ஆட்செய்வோம்**
**மற்றைநம் காமங்கள் மாற்று** (பா.29)

எனக் கூறும்போது அவர்கள் கண்ணனிடத்துக் கொண்ட ஆழ்ந்த விருப்பத்தையும்,மனத் திட்பத்தையும் உணர முடிகிறது.

**அறியாத பிள்ளைகளோம்**
**அன்பினால் உன்தன்னைச்**
**சிறுபேர் அழைத்தனவும்**
**சீறி அருளாதே**
**இறைவா!** (பா.28)

என்று கூறி சிறுமியர் தங்களை மன்னிக்குமாறு வேண்டுகின்றனர்.தங்கள் பிழைகளை வெளிப்படையாகக் கூறுவதையும் அதற்கு மன்னிப்பு வேண்டும் மன நிலையையும் இங்குக் காண்கிறோம்.இப்பாடல் கள்ளமற்ற இளம் உள்ளங்களின் அன்பு வேண்டுகோளாகவும் அமைகிறது.

ஆண்டாளின் கவித்திறனாலும் இறை உணர்வின் கலப்பாலும் இயற்கை எனும் அழகு தெய்வீக அழகாக மாறுகிறது.ஆண்டாள் ஆயச் சிறுமியருடன் சேர்ந்து ஒரு மழைப் பாட்டும் பாடுகிறாள்.இச்சிறுமியர் மழைக்கடவுளுக்குக் கட்டளையிடுவதுபோல் பாடுகிறார்கள்.

**ஆழி மழைக்கண்ணா! ஒன்றும் நீ கைகரவேல்;**
**ஆழியுள் புக்கு முகந்துகொண்டு ஆர்த்து எறி** (பா.4)

உலகம் வாழவும்,நாங்கள் மகிழ்ந்து மார்கழி நீராடவும் பெய்வாயாக என்று கட்டளையிடுகிறார்கள்.அவர்களுக்குக் கண்ணனுடைய மேனி நிறத்தை மேகத்தினிடம் காண ஆசை அவன் கையிலுள்ள சக்கராயுதத்தை மின்னலிடை காண ஆசை,அப்படியே அவன் இடது கையிலுள்ள வலம்புரிச்சங்கின் முழக்கம் போன்ற இடி முழக்கத்தையும் கேட்க விரும்புகின்றனர். இறைவனது வில் அம்பு மழையை உதைத்துத் தள்ளுகிறது அல்லவா?அப்படி மழை பொழிய வேண்டும் என்கிறார்கள்.இங்கு ஆயச் சிறுமியரின் உள்ளம் இயற்கையிலும் இறை அழகைக் காண விழைவதைக் காணலாம்.

மேற்கூறிய **“இவையே அன்றியும் இலக்கியப் பயன்பாட்டிலும் உளவியல் சார்பு புலப்படலாம்.இன்ன பாசுரத்தை ஓதினால் இன்ன பயன் என சமய இலக்கியம் சில தரும் குறிப்பு,மொழியை மந்திரமாக்கும் நம்பிக்கை வயப்பட்ட உளவியல் அடிப்படையால் போலும்.”**(10) (ச.வே.சுப்பிரமணியன்,தமிழ் இலக்கியத்தில் உளவியலும் உள்ளுறையும்,உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெள்ளிக்கிழமைக் கருத்தரங்கு,6-1-84 ப.4)ஆண்டாளும் திருப்பாவையின் பயன் கூறும் இறுதிப்பாட்டில்,

**.................................. கோதை சொன்ன**
**சங்கத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே**
**இங்கிப் பரிசுரைப்பார் ஈரிரண்டு மால் வரைத்தோன்**
**செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்**
**எங்கும் திருவருள் பெற்று இன்புறுவர்**

எனப் பாடியுள்ளமை நோக்குதற்குரியது.

**முடிவுரை**

உலகில் உள்ள அனைத்து மக்கள் உள்ளங்களைக் கவரக் கூடிய பதியக்கூடிய ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒன்றுதான் காலங்கடந்தும் வாழும் அந்த வகையில் மழலை பேசும் குழந்தை முதல் இறையடி சேரும் நாள் எந்நாளோ என்று வேண்டும் பெரியோர் வரை பல்வேறு நிலையிலுள்ள பலரும் உய்த்துணர்ந்து நல்வாழ்க்கைக்கும் நற்கதிக்கும் வழிகாட்டியாகக் கொள்ளத் தக்க திருப்பாவை எனும் இத் திவ்வியப் பிரபந்தத்தை ஒரு சிலராவது ஒவ்வோர் ஆண்டிலும் ஒரு மாதமாகிலும் உளமுருகிப் படிக்கின்ற காரணத்தால் தான் உலகம் வாழ்கிறது.வாழும் என்பது உறுதி.

**துணைநூற் பட்டியல்**


1. அறம் மு.டாக்டர்.,குமர உள்ளம்,கோவை தமிழ் வெளியீட்டுக் கழகம்,எண் 10.1966
2. ஆசார்யா,பி.ஸ்ரீ.,திருப்பாவை,அமுத நிலையம் லிமிடெட்,சென்னை -14,1971
3. ஆசார்யா,பி.ஸ்ரீ.,கோதை அல்லது காதல் வெள்ளம்,கலைமகள் காரியாலயம், சென்னை,1958
4. கஸ்தூரி,ரூ.எம்.ஏ.,பாவைப் பாடல்கள்,நாகர்கோயில்,1971
5. சண்முகம், ஆர்.,மனிதனும் மனமும்,மாருதி பதிப்பகம்,சென்னை -14,1966
6. சண்முகம், தா.ஏ.டாக்டர்.,உளவியல் இரண்டாம் பகுதி,கழக வெளியீடு 1070, சென்னை ,1961
7. சீதாலட்சுமி, வே.,தமிழிலக்கியத்தில் மகளிர் விளையாட்டுகளும், நோன்புகளும், பி.எச்.டி.ஆராய்ச்சி நூல்,1981
8. சௌம்ய நாராயணன்,எஸ்.ஸ்ரீ, ஆண்டாள்,மயிலாப்பூர்,சென்னை,1981
9. பாரதியார்,மகாகவி பாரதியின் பகவத் கீதை,நர்மதா பதிப்பகம்,சென்னை,1981
10. மீனாட்சி சுந்தரன், தெ.பொ.,சயாமில் திருவெம்பாவை, திருப்பாவை, பாரிநிலையம், சென்னை,1961
11. குழந்தை உளவியல்,இரண்டாம் பகுதி,தமிழ் வெளியீட்டுக் கழக வரிசை எண் 28,1964
12. சமூக உளவியலுக்கு ஓர் அறிமுகம்,பாகம் - 1,தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம்,வரிசை எண் 797,1978

ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# சமகால இலக்கியங்களில் திருநங்கையர் குறித்த வாழ்வியல் உளப்பதிவுகள்

13

**ஈ. கீதா, முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,**
**பூ.சா.கோ.கலை அறிவியல் கல்லூரி, கோவை.**

**ஆய்வுச்சுருக்கம் :**

மானுடம் மட்டுமின்றி உலகின் அனைத்து உயிரினங்களும், ஆண், பெண் எனும் இரும்பெரும் பிரிவுகளாகப் படைக்கப்பட்டுள்ளது. சிற்சில உயிரினங்கள் ஆண், பெண் இனப்பாகுபாடு இன்றி படைக்கப்பட்டுள்ள இயற்கை விந்தையும் உண்டு. அத்தகு உயிரினங்களில் ஆண், பெண் பாலின உறுப்புகள் ஒரே உடலில் அமைந்துள்ளன. ஆனால் மானுட இனம் மிக நேர்த்தியான உறுப்புகளைக் கொண்டு உடலாலும், உணர்வுகளாலும் பண்பட்ட நிலையில் கட்டமைக்கப்பட்டுள்ளது. ஆனால் இயற்கையில் எப்போதோ எங்கோ நேர்ந்துவிடும் சில மாற்றங்கள் சிக்கலான நிலையைத் தோற்றுவித்த மானுட இனத்தின் மூன்றாவது பாலினம் ஒரு சான்றாகும். பண்பாடும், நாகரீகமும், நாடும் மேம்படும் மனித இனத்தின் வளர்ச்சியில் இச்சிக்கல் கூர்ந்து நோக்கத்தக்கது. திருநங்கையர்களின் எழுச்சி சங்கங்கள் வழியாகவும்; கோரிக்கைகள் வழியாகவும் தங்களின் சிரமங்களைச் சொல்ல முயன்று வருகிறது. 1990களுக்குப் பிறகு திருநங்கையர்களைப் பற்றி பேச முனைந்துள்ளனர். இம்மூன்றாவது பாலினத்தைக் குறித்த செய்திகளைத் தொகுத்து நோக்கின் தமிழ் இலக்கண இலக்கியப் பரப்பில் இவர்களது பதிவுகளை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**முன்னுரை:**

தமிழ் இலக்கியங்களில் நீண்டதொரு திசைவழியே தன்னெல்லையை விரிவாக்கிய வண்ணம் பயணித்து வருகிறது. அவ்விலக்கிய பெரும் பயணத்தின் திருப்பங்கள், திகைப்புகள், ஆச்சரியங்கள், அதிர்வுகள், என்பதான உணர்வலைகளைத் தோற்றுவித்தவாறே இலக்கண, இலக்கியங்கள் அரங்கேறி வருகிறது. இப்பயண முன்னெடுப்பின் மற்றுமொரு அசைவியக்கமே இக்கால இலக்கியங்களில் திருநங்கை குறித்த புலப்பாட்டுத்திறன். பாலின அடிப்படையில் ஆண்கள் பெண்களாய் பல்வேறு சமூகப்புறக்கணிப்பு பிறகு ஆளாகி வருவதைப் போன்று மனிதர்களோடு மனிதராய் பிறந்து குரோமோசோம் மாறுபாட்டால் உடலளவில் ஆண் உருவைப்பெற்றும், மனதளவில் பெண்ருவில் வாழும் திருநங்கையர் குறித்த பதிவுகள் சமகால இலக்கியங்களில் எவ்விதம் பதிவு செய்யப்படடுள்ளன என்பதை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**இலக்கணங்களில் திருநங்கையர்கள்:**

தொல்காப்பியம் தமிழ் இலக்கண நூல்களுக்கு எல்லாம் முன்னோடியாகத் திகழ்கின்றது. இதில் மொழி, வரலாறு, சமூகம் பண்பாடு, பழக்கவழக்கங்கள் என மனித வாழ்வியல் கூறுகள் அனைத்தும் பதிவு செய்யப்பட்டுள்ளது. இலக்கண நூல்களைக் கொண்டு ஓர் இனத்தினுடைய வரலாற்று நிலை மற்றும் சமுதாயத்தை காண முடியும். இதற்கு இலக்கண நூல்கள் கால வரிசையில் ஆராயப்பட வேண்டும். கால வரிசைப் பார்வை, தனி மாந்தர் வரலாற்று நிலையின் போக்குகளைத் தெளிவிக்க உதவும். அதுபோல் காலவரிசைச் சமுதாயப் பார்வை ஓரினத்தின் வளர்ச்சி, வீழ்ச்சிக் களங்களைத் தெளிவிக்கும். தமிழ் இலக்கண வரலாற்றில் தொல்காப்பியமும், நன்னூலும் குறிப்பிடத்தகுந்த இலக்கண நூல்களாகக் கருதப்படுகின்றது. ஆகையால்தான் தமிழ் இலக்கியத்தை ஆராய முற்படுபவர்கள் தொல்காப்பியத்தைத் தொடக்கமாகக் கொண்டு ஆராய விழைகின்றார்கள். மனித சமுகம் ஆண்இ பெண் என்ற இரு பாலினத்தவரால் கட்டமைக்கப்பட்டுள்ளது. ஆனால் அண்மைக் காலமாக மூன்றாவது பாலினத்தவர் என்ற ஒரு குரல் எழுப்பப்படுகிறது. இம்மூன்றாவது பாலினத்தவராகக் குறிப்பிடப்படுவோர் திருநங்கையர்கள்.

**தொல்காப்பியத்தில் திருநங்கையர்கள்:**

தொல்காப்பியத்தில் எழுத்து, சொல், பொருள் என மூன்று அதிகாரங்கள் உள்ளன. எழுத்துகளையும், எழுத்துகளால் பிறக்கும் சொற்களையும், சொற்களால் ஆகிய பாக்களின் கருத்துகளை தொல்காப்பியர் பொருளதிகாரமாக எடுத்துரைக்கிறார். சொல்லதிகாரத்தில் ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் எனப் பால்பகுப்பின் பொழுதும், உயர்திணை, அஃறிணை எனத் திணைப்பகுப்பின் பொழுதும் திருநங்கையர்களைப் பற்றி பேசுகிறார்.

**“பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின்**
**ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியும்**
**தெய்வம் சுட்டிய பெயர்நிலைக் கிளவியும்**
**இவ்வென அறியும் தத்தமக்கிலவே**
**உயர்திணை மருங்கில் பால்பிரிந்த திசைக்கும்.”[1] (இளம்பூரணர் 2008)**

எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

திருநங்கையர்கள் எப்பாலினுள், எத்திணையினுள் கூற வேண்டுமென்பதை இவ்விடத்தில் கூறியுள்ளார். திருநங்கைகள் மனதளவில் பெண்ணாகவும், உடலளவில் ஆணாகவும் இருப்பதால்

இரண்டு பண்புகளும் கலந்த கலவையாக இருக்கின்றனர். சமுகத்தில் ஆண், பெண் என்ற இருபாலருக்கும் வரையறை இருப்பது போன்று திருநங்கைகளுக்கு இல்லை. இதனால் திருநங்கையர்கள், ஆணினத்திலும் சேர்க்கப்படாமல், பெண்ணினத்திலும் சேர்க்கப்படாத நிலை காணப்படுகிறது. சமுகம் நாகரீக வளர்ச்சியடைந்த நிலையில் கூட திருநங்கையர்கள் மனிதர்களாகவே மதிக்கப்படாத நிலை உள்ளது. இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னர் இருந்த தொல்காப்பியர் மனித இனத்தில் ஒருவராக திருநங்கையர்களை ஆண் அரவாணி, பெண் அரவாணி என இரண்டு வகைப்படுத்தினார். இதனைத் தொல்காப்பியம்,

**"அண்மை திரிந்த பெயர்நிலைக்கிளவி**

**ஆண்மை அறிசொற்கு ஆகிடனின்றே"** [2] **(இளம்பூரணர் , 2008)**

எனச் சுட்டுகிறது. பெண்தன்மை குறைந்து ஆண் தன்மை மிகுந்து இருந்தால் அவர் ஆண் திருநங்கையாவார். ஆண் தன்மை குறைந்து பெண் தன்மை மிகுந்து இருந்தால் அவர் பெண் திருநங்கையாவார். தொல்காப்பியர் ஆண் திருநங்கையர்களைப் பற்றி பேசவில்லை. பெண் திருநங்கையர்களைப் பற்றி மட்டுமே பேசியுள்ளார். "ஆண்மை தன்மை குறைந்து பெண்மை மிகுந்திருப்பவர்களை ஆண்பாலில் சேர்க்கக்கூடாது. அவர்களிடம் பெண் தன்மை மிகுதியாக இருப்பதால் பெண்பாலில் சேர்க்க வேண்டுமென நச்சினார்கினியர் விளக்கம் கூறுகிறார்."[3] தமிழின் முதல் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்திலலேயே திருநங்கையர்களைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது.

**நன்னூலில் திருநங்கையர்கள்:**

தமிழ் இலக்கண நூல்களில் தொல்காப்பியத்திற்கும் பின் குறிப்பிடத்தகுந்த இலக்கண நூல் நன்னூலாகும். தொல்காப்பியத்திற்கும், நன்னூலுக்கும் நீண்ட கால இடைவெளி உள்ளது. திருநங்கையர்களைப் பற்றிய பதிவுகளில் இரண்டுமே வேறுபட்டாலும் ஒவ்வொரு காலகட்டத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ளனர். நன்னூலார் எழுத்து, சொல் என்ற இரண்டு அதிகாரங்களைப் மட்டுமே பேசுகிறார். சொல்லதிகாரத்தில் பால் மற்றும் திணை பற்றி பேசும் போது திருநங்கையர்களும் பேசப்படுகின்றனர். ஆண் தன்மையும் கலந்தவர்களை எப்பாவினுள் எத்தினணயினுள் அடக்கலாம் என்பதை,

**"பெண்மை விட்டு ஆண் அவாவுவ பேடு ஆண்பால்**

**ஆண்மை விட்டு அல்லாது அவாவுவ பெண்பால்**

**இருமையும் அஃறிணை அன்னவுமாகும்"**[3] **( நன்னூல் 2004)**

எனக் கூறுகிறார். நன்னூலார் திருநங்கையர்களை இரண்டு வகையாகப் பகுத்துக் கூறுகின்றார். “பெண் தன்மையை விட்ட ஆண் தன்மையை மிகுதியாகப் பெற்றிருந்தால் உயர்திணை ஆண்பேடு என்றும், ஆண் தன்மை விட்டு பெண்தன்மையை மிகுதியாகப் பெற்றிருந்தால் உயர்திணை பெண் பேடு என்றும் விளக்கம் தருகிறார். இவ்விரு வகைப் பேடுகளும் உயர்திணையில் இருந்தாலும் அஃறிணையை ஒத்திருக்குமெனவும் கூறுகின்றார்.”[4] “நன்னூலார்” கருத்துப்படி, திருநங்கையர்களை ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என ஐந்திலும் கூறலாம். திணையைப் பொறுத்தவரை, இரண்டிலும் கூறலாம். இவ்வாறு ஐந்து பால்களுக்கும், இரண்டு திணைகளுக்கும் பொதுவானவர்களாக திருநங்கையர்கள் காட்டப்பட்டுள்ளார். இதன் மூலம் திருநங்கையர்களுக்கு சமுக மதிப்பேடு கூடிய ஒரு வரையறை இல்லையென்பது தெளிவாகின்றது.

தொல்காப்பியர் இரண்டு நூற்பாவில் கூறிய கருத்தை நன்னூலார் ஒரே நூற்பாவில் கூறியிருக்கிறார். ஆண் திருநங்கையர்களைப் பற்றி எதுவும் கூறவில்லை. பெண் திருநங்கையர்களை பெண்பால், பலர்பால் என இரண்டு பாலிலும் கூறலாமென்கிறார். மேலும் உயர்திணையில் தான் வரவேண்டுமென்கிறார். திருநங்கையர்களைப் பற்றி தொல்காப்பியர் கூறிய இக்கருத்திலிருந்து நன்னூலார் சற்று வேறுபடுகிறார் திருநங்கையர்கள் உயர்திணையினராக இருந்தாலும் அஃறிணையிலும் கூறுவதற்குப் பொருந்தும் என்கிறார். இரண்டு திணைக்கும் உரிய பால்களான ஆண், பெண், பலர், ஒன்றன், பலவின் என ஐந்து பால்களிலும் கூறலாமென்கிறார். நன்னூலார் தான் இரண்டு வகையான திருநங்கையர்களைப் பற்றிக் கூறுகின்றார். தொல்காப்பியர் திருநங்கையர்களை ஆண்மை திரிந்தவர்கள் எனக் குறிப்பிடுகிறார். இவ்விரண்டு இலக்கணங்களும் திருநங்கையர்களை வெவ்வேறு பெயர்களால் குறிப்பிட்டிருப்பதற்குச் சமுகம் பின்புலமாக இருந்திருக்க வேண்டும். ஒவ்வொரு காலகட்டத்திலும் ஏற்பட்ட சமுக மாற்றம் தான் இவ்வேறுபாடுகளுக்குக் காரணம் எனலாம்.

**திருநங்கையர் இலக்கணம்:-**

இலக்கண நூல்களின் வாயிலாகத்தான் வரையறையையும், விளக்கத்தையும் தெரிந்து கொள்ள முடிகிறது. இதே போன்று மூன்றாவது பாலினத்தவராகக் கருதப்படும் திருநங்கையர்களுக்கு வரையறை கூறப்பட்டுள்ளதா என பார்க்கின்ற பொழுது நிகண்டுகளிலிருந்து இதற்கான முழவிளக்கத்தையும் பெற முடிக்கிறது.

**“பேடி இலக்கணம் பேசுங்காலை**
**நச்சுப்பேசலும், நல்லுரை ஓர்தலும்**
**அச்சுமாறியும், ஆண் பெண் ஆகியும்**
**கைத்தலம் ஒன்றைக் கடுக வீசியும்……..**
**இன்னவை பிறவும் இயற்றுதல் இயல்பே”** [5] **( திவாகரம், ( 2006)**

என்று கூறப்படும் திருநங்கையர்களுக்கான வரையறையைத் திவாகர நிகண்டு கற்பிக்கின்றது.

"நச்சுப்பேசுதல், நல்லிசையோர்தல், முழுமையான பெண்ணாக மாறுதல், ஒரு கையை வீசி நடத்தல், தலையில் ஒரு கை வைத்தல், எதிர்த்தோரைக் கண்டு விலகுதல், எதிர்தோர் மேற்செல்லுதல், பார்வை வேறுபடுதல், பிறருக்கு நடுங்கிச் சுழன்று திரிதல், பல நாடகஞ் செய்தல், பக்கம் பார்த்தல், பதுங்கித்திரிதல், சேர்ந்தகு வருத்தல், இடையில் ஒரு கை வைத்தல், அதனை வாங்கல், இரங்கிப்பேசுதல், எல்லென்று பாடுதல் என அவர்களது செயல்களாகக் கூறுகின்றது."[6]

**சங்க இலக்கியங்களில் திருநங்கையர்கள்:**

தமிழ் இலக்கியம் ஏறத்தாழ மூவாயிரம் ஆண்டுகளின் வரலாற்றையுடையது. அவற்றில் தொல்காப்பியமும் சங்க இலக்கியமும் காலத்தால் முற்பட்டவையாகும்."சங்க இலக்கியம் என்ற தொகுப்பிலுள்ள பாட்டுகளின் காலம் கி.மு.500 முதல் கி.பி.100 வரையில் என்று கூறுவர். தொல்காப்பியமும் ஏறக்குறைய அந்தக் காலத்தைகச் சார்ந்தது என மு.வ. கூறுகின்றார்"[7]

**அகநானூற்றில் திருநங்கையர்கள்:**

சங்க இலக்கியமான அகநானூற்றில் திருநங்கையர்கள் பற்றி ஒரே பாடல்வரி மட்டுமே கிடைத்துள்ளது. தலைவன் பரத்தையிற் பிரிந்திருப்பான். அப்பொழுது தலைவி அவனுடன் ஊடல் கொள்கிறாள். தலைவியின் ஊடலைத் தீர்க்கம் பொருட்டுத் விறலியைத் தூது அனுப்புகிறான். வாயில் வேண்டிய விறலியைக் கேட்குமாறு தலைவி தோழியிடம் சொல்வது போன்று வாயில் மறுப்பாள். அவ்வாறு மறுத்துக் கூறுகின்ற போது திருநங்கையர்கள் பேசப்படுகின்றனர்.

**"என் எனப்படும் கொல் தோழி நல்மகழ்**

**……. இரும்புறம்"[8] (அகநானூறு பாடல் எண்.206)**

என்கிறது. இப்பாடல் உணர்த்தும் பொருள் கள்ளுண்டு களிப்புடன் பேடிப் பெண்ணின் உருவம் பூண்டு கூத்தாடுவது போல் கற்பனை நயத்ததுடன் காணப்படும் என்பதாகும்.

**புறநானூற்றில் திருநங்கையர்கள்:**

புறநானூற்றில் திருநங்கையர்கள் பெயரோடு கூடிய பதிவுகள் இல்லை. உடல் உறுப்பு குறைபாடுள்ளவர்களில் ஒருவராக மட்டுமே திருநங்கையர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது. சோழன்

நலங்கிள்ளியைப் புலவர் உறையூர் முதுகண்ணன் சாத்தனார் பாடும்பொழுது திருநங்கையர்கள் ஊனமுற்றோராகக் கூறப்படுகின்றனர்.

**"சிறப்பு இல் சிதடும், உறுப்பு இல் மிண்டமும்**

**கூனும், குறளும், ஊனமும் செவிடும்**

**மாவும், மருளும், உளப்பட வாழ்வர்க்கு**

**எண்பேர் எச்சம் என்று இவை எல்லாம்**

**பேதையே அல்லது ஊதியம் இல்லன"[9] (புறநானூறு பாடல் எண்.28)**

எனப்பாடுகின்றார்."கண்பார்வை இன்மை, உறுப்புக் குறையுடைய தசைப்பிண்டம், கூன் குட்டையான தேசம், வாய்ப்பேச்சு இன்மை, காது கேளாமை, விலங்குத் தோற்றம், அறிவின் தெளிவின்மை ஆகிய எட்டு வகையான குறைபாடுகளை உடையது மக்கட்பிறவி. இத்தேகத்தால் சிறப்பு ஏதும் இல்லை. இதனைச் சான்றோர்கள் முன்னரே கூறியுள்ளனர். நீ அத்தகைய குறை இல்லாதவன்"[10] என சோழன் நலங்கிள்ளியைப் புலவர் புகழ்ந்து கூறுகின்றார்.

**திருக்ககுறளில் திருநங்கையர்கள்:**

நீதி நூல்களுள் முதன்மையானது திருக்குறளாகும். அறம்இ பொருள்இ இன்பம் என மூன்றைப் பற்றியும் திருக்குறள் பேசுகிறது. நூற்று முப்பத்தி மூன்று அதிகாரங்களில் அறுபத்திரண்டாவது அதிகாரமான ஆள்வினையுடைமையிலும் எழுபத்தி மூன்றாவது அதிகாரமான அவையஞ்சாமையிலும் திருநங்கைகள் பேசப்படுகின்றனர்.

**"தாளாண்மை யில்லாதான் வேளாண்மை பேடிகை**

**வாளாண்மை போலக் கெடும்"[11] (ஆள்வினையுடைமை அதிகாரம் 62, குறள்.எண்.4)**

என ஆள்வினையுடைமை அதிகாரத்தில் நான்காவது குறள் திருநங்கையர்களைப் பற்றிக் கூறுகிறது. விடாமுயற்சி இல்லாதவன் காரியத்தைக் கண்ட மலைத்துவிடுவான். பேடியானவன் எதிரியைக் கண்ட நடுங்கிவிடுவான். ஆகையால் விடாமுயற்சியற்றவன் மேற்கொண்ட பகைவரை வெல்ல முடியும் என்பதைப் போன்று பயனற்றதாகும். இக்குறள் திருநங்கைகள் வீரமில்லாதவர்கள், கோழைகள் எனக் கூறுகின்றது. மேலும் போர் புரிவதற்குத் தகுதியற்றவர்களாகவும் இருந்துள்ளனர். திருநங்கைகள் போர் செய்வதை இழிவாக நினைத்துள்ளனர். இதற்கு மகாபாரதத்தில் சிகண்டியுடன் போர் செய்வதை இழிவாக நினைத்துப் பீஷ்மர் மரணமடைவதைச் சான்று காட்டலாம். இவை இப்படியிருக்க உலக வரலாற்றில் திருநங்கையர்கள் வீரமற்றவர்கள் என்பதற்குச் சான்றுகள் உள்ளன.

**இக்கால இலக்கியங்களில் திருநங்கையர்கள்:**

மனிதனை மேம்படுத்துவது இலக்கியமாகும். நவீன கோட்பாடுகள் பலதோன்றி சமூகம், அரசியல், வரலாறு, இலக்கியம் போன்றவற்றின் மீது புதுமையான நோக்கங்களையும் சிந்தனைகளையும் ஏற்படுத்தின. மார்க்சியம், தலித்தியம், பெண்ணியம், பின்நவீனத்துவம் போன்ற அடித்தட்டு மக்களோடு திருநங்கையர்களையும் இணைத்துப் பார்க்கின்றது. சமீபகாலமாக திருநங்கையர்களின் விழிப்புணர்வினை அடித்தட்டு மக்களின் எழுச்சியோடு பார்க்க முடிகிறது. தலித்தியம், பெண்ணியம் அரசியல் ரீதியான பயணத்தை முன்னெடுப்பதுபோல் திருநங்கையர்களின் எழுச்சியும் முன்னெடுக்கப்படுகிறது. நவீன இலக்கியப் படைப்பாளர்கள் 1990களுக்குப் பிறகு திருநங்கையர்களைப் பற்றி பேச முனைந்துள்ளனர். இதன் பின்னர்தான் சமூகத்திலும், இலக்கியத்திலும் அவர்களின் பிரச்சனைகள் பேசப்பட்டும், விவாதிக்கப்பட்டும் வருகின்றன. நவீன இலக்கியங்களில் திருநங்கையர்களை மட்டுமே பேசக்கூடிய படைப்புகள் மிகக்குறைவானவைகளே. நவீன இலக்கியங்களில் திருநங்கையர்களை பற்றி இழிவாகவோ, உயர்வாகவோ பதிவு செய்யப்பட்டிருந்தாலும் திருநங்கையர்களின் மீது மனிதநேயப் பார்வையை நவீன இலக்கியங்களே ஏற்படுத்தின.

**கோமதி சிறுகதையில் திருநங்கையர்கள்:**

'கோமதி' என்னும் சிறுகதை 1964 களில் கி.ராஜநாரயணனால் எழுதப்பட்டதாகும். இச்சிறுகதை திருநங்கையர்களை மையமிட்டுப் பேசக்கூடியதாகும். கோமதி என்னும் சிறுகதையில் பால்; மாறுபாடு என்பது கலாச்சாரத் தளத்தில்; ஏற்படுத்தும் உடைப்பு என்பதாகவே முன்வைக்கப்படுகிறது. மொழிக்கு வெளியே உள்ளதை உள்ளே கொண்டு வருவதன் மூலம் பொது அழகியல் கேள்விக்குள்ளாக்கப்படுகிறது. இச்சிறுகதையின் தலைப்பே திருநங்கையர்களின் பிரச்சனையை உணர்த்துவனவாக அமைந்துள்ளது. கோமதி என்பது பெண்பாலைக் குறிக்கும் பெயராகும். ஆனால் இப்பெயரைத் தாங்கிவரும் பாத்திரம் ஆணுமில்லாத பெண்ணுமில்லாத திருநங்கையர்களைக் குறித்து வருகின்றது. திருநங்கையர் எத்தன்மையைப் பெற்றிருப்பர் என்பதனைச் சிறுகதைத் தலைப்பிலேயே சுட்டிவிடுகிறார். இச்சிறுகதையில் திருநங்கையர்கள் மாற்றுப்பாலினப் பண்புகளை உள்வாங்கிக்கொண்டு தங்களின் செயல்களை எவ்வாறெல்லாம் மாற்றிக்கொள்கின்றனர். என்பதையும், அதனால் சமூக அமைப்பிலும், குடும்ப அமைப்பிலும் அனுபவிக்கின்ற பிரச்சனைகள் என்னவென்பதையும் மிகவும் யதார்த்தமாக கி.ரா. பதிவு செய்துள்ளார்.

**திருநங்கையர்களின் செயல்கள்:**

ஆணாகப் பிறந்து பெண்ணாக மாறும் திருநங்கையர்கள் பெண் போன்று செயல்படுகின்றனர். இவர்களுக்கு ஆண் தோற்றம் இருந்தாலும் செயல்கள் அனைத்தும் பெண்களின் செயல்கள் போன்று இருக்கும். பெண்ணாகப் பிறந்து ஆணாக மாறும் திருநம்பிகள் ஆண்களைப் போன்று செயல்படுவார்கள். இவர்களுக்கு பெண் தோற்றம் இருந்தாலும் செயல்கள் ஆண்களைப் போன்று இருக்கும். ஆணாக இருந்து பெண்ணாக மாறும் திருநங்கையர்களிடம் சடைபோட்டுக் கொள்ளல், பெண்ணாக நடத்தல், பெண்ணாகப் பேசுதல் போன்ற மாற்றங்கள் காணப்படும். இதனைக் கி.ரா கோமதி என்னும் சிறுகதையில் “இவனுக்குச் சிறு பிராயத்திலிருந்தே ஜடைபோட்டு பூவைத்துக் கொள்வதிலும், வளையலணிந்து கொள்வதிலும், கொள்ளை ஆசை. உருவம் ஆணாக இருந்தாலும், இயல்பு அச்சு அசல் பெண்ணாகவே வளர்ந்து வந்தான். நீட்டி நீட்டி தலையசைத்துப் பேசுவது குழந்தையாக இருக்கும் போதுதான் பொருத்தமாக இருந்தது. பெண் குழந்தைகளோடுதான் விருப்பமோடு விளையாடுவான். ஆண்களோடு விளையாட வேண்டியது ஏற்பட்டால் விடுகட்டி கல்யாணம் பண்ணி விளையாடும் விளையாட்டில்தான் பிரியம் அதிகம். அதிலும் மணப்பெண்ணாகத் தன்னை வைப்பதென்றால் தான் விளையாட வரச் சம்மதிப்பான். வயது வயது ஆக ஆக அவன் ஆண்களோடு சேர்த்து பழகுவதையே விட்டுவிட்டான். பெண்கள் இருக்கும் இடங்களில்தான் சதா அவனைப் பார்க்கலாம். தலைமுடியை அள்ளிச் சொருகி “கொப்பு” வைத்துப் பூ வைத்து கொள்வான். மேலே போட்டுக்கொள்ளும் துண்டை அடிக்கடி மாரப்பை சரி பண்ணுவதுபோல இழுத்து இழுத்து விட்டுக்கொண்டு இடுப்பை இடதும் வலதும் ஆட்டி அசல் பெண்களைப்போல் கையை ஒய்யாரமாக வீசி நடப்பான். எவன புருஷர்களைக் கண்டுவிட்டால் கோமதிக்கு எங்கோ இல்லாத வெட்கம் வரும்.”[12] திருநங்கையர்களிடம் இதுபோன்று எதிர்பாலினப் பண்புகள் இயல்பானதாகக் காணப்படுகிறது. ஆனால் சமூகம் இதனை அருவெறுக்கத்தக்கதாக ஒதுக்கின்றது. இதனால் திருநங்கையர்களை அவர்களின் குடும்பத்தினரே புறக்கணிக்கின்றனர். தங்களின் எண்ணப்படி சுதந்திரமாக வாழ முடியாமலும், ஆதரவு இல்லாமலும் வாழ்க்கையில் விரக்தி அடைகின்றனர். இந்த வாழ்க்கையிலிருந்து விடுதலை பெறுவதற்காக வீட்டை விட்டு ஓடி பம்பாய், சேலம் முதலிய இடங்களுக்குச் செல்லுகின்றனர். அங்கு தங்கள் இனமான மற்ற திருநங்கையர்களுடன் இன்ப துன்பங்களைப் பகிர்ந்து கொண்டு மகிழ்ச்சியாக வாழ்கின்றனர். தங்களின் எண்ணத்திற்கும், செயலுக்கும் முரணாக இருக்கின்ற பாலின உறுப்புகளை அறுவை சிகிச்சையின் மூலம் அகற்றி முழுமையான பெண்ணாகத் தங்களை மாற்றிக் கொள்கின்றனர்.

**புதினங்களில் திருநங்கையர்கள்:**

வாடாமல்லி (1994) :

சு.சமுத்திரத்தின் 'வாடாமல்லி' புதினம் திருநங்கையர்களை மனிதநேயத்துடன் காட்டுகிறது. சு.சமுத்திரம் தனது என்னுரையிலேயே தெளிவுப்படுத்தியுள்ளார். முதன் முதலில் திருநங்கையர்களைப் பற்றி புதினத்தில் பதிவு செய்தவர் இவரே. இப்புதினத்தில் சுயம்பு என்பதற்கு "சுயம்புன்னா தானாய் முளைத்த லிங்கமுன்னு பேரு. அதுக்கு எந்த அபிஷேகமும் கிடையாது?"[13] என ஆசிரியர் பொருள் கூறுகிறார். திருநங்கைத்தன்மையைப் பெற்றவர் தன் குடும்பத்துக்கும், சமுகத்துக்கும் தன் நிலையை எடுத்துக் கூறமுடியாமல் அவலப்படுவதைப் "எம்மா... என்னை எதுக்காக இப்படி பெத்தே? நான் யாரும்மா? சுயம்பு... கத்தி கத்தி களைத்துப்போனோன். அப்பாவையும், அம்மாவையும் திட்டித் திட்டி அலுத்துப்போனான் எனக் கூறுகிறார்."[14] நாவலாசிரியர் திருநங்கையர்களை மனிதநேயத்துடனும் சமத்துவத்துடனும் நடத்த வேண்டும் என்கிறார். "மானுடத்தின் இந்த மூன்றாவது பிரதியான அலியை கிண்டல் செய்வதும், கேலி செய்வதும் காட்டுமிராண்டத்தனம் நமக்குச் சாப்பிடுவது எப்படி இயற்கையோ அப்படி அவர்களுக்கு பெண்ணாகவே அல்லது ஆணாகவோ பெண்ணுடம்பில் ஆணும். ஆணுடம்பில் பெண்ணும் இருப்பது இயற்கை. இதனால் வீரத்திலோ விவேகத்திலோ குறைந்தவர்கள் அல்ல"[15] என்று கூறுகின்றார்.

**கனவுகள் கைப்பிடிக்குள் (2000):**

ஆண்டாள் பிரியதர்ஷினி 'கனவுகள் கைப்பிடிக்குள்' என்னும் புதினத்தில் வரும் தீபா, ஆணாகப் பிறந்து 16 வயதைக் கடந்த நிலையில் தன்னுள் பெண் தன்மை மேலிடுவதை உணர்கிறாள். தீபாவின் நிலையை எதிர்பாராதவிதமாக அவள் தங்கை ராஜாத்தி பார்த்து விடுகிறாள். இதனை அறிந்த கிராம மக்கள் தீபாவை கேலி கிண்டலுக்கு உள்ளாக்குகின்றனர். இதனால் மனமுடைந்து தற்கொலை செய்ய முன்வரும் போது தீபாவின் தாய் முதலுதவி செய்து காப்பாற்றுகிறார்."இதோ பாரு ஊரு நாலும் பேசட்டும். காறித் துப்பட்டும், கேவலப்படுத்தட்டும், கவலையில்லை. ஆனா நீ எப்பவுமே எங்களுக்கு வேணும். தற்கொலை பண்ணிக்க மாட்டேன்னு சத்தியம் பண்ணத்தா"[16] என்ற வரிகள் புலப்படுத்துகின்றன்.

**மூன்றாம் பாலின் முகம் (2008):**

திருநங்கையால் திருநங்கையரைப் பற்றி எழுதி வெளிவந்த முதல் புதினம் பிரியா பாபுவின் மூன்றாம் பாலின் முகம் ஆகும். இப்புதினத்தில் ராஜவேல், பார்வதி தம்பதியருக்கு மூன்றாவதாகப் பிறந்த மகன் ரமேஷ். கல்லூரியில் படித்ர்க் கொண்டிருக்கையில் தனக்குள் இருக்கும் பெண் மன உணர்வினால் உந்தப்பட்டு தன் தந்தையால் வன்முறைக்கு ஆளாகிறார்.

"ஒரு நா இல்லேனா ஒரு நா நானும் பெரிய ஆளா வருவேன். ஒருநாள் இந்த உலகம் அரவாணிங்கள புரிஞ்சுக்கும். இந்த ஊரும் உலகமும் என்னை மட்டுமில்ல, என்னோட அரவாணிங்க சமுதாயத்தையும் கொண்டாடும். அதையும் நீங்க பார்க்கத்தான் போறீங்க"[17] என்று தன் தந்தையிடம் கூறிவிட்டு ரமேஷ் தன் வீட்டை விட்டு வெளியேறி திருநங்கையர் சமூகத்தோடு இணைகிறான்.

**புதுக்கவிதையில் திருநங்கையர்:**

சமூகப் பண்பாட்டுத்தளத்தில் ஆண் பெண் வேறுபாடுகள் பெண்ணை ஒதுக்குவதற்குக் காரணமாக அமைகிறது. திருநங்கையர்களும் இவ்வாறே ஒடுக்கப்டுகின்றனர். இந்நிலையை நா.காமராசன் காகிதப்பூக்கள் கவிதை சுட்டுகிறது. ஆண் பெண் வேறுபாடுகள் எவ்வளவு இயற்கையோ அவ்வளவு இயற்கையானது திருநங்கையர்களின் பிறப்பு எல்லா மனிதர்களையும் போலத்தான் நாங்களும் பிறக்கின்றோம். எந்த ஒரு வேலையைச் செய்வதற்கும் ஓர் உறுப்பு தேவைப்படும். உறுப்புக்களே இல்லாமல் எந்த வேலையும் செய்ய முடியாது.

**"முங்கையொரு பாட்டிசைக்க......**

**சந்திப்பிழை போன்ற**

**சந்ததிப்பிழை நாங்கள்**

**காலத்தின் பேரேட்டைக்**

**கடவுள் திருத்தட்டும! "[18] என்கிறார்.**

**கூவாகம் ( 2005) :**

திருநங்கையர்களை மனிதநேயப் பாங்குடன் இச்சமூகம் பாவிப்பதில்லை. அனைத்து நிலைகளிலும் ஒதுக்கி வைக்கின்றன. குடும்ப உறவினர்கள் திருநங்கையர்களை அங்கரிக்காமல் புறக்கணித்து வருகின்றனர்.

**"......ஆணாய் வளர்ந்த என்னையே**

**அஃறினணயாய் பார்த்தாள் அன்னையே,**

**வீணாய்ச் சுமந்த சுமையென்ற - என்னை**

**விரட்டி யடித்து உண்மையே"[19] , (ந.சிவகுரு, பல.சாகதன், 2005)**

குடும்ப உறவினர்கள் திருநங்கையர் என தெரிந்ததும் அவர்களை அரவணைக்க தவறி விடுகினற்னர்.

**குறி அறித்தேன் (2014) :**

வலிகள் நிரம்பிய திருநங்கையரின் வாழ்வில் புன்னகையை நிரந்தரமாக்க வரம் கேட்கிறார் கல்கி. இவர் மகாகாளியிடம் கேட்கும் வரங்கள் மகாகவி பாரதியின் பிரதிபலிப்பாக உள்ளது.

**"கடவுளுக்கு மனைவியாகி**
**ஒரே நாளில் விதவையான**
**ஒரு பரிசோதனை கவிதை நான்..**
**என் தாலியின் வாழ்வு**
**ஒருநாள் மட்டும்"[20]( கல்கி , 2014).**

"இப்படி பறந்துவிட்ட ஒரு பிள்ளையின் குரல், பெற்ற தாயின் காதுகளிலேயே ஏன் இத்தனை ஈனஸ்வரமாக ஒலிக்க வேண்டும்"[21] ?

**"என்னை**
**நிராகரிக்காதே அம்மா.**
**ஆணாயினும்**
**பெண்ணாயினும்**
**அதுவாயினும்**
**எதுவாயினும்**
**நான் உன் பிள்ளைதானே அம்மா?"[22] ( கல்கி , 2014).**

**சுயம்பு (2018) :**

திருநங்கையர் குடும்ப உறவுகளால் ஒதுக்கப்படும் போது வாழ வழியின்றி வறுமையின் கொடுமையால் பாலியல் தொழிலுக்கு ஆட்படுத்தப்படுகின்றனர்.

**கூத்தாண்டவரோடு**
**கற்பனையில்**
**வாழ்ந்தாலும் - உடல்**
**விற்பனையில்தான்**
**நடக்கிறது**
**எல்லா நாளும்**
**வாழ்க்கை"[23] ( வெ.முனிஷ், 2018)**

ஆணிலிருந்து பெண்ணாக மாறுபவர்களை திருநங்கையர் என்றும், பெண்ணிலிருந்து ஆணாக மாறுபவர்களை திருநம்பி என்றும் அழைப்பர்.

**…. ஒன்றில் மட்டும்**

**ஒன்றுபடுகிறேறாம்**

**நானும் நீயும்**

**நானும் வெறுக்கப்படுகிறேன்**

**நீயும் வெறுக்கப்படுகிறாய்**

**நானும் ஒதுக்கப்படுகிறேன்**

**நீயும் ஒதுக்கப்படுவாய்**

**குறைபாடுடையவர்களாய்**

**கூனிக் குறுகாமல்**

**திமிறி நிற்போம்**

**திருநங்கையும் திருநம்பியுமாய்… “ [24] (வெ.முனிஷ், 2018)**

**முடிவுரை :**

தொல்காப்பியத்தில் திருநங்கையர்கள் பதிவு செய்யப்பட்டிருப்பதைக் கொண்டு அவர்களின் குறிப்புகள் காணமுடிகிறது. திருநங்கையர்களை உயர்திணையினர் என்று தொல்காப்பியத்தின் வாயிலாகவும்இ திருநங்கையர்களை இரண்டு வகையினர் இருப்பதை பற்றியும் நன்னூலின் வாயிலாகவும், அறிய முடிகின்றது. ஒட்டுமொத்த இலக்கணப் பதிவுகளையும் ஆராயுமிடத்து சமுகத்தால் திருநங்கையர்கள் அக்காலக்கட்டத்தில் இலக்கணப் பதிவுகளில் புறக்ககணிக்கப்பட்டுள்ளார்கள் என்பதையே காட்டுகிறது. சங்ககாலத்தில் திருநங்கையர்கள் சமூகத்தோடு நெருங்கிய உறவு வைத்துள்ளனர், மற்றும் கலைநிகழ்ச்சிகளில் பங்கெடுத்துள்ளனர். இச்செய்தி அகநானூற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஊனமுற்றோர்களில் ஒருவராக திருநங்கையர்கள் இருந்துள்ள செய்தி புறநானூற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளது. திருநங்கையர்கள் வீரமில்லாதவர்கள். இழிவானவர்கள் என்ற செய்தி திருக்குறள் மற்றும் நாலடியாரில் பதிவு செய்யப்பட்டுள்ளது. நவீன இலக்கியப் பதிவுகளில் திருநங்கையர்கள் மனிதநேயத்தடன் காட்டப்படுகின்றனர். திருநங்கையர்களின் உள்ளார்ந்த பிரச்சனைகளை இலக்கியங்களின் வாயிலாகப் பேசுகின்றபோது அதற்கு ஒரு தீர்வு எட்டப்படுகின்றது. அந்த வகையில் சமீபகாலமாக திருநங்கையர்களின் பிரச்சனைகள் விவாதிக்கப்பட்டும், தீர்வு காணப்பட்டும் வருவதற்கு இலக்கியங்களே காரணமாக அமைந்துள்ளன. எதிர்வரும் காலங்களில் திருநங்கையர்கள் மற்றும் திருநம்பிகள் சமஉரிமை பெறுவதற்கு இலக்கியம் முக்கிய பங்கு வகிக்கும்.

**பார்வை நூல்கள் :**

1. தொல்காப்பியம், சொல்லதிகாரம்(2008) ஆறாம் பதிப்பு, இளம்பூரணர், சாரதா பதிப்பகம், சென்னை, நூ.4
2. மேலது, நூ. 3. நன்னூல், சொல்லதிகாரம்(2004) , திறனாய்வுரை, சந்தியா பதிப்பகம், சென்னை, நூ.12

3. இரா. இளங்குமரன், இலக்கண வரலாறு(1975) , மணிவாசகர் பதிப்பகம், சென்னை, ப.73

4. நன்னூல், (திறனாய்வுரை)சொல்லதிகாரம், (2004), பாலசுந்தரம், நூ.7

5. மு. சண்முகம்பிள்ளை, இ. சுந்தரமூர்த்தி (பதி) திவாகரம்( 2006), சுந்தர மூர்த்தி நிலையம், சென்னை, ப.930

6. மு. வரதராசன், தமிழ் இலக்கிய வரலாறு, (1978) , சாகித்ய அகாதெமி, புதுடில்லி, ப.34

7. அகநானூறு, பாடல் 206

8. புறநானூறு, பாடல் 28

9. வ.த. இராமசுப்பிரமணியம், தமிழ் இலக்கிய வரலாறு, பக் 120-121

10. மு. வரதராசன், தமிழ் இலக்கிய வரலாறு (2004) , தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, ப.65

11. திருக்குறள் (2004), நாமக்கல் கவிஞர், சாரதா பதிப்பகம், சென்னை, அதிகாரம் 62, குறள் 4.

12. இராமலிங்கனார் உரையாசிரியர் குறள்.ப. 359

13. கி.ராஜநாரயணன், கி.ராஜநாரயணன் கதைகள், ப.46

14. சு.சமுத்திரம், வாடாமல்லி (2016) ,நீர் வெளியீடு,சென்னை, ப. 79

15. சு.சமுத்திரம், வாடாமல்லி,ப. 14

16. ஆண்டாள் பிரியதர்ஷினி, கனவுகள் கைப்பிடிக்குள், ப. 125

17. பிரியா பாபு, மூன்றாம் பாலின் முகம்( 2008), சந்தியா பதிப்பகம், சென்னை, பக். 107-108

18. நா.காமராசன், கருப்பு மலர்கள் (1971), திருமகள் நிலையம், சென்னை, ப. 12

19. கூவாகம், ந.சிவகுரு, பல.சாகதன், குறிஞ்சி வெளியீடு, பக்: 7-8

20. கல்கி, குறிஅறித்தேன் (2014), விகடன் பிரசுரம், சென்னை, ப. 41

21. மேலது, ப. 55

22. மேலது, பக். 63-64

23. வெ.முனிஷ், சுயம்பு (2018) கவியரசர் கலைத் தமிழ்ச்சங்கம், நாமக்கல், ப. 44

24. மேலது, ப. 20

ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# புறநானூற்றில் உளவியல் நோக்கும் போக்கும்

14

**நா. குமுதா, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,**
**பூசாகோஅர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி, கோயம்புத்தூர்.**

**ஆய்வுச்சுருக்கம்:**

ஒரு இலக்கிய ஆய்வு மதிப்பீடு மற்றும் ஒரு குறிப்பிட்ட தலைப்பில் இருக்கும் அறிவார்ந்த ஆராய்ச்சியை ஒருங்கிணைக்கிறது. இலக்கியம் விமர்சனங்களைப் பொதுவாக அறிவியல், சமூக அறிவியல், மற்றும் மனிதநேயங்களில் பயன்படுத்தப்படும் கல்வியில் ஒரு வடிவம். சங்க கால மனிதன் தன் மன உணர்வுகளை தன் படைப்புகளோடு இணைத்து சமுதாயத்திற்கு தன்னுடைய உள்ள உணர்வுகளை வெளிப்படுத்தி இருப்பதும், அவற்றை இலக்கியங்களில் அகம் புறம் என வகுத்து பல நூறு ஆண்டுகள் கடந்த பின்னும் சமுதாயத்திற்கு வழிகாட்டும் பனுவல்கள் ஆக நமக்கு வழங்கியிருப்பதும் ஒரு வகையான உளவியல் என்றும் கூறலாம். உளவியல் என்பது மனதையும் நடத்தையும் பற்றிய ஒரு ஆய்வாக அமைகின்றன என்று கூறப்படுகிறது அவ் வகையில் புறநானூறு என்ற சங்க இலக்கியப் புறம் சார்ந்த நூலில் மக்களின் மன உணர்வுகள் எவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ளன என்பதனையும் அவர்களின் உளவியல் ரீதியான எண்ணங்களையும் வெளிக்கொணரும் நோக்கத்தோடு இக்கட்டுரை அமைகிறது.

**உளவியல் கோட்பாடும் அணுகுமுறையும் :**

புறநானூறு என்பது சங்க இலக்கியத்தில் புறம் சார்ந்த நூலாக அமைகின்றது. இதில் அரசு ,சமூகம் ,போர் ,போரியல் சார்ந்த செயல்பாடுகள் மட்டுமல்லாமல் மனிதனின் கூட்டமைப்பினால் உருவாக்கப்பட்ட கல்வி, தொழில், மொழி போன்ற கட்டமைப்புகளும் மக்களின் வாழ்வியல், பண்பாட்டு விழுமியங்களும் முக்கியப் பங்கு பெறுகின்றன அவற்றின் முக்கியத்துவத்தை உணர்த்தியதோடு தன்னுடைய மனப் பதிவுகளையும் உளவியல் நோக்கோடு தந்துள்ளனர். புறநானூறு இலக்கியத்தில் சமூக உளவியல் ஆய்வாக உற்றுநோக்கல் முறை, அகநோக்கு முறை என இவ்வாய்வு அணுகுமுறையாக எடுத்துக்கொள்ளப்படுகிறது.

**கல்விசார் உளவியலும் அகநோக்கும் :**

மனித வாழ்வினை மேம்படுத்தி நல்ல ஒழுக்கத்தையும் மனவலிமையையும் விரிந்த அறிவையும் சுய வலிமையையும் தருவது கல்வி. இவ்வாறாகப் பொதுவான கருத்துகளை நாம் கூறும் பொழுது அவை மிகச் சாதாரணமான ஒரு செய்தியாக அமைந்துவிடுகின்றன.சங்ககால மக்கள் கல்வியின் முக்கியத்துவத்தை மிக நுட்பமாக உணர்ந்தபடியால் தனது வாழ்வின் அனுபவங்களை வார்த்தைகளாக

சொற்களாக கல்வியின் இன்றியமையாமையை கடத்திச் சென்றுள்ளனர் என்றே கூறவேண்டும். ஆரியப் படைகடந்த பாண்டிய நெடுஞ்செழியன் கல்வியின் மகத்துவத்தை தனது பொன்னான வரிகளாக மன உணர்வாகப் பதிவுசெய்துள்ளார்.

**"ஒரு குடிப் பிறந்த பாலோருள்ளும்**
**மூத்தோன் வருக என்னாது அவருள்**
**அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்"** (புறம் -183)

ஒரே குடியில் பிறந்த மக்களாக இருப்பினும் மூத்தோனை வருக எனக் கூறாமல் கல்வியில் சிறந்த இளையவனைப் போற்றுதலும், கல்வி அறிவுடையவன் வழி அரசும் இயங்கிச் செல்லும் என்று குறிப்பிடுகிறார். தனிமனித உளவியலாக நாம் கோட்பாட்டிற்கு உட்படுத்துகின்ற பொழுது இரு விதமான மன உணர்வுகளை பதிவுசெய்ய முடிகின்றன.

1. பாண்டியர்கள் தலைமுறையில் பல அரசர்கள் நாடாண்ட போதிலும் அவர்களுள் மூத்த அரசர்கள் பலர் இருந்த போதிலும் இளைய தலைமுறையினரான கல்வியில் சிறந்த அரசர்கள் முதன்மைப் படுத்தப்பட்டு போற்றப்பட்டுள்ளனர் என்பது உணர்த்துகின்றது.
2. அரசு பணிகளில் கல்வி கற்ற மக்களை அமர்த்துவது என்கிற கட்டமைப்பு சங்க காலத்திலேயே இருந்துள்ளப்படியால் அரசர்கள் அவர்களையே விரும்பி அரசு செயல்பாடுகளில் ஈடுபடுத்தி உள்ளனர் என்பது திண்ணம்.

**"வேற்றுமைத் தெரிந்த நாற்பால் உள்ளும்**
**கீழ்பால் ஒருவன் கற்பின்**
**மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே "** (புறம் -183).

அந்தணர், அரசர், வைசியர், சூத்திரர் என்கிற நான்கு வகை வருணங்கள் நிலவியதனையும் இந்நான்கு வருணத்தார்களுள் கீழ்பட்டவனாய் இருப்பினும் கல்வி அறிவு பெற்ற ஒருவன் உயர்ந்த குடியில் உள்ளவனோடு ஒத்த அளவில் மதிக்கப்படுவான் என்ற இக்கூற்று கல்வி சமுதாய சமத்துவத்தை உருவாக்கும் ஆயுதம் என்கின்ற உளவியலை உணர்த்துவதாக எடுத்துக் கொள்ள முடிகின்றது.

**கபிலரின் பாடல் உணர்த்தும் உளவியல் நோக்கு** :

மலையமான் திருமுடிக்காரி தமிழ் மூவேந்தருடன் நட்பு கொண்டிருந்த கடையெழு வள்ளல்களுள் ஒருவன். காரி தன்னை நாடிவரும் புலவர்கள் இரவலர்கள் அனைவருக்கும் குறையாது கொடுக்கும் கொடை வள்ளலாக இருந்தான். ஒருசமயம் கபிலர் மலையமான் திருமுடிக்காரியை காணச் சென்றார். எல்லாப் புலவர்களுக்கும் சிறப்புச் செய்வதைப் போலவே காரி கபிலருக்கும் சிறப்பு செய்தார். அதுகண்ட கபிலர் புலவரின் தகுதி அறிந்து சிறப்புச் செய்தல் வேண்டும் என்று அறிவுரை கூறுவதாக

**"ஒருதிசை ஒருவனை உள்ளி நாற்றிசைப்**

**பலரும் வருவர் பரிசில் மாக்கள்"** ( புறம் -121)

என்ற வரிகள் அமைந்துள்ளது. கொடுக்கும் வள்ளல்கள் இருக்கும் திசையை நோக்கி எல்லா திசைகளிலிருந்தும் பரிசு பெற விரும்பும் மக்கள் பலரும் வருவது இயல்பு என்றும் அவ்வாறு பரிசில் பெற விரும்பி வரும் மக்களிடையே அவர்களுக்குப் பரிசுகள் அளிப்பது மிகவும் எளிது. அவர்களின் தகுதியை அறிந்து அவர்களுக்குப் பரிசுகள் வழங்குவது அரிய செயலாகும். அவர்களின் தகுதியை நீ நன்கு அறிந்தாயானால் புலவர்கள் அனைவரையும் ஒரே தகுதி உடையவர்களாக பொதுவாக எண்ணி மதிப்பிடுவதை தவிர்க்க என்கிறார் கபிலர்.

**"ஈதல் எளிதே மாவண் தோன்றல்**

**அது நற்கு அறிந்தனை ஆயின்**

**பொதுநோக்கு ஒழிமதி புலவர் மாட்டே "** ( புறம் -121)

இதில் கபிலரின் உளவியல் மனக் கருத்தாக சங்க காலத்தில் அந்தணர்கள் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்குபவர்களாகவும், சமுதாயத்தில் வருண பாகுபாட்டில் முதல் உயர்குடியினராக அந்தணர்கள் உருவாக்கப்பட்டு இருந்தார்கள் என்பதனால் உயிர் குடியைச் சார்ந்த மக்களை முதன்மைப்படுத்த வேண்டும் என்னும் நோக்கில் சொல்லப்படும் கருத்தாகப் பார்க்க முடிகின்றன. காரணம் புலவர், மக்கள் அனைவரும் கல்விப் புலமை உடையவர்களாக மட்டுமே விளங்கி உள்ள சூழலில் கற்றோரை முதன்மைப்படுத்த வேண்டும் என்ற கொள்கைக்கு மாறாக புலவர்களின் தகுதியைப் பற்றிப் பேசியமையால் இவ்வாறு எடுத்துக் கொள்வதற்கு வாய்ப்பாக அமைகின்றன.

**பொருந்தில் இளங்கீரனாரின் பாடலில் உற்று நோக்கு உளவியல் பதிவு** :

**"செறுத்த செய்யுள் செய்செந் நாவின்**
**வெறுத்த கேள்வி விளங்குப் புகழ்க் கபிலன்**
**இன்று உளன் ஆயின் நன்றுமன் "** (புறம் -53)

செரிவான பாடல்களால் நன்கு பாடும் சிறப்புடையவரான நாவன்மை உடைய புகழ்மிக்க கபிலர் இங்கு இருப்பின் நன்று என்று நீ உரைத்தனை அரசே! என்று சேரமான் மாந்தரஞ்சேரல் இரும்பொறையை நோக்கி புலவர் இளங்கீரனார் இவ்வாறு தன் மன உணர்வை வெளிப்படுத்துகிறார்.

**"ஒளியோர் பிறந்த இம் மலர்தலை உலகத்து**
**வாழேம் என்றலும் அரிதே!"**

அதாவது கற்றோர் மிகுந்த கல்வியில் சிறந்த அறிவுடையவர்கள் நிறைந்த இந்நாட்டில் வாழ மாட்டோம் என்று ஒதுங்கி நீங்கவும் முடியாது. அதே சமயத்தில்

"**ஆடுகொள் வரிசைக்கு ஒப்பப்**

**பாடுவன் மன்னால் பகைவரைக் கடப்பே!"** **(புறம் -53)**

என்கிறார் கபிலரைப் போல் இல்லாவிட்டாலும் நீ பகைவரை வெற்றி கொண்ட சிறப்பினை என்னால் இயன்ற வரை நான் பாடுவேன் கேட்பாயாக என்று உரைக்கிறார் .

ஒரு மனிதனை மற்றொரு மனிதனோடு ஒப்பிட்டு அவனுடைய செயல்பாட்டினை உயர்த்தியோ அல்லது தாழ்த்தியோ பேசுகின்ற பொழுது அதற்கான தாக்கம் என்பதை உணர்வுகளாக வெளிப்படுத்துவது மனித இயல்பு. இப்பாடலில் புலமையில் சிறந்த இருவருள் கபிலர் இருந்திருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும் என்னும் அரசரின் கூற்று புலவர் இளங்கீரனாரின் மனதில் ஏற்படுத்திய தாக்கத்தின் விளைவே தன்னுடைய திறனை வெளிப்படுத்த வேண்டும் என்னும் உந்துதலுக்கு புலவரை இட்டுச்செல்கிறது எனலாம்.

**புலவர் கல்லாடனார் பாடலில் உவமை உணர்த்தும் உளவியல்** :

ஒரு பொருளை இன்னொரு பொருளுடன் ஒப்பிட்டு அழகுபடுத்திக் கூறுவதாவது. புலவர் தாம்சொல்ல எடுத்துக் கொண்ட பொருளை வேறு ஒரு பொருளுடனோ பல பொருளுடனோ அப்பொருளின் பண்பு,தொழில், பயன் என்பவற்றைக் காரணமாகக் கொண்டு இயைபுபடுத்தி இரு பொருள்களுக்கும் இடையே உள்ள ஒப்புமை புலப்படும்படி பாடுவது உவமை.

"**அறுமறுப்பு எழிற்கலை புலிப்பால் பட்டெனச்**

**சிறுமறி தழீஇய தெறிநடை மடப்பிணை "** **(புறம் -23)**

இவ்வடிகள் பாண்டியன் நெடுஞ்செழியனின் போர் செயலால் ஏற்பட்ட விளைவினை புலவர் கல்லாடனார் எடுத்துக் கூறுவதாக அமைந்துள்ளது. மிக நுட்பமாக அதன் விளைவுகளை உவமையோடு இணைத்து தான் கடந்து வந்த பாதையின் வழியில் கண்ட காட்சியின் மூலமாக பகைவர் நாட்டின் நிலையையும் வெளிப்படுத்துகின்ற புலவரின் மன உளவியல் சிறப்பாக அமைந்துள்ளன. தான் வருகின்ற வழியில் பெரிய ஆண் மான் புலியிடம் சிக்கிக் கொண்டதால் அதன் துணையாகிய மெல்லிய பெண்மான் தன் சிறிய குட்டியை அணைத்துக் கொண்டு துள்ளிய நடையுடன் அச்சத்தோடு உண்ணுவதற்கு நல்ல உணவில்லாமல் வருந்தத்தக்க நிலையில் இருப்பதனை நெடுஞ்செழியன் போர் செய்த பகைவர் நாட்டில் படை வீரர்கள் இறந்த பிறகு அவர்களின் மனைவியரும் குழந்தைகளும் அடைந்துள்ள துன்பத்தை அப்பெண் மானோடு இணைத்து வெளிப்படுத்துகிறார்.

**மக்களைப் புறக்கணிக்கும் அரசுக்கு உணர்த்தும் உளவியல் :**

காற்றைப் போன்று வேகமாகச் செல்லும் குதிரையோடு, நெருங்கக் கட்டிய தேரை உடையவர்களாய்க் கடல் போன்ற ஒளி விளங்கும் பெரும் படைகளும், மழையோடு மாறுபட்டும் போர் செய்யும் களிறு போன்ற ஆற்றல் உடையவர் என்னுமாறு இடி போன்று ஒலிக்கும் முரசு முழங்கப் போர் செய்து வெற்றி மிகுந்த படையும், வெண்கொற்றக் குடையும் பெரும் செல்வமும் உடைய வேந்தர் ஆயினும் யாம் பாராட்டிப் போற்றுவது இல்லை.... அதேநேரத்தில் முள் போடப்பட்ட வேலி உடைய ஊர் புறத்தில் மான் மேய்ந்தது போக எஞ்சிய சிறிய இலைகளை உடைய முன்னை கீரையோடு புல்லிய நிலத்தில் விளைந்த வரகின் சோற்றோடு கலந்து உண்ண பெறுகின்ற சிறிய ஊரை உடைய மன்னன் ஆயினும் எங்கள் மீது முறையோடு நட்பு கொண்டு ஒழுகி அன்பு செலுத்துபவர்களை நாங்கள் பாராட்டிப் போற்றுவோம்.

**"பாடறிந்து ஒழுகும் பண்பி னாரே "** **(புறம் -197)**

பொருட் செல்வம் நிறைந்த பேரரசர்களாக இருந்தாலும் மக்களின் நலனை கருத்தில் கொள்ளாமல் பொருட் செல்வத்தை மட்டுமே சேர்த்துக்கொள்வதில் நாட்டமுடைய பேரரசர்கள் இருந்ததனை எடுத்துக்காட்டுகிறார் புலவர். நாங்கள் மிகப்பெரிய அளவில் துன்பத்திற்கு ஆளானாலும் சிறிதும் அன்பு பாராட்டாதவர்களுடைய செல்வம் பயன்படாததால் அவற்றை நினைத்துப் பார்க்க மாட்டோம் என்னும் கூற்று மக்கள் நலனை கருத்தில் கொள்ளாத பேரரசர்கள் பால் புலவர் கொண்டிருந்த மன உளவியலை வெளிப்படுத்துகின்றது.

**"மண்கெழு தானை ஒண்பூண் வேந்தர்**
**வெண்குடைச் செல்வம் வியத்தலோ இலமே "** **(புறம் -197)**

என்கிறார் புலவர், அதே சமயத்தில் எம்மால் வியக்கப் படக்கூடிய மக்கள் யாரென்று புலவர் உரைக்கிறா

**"எம்மால் வியக்கப் படுஉ மோரே,**

**இடுமுள் படப்பை மறிமேய்ந்து ஒழிந்த**

------- ------------

**புன்புல வரகின் சொன்றியொடு பெறூஉம்,**
**சீறூர் மன்னர் ஆயினும் "** **(புறம் -197)**

என்னும் அடிகள் மேற்குறித்த புலவரின் உளவியலை எடுத்துக்காட்டுகின்றன.

**பொய்யாமையைத் தவிர்க்கும் அறம்:**

மனித சமுதாயத்தில் தன்னுடைய நலனுக்காக சிலர் மெய்மையைத் தவிர்த்த செயல்பாடுகளில் ஈடுபடுவது அறிகிறோம். சங்க கால மக்கள் எந்நிலையாயினும் தன்நிலை மறவாமல் அறம் ஒன்றையே கடைபிடித்து வாழ்ந்துள்ளனர். குறிப்பாக, ஆளும் புலவர்களின் செயல்பாடுகளும், ஆலோசனைகளும் நாட்டை ஆளும் அரசார்களுக்கு முன் உதாரணமாக விளங்கினார்கள். பேரரசர்களாயினும் அவர்களுக்கு முன்பாக செவியறிவுறுத்தலும், சில நேரங்களில் இடித்துரைத்தலும் மேற்கொள்ளும் சுதந்திரம் உடையவர்களாக விளங்கியவர்கள் புலவர்களே,

**"பீடில் மன்னர்ப் புகழ்ச்சி வேண்டிச்**
**செய்யா கூறிக் கிளத்தல்**
**எய்யாதாகின்று, எம் சிறு செந்நாவே "** ( **புறம்** -148)

சிறப்பில்லாத மன்னர்களின் புகழ்ச்சியைப் பெறுவதற்காக அவர்கள் செய்யாத செயல்களை செய்ததாகக் கூறும் தன்மையை என்னுடைய நாக்கு ஒரு போதும் மேற்கொள்ளாது எனவும் அதனைப்போன்றே வாழ்தல் வேண்டித் தன்னுடைய நலனுக்காக பொய்யானவற்றைக் கூறுவதனையும் தவிர்க்க வேண்டும் என்று மானுட இனத்திற்கு சமுதாய உளவியலாக புலவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

**"வாழ்தல் வேண்டிப்**
**பொய் கூறேன் ;மெய் கூறுவல் "** (**புறம்** -139)

என்னும் வரிகளும் மானுட விழுமியங்களைப் புலவர்களின் மன உளவியலாக புறநானூறு இலக்கியம் பதிவுசெய்துள்ளன.

**முடிவுரை** :

மனித அக மன எண்ணங்களின் வெளிப்பாடு என்பது உளவியல் ரீதியாக அவர்களின் சொற்களில், செயல்களில் வெளிப்படுத்துவது இயல்பு. புறநானூற்றில் சமுதாயம் சார்ந்து இருக்கவேண்டிய நிலைப்பாடுகளை புலவர்களும், அரசர்களும் தன்னுடைய அக மன உணர்வுகளாகப் படைத்துத் தந்துள்ளனர் என்பதனை மேற்குறித்த இவ்வாய்வுக் கட்டுரை தெளிவுபடுத்துகின்றது.

**துணைநூல் பட்டியல் :**

1. புறநானூறு மூலமும் உரையும், புலியூர்க் கேசிகன், சாரதாப் பதிப்பகம், சென்னை.2010
2. பாட்டும் தொகையும், ராஜ் கௌதமன், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.2018

ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

15

# பெரியபுராணக் காப்பியப் படைப்பாளி சேக்கிழாரின் படைப்புத்திறனுக்கான உளவியல் பின்னணி

அ.ர.சத்தியபிரகாஷ், உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை, ஜே. கே.கே.நடராஜா கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
குமாரபாளையம் , நாமக்கல் மாவட்டம்.

**ஆய்வுச்சுருக்கம்**

இலக்கியப் படைப்புக்கான உளவியல் பின்னணியை படைப்பாளியில் தேடுவது எனும் பொருண்மை அடிப்படையில் பெரியபுராணத்தின் படைப்பாசிரியர் சேக்கிழாரின் படைப்பாக்க உந்துதலை உளவியல் முறையில் நோக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். பெரிய புராணத்தை காப்பியமாகப் பாடத்தூண்டிய உளவியல் பின்னணி எது? என்பதனைக் கண்டறிதல். படைப்பாளனின் மரபு சார்ந்த கூட்டு அடிமன உணர்வும், தான் வாழும் காலத்தில் இருந்த சைவ, வைணவ சமயங்களின் சிக்கல்களுக்கு, மனிதனாக தீர்வு காணும் மன உந்துதலும்; புதுக் காப்பியம் படைக்க வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தின. தான் அறிந்த பழைய தொடர்புகளிடையே புதுத் தொடர்பைக் வளர்த்துக்காட்டும் படைப்புச் சிந்தனையும், ஆழ்ந்த கல்விப் புலமை மற்றும் கவிப்புலமையும் சேக்கிழாரை பெரியபுராணம் எனும் காப்பியம் படைக்கும் படைப்பாளியாக மாற்றியது என்பதே இவ்வாய்வின் சாரமாகும்.

**திறவுச் சொற்கள்**

சேக்கிழார், பெரியபுராணம், கூட்டு அடி மன உணர்வு, சி.ஜி.யுங் , ஆல்பிரட் அட்லர், படைப்பாற்றல், ஆக்கத்திறன்,  படைப்பாளி , இரண்டாம் குலோத்துங்கன், இராசராசன், சுந்தரர், திருத்தொண்டர் தொகை, உளவியல்.

**முன்னுரை**

இலக்கியத்தின் மீதான உளவியல் பார்வையில் ஒன்றான இலக்கியப் படைப்புக்கான உளவியல் பின்னணியை படைப்பாளியில் தேடுவது எனும் பொருண்மை அடிப்படையில் பெரியபுராணத்தின் படைப்பாசிரியர் சேக்கிழாரின் படைப்பாக்க உந்துதலை உளவியல் முறையில் நோக்குவதே இக்கட்டுரையின் நோக்கம். உளவியல் ரீதியாக படைப்பாளியை அணுகுவதற்குமுன் படைப்பாளியின் வரலாற்றையும், படைப்பின் வரலாற்றுப் பின்னணியையும் அறிந்துகொள்வது நலம் பயக்கும்.

**சேக்கிழாரின் வாழ்வியல் பின்னணி**

சேக்கிழார் குன்றத்தூரில் வேளாள மரபில் சேக்கிழார் குடியில் பிறந்தவர். சேக்கிழார் புராண ஆசிரியரின் குறிப்பின்படி அவரது இயற்பெயர் அருண்மொழித்தேவர் என்றும் அவர் குறிப்பிடாத

இராமதேவன் என்ற பெயரும் அவரது இயற்பெயராகச் சுட்டப்படுகிறது. அவரது தம்பி பாலறாவாயன். சேக்கிழார், இரண்டாம் குலோத்துங்க சோழன் என்ற அரசரின் தலைமை அமைச்சராகப் பணியாற்றினார். சேக்கிழாரின் தீவிர சைவப் பற்றும், நாயன்மார் வரலாற்று அறிவும், தமிழ்ப்புலமையும் கண்ட இரண்டாம் குலோத்துங்க சோழனோ அல்லது அவரது மகன் இரண்டாம் இராசராசனோ சேக்கிழாரின் திறம் அறிந்து அவரைப் பெரியபுராணம் பாடச் செய்திருக்கலாம். சீவக சிந்தாமணிக்கு மாறாக எழுந்தது பெரியபுராணம் என்பது பொருந்தாக்கூற்று என முனைவர் மா.இராசமாணிக்கனார் கூறுகிறார். "சேக்கிழார் சிந்தாமணியை நன்றாய்ப் படித்தவர் என்பதற்கு பெரியபுராணத்திலிருந்து பல சான்றுகளைக் காட்டலாம். இங்ஙனம் அந்நூலை நன்றாய்ப் படித்து அனுபவித்த பெரும் புலவராய சேக்கிழார் அதனை வெறுத்தனர் என்றோ, அதற்கு மாறாக அரசனைத் தூண்டி பெரியபுராணம் செய்தார் என்றோ கோடல் பொருத்தமன்று" [1] **(இராசமாணிக்கம்.மா, 2002)** என அறியமுடிவதால் சேக்கிழாரின் சைவப் பற்றும், நாயன்மார் வரலாற்று அறிவும் காப்பியம் படைக்கக் காரணமாக அமைந்தது என அறியலாம்.

**சேக்கிழாரின் சிறப்புகள்**

சேக்கிழார், தொல்காப்பியம், இறையனார் களவியல் உரை, பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, சிலம்பு, மணிமேகலை, சீவகசிந்தாமணி, திருக்குறள், திருவாசகம், திருமந்திரம், சைவசித்தாந்தம் ஆகியவற்றை நன்கறிந்த புலவர். 7 திருமுறைகளை நன்கு கற்றவராதலும் , வல்லார் வாய் கேட்ட செய்திகள், கல்வெட்டுகள் ஆகியவற்றின் துணைக்கொண்டு பெரியபுராணம் எனும் வரலாற்றுக் காப்பியத்தைப் படைத்தளித்தார்.

**பெரியபுராணம் தோன்றுவதற்கு முந்தைய நிலை**

நாயன்மார்கள் வாழ்ந்த காலத்தில் சமணமும் புத்தமும் பரவி இருந்தன. கி.பி.7 நூற்றாண்டு வரை சமணம் புகழ் பெற்று விளங்கியது. பின்னர் சைவமும், வைணவமும் வளர்ச்சி பெற்றது. கி.பி.9 நூற்றாண்டில் பல்லவ நாடு சோழப்பேரரசின் கைகளில் இருந்தது. சோழர்கள் சைவர்களாதலாலும் கோவில்களில் நாயன்மார்களின் சிலைகள், ஓவியங்கள் எனப் பெருகியது. இராசராசன், நம்பியைக்கொண்டு முதல் ஏழு திருமுறைகளைத் தொகுத்தான். சுந்தரர் பாடிய திருத்தொண்டர் தொகையை அடியொற்றி நம்பி,

திருத்தொண்டர் திருவந்தாதி இயற்றினார். நம்பிக்குப் பிறகு சமுதாயத்தில் மக்கள் நாயன்மார் வரலாறுகளை அறிந்திருந்தனர். அவர்களுடைய பெயர்களை குழந்தைகளுக்கு வைத்து மகிழ்ந்தனர். நாயன்மார் வரலாற்று நிகழ்வுகள் சிற்பங்கள், ஓவியங்கள் மூலமாகப் பரப்பப்பட்டது. திருமுறைகள் பலராலும் படிக்கப்பட்டது. நாயன்மார் உருவச் சிலைகளுக்குப் பூசையும் விழாவும் நடைபெற்றது.

சேக்கிழார் பெரியபுராணம் பாடிய காலம் கி.பி.1113 - 1150. வைணவ சமயம் ஒருபுறம் மேலோங்கி இருந்தது. இராமானுசர் புகழ் பெற்ற வைணவராக இருந்தார். இராமானுசருக்கும் குலோத்துங்கச் சோழனுக்கும் இடையே சைவ வைணவக் கருத்துப்போர் இருந்தது. அது சமூகப் பிரச்சினையாக மாறியது. தில்லையில் இருந்த கோவிந்தராசர் சிலை புதுப்பிப்புப் பணிகளுக்காக இடமாற்றம் செய்ததும், வைணவர்கள் எதிர்ப்பும் இருந்த காலகட்டம் என்பதனையும் கருத்தில் கொள்ளவேண்டும். பின்னர் தோன்றிய சேக்கிழார் இவை அனைத்துச் செய்திகளையும் மனத்தில் புகுத்தி பெரியபுராணம் எனும் புதியதொரு காவியமாகப் படைத்துள்ளார்.

**பெரிய புராணத்தின் வரலாற்றுப் பின்னணி**

1. நாயன்மார்கள் வாழ்ந்த காலம் ஏறத்தாழ கி.பி.400-865
2. சுந்தரர் காலம் ஏறத்தாழ கி.பி.840-865
3. நம்பியாண்டார் நம்பி காலம் ஏறத்தாழ - கி.பி.985 -1014
4. சேக்கிழார் பெரியபுராணம் பாடிய காலம் கி.பி.1113 -1150

இடைப்பட்ட இந்தக் காலகட்டமான 700 ஆண்டுகளில் 1. களப்பிரர் இடையீட்டுக்காலம் கி.பி.400 - 600. 2. பல்லவர் காலம் கி.பி.400 - 900 மற்றும் 3. பிற்காலச் சோழர்களின் காலம் கி.பி.900 - 1113. இவற்றுள் முதல் இரண்டு காலகட்டங்களே 63 நாயன்மார்கள் வாழ்ந்த காலம் என முனைவர் மா.இராசமாணிக்கனார் குறிப்பிடுகிறார்.

**கூட்டு அடி மன உணர்வு**

சிக்மண்ட் ஃபிராய்டு மனதை மூன்று வகையாகப் பகுத்தார்.

1. நனவு நிலை (conscious )
2. நனவடங்கு நிலை (sub-conscious)
3. நனவிலி நிலை (un conscious)

பனிப்பாறையின் வெளித்தெரியும் உச்சிப் பகுதிபோல் மனிதனின் நனவு மனம் உள்ளதென்றும் வெளியே தெரியாத அடிப்பகுதிபோல் அவனது நனவிலி மனம் அமைந்து அவனை ஆள்கிறது என்றும் ஃபிராய்டு கருதினார்.

ஆனால் நனவிலி எனப்படும் ஆழ் மனதில் தனி மனித அனுபவங்கள் மட்டுமே உள்ளன என்னும் ஃபிராய்டின் கருத்தை சி.ஜி.யுங் மறுக்கிறார். “சமூக மதிப்புகளும், தொல் மனித அனுபவச் சாயல்களைக் கொண்ட நனவிலி மனத்தை கூட்டு அடி மன உணர்வு (collective unconscious) என யுங் அழைத்தார்.”[2] **(பாத்திமா சூசைமணி**, 2007) ஆழ்மனதில் தனிமனித அனுபவங்களோடு ஆதி மனித அனுபவங்களும் காலம் காலமாய் சமூகம் வலியுறுத்திவந்த மதிப்புகளும், உலகளாவிய மதிப்பீடுகளும் உள்ளடங்கி இருக்கின்றன என்ற கருத்தை சி.ஜி.யுங் முன்வைக்கிறார். காலத்தாலும் தூரத்தாலும் விலகியிருந்த

இடங்களில் தோன்றிய இலக்கியங்களின் புனைவுக்கூறான மனப்படிமங்கள் ஒத்திருப்பதை தன் கொள்கைகளுக்குச் சான்றாகக் காட்டினார்.

**நனவிலி மனத்தின் மரபு சார்பு**

மனிதனின் ஆழ்மனத்தில் தனிமனித எண்ணங்களோடு சமூக ஓட்டங்களும் பதிவாகியுள்ளன என்கிறார் யுங். இதைத் தொகை நனவிலி அல்லது கூட்டு எண்ணப்பதிவு என்றழைக்கிறார். மனித மன ஆழத்தில் தொகை நனவிலியில் படிந்து கிடக்கும் படிவங்கள் படைப்பாளியால் வெளிப்படுகின்றன. படைப்பவன் தனிமனிதன் ஆயினும் படைப்பு என்று வரும்போது அவன் தொகை மனிதன் (collective man) ஆகிறான்.

**படைப்பாளியின் ஆளுமை**

மனித ஆளுமையைப் பசி, தாகம், பாலியல் தேவை எனும் அடிப்படை இயல்பூக்கங்களே தீர்மானிக்கின்றன என்பது ஃபிராய்டின் கோட்பாடு. ஆனால் நனவிலியில் பதிந்துள்ள மூலப்படிவங்களே மனித ஆளுமையில் செல்வாக்கு செலுத்துவதாக யுங் கருத்துரைத்தார். கடந்த கால அனுபவம் மட்டுமின்றி எதிர்காலம் குறித்த கற்பனையும், எதிர்பார்ப்பும் ஆளுமை உருவாக்கத்திற்கு உதவுகின்றன என்றார்.

இவ்விருவர் கருத்திலும் வேறுபட்டு, "சமூக ஆர்வமும், உயர்வை நோக்கிய உந்துதலுமே ஒரு மனிதனின் வாழ்வுப் போக்கை (Life style) உருவாக்குகின்றது" [3] (**பாத்திமா சூசைமணி**, 2007) என்றார் ஆல்பிரட் அட்லர் (Alfred Adler). யுங் மற்றும் அட்லரின் கருத்துகளின்படி ஆளுமை மிக்க தலைமை அமைச்சராகப் பணியாற்றிய சேக்கிழார், நாயன்மார் வரலாற்றைக்கூற இரண்டாம் குலோத்துங்கனோ அவர் மகன் இரண்டாம் இராசராசனோ சேக்கிழாரின் புலமை அறிந்து காப்பியம் படைக்க வேண்டினார். சேக்கிழார் மனத்தில் இருந்த தொல் மனித அனுபவ சாயல்களும், அக்காலத்து சமூக மதிப்புகளும், சமூக உயர்வை நோக்கிய உந்துதலும் கலந்து படைப்பாளி எனும் தொகை மனிதனாகவே அவர் பெரியபுராணம் படைத்துள்ளார்.

**ஆக்கத்திறன் (அ) படைப்பாற்றல்**

ஒருவன் தன் சூழ்நிலையில் கொண்டிருக்கும் விழிப்புணர்வு ஆக்கத்திறனுக்கு அடிப்படையாக அமைகிறது. சூழ்நிலையில் ஏதோ ஒன்று குறைவதால் அங்கு பிரச்சினை எழுகிறது. இது ஆக்கத்திறனாளனுக்கு புதிய படைப்பைப் படைக்கும் உணர்ச்சியை உந்துகிறது. ஆக்கத்திறன் என்பது "அறிவுநிலை, ஊக்கநிலை, மெய்ப்பாட்டுநிலை போன்ற பல செயல்களின் இணைப்புச் சேர்க்கையாகும்."[4] **(உளவியல் , 1978)**

"பயனுள்ள முறையில் ஆக்கச் சிந்தனை அமைவதற்கு உதவக்கூடிய பல்வேறு பண்புகள், ஆற்றல்கள் ஆகியவற்றின் தொகுப்பை நாம் ஆக்கத்திறன் எனக் குறிப்பிடலாம். பழைய எண்ணங்களை புது வடிவத்தில் அமைப்புறச் செய்தலும், பழைய எண்ணங்களிடையே புதுத் தொடர்புகளைக் காணுதலும் ஆக்கச் சிந்தனையினால் உருவானதாகும்." [5] **(சரவணக்குமார், ஏ.ஆர்,** 2019)

மேற்கண்ட கூற்றுகளின்படி தன் காலச் சூழலில் சைவத்தில் ஏற்பட்ட குறை அவரைக் காப்பியம் படைக்க உந்தியது. அதற்கு தனது தமிழ்ப்புலமையும், சைவ சிந்தாந்த அறிவும், இலக்கிய அனுபவமும் ஆக்கத்தையும் ஊக்கத்தையும் தந்தது. திருத்தொண்டர் தொகை எனும் சுந்தரர் நூலையும், திருத்தொண்டர் திருவந்தாதி எனும் நம்பியின் நூலையும் தன் ஆக்கச்சிந்தனையால் இணைத்து புதிய வடிவத்தில் காப்பியமாகப் படைக்கும் படைப்பாளியாக மாற்றியது.

**படைப்புச் சிந்தனையின் ஐந்து படிநிலைகள்**

"மெக்கினான்(Mackinnon) ஆக்கத்திறன் செயல்முறையில் ஐந்து முக்கிய நிலைகளை வலியுறுத்துகிறார்." [6] **(உளவியல் ,** 1978)

1. **ஆயத்தம்** - வாழ்வின் சிக்கல்களைத் தேர்வு செய்து அவை தொடர்பான சிந்தனைக்கு வரையறை செய்தல்- ஒருமுகப்படுத்துதல்- விவரங்களைச் சேகரித்தல்-

சேக்கிழார், நாயன்மார்களின் வரலாற்றை அரசன் அறியாமலிருப்பது அதனை விளக்க, தான் அறிந்த செய்திகளையும் அறியாத செய்திகளையும் சேகரிக்கத் தொடங்கியது.

2. **உள் வளர்ச்சி** - இந்நிலையில் பிரச்சினை தொடர்பான செயல்கள் வெளிப்படுத்தாமல், முன் அனுபவத்தையும் பெறப்பட்ட தகவல்களையும் உள்வளர்த்து புதிய கோணத்தில் இணைத்து சிந்திப்பதாகும். நம்மையும் அறியாமல் ஏற்பட்ட உள்வளர்ச்சி காரணமாக கண்டடைந்த தீர்வு அடுத்த நிலைக்கு அழைத்துச்செல்லும்.

சேக்கிழார் பல்வேறுபட்ட காலங்களில் வாழ்ந்த நாயன்மார்களை ஒரு சேரக் காட்டும் முயற்சியில் தன் சைவ சித்தாந்த மற்றும் இலக்கிய அனுபவங்களைப் பயன்படுத்தி தான் திரட்டிய தகவல்களைக்கொண்டு சுந்தரரைக் காப்பிய நாயகனாகப் படைக்க புதிய கோணத்தில் சிந்தித்தல்.

3. **சிக்கல்களிலிருந்து பின்வாங்கும் காலம்** - அகமுகத்தன்மை கொண்டவர்களே பின்வாங்குவர். தன்முனைப்பு கொண்ட படைப்பாளன் புறமுகத்தன்மை கொண்டவனாக இருப்பதால் தன் முயற்சியில் எவ்விதப் பின்வாங்குதலும் அடைவதில்லை.

4. **உள் ஊக்கம்** - உள்வளர்ச்சியின் மூலமாக உட்காட்சி மூலம் திடீர் கருத்துகள் அல்லது தீர்வுகள் தோன்றும். இது முந்தைய நிலையை உறுதி செய்வதாகவோ, சிறு மாற்றங்களை உள்ளடக்கியதாகவோ, புதிய ஒன்றாகவோ இருக்கலாம்.

இலக்கிய அனுபவங்களோடு மட்டும் அமையாமல் நாயன்மார்களின் வரலாற்றை வல்லார் வாய் கேட்டு அறிதலும், திருத்தொண்டர் தொகை, திருத்தொண்டர் திருவந்தாதி ஆகியவற்றை நன்கு அறிந்து கல்வெட்டுச் சான்றுகளால் உறுதிசெய்து புதிய காப்பிய உத்தியைப் பயன்படுத்தல்.

5. **சரிபார்த்தல்** - படைப்பாற்றலின் கடைசி நிலை. சிந்திக்கப்பட்ட தீர்வு சரியானதா? என்று சோதிக்கப்படும். தேவையான திருத்தங்களுடன் தீர்வு முடிவு செய்யப்படும். படைப்புகள் பயனுள்ளதாக ஏற்கப்பட்டால் எல்லோராலும் பயன்படுத்தப்படுகின்றன. படைப்பானது கருத்து வடிவமாகவோ, செயல் வடிவமாகவோ, பொருள் வடிவமாகவோ அமையலாம் என்பதில் பெரிய புராணம் கருத்துவடிவமாக அமைந்துள்ளது. சேக்கிழாரின் பெரியபுராணத்தை இரண்டாம் குலோத்துங்கன் அவர் மகன் மூலமாக அறிந்து மக்கள் அறிய பொதுவெளியில் படைத்திருக்க வேண்டும். ஏனெனில் இராசராசன் அமைத்த தாராசுரக் கோவிலில் சுற்றுச்சுவர்களில் நாயன்மார் வாழ்க்கைச் சிறப்புடைய காட்சிகளும், அதுகுறித்த விளக்கமும் படைக்கப்பட்டுள்ளன. இவற்றிலிருந்து அவரின் படைப்பு எல்லோராலும் ஏற்கப்பட்டு பயன்படுத்தப்பட்டன என்ற படைப்பாற்றலின் கடைசி நிலையை அப்படைப்பு பெறுகிறது.

இப்படிநிலைகள் வரிசைப்படி நடக்கவேண்டும் என்ற கட்டாயம் இல்லை.

**முடிவுரை**

ஒரு படைப்பாளன் தான் வாழும் சூழலில் உள்ள சிக்கலை உற்றுநோக்கி அப்பிரச்சினையைத் தீர்க்க மன எழுச்சி கொள்கிறான். தன் ஆக்கத்திறனைப் பயன்படுத்தி பழைய எண்ணங்களுக்கு புதுமை வடிவத்தை தன் திறன்கள் மூலமாக படைக்கிறான். இலக்கியப் படைப்பாளன் ஒரு தொகை மனிதனாக தான் படைக்கும் படைப்பில் தன் காலச் சமூக மதிப்புகளையும், தான் காண விரும்பும் சமுதாயத்தையும் படைத்து சமூக மாற்றத்திற்கான வித்தை விதைக்கிறான். அவ்வகையில் சேக்கிழாரின் காலச் சூழல் தந்த பிரச்சினையும்; அவருக்குள் ஏற்பட்ட மன எழுச்சியும்; அப்பிரச்சினைக்கானத் தீர்வாக ஒரு காப்பியம் படைக்க முனைந்து பழைய எண்ணங்களுக்கு புதிய தொடர்புகளைத் தந்து தன் தமிழ்ப்புலமையாலும், சைவ சித்தாந்த அறிவாலும், பரந்துபட்ட கலை அறிவாலும் படைத்ததே பெரியபுராணம் எனும் காப்பியமாகும்.

**மேற்கோள்கள்**

1. இராசமாணிக்கம்.மா, 2002, பெரிய புராண ஆராய்ச்சி, அலமு பதிப்பகம், சென்னை-14.
2. பாத்திமா சூசைமணி, 2007, தமிழ்ப் புனை கதைகளில் உளவியல், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
3. மேலது,
4. உளவியல், 1978, மேல்நிலை முதலாமாண்டு, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை.
5. சரவணக்குமார், ஏ.ஆர், 2019, கல்வி உளவியல், சான்லாக்ஸ் பதிப்பகம், மதுரை
6. உளவியல், 1978 , மேல்நிலை முதலாமாண்டு, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை.

**<u>குறிப்புதவி நூல்கள்</u>**

1. கலாமணி. த, 2018, இலக்கியமும் உளவியலும் , ஜீவநதி வெளியீடு, இலங்கை .
2. நா.வானமாமலை, 1999, இலக்கியத்தில் உள்ளடக்கமும் உளவியலும், மக்கள் வெளியீடு, சென்னை.
3. த. சில்வா, 1976, உளவியல் மூலக்கோட்பாடு தொகுதி -1, கல்வி வெளியீட்டுத் திணைக்களம், கொழும்பு.
4. சாரதாம்பாள்.செ, 2004, இலக்கியமும்-உளப்பகுப்பாய்வும், ஹரிஹரன் பதிப்பகம், நாகமலை, மதுரை,2004

ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# கவிக்கோவின் கஸல் கவிதைகளில் வெளிப்படும் உளவியல் சிந்தனைகள்

16

**முனைவர் ஜா.சலேத், உதவிப்பேராசிரியர்**
**தமிழாய்வுத்துறை, தூய வளனார் கல்லூரி,**
**திருச்சிராப்பள்ளி**

**ஆய்வுச்சுருக்கம்**

கஸல் என்னும் கவிதை வடிவம் அராபிய மொழியில் தோன்றி தமிழில் வளர்ச்சி பெற்று வரும் முக்கியமான கவிதை இலக்கியமாகும். பத்தாம் நூற்றாண்டில் தோன்றிய இவ்வகைக் கவிதையின் வளர்ச்சி இன்று உலகத்தின் பலநாடுகளை, பல மொழிகளை எட்டியுள்ளது. அத்தகைய கஸல் கவிதையினூடே பிரதிபலிக்கும் மன உணர்வின் வெளிப்பாடுகள் இக்கட்டுரையில் ஆராயப்படுகின்றன.

**கலைச்சொல்லாக்கம்:** சைக்கி, லோகஸ், நனவு மனம், இடைநிலை மனம், நனவிலி மனம்

**முன்னுரை**

கஸல் அராபிய மொழியிலிருந்து தோன்றியதாகும். ”கஸல் என்றாலே காதலியுடன் பேசுதல் என்று பொருள்.” (அப்துல்ரகுமான், மின்மினிகளால் ஒரு கடிதம், (2004) ப.3) கஸல் பெரும்பாலும் காதலினால் ஏற்பட்ட சோகத்தையே பாடுவதாக அமையும். கஸல் பழமையான வடிவமாகும். இது பத்தாம் நூற்றாண்டில் பாரசீகக் கவிதைகளிலிருந்து தோன்றியதாக அறியப்படுகிறது. முன் இஸ்லாமிய அரேபிய வடிவத்திலிருந்து வருவிக்கப்பட்ட ‘கஸிதா’ என்ற பாரசீக வடிவத்திலிருந்து தோன்றியது.

உருதுவில் கஸல் செல்வாக்குப் பெறத் தொடங்கியபின் உலக அரங்கிற்கு வரத் தொடங்கியது. “உருதுக் கவிதையில் கஜல் புகழ்பெற்ற நுணுக்கமான அழகிய யாப்பு வடிவம்” (அப்துல்ரகுமான், இல்லையிலும் இருக்கிறான், (2006) ப.60) என்று அப்துல் ரகுமான் குறிப்பிடுகிறார். 12ஆம் நூற்றாண்டில் சுல்தான்களின் ஆட்சியாலும், சூஃபி தத்துவத்தாலும் இந்தியாவில் பரவியது. உருது கவிதையின் வடிவமாக கஸல் இருப்பினும் பல மொழிகளின் கவிதைகளை இது பாதித்துள்ளது. உருது பாடலில் இருந்து தோன்றிய போதிலும் இதில் வசனத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

கஸல் இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் பொதுப்பாடலாக அமைந்துள்ளது. இதன் பாடுபொருள் பற்றிப் பார்க்கும்போது, கஸல் என்பது மது, காமம், தெய்வீகக் காதல் மட்டுமே உள்ளடக்கியதன்று. ஆங்கிலத்தைப் போல் மிகப் பரந்த பாடுபொருளைக் கொண்டது என்பதை அறிய முடிகிறது. வடிவம் மட்டுமே எந்தவொரு மொழியிலும் தன்னிச்சையாகக் காணப்படும் என்று கூறும் அளவிற்குப் பல்வேறு மொழிகளில் இது சிறப்பாகப் படைக்கப்பட்டுள்ளது. தமிழில் இந்த வகைக் கவிதையை அறிமுகப்படுத்தியவர் கவிக்கோ அப்துல்ரகுமான் ஆவார்.

**படைப்பு உளவியல்**

சைக்கி, லோகஸ் என்னும் இரண்டு கிரேக்கச் சொற்களே ஆங்கிலத்தில் ஒரே சொல்லாகி, பின் தமிழில் 'உளவியல்' என வழக்கு பெற்றது. 'சைக்கி' என்னும் சொல் ஆன்மா என்ற பொருளையும் 'லோகஸ்' என்பது அறிவு என்ற பொருளையும் குறிக்கின்றன. அதாவது மனத்தில் உருவாகும் உணர்வுகளைப் பகுத்தறிவதாக உளவியல் அமைகிறது. முதலில் தத்துவவியலாகத் தொடங்கிய உளவியல் பின்பு அறிவியல் இயலாக உருமாற்றம் பெற்று இன்றைய நிலையை அடைந்துள்ளது.

சாக்ரடீஸ், பிளேட்டோ போன்ற தத்துவவாதிகள், முன்பே தம்முடைய கருத்தை வெளியிட்டிருந்தாலும், மனத்தத்துவங்களைப் பற்றிய செய்திகள் முதன்முதலில் கிடைக்கும் நூல் அரிஸ்டாட்டில் எழுதிய 'ஆன்மாவின் இயல்புகள்' என்பதே ஆகும். மனிதனின் வெளிப்புறத்தில் செயல்படுகின்ற செயல்கள் அனைத்துக்கும் அடிப்படையாக அமைவது அவனுடைய உள்மன இயக்கமேயாகும்.

மனித மனத்தின் ஆழத்தில் உள்ள எண்ணங்களை, ஏக்கங்களை, கனவுகளைக் கட்டுப்பாடுகளைத் திட்டங்களை அறிவியல் அடிப்படையில் பகுத்து அதனடிப்படையில் மனத்தின் நிலையைக் கண்டறியும் தத்துவவியலே உளவியல் எனப்படுகிறது.

**மனித மனம்**

சமூகக் கட்டமைப்பு என்பது அதனூடே பயணிக்கும் மனிதர்களின் சேர்க்கையே ஆகும். தனித்தனியாகச் செயல்படக்கூடிய அளவில் மனிதனின் மனம் அமைந்திருந்தாலும் சமூகத்தின் கட்டுப்பாடுகளை உள்வாங்கி, அதன்படி நடப்பதிலேயே அதன் கவனம் அமைந்திருக்கிறது. புதிர்போல் செயல்படக்கூடிய மனத்தின் நடத்தைகளாலே மனிதனுடைய மதிப்பு அளவிடப்படுகிறது. மனத்தினுடைய எண்ண ஓட்டங்களே அவனைச் சமூகத்தளத்தில் இயங்க வைக்கிறது. மனத்தின் எண்ண ஓட்டங்கள் தடைபடுகிற போதோ, வேகமாக இயங்குகிறபோதோ, திரும்பத் திரும்பக் குறிப்பிட்ட இரு புள்ளிகளுக்கிடையே சுழலும்போதோ தான் மனிதன் இயல்பு நிலையிலிருந்து பிறழ்கிறான். "*மரபும், சூழ்நிலையும் ஆகிய இரண்டுமே மனித நடத்தை எழக் காரணமாய் அமைகின்றன.*" [பலராமன், (1999) ப.34] என்கிறார் க. பலராமன்.

**மனம் பற்றித் தமிழ் இலக்கியம்**

உயிர்களைப் பற்றித் தொல்காப்பியர், “ஆறறிவதுவே அவற்றோடு மனனே” என்றும், “மக்கள் தாமே ஆறறிவுயிரே...” என்றும் கூறுவதன் மூலம் மனம் என்பது மனிதனின் அடிப்படை என்பது தெளிவாகப் புலனாகிறது.

***புறத்துறுப்பு எல்லாம் எவன் செய்யும் யாக்கை***

***அகத்துறுப்பு அன்பி லவர்க்கு*** **(குறள்-70)**

மனம் என்பது மனிதனுள் காணலாகும் ஒரு கூறு என்று வள்ளுவர் உணர்ந்து, மனத்தின் செயலை ‘அகத்துறுப்பு’ என்று கூறுகிறார்.

***கண்டவர் இல்லென உலகத்துள் உணராதவர்***

***தங்காது தகைவு இன்றித் தாம் செய்யும் வினைகளுள்***

***நெஞ்சார்ந்த கொடியவை மறைப்பினும் அயலவர்***

***நெஞ்சத்துக் குறுகிய கரி இல்லை*** **(கலித்.நெய்தல்.8)**

யாரும் பார்க்கவில்லை என்பதனால் தம்முடைய தவறான செயல்களைப் பிறரிடம் மறைக்கலாம்; ஆனால் தம்முடைய மனத்திடமிருந்து குற்ற உணர்வை மறைக்கவே இயலாது என்பதை மேற்கண்ட கலித்தொகைப் பாடல் உணர்த்துகிறது. இதைப்போன்று குறுந்தொகை, புறநானூறு ஆகியவற்றிலும் மனத்தினைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. சைவத்திருமுறைகளிலும், ஆழ்வார்களின் திவ்விய பிரபந்தங்களிலும் மனம், உளம், அகம் பற்றிய குறிப்புகள் காணக் கிடைக்கின்றன.

பாரதியின் பாடல் தொடங்கி இன்றைய இலக்கியங்கள் வரையிலான இக்கால இலக்கியங்களில் மனத்தைப் பற்றியும் அதன் உறுதி, வேகம், திறன் ஆகியன பற்றியும் பல்வேறு பார்வைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மனத்தைக் குறிப்பதற்கு அகம், மனம், ஆன்மா என்பதாகப் பல்வேறு சொல்லாடல்கள் பயன்படுத்தப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| அகம் | - | உடலின் உள்ளே அமைந்த மனம் |
| மனம் | - | சிந்திக்கச் செய்வதற்காக உள்ளே இருப்பது |
| ஆன்மா | - | மனம், அறிவு, புலன்களின் செயல்களின் கூட்டு |

ஆக மூன்றுமே மனிதனுக்குள்ளே இருந்து அவனைச் சமூகத்தின் திட்டமிடப்பட்ட எல்லைக்குள் செயல்பட உதவுவனவாகும். இவை மூன்றும் ஒன்றே என்றும் ஒன்றுக்கொன்று பிரிக்க இயலாத்

தொடர்புடைய கூட்டு என்றும் உளவியலாளர் கருதுகின்றனர். *தத்துவார்த்த அடிப்படை, எண்ண அடிப்படை, மூளை நரம்பு மண்டல அடிப்படை என்னும் மூன்று நிலைகள் மனத்தில் உள்ளன. இந்த மூன்று நிலைகளிலும் மனம் என்பது பெரிதும் சர்ச்சைக்குரிய வெவ்வேறான பொருளில் வாழ்ந்து கொண்டிருக்கிறது*. [அரங்க நலங்கிள்ளி, (1992) ப.116]

**மனத்தின் வகைகள்**

மனித மனம் மூன்று நிலைகளில் செயல்படுகிறது என்பது உளவியல் அறிஞர்களின் கருத்து ஆகும்.

1. நனவு மனம்
2. இடைநிலை மனம்
3. நனவிலி மனம்

**நனவு மனம்**

மனிதனின் ஒரு செயல் முழுமை அடைவதற்கு முன்பே அவனுடைய மனமானது முன்பு நடந்த நிகழ்ச்சியொன்றை மீட்டுருவாக்கி மனக்கண்முன் கொண்டு வந்து நிறுத்துகிறது. இதுவே நனவு மனம் அல்லது வெளிமனம் எனக் கூறப்படுகிறது.

"*நனவு மனம் ஓயும் போது நனவிலி மனம் தன்னை வெளிப்படுத்திக் கொள்வதைக் கனவு என்கிறது ஃபிராய்டியம்*" [சிக்மண்ட் பிராய்ட், நாகூர்ரூமி (மொ.பெ.), (2004), ப.18]

**இரவில் கனவும்**

***பகலில் நினைவும்***
***சிறகுகளாகின்றன***
***உன்னிடம் நான்***
***பறந்து வர*** **(மின். ப.89)**

மேற்கண்ட இந்த நனவு, நனவிலி மற்றும் கனவு இம்மூன்றும் ஒன்றுக்கொன்று பின்னிப் பிணைந்துள்ளன என்பதைக் கஸல் கவிதைகளுள் அடையாளம் காணமுடிகிறது.

**இடைநிலை மனம்**

"உணர்வுத் தளத்திற்கும் அப்பால் உள்ள உணர்வு சார்ந்த மனமே இடைநிலை மனம்" என்று விளக்கப்படுகிறது. இது மனத்தின் இயல்பான நிலைக்கு அப்பாற்பட்டதாக இருக்கிறது. இது உள்மனம் என்ற சொல்லாலும் குறிக்கப்படுகிறது. "*மனதிற்குள் பதிவு செய்து கொள்ளப்பட்ட பதிவுகள் எப்பொழுது நமக்குத் தேவையோ அப்பொழுது நம் மனம் அவற்றை நினைவிற் கொண்டுவரும் தன்மையினை இடைநிலை என்கிறோம்* " [அரங்க நலங்கிள்ளி, (1992) ப.10]

**நனவிலி மனம்**

நனவிலி மனம் அல்லது ஆழ்மனம் என்பது மனிதனுக்குள்ளே இருக்கும். எதிர்பார்ப்பு அல்லது நிறைவேறாத விருப்பம் ஆகியவற்றைக் கனவாக்கித் தூண்டுதலால் மனிதனிடம் நினைவுபடுத்துகிறது. "*கனவு தானாக எதையும் தூண்டுதலால் மனிதனிடம் நினைவுபடுத்துகிறது. கனவு தானாக எதையும் சொல்வதில்லை. நனவு வாழ்வின் அனுபவங்களிலிருந்தே அது காட்சிகளை அமைக்கிறது.*" [அரங்க நலங்கிள்ளி, (1992) ப.140] நினைவுகள் இங்கு குறியீடுகளாக வெளிப்படுகின்றன.

***நீ***
***நிறைவேறாத***
***ஆசையாக இரு***
***அப்போதுதான்***
***நீ***
***என் இதயத்தில்***
***எப்போதும் இருப்பாய்*** **(மின். ப. 89)**

மனிதனுடைய நிறைவேறாத ஆசைகள் அவனுடைய கனவின் மிச்சங்களாக வெளிப்படும். தன் காதலி நிறைவேறாத ஆசையாக இருந்தால்தான் அவள் தன் நனவிலி மனத்தில் இருந்து கனவுகளில் வெளிப்படுவாள் என்னும் உணர்வைக் கஸல் கவிதையில் காணமுடிகிறது.

**மனதின் உணர்ச்சியின் வகைப்பாடுகள்**

மனித மனத்தினை ஆராய்ந்த ஃபிராய்டு அதனுள் உருவாகின்ற உணர்ச்சிகளை மூன்று வகையாக அடையாளப்படுத்தினார்.

1. இயற்கை உணர்ச்சி
2. தன்னுணர்ச்சி
3. பண்பாட்டு உணர்ச்சி

**இயற்கை உணர்ச்சி**

'இட்' என்ற சுருக்கக் குறியீடால் சுட்டப்படும் இந்த உணர்ச்சி இயற்கை உணர்ச்சி, விலங்குணர்ச்சி, இச்சை உணர்ச்சி என்று பொருள்படும் வகையில் கூறப்படுகிறது. நனவிலி மனத்துள் கிடக்கும்

உணர்ச்சிகளை இயற்கை உணர்ச்சி என்று ஃபிராய்டு அழைத்தார். இச்சை உணர்ச்சி பால்தன்மை சார்ந்தது என ஃபிராய்டு கண்டார்.

கஸல் கவிதைகளை இந்த வகை உணர்ச்சியில் அடக்க இயலவில்லை. காதலின் உணர்வைக் கூறுவதிலேயே அதன் கவனம் அமைந்திருக்கிறதே தவிர பாலுணர்ச்சியைப் பதிவு செய்வதில் அல்ல. இதே கருத்தை அப்துல் ரகுமான் தம் உரையில் *"இந்த வயதில் காதல் கவிதைகளா எனக் கேட்டார்கள். இந்த வயதில் தான் காதல் கவிதைகள் மாமிச அழுக்கில்லாமல் தூய்மையாக உதிக்கின்றன"* [அப்துல்ரகுமான், மின்மினிகளால் ஒரு கடிதம், (2004) ப.4] என்கிறார். ஆக கஸல் கவிதைகளில் உள்ளத்துள் ஏற்படுகிற காதல் உணர்ச்சி கூறப்படுகிறதே தவிர விலங்குணர்ச்சி அல்லது இச்சை உணர்ச்சி என்று கூறப்படவில்லை.

**தன்னுணர்ச்சி**

இச்சை உணர்ச்சியிலிருந்து வளர்ச்சி பெற்றதே தன்னுணர்ச்சி ஆகும். இது இச்சை உணர்ச்சியின் வேகத்தைக் கட்டுப்படுத்தித் தடைபோட்டுச் சமூகத்தின் கவனத்திற்கேற்பத் திட்டமிட்டு வெளியே அனுப்பும். *"இது சமூகப் பண்பாட்டு அங்கீகாரங்களை இச்சை மன விருப்பின்மீது திணித்து அதன் உண்மை இயல்பை மாற்றும் தன்மையது"* [அரங்க நலங்கிள்ளி, இலக்கியமும் உளப்பகுப்பாய்வும், (1992) ப.37] என்று அரங்க நலங்கிள்ளி விளக்கம் தருகிறார்.

**பண்பாட்டு உணர்ச்சி**

பண்பாட்டு உணர்ச்சி என்பது சமூகத்தின் சட்ட திட்டங்கள், தர்மங்கள், மனிதனால் குறிக்கப்பட்ட விதிகள், விதிவிலக்குகள், கொள்கைகள், கோட்பாடுகள், இறைமை, ஆண்மை, பெண்மை ஆகிய வகைப்பாடுகளை ஏற்றுக்கொண்டு வெளிவரும் தன்மையுடையது. இந்த வகை உணர்ச்சி வலுவான திறன் மிக்கது. இதை மிகைத் தன்னுணர்ச்சி என்றும் அழைப்பர். இந்த உணர்ச்சிகள் ஆளுமைத் திறன்மிக்கவையாக அமைகின்றன. ஆளுமைப் பண்பு, சமூகப் பார்வை என்பதை உள்வாங்கி வெளிப்படும் கவிதையாக இது அமைகிறது.

**கஸல் கவிதைகளில் மன உணர்வுகள்**

மனமானது பல்வேறு வகையான உணர்வுகளை உருவாக்குகிறது. இதனடிப்படையிலே மனித மனம் சஞ்சலமுடையது என்றும் கூறுவர். நிலையானதாக மனம் அமையாமல் வெவ்வேறு பரிமாணத்துடன் மனம் செயல்படுகிறது. மனத்தைப் பழக்கங்களின் கூட்டமைப்பு என்றும் கூறுவர். இத்தகைய மனவுணர்வுகளின் பல்வேறு வெளிப்பாடுகளைக் கஸல் கவிதைகளில் காணமுடிகிறது.

**தேடல்**

தேடல் என்பது மனித மனத்தின் மிக முக்கியமான உணர்வு. பிறப்பு முதல் இறப்பு வரை மனம் எதை எதையோ தேடிக் கொண்டேதான் இருக்கிறது. காதலில் தேடல் மிகத் தேவையானதாகிறது. தேடல் குறித்த மன உணர்வில் அமைந்த ஏராளமான கவிதைகள் இந்தத் தொகுப்புகளில் உள்ளன. கவிதைகள் காதலியை, இறைவனை, நினைவுகளைத் தேடுவதாகப் படைக்கப்பட்டுள்ளன.

**நன்றி**

ஒவ்வொரு செயலுக்கும் நன்றி சொல்வதென்பது பகுத்தறிவு வழி நடக்கும் தூண்டல் ஆகும்.

***நான் பிறப்பதற்குமுன்***

***இருந்த இடத்தை***

***நீ ஞாபகப் படுத்துகிறாய்*** **(மின். ப. 8)**

இறைவன் தன்னை உருவாக்கியதால் அவனிடம் சங்கமிப்பதற்காகக் காத்துக் கொண்டிருப்பதாகக் கூறி அவனைக் குறித்த நன்றியுணர்வில் இந்தக் கவிதை நோக்குகிறது.

**வியப்பு**

***உன் கண்***
***அதிசயமானது***
***அது***
***வண்டாகவும் இருக்கிறது***
***பூவாகவும் இருக்கிறது*** **(மின். ப. 42)**

வியப்பாகிப் பேசுகிற கவிதைகள் பெரும்பாலும் மனிதக் காதலியோடு பேசும் கவிதைகளாகவே வந்துள்ளன. இவை தவிர காத்திருத்தல், தீர்க்கமான மனம், இரத்தல், வழிநடத்தல், ஏமாற்றம், பிரிவு, பெருமிதம், அச்சம். மனநிறைவு, எதிர்பார்ப்பு, வெறுப்பு, நம்பிக்கை, கலக்கம், மகிழ்ச்சி, தேடல், சரண், குழப்பம், தோல்வி, கோபம், தேற்றுதல், ஏளனம், எச்சரிக்கை, நியாயம் கேட்டல், தெளிவு போன்ற பல்வேறு மன உணர்வுகளை இக்கவிதைகளில் அடையாளம் காணமுடிகிறது.

**காதல்**:

காதல் என்பது இயற்கையானது. மனத்தின் மிக முக்கியமான உணர்வே காதல். வாழ்வின் அடிப்படையான பகுதி காதல் என்பதால் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் பட்டியலில் முன்னோர்கள் காதலுக்குத் தனி இடம் தந்தனர். இன்பம் என்பது இன்பத்தையே குறிக்கும். இதனையே தொல்காப்பியர்,

***இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு***

***அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கில்*** (தொல்.களவியல்-89)

என்று கூறுகிறார். முறையற்றதைக் காதல் என ஏற்றுக்கொள்வது இல்லை. அறத்தின்படி செய்வதைத்தான் காதல் என்று ஏற்றுக்கொள்வர். அப்படிப்பட்ட காதல் உணர்வில் கஸல் கவிதைகள் அமைந்துள்ளன.

***வாழ்க்கை***

***ஒரு தூக்கம்***

***காதல்***

***ஒரு கனவு*** (மின். ப.54)

என்று அப்துல்ரகுமான் காதலுக்கு ஒரு வரையறை தருகிறார்.

**ஆன்மீகக் காதல்**

சமூகம் இயங்கவும், அன்பு தழைத்தோங்கவும் தாம் தேடிய இறைவனுக்காகப் பாடல்பாடி அவனையே தேடி அலைந்து கொண்டிருந்த ஆன்றோர்கள் தாம் வழிபடும் இறைவனையே தலைவனாக, காதலனாக, தலைமகனாக உருவகித்துப் பாடல்களைப் பாடினர். “தமிழ் இலக்கிய நெடும்பரப்பை நோக்கும்போது சங்க இலக்கியங்களிலும், பிற்கால இலக்கியங்களிலும், அகச்சார்பு இலக்கியங்களிலும் அகச்சார்புக் கருத்துகளே மிகவும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன” என்கிறார் முனைவர் அரங்க நலங்கிள்ளி. அகச்சார்புக் கவிதை வடிவான கஸல் கவிதையில் இறைவனைக் காதலியாக உருவகப்படுத்திக் கவிதைகள் படைக்கப்பட்டுள்ளன.

***காதல் சாளரம்***

***திறந்தேன்***

***கடவுள் தெரிந்தார்*** **(மின் ப. 7)**

***காதல்***

***இறைவனின்***

***இன்னொரு பெயர்*** **(மின். ப. 135)**

“காலத்துக்குக் காலம் வாழ்க்கை மாறிவரும் போது, வாழ்க்கையின் காலடியில் பிறக்கும் சிந்தனைகள் மாற்றமுறும்போது, அவை வெளிப்படும் கலைவடிவங்களும் மாறுபடுகின்றன” [பாலா, (2006) ப.22] என்பார் கவிஞர் பாலா. இதே சிந்தனையைத்தான் கஸல் கவிதையிலும் காணமுடிகிறது. இன்றைய

மனித மனவுணர்வின் வேகமான இயக்கத்திற்கேற்பக் கவிஞர்களின் பார்வையும் மாறியுள்ளது என்பதை அடையாளம் காணமுடிகிறது.

**மனிதக் காதல்**

ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் காதல் எனும் உணர்வு புதைந்து கிடக்கின்றது என்பதை உணரமுடிகிறது. காதல் என்னும் உணர்வு தன்னை மறப்பதைச் சாத்தியமாக்குகிறது. அப்துல்ரகுமான் காதலின் சோகம் என்பது உண்மையில் சோகம் அல்ல சுகம் என்று பதிவு செய்கிறார்.

***அகராதியில் இருக்கும்***

***எல்லா***

***அர்த்தங்களுக்குமான***

***ஒரே சொல் நீ*** (மின். ப. 88)

இவ்வாறு மனவுணர்வின் துடிப்பாக அமைந்திருக்கின்ற காதல் உணர்வைச் சொல்லோவியமாகக் கஸல் கவிதைகளில் காண முடிகிறது.

**தொகுப்புரை**

நனவு மனம், இடைநிலை மனம், நனவிலி மனம் ஆகிய மூன்று மனநிலைகளும் கவிக்கோவின் கஸல் கவிதைகளுள் காணப் பெற்றுள்ளன. காதலியோடு பேசுவதாக அமைந்துள்ள ஆன்மீகக் காதல் மட்டுமன்றி மனிதக் காதலையும் பாடுவதாக இதன் திறன் விளக்கப் பெற்றுள்ளது. மன உணர்வு மற்றும் மன உணர்ச்சிகளின் வகைப்பாடுகள் பொருந்தி வரும் கவிதைகளும் கஸல் கவிதைகளில் காணப்பட்டுள்ளன.

**துணைநூற் பட்டியல்**

1. அப்துல்ரகுமான், இல்லையிலும் இருக்கிறான், நேஷனல் பப்ளிஷர்ஸ், சென்னை, முதல் பதிப்பு 2006.
2. அப்துல்ரகுமான், மின்மினிகளால் ஒரு கடிதம், நேஷனல் பப்ளிஷர்ஸ், சென்னை, முதல் பதிப்பு 2007.
3. அப்துல்ரகுமான், ரகசியப்பூ, நேஷனல் பப்ளிஷர்ஸ், சென்னை, முதல் பதிப்பு 2005.
4. நலங்கிள்ளி.அரங்க, இலக்கியமும் உளப்பகுப்பாய்வும், வாணிதாசன் பதிப்பகம், பாண்டிச்சேரி, முதல்பதிப்பு 1992.
5. பலராமன்.க, உளவியல் நோக்கில் திருக்குறள், திருமால் அன்ட் கோ, சென்னை, முதல்பதிப்பு 1999.
6. பாலா, புதுக்கவிதை ஒரு புதுப்பார்வை, அகரம், தஞ்சாவூர், நான்காம் பதிப்பு 2006.
7. சிக்மண்ட் பிராய்ட், நாகூர்ரூமி (மொ.ஆ.), கனவுகளின் விளக்கம், சென்னை, முதல் பதிப்பு 2004.

ISSN:2582-9599

# பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

## சமூக உளவியல் பார்வையில் தொல்காப்பியமும், திருக்குறளும்.

**முனைவர் து. சவிதா, உதவிப்பேராசிரியர்**
**பூசாகோஅர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி**
**கோயம்புத்தூர்.**
Orcid Id 0000-0002-4443-6290

17

**ஆய்வுச்சுருக்கம்**

இன்றைய சமூகச் சூழல் பலவிதமான சிக்கல்களுக்கு நிலைக்களனாக விளங்குகின்றது. சிக்கல்கள் எத்தன்மையன, சிக்கல்கள் தோன்றுவதற்குரிய மூலகாரணம், தீர்ப்பதற்குரிய வழிகள் என்ற நிலையில் நின்று, தற்காலச் சமூக அமைப்பு முறை, பழங்கால சமூக அமைப்பு முறை இரண்டிற்கும் பொதுவான தன்மை, உளவியல் அடிப்படையில் தொல்காப்பியம், திருக்குறள் இரண்டின் வழி ஆராயப்படுகின்றது. இன்றைய சமூக சிக்கல்கள் பெரும்பாலும் பாலியல் உணர்விற்கும், பண்பாட்டு உணர்வுகளின் வெளிப்பாட்டிருக்கும் இடையே ஏற்படுகின்ற மோதலை அடிப்படையாக கொண்டுள்ளன. பண்பாட்டு உணர்வுகளையும், பாலியல் உணர்வுகளையும், முரண்பாடின்றி உளவியல் அடிப்படையில் வெளிப்படுத்துபவை தொல்காப்பியமும், திருக்குறளும் ஆகும். அத்தோடு வாழ்வியல் நெறிமுறைகளை ஆன்மீக அடிப்படையில் தெளிவாகச் சுட்டுவதால் இத்தலைப்பில் இவ்வாய்வு கட்டுரை அமைகிறது.

**ஆய்வு முதன்மைச் சொற்கள்** :தொல்காப்பியம், திருக்குறள், களவு, கற்பு, சமூக உளவியல், அகநோக்கு முறை, கைக்கிளை, ஐந்திணை உளவியல், மெய்ப்பாட்டு உளவியல், வாழ்வியல் இலக்கணம், நாற்பொருள் பயன், ஆன்மீக நெறி.

**முன்னுரை**

தொல்காப்பியம் திருக்குறள் இரண்டும் தமிழ்ப் பண்பாட்டின் கருவூலமாகத் திகழ்கின்றன. இலக்கண நிலையில் தொல்காப்பியமும், இலக்கிய நிலையில் திருக்குறளும், தலைமைச் சிறப்புடையன. இதனால்தான் தொல்காப்பியமும், திருக்குறளும் தமிழின் இரண்டு கண்களாகப் போற்றப்படுகின்றன. எனவே பண்பாட்டுச் செழுமை கொண்ட தமிழ்ச் சமூகத்தைத் தொல்காப்பியம், திருக்குறள் என்ற இரண்டு கண்கள் கொண்டு நோக்குவது பொருத்தமாகும். எனவே இவ்விரண்டும் ஆய்வு களமாக அமைகின்றன.

**சமூக உளவியல்- விளக்கம்**

உணர்ச்சிகளுக்கு இலக்கணம் வகுப்பது என்பது இயலாத ஒன்று. உணர்ச்சிகள் வரையறை அற்றவை. மாறிக்கொண்டே இருப்பவை என்றாலும் தொல்காப்பியர் செய்யுள் செய்வதற்கு என்று மெய்ப்பாடுகளை வகைதொகை செய்து மெய்பாட்டிற்கு இலக்கணம் வகுத்துள்ளார். இதை மிகவும் நுண்மையாக ஆராய்ந்து

பகுத்து உள்ளமை இன்றைய உளவியல் அறிஞர்களாலும் வியக்கப்படுகின்றது "தொன்மையான நாகரிகம் கொண்ட தமிழனது இலக்கிய இலக்கண மரபும் தொன்மையானதுதான். இத்தொன்மையான இலக்கிய இலக்கணங்கள் உள்ளுணர்ச்சிகள் பற்றியே பேசி உள்ளன. ஆயினும் எத்தகைய ஒரு நெருக்கமான வரையறையும் சுட்டவில்லை. ஏனென்றால் மனித உள்ளுணர்ச்சிகள் கட்டுப்பாட்டுக்குள் அடங்காதவை" **(கல்லயாணசுந்தரம்.தெ.மெய்பாடுகள் - ஓர் ஆய்வு(கட்டுரை),ஆய்வுக்கோவை,தொகுதி-2 ப.65)**

மார்கன் என்ற உளவியல் அறிஞர் "உணர்ச்சிகள் தெளிவற்ற வரையறை கொண்டவை பிரித்துணரப்படாதவை ஒன்றோடு ஒன்று பின்னியவை. நிலையாக மாறிக்கொண்டே இருப்பவை" **(கல்லயாணசுந்தரம்.தெ.மெய்பாடுகள் - ஓர் ஆய்வு(கட்டுரை),ஆய்வுக்கோவை,தொகுதி-2 ப.65)** என்று குறிப்பிட்டுள்ளார். மனிதனை வாழ வைப்பதும் வீழ வைப்பதும் அவனது உணர்ச்சிகளே. இந்த உணர்ச்சிகள் தனித்து இயங்காமல் சிந்தனையோடு எண்ணங்களோடு தொடர்பு கொண்டுள்ளன" **(அல்போன்ஸ்.அ., பொய்முகங்கள்,ப.5)** இந்த உணர்ச்சிகளின் ஆற்றலை உணர்ந்து தான் தொல்காப்பியர் இவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்து மெய்ப்பாட்டியல் என்ற இயல் வாயிலாக உணர்ச்சிகளை வகைதொகை செய்து நுண்ணிதின் ஆராய்ந்து விளக்கியுள்ளார்.

**சமூகம் - விளக்கம்**

சமூகம் என்பதற்குப் பல விளக்கங்கள் கொடுக்கப் படுகின்றன என்றாலும் அவை மக்களையும் மக்களின் சுற்றுப்புற வாழ்வையும் குறித்து நிற்கின்றன."சமுதாயத்தையும் சமுதாய அமைப்பையும் உள்ளவாறே கொண்டு அதன் இயக்கப்பாட்டைக் கூறுகளாய் விவரிப்பது சமூகவியலாகும்" **(கைலாசபதி.க.,சமூகவியலும் இலக்கியமும்.,ப14)** "சமூகவியல் மனித ஒழுகலாறு சம்பந்தமானது. தனி மனிதனையும் மனித சமுதாயத்தையும் ஆராய்வதே சமூகவியல் என்கிறோம்" **(கைலாசபதி.க.,சமூகவியலும் இலக்கியமும்.,ப14)**

**உளவியல் - விளக்கம்**

உள் அகவியல் உளவியல். அதாவது உள் அகத்தை ஆராய்வது "உள்ளத்து இயல்புகளையும் செயல்பாடுகளையும் ஆராய்வது உளவியல். அறிஞர் க.த திருநாவுக்கரசு விளக்கம் தரும்போது உள்ளத்தின் இயல்புகளையும் அவற்றின் செயல்பாடுகளையும் பகுத்து, பகுத்து விளக்கும் அறிவியல் துறையிணை 1960 வரையில் உளவியல் என்னும் பெயரால் சுட்டினர். அதன் பிறகு முதன்மையும் தலைமையும் கருதி நடத்தையைப் பற்றிய அறிவியல் உளவியல் எனப் போற்றும் வழக்கம் உண்டாயிற்று" **.(திருமதி.பசுபதி.கு.(தொ.ஆ),திறனாய்வுஅணுகுமுறைகள்,திருநாவுக்கரசு. க.த., உளவியல் அணுகுமுறை கட்டுரை., பக் 110)**என்பர்.

மனிதனுடைய ஆளுமை பிராய்டின் கருத்துப்படி மூன்று நிலைகளாகப்பட்டிருக்கின்றது இந்த மூன்று நிலைகளும் சரிவர உருவானால் மனிதன் முழுமை பெறுகிறான் என்பது பிராய்டு கருத்து.

1. இத்(Id) (pleasure principle) -**இன்பக் கொள்கை**
2. ஈகோ (Ego) (reality principle)-**உண்மைக் கொள்கை**
3. சூப்பர் ஈகோ (super ego) (moral principle)-**நீதிக் கொள்கை**

பசியோடு வருகின்ற ஒருவனை எதையாவது உண்டு உடனே பசியாற்ற தூண்டுவது 'இத்' முறையான உணவை எவ்வழியிலேனும் அடைந்து உண்ணச் செய்வது 'ஈகோ' ஆனால் முறையான உணவை சரியான வழியில் உண்ண உரைப்பது 'சூப்பர் ஈகோ' (**அல்போன்ஸ் .ஆ. மு., நூல்- ப.10-12**) இவ்வாறு மேலைநாட்டார் உளவியலை தனி இயலாக ஆராய்ந்து வருகின்றனர்.

**சமூகமும் உளவியலும்**

சமூகமும் உளவியலும் ஒன்றுக்கொன்று தொடர்புடையன. சமூகம் ஒரு தொகுதி என்றால் உளவியல் அதில் ஒரு பகுதி. சமுதாய கூறுபாடுகள் ஒவ்வொன்றையும் பரிசோதிப்பது உளவியல். "உளவியல் தனியாளின் செயல்களை விளக்குவது, சமூகவியல் குழுக்களின் செயல்களை விளக்குவது, சமூகவியல் சமூகங்கள், நிலையங்கள், சடங்குகள், பழக்கவழக்கங்கள், பண்பாடு, நாகரிகம் போன்றவற்றைக் கூறுகின்றது. உளவியல் சமூகங்களின் உறுப்பினர்களின் செயல்களை ஆராய்கின்றது. சுருங்கக்கூறின் சமூகவியல் குழுவினரின் உள்ளம் இயங்குவதையும், உளவியல் தனியாளின் உள்ளம் செயற்படுவதையும் ஆராய்கின்றது. இதனை ஓர் எடுத்துக்காட்டாய் விளக்குவோம். சட்டசபை தேர்தலில் ஒரு கூட்டத்தார் ஒருவரைத் தேர்ந்தெடுக்கும் தத்துவத்தைச் சமூகவியல் தெரிவிக்கின்றது ஆனால் இதை அறிய வாக்காளர்கள் ஒவ்வொருவரைப் பற்றியும் அறிய வேண்டி உள்ளது, இதை உளவியல் கூறுகின்றது." (**சுப்புரெட்டியார். ந.மு., நூல் ப. 25**) இவற்றால் சமூகவியலின் ஒரு பகுதி உளவியல் என்பது புலனாகும்.

**தொல்காப்பியர் உளவியல் கோட்பாடுகள்**

தொல்காப்பியர் ஒரு மிகச் சிறந்த உளவியல் அறிஞர். இதற்கு அவருடைய மெய்ப்பாட்டியல், அகத்திணையியல், களவியல், கற்பியல் ஆகியவை சான்றாக அமைகின்றன. அகத்திணைக்குரிய மெய்ப்பாடுகளை, மிக விரிவாக விளக்கி இருப்பதனைக் கொண்டு தொல்காப்பியர் காலத்தில் முறைமைப்படுத்தப்பட்டோர் உளவியல் நோக்கு இலக்கிய உலகில் நிலவி வந்ததை அறுதியிட்டு உரைக்க முடியும். தொல்காப்பியர் உளவியல் கோட்பாடு '**அகநோக்கு முறை**' என்னும் வகையைச் சார்ந்தது. அகநோக்கு முறை என்பது மனிதன் தன்னுடைய உணர்வுகளையும், பட்டறிவையும் தானே உணரும் முறையாகும். இதனை ஒரு உளவியல் கோட்பாடாக விளக்கியவர் 'வில்கெல்ம் உண்ட்டு' என்னும்

செருமானிய உளவியல் அறிஞர். இம் முறை 'அகநோக்கு உளவியல்' என்னும் பழமையான உளவியல் கோட்பாட்டினுள் அடங்கும் ஆய்வு முறையாகும்.இதனை இவர் மூன்று நிலைகளில் அடக்குவர். அவை,

1. வெளி தூண்டுதல்கள் இனால் ஏற்படும் புலன் உணர்வுகள்
2. உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை ஒத்த பட்டறிவுகள்
3. பட்டறிவுகளின் மனவெழுச்சிக் கூறுகள் அல்லது உணர்ச்சிகள்" **(வாழ்வியல் களஞ்சியம் தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு ப.51)**

தொல்காப்பிய 'அகம்', 'புறம்' என்று பகுத்து உளவியல் அடிப்படையிலான பகுப்பு முறையாகும். இதனையே 'கார்ல்யுங்' 'அகமுகம்' 'புறமுகம்' என்று கூறுவார். இதன் அடிப்படையிலேயே தொல்காப்பியருடைய உளவியல் சிந்தனைகள் அமைகின்றன.

**எண்வகை மெய்ப்பாடுகள்**

தொல்காப்பியர் உணர்ச்சிகளை எட்டு வகையாகப் பிரிப்பர். அவை,

**"நகையே அழுகை இளிவரல் மருட்கை**
**அச்சம் பெருமிதம் வெகுளி உவகை" என்று**
**அப்பால் எட்டே மெய்ப்பா டென்ப (தொல். பொருள். 251)**

இவற்றோடு 'சத்துவம்' அதாவது 'சமநிலை' என்பவற்றையும் சேர்த்து ஒன்பான் சுவை என்பார். வடநூலார் நவரசம் என்பர். மனிதனுடைய வாழ்வியல் இன்ப துன்பங்கள் சமூக இயக்கங்கள் எட்டுவகை உணர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டே அமைகின்றன என்பது தொல்காப்பியர் கருத்து. ஒரு மனிதன் எட்டு வகை உணர்ச்சிகளையும் முழுமையாக அறிந்து கொண்டால் அவன் சம நிலையை அடைகின்றான். சமநிலை அடைந்த மனிதன்தான் முழுமை பெற்ற மனிதன். சம நிலையை அடையாத வரை அதாவது எட்டு வகை உணர்வுகளையும் புரிந்து கொள்ளாதவரை வாழ்க்கையில் சிக்கல்கள் மிகுந்தே காணப்படும். சமநிலை என்பது செஞ்சான் தெறியினுஞ் செத்தினும் போழினும் நெஞ்சோர்ந்தோடா நிலைமை" **(பேராசிரியர்., தொல்காப்பிய பேராஉரை., ப. 41)**. இந்த சம நிலையை அடையப் பெற்றால் 'உளம்' பாதுகாக்கப்படும், இல்லையேல் 'உளம்' பாதிப்படையும். சிக்கல்கள் பெருகும் என்பது தொல்காப்பியர் உளவியல் கோட்பாடு.

**கைக்கிளை உளவியல்**

கைக்கிளை என்பது ஒரு மனநிலை தன்னிடத்தில் தோன்றிய ஒன்றை தானே மகிழும் மனவியல் பை கைக்கிளை ஆகும். "சொல்லெதிர் பெறாஅன் சொல்லி இன்புறல்" என்கிறார் தொல்காப்பியர் தானே

சொல்லிக் கொண்டு மகிழும் நிலை இவ்வாறு தனக்குள்ளே எழுந்த விருப்பத்தை புகழை, ஓர் எழுச்சியை அந்த அளவிலேயே உணர்ந்து இன்பம் காண்பது என்பனவெல்லாம் கைக்கிளையின் உள இயல்பாகும்.

**“காமஞ் சாலா விளமையோள் வயின்**
**ஏமம் சாலா இடும்பை எய்தி**
**நன்மையும் தீமையும் என்றிரு திறத்தால்**
**தன்னொடும் அவளொடும் தருக்கிய புணர்த்துச்**
**சொல்லெதீர் பெறாஅன் சொல்லி இன்புறல்**
**புல்லித் தோன்றுங் கைக்கிளைக் குறிப்பே (தொல் பொருள் 50)**

“தம் உறுப்பு முதலிய அழகுக்குப் பிறர் கவரப்பட வேண்டும் என்ற தற்பெருமை உடையவர்களே கைக்கிளைக் உரிய செயல் நிகழ்ப் பெறுவார், என்றாகிறது. எனவே (Self Esteemed) தற்சார்பு விஞ்சிய விருப்பம் உடைய தலைமக்களே கைக்கிளைக்குரியவர். இதை உளவியல் அறிஞர்கள் கூறும் தன்முனைப்பு நார்சிசம் போன்றவற்றோடு ஒப்பிடத் தக்கது. மேலும் ஒருதலைக் காமம் என்பது தலைவனுக்குப் பிடித்து தலைவிக்குப் பிடிக்காமலோ, அல்லது தலைவிக்குப் பிடித்து தலைவனுக்குப் பிடிக்காமலோ இருத்தல், இந்த மனநிலையே இன்று சமூகத்தில் பல வகையான சிக்கல்கள் ஏற்படக் காரணமாகின்றது.

**ஐந்திணை உளவியல்**

ஒத்த அன்பால் ஒருவனும் ஒருத்தியும் கூடும் நிலையே ஐந்திணை உளவியல் ஆகக் குறிப்பிடுகின்றார் தொல்காப்பியர். ஒத்த அன்பு என்பது இருவர்தம் உணர்ச்சி நிலைகளும் பொருந்தி தோன்றுதல், அதே நிலையில் எட்டு உணர்ச்சிகளும் அளவான முழு தன்மை பெறுதல், இந்நிலையில் வளமான உளநிலை அமைவதால் வாழ்க்கை சிக்கல்கள் இன்றி இன்பகரமாக அமையும். இவையே வாழ்க்கையில் எல்லோருக்கும் அமைய வேண்டிய முறையான இயல்பான ஒழுக்க நெறியாக இருப்பதால் தொல்காப்பியர் இவ்வைந்திணை ஒழுக்கத்தை மிக விரிவாக விளக்குகிறார்.

**பெருந்திணை உளவியல்**

தலைவன் பொருள் தேடச் செல்கிறான். இடையில் இயற்கையின் சீற்றத்தால் இறந்துவிடுகிறான். களவு வாழ்க்கையில் கட்டிக்காத்த ஆசைகளைக் கற்பு வாழ்க்கையில் அணுவணுவாக சுவைக்க நினைத்து அந்த தலைவியின் வாழ்க்கை கேள்விக்குறியாகி நின்றது. இந்தக் கேள்விக்குறிக்குப் பின்னால் அவளுடைய அடக்கமுடியாத ஆசைகளையும் வேட்கையையும் கண்டவர் தொல்காப்பியர். அதனால்தான் பெருந்திணை என்ற ஒரு திணையே வகுத்து அவர்கள் தேவையை நிவர்த்தி செய்கிறார் தொல்காப்பியர்.

**“ஏறிய மிடற்றிற பிள்ளை தீர்திறந்**

**தேறுதல் ஒழிந்த காமத்து மிகு திறம்**

**மிக்க காமத்து மிடலொடு தொகையைஇ”          (தொல்பொருள் 51)**

என்பது அவளுடைய அடக்கமுடியாத காமத்தின் மிகுதியையும் அவளுடைய அன்பின் பெருக்கையும் காட்டுகின்றது. பிராய்டு குறிப்பிடும் ஆழ்மனதில் அமுக்கப்பட்ட மன உணர்வே இவ்வாறு வெளிப்படும். பிராய்டு உளவியல் பெரும்பாலும் பெருந்திணை கைக்கிளையின்பாற்படும். சிக்கல்களை மையமிட்டு அவற்றிற்குரிய காரணங்களை ஆராய்ந்த காரணத்தினால் சிக்கலுக்குரிய கைக்கிளை, பெருந்திணை உளவியலே அவர்களுக்குட்பட்டது. சிக்கலில்லாத ஐந்தினை உளவியல் அவர்களுக்கு புலப்படவில்லை. இந்தநிலையில் உலகளாவிய உளவியல் அறிஞர்களில் தொல்காப்பியர் முதல் நிலையில் முழுமை பெற்ற உளவியல் அறிஞராக திகழ்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

**மெய்ப்பாடும் உளவியலும்**

உளவியல் என்பது ஒரு மனிதனுடைய உள்மனதை ஆராய்தல், உள்மன செயல்பாடுகளை தெரிந்துகொள்ளுதல், ஒரு மனிதனுடைய உள் மனத்தை அவனுடைய படைப்புகளால், கலைத்திறனின் செயல்பாட்டால் அறியலாம். இவையே உளவியல் என்றழைக்கப்படுகின்றது. தொல்காப்பியர் பொருளதிகாரத்தில் மெய்ப்பாட்டியல் என ஓர் இயல் வகுத்திருப்பது இலக்கியத்தைப் படைத்ததற்கு உளவியல் பின்புலம் ஓர் இன்றியமையாத தேவை என நம் முன்னோர்கள் உணர்ந்திருந்தனர், என்பதைப் புலப்படுத்தும் தக்க சான்றாக விளங்குகின்றது, எண்வகை மெய்ப்பாடுகளையும் தொல்காப்பியர் விளக்கியிருப்பதைக் காணும் போது தொல்காப்பியருக்கு நெடுங்காலம் முன்னரே இத்தகையதோர் உளவியல் அணுகுமுறை இங்கு வேரூன்றி இருப்பதைத் தெளிவாக உணரலாம்.

**வாழ்வியல் இலக்கணம்**

வாழ்வியல் இலக்கணம் என்பது மனிதன் மனிதனாக வாழ்வதற்கு மனிதனை வகுத்துக்கொண்ட நெறிமுறை ஆகும். தமிழருடைய வாழ்வியல் முறை ,அறம், அறத்தின் வழி பொருள், அறத்தின் வழி இன்பம், இம்மூன்றின் வழி வீடுபேறு அடைதல் நெறிமுறைகளை மனிதன் மனிதத்திற்கு வழங்குவதுதான் நூல். பக்குவப்படுத்தப்பட்ட நிலத்தில் விதை விதைத்தால் நன்றாக முளைக்கும் நிலமாகிய மனிதன் மனத்தைப் பக்குவப்படுத்தி அறமாகிய விதையை விதைத்தால் நன்றாக வளரும். இதனை,

**அறம் பொருள் இன்பம் வீடு அடைதல் நூல் பயனே     (நன்,சூத்.10)**

என்ற சூத்திரத்தினால் நன்கு விளங்கும்.

இதனையே வள்ளுவர் அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என மூன்று பாகமாகப் பிரித்து அவற்றின் வழி வீடுபேற்றை உணர்த்துவார். அறம், பொருள், இன்பம் மூன்றையும் முழுமையாக அனுபவித்தால் வீடுபேறு தானாக கிட்டும் என்பது வள்ளுவர் எண்ணம்..தொல்காப்பியர் வாழ்க்கை அக வாழ்க்கை என்றும், புற வாழ்க்கை என்றும், உலக வாழ்வை களவென்றும், கற்பென்றும் பிரித்து வாழ்விற்கு தலைவியையும் கூற வாழ்விற்கு தலைவனையும் சிறப்பாக கொண்டு தலைவனுக்குரிய வீரத்தின் வெற்றி தலைவிக்குரிய காதலால் அமைந்த தொல்காப்பிய வாழ்வியல் இலக்கணம் அனைவரும் கண்டு இன்புறத்தக்கது.

**பெண்மையைப் போற்றுதல்**

பெண்மையைப் போற்றுவதில் தொல்காப்பியரும், திருவள்ளுவரும் முதன்மை பெறுகின்றன. பெண்மையின் குணங்களைப் பற்றி பேச வந்த தொல்காப்பியர்,

**“செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்**
**அறிவும் அருமையும் பெண்பா லான” (தொல் பொருள் 209)**

என்பர் ‘செறிவு’ என்பது அடக்கம், ‘நிறைவு’ என்பது உள்ளத்தில் உள்ளதை வெளியே காட்டாமல் நிறுத்தும் உள்ளத்தின் இயல்பு. இதனால் ஆண்களுக்கு நிகரானவர்கள் பெண்கள் என்பதை உணர்த்தவே தொல்காப்பியரின் ஒரு பாவை அமைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. திருவள்ளுவரும் பெண்களின் இயல்பைப் பற்றிக் கூறும்போது,

**பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்**
**திண்மைஉண் டாகப் பெறின் (குறள் 54)**

என்கிறார். இவ்வாறு தொல்காப்பியரும், திருவள்ளுவரும் பெண்மையைப் போற்றுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**நாற்ப்பொருள் பயன்**

வாழ்வியல் நோக்கமே வீடுபேறு அடைதல், அந்த வீடுபேறு இன்பத்தினால் கிட்டும். இன்பம் பொருள் வழிபடும், பொருள் அறத்தின் வழி கிடைக்கும். அறம், பொருள், இன்பம் என்பன வாழ்வியல் கோட்பாடுகள். தொல்காப்பியர் அகம், புறம் என்ற இரண்டு நிலைகளில் இவற்றை விளக்குவார்.

**இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு**
**அன்பொடு புணர்ந்த ஐந்திணை (தொல்பொருள் 92:1,2)**

என்பதில் இன்பம் முதலாவதாக சுட்டப்படுகின்றது.

**அறம்பொருள் இன்பம் உயிரச்சம் நான்கின்**

**திறந்தெரிந்து தேறப் படும்** - (குறள் 501)

என்ற குறளிலும் அறத்தையே முதன்மைப்படுத்தியுள்ளார். நாகரிகத்தின் தொடக்கத்தில் இன்பம் என்பதே முதன்மையான குறிக்கோளாக இருக்க வேண்டும். பொருள் பற்றிய சிந்தனை வளர்ந்த பிறகு பொருள் வாழ்க்கையின் குறிக்கோளாக இருக்கலாம். இன்பத்தையும், பொருளையும் அறவழியே நுகரவேண்டும் என்ற உணர்வுக்கு சமுதாயம் உந்தப்பட்ட பொழுது அறம் வாழ்வியல் கோட்பாடாகி அந்த அறத்தின் வழியே எல்லாமும் இயங்க வேண்டும் என்று கருதப்பட்டு அறத்தை முதன்மையானதாக கொண்டிருக்கலாம்" (மோகனராசு.கு.,மு.நூ.,ப.124) என்பர் கு. மோகனராசு. எனவே நாகரிகம் வளராத நிலையில் இன்பம் முதன்மையாகி இன்பம், பொருள், அறம் என்ற முறை வைப்பு நாகரீகம் வளர்ந்த நிலையில் அறமே முதன்மையாக அறம், பொருள், இன்பம் என்ற முறை வைப்பு உருவாகி இருக்க வேண்டும். இந்த அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு வாழ்வியல் கூறுகளே சமுதாயத்தை இயக்கி செல்கின்றன.

**ஆன்மீக நெறி**

ஆன்மா நற்கதி (வீடுபேறு) அடைய வேண்டும் ஆன்மா நற்கதி அடைவதுதான் பூலோக வாழ்க்கையின் நோக்கம். பேரின்ப நிலையை சிற்றின்ப வழி தான் அடைய முடியும். இச்சிற்றி ன்பத்தை முழுமையாக அனுபவிக்க வேண்டுமானால் பொருள் அவசியம். அந்தப் பொருள் அறத்தின் வழியே கிடைக்கவேண்டும். அறத்தின் வழி கிடைத்த பொருளை அறத்தின் வழியான இன்பத்திற்கு பயன்படுத்தவேண்டும். இன்பத்தை அனுபவிக்க, பொருளாதாரத்தை திரட்ட, அறத்தைக் கடைபிடிக்க உடல்நலம் உள்ளநலம் மிக அவசியம். இதனை உணர்ந்துதான் தொல்காப்பியரும், திருவள்ளுவரும் அறம், பொருள், இன்பத்தை விளக்கி இவற்றின் நிலைக்களனாக விளங்கும் உடலையும், உள்ளத்தையும் ஓம்பும் வழிமுறைகளை பலநிலைகளில் விளக்கிச் செல்கின்றனர்.

ஆன்மாவாகிய உயிர் பேரின்ப நிலையை அடைய ஆன்மீக நெறியே வழித்தடமாக அமைகின்றது. ஆன்மீக நெறி கர்மம், யோகம், தவம், ஞானம் என்ற நான்கு நிலைகளில் அமைகின்றது. இல்லற இன்பத்தைத் துய்த்து பிறகு துறவறம் நிகழ்த்தி வீடுபேறு அடைதலை,

**காமம் சான்ற கடைக் கோட் காலை**
**ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி**
**அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்**
**சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே** (தொல்பொருள் 192)

என்பர் தொல்காப்பியர் திருவள்ளுவரும்,

**வேண்டின் உண் டாகத் துறக்க துறந்தபின்**
**ஈண்டு இயற் பால பல** **(குறள் 342)**

என்று 'துறவு' என்ற அதிகாரத்தில் விளக்குவார். வீடு பேறு அடைவதற்குரிய சாதனமாகிய யோகம், தவம், செய்வதற்கு உடல் நோயின்றி இருக்க வேண்டும். உடல் நோய் என்று இருக்க உள்ளம் நோயின்றி இருக்க வேண்டும். வள்ளுவர் உடல்நலனை 'மருந்து' என்ற அதிகாரத்தில் விளக்கியுள்ளார். மானுட வாழ்க்கையின் குறிக்கோள்களில் ஆன்மிக நெறி முக்கிய வழித்தடமாக அமைவதாக தொல்காப்பியமும், திருக்குறளும் எடுத்துரைக்கின்றன

**முடிவுரை**

தனிமனித உணர்வு சமூகச் சிக்கல்களுக்கு காரணம் என்பது தொல்காப்பியம் திருக்குறள் வழி அறியமுடிகின்றது தொல்காப்பியரும் திருவள்ளுவரும் ஆண்-பெண் இயல்பறிந்து சமத்துவம் காண்பதை விடுத்து சமநிலை பாட்டின் வழி பெண்ணுரிமையை நிலைநாட்டியுள்ளனர்.வாழ்க்கையின் நோக்கம் வீடுபேறு அடைதல் வீடுபேறு இன்பத்தின் முழுமையாகக் கிட்டும் இன்பத்தின் முழுமை அறத்தின் வழி கிடைத்த பொருளினால் கிட்டும் ஆக்கத்திற்கும் அழிவிற்கும் மனமே மூலகாரணமாகும் எந்த ஒன்றிலும் மிகாமலும் குறையாமலும் அளவாக சமநிலையோடு (நடுநிலை கோட்பாடு) செயல்பட்டால் வாழ்க்கையில் சிக்கல்களின்றி எப்பொழுதும் இன்பமாக வாழலாம் வாழ்க்கை நோக்கமும் நிறைவேறும். தொல்காப்பியம் திருக்குறள் வாழ்வியல் நெறியையும் ஆன்மீகத்தையும் ஒவ்வொரு வாழ்வியல் நெறி ஆக்கிக் கொண்டால் இன்பமே எந்நாளும் துன்பமில்லை..

**துணைநூற்பட்டியல்**

1. இளம்பூரணர்., (உ.ஆ) தொல்காப்பியம்., திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்- 1982 79, பிரகாசம் சாலை, சென்னை- 1.
2. நச்சினார்க்கினியர்., தொல்காப்பியம்., கழக வெளியீடு -1980, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட். 79, பிரகாசம் சாலை, சென்னை- 1.
3. பேராசிரியர்., (உ.ஆ) தொல்காப்பியம்., திருப்பனந்தாள் அறக்கட்டளை வெளியீடு, முதற்பதிப்பு -1985.
4. பரிமேலழகர்.,(உ.ஆ) திருக்குறள் கழக வெளியீடு,-1982. திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட். 79, பிரகாசம் சாலை சென்னை- 1.
5. அல்ஃபோன்சு.தே, அன்பு இதயங்கள் இன்ப உதயங்கள் (குடும்ப உளவியல்) தூய பவுல் கல்லூரி, திருச்சி- 620 001.
6. அல்போன்ஸ்.அ. பொய் முகங்கள் (உளவியல்) மேரா வெளியீட்டகம், முள்ளங்கனாவிளை, கருங்கல்- 629 157, குமரி மாவட்டம், முதற்பதிப்பு -1987.
7. கைலாசபதி.கா., சமூகவியலும் இலக்கியமும்., நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், பிரைவேட் லிமிடெட். பதிப்பு- 1988. சென்னை 600 098.

8. சுப்புரெட்டியார்,ந. தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை., பழனியப்பா பிரதர்ஸ், சென்னை. பதிப்பு - 1964.

9. மோகனராசு.கு., தொல்காப்பியமும், திருக்குறளும் ஓர் ஒப்பாய்வு. திருக்குறள் ஆய்வு மையம், சென்னை பல்கலைக் கழகம். முதல் பதிப்பு - 1986.

10. முனைவர்.மா.செங்குட்டுவன்.,தொல்காப்பியம்-திருக்குறள் வாழ்வியல் நெறியும் ஆன்மீகமும்( உளவியல் அணுகுமுறை) தி,பார்கர் 293,அகமது வணிகவளாகம், இராயப்பேட்டை நெடுஞ்சாலை,சென்னை-600 014.பதிப்பு-2006

ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# தமிழ் இலக்கியங்களில் உளவியல் சிந்தனைகள் - பெண்ணியப் பார்வை

18

முனைவர் இரா. சீதா,
புனித பிலோமினாள் கல்லூரி, மைசூரு.

**ஆய்வுச் சுருக்கம்**

இலக்கியம் என்றாலே உள்ளக்கருத்துகள் பொதிந்தது என்று கொள்ளலாம். ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் உணர்வுகள் என்பது பொது. வெளிப்படுத்தும் முறைதான் மாறுகிறது. உளவியலுக்கு சிறந்த எடுத்துக்காட்டு பெண்கள்தான், குறிப்பாக, தலைவியும், செவிலித்தாயும். ஒருவர் துன்பத்தை ஏற்றுக் கொள்பவராகவும் மற்றொருவர் துன்பத்தை இன்பமாகக் கொள்பவராகவும் இருப்பதை இக்கட்டுரை காட்டுகிறது

**முன்னுரை:**

ஒருவன் சுய சிந்தனையுடன் எழுதுவது அல்லது பேசுகின்ற கருத்துகள் என்பது அவனது மனதின் எண்ணத்தை பிரதிபலிப்பது ஆகும். இலக்கிய வடிவம் பெற வேண்டுமென்றால், கவிதையாக இருந்தாலும் அல்லது உரைநடையாக இருந்தாலும் அதில் சற்று செம்மைத்தன்மை வேண்டும். சாதாரணமாக நாம் இன்னொருவருடன் பேசுவது என்பது வேறு, ஏட்டில் இடம் பெறும்போது அதன் தன்மை வேறு. நாட்டுப்புற பாடல்கள் கூட எதுகை மோனையுடன் அமைந்தவை. அதற்கென ஒரு சந்தம், தாளம் உண்டு. எளிமையின் வடிவம். ஆனால் ஆழம் அதிகம். ஆரவாரம் கிடையாது; ஆர்ப்பரிப்பும் கிடையாது. அதனாலேயே அவை நம்மை அதிகம் பாதித்து விடும். ஆனால் நாம் பேசும் போது எதுகை மோனை போன்றவற்றை கடைப்பிடிப்பதில்லை. நம் மனக் கருத்து இன்னொருவருக்கு போய்ச்சேர வேண்டும் என்றுதான் பார்க்கிறோம். இலக்கியங்கள் சந்தமுடன் மிகவும் உட்பொருள் நிறைந்தவை. காலம் காலமாக, இலக்கியங்கள் குறித்து வெளிவரும் கட்டுரைகளே அதற்கு சாட்சி. அப்படி என்றால் அதன் உட்பொருள் நம்மை கவர்ந்திருக்கிறது என்றுதானே பொருள். இக்கட்டுரை தமிழ் இலக்கியங்களில் இடம்பெறும் கருத்துகளை உளவியல் - பெண்ணிய நோக்கில் இனம் காண விழைகிறது.

**பெண் என்பவள் யார் ?**

பெண் என்பவள் ஆணைக் காட்டிலும் அதிகம் பேசுபவள். அதிகம் சிந்தனை வயப்படுவதும் செயலிலே காட்டுவதும் ஆணாக இருக்க, இவள் கொஞ்சம் அதிகம் உணர்ச்சிவயப்படுபவளாகவே இருக்கின்றாள். அது அவளின் உடலின் அமைந்த கூறுகளின் தன்மையா என்பது தெரியாது. உதாரணத்திற்கு, அகநானூற்றின் செய்யுள் ஒன்று காணலாம்:

தலைவியின் நெஞ்சம்: தலைவன் பாதம் தாங்கச் சென்று விட்டது.

தலைவியின் நெஞ்சத்தை குறிஞ்சித்திணை மூலம் கபிலர் காட்டுகின்றார். (128); மழைக்காலம், இருண்ட மலை வழி, யானையின் முதுகில் உள்ள கயிற்றின் தழும்பு போன்ற மிகச்சிறிய வழியில் அவளைக் காண்பதற்காக தலைவன் வருகிறான் என்ற நிலையில் தலைவியின் உள்ளம் அவளிடம் நில்லாது அவன் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியையும் தாங்குவதற்காகச் சென்று விட்டது என்கிறாள்

**கான நாதன் வரூஉம் யானைக் கயிற்றுப் புறத்தன்ன கல்மிசைச் சிறுநெறி...**

**இருளிடை மிதிப்புழை நோக்கி,**

**அவர் தளர் அடி தாங்கிய சென்றது இன்றே! (வரிகள் (10-15).**

இதைக் காட்டிலும் இன்னொரு பாடலின் பொருள் மிகவும் வியத்தற்குரியது. அக்காலத்தில் மட்டும் என்று இல்லை. இன்றும் கூட நம்மில் பலருக்கு இந்த உணர்வு உண்டு.

**தலைவனே! நீ வரும் காலத்தை நீட்டிப்பதால் எனக்கு மகிழ்ச்சிதான்!**
**குன்ற நாட!**
**விளங்கு தொடி முன்கை வளைந்து புறம் சுற்ற**
**நின் மார்பு அடைதலின் இனிது ஆகின்றே-**
**நும் இல் புலம்பின் நும் உள்ளுதொறும் நலியும்**
**தண்வரல் அசைஇய பண்பு இல் வாடை**
**பதம் பெறுகல்லாது இதம் பார்த்து நீடி**
**மனைமரம் ஒசிய ஒற்றிப்**
**பலர்மடி கங்குல் நெடும் புறநிலையே !**
**எழுதியவர் மதுரை பண்ட வாணிகன் இளந்தேவனார் (பாடல் - 58 பாடல் வரி 8-14)**

தலைவியின் உள்ளத்தை வேறு யாரும் இதைக் காட்டிலும் மிக அழகாக கூறி விட முடியாது! இதில்தான் எத்தனை ஆழம்! இப்பாடலை சற்று ஆராயலாம்.

- இரவு நேரம், பலர் உறங்கும் நேரம்- பலர் மடி கங்குல்
- மிக கடுமையான குளிர்காற்று- பண்பு இல் வாடை
- நான் நீண்ட நேரமாக உனக்காகக் காத்திருக்கிறேன். இன்னும் நீ வரவில்லை (நெடும் புற நிலை)
- நீ வரும் பாதையை மறைத்தவாறு என் வீட்டின் முன் உள்ள மரம் இருக்கிறது. அதன் கிளை முறியும்படியாக சற்று வளைத்துப் பிடித்தபடி ( உன் வருகை எனக்குத் தெரிய வேண்டும்) நிற்கிறேன்.(மனை மரம் ஒசிய ஒற்றி)
- பரவாயில்லை. இந்தக் காத்திருப்பு இனிதாகத்தான் இருக்கிறது.
  இனிது ஆகின்றே!

இதன் உள் கருத்தை - தலைவியின் மனவோட்டத்தைக் கவனிக்கலாம். நீண்ட நேரமாக தலைவி இருளிலே, குளிர்க்காற்று தன் மெய்யை வருத்த நிற்கிறாள். வீட்டின் முன்பு உள்ள மரத்தின் கிளை முறியும்படியாக நிற்கிறாள் என்றால் அவள் பலத்தால் . கிளை முறியாது.. நீண்ட நேரமாக கிளையைத் தழைத்துப் பிடித்திருப்பதால் கிளை முறியலாம்.

ஆனால், தொனி எதில் நிற்கிறது?

நீ காலம் தாழத்தி வருவதால் எனக்கு துன்பம் இல்லை- இனிதாகத்தான் இருக்கிறது. ஏன் தெரியுமா? நீ என்னுடன் வந்து உரையாடி விட்டு உடனே கிளம்பி விடுவாய். நான் மீண்டும் தனிமைப்படுத்தப் படுவேன். உன்னிடமிருந்து 'பிரிவு' என்பது என்னை கொல்லும். உன் நினைவு என்னை மீண்டும் வருத்தும். எப்போது சந்திக்கலாம் என்று காத்திருப்பேன். அது மிகக் கொடுமையானது. அதைக் காட்டிலும் 'நீ வருவாய், என்ற உணர்வு மிக இனிமையாக இருக்கிறது; நீ வரும் பாதையை கவனித்துக் கொண்டு காத்திருப்பது என்பது எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. சொல்லப்போனால் நீ வரப் போகிறாய் என்ற உணர்வு , இந்த நம்பிக்கை எனக்குள் இருக்கும் உயிரை தளிர்க்கச் செய்கிறது. காதல் இன்னும் அதிகமாகிறது. இன்பம் தருகிறது.

இனிது ஆகின்றே- இவ்வரியை மீண்டும் மீண்டும் சொல்லிப் பார்த்து இரசிக்கலாம்.

இந்த உணர்வு களவுக் காலத்தில் மட்டுமல்ல, கற்புக்காலத்தில் இன்னும் அதிகமாகிறது எனலாம்

**'பொருள்மாலை யாளரை உள்ளி மருள்மாலை**

**மாயுமென் மாயா உயிர்'** **(குறள்- 1230 -பொழுது கண்டிரங்கல்)**

தலைவன் பொருள் தேடச் சென்று விட்டான். அவளைக் காட்டிலும் பொருள் பெரிது என்று போய் விட்டான். இவள் மனமோ இவளிடமிருந்துக் கொண்டே அவனையே விடாமல் நினைத்துக் கொண்டே இருக்கிறது. மாயும் என் மாயா உயிர் என்பதில்தான் எத்தனை அழுத்தம். இந்த உயிர் என்னை விட்டுப் போக மாட்டேன் என்கிறது. என்னிடமிருந்துக் கொண்டே அவனையே விடாமல் நினைத்துக் கொண்டே இருக்கிறது. மாயும் மாயா என்பதில்தான் எத்தனை உணர்வு ! அப்படியென்றால் தலைவிக்கு பொருள் முக்கியம் இல்லையா? அதுவும் கூற முடியாது? பொருளும் முக்கியம்; தலைவனும் முக்கியம். உதாரணம் மூலம் பார்க்கலாம்:

குறுந்தொகையில் ஒரு பாடல் தலைவியின் வேதனையைக் குறிப்பிடுகிறது. ஒரு முறை பொருளுக்காகச் சென்ற தலைவன் தலைவியை நினைத்து மீண்டு வந்து விட்டான்.(பொருள் பெறாமல்). வீட்டில் பொருளின்றி சிறிது காலம் தங்கியிருப்பான் போலும். பொருளின் அவசியம் உணர்கிறான். புறப்படுகிறான். அவனை வழியனுப்பி வைத்து விட்டு தலைவி வேதனையுடன் இருக்கிறாள். எதற்காக?

தலைவன் மீண்டும் தன்னையே நினைத்து வந்துவிட்டால் என்ன செய்வது என்பதாம். அதைப் பார்த்த தோழி

**' நசை நன்குடையர் தோழி! ஞெரேரெனக் கவைத்தலை**

**முதுகலை காலின் ஒற்றிப் பசிப்பிணிகிறைஞ்சிய**

**பருஉப் பெருந் ததரல் ஒழியின் உண்டு..**

**மறிக்கு நிழலாகி நின்று வெயில் கழிக்கும்**

**என்பநம் இன்துயில் முனிநர் சென்ற ஆறே!**

**(குறுந்தொகை-கச்சிப்பேட்டுக் காஞ்சிக் கொற்றனார் பாடல் 213 வரி க1-7))**

ஆண் மான் தன் குட்டியை பேணுவதை தலைவன் காண்பான். விலங்குகளே தன் கடமையை செய்கின்ற நிலையை உணர்ந்த்து. அவனும் தம் கடமையை செவ்வனே முடித்துதான் திரும்புவான் என்று ஆறுதல் கூறுகிறாள். அப்படி என்றால், பசியின், வறுமையின் முன் தலைவியின் காதல் சற்று களை இழந்துதான் போய்விட்டதோ? ! பசிப்பிணிகிறைஞ்சிய என்ற வரி எல்லாவற்றையுமே உணர்த்துகிறது.

இப்பாடலுக்கு இன்னொரு பொருளும் கொள்ளலாம். பொருளுக்காக சென்ற தலைவன் தன்னைப் பற்றி நினைக்கவில்லையா? என்ற வருத்தமும் தலைவிக்கு ஏற்பட்டிருக்கலாம். அவளுடைய வருத்தத்தைப் போக்கத்தான் 'நசை நன்குடையர் தோழி' என்கிறாள். உன்மீது மிக்க காதல் உண்டு. ஆனால் குடும்பத்தைக் காக்க வேண்டுமே! அவன் செல்லும் வழியில் விலங்குகள் தங்கள் கடமையை போற்றி, தன் குட்டிகளையும் காப்பதை பார்ப்பான். ஆகையால், இல்லறம் பேண பொருள் வேண்டும் என்ற உணர்வினால்தான் காலம் தாழ்த்துகிறான் என்று அவள் துயரத்தைப் போக்க முயற்ச்சிகிறாள் தோழி என்றும் கொள்ளலாம்.

**காதல் பெரிதா? பொருள் பெரிதா?**

இதைப் பார்க்கும்போது இரண்டுமே சம நிலைதான் வகிக்கிறது எனலாம். காரணம், உலகியற் பண்பு, சான்றோர் பண்பு என்றெல்லாம் இலக்கியங்கள் பலவாறு உரைக்கின்றன. ஆணுக்கு பொருள் தேடுவது அழகு ; பெண்ணுக்கு காதலும் கடமையும் அழகு. குறுந்தொகைப் பாடலில் தலைவன் சொன்னபடி வீட்டிற்கு வராமல், வெகு காலம் தாழ்த்து வருகிறான். அவனது நிலையை பெண்களால் உணர இயலவில்லை. மிக்க துயரமுடன் இருந்த போது தலைவன் ஒருநாள் வருகிறான். 'எம்மை சற்றாவது நினைத்து பார்த்தீர்களா? என்று தோழி கேட்க, தலைவன் கூறுவது இது!

**உள்ளினென் அல்லனோ யானே உள்ளி**

**நினைத்தனென் அல்லலோ பெரிதே நினைத்து**

**மருண்டனென் அல்லனோ உலகத்துப் பண்பே ( அவ்வையார் பாடல் 99 வரி 1-3)**

உலகத்துப் பண்பு என்பது பொருளுக்காக வீட்டை விட்டுச் செல்லும் தலைவன் பொருளைப் பெற்றுக் கொண்டுதான் திரும்ப வேண்டும் என்பதாம். இன்றும் கூட இப்பண்பு நம்மில் உண்டுதானே !

பாலை பாடிய பெருங்கடுங்கோ இன்னும் அழகாகக் கூறுகிறார்.

**உள்ளது சிதைப்போர் உளரெனப் படாஅர்**

**இல்லோர் வாழ்க்கை இரவினும் இளிவு' (குறுந்தொகை - பாடல் 283- வரி 1-3)**

அவ்வையாரின் பாடலில் தலைவன் உலகத்து பண்பு நினைத்து பயந்தேன் என்று கூற, பெருங்கடுங்கோவின் பாடலில் தலைவி இல்லறத்தின் செம்மைத்தன்மையை கூறுவது இன்னும் சிறப்பாகிறது. பொருள் முக்கியம், பொருளற்றவனின் வாழ்க்கை இரந்து உண்ணும் வாழ்க்கையைக் காட்டிலும் கேவலமானது என்கிறாள். ஆகையால் இல்லறம் என்றால், தலைவன் பொருளுக்காகச் செல்வது, தலைவி அப்பிரிவினை நினைத்து வருந்துதலும் என்பது இயல்பாகிறது. என்னதான் ஒருவரை ஒருவர் பிரிந்து வாழ்ந்தாலும் கற்பு என்பது இருபாலருக்கும் பொது என்று சொல்லப்பட்டிருப்பதும் உண்மை!

**செவிலித்தாயின் சொல்லாற்றல்:**

மருதத் திணையிலே தலைவனது பரத்தமைத் தன்மையை விளக்குகின்ற பாடல்கள் ஏராளமாக இருந்தாலும், ஆணின் கற்பின் திண்மையை மிக அழகாக குறுந்தொகைப் பாடல் ஒன்று காட்டுகிறது. (242)

மிக்கச் செல்வச் செழிப்பிலே வளர்ந்த தலைவிக்கு திருமணமாகிறது. அவள் மென்மைத்தன்மை வாய்ந்தவள். கணவன் எப்படிபட்டவன்? அவனுடன் அவள் எவ்வாறு குடும்பம் நடத்துகின்றாள் என்று நற்றாய் அறிய முற்பட்டாள். தன் செவிலித்தாயை அனுப்புகின்றாள். தன்னைக் காட்டிலும் அறிவு முதிர்ச்சி அவளுக்கு உண்டல்லவா? செவிலித்தாயும் போய் நிலைமையை காண்கின்றாள். நற்றாய்க்கு அவள் உரைக்கும் உண்மையைப் போற்ற வேண்டும்.

**'..புதல்நீர் வாரும் பூநாறு புறவில்**

**சீறூரோளே மடந்தை ; வேறு ஊர்**

**வேந்துவிடு தொழிலொடு செலினும்**

**சேந்துவரல் அறியாது, செம்மல் தேரே!' (குழற்றத்தன் - பாடல் 242- வரி (3-9)**

- உன் மகள் வாழும் ஊர் மிக அருமையானது. மிக்க நீர் வளம் உடையது- பூநாறும் புறவு
- சின்ன ஊர்தான் ; ஆனால் அழகானது- சீறுரோளே !

- மடந்தை- பெண்ணின் ஏழு பருவங்களில் ஒன்று. கக- உடு இடைபட்ட வயது என கொள்ள வேண்டும். உன் பெண் 'மடந்தைதான்' ஆனால் அவளைத் திருமணம் செய்துக் கொண்டவன் எப்படிபட்டவன்?
- தலைவன் ஒரு மன்னனின் கீழ் வேலை பார்க்கிறான். வெளி ஊருக்கு செல்லும் பணி அவனுக்கு உண்டு ; அதுவும் மன்னனே அவனை வெளியூருக்கு அனுப்பினாலும், அவன் தேர் வெளியூரில் இரவில் தங்காது, அந்நாளின் முடிவிலே, இரவிலேயே தன் வீடு திரும்பி வந்துவிடுவான். சுருக்கமாகச் சொன்னால் அவன் தேர் இரவு நேரத்தில் வெளியூரில் தங்காது.
- ஆகையால் தலைவன் எப்படி பட்டவன்? செம்மல்
- ஆகையால் அவன் தேரும் செம்மல் ஆகியது. செம்மல் தேரே !
- சொல்லப்போனால் தலைவனின் தன்மையை தேருக்கு புலவர் ஏற்றிவைத்துப் பேசியது அருமை. அவன் தேரே அவனை ஊருக்கு அழைத்துவந்துவிடும் ; இரவு நேரத்தில் தங்காது என்கிறார். அஃறிணைக்கு உயர்வு அளித்தது சிறப்பு என்றால் செவிலித்தாய் தன் கருத்தை நற்றாய் மனம் மகிழும்படியாகக் கூறியது இன்னும் சிறப்பு.
- இரவில் தலைவன் வெளியூரில் தங்காதவன் என்று சொல்லும்போது என்ன கருத்து பெறலாம்?

  *கடமையை மிகச் செம்மையாக ஒருநாளின் பகற்பொழுது மறைவதற்குள் செய்து விடும் திறமை அவனுக்கு உண்டு.

  *தலைவியின் மீது மிக்க காதல், ஆர்வம் உடையவன், ஆகையால் காலம் தாழ்த்த மாட்டான். விரைந்து வருவான்.

  *இல்லறத்தை நல்லறமாக பேணும் தன்மை கொண்டவன் (பரத்தமை தன்மை அற்றவன்) இத்தனை பண்புகளும் ஒரு சேரக் கொண்டதாலேயே அவன் 'செம்மல்' ஆகிறான். தேரும் செம்மல் தேர் என்றாகிறது.

  *இன்னொறையும் கவனிக்க வேண்டும் தலைவியை குறிக்க புலவர் 'மடந்தை' என்ற வார்த்தையை பயன்படுத்துகிறார். தலைவனின் திறமையை குறிக்க காளை, மறவோன், திறவோன் என்ற வார்த்தைகள் உண்டு. சொல்லப்போனால் பெண்ணுக்கு ஏழு பருவங்கள் போல, ஆணுக்கும் ஏழு பருவங்கள் உண்டு. அவற்றில் மேலே குறிப்பிட்ட மூன்றும் உள்ளன. ஆனால், அவற்றை விட்டு விட்டு அவனை 'செம்மல்" என்று கூறும் விதம் போற்றற்குரியது.

ஒரு பெண்ணுக்குதானே இன்னொரு பெண்ணைப் பற்றி உணர முடியும்? நற்றாயின் தவிப்பு செவிலித்தாய்க்குத் தெரியாதா?

அனுமனின் 'கண்டேன் சீதையை" என்ற தொடரைப் போல,

'**வேறு ஊர் சேந்து வரல் அறியாது செம்மல் தேரே**! என்பது மிகச் சிறப்பானது.

உளவியலுக்கு மோர்குழம்பு கதை ( பாடல் 167) உளவியலுக்கு சிறந்த எடுத்துக்காட்டு செவிலித்தாய் எனக் கூறலாம். முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல் என்னும் போதே செல்வத்தின் சிறப்பு புலனாகிறது. அப்பாடலில்தான் தொனி எப்படிபட்டது!

- பாடலின் முதல் வார்த்தையே 'முளிதயிர்தான்'- முற்றிய கெட்டிதயிர்- (பிசைய வேண்டும். அது சற்றே கொழகொழப்பானது- வெண்ணெயின் காரணமாக)
- உன்மகள் மென்மையானவள்- காந்தள் மெல்விரல்- அதை அவள் செய்கிறாள்.
- கழுவுறு கலிங்கம் கழாஅது- தன் சேலைத்தலைப்பிலேயே அக்கறையைத் துடைத்து, அச்சேலையை நீக்காது அதையே உடுத்தியிருக்கிறாள்.
- கண்கள் குவளைமலரை ஒத்தது- புகை எழும்ப, கண்களிலிருந்து கண்ணீர்.
- இத்தனைநாள் உன்மகளின் கண்களில் 'அழகிய 'மை'தான் குடி கொண்டிருந்தது. இப்போதோ குய்ப்புகை கழும- தாளித்த புகைதான் அவள் கண்களை தாக்குகிறது.
- தான் துழந்து அட்ட- துழந்து என்பது மனிதர்களின் செயல்களுக்கு சொல்லப்படுமா தெரியவில்லை- துழந்து என்பது துழாவி. கை கொண்டு கலத்தல்.
- முத்தாய்ப்பாக வருவது-

**நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே"**

அவள் செய்த மோர்க்குழம்பு மிக நன்றாக இருக்கிறது என்று தலைவன் சொன்னதால் தலைவியின் முகம் 'நுண்ணுதின் மகிழ்ந்தது.

பார்ப்பதற்கு அவளும் மகிழ்ந்தாள் என்று கூறுவது போலத் தென்பட்டாலும். மீண்டும் ஆராயும் போது' உன் மகள் தளிரை போன்றவள்தான். வாழ்க்கை என்பது காதல் மட்டுமல்ல, சற்று வேதனையும் கலந்ததுதான் ; அதை உன்மகள் உணர்ந்து கொண்டு விட்டாள்' என்ற தொனியும் தென்படுகிறது. ஆனால் நற்றாய் அதை உணர்பவள் அல்ல. செவிலித்தாய் தலைவியின் உண்மை நிலையை பார்த்து விட்டாள். வாழ்க்கை என்பது வளைந்து கொடுத்து வாழ்வதுதானே! அதை தலைவி ஏற்றுக் கொண்டுவிட்டாள் என்பதுதான் 'நுண்ணிதின் மகிழ்ந்தன்று' என்ற தொடர்.

இந்த விட்டுக் கொடுத்தல், துன்பத்தையும் ஏற்றுக் கொள்ளுதல் என்ற உயர்ந்த பண்பினால்தான் தலைவன் வீட்டின், சருகுகளால் மிதக்கும், மான்களால் குடிக்கப்பெற்று கலங்கிய தண்ணீர்கூட இனிமையாக இருக்கிறது என்ற உணர்வையும் தலைவிக்குத் தருகிறது

**முடிவுரை:**

காதல் வயப்படும்போது ஒரு ஆணின் கட்டுரை மிக பிரமாதமாக அமைகிறது. ஆனால் அவனே குடும்பத்திற்குள் கணவன் -மனைவி என்ற கட்டுக்குள் வாழ நேரிடும்போது அவனிடத்தில் உள்ள காதல் சற்று நிலை மாறி, உயர்ந்து கடமைதான் முக்கியம் என்றாகிறது. பெண் என்பவள் காதலிக்கும் போதும், அவனைத் திருமணம் செய்துகொண்டு வாழும்போது அவனுக்காகவே அவள் என்றாகிறது. அவள் உலகம் அவனைச் சுற்றியே அமைகிறது. அதைத் தாண்டி வெளியே வந்து தனக்கென இடம் பிடித்து வாழ்கிறவர் சற்றே குறைவு என்று துணியலாம்.

**பயன்பட்ட நூல்கள்:**

1. அகநானூறு, மாணிக்கனார், அ. வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, 1999
2. குறுந்தொகை- புலியூர்க் கேசிகன், பாரி நிலையம், சென்னை, 2008
3. திருக்குறள். இராமையா பிள்ளை, வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, 1999

ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# பெரியாழ்வாரின் நான்காம் திருமொழியில் உளவியல்

19

**முனைவர்.சு.சுகாசினி, தமிழ்த்துறைத் தலைவர்,**
**எஸ்.எம்.எஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பேரூர்.**

**ஆய்வுச்சுருக்கம்:**

பெரியாழ்வார் கண்ணனைக் குழந்தையாகப் பாவித்துப் பாடல்களை இயற்றியுள்ளார். அப்பாடல்களில் காணலாகும் செய்திகள் குழந்தைகளின் உளவியலோடு தொடர்புகொண்டுள்ளது. அதை விளக்குவதே இந்த கட்டுரையாகும்.

**ஆய்வுநோக்கம்:**

இக்கட்டுரையின் நோக்கம் குழந்தைகளின் மன நிலை வளர்ச்சி,உடல் நிலை வளர்ச்சி ஆகியவற்றைப் படிப்போர் அறிந்து கொள்ளவேண்டும் என்பதே ஆகும்.

**முன்னுரை:**

நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் பெரியாழ்வார் இயற்றிய நான்காம் திருமொழி, பிள்ளைத்தமிழ் நூல்களுக்கு ஒரு முன்னோடி நூலாகும்.அதில் கண்ணபெருமானின் சிறப்புகள்,திருவிளையாடல்கள் பத்து பருவங்களாகப் பிரித்துக் கூறப்படுகின்றது.

**கண்ணனின் அழகு**

யசோதைப் பிராட்டியால் கண்ணபிரானின் திருமேனி மென்மைக்குத் தகுந்தபடி ஆராய்ந்து பார்த்து, நன்கு அரைக்கப்பட்ட மஞ்சளால் நாக்கை வழித்து, நீராட்டச் செய்யப்படும் அந்த நம்பிக்கு வாக்கும் கண்களும் வாயும் புன்சிரிப்பும் மூக்கும் இருந்த படியைக் காணுங்கள்! செறிந்த குழலை உடைய பெண்களே காணுங்கள்! அதைப் போலவே,

**“கொங்குவார் குழலுங் குவளைவாள் விழியும்”** (1)

என்று கோவை நூலில் குழல் பற்றியும், விழியின் அழகு பற்றியும் கூறப்பட்டுள்ளது.இவ்வாறு குழந்தையின் அழகைக் காண்போர், தன்நிலையை மறக்கக்கூடுவர் என்ற உளவியல் சிந்தனையை ஆசிரியர் கையாண்டுள்ளார்.

**பிரமன் அருளியது**

அண்டத்திற்கு அதிபதியான பிரமன் கண்ணனுடைய இளமைப் பருவத்திற்கு ஏற்றபடி கைங்கரியம் செய்ததை

**“மாணிக்கம் கட்டி வயிரம் இடைகட்டி**
**ஆணிப்பொன்னால் செய்த வண்ணச் சிறுத் தொட்டில்”,**

என்று சொல்லப்படும் இரண்டு பக்கங்களிலும் மாணிக்கத்தைக் கட்டி நடுவில் வைரத்தை கட்டி மாற்றில்லாத பொன்னால் செய்யப்பட்ட அழகு மிக்க சிறிய தொட்டிலை உனக்குப் பிரமன் விரும்பி அனுப்பினான். பிரம்மச்சாரியாய் வாமனவதாரம் பண்ணின கண்ணனே தாலேலோ!

வையம் அளந்தானே தாலேலோ! என்று பாடுவது போன்று வையத்தை முதன்மையாக்கி கொண்டு **"வையமுழு தொருங்கீன்ற விடப்பாக ரானந்த வனத்தில் வாழும்"** (2) என்று உமாதேவியரை காசி கலம்பகத்தில் குமரகுருபர சுவாமிகள் பாடியுள்ளார். இப்பாடலின் மூலமாக குழந்தையை உறங்கச் செய்யும் போது, தன்குழந்தையின் அழகால் ஏற்படும் தாயின் பெருமிதம் என்ற உளவியல் சிந்தனையை ஆசிரியர் கையாண்ட தன்மை காட்டப்படுகின்றது.

**நிலவினை அழைத்தல்**

ஆகாயத்தில் பொருந்தியுள்ள பெருமை பொருந்திய சந்திரனே! கோமேதகம் என்னும் கதையும், திருவாழியாழ்வானையும், சாரங்கம் என்னும் வில்லையும் ஏந்தியுள்ள பெருங்கைகளை உடையவன் கண்ணபிரான் என்று கண்ணனின் தோற்றச் சிறப்புகளைத் திருவெம்பாவையில்,

**"இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்**
**இருக்கொரு தோத்திரம் இயம்பினர் ஒருபால்**
**துன்னிய பிணை கையினர் ஒருபால்"**(3)

பெருங்கைகள் உடையவன் என்பது போல பிணை மலர்க் கையினர் என்று சிவபெருமானைத் தொழ வரும் அடியவர்களைப் பாடியுள்ளார்.

இவற்றை கொண்டுள்ள கண்ணபிரான் திருக்கண் வளர நினைத்துக் கொட்டாவி விடுகின்றான். அவன் இப்போது உறங்காது போனால் அவனுண்ட பாலானது ஜீரணமாகாது. ஆகவே விரைந்தோடி வா! என்று கண்ணனுக்காகச் சந்திரனுக்குத் தூது விடுகிறார் ஆழ்வார்.இவ்வாறு சந்திரனைக் குழந்தைகள் காணும் போது மனமானது அமைதியடைகின்றது என்ற உளவியல் சிந்தனையை ஆசிரியர் கையாண்டுள்ளார்.

அதைப் போலவே தலைமகனுடன் சென்ற தலைமகள் தன்னைக் காண வரச் சொல்ல வேண்டும் என்று காக்கையைத் தூது விடும் போது செவிலித்தாயின் மன வருத்தம் காட்டப்படுகின்றது.

**"மறுவில் தூவிச் சிறுகருங் - காக்கை**
**அன்புடை மரபின் நின் கிளையோ டார்ப**
**பச்சூன் பெய்த பைந்நிண வல்சி**
**பொலம்புனை கலத்தில் தருகுவென் மாதோ**
**வெஞ்சின விறல்வேற் காளையோடு**
**அஞ்சில் ஒதியை வரக் கரைந்தீமே"**(4)

இதில் மகளைக்காண வேண்டும் என்ற தாயின் வேதனையை, உளவியல் சிந்தனையாக ஆசிரியர் கையாண்டுள்ளார்.

**ஆடுக செங்கீரை**

செந்தாமரைப் பூப் போன்ற திருவடிகளில் அப்பூவின் உள் இதழ்கள் போலச் சிவந்து இருக்கிறது. விரல்களில் சேர்ந்து விளங்கும் மோதிரங்களும் சதங்கைகளும், இடையில் சாத்தி இருக்கிற பொன் அரைநானும், காப்புடன் கூடிய மாதுளம் பூப் போன்ற பொன் மணிக்கோவையும், மோதிரமும், சிறிய பவள வடமும், மங்கலமான பஞ்சாயுதமும், தோள் வளையும், காதில் சாத்தியுள்ள குழையும், மகர குண்டலமும் வாளிகளும், நெற்றியில் தொங்கும் சுட்டியும் அமைத்து விளங்குமாறு எங்கள் குடிக்கு அரசே! ஆடுக செங்கீரை! எழுலகுக்கும் இறைவனே! ஆடுக ஆடுக! என்று பெரியாழ்வார் பாடியது போலவே குமரகுருபரர் அவர்கள் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் என்னும் நூலில் மீனாட்சியம்மை செங்கீரை ஆடுக என்று கூறுகிறார். அதன் பாடலாக,

**"அருள்மடை திறந்துகடை வெள்ளம் பெருகெடுத்து**
**அலைஎறிந்து உகள உகளும்**
**செங்கயல் கிடக்கும் கருங்கண் பசுந்தோகை**
**செங்கீரை ஆடியருளே"** (5)

என்று செங்கீரைப் பருவத்தில் பாடியுள்ளார். அதைப் போன்று பெரியாழ்வாரும்

**"மகரமும் வாளிகளும் சுட்டியும் ஒத்திலக**
**எங்கள் குடிக்கரசே! ஆடுக செங்கீரை!**
**ஏழலகும் உடையாய்! ஆடுக ஆடுகவே!"**

என்று ஊஞ்சல் ஆடும் போது குழந்தைகள் மன மகிழ்வினை அடைகின்றனர் என்ற உளவியல் சிந்தனைகளைக் கையாண்டுள்ளார் ஆசிரியர்.

**கொட்டாய் சப்பாணி:**

பொன்னால் ஆன அரை நாணோடு மாணிக்கம் இட்ட அரைச் சதங்கையும் அரையில் அசைத்து ஒலிக்க ஒப்பற்றச் சுட்டி நெற்றியில் தாழ்ந்து அசைய என் படியில் இருந்து கீழே இறங்கிப் போய் உன் தந்தையும் இடையர்களுக்குத் தலைவரும் ஆன நந்தகோபர் மடியில் இருந்து சப்பாணி கொட்டுக! அற்புதச் செயல்கள் செய்யும் மாயவனே சப்பாணி கொட்டுக.

மாணிக்கம் போன்ற உயர்ந்த மணிகளை அணிந்தவன் என்று பெரியாழ்வார் பாடியதைப் போலவே வள்ளலார் திருவருட்பாவில் அணிகலன்களைப் பற்றிக் கூறும் போது

**"நாகமணிப் பணிமிளிர அம்பலத்தே நடஞ் செய்"**-(6)

என்று பாடியுள்ளார்

தன் மடியில் இருந்து சப்பாணி கொட்டுவதை விட நந்த கோபர் மடியில் இருந்து சப்பாணி கொட்டுவதே தனக்கு மிக்க மகிழ்ச்சி என்று யசோதை சொல்வதாக இதில் கூறப்படுகிறது. இப்பாடலின்

வாயிலாக தாயானவள் தந்தை மற்றும் மகனின் உறவு நெருக்கமாக இருக்க விரும்புவாள் என்ற உளவியல் சிந்தனை காட்டப்படுகின்றது.

**தளர் நடை நடவாய்**

வெள்ளிய பற்கள் விளங்கத் தளர் நடை நடவானோ என்று பாடுவதை

**“அக்கு வடம் உடுத்து ஆமைத்தாலி பூண்ட**
**அனந்த சயனன்**
**தக்க மாமணி வண்ணன் வாசுதேவன்**
**தளர்நடை நடவானே”**
என்ற பாடல் கூறுகிறது. இதன் பொருளாக,

மிக்க ஒளியை உடைய இடையர்களின் கொழுந்தே! என்று ஒளியுடன், இடையர்களை ஒப்புமை காட்டியது சொல்லப்படுகின்றது.அதைப்போல

**“மையில் சுடரே மேலை சேர்தி நீயாயின் (7)**

**என்று கலித்துறையில் நெய்தல் திணையில்”**

தலைவியைப் பாடுகின்றனர்.

இவ் உலகங்களைத் தனக்கு விலையாகக் கொள்ளக்கூடிய பெருங்கடலில் வாழும் சுறா மீனின் வடிவத்தை ஒத்த மகரக் குழையை, உன் காதுகளுக்கு அணியும் பொருட்டுக் கொண்டு வந்துள்ளேன். உன் காதுகளுக்கு வலி ஏற்படாமல் இடுவேன். நீ விரும்பிய பொருள்களையெல்லாம் தருவேன். மாதவனே வருக என்று அழைக்கின்றனர் எனக் கூறுகிறார். இப்பாடலின் வாயிலாக குழந்தைகளின் நடையைக்காணும் மனமானது துன்பங்களை மறந்த நிலையை அடைகின்றது என்ற உளவியல் சிந்தனை கையாளப்பட்டுள்ளதை அறிகின்றோம்.

**முடிவுரை:**

குழந்தையைக் காண்போர் மற்றும் உடன் இருப்பவர்கள் மனமானது மகிழ்ச்சியடையக்கூடும் என்ற உளவியல் கருத்தினை ஆசிரியர் கையாண்டுள்ள திறம் இக்கட்டுரையின் வாயிலாகக் கண்டோம்.

**துணைநூற்பட்டியல்:**

1.குமரகுருபர சுவாமிகள் - பண்டார மும்மணிக்கோவை
2. குமரகுருபர சுவாமிகள் - காசிக்கலம்பகம்
3.மாணிக்கவாசகர் - திருவெம்பாவை
4. ஐங்குறுநூறு
5. குமரகுருபரர் மீனாட்சியம்மை பிள்ளத்தமிழ்
6.பூ.ஜெயராமன் - திவ்வியப்பிரபந்தத்திரட்டு.
7.பாவலர் மணி சித்தன் - வைணவ மங்கையர்.

ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# தேவை ஒரு தேவதை நாவலில் தனிமனித உளவியல்

20

முனைவர்.பா.றோ.சுபத்ரா,

கன்னியாகுமரி.

**ஆய்வுச்சுருக்கம்**

'தேவை ஒரு தேவதை நாவலில் தனிமனித உளவியல்' என்ற தலைப்பில் அமைந்த இக்கட்டுரை முன்னுரை தொடங்கி பல உட்தலைப்புகளைக் கொண்டு அமைகிறது. நாவலாசிரியர் திலகவதியைக் குறித்த செய்திகளும் இடம்பெற்றுள்ளன. மனித மனத்தின் பண்பு, ஆழ்மன உணர்வுகள், பாலுணர்வினால் ஏற்படும் ஆதிக்க உணர்வு, கோபமும் வெறுப்பும், அன்பின் உயர்வு, தன்னம்பிக்கை, தியாக உணர்வு, பிறரது வலியில் மகிழ்ச்சி கொள்ளல், காதல் போன்ற தனிமனிதனின் நடத்தைகள் சான்றுகளுடன் விளக்கப்பட்டுள்ளன.

**முன்னுரை**

காலச்சக்கர சுழற்சியின் தடயங்களைப்பதிவு செய்பவை இலக்கியங்கள்.சமூகத்தின் பிரச்சனைகள் மட்டுமல்லாது மனிதர்களின் யதார்த்த வாழ்க்கையையும் இலக்கியங்கள் பதிவு செய்கின்றன. 'எந்தவொரு படைப்பாளியும் உளவியலைத் தனியே கற்பதில்லை. வேண்டுமென்று புகுத்திப் பாடுவதில்லை' என்னும் கருத்திற்கேற்ப படைப்புகளின் ஊடே உளவியல் இருக்கக் காணலாம். உளவியல் என்பது உள்ளத்தின் கோலங்களையும், கோணங்களையும் அதன் விளைவுகளையும் ஆராய்கின்ற ஓர் அறிவியலாகும்.

**நாவலாசிரியர் திலகவதி**

தமிழிலக்கிய உலகில் தமக்கென தனி இடத்தைப் பிடித்தவர் எழுத்தாளர் திலகவதி. இவர் மக்களின் நலனைக் காக்கும் வண்ணம் புதுக்கருத்துக்களை நவீன தமிழிலக்கியங்கள் வாயிலாகத் தந்துள்ளார். இவரது படைப்புகள் பெரும்பாலும் பெண்களை மையப்படுத்தியும், அவர்களுடைய சமூக சிக்கல்களை அலசி ஆராய்வதாகவும் உள்ளன. அவற்றை உளவியல் நோக்கில் ஆராயும்போது படைப்பாசிரியரின் மன உணர்வும், பாத்திரங்களின் மன உணர்வும் தென்படுகின்றன. பொதுவாகப் படைப்புகளில் தனிமனிதப் பிரச்சனைகள் இயல்பாக வெளிப்படக்கூடும். இவ்வகையில் திலகவதியின் '**தேவை ஒரு தேவதை**' நாவலில் காணலாகும் தனிமனித எண்ணங்கள், செயல்கள், உள்மன நினைவுகளை சித்தரிக்கும் செயல்கள் முதலிய நிகழ்வுகளின் அடிப்படையில் தனிமனிதனின் நடத்தையை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**மனித மனத்தின் பண்பு**

மனித மதிப்பு என்பது பண்பு சார்ந்தது.பண்பு மனிதனின் மனதின் ஏற்புடைமை சார்ந்தது. இதனால் தான்,

> **"அரம்போலும் கூர்மையரேனும் மரம்போல்வர்**
> **மக்கட் பண்பில் லாதவர்"** **(குறள் 997)**

என்று பண்பற்ற அறிவு வளர்ச்சியையும்,

**“நச்சப்படாதவன் செல்வம் நடுவூருள்**

**நச்சு மரம் பழுத்தற்று”** **(குறள் 1008)**

என்று பண்பற்றவனின் பயன்படாச் செல்வத்தையும் ஓரங்கட்டி நிறுத்துகிறார் வள்ளுவர்.

**பாலுணர்வினால் ஏற்படும் ஆதிக்க உணர்வு**

“எப்போது பால் உணர்ச்சிக்கு மனம் முக்கியமான இடம் கொடுக்கின்றதோ அப்போது அது தீராத பிரச்சனை ஆகிறது” என்று ஜே. கிருஷ்ணமூர்த்தி குறிப்பிடுகிறார்.தனிமனிதன் தன் மனம் போன போக்கில் வாழ முற்படும்போது அது சமூகப் பிரச்சனைக்கும் வழிவகுக்கிறது.இதற்கு எடுத்துக்காட்டாக அமைகிறது சசி என்ற கதாப்பாத்திரம்.ஆண் என்ற ஆதிக்க உணர்வு மேலோங்க அவன் செய்யக்கூடாதவற்றை மட்டுமே செய்பவன். **“நோ பார்க்கிங்” போர்டுக்குக் கீழே வண்டியை நிறுத்துவான். “பூக்களைப் பறிக்காதீர்கள்” என்ற அறிவிப்புகள் இருக்கும் இடங்களில் மட்டுமே பூக்களைப் பறிப்பான். “தொடாமல் பார்க்கவும்” என்ற எச்சரிக்கைப் பலகை இருக்கிற இடங்களில் வைக்கப்பட்டிருக்கும் பொருட்களை மட்டும் தொட்டுப்பார்ப்பான். கேமிராவுக்கு அனுமதி மறுக்கப்படுகின்ற இடங்களில் படம் எடுப்பான். அமைதியைக் கோரும் நூலக அறிவிப்புகளின் அருகில் நின்று பெருங்குரலில் பேசுவான்**’[1] என்ற வரிகளிலிருந்து சசியின் ஆதிக்க உணர்வு வெளிப்படக் காணலாம்.

**ஆழ்மன உணர்வுகள்**

உமா தன் தாயான டாக்டர் கங்காவைப் போல் தான் அழகாக இல்லை என்ற அவளது மன உணர்வே எப்போதும் கங்காவோடு தன்னை ஒப்பிட்டுப் பார்க்கத் தூண்டியது.இத்தகைய மன உணர்வே பிறரிடம் எரிச்சலையும் கசப்பையும் காட்டுவதற்கான காரணமாக அமைகிறது. வீட்டிற்கும் மருத்துவமனைக்கும் வந்து போகிறவர்கள் எல்லாம் கங்கா உமா மீது அதிக அன்பு வைத்திருப்பதாகவும், கங்கா மிகவும் புத்திசாலி என்றும் கூறும்போது உமாவுக்கு ஆத்திரம் பொங்கி எழுகிறது. மேலும் கங்காவின் அழகை மற்றவர்கள் பாராட்டும்போது உமா உச்சகட்ட வெறுப்பைக் கொட்டுகிறாள்.ஆழ்மனதில் பதிந்துள்ள எண்ணங்களின் வெளிப்பாடு தான் உமாவை இப்படி வெறித்தனமாக நடந்துகொள்ளச் செய்கிறது.

**கோபமும் வெறுப்பும்**

மனப்போக்குகள் என்பவை ஒரு கூட்டுத்தொகுதியான மன உந்துதல்கள், தனித்தனி உணர்வுகளாய் வெளிப்படுத்தப்பட்டு விருப்பு, வெறுப்பு, அன்பு போன்ற எண்ணற்ற மன வெளியீடுகளாய் உருப்பெறுவனவாகும். பெண்களை விட ஆண்களே கசப்புணர்ச்சி, விரோதத் தாக்குதல், எதிர்த்தல், போட்டி மனப்பான்மை, குரோதம் போன்ற மனோபாவங்களைப் பெற்றிருக்கின்றனர். பெண்கள் பெரும்பாலும் பிறப்பினாலேயே சாந்தமும், அமைதியும், கூடி வாழும் உள்ளமும் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். இருப்பினும் வெறுப்பும் விரோதத் தாக்குதலும் ஒருவன் கற்றுக்கொள்வதனாலேயே ஏற்படுகின்றன.

தேவை ஒரு தேவதை நாவலில் வரும் உமாவுக்குத் தாய் தன் மீது பாசம் காட்டவில்லை என்ற எண்ணம் மேலோங்கியிருந்தது. நோயாளிகள், தன் கூட வேலை செய்பவர்கள் என எல்லோர் மீதும் கவனம் செலுத்திவிட்டு சொந்த மகளான தனக்கு மட்டும் கடைசி இடத்தைக் கொடுத்திருப்பதாக நினைத்து நினைத்து கோபத்தின் உச்சகட்ட விளிம்பிற்கே சென்றுவிடுகிறாள் உமா. கோபம் அதிகரிக்கும்போது மனிதன் நிலை தடுமாறுகிறான்.ஆத்திரத்தில் எடுக்கும் எந்த முடிவும் சரியானதாக இருக்காது.இதனைத் தெளிவுபடுத்தும் விதமாக சசியுடன் சேர்ந்து வாழத் தீர்மானித்த உமா வீட்டை விட்டு வெளியேறி கஷ்டப்படுவதாகக் கூறுகிறார் ஆசிரியர்.

**அன்பின் உயர்வு**

அன்பு என்பது நெருக்கமான உள்ளப்பிணைப்பு தொடர்பான ஓர் உணர்வும் அனுபவமும் ஆகும்.அன்பு என்னும் உணர்வு பல்வேறு மட்டங்களில் வெளிப்படுத்தப்படுவதைக் காணலாம்.தாய் மீதான அன்புக்கு சிறப்பான இடம் உண்டு.அன்பு அதன் பல்வேறு வடிவங்களில் மனிதர்களிடையேயான தொடர்புகளை வலுப்படுத்தும் ஒரு காரணியாக உள்ளது.மனிதனின் மனநோய்க்கு அன்பு அருமருந்தாகும்.

உமா தனது தாய் தன் மீது அன்பு காட்டவில்லை என்று ஆத்திரமடைந்து வெறுப்புற்றாள். தன்மீது உமாவுக்கு ஏன் இத்தனை வெறுப்பு என்று புரியாமல் தவித்த கங்காவுக்கு “**உங்க மனசுக்குள்ள இருந்த அன்பையும் பாசத்தையும் அவ தானா புரிஞ்சுக்கணும்னு நீங்க எதிர்பார்த்தீங்க. அப்படி மனசுக்குள்ள புகுந்து பார்க்க முடியாதுன்னு தான் இயற்கை நமக்கு பேச்சைக் கொடுத்திருக்கு. உமாவுக்கு நேரம் ஒதுக்கி நீங்க அவளோட வாய் நிறைய மனம் விட்டுப் பேசியிருக்கணும்.அன்பா இருந்தா மட்டும் போதாது டாக்டர்.சில சமயங்களில் அதை வெளிப்படையாக் காட்டறதும் அவசியம் தான்**”[2] என்று கங்காவின் நண்பரான டாக்டர்.ராமகிருஷ்ணன் பதிலளிக்கிறார்.மனதளவில் எவ்வளவு தான் அன்பு வைத்திருந்தாலும் அதை வெளிப்படுத்தினால் மட்டுமே பலன் உண்டு என்பதை இதன் மூலம் அறிய முடிகிறது.

**தன்னம்பிக்கை**

தன்னம்பிக்கை ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் ஆணிவேராக உள்ளது.

**“நம்பிக்கை நார் மட்டும்**
**நம் கையில் இருந்தால்**
**உதிர்ந்த மலர்கள் ஒவ்வொன்றும்**
**தானாய் வந்து ஒட்டிக்கொள்ளும்”**[3]

என்னும் கவிதை வரிகள் தன்னம்பிக்கையின் முக்கியத்துவத்தை விளக்குகின்றன.

பெண்கள் சமுதாயத்தின் பிரச்சனைகளைக் கண்டு துவண்டு விடாமல் உறுதியாக துணிச்சலுடனும் தன்னம்பிக்கையுடனும் போராடினால் அவர்கள் செல்ல நினைக்கும் உயரத்தை அடைந்துவிடலாம். அதனால் தான் உலகத்தில் போராட்டங்களுக்குள் வாழும் மனித இனத்தைப் பார்த்து,

"**புரிந்துகொள்**

**சுடும் வரைக்கும் நெருப்பு**
**சுற்றும் வரைக்கும்**
**பூமி**
**போராடும் வரைக்கும்**
**மனிதன்**
**நீ மனிதன்**"[4]

என்று விழிப்புணர்வைத் தூண்டுகிறார் கவிஞர் வைரமுத்து.

உமா சசியைக் காதலித்தததை அவளது தாய் கங்கா ஏற்றுக்கொள்ளவில்லை.இதனால் தாயின் மீது கோபம் கொண்டு வீட்டை விட்டு வெளியேறினாள்.தந்தையின் இரண்டாவது மனைவியான நாகரத்தினம் உமாவிடம் **"ஒவ்வொரு நாளும் கத்தியைக் கொஞ்சம் கொஞ்சமா முழுங்கறாப்பல இருந்திருக்கும்.உங்கம்மாவுக்குத் துணையில்லாத வாழ்க்கை பாலைவனமாத் தான் இருந்திருக்கும்.உன்னை ஆளாக்குறதுக்காகவே உயிரை சொமந்திருப்பாங்க. அவங்க மனசு நோகக்கூடாது"**[5] என்று கங்காவைப் பற்றி உமாவுக்குப் புரிய வைத்தாள்.மேலும் உமாவின் தாய் உத்தமி என்றும், சமூகத்தில் பெண்கள் தனித்து வாழ்வது கடினம் என்றும் கூறினாள். இதன் மூலம் ஆணாதிக்கம் மிக்க சமுதாயத்தில் பெண்கள் சுய மரியாதையுடன் வாழ்வதற்குத் துணிவும் தன்னம்பிக்கையும் இன்றியமையாதது என்பதைப் படைப்பாசிரியர் தெளிவுபடுத்தியுள்ளார்.

**தியாக உணர்வு**

தியாகம் என்பதற்குத் தமிழ் அகராதியில் 'பிறருக்காக ஒன்றை விட்டுக்கொடுத்தல்;: கைவிடல், கொடை என்று பொருள் காணப்படுகிறது6. தியாகத்தில் ஆண்களை விடப் பெண்களே சிறந்தவர்கள். மனைவி என்ற முறையில் குடும்பச்சிக்கல்களை எதிர்கொண்டு கணவனின் அடக்குமுறைக்கு ஆளாகியும், ஒரு சகோதரியாகக் குடும்ப நிர்வாகத்திற்காக உழைக்கவும், ஒரு தாயாகத் தன் குழந்தைக்காக வாழ்ந்தும் பெண் தியாகத்தை மேற்கொள்கிறாள். அன்னையாக, மனைவியாக, சகோதரியாக, மருமகளாக குடும்பத்திற்குள் தன்னை ஐக்கியமாக்கிக் கொண்டு தன் விருப்பு வெறுப்புகளை வெளிப்படுத்தாமல் குடும்ப உறுப்பினர்களின் நலனுக்காக வாழ நினைக்கும் பெண் தியாக உணர்வு உடையவள்.

கங்காவுக்குப் பெண் குழந்தை பிறந்திருக்கக் கூடாதென்று அவளது கணவன் சிவராமன் கூறியதைக் கேட்ட கங்கா தன்னை இழந்தாவது தன் குழந்தையைக் காப்பாற்ற வேண்டுமென முடிவெடுத்தாள். "தாய்மை என்பது மனத்தின் பண்பு அல்லவா?அன்பும் அருளும் கருணையும் ஆக மேன்மையான குணங்கள் எல்லாம் ஒன்றெனக் கலந்த தெய்வீக நிலை அல்லவா? முழுக்க முழுக்க பிறரைச் சார்ந்திருக்கும் பச்சைக் குழந்தையை உலகிற்குத் தந்து அது தன் கால்களிலேயே நிற்க வலிமை பெறும் வரை அதை ஆளாக்கி விடுவது அல்லவோ மானுட தர்மம்? தன்னையே தந்தாவது தான் பெற்ற குழந்தையைக் காப்பாற்ற வேண்டும் என்று அல்லவா தாய் நினைப்பாள்?தனது வசதிக்காகவும்

உணவுக்காகவும் தான் பெற்ற குட்டிகளைத் தின்னும் நாயைப் போல ஒரு பெண் எப்படி இயங்க முடியும்?"[7] என்று நினைத்தாள்.

எந்தத் தாயும் தன் குழந்தை ஆணாகவோ பெண்ணாகவோ இருந்தாலும் தன் உயிரைப் பணயம் வைத்தாவது குழந்தையைக் காப்பாற்ற நினைப்பாள்.அத்தகைய தாய்மை உணர்வுக்கும் தியாக மனப்பான்மைக்கும் உதாரணமாக கங்கா பாத்திரப்படைப்பு அமைந்துள்ளது.

**பிறரது வலியில் மகிழ்ச்சி கொள்ளல்**

பிறரின் துன்பத்தைக் கண்டு இன்புறுதல் ஒரு வகையான பாலியல் முரண் செயல். பிறரை அடித்தல் அல்லது துன்புறுத்துவதன் மூலம் காமக் கிளர்ச்சியும் இன்பமும் பெறுவது அது. "வலியூட்டுவதன் மூலம் காம இன்பம் அடைதல், கொடுஞ்செயலால் அடையும் இயற்கைக்குப் புறம்பான இன்பம்"[8] என்று சொல்லுக்கு அகராதி பொருள் கூறுகிறது.

சிவராமனிடம் பெனிசிலின் ஊசி போட்டுக்கொண்ட இளம்பெண் ஒருத்தி உணவை வாங்க உடலை விற்கும் பரிதாபத்திற்குரியவள்.இளமையை விற்று இன்னலை வாங்கும் அந்தப் பெண்ணுக்கு காலாவதியாகிவிட்ட மருந்தை சிவராமன் பயன்படுத்தியதை அறிந்த கங்கா அவனிடம் கோபப்பட்டாள். ஆனால் பிறரது வலியில் இன்பம் காணும் சிவராமன் 'போனாப்போறா வுடு.பெரிய கண்ணகி தடுமாறுறாளாம்.வாழ்க்கையிலேயே தடுமாறுறவ தானே அவ' என்று வார்த்தைகளால் சுட்டெரிக்கிறான். மருத்துவம் என்பது மரணத்தை அன்றாடம் தரிசிக்கின்ற தொழிலாக இருந்தாலும் அந்த இளம்பெண்ணின் சாவும் சிவராமனின் மனிதத் தன்மையற்ற செயலும் கங்காவை வெகுவாகப் பாதித்ததாகக் கூறுகிறார் ஆசிரியர்.

**காதல்**

காதல் என்பதற்குத் தமிழகராதி அன்பு, ஆந்தை, பல்லி முதலியவற்றின் ஒலி, ஆவல், ஒரு பாடல், கொலை, காம நோக்கம் என்ற பொருளினைக் குறிப்பிடுகின்றது9.கருத்தொருமித்த இரு மனங்களின் பரிமாற்றமே காதல் ஆகும்.காலங்கள் மாறினாலும் காதல் என்ற உணர்வு மட்டும் இருமனங்களிடையே ஆத்மார்த்தமானதொரு துடிப்பினை ஏற்படுத்தக் கூடியது.கங்காவும் சிவராமனும் காதல் திருமணம் செய்துகொண்டவர்கள்.காதலிக்கும்போது ஒருவர் மீது ஒருவர் கொள்ளும் பாசம், எதிர்பார்ப்பு, ஏக்கம், இவையனைத்தும் இயல்பாகவே அமைந்துவிடுகிறது.தான் ஒருவனால் நேசிக்கப்படும்போது பெண்ணின் மனதில் ஏற்படும் சுகமான அனுபவங்கள் தான் கங்காவின் மனதிலும் ஏற்பட்டன.திருமணத்திற்குப் பின்னர் சிவராமனின் நடவடிக்கைகள் அடியோடு மாறிவிட்டன. காதலிக்கும் சமயத்தில் பெண்ணின் உள்ளத்தில் ஆண் பற்றிய மதிப்பீடும் யதார்த்த நிலைக்கு அப்பாற்பட்டே விளங்கும் என்பதைக் கங்கா பாத்திரப்படைப்பு மூலம் உணர முடிகிறது.

**தொகுப்புரை**

தேவை ஒரு தேவதை நாவலில் காணப்படும் தனிமனித எண்ணங்கள், செயல்கள், உள்மன உணர்வுகளை சித்தரிக்கும் செயல்கள் முதலிய நிகழ்வுகளின் அடிப்படையில் தனிமனித நடத்தையை ஆராய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது. மனித மதிப்பு என்பது பண்பு சார்ந்தது.அன்பு என்பது நெருக்கமான உள்ளப்பிணைப்பு தொடர்பான ஓர் உணர்வும் அனுபவமும் ஆகும்.மனிதனின் மனநோய்க்கு அன்பு அருமருந்தாகும்.தன்னம்பிக்கை மனித வாழ்வில் ஆணிவேராக உள்ளது.பெண்கள் தியாக உணர்வில் சிறந்து விளங்குகின்றனர்.மனிதன் நல்ல எண்ணத்தோடு வாழ வேண்டும்.

**முடிவுரை**

மனிதன் ஒரு சமூக விலங்கு.அவனால் தனித்து வாழ இயலாது.அவன் சமூக வாழ்க்கைக்கு கட்டாயப்படுத்தப்பட்டுள்ளான்.வாழ்க்கைச் சிக்கல்கள் அனைத்திற்கும் மனமே காரணமாக அமைகின்றது. தனிமனிதன் தன் எண்ணங்களை அடக்கியாளும்போது தான் வாழ்வில் நல்ல நிலையை அடைய முடியும்.மனிதனின் துன்பத்திற்கு கோப உணர்ச்சியும் சந்தேக மனப்பான்மையும் காரணமாகின்றன.ஆண்களின் பாலுணர்வுத் தாக்கத்தால் வெளிப்படும் ஆதிக்க உணர்வும் பிறரை உளச்சிக்கலுக்கு ஆளாக்குகிறது. தன்னம்பிக்கை குறைந்துவிடும்போது தாழ்வு மனப்பான்மை மேலோங்குகிறது.பொறுமைக் குணமும் தியாக உணர்வும் பெண்களின் அணிகலன்களாகும். பிறரது துன்பத்தைக் கண்டு மகிழ்ச்சி கொள்வது ஒருவித உளநோயாகும்.தனிமனிதனின் நல்ல நடத்தையே உளச்சிக்கல்களுக்குத் தீர்வாகும்.மன வலிமையும் மனக்கட்டுப்பாடும் உள்ள மனிதனால் மட்டுமே தனது பிரச்சனைகளுக்கு எளிதில் தீர்வு காண முடியும்.

**சுருக்கக் குறியீடுகள் :**

1. ப. - பக்கம்
2. குறள் - திருக்குறள்
3. P - page
4. தே.ஒ.தே - தேவை ஒரு தேவதை

**அடிக்குறிப்புகள் :**

1. இராம.பெரிய கருப்பன் (தமிழண்ணல்), குறிஞ்சிப்பாட்டு- இலக்கியத் திறனாய்வு விளக்கம், ப.102
2. திலகவதி, திலகவதி நாவல்கள் - । தேவை ஒரு தேவதை, ப.189
3. திலகவதி, திலகவதி நாவல்கள் - । தேவை ஒரு தேவதை, ப.355
4. கவிஞர் கவிதாசன், தன்னம்பிக்கையே வெற்றி, ப.491
5. வைரமுத்து, வைரமுத்து கவிதைகள், ப.349
6. திலகவதி, திலகவதி நாவல்கள் - । தேவை ஒரு தேவதை, ப.349
7. திலகவதி, திலகவதி நாவல்கள் - । தேவை ஒரு தேவதை, ப.246
8. Universal Deluxe Dictionary, P.716
9. கழகப் புலவர் குழுவினர், கழகத் தமிழ் அகராதி, ப.320

ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# சங்க கால மகளிரின் கல்வி உளவியல்

21

ந. சுமதி, உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை, கோபி கலை அறிவியல் கல்லூரி, கோபி.

**ஆய்வுச் சுருக்கம்**

சங்க கால மகளிர் இல்லறத்தில் சிறந்து விளங்கியது போலவே கல்வியிலும் சிறந்து விளங்கினர் என்பதை எடுத்துக் காட்ட பல குறிப்புகளுடன் கீழே விளக்கப்பட்டுள்ளன. கல்வி என்பதைப் பற்றிய விளக்கத்தின் மூலம் கல் என்ற சொல் தோன்றியதைப் பற்றியும் சங்க காலத்தில் கல்வி பெற்ற இடத்தையும் அரசருக்கும் மக்களுக்கும் வெவ்வேறான கல்வி பயிற்றுவிக்கப்பட்டதையும் இங்கு காட்டப்பட்டுள்ளது. மேலும், பெண்பாற் புலவர்கள் சிறப்பான கல்வி பெற்று சிறப்புடன் இருந்ததையும் அகம் புறம் பற்றியும் மன்னர்களின் ஆட்சி முறை பற்றி பெண்பாற் புலவர்கள் கூறியவற்றை இங்கு காணலாம்.

**கடவுச் சொற்கள்:** உயர்ச்சி , எஜுகேஷன் , துணங்கை , ஆடுகளமகள் , வரையறை

**முன்னுரை**

சங்ககால மகளிர் இல்லறத்தில் சிறந்து விளங்கியது போன்றே கல்வியிலும் கலைகளிலும், விளையாட்டுக்களிலும் தொழிற்திறனிலும் சிறந்து விளங்கினர். சங்க காலத்தில் கல்வி பெற்ற இடம் மகளிரின் கல்வித் திறன், கலைகளில் அவர்கள் கொண்டிருந்த ஈடுபாடு, விளையாடிய விளையாட்டுக்கள், குடும்பம், சமுதாயம் ஆகியவற்றின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்ட தன்மை ஆகியவற்றை ஆராய்வது மிகவும் இன்றியமையாதது ஆகும்.

**கல்வி விளக்கம்**

'கல்வி' என்னும் சொல் 'கல்' என்னும் முதனிலையினியின்றும் தோன்றியதாகும். கல்லுதல் என்பது 'தோண்டுதல்' என்று பொருள்படும். அதனால், மனிதரின் உள்ளார்ந்த மன ஆற்றல்களை அறிவுத் திறன்களை மலர்வித்து வெளிக்கொணர்தற்கும் அவற்றை வாழ்க்கைக்குப் பயன்படுமாறு செய்வித்தற்கும் உதவியாக அமையும் முயற்சியே கல்வி என்று கொள்ளப்படுகின்றது. தமிழில் கல்வி என்பதற்கு நேராக 'எஜுகேஷன்' என்னும் ஆங்கிலச் சொல்லின் அடிச்சொல்லும் 'வெளிக் கொணர்தல்' எனப்பொருள்படும்.

"எஜுகேரி என்னும் 'இலத்தீன்' மொழிச் சொல்லாக அமைந்திருப்பதனை அறிஞர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர்"[1]. மனிதன் முதன் முதலில் கற்றுக் கொண்ட தொழில் உழவுத்தொழிலாதலின், "ஞா. தேவநேயப்பாவாணர் தமிழில் கல்வி என்னும் சொல் முதலில் உழவுத் தொழிலையே குறித்திருத்தல் வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்"[2].

**கல்வியும் சமூகமும்**

இன்றுள்ள சமூக மரபுகளை இனிவரும் சந்ததியினருக்குக் காத்தளிக்கும் வாய்ப்பாக அமைவது கல்வி என்று கூறலாம். அஃது அறிவையும் பயிற்சியையும் குழந்தைகளுக்கு அளிப்பதோடு எதிர்காலத்தில் அவர்கள் வாழ்வாங்கு வாழத் தேவையான பழக்கவழக்கங்களையும் எண்ணங்களையும் அவர்களிடையே வளர்க்கவும் இன்றியமையாததாகும். வாழ்க்கையின் விழுமிய பொருளையும் உயர்ந்த நோக்கங்களையும் கடைபிடிக்கத் தேவையான பயிற்சி அளித்தல் கல்வியின் நோக்கமாக இருத்தல் வேண்டும். "கண்ணென்ப வாழும் உயிர்க்கு" (குறள் 392) என்று கல்வியைப் பற்றி வள்ளுவர் குறிப்பிடுகிறார். கல்வியின் மாட்சியினை உணர்ந்த சங்ககாலத் தமிழருள் ஆடவர்களையொப்ப மகளிரும் கல்வியிற் சிறந்து விளங்கியிருந்தமையினை அக்கால இலக்கியங்கள் காட்டுகின்றன.

**கல்வியும் குடும்பமும்**

கற்பித்தலில் குடும்பம் இன்றியமையாத பங்கினை ஆற்றுகிறது. ஒருவன் கல்வி கற்பதற்காக அவனுக்கு வேண்டிய சூழல்களையும், உதவிகளையும் பெற்றோரைத் தலைமையாகக் கொண்ட குடும்பம் உருவாக்கி உவந்தளிக்கின்றது. நன்கு வளர்ச்சி பெற்ற சமூகத்தில் கல்விப் பணியைச் செவ்வனே செய்யச் சிறப்பான அமைப்புகள் செயற்படுகின்றன. குடும்பம் அல்லது உட்குழுவின் உறுப்பினர் என்ற முறையிலும் மக்கட் சமுதாயத்தில் ஒருவன் என்ற முறையிலும் ஆக மூன்று வழிகளில் பொதுவாக மனிதனுக்குக் கல்வியறிவு புகட்டப்படுகிறது என்பர், பாங்கல் கிஸ்பர்ட்.

**சங்க காலத்தில் கல்வி பெற்ற இடம்**

சங்க காலத்தில் கல்வி பெரிதும் சிறப்பித்து பேசப்பட்டுள்ளது. "உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே"[3] என்னும் பாடலடிகள் கல்வி பெறுதலின் அருமையினையும் இன்றியமையாததையும் உணர்த்துவதாக அமைந்துள்ளன. கல்வி பயில இளமைக்காலமே ஏற்றது என்று வரையறுக்கப்பட்ட பாங்கு காணப்படுகிறது.

"கற்பித்தான் நெஞ்சமுழுங்கப் பகந்துண்ணான் விச்சைக்கண், தப்பித்தான் பொருளோ போல் தமியவே தேயுமால்"[4] என்னும் கலித்தொகைப் பாடல் அடிகள் அக்காலத்தில் ஆசிரியர் நன்கு மதிக்கப்பட்டமையினையும், கற்ற மாணவர்கள் ஆசிரியருக்குக் கைம்மாறு செய்யவேண்டியன பற்றியும் எடுத்துரைக்கின்றன. அரசன் கற்கும் கல்வி, பிற கல்வியினின்றும் வேறுபட்டுக் காணப்பட்டது. அரசன், அறிவுடையனாயின் அவன் ஆட்சி சிறப்பதோடு குடிமக்களும் சிறந்து விளங்குவர்.

சங்ககால சமுதாய அமைப்பில் கல்விக்குப் பொறுப்பேற்றிருந்தவர்களுள் புலவர்களும் பாணர் முதலியோரும் குறிப்பிடத்தக்கவராவர். சங்க நூல்கள் வாயிலாகப் பண்டைத் தமிழகத்தில் வாழ்ந்த புலவர்கள் அவர்களின் கல்வியறிவு, தமிழ்ச் சான்றோர்களைப் பாதுகாத்த விதம் அவர்களின் புகழ் போன்றவற்றை அறிய முடிகிறது.

கல்வி கற்பதில் ஆடவர், பெண்டிர் இருவரும் சிறந்து விளங்கினர். ஆடவர் போர்க்கலை, பொருளீட்டுதல் முதலான துறைகளிலும் பெண்கள் இல்லறம் காத்தல், நுண்கலை போன்ற துறைகளிலும் பயிற்சி அளிக்கப் பெற்றனர். சமுதாயத்தின் பல பிரிவினரும் அரசன் முதல் எளிய குடிமகள் ஈறாக அனைவரும் கல்வி கற்பதில் பெருமிதம் கொண்டனர்.

கல்வி கற்ற ஒருவன் கீழ்க்குலத்தவன் ஆயினும் உயர்ச்சி பெறுவான். இவ்வாறு அமையும் கல்விச் சிறப்பினை,

**"பிறப்போரன்ன உடன் வயிற்றுள்ளும்
சிறப்பின் பாலால் தாயும் மனம்திரியும்
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக வென்னாது அவருள்
அறிவுடையோனாறு அரசுஞ் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே"[6]**

என்று ஆரியப்படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியன் புலப்படுத்தியுள்ளார்.

**பெண்பாற் புலவர்களின் கல்வித்திறன்**

பண்டைய தமிழ்ச் சமுதாயத்தில் பெண்டிர் கல்வி கற்கும் உரிமையும், கவிபாடும் திறமையும் பெற்றிருந்தனர். அக்காலப் சமுதாயத்தில் 'பெண் கல்வி' பெற்றிருந்த ஏற்றத்தை உணரமுடிகின்றது. தொல்காப்பியரும், தலைவன், தலைவிக்குக் கூறிய பத்துப் பொருத்தங்களுள் 'கல்வி'யையும் ஒன்றாகக் குறிப்பிட்டுள்ளார்.

'சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணைகள்' என்னும் நூலில் ந. சஞ்சீவி முப்பத்தாறு பெண்பாற் புலவர்களைப் பற்றியும், அவர்கள் பாடிய புற, அகப்பாடல்களைப் பற்றியும் வரையறை செய்துள்ளார். ஔவையார் நீங்கலாக ஏனைய பெண்பாற்புலவர்கள் அகப்பொருட்பாடலை மிகுதியாகவும் புறப்பொருள் பாடலைக் குறைவாகவும் பாடியுள்ளனர்.

ஆண்பாற் புலவர் பெயருக்கு முன்னால் தாயின் பெயர் வராது, தந்தையின் பெயரே வருவது குறிப்பிடத்தக்கது. ஆனால், 'நாகையார்' என்ற பெண்பாற்புலவர் பெயருக்கு முன்னால் அஞ்சியத்தை என்ற அவர் தாயின் பெயர் காணப்படுகிறது.

**ஆதிமந்தியார்**

இவர் கரிகாலனின் மகளும் ஆட்டனத்தியின் மனைவியும் ஆவார். ஆதிமந்தி எனவும், மந்தி எனவும் இவர் பெயர் வழங்கப்பட்டுள்ளது. இவர் பாடிய பாடல் குறுந்தொகையில் இடம்பெற்றுள்ளது. "கழார் என்னும் ஊரைச் சார்ந்த காவிரித்துறையில் நீராடிய காலத்து ஆட்டனத்தியைக் காவிரி கவர்ந்து கொள்ள, அவனைக் காணாது பலவிடத்தும் தேடிச் சென்று அழுது அரற்றியதை அகநானூற்றுப் பாடல்களால் அறிய முடிகிறது". ஆதிமந்தி தாம் பாடிய குறுந்தொகைப் பாடலில் மகளிர் ஆடும்

துணங்கைக் கூத்தைக் குறிப்பிடுவதோடு, ஆடுகளமாகிய யான், வீரர் கூடியுள்ள விழாவிலும், மகளிர் தம்முள் தழுவியாடும் துணங்கைக் கூத்திலும் ஆடுகளமகனைக் கண்டேனில்லை என்று தன் வருத்தத்தையும் புலப்படுத்தி உள்ளார்.

**ஔவையார்**

இவர் சங்க காலத்தில் வாழ்ந்த சிறப்பு வாய்ந்த பெண்பாற் புலவர்களில் ஒருவர். அகம் புறம் ஆகிய இரு துறைகளிலும் சிறந்த கருத்துக்களை மிக நுட்பமான முறையில் வெளிப்படுத்தி உள்ளார். அதியமான் நெடுமான் அஞ்சியின் அவைக்களப் புலவராக விளங்கிய இவர், அவனுக்காகத் தொண்டைமானிடம் தூது சென்றார். சங்க காலத்தில் வாழ்ந்த பெண்பாற் புலவர்களில் மிக அதிகமான பாடல்களைப் பாடியவர் என்ற சிறப்புக்குரியவர். இவர் எட்டுத்தொகையில் ஐம்பத்தொன்பது பாடல்களைப் பாடியுள்ளார். இவர் அதியமான் நெடுமானஞ்சி, தொண்டைமான், பொகுட்டெழினி, நாஞ்சில் வள்ளுவன், பாரி, முடியன், பசும்பூட் பொறையன், கைவண்கிள்ளி, கோசர், மழவர், வெள்ளிவீதி, பரணர் ஆகியோரைப் பற்றிப் பாடியுள்ளார்.

**நல்வெள்ளியார்**

இவர் பெயர் மதுரை நல்வெள்ளி எனவும், காணப்படுவதால் இவர் மதுரையைச் சார்ந்தவர் என்பது தெரிகிறது. இவர் பாடியனவாக அகநானூற்றில் (அக 32) ஒன்றும், குறுந்தொகையில் (குரு 375) ஒன்றும், நற்றிணையில் (நற் 7,47) இரண்டுமாக நான்கு பாடல்கள் காணப்படுகின்றன. இவர் அருவினையும் வெறியாட்டினையும் அழகுறப் புனைந்து காட்டியுள்ளார். அருவியின் ஒலிக்கு முரசின் ஒலியை உவமையாக்கிக் காட்டியுள்ளார்.

**பாரி மகளிர்**

பாரி மகளிர் பாடிய பாடலொன்று புறநானூற்றில் (புற 112) கையறுநிலைத் துறையில் அமைந்துள்ளது. தந்தை உயிருடன் இருந்த போது வாழ்ந்த நிலையும், தந்தை இறந்த பின் ஏற்பட்ட நிலையையும் அவல உணர்வுடன் பாராட்டியுள்ளார்.

**பூதப்பாண்டியன் தேவி பெருங்கோப்பெண்டு**

பாண்டி மாதேவியாகிய இவர், தாம் பாடிய புறப்பாடற்கண் (புற 246) கைம்மை நோன்பு பற்றிக் குறிப்பிட்டுள்ளார். அப்பாடல் வாயிலாகத் தீப்பாய்ந்து உடன்கட்டை ஏறுதலை மகழ்வோடு விரும்பிய அவளது மனப்பாங்கு புலனாகிறது.

**மாறோக்கத்து நப்பசலையார்**

இவர் புறநானூற்றில் ஏழு பாடல்களும் (புற 37,39,126,174,226,280,383) நற்றிணையில் ஒரு பாடலுமாக (நற்304) எட்டுப் பாடல்களைப் பாடியுள்ளார். முள்ளூர்க்கு வேந்தனாகிய மலையமான் திருமுடிக்காரியை கபிலர் புகழ்ந்து பாடினார் என்பதை,

**"புலனழுக் கற்ற அந்த ணாளன்**
**இரந்துசெல் மாக்கட்கு இனிஇடனின்றிப்**
**பரந்திசை நிற்கப் பாடினன்… என்றும்**
**பொய்யா நாவிற் கபிலன் பாடிய**
**மையணி நெடுவரை"-**[7]

என்றும் இவர் குறிப்பிட்டுள்ளார்.

**முடிவுரை**

தமிழ் இலக்கிய வரலால் சங்ககால வரையறை பற்றியும், சங்ககாலப் பெண்பாற் புலவர்களின் எண்ணிக்கை பற்றியும் அறிஞர்களிடையே கருத்துவேறுபாடு காணப்பட்டாலும், அக்காலத் தமிழ்ச் சமுதாயத்தில் விளங்கிய நாகரீகம், பண்பாடு ஆகியவற்றின் மாட்;சிபற்றி மாவட்ட கருத்துக்கள் தோன்றவேயில்லை. அக்காலத் தமிழகத்தில் கல்வியின் சிறப்பு நன்கு உணரப்பட்டுச் சமுதாயத்தின் அனைத்து நிலையிலும் நன்கு பரவித் திகழ்ந்து உள்ளது. வாழ்க்கையின் பிற துறைகளிற் போலவே கல்வியிலும் ஆண், பெண் வேறுபாடின்றி அனைவரும் கற்கும் நிலை இருந்துள்ளது. மகளிர் கல்வியில் சிறந்து விளங்கியுள்ளதைப் பெண்பாற் புலவர்கள் பாடிச் சென்றுள்ள சங்கப்பாடல்களில் கல்வித்திறத்தால் தான் நன்குணரலாம். சங்ககாலப் பெண்டிர் பெற்றிருந்த கல்விநிலை அவர்களுடைய மாட்சிக்குக் காரணமாக அமைந்தது.

**அடிக்குறிப்புகள்**

1. எஸ்,ஜே. பாஸ்கல் கிஸ்பர்ட், சமூகவியலின் அடிப்படைக் கோட்பாடுகள் (தமிழாக்கம், ஜெ. நாராயணன், 317)
2. ஞா. தேவநேயன், பண்டைத் தமிழ் நாகரிகமும் பண்பாடும்
3. புற 183: 1-2
4. கலி 149: 4-5
5. அக:45:13-14:75:10
6. புற 183
7. மு.நூ: 126:11-13: 174:10-11

**துணைநூற்பட்டியல்**

1. களவியல் என்ற இறையனார் அகப்பொருள், நக்கீரனார் உரை, சை.சி.நூ.கழகம், மறுபதிப்பு, 1969.
2. திவாகரம், கழக வெளியீடு, சென்னை, 1958.
3. தொல்காப்பியம் பொருளதிகாரம், நச்சினார்க்கினியர் உரை, சை.சி.நூ.கழகம், மறுபதிப்பு, 1983.
4. நன்னூல், காண்டிகையுரை, சை.சி.நூ.கழகம், சென்னை மறுபதிப்பு, 1983.
5. திருக்குறள், பரிமேலழகர் உரை, சை.சி.நூ.கழகம், சென்னை மறுபதிப்பு, 1967.
6. நாலடியார் உரைவளம், தஞ்சை சரஸ்வதி மகால் வெளியீடு 59, இரண்டாம் பதிப்பு. 1990.

ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

22

# கலாப்ரியாவின் கவிதைகளில் உளவியல் சிந்தனை

**ப.தாணப்பன்**
**திருநெல்வேலி.**

**முன்னுரை**

திருநெல்வேலி இலக்கியத் தோன்றல்களில் புதுக்கவிதை படைத்து விருது பெற்ற கவிஞர்களில் கலாப்ரியாவும் ஒருவர். சோமசுந்தரம் என்ற இயற்பெயர் கொண்ட கலாப்ரியா வங்கி அலுவலராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். 1973-ம் ஆண்டு முதல் இன்று வரை அவரது கவிதைப் படைப்புகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. "கணையாழி", "கசடதபற" மூலம் அறிமுகமான இக்கவிஞரின் படைப்புகள் வெளிவந்து பல தொகுப்புகளாய் இன்றைய வாசிப்பில் இருந்து வருகின்றன. தமிழ் இலக்கிய நண்பர்கள் தொடர்பால் இவர்தம் கவிதைப் படைப்புகளில் தமிழ் இலக்கியப் பதிவுகள் மிகுந்து காணப்படுகின்றன. "உள்ளத்து உள்ளது கவிதை" என்று கவிமணி கூறியதற்கு ஏற்ப கவிதைக்கு என்று கூறியதற்கு ஏற்ப கவிதை உருவாக்கங்களில் உளவியல் சிந்தனை இருப்பதில் வியப்பில்லை. அவ்வகையில் கவிஞர் கலாப்ரியாவின் கவிதைப் படைப்புகளில் காணலாகும் உளவியல் சிந்தனையைக் காணும் முயற்சியில் இக்கட்டுரை அமைகிறது.

**உளவியல் ஓர் விளக்கம்**

"மனிதனின் எண்ணத்திற்குத் தோற்றுவாயாக அமைந்திருப்பது மனம் மனிதமனம், உள்ளம் பற்றிய அறிவியல் ஆராய்ச்சியை உளவியல் என்பர்! மனித நடத்தையை ஆராயும் ஓர் அறிவியல் துறை. இதனை, நடத்தை மற்றும் அனுபவத்தை அறிவியல் முறையில் ஆராய்வதாகும்" (எஸ்.சந்தனம் கல்வி உளவியலும் சமூகம் பக்.3)

"உளவியல் என்பது உயிரினங்களின் நடத்தையைப் பற்றி அறியும் மைய முயற்சியாகும். குறிப்பாக, நம்மை நாமே அறியும் தனிப்பட்ட தேடுதலாகும். நமது உணர்வுகள், எண்ணங்கள் நாம் செய்யும் செயல்கள் போன்றவற்றோடு தொடர்புடையது உளவியல். இதனை உள்ளத்தைப் பற்றியும் அறிவியல் உளவியல் ((Science of mind) என்கிறார் சிக்மண்ட் ப்ராய்ட்"(தகவல் இணையவழி)

இது நடத்தையைப் பற்றிய அறிவியல் நடத்தையின் வகைகளைப் பற்றிய ஆய்வது என்கிறார் சில்மர். **(தகவல் இணையவழி)**

ஒரு கவிஞன் தன்னுள்ளே தான் ஆழ்ந்து தன் உள் மனத்தின் உணர்வுகளை நெளிவு சுளிவுகளில் இல்லாமல் அப்படியே பிறர்க்கு உணர்த்தும் இசைப்பாடல்களே தன் உணர்ச்சிக் கவிதையாகும். தன் உணர்ச்சிக் கவிதைகள் யாவும் உளவியல் சார்ந்தவையே. தான் கண்டதைக் காட்சிப்படுத்தும் கவிஞன், தன் உணர்வினை சொற்களில் வடித்து காட்சியாகக் காட்டுவான். அவ்வாறு காட்டப்படும் கவிதைகளில்

கவிஞனின் உள்ளம் வெளிப்படுவதால் அதுவும் உளவியல் சார்ந்தாகவே அமையும்.. படிமங்களை அமைக்கம் ஒவ்வொரு கவிஞனும் உளவியல் சிந்தனை உடையவனே தமது உணர்வு மூலம் படைக்கப் பெறும் கவிதைப் படைப்பில் முருகியல் உணர்வு வெளிப்படுத்தப்படம். முருகியல் உணர்வுடையவன் கவிஞன். முருகியல் உணர்வை வெளிப்படுத்த உவமை, உருவகம், படிமம், நையாண்டி (PARADY) போன்ற உத்திகளைக் கையாளுவதுண்டு அவ்வகையில் கவிஞர் கலாப்ரியா தொன்மங்களைப் பயன்படுத்தி தன் உள்ளக் கருத்துக்களை வெளிப்படுத்தும் பாங்கினைக் கவிதைச் சொற்களில் வரைந்து காட்டுவார்.

"சாக்காடுபோல்
அப்படியே
சாய்வு நாற்காலியில்
உறங்கிப் போனவனின்
பகல்க் கனவுகளை
நிர்ணயிக்கிறது
சுற்றிச் சுற்றி வரும்
ஒற்றை ஈ"

(கலாப்ரியா கவிதைகள் இரண்டாம் தொகுதி (பக்.353) சந்தியா பதிப்பகம் முதற்பதிவு 2022)

இக்கவிதையில் இடம்பெறும் பகற்கனவு, கனவு உலகச் சிந்தனையைத் தூண்டுகிறது பகலில் காணும் காட்சி ஒன்று மனத்தில் பதிந்து இரவு உறக்கத்தில் பல்வகைக் காட்சியாய், கனவுகளாய் வெளிவரும் என்பது கனவு பற்றிய நம்பிக்கை இக்கனவு உளவியல் இக்கவிதையில் காட்சிப்படுத்தப்படுகிறது.

கவிதைகள் நிகழ்காலத்தை மீட்டித்தரும் வகையில் அமைவதை கலாப்ரியா தமது முகநூலில் அதிகாலையில் எழுந்ததும் பதிவிட்டதாகக் கவிதை ஒன்றைத் தந்துள்ளார். அக்கவிதையில் நகரத்தில் ஒரு பகுதியில் உள்ள அடுக்ககமும், அங்கு பணிபுரியும் காவல்காரரும், அவர் அடிக்கடி இரவில் விசில் ஊதுவதுமான காட்சி விளக்கப்படுகிறது. இது முந்தைய இரவில் படிந்த மனப்பதிவுகள். அது படிமைக் காட்சியாக கவிதையில் உருப்பெறுகிறது.

"நகரில் ஒரு
கிராமத்தை
சிருஷ்டிக்கிறது
அடுக்கக் காவலாளியின்
முன்னிரவுப்
புல்லாங்குழல்
ஒலி"

**தொன்மங்களில் இணைப்பில் உளவியல்**

கண்ணகி கதை இறுதிக் கட்டத்தில் மன்னன் முன்பு நீதி கேட்கும் பெண், தன் இடது மார்பை திருகி எறிந்தாள் என்பது காவியக் கதை பரமன் தன் மனையாளுக்கு இடப்பாகத்தை அருளினான் என்பது

புராணக் கதை இருவேறு சிந்தனை இணைத்து கவிஞரின் உள்ளம் புதித்து ஒன்றைப் படைக்கிறது. கவிஞனும் உளவியல் சிந்தனை உடையனே. தமது உணர்வு மூலம் படைக்கப் பெறும் கவிதைப் படைப்பில் முருகியல் உணர்வு வெளிப்படுத்தப்படும். முருகியல் உணர்வுடையவன் கவிஞன் முருகியல் உணர்வை வெளிப்படுத்த உவமை, உருவகம், படிமம், நையாண்டி (PARADY) போன்ற உத்திகளைக் கையாளுவதுண்டு அவ்வகையில் கவிஞர் கலாப்ரியா தொன்மங்களைப் பயன்படுத்தி தன் உள்ளக் கருத்துக்களை வெளிப்படுத்தும் பாங்கினை கவிதைச் சொற்களில் வரைந்து காட்டுவார்.

"சாக்காடு போல்
அப்படியே
சாய்வு நாற்காலியில்
உறங்கிப் போனவனின்
பகல்க் கனவுகளை
நிர்ணயிக்கிறது
சுற்றிச் சுற்றி வரும்
ஒற்றை ஈ"

இக்கவிதையில் இடம்பெறும் பகற்கனவு, கனவு உலகச் சிந்தனையைத் தூண்டுகிறது. பகலில் காணும் காட்சி ஒன்று மனத்தில் பதிந்து இரவு உறக்கத்தில் பல்வகைக் காட்சியில் கனவுகளாய் வெளிவரும் என்பது கனவு பற்றிய நம்பிக்கை இக்கனவு இக்கவிதையில் காட்சிப்படுத்தப்படுகிறது.

இடது மார்பைத் திருகி எறிந்தாள் என்பது காவியக் கதை பரமன் தன் மனையாளுக்கு இடப்பாகத்தை அருளினான் என்பது புராணக் கதை. இருவேறு சிந்தனைகளை இணைத்து கவிஞரின் உள்ளம் புதிதாக ஒன்றைப் படைக்கிறது.

தமது படைப்பில் இவ்வாறு உளவியல் தன்மையுடன் உணர்த்தியுள்ளார்.

"மகவின்
மறுநாள்
வருகையெண்ணி
விழித்திருக்கும்
அம்மா
அவன்
மயிலிறகைக்
குட்டி போட
சினேகத்திற்குத்
தந்துவிட்டு
தூங்காமல்
தொண தொணத்த
இரவொன்றை
நினைத்து
இருளில் சிரிப்பாள்
நெட்டுயிர்ப்பாள்"

குழந்தைக்குள்ள உளவியல் சிந்தனையைப் பதிவிடும் வகையில் இக்கவிதை உள்ளது.வாழ்வின் நிஜரணங்களை மனைவியும், நிழல் வலிகளான நானும் அனுபவித்த மருத்துவமனை, மகள் வீடு, மருத்துவமனை, நண்பர் வீடு என்று காடாறுமாதம் முடித்து, ஒருவழியாய் "தம் இல்" வதிய ஆரம்பித்த இரண்டொரு நாட்களுக்குப்பின் பார்த்திராத அவள் வந்த கனவு 2013 ஜனவரி 28-ம் தேதி காலை... இப்படி, இந்த வரிகளுடன், ஆரம்பித்தது. நான் திறந்து வைத்திருந்த முகநூலில் கைகள் தரமாகவே தட்டச்சிட்டது ஒரு நிலைத் தகவலாய்

"ஒரு மார்பு
அறுத்தாள்
இறந்து போன கணவன்
வந்து இடபாகம்
இணைந்து கொள்ள
ஏதுவாய்?

இடப்பாகம் உயிர் உறுப்பாய் இருதயத்தைக் குறிப்பதாகும். ஏன் பரமன் இடப்பாகம் அருளினான் என்ற சிந்தனையும் இரு கொங்கைகள் இருக்க ஏன் இடக் கொங்கை திருகினாள் என்கிற இருவேறு சிந்தனைகளை படிமக் காட்சிகளாக்கி நிகழ்காலப் படிமங்களாக்கி நிகழ்த்திக் காட்டுகிறார். கவிஞர் கலாப்ரியா படைப்பாளியின் கனவு ஒருவகை எனில் படிப்பவன் கனவும் மற்றொரு வகைதானே உளவியல் இருதரப்பினரிடமும் உண்டு. ஒன்று படைப்பவன் உளவியல் மற்றொன்று படிப்பவன் உளவியல் இருவேறு உளவியல் சிந்தனைகளை ஓரிரு வரிகளில் கவிதைப் பதிவுகளாய் ஆக்கித் தந்துள்ளார் கலாப்ரியா.

**குழந்தை உளவியல்**

சிறுபிள்ளைகளாக இருந்த போது பள்ளியில் உடன்பயிலும் நட்புகளிடம் மயிலிறகைக் கொடுத்து புத்தகத்தின் நடுவில் வைத்தால் அது குட்டிபோடும் என்ற நிலை வழக்கிலிருந்ததை நினைவு கூர்ந்து கவிஞர் கலாப்ரியா அச்சிறு குழந்தை உளவியல் சிந்தனையை,

"விடிகாலைக் கனவில் இன்னும்
இளம் பிராயத்து சசி
இதற்கொரு முடிவே கிடையாது போலிக்கிறது
விடியற்காலை கனவு
பலிக்காவிட்டாலும்
வலிக்காமலாவது இருக்கலாம்."

(கலாப்ரியா கவிதைகள், இரண்டாம் பகுதி, (பக்கம் 357) சந்தியா பதிப்பகம், முதற்பதிப்பு - 2020)

இப்படி மனதின் எண்ணத்தை கைகள் தாமாகவே தட்டச்சிட்டது என்பது உளவியலின் பிரதிபலிப்பே.

**முடிவுரை**

கலாப்ரியாவின் பெரும்பான்மையான கவிதைகள் இலக்கியப் படிமங்களைப் பதிவிடுவதாலும், நிஜ உலகில் அவர் கண்டுணர்ந்த செய்திகளைக் கவிதை வரிகளில் பதிவிட்டு இருப்பதாலும் உளவியல் சார்ந்தவையே என்று கூறுமளவிற்கு அவர்தம் கவிதைகள் உள்ளன. படிப்பவர் உள்ளத்திலும் பதிவிடப்படுவதால் சொல்தோறும் உளவியலே உள்ளதோ? எனத்தோன்றுவது போல் அவர்தம் கவிதைப் படைப்புகள் காணப்படுகிறது.

**துணைநூற்பட்டியல்**

1. கவிமணி கவிதைகள், பூம்புகார் பதிப்பகம், சென்னை - 1976
2. கல்வியும் உளவியலும் எழுதிய சந்தானம், தமிழ்நாடு பாடநூல் வெளியீடு, சென்னை - 1986
3. இலக்கியமும் உளவியலும், முனைவர்.சி.மறைமலை, நீலா பதிப்பகம், சென்னை - 1996
4. கலாப்ரியா கவிதைகள் இரண்டாம் பகுதி முதறப்பதிப்பு 2020 சந்தியா பதிப்பகம்.

ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# தமிழ் இலக்கியங்களில் உளவியல் சிந்தனை

23

**பா. தாரா, முனைவர் பட்ட ஆய்வாளர்**
**முனைவர் கு. கலைச்செல்வி, ஆய்வு நெறியாளர்**
**அறிஞர் அண்ணா அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி**
**விழுப்புரம்.**

**ஆய்வுச் சுருக்கம்:**

இலக்கியமும் உளவியலும் மிக நெருங்கிய தொடர்பு உடையவை. சங்க இலக்கியம் வாழ்வியல் அடிப்படையில் அமைந்துள்ளதால் அதனுள் உளவியல் கூறுகளை அதிக அளவில் காண முடிகிறது. வாழ்வில் எதிர் கொண்ட சிக்கல்களில் உருவான ஒரு மனநிலையின் எதிரொலியாகவே அகத்திணையும், புறத்திணையும் அமைகின்றன.

**முன்னுரை:**

அகத்திணைப் பாடல்களின் பாடுபொருள் ஏதேனும் ஒரு மனநிலையினையோ அல்லது அந்த மனநிலை விளைவிற்குரிய சூழலையோ பாடு பொருளாகக் கொண்டு விளங்குகின்றன.

மனிதனின் இயக்கங்களுக்கான உள்ளிடை ஊற்றுக்கள் மனவெழுச்சிகளே இதனை தொல்காப்பியர் சுட்டும் மெய்ப்பாடுகள் தோன்றக் காரணமான காரணிகளோடும் தொடர்புடையவை. சங்க இலக்கிய மாந்தர்களின் உணர்ச்சி நிலைகளை இவற்றின் வழித்துணையோடு அணுகமுடியும்.

முரண்பாடுகள் அற்ற ஒத்திசையும் சமூக அளவில் நல்லுறவான இணக்கமும் உளநலத்தின் இருபெரும் கூறுகள், இவற்றில் குறைவு ஏற்பட்டாலும் உள்ள முறிவு, உள்ளப்போராட்டம் உள்ள இறுக்கம் ஆகிய உணர்வு நிலைகள் ஏற்படுகின்றன. இரண்டு சமவலிவுடைய ஊக்கிகள் பூர்த்தி பெறஇயலாது ஒன்று மற்றொன்றுக்குத் தடையாக இருப்பதின் காரணமாக ஏற்படும் உளநிலை உள்ளப் போராட்டம் இதனை அணுகுதல் - அணுகுதல் போராட்டம், அணுகுதல் - விலகுதல் போராட்டம், விலகுதல் - விலகுதல் போராட்டம் கர்ட்லீவின் மூன்று வகைகளாகப் பகுத்துள்ளார். இந்த பகுப்பு நிலையானது அல்ல. இவை உறமும் தன்மையுடையவை இத்தகைய உணர்வுகளைக் கீழ்காணும் தலைப்புகளின் வழி காணலாம்.

- விலகுதல் - விலகுதல் போராட்டம்
- உளப்போராட்டத்தின் உறழ்நிலை
- பிறழ்வு நிலை மனம்.
- தன்முனைப்பு அழிவு
- உள்ள நடுக்கம்
- தன் முகத்திருப்பமும், தற்கொலை உணர்வும்

**விலகுதல் - விலகுதல் போராட்டம்**

இது இரண்டு விரும்பத்தகாத இலக்குகளில் ஏதாவது ஒன்றை அடைந்தே ஆக வேண்டிய நிலை நேரும்போது ஏற்படுகின்ற உளப்போராட்டம், இதனை பேய்க்கும், ஆழ்கடலுக்கும் இடையில் சிக்கிக் கொள்ளும் நிலை என்று உளவியலாளர் வரையறுப்பர். வெறிபாடிய காமக்கண்ணியாரின் அகநானூற்றுப் பாடலில்(98) இத்தகையதொரு போராட்டத்திற்கு ஆட்பட்டதொரு மனநிலையைச் சித்தரித்துள்ளது. தலைவியின் கூற்றாக இப்பாடல் அடையாளப் படுத்தப்பட்டுள்ளது.

**"பனிவரை நிவந்த பயம்கெழு கவாஅன்
துணிஇல் கொள்கையொடு அவர் நமக்கு உவந்து
இனிய உள்ளம் இன்னா ஆக
முனிதக நிறுத்த நல்கல் எவ்வம்
சூர் உறை வெற்பன் மார்பு உறத்தணிதல்
அறிந்தனன் அல்லன் அன்னை வார்கோல்"**

சங்க இலக்கியத்தில் தாய் குறித்த தலைவியின் கூற்றுகள் ப்ராய்டு குறிப்பிடும் இடிபஸ் மகளின் (தந்தை மீதான முதல் காமத்தை தடை செய்கின்ற காரணியாக தாயைக் கருதுதல், தந்தைக்கு பதிலிடாக தலைவனைக் காணுதலும் காமம் கொள்ளுதலும்) வெளிப்பாடாக இருக்கிறது என்பார். அரங்க. நலங்கிள்ளி,

**"அலர்ஆ காமையோ அரிதே அஃதான்று
அறிவர் உறுவிய அல்லல் கண்டருளி
வெறிகமழ் நெடுவேள் நல்குவன் எனினே
செறிதொழ உற்ற செல்லலும் பிறிது எனக்
கான்கெழு நாடன் கேட்பின்
யான் உயிர்வாழ்தல் அதனினும் அரிதே (அகம் - 98)**

இவ்வெறியாட்டினால் பசலை தீராது போனால் களவு வெளிப்பட்டு விடும், ஒரு வேளை முருகன் மனமிறங்கி பசலை தீருமாறு செய்து விட்டால் தலைவியின் நலிவுக்கு வேறொரு காரணமுளது எனத் தலைவன் நினைக்க நேரிடும் அவ்வாறு நினைத்துவிட்டால் நாம் உயிர் வாழ்வதில் அர்த்தமில்லை என்கிறாள். இது விலகுதல் போராட்டதினால் வெளிப்பட்ட உணர்வு.

வெறியாட்டு என்பது அன்னையின் அறியாமையினால் மகள் மீது திணிக்கப்பட்ட நிகழ்வு. இந்நிகழ்வால் தலைவி ஏற்றுக்கொள்ள இயலாத இரண்டு முடிவுகளில் ஒன்றை ஏற்றுக் கொண்டே தீரவேண்டும் என்கிற நிலைக்குத் தள்ளப்படுகிறாள். இத்தகு உளவியல் போராட்டத்திற்கு ஆட்பட்ட மனம் இரண்டு துன்பங்களில் எது சற்றுக் குறைவான துன்பத்தை ஏற்றுக் கொள்ளத் துணியும்.

**உளப்போராட்டத்தின் உறழ்நிலை**

துன்பத்தை அளிக்கக்கூடிய நிகழ்வின் இறுதி எதிர்பாராத முடிவாக அமைவதால் ஏற்படுகின்ற மனநிலையினை விலகுதல் அணுகுதல் போராட்டமாக உளவியலாளர் கருதுவர்.

**நல்மன்ன நெடுநகர்க் காவலர்**
**அறியாமைத்**
**தன்நசை உள்ளத்து நம் நசை வாய்ப்ப**
**இன்உயிர் குழைய முயங்குதொறும்**
**மெய்ம்மலிந்து**
**நக்கனென் அல்லெனோயானே எய்த்த**
**நோய்தணி காதலர் வர ஈண்டு**
**எதில் வேலற்கு உலந்தமை கண்டே** (அகம் - 22)

வெறியாட்டு தலைவிக்குத் துன்பத்தை அளிக்கும் நிகழ்வு என்றாலும் அன்று தலைவனின் வருகை நேர்ந்து விடுவதால் அந்நிகழ்வு அவளுக்குக் கேலிக்குரியதொன்றாகி நகைப்புக்குக் காரணமாகி விடுகிறது. இதுவே விலகுதல் - அணுகுதல் போராட்ட விரும்பத்தகாத நிகழ்வின் தொடக்கம் விருப்பத்துக்குரிய நிகழ்வின் முடிவாக அமைவது இதனால் ஏற்படுகின்ற உளவியல் தாக்கமாகும்.

**பிறழ்வு நிலை மனம்**

**"நாறுகொள் பிரசம் ஊறு நாடற்குக்**
**காதல் செய்தலும் காதலம் அன்மை**
**யாதனிற் கொல்லோ தோழி வினவுகம்**
**பெய்ம்மணல் முற்றம் கடி கொண்டு**
**மெய்ம்மலி கழங்கிளன்வேலற் தந்தே** (நற்றினை - 268)

தலைவிக்கு ஏற்பட்ட பசலையைத் தீர்க்க தாய் வேலனை அழைக்கிறாள். அவனிடம் குறிகேட்டு தலைவனின் களவு நின்று போனதற்கான காரணத்தை அறிவோம் என்று தலைவி கூறுகிறாள். இதனை உளவியியலாளர்கள் பிறழ்வு மனநிலை என்பர் விரக்தியினால் ஏற்படுகின்ற நிலை இது அப்புலவரின் நனவிலி மனநிலையினை வெளிப்படுத்துவனவாகவும் அமைந்து விடுகின்றன.

**தன்முனைப்பு அழிவு**

காமக்கண்ணிப் பசலையாரின் பாடலொன்றில் தலைவியின் பிரிவுத்துயர் பேசப்பட்டுள்ளது பிரிவு என்பது தலைவியை உளவியல் ரீதியில் மிகவும் பாதிப்பது அதன் வெளிப்பாடுகள் வெவ்வேறு நிலைகளில் இருந்தாலும் அவர்களின் நிலை ஒன்றுதான்.

**"அகறல் ஓம்புமின் அறிவுடையீர் என**
**கையறத் துறப்போர்க் கழுறுவ போல**
**மெய்யுற இருந்த மேவா நுவல்**
**இன்னாது ஆகிய காலைப் பொருள் வயிற்**
**பிரிதல் ஆடவர்க்கு இயல்பு எனின்**
**அரிதுமன்று அம்ம அறத்தினும்பொருளே** (நற்றினை - 243)

தன்னைப் பிரிவது என்பது தலைவனுக்கு பெரிய வலியைத் தரக் கூடியதல்ல. ஆனால் உலகத்தில் செல்வம் நிலையில்லாதது இருக்கும்வரை தலைவியைப் பிரியாமல் வாழவேண்டியது அறம் அந்த அறத்தைக் காட்டிலும் செல்வம் ஈட்டுதல் என்பது பெரியதாகப் போய்விட்டது என்று கூறுவது தலைவியின் தன்முனைப்பு அழிவைக் காட்டுகிறது.

ஒரு இரண்டாம் நிலைக்காரணத்தை முதன்மைப்படுத்தி பேசுவது என்று உளவியலாளர்கள் இதனைக் கருதுவர். பெரும்பாலான பிரிவுத்துயர் பாடல்களில் இத்தகைய பிறழ்வுமன நிலையினைக் காண முடியும்.

**உள்ள நடுக்கம்**

ஓர் இலக்கினை அணுகவும் விலகவும் தூண்டும் வலிவான போக்குகள் ஒரே நேரத்தில் நிலவும்போது உள்ள நடுக்கம் ஏற்படும்.

**"ஒடுங்கு ஈர் ஓதி நினக்கும் அற்றோ?**
**நடுங் கின்று அளித்து என் நிறைஇல்**
**நெஞ்சம். (அகம் - 160)**

தலைவன் வருவது தலைவிக்கு மகிழ்வளிக்கும் செயல்தான். ஆனால் எதிர்பாராத நேரத்தில் வரும் போது அதனால் விளைவது நன்மையா அவள் விரைவு உடன்படுத்த வர வாய்ப்புள்ளதா அல்லது இரவுக்குறி ஏற்படுத்திய நம்பிக்கையில் பகல்குறியில் சந்திக்க வந்து அலர் ஏற்படக் காரணமாகி விடுமோ என்கிற உள்ள நடுக்கம் ஏற்பட்டு விடுகிறது. மறைவான ஒன்று வெளிப்படும் போது அது எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தும் என்கிற உளவியல் ரீதியிலான நடுக்கம் என்று இதனைக் கருதலாம்.

**தன்முகத் திருப்பமும் தற்கொலை உணர்வும்**

அகநானூற்றில் காணப்படும் ஆதிமந்தி பற்றிய குறிப்புகள் அனைத்தும் ஆதிமந்தியின் மனநிலை குறித்த பதிவுகளாகவும் இருக்கின்றன. மதிமருண்டு பேதுற்று, கலுழ்ந்த கண்ணன்" பனிவார் கண்ணன் என்று கூறுவதிலிருந்து ஆதிமந்தியின் உள்ளம் குறித்த புரிதல் ஏற்படுகிறது.

"**காதலர் கெடுத்த சிறுமையொடு**
**நோய் கூர்ந்து**
**ஆதிமந்தி போல பேதுற்று**
**அலந்தனென் உழல்வென் கொல்லோ"**

தன்முகத்திருப்பம் என்கிற உளநலத்தற்காப்பு இயங்குமுறையையும் காண முடிகிறது. இதன்மூலம் கணவனை தொலைத்துவிட்டு தேடிக் கொண்டிருக்கும் பெண்ணின் உளவியலை காண்கிறோம். மேலும் கணவனை இழந்த பெண்ணின் உளவியலை

**"பல்சான்றீரே பல்சான்றீரே"**
**செல்கெனச் செல்லாது ஒழிக என**

**விலக்கும்**

**பொல்லாச் சூழ்ச்சிப் பல்சான்றீரே**

இப்பாடல் கணவன் இழந்த பெண்ணின் உளவியலைப் பிரதிபலிக்கிறது. கைம்மை நோன்பு என்பது ஆண்மைச் சமூகத்தின் அவலநிலை. செல்க எனச் சொல்லாது ஒழிக என விலக்கும் பொல்லாச் சூழ்ச்சிப் பல்சான்றீரே என்று கூறுவது தன்னைத் தற்கொலையில் இருந்து தடுப்பதன் மூலம் கைம்மை நோன்பிற்கு வற்புறுத்துகின்ற ஆண்மைச் சமூகத்தை நோக்கிய குரலாகவே காணமுடிகிறது.

**முடிவுரை:**

இத்தகைய அழகியலும் உளவியலும் தான் தமிழ்ச்சங்க இலக்கியத்தை உலகளாவிய உயரத்தில் உயர்தனிச் செம்மொழி என்ற உச்சத்தில் அமர்த்தி வைத்திருக்கிறது. உளவியலும் அழகியலுமாய் அமைந்து மிளிர்கின்றன சங்க இலக்கியப் பாடல்கள்.

**மேற்கோள்கள் மற்றும் துணைநூல் பட்டியல்**

1. 1997 சங்க இலக்கியத்தில் தாய் சேய் உறவு ஓர் உளவியல் நோக்கு - சு. கோகிலவாணி
2. 1986 சங்க இலக்கியத்தில் உளவியல் - ந. சேஷாத்திரி
3. 1986 சங்க இலக்கியத்தில் உளவியல் கொள்கைகள் உளத்தற்காப்பு இயங்கு முறைகள் பற்றிய விளக்க ஆய்வு - தி. சிவராஜ்
4. 2006 குறுந்தொகை ஆய்வுக் கோவை மூன்றாம் தொகுதி - இரா. ஜெகதீசன் குறிஞ்சி பதிப்பகம் - மதுரை
5. 2005 சிக்மண்ட் பிராய்ட் உளப்பகுப்பாய்வு அறிவியல் கு. ரவிச்சந்திரன் அவைகள் வெளியீட்டகம் - சென்னை

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்
ISSN:2582-9599

24

# எஸ். அர்ஷியா பாத்திரங்கள் வெளிப்படுத்தும் உடல்மொழி

**The body language expressed by S. Arshia Characters.**

**முனைவர் சி.தேவி, உதவிப்பேராசிரியர்,**
**தமிழ்த்துறை, தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ் இராசரத்தினம் மகளிர் கல்லூரி, சிவகாசி.**
orcid id : 0000-0003-3849-7035

**Abstact:**

Psychology is the science that traces the actions of the working soul and its consequences that regulate man's life. Social Psychology can be obtained by combining Psychology with the field of sociology (in science). Body language includes body structure, body language include body structure, body language gestures(action), eye movements, and so on. The body langauge plays a major role in the communication of human beings. Of a man through body language can know the mood. Anger, joy and peace of mind can be easily understood through physical language.

**Key words**: Social pshycology - Body Language - Rudeness - Relaxation State - Pleasure, Entertainment.

**ஆய்வுச்சுருக்கம்:**

மனிதனின் வாழ்வினை நெறிப்படுத்தும் பணிசெய்யும் உள்ளத்தின் செயல்கள் மற்றும் அதன் விளைவுகளை எடுத்துரைக்கும் அறிவியலே உளவியல் ஆகும். சமூக உளவியல் என்பது புறத்தாக்கம் காரணமாக மனிதமனம் மற்றும் நடவடிக்கைகளில் ஏற்படும் மாற்றமே சமூக உளவியல் ஆகும். உளவியலை சமூகவியல் என்ற துறையில் (விஞ்ஞானத்தில்) இணைத்தால் சமூகவியல் உளவியலைப் பெறலாம். உடல்மொழி என்பது சொற்கள் அற்ற செய்திப் பரிமாற்றம் ஆகும். உடல்மொழியானது உடலின் அமைப்புநிலை (Structure), உடல் உறுப்புகள் மூலம் செய்யும் சைகைகள் (Action), கண்ணின் அசைவுகள், போன்றவற்றை உள்ளடக்கியதாகும். மனிதர்களின் தகவல்தொடர்பில் பெரும்பங்கு வகிப்பது உடல்மொழியே. தமிழ் இலக்கணம் சுட்டும் மெய்ப்பாடுகள் அனைத்தும் உடல்மொழியின் கூறுகள் எனலாம். உடல் மொழியின் மூலம் ஒரு மனிதனின் மனநிலையை அறிந்துகொள்ள முடியும். கோபம், மகிழ்வு, சமாதானமான மனநிலை, சலிப்பு என்பனவற்றை உடல்மொழி மூலம் எளிதாக அறிந்துகொள்ளலாம்.

**திறவுச்சொற்கள்:** சமூக உளவியல் - உடல்மொழி - முரட்டுத்தனம் - தளர்வுநிலை - இன்பம் கேளிக்கை

**முன்னுரை**

உருட்டித் தைக்கப்பட்ட உலக மூட்டையில் மனித மனங்களைப் புரிந்து கொண்டு செயல்படுதல் மிகப்பெரிய சவாலான செயலாக உள்ளது. எனவே உளம் சார்ந்த ஆய்வுகள் பெருகின. உளம் சார்ந்த

ஆய்வுகள் உளவியல் எனப்பட்டன. நமது மன எண்ண ஓட்டங்கள் சமூக நிகழ்வுகளின் புறத்தாக்கங்கள் அனைத்தும் சேர்ந்து மனிதனின் நடத்தையைப் பாதிக்கும் தன்மை படைத்ததாகின்றது.

**உளவியல் சொற்பொருள் விளக்கம்**

'சைக்காலஜி' (PSHYCOLOGY) என்பதன் மூலச்சொல் சைக்கிலோகஸ் (Psychelocus) என்பதாகும். 'சைக்கி' என்றால் ஆன்மா என்றும், 'லோகஸ்' என்றால் அறிவியல் என்றும் பொருள் கொண்டு, 'சைக்காலஜி' என்பதை 'ஆன்மாவின் அறிவியல் என்றும் விளக்குவர். 'ஆன்மாவை பற்றிய அறிவியக்கமே உளவியல்' என்று தொடக்கக் காலத்தில் உளவியலையும் தத்துவத்தையும் இணைத்துக் கூறினர். ஆன்மாவையும் ஆயும் அறிவியல் (Science of the Soul) என்பதே சைக்காலஜிக்குப் பொருள். "சைக்காலஜி என்ற சொல்லை முதன்முதலில் ருடோல்ஃப் ப்ஜியோக்கல் (Rwdolf Geockle) பயன்படுத்தினார் என்பர்"[1] உள்ளத்தின் இயல்புகளையும், அவற்றின் செயல்பாடுகளையும் பகுத்து விளக்கும் அறிவியல் துறையினை 1960ஆம் ஆண்டு வரையில் உளவியல் என்னும் பெயரால் சுட்டினர். அதன்பிறகு முதன்மையும், தலைமையும் கருதி நடத்தை பற்றிய அறிவியலே உளவியல் எனப் போற்றும் வழக்கம் உண்டாகியது. தமிழ்ச் சொல்லகராதி 'உளவு' என்பதற்கு இரகசியம், உட்காரியம், உட்கிடை என்றும், உளவு சொல்லல் என்பதற்கு உள்ளவைகளை அறிந்து சொல்லல் என்று பொருள் கூறுகின்றது. இவற்றின் வாயிலாக மனிதனின் நடத்தையைப் பற்றியும் அவனது நடத்தைக்கான மறைந்திருக்கும் காரணத்தைப் பற்றியும் ஆராய்வதே உளவியல் ஆகும்.

மனிதனின் வாழ்வினை நெறிப்படுத்தும் பணிசெய்யும் உள்ளத்தின் செயல்கள் மற்றும் அதன் விளைவுகளை எடுத்துரைக்கும் அறிவியலே உளவியல் ஆகும். "உளவியல் உள்ளம் எவ்வாறு வேலை செய்கின்றது என்பதைப் பகுத்தாயும் விளக்கமான அறிவியல் மட்டுமன்று, அது நல்ல உளநலத்தைப் பேணுதற்குரிய கொள்கைகளைத் தருகின்றதும், நமது திறமையை மிகுதிப்படுத்துவதற்குமான ஒரு குறிக்கோளுடைய அறிவியலாகும்" 2 என்று வரதராஜீலு கூறியுள்ளார்.

மனம் என்பது சும்மாயிருப்பதல்ல. சதா இயங்கும் தன்மை உடையது. மனவோட்டத்தின் மாற்றத்திற்கு ஏற்ப மனித நடத்தைகள் மாறுதல்களுக்குள்ளாகின்றது. இதன் காரணமாகவே மனத்தை ஆயும் தனித்துறை ஒன்று தேவைப்படுகிறது.

**உளவியல் வகை**

பொதுஉளவியல், குழந்தை உளவியல், மானிட உளவியல், விலங்கு உளவியல் நெறிபிறழ் உளவியல், தொழில் உளவியல், சட்டரீதியான உளவியல், இராணுவ உளவியல், அரசியல் உளவியல், மருத்துவ உளவியல், கல்வி உளவியல் என்று பல்வகைப்படும்.

**சமூகஉளவியல்**

சமூக உளவியல் என்பது புறத்தாக்கம் காரணமாக மனிதமனம் மற்றும் நடவடிக்கைகளில் ஏற்படும் மாற்றமே சமூக உளவியல் ஆகும். உளவியலை சமூகவியல் என்ற துறையில் (விஞ்ஞானத்தில்) இணைத்தால் சமூகவியல் உளவியலைப் பெறலாம்.

"சமூக உளவியல் என்பது மக்களின் எண்ணங்கள், உணர்வுகள், நடத்தைகள், ஆகியன எவ்வாறு உண்மையான கற்பனையான அல்லது மற்றவர்களின் குறிப்பான இருப்பால் தாக்கத்திற்குள்ளாகின்றது என்பது பற்றிய அறிவியல் ஆய்வு" [3] ஆகும்.

உளவியல் சார்ந்த ஆய்வுகள் உள்ளுணர்வு அறியும் திறன், கவனிக்கும் திறன், உணர்ச்சி, ஊக்கம், மூளைச்செயல்பாடு, ஆளுமை என்பனவற்றை உள்ளடக்கியதாக அமைகின்றது. சமூக உளவியல் என்பது

1. உடல்மொழி
2. கரட்கும்பல்
3. எண்ணங்களும் உணர்வுகளும்
4. சமூகத்தனிமை
5. தலைமைத்துவம்
6. புலப்பாட்டு முரண்பாடு எனும் உட்பிரிவுகளைப் பெற்றுள்ளது. உடல்மொழி எனும் தன்மை எஸ்.அர்ஷியா படைப்புகளில் எங்ஙனம் இடம்பெற்றுள்ளது என்பதைக் காண்பதாக இக்கட்டுரை அமைகின்றது.

**உடல் மொழி**

உடல்மொழி என்பது சொற்கள் அற்ற செய்திப் பரிமாற்றம் ஆகும். உடல்மொழியானது உடலின் அமைப்புநிலை (Structure), உடல் உறுப்புகள் மூலம் செய்யும் சைகைகள் (Action), கண்ணின் அசைவுகள், போன்றவற்றை உள்ளடக்கியதாகும். மனிதர்களின் தகவல்தொடர்பில் பெரும்பங்கு வகிப்பது உடல்மொழியே. தமிழ் இலக்கணம் சுட்டும் மெய்ப்பாடுகள் அனைத்தும் உடல்மொழியின் கூறுகள் எனலாம். உடல் மொழியின் மூலம் ஒரு மனிதனின் மனநிலையை அறிந்துகொள்ள முடியும். கோபம், மகிழ்வு, சமாதானமான மனநிலை,சலிப்பு என்பனவற்றை உடல்மொழி மூலம் எளிதாக அறிந்துகொள்ளலாம்.

**முரட்டுத்தனம்**

நமது செயல்பாடுகளில் மென்மைத்தன்மை இல்லாமல் கடுமையான செயல்முறையைக் கையாள்வது முரட்டுக்குணமிக்க மனிதர்களாக நம்மை அடையாளங்காட்டும். "ஏழரைப்பங்காளி வகையறா" எனும் நாவலில் கமலா தனது முதலாளி அலாவுதீன் என்பவருடன் தகாத உறவு கொண்டாள். தன பெயரையும் கதீஜா என மாற்றி வைத்துக்கொண்டாள். சிறையிலிருந்த கமலாவின் கணவர் ஒச்சு இந்த செய்திகளை அறிந்து மிகுந்த கோபமடைந்தார். சிறையிலிருந்து வெளியே வந்தவுடன் முதல் வேலையாக தவறிழைத்த தனது மனைவியை சந்தித்துக் கொன்றுவிட்டான். "பொய்கைக்கரைப்பட்டி" நாவலில் கஜேந்திரகுமார் நில விற்பனையாளராகத் தொழில் செய்துவந்தார். தொழிலில் ஏற்பட்ட பகை காரணமாகவும் அவருக்கு இருந்த தவறான பழக்கவழக்கங்கள் காரணமாகவும் சமுத்திரக்கனி என்பவரை, கஜேந்திரகுமார் சார்பாக மர்மநபர்கள் அரிவாளால் வெட்டிக்கொன்றனர். இது போன்று பல்வேறு விதங்களில் மனிதனின் முரட்டுத்தனம் மூரக்கமாக அவ்வப்போது வெளிப்படுகின்றது.

**தளர்நிலை**

அதிகமான வேலைப்பளு, தோல்வி போன்ற சூழல்களில் மனிதன் மனச்சோர்வினை அடைகிறான். மனச்சோர்வு அதிகமாக ஏற்படும் பொழுது, மனஅழுத்தமும் அனுபவிக்க நேரிடுகிறது. இந்த மன அழுத்தத்தின் வெளிப்பாடாக தளர்ச்சி ஏற்படுகின்றது. "கரும்பலகை" எனும் நாவலில் இடம்பெறும் தனசேகர் தன் நண்பனுடன் சேர்ந்து நிலம் வாங்கி விற்கும் தொழில் செய்து வந்தான். நண்பன் அவ்வப்போது குறுக்குவழியில் பணம் சம்பாதிப்பதை தனசேகரன் அறிந்தான். நண்பன் தவறுகிற போது இடித்துரைப்பவனே உற்ற நண்பன் என்ற முறையில் தனது நண்பனை நல்வழிப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் சில நேரங்களில் அறிவுரை கூறுவான். தனது முன்னேற்றத்திற்குத் தடை செய்யும் வகையில் தன் நண்பன் செயல்படுவது அவனுக்குப் பிடிக்கவில்லை. அவனிடமிருந்து விலக நினைத்தான்.

**"நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்**
**பின்னீர பேதையார் நட்பு"** 4(குறள் 782)

இதனைத் தெரிந்து கொண்ட தனசேகர் இங்கிருந்தால் தானே ஏதேனும் சொல்ல வேண்டியது வருமென்று வேலையை விட்டு வந்துவிட்டான். இருந்தாலும் முப்பது வருடங்களுக்கும் அதிகமான நெருங்கிய நட்பு பணம் என்ற ஒன்றிற்காக புறக்கணிக்கப்படுகிறது என்பதைத் தெரிந்த தனசேகர் பெரும் கவலையுற்றான். அதிலிருந்து மீளமுடியாமல் மனத்தளர்ச்சி அடைந்தார். மனநலம் பாதிக்கப்பட்டவன் போல குடிநோயாளி ஆகி திசைமாறிப் போனான்.

"அப்பாஸ்பாய்த்தோப்பு" எனும் நாவலில் வரும் அபுனு எவர்சில்வர் அடிப்பட்டறைத் தொழிலை முப்பது வேலையாட்களை வைத்து செய்து வந்தார். அவன் தொழிலை மிகவும் சிரத்தையோடு செய்து வந்தான். பாத்துமா என்ற இஸ்லாமியப் பெண்மணியைக் காதலித்து தாயின் எதிர்ப்போடு மணம் செய்தான். பாத்துமாவின் சகோதரன் செய்த ஒரு திருட்டுக் குற்றத்தில் அபுனு சிக்கிக் கொண்டான். காதல் மனைவி காப்பாற்றுவான் என்று அபுனு நினைத்தான். பாத்துமா தனது கணவனைப் பற்றிக் கவலை கொள்ளாது தன் தாய் வீட்டாரோடு ஊரைவிட்டுச் சென்றுவிட்டாள். அதனால் அபுனுவுக்குச் சிறைவாசம் நீண்டது. தொழில் அழிந்து போனது. தண்டனைக்காலம் முடிந்து வெளியே வந்த அபுனு தொடர்ந்து தொழில் செய்ய பொருளாதாரமும் இல்லை. அபுனு திருட்டுக் குற்றத்தில் சிறை சென்று வந்த காரணத்தால் தொழில் செய்பவர்கள் யாரும் முன்பு போல் நம்ப மறுத்தனர். தொழில் செய்ய இயலவில்லை. மரியாதை, பணம் அனைத்தும் இழந்த கவலையால் அபுனு மனத்தளர்ச்சி அதிகமாகி மனஅழுத்தம் ஏற்பட்டு மனநோயாளி போல் சுற்றினான். "பொய்கைக்கரைப்பட்டி" நாவலில் விவசாய நிலங்களைத் தோண்டி சீரழிக்கும் எலிகளை அழிக்கும் பணி செய்தான் வேங்கையன். "தோள் கொடுப்பான் தோழன்" என்பதால் அவர்களோடு சேர்ந்து தான் இப்பணியை செய்துவந்தான். நட்பின் மீது ஆழமான நம்பிக்கை உடையவன்.

**"சந்தோஷங்களில் பங்கெடுத்தோம் துயரங்களில் கை கொடுத்தோம்**
**நட்புக்கு இல்லை எல்லை நட்பினில் இல்லை பிரிவினை**
**தோள்கொடுக்க ஒரு தோழன் தோழி இருந்தால் வெல்வோமே இந்த உலகினை"** [5] என்று நட்பின் அருமை அறிந்தவன். ஆகையால் நண்பர்களின் துணையோடு தான் அனைத்தும் செய்தான். "செய்வன திருந்தச்செய்" என்பதற்கேற்ப மிகுந்த அக்கறையோடும் அச்சமின்றியும் பணியாற்றுவான். பொழுதுபோக்காக இரவில் நண்பர்களோடு இணைந்து கரட்டாண்டி வேட்டைக்கு செல்வதும் உண்டு. காடு மேடு என்று சுற்றித் திரிபவனாக இந்தாலும் கட்டிய மனைவி மீது அதிக அன்பு உடையவனாகவே வாழ்ந்து வந்தான். ஒரு நாள் வேட்டைக்குப் போய் திரும்பிய வேங்கையன் தன் அன்பு மனைவி மாற்று ஆடவன் ஒருவனுடன் உறவு கொண்டிருப்பதை அறிந்தான். மனவேதனை மிகுதியானது. வெளியே யாரிடம் சொல்வதென்று அறியாமல் மனத்தளர்ச்சி அடைந்து தனியே புலம்பும் நிலைக்குச் சென்றான்.

**இன்பம் கேளிக்கை**

நுகர்ச்சித்தன்மை உடைய கண்,காது, செவி, மெய், வாய் என்ற நுகர்ச்சித்தன்மை உடைய ஐந்து புலன்களுக்கும், நம் மனதிற்கும் இனிமை தரும் தன்மையே இன்பம் ஆகும். உல்லாசமாக இருக்க உதவும் பொழுதுபோக்கு அம்சங்கள் அனைத்தும் கேளிக்கை ஆகும்.

**"உலகத்தின் கடைசி நாள் இன்றுதானா என்பது போல் பேசிப்பேசி தீர்த்த பின்னும் ஏதோ ஒன்று குறையுதே - என்பதற்கேற்ப பெண்கள் எவ்வளவு தான் பேசினாலும் அவர்களிடம் வார்த்தைகள் குறைவதே இல்லை. பேச்சின் மூலமாக உறவை வளர்ப்பது என்ற முக்கியத்துவத்துடன் பெண்ணின் மூளை வடிவமைக்கப்பட்டிருக்கிறது. ஒரு பிரச்சினையின் போது ஒரு பெண் தன் மனதிற்கு வெளியே**

**மற்றவர்களுடன் பேசுவாள். பெண்கள் எப்போதும் குழுக்களாக இருக்கவும், அதிகம் உரையாடவும் விரும்புவார்கள்“**[6] பெண்களுக்குக் கொடுக்கப்பட்ட இந்த பொது இலக்கணத்திற்குத் தப்பியவர்கள் அல்லர் அர்ஷியா படைத்துக்காட்டிய பெண்கள்.

“அப்பாஸ் பாய் தோப்பு” எனும் நாவலில் மதிய உணவினை முடித்தபிறகு பெண்கள் ராபியா வீட்டில் ஒன்றாய்க்கூடி ஊர்க்கதை பேசுகின்றனர். பெண்களின் பேச்சுக்கு மத்தியில் சிரிப்பும், கேலியும், பொழுதுபோக்கு அம்சங்கள், சினிமா சார்ந்த செய்திகள், அடுத்தவர்கள் பற்றிய பொறணி, ஊர் நடப்பு நிகழ்வுகள் அனைத்தும் இடம்பெறுவதுண்டு. ‘முந்தித் தருவது தந்தி” என்பதுபோல ஏதேனும் ஒரு செய்தியை நான் தான் முதலில் சொன்னேன் என்று பெருமைப்படும் பெண்களும் அங்கிருந்தனர். உண்ட சோறு செரிக்க ஊர்ப்பொறணி பேசினர். குடும்பக் கவலைகளை மறந்து மனமகிழ்ந்துபேசி நிம்மதி நாடும் இடமாக ராபியா வீட்டை எண்ணினர். “பொய்கைக்கரைப்பட்டி” நாவலில் எழிலன், கலியன், கடுக்கா, வேய்கையன் ஆகிய நான்கு நண்பர்களும் பகலில் வயிற்றுப்பாட்டிற்கான தனது வேலைகளை செய்து விட்டு இரவு நேரங்களில் நண்பர்கள் ஒன்று சேர்ந்து காட்டுக்குள் வேட்டைக்குச் செல்வர். அப்போது மது அருந்தி இரவுப்பொழுதை மகிழ்வுடன் கழிப்பர்.

## முடிவுரை

உளவியல் சிந்தனை என்பது மனித வாழ்வில் எதிர்கொள்ளும் சிக்கல்களை அடையாளம் காண உதவுகிறது. மனித மனத்தின் அனைத்து நிலைகளுமே உளவியல் சார்ந்தே அமைகின்றது. உளவியல் என்பது ஒரு மனிதனின் நடத்தையினை செயல்பாடுகளைத் தீர்மானிப்பதாக அமைகின்றது. அவ்வகையில் மனித மனத்தினை அறிய உதவும் ஆயுதம் அர்ஷியா படைப்புகளில் வெளிப்பட்டுள்ள விதம் இங்கு விவரிக்கப்பட்டுள்ளது.

## அடிக்குறிப்பு

1. சந்தானம், எஸ். கல்வியின் உளவியல் அடிப்படைகள் ப.2
2. வரதராஜீலு, அ (மொ. பெ.ஆ) ஜி.டி.போவாஸ் பொதுஉளவியல் முதல்தொகுதி ப.5
3. Allport, G.W. The Historical background of special Psychology P.46
4. திருக்குறள். 782,
5. Like my status.in
6. Vikatan.com

## துணைநூற்பட்டியல்


1. சந்தானம், எஸ். கல்வியின் உளவியல் அடிப்படைகள், பழனியப்பா பிரதர்ஸ், -1981.
2. வரதராஜீலு, அ(மொ.பெ.ஆ) ஜி .டி. போவாஸ் பொதுஉளவியல் முதல்தொகுதி, தமிழ்நாட்டு பாடநூல் நிறுவனம் -1972
3. Allport, G.W. The Historical background of special Psychology, The Hand Book of Social Psychology, 1985.
4. திருக்குறள். நாமக்கல் கவிஞர் (உ.ஆ) தென்றல் நிலையம், 2002.
5. Like my status. in
6. Vikatan.com - Published in 2019

ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# உளவியல் நோக்கில் சூழலியல் பெண்ணியம்

25

முனைவர்.வெ.நிர்மலா, தமிழ்த்துறைத்தலைவர்,

ஸ்ரீ இராமகிருஷ்ணா மகளிர் கலை அறிவியல் கல்லூரி, கோவை

**ABSTRACT**

Eco feminism is a concept that unearths the link between feminism and ecology. Every woman is surrounded by her own environment, the community in which she lives in, the same as that of the earth which is looked as a woman. This association gave rise to an interesting concept called Ecofeminism.In the words of Janet Biehi, “Ecofeminism is goal oriented, it associates the life of a woman with the environment she lives in”. This gives rise to the celebration of woman and nature together. The Explanations with regard to time & environment is explained in detail by Hippolyte, the theory is further employed in the works of Emile Zola & Balzac.Among the regional writers, Poets like Malthi MaithriVennila and salma advocates ecofeminism through their works. This article focuses on the writings of the above writers analysed from the Ecofeministic perspectives.

முன்னுரை

பெண் இயற்கை இரண்டையும் ஒரு சேர ட்டெடுக்கும் இலக்குதான் -‘சுற்றுச்சூழல் பெண்ணியம்’ (Ecofeminism) என்னும் கோட்பாடாகக் கருதப்படுகிறது. தான் வாழும் சூழல் அறை,வீடு, நகரம் போலவே அந்த சமூகம் சர்ந்த சூழலும் குடும்பம், வர்க்கம், சாதி, போன்ற பண்புக் கூறுகளை சூழலுக்கேற்ப காரண காரிய உறவாக அறிவியல் சிந்தனை நிறுவ முயன்றது. ஜெனட்பிகி )Janet Biehi) சூழலியப் பெண்ணியத்தைப் பின்வருமாறு குறிப்பிடுகிறார் .“சூழலியப் பெண்ணியம் இலட்சியப் பாங்கானது; இயற்கையோடு மகளிரது வாழ்வியலையும் இணைக்கும் போக்கு காணமுடிகிறது. மகளிர் வாழ்வியலோடு இயற்கை பேராற்றலைப் போற்றும் பண்பு புலனாகின்றது.

To these notions ecofeminism adds both a commitment to the environment and an awareness of the associations made between women and nature. Specifically, this philosophy emphasizes the ways both nature and women are treated by patriarchal (or male-centred) society1

காலம், சமுதாயச்சூழல் சார்ந்த கோட்பாடுகளை பிரெஞ்சு நாட்டு வரலாற்றாசிரியரும், தத்துவ அறிஞருமான ஹிப்போலைத்தெயின் (1828-1893) விரிவாக விளக்கி வடிவமைத்தார். இதன் காரணமான எமிலி ஜோலா, பால்சாக் முதலிய பிரெஞ்சு எழுத்தாளர்களின் எழுத்துக்களைச் சூழல் அடிப்படையில் விளக்குவது செல்வாக்கோடு விளங்கியது.[2]

மாலதிமைத்ரி, வெண்ணிலா, சல்மா போன்ற பெண்ணியவாதிகள் இயற்கையை நேசிக்கும் வாழ்வியலையும் பரிந்துரைக்கின்றனர். சிந்தனையைக் கவிதைகளில் பதிவு செய்துள்ளனர் .

சுற்றுச்சூழலியப் பெண்ணியவாதியாக தன்னை அடையாளப்படுத்தும் கவிதைகள் கையோடுஇயற் என்னும் கவிதைத் தொகுப்பு சுற்றுச்சூழல் விழிப்புணர்வை மட்டுமே குறிக்கோளாகக் . கொண்டு வெளிவந்துள்ளது

கவிதைப்படைப்பின் நோக்கமும் பதிவுகளும்:

Mary Mellor, a British academic, defines ecofeminism as "a movement that sees a connection between the exploitation and degradation of the natural world and the subordination and oppression of women."3

பெண்ணியப்படைப்பாளர்கள் காலங்காலமாக நிறுவப்பட்ட கருத்தாக்கங்களை மறுதலித்தும்,தங்களின் பெண் குரலாகத் தான் வாழும் சூழலுக்கேற்ப தனித்துவ அடையாளத்துடன் பதிவு செய்து வருகின்றனர். பிரபஞ்ச வெளியில் பெண்ணின் வாழ்தளம் விதிமுறைகளுக்கு உட்படாமலும்,பெரிய வீரியம் ஏதும் இல்லாமலும் ஆனால் உயிர் ஒடுங்கிக் கிடப்பதாக பெண்ணின் இருப்பு அமைந்துள்ளது. இதனை முன்னிறுத்தியே வர்ஜினியா உல்ப் ஒருவருக்கு சொந்தமான அறை (Room one's Own) என்னும் தலைப்பில் பரந்த இந்நிலவுலகில் பெண்ணுக்கான வெளி அவளுக்கு மட்டும் சொந்தமான அறை எங்குள்ளது என்ற தேடலில் தொடங்கி எங்கும் எதிலும் அவள் இல்லை. இக்கருத்தினை உற்று நோக்கும்போது தேசம்,மொழி, இனம் என எல்லையைக்கடந்து உலகப்படைப்பிலக்கிய வெளியில் சூழலியல் சார்ந்த கவிதைப்படைப்புகள் எவை என்று கண்டறிந்து மாலதிமைதரி,சல்மா, வெண்ணிலா கவிதைகளில் சூழலியல் பெண்ணியக்கவிதைகள் இங்கு பதிவு செய்யப்பட்டுள்ளன.

நீரின்றி அமையாது உலகு என்ற கவிதையில் நீரின் உருமாற்றம் பெண்ணின் பருவமாற்றங்களுக்கு ஏற்ப மாறும் இயல்பைக் காட்டுகின்றது. உடல் நதியாகிக்கடலில் கலந்த பின்

எல்லையற்றதாகிச் சுழல்கிறது

உடலுலகு"[4]

என்ற வரிகளில் நீரைப்போன்று உருமாற்றமுடைய பெண்ணுடல் உற்பத்தி ஆற்றல் பெற்று விடுகிறது.பெண் தன் குருதி நீரால் ஒரு புதிய உயிரை உருவாக்கிக் கர்ப்ப நீரில் மிதக்க விடுகிறாள்.பிறந்த சிசுவிற்கு முலை நீர் ஊட்டி உரமேற்றுகிறாள்.இந்த அற்புதம் பெண்ணுக்கும் நீருக்கும் மட்டுமே உரியதாகக் காட்டப்பட்டிருப்பது சிறப்புடையது.இயற்கை ஆற்றலாக, கவிஞர் பெண் அனுபவப்பார்வையில் முன் வைக்கிறார்.

**தாய்மை**

தாய்மைப்பண்பு பெண் உடலுக்கே உரியதாயினும் ஆண் உடலையும் ஈன்று தருவதால் ஆணினும் தகுதியுடையதாய் பெண் உடலை வளமையோடு தொடர்புபடுத்துகிற செயல் இந்திய மண்ணில்

மட்டுமன்றி உலகெங்கிலும் நிகழ்கிறது. தாய்மையைப் போற்றாத மனிதரே இல்லை.சமயக்குரவர்கள் இறைவனைத்தாய், தந்தையாய் காண்பதும் விவசாய பூமியை நிலமகளாகக் காண்பதும் தாய்மை நோக்கிலேயே ஆகும். தாய்மை குறித்து திரு.வி.க குறிப்பிடும் போது,

"உலகமெல்லாம் உதிப்பிடந் தாய்மை
உதித்து தங்கி ஒழுகிடந்தாய்மை
கலையின் மூலம் கமலிடந்தாய்மை
கடவுள் அன்பு சுரப்பிடந்தாய்மை" [5]

என்றும், போற்றுகின்றார்.

சித்தர்கள் கூட பெண்ணைத் தாய் என்ற நிலையில் போற்றுகின்றனர்.

"ஐயிரண்டு திங்களாய் அங்கமெல்லாம் நொந்து பெற்று
முந்தி தவமிருந்து முந்நூறு நாள் அளவு"6

என்ற அடிகளில் தாயின் அன்பு தன்னலமற்ற, தியாகச்சிந்தனையின் குறியீடாக காட்டப்படுகின்றது.

தாய்மை பெண்ணுக்கான இயற்கைப்பரிசு கொண்டாட்டமாக மாற்றப்படுகிறது.

தாய்மையைப் போற்றுதல்

பெண்ணின் கருப்பை இயற்கையின் பரிபூரணப்படைப்பு. இப்படைப்பில் தன் உற்பத்தி ஆற்றலால் போற்றப்படுவதை,

"தோட்டத்தைபார்த்து விட்டு
ஒரு மல்லிகைக் கொடியாவது நட்டிருக்கலாம்
காய்க்காமல் பூக்காமல்
என்னத்துக்கு என்றாள் அம்மா
ஊரே புதுப்பச்சையுடன் இருந்தது
வேறு எந்த நிறமுமில்லாமல்
சலிப்பும் அலுப்பும் பெருகி
வேரற்ற கொடியை ஒட்டடைப் போல..."7

என்ற கவிதையில் பெண் தன் உற்பத்தி ஆற்றலால் மல்லிகைக் கொடிப்போல பூத்துக் குலுங்கக்கூடியவள்.ஆண் அப்படி இல்லை. வேரற்ற கொடியாய் எந்த மாற்றமும் நிகழ்த்த முடியாத உற்பத்தி ஆற்றலால் பன்முகத்தன்மைக்கொண்டு பெண் இருப்பு இந்நிலத்தில் ஆழமாக வேர் விட்டிருக்கிறது என்று கூறுகிறார்.

"கரு சுமந்து
குழந்தைத்தவம் இருக்கும் பெண்ணைச்
சுமக்க
எந்த ஆணுக்கு உள்ளது கருப்பை"8

என்ற கவிதையில் பெண்ணின் அடையாளம் பெண்ணை உயர்வுபடுத்துவதாகவும் ஆணின் அடையாளம் வெற்றிடமாகக் காட்சியளிப்பதாகவும் வெண்ணிலா குறிப்பிடுகிறார். இக்கவிதை பெண் உடலைக் கொண்டாடும் விதமாக அமைகிறது.

பெண்ணின் சுதந்திரமான வாழ்க்கை வாழ்தல் என்பது அவள் சுற்றுச்சூழலோடு பொருத்தி தன்னைப் புரிந்து கொள்வதிலும் அடையாளம் காண்பதிலும் உள்ளது என்பதை,

"முதல் முறையாய்
பார்வையில் பட்டது
வாழ்ந்திருந்தவர்களின்
காலடித்தடங்களும்
சுவாசக்காற்றும்
வீடெங்கும்
சுதந்திரமாய்
அலைவதை"[9]

என்ற வரிகளின் மூலமாக கவிஞர் வெண்ணிலா எடுத்துக்காட்டியுள்ளார்.

பெண் எதையும் எதிர் கொள்ளும் துணிவையும், தன்னம்பிக்கையும் வளர்த்துக் கொள்வதன் மூலம் தன் இருப்பை, அடையாளத்தை நிலை நிறுத்திக்கொள்ள இயலும் என்பதை பதிவு செய்கின்றனர். பெண் தான் எதிர் கொள்ளும் ஏமாற்றங்களையும், தோல்விகளையும் வெற்றிக்கான அரண்களாக்கிக் கொள்ள வேண்டும் என்பதை பின்வரும் கவிதை மூலம் முன் நிறுத்துகிறார்.

"வஞ்சகமுள்ள அழைப்புகளின்
பயங்களால்
எனது அரண்களை இன்னும்
வலுப்படுத்துகிறேன்"10

பெண்ணுக்கு கல்வி மூலம் கிடைக்கும் பொருளாதாரச் சுதந்திரம் அவளது இருப்பை சூழலியல் பெண்ணியமாக உருமாற்றுகிறது.

**வளமையின் சின்னம்**

பெண்ணின் பரிணாம வளர்ச்சியில் சமூக மாற்றத்திற்கேற்ப உருமாற்றம் பெற்ற நிலை பதிவு செய்யப்பட்டுள்ளது.

"அவளின் திருமண வயதை
வேலியில் நிற்கும் கல்யாண முருங்கை சொல்லும்
இந்த மரமும் அவளும்
வேறு வேறு திசையிலிருந்து
வெட்டி நடப்பட்டவர்கள்"11

பெண் ஓரிடத்தில் பயிரிட்டு வேறொரு இடத்தில் விளையும் நாற்றுகள் என்பது இங்கு ஓர் இடத்தில் வெட்டப்பட்ட மரம் வேறொரு இடத்தில் நடப்பட்டு பெரிய தாய் மரமாகி வாரிசுகளை ஈன்றெடுக்கும் வளமைச்சின்னமாக இருப்பதை மேற் குறித்த கவிதை உணர்த்துகிறது.

கன்னியாகுமரி எனும் கவிதையில் கடலில் சூரியன் மறைகிற காட்சியைக் கவிஞர் இங்ஙனம் கற்பனை செய்கிறார். அதாவது கடல் என்ற அன்னையிடம் சிறுமி ஒருத்தி சூரியன் என்ற மிட்டாயை உண்ணக் கேட்கிறாள். கடல் தர மறுக்கின்றது. சிறுமி அதனை எடுத்துத் தின்று விடுகிறாள். என்ற நிகழ்ச்சியை கவிஞர் தம் மொழியில் புனைவாக்கியுள்ளர்.

“எட்டி இடது கையால் மறுவிளிம்பைப்
பிடித்து இழுத்து
வலது கையால் ஆரஞ்சு மிட்டாயை எடுத்து
வாயில் திணித்துக்கொண்டு திரும்புகிறாள்
உதட்டிலிருந்து ஒளிச்சாறு வழிய”12

சூரியன் ஆரஞ்சுமிட்டாயாகவும் கடல் தாயாகவும் மாறுவதாகக் கவிதை புனையப்பட்டிருக்கிறது. பிரபஞ்ச ஆற்றலை உள்ளடக்கியதாகவும் தானே பிரபஞ்சமாகவும் பெண் இருக்கிறாள். என்ற ஹெலன் சீக்ஸியின் பெண்களின் எல்லா பிரதிகளிலும் கேட்கும் குரல்களின் மூல ஊற்றாகத் தாய் தான் விளங்குகிறாள். என்ற கருத்தோடு ஒத்திசைவதைக்காணலாம்.

**சொற்களின் இருப்பிடம்-மொழி உருவாகும் சூழலியல்**

நம் பிள்ளைகளுக்கு பேசக்கற்றுத்தரும் அவசர மொழிகள் தேவையில்லை. மொழி நம் ஆடையில்லை. விதவிதமாய் மாற்றிக் கொள்வதற்கு பசிக்குத்தின்று கொள்ள நம் உணவில்லை. மொழி நம் இனத்தின் அடையாளம். எழுதுகோலின் வழியே வெளிப்படும் எழுத்துக்கள் வார்த்தை விளையாட்டில்லை. மொழியை நீர் போல் மாற்றி எதனுடனும் கலந்த பேச கலப்பு மொழி தயாராய் இருக்கிறது. மொழி சுவாசம் பிள்ளைகளுக்கு விளையாட கொஞ்சி மகிழ, மழலை மொழியாகவும்,அதிகாரம் செய்ய ஆணாதிக்க மொழியாகவும், வியாபார மொழியாகவும் சூழலுக்கேற்ப மாற்றம் கொள்கிறது.

“வனையப் பெறாத
களிமண்ணும்
சுடத்தெரியாத
நெருப்பும் போல
வெற்றுக்கூடான
சொற்கள் எதற்கு?”13

மொழியின் புனைவு வாழ்க்கையாக இருக்க வேண்டும். வாழ்க்கை மொழியாக இருக்க வேண்டும். பெண் அனுபவம் சார்ந்த மொழி கலப்பில்லாதது என்ற கருத்தை வெண்ணிலா முதன்மைப்படுத்துகிறார்.

**முடிவுரை**

“Feminist environmental philosophy” refers to this diversity of positions on the interconnections among women, nonhuman animals and nature within Western philosophy–what will be called, simply,

"women-nature connections". Unless specifically or separately identified, nonhuman animals are included in the concept of "nature". (It is beyond the scope of this essay to consider non-Western philosophical positions concerning the environment.14

பஞ்சபூதங்களான மனித உடல் இன்று சமூக பண்பாட்டு காரண கரிய மதிப்பீடுகளை வழி நடத்தும் செயல்படுத்தும் கடத்தும் ஊடகமாக மாறியிருக்கிறது. இவற்றின் வன்முறைகளிலிருந்து எளிய மனித உடலை மீட்டு அதன் இயற்கை விதிகளுக்கு ஆட்பட்ட பேரியக்கத்தில் ஒன்றிவிடும் எத்தனிப்பாகக் கவிஞர்களின் கவிதைகள் வெளிப்படுத்தும் கருத்து வாயிலாக அறியமுடிகின்றது.

**துணைநூற் பட்டியல்**


1. https://www.britannica.com/topic/ecofeminism

2 . நவீன இலக்கியக் கோட்பாடுகள்- பேரா. க.பஞ்சாங்கம் முதல்பதிப்பு 2008, காவ்யா வெளியீடு, 16, இரண்டாம் குறுக்குத்தெரு,டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம் சென்னை -24 பக்-202.

3. https://plato.stanford.edu/entries/feminism-environmental/

4. நீரின்றி அமையாது உலகு- மாலதிமைத்ரி காலச்சுவடு பதிப்பகம், 669, கே. பி .சாலை, நாகர்கோவில்-629001. முதல் பதிப்பு 2004.

5. திரு.வி.க. பெண்ணின் பெருமை (அ) வாழ்க்கைத் துணைநலம், ப.55

6. தமிழ் வரலாற்று படிமங்களில் பெண்நிலை நோக்கு, -செல்வி திருச்சந்திரன் பக் 76, குமரன் பதிப்பகம்,79, முதல் காலனி தெரு, வடபழனி, சென்னை600 026, முதல்பதிப்பு -ஜீன் 1997

7. நீரின்றி அமையாது உலகு- மாலதிமைத்ரி பக் -46 காலச்சுவடு பதிப்பகம், 669 கே. பி .சாலை, நாகர் கோவில்-629001. முதல் பதிப்பு 2004.

8. நீரலையும் முகம்- கவிஞர். வெண்ணிலா பக்.35 பாவை பப்ளிகேஷன்ஸ், 149,ஜானி ஜான்கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை -600 014, முதல்பதிப்பு, டிசம் -2007.

9. ஆதியில் சொற்கள் இருந்தன. அ.வெண்ணிலா பக் 24, அன்பு நிலா பதிப்பகம், அம்மையப்பட்டு, வந்தவாசி-604408.

10. ஒரு மாலையும் இன்னொரு மாலையும்- சல்மா பக்-41 காலச்சுவடு பதிப்பகம்- 669, கே.பி. சாலை, நாகர் கோவில்-629 001 நான்காம் பதிப்பு- நவம் 2007.

11.சங்கராபரணி- மாலதிமைத்ரி-பக்-61 காலச்சுவடு பதிப்பகம், 669, கே. பி .சாலை, நாகர் கோவில்-629001. மார்ச்முதல் பதிப்பு 2006.

12. நீரின்றி அமையாது உலகு- மாலதிமைத்ரி பக் -19 காலச்சுவடு பதிப்பகம், 669, கே. பி .சாலை, நாகர் கோவில்-629001. முதல் பதிப்பு 2004.

13. இசைக்குறிப்புகள் நிறையும் மைதானம்- கவிஞர்.அ. வெண்ணிலா ப.18 அன்பு நிலா பதிப்பகம், அம்மையப்பட்டு, வந்தவாசி-604 408.

14. https://plato.stanford.edu/entries/feminism-environmental/

ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# சங்க இலக்கியத்தில் பாலைத்திணை காட்டும் உளவியல் சிந்தனைகள்

26

**வெ.பாரதி, முனைவர் பட்ட ஆய்வாளர்,**
**தமிழ்த்துறை, பச்சையப்பன் கல்லூரி, சென்னை**

**ஆய்வுச்சுருக்கம்**

"***சங்க இலக்கியத்தில் பாலைத்திணை காட்டும் உளவியல் சிந்தனைகள்***" என்னும் தலைப்பில் இக்கட்டுரை வழங்கப்பட்டுள்ளது. இந்த கட்டுரையில் உளவியல் பற்றிய விளக்கத்தை முன்னுரையிலும் பழந்தமிழ் இலக்கியமான சங்க இலக்கியத்தில் உளவியல் நிகழ்வுகளை நான்கு தலைப்புகளாக வகுத்து பொருளடக்கத்தில் பட்டியலிடப்பட்டுள்ளது. மற்றும் எட்டுத்தொகையின் அகம் சார்ந்த நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு முதலிய நூல்களில் குறிஞ்சியும், முல்லையும் திரிந்த பாலைத்திணை மட்டும் சொல்லக்கூடிய உளவியல் சிந்தனைகள் இக்கட்டுரையின் ஆய்வு எல்லையாகும். சங்க இலக்கியம் பெரும்பாலும் உளவியல் கருத்துக்களைக் கொண்டுள்ளதால் உளவியல் இலக்கியம் என்றும் இதனை வழங்கலாம் என்பதே இவ்வாய்வுக் கட்டுரையின் கருதுகோள் ஆகும். இத்தகவல்கள் ஒன்று சேர்ந்து தொகுப்புரையில் சொல்லப்பட்டுள்ளது.

**கடவுச்சொற்கள்:** கருக்கு, கொம்மை, வான்பூ, இடும்பை, கலிழும், தண்ணுமை, பாணி அத்தம், கரகம், முக்கோல், சுவல், கொளை.

**முன்னுரை**

உளவியல் என்பது உள்ளுணர்வு அறியும் ஆற்றல் கொண்டது. ஆளுமை தொடர்பான பல செய்திகளை உள்ளடக்கியது உளவியலே. உள்ளத்தில் தோன்றும் கருத்துக்களைக் காண்பிக்கும் உளவியல் மனவியல் என்றும் வழங்கலாம்.அன்று முதல் இன்று வரை உள்ள தமிழ் இலக்கியங்கள் ஒவ்வொன்றிலும் உளவியல் உள்ளது. இத்தகு இலக்கியங்களில் சங்க இலக்கியத்தில் பாலைத்திணை காட்டும் உளவியல் சிந்தனைகள் என்ற தலைப்பில் இக்கட்டுரையை ஆராய்ந்து காண்போம்.

**சங்க இலக்கியத்தில் உளவியல் நோக்கு**

இலக்கியமும் உளவியலும் மிகவும் நெருங்கிய தொடர்புடையவை என்பதற்கு சங்க இலக்கியம் நல்லதொரு சான்றாகும். சங்க இலக்கியம் வாழ்வியல் அடிப்படையில் அமைந்துள்ளதால் அதனுள் உளவியல் கூறுகளைப் பெரும்பாலும் காண முடிகிறது. வாழ்வில் எதிர்கொண்ட சிக்கல்களில் உருவான ஒரு எதிரொலியாகவே அகத்திணை அமைகின்றது.

அகத்திணைப் பாடல்களின் பாடுபொருள் ஏதேனும் ஒரு மனநிலையினையோ அல்லது அந்த மனநிலை விளைவிற்குரிய சூழலையோ பாடுபொருளாகக் கொண்டு விளங்குகின்றன. செய்யுள்களில் அக மாந்தர்களின் உள் உணர்வுகளுக்கு ஏற்ப உளவியல் அமைந்துள்ளது.

சங்க இலக்கியத்தில் இடம் பெறும் அக மாந்தர்கள் (தோழி, தலைவன், தலைவி, தாய், செவிலி, பரத்தை, வாயில்கள்) என்போர் ஆவர். இவர்களில் ஒரு சிலரின் கூற்றினையே உளவியலாகக் காணலாம்.

**<u>சான்று</u>**

வானாலும் பொன்னை ஒத்த மேனியிடத்துக் கருமணி போல தாழ்ந்திருக்கும் நல்ல நெடிய கூந்தலானது நரையோடு முடிக்கப் பெறும் தன்மையை அடைந்தாலும் தலைவியைக் கைவிடாது காத்தல் வேண்டும்.

இளமையில் காதலிக்கும் தலைவியை முதுமை வரையிலும் காக்க வேண்டும் என தோழி தலைவனிடம் கூறுவது தோழி தன் உள்ளத்தில் தலைவி மீது கொண்டுள்ள அன்பின் பரிணாமத்தை உளவியலாகக் காட்டுகிறது. இதனை

**'அண்ணாந்து ஏந்திய வனமுலை தளரினும்**
**பொன் நேர் மேனி மணியின் தாழ்ந்த**
**நல் நெடுங் கூந்தல் நரையொடு முடிப்பினும்'** (நற்-10)

நற்றிணையின் பாடல் வரிகள் எடுத்துரைக்கிறது.

**குறுந்தொகை காட்டும் மனவியல் மாண்புகள்**

தலைவன் தலைவியைப் பிரிந்து பொருள் வயின் பிரிந்து சென்றது கண்டு வெண் மணல் பரப்பில் தழைத்த பசிய அடியையும், கருக்கினையும் உடைய திரண்ட பனையினது உச்சியின் கண்ணே உள்ள வெள்ளிய மடலிலே வைத்த வெள்ளிய பூவினைச் சூடிக்கொண்டு மலைகள் பொருந்திய காட்டிடத்தே நம் தலைவர் சென்றுவிட்டார் என தலைவி இவ்வாறு வருந்திக் கூறியதைத் தோழி ஆற்றுவிக்கிறாள் என்பதனை,

**' வெண்மணற் பொதுளிய பைங்கால் கருக்கின்**
**கொம்மைப் போந்தைக் குடுமி வெண்தோட்டு**
**அத்த வேம்பின் அமலை வான்பூச்**
**சுரிஆர் உளைத்தலை பொலியச் சூடிக்**
**குன்று தலை மணந்த கானம்'.** (குறு-281)

இக்குறுந்தொகை பாடல் விளக்குகிறது.

தலைவி புலம்ப தோழி ஆற்றுவிக்கவென இரு பெண்களின் உரையாடலில் தலைவியின் மனநிலை 'குன்று தலை மனந்த கானம் போல' தலைவனைப் பிரிந்து வெம்மையாக தோன்றுகிறது என தலைவியின் மனநிலையை சொல்வதாக அமைந்துள்ளது.

***உளவியல் நோக்கில் தாய்மை***

புலியாலே பற்றிக் கொள்ளப்படுதனின்றும் தப்பிப்பிழைத்தற்காக வைத்த கொம்புகளை உடைய முதிய கலைமானானது, தன் பிணைமானும் அச்சம் தீர்ந்து தன்னருகே வந்து சேருமாறு,தன் ஆண்மைக் குரலெடுத்து முழக்கி அழைக்கின்ற தன்மையுடையது என்பர்.வெம்மை கொண்ட சுரத்தினை அத்தகைய சுரத்திடத்தே என் மகளைத் தன்னோடு அழைத்துச் சென்ற வலிய வில்லினை உடையவனான விடலைக்குத் தாயானவளும் என்னைப் போலவே துயருற்று வருந்துக என்கிறார் நற்றாய்.

அதாவது தலைவனின் தாயும் நற்றாய் போல வருந்த வேண்டும் என நற்றாய் புலம்புவதாக அமைந்த உளவியலாகும்.

**'நினைத்தொறும் கலிழும் இடும்பை எய்துக**
**புலிக்கோட் பிழைத்த கவைக்கோட்டு முதுகலை**
**மான்பிணை அணைதர,ஆண்குரல் விளிக்கும்**
**வெஞ்சுரம் என்மகள் உய்த்த**
**வம்பமை வல்வில் விடலை தாயே!** (ஐங்-373)

கலித்தொகையில் பாலைக்கலியில் ஒரு பாடல் செவிலி கூற்றாக இடம் பெற்றுள்ளது. இதில் உடன்போக்கில் சென்ற தலைவனையும்,தலைவியையும் தேடி பாலை நிலம் செல்வதாகவும் அப்போது எதிர்கொண்ட வரும் முக்கோற்பகவரிடம் தன் மகளை பற்றி செவிலி கேள்விகேட்பதாகவும் அவர்கள் பதிலளிப்பதாகவும் அமைந்துள்ளது.

இந்நிகழ்வு செவிலி தான் வளர்த்த மகளின் மீதுள்ள அன்பால் அவளை எண்ணி உள்ளம் வருந்திச் சொல்லும் உளவியலைப் புலப்படுத்துகிறது.

உதாரணம்

**'எறித்தரு கதிர்தாங்கி ஏந்திய குடை நீழல்**
**உறித்தாழ்ந்த கரகமும்,உரைசான்ற முக்கோலும்**
**நெறிப்புச் சுவல் அசைஇ,வேறு ஓரா நெஞ்சத்துக்**
**குறிப்பு ஏவல் செயல் மாலைக் கொளைநடை அந்தணீர்!** (கலி-09)

**தலைவனின் உளவியல் பண்புகள்**

வன்மை மிக்க மறவர்களின் காட்டு அரண்களில் கற்கள் நிறைந்துள்ள வழிப்பாதையில் தண்ணுமை பறை ஒலிக்க வழிச் செல்வோரை நடுங்கச் செய்யும் அகமே!

நீண்டு விளங்கும் கருங்கூந்தலையுடைய காதலியின் மார்பகத்தையும் மூங்கிலின் ஒத்த தோளினையும் கண்டு மகிழ்ந்தாக வேண்டும் என்கிறான்.

இச்செய்தி தலைவி மீது தலைவன் கொண்டுள்ள காதல் உணர்வை ' உளவியலாக படம் பிடித்துக் காட்டுகிறது என்பதற்கு,

**'கடுங்கண் மறவர் கல்கெழு குறும்பின்**
**எழுந்த தண்ணுமை இடங்கண் பாணி,**
**அருஞ்சுரம் செல்வோர் நெஞ்சம் துண்ணெனக்**
**குன்று சேர் கவலை இசைக்கும் அத்தம்,**
**நனி நீடு உழந்தனை மன்னே! அதனால்,**
**உவ இனி வாழிய நெஞ்சே!** (அகம்-87)

இப்பாடல் வரிகள் சிறந்த உதாரணமாகும்.

**தொகுப்புரை**

உளவியல் வரையறையும், சங்க இலக்கியத்தில் அகத்திணையில் உளவியல் நிகழ்வுகளும்,நற்றிணை, குறுந்தொகை போன்ற அகஇலக்கிய நூல்கள் உணர்த்தும் தோழி,தலைவி,தாயின் உளவியல் ஒழுகலாறுகள் இக்கட்டுரையில் வரையறுக்கப்பட்டு உள்ளது.

***முடிவுரை***

மானிடர்களின் உள்ளத்தில் எழும் கருத்தே சங்க இலக்கியம் வாயிலாக அகமாந்தர்களிடையே பேசப்பட்டது.சங்க இலக்கியம் உளவியல் இலக்கியம் என்றும் கூறலாம் என்பதே இந்த ஆய்வுக் கட்டுரையின் முடிவாகும்.

***அடிக்குறிப்பு***

1. இராமையாபிள்ளை,நா.,புலவர், " நற்றிணை பக்-26,27
2. இராமரத்தினம்," குறுந்தொகை (மூலமும் உரையும்)" , பக்-304
3. புலியூர்க்கேசிகன்," ஐங்குறுநூறு(குறிஞ்சி,பாலை,முல்லை)"
4. இராமசுப்பிரமணியம்,வ.த., " சங்க இலக்கியம் அகநானூறு-மூலமும் தெளிவுரையும், பக்- 173
5. விசுவநாதன்,அ., " சங்க இலக்கியம் கலித்தொகை, பக்-31.

***துணை நூல்கள்:***

1.அகத்திணை மாந்தர்-ஓர் ஆய்வு, இராமகிருட்டிணன், ஆ.சர்வோதய இலக்கியப் பண்ணை
2.சங்க இலக்கியத்தில் தோழி,சரளா இராஜகோபாலன், ஒளிப்பதிகம், சென்னை,மு.ப-1986.

ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

27

# குறிஞ்சித்தேன் நாவலில் உளவியல் பார்வை

முனைவர் சு.பால்பாண்டி, இணைப்பேராசிரியர்,

தமிழ்த்துறை, பரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,

சென்னை

**ஆய்வுச்சுருக்கம்**

தனிமனிதனிடம் இயல்பாகவே வந்தேறிய நடத்தைச் செயலைப் பழக்கம் என்கிறோம். பழக்கம் என்பது ஒரு கற்கும் பொருளாகும். இது தனிமனிதனிடத்தும் இயல்பாகவே வந்தமைந்த நடத்தையைக் குறிப்பதாகும். பழக்க உணர்ச்சிக்கு இன்றியமையாத கூறாகக், கருதப்படுகிறது. நனவுடன் தொடங்கிய செயல் நாளடைவில் நனவின்றி நிகழக்கூடியதாக ஆகிவிடும் செயலே பழக்கம் ஆகும்" என்று வாழ்வியல் களஞ்சியம் விளக்கமளிக்கிறது. எனவே தனிமனிதப் பழக்கவழக்கங்கள் ஓர் இனத்தின் உள்ளப்பார்வையாக எடுத்துரைப்பதை அறியமுடிகிறது.

**ஆய்வுநோக்கம்**

பழக்கவழக்கங்கள் மனித வாழ்வியலில் நீங்கா இடம்பெறினும், அனைத்து மக்களிடத்தும் ஒரே மாதிரியாகக் காணப்படுவதில்லை. அவ்வகையில் ராஜம் கிருஷ்ணன் நாவல்களில் இடம்பெறும் படகர் இனமக்களின் பழக்க வழக்கங்களை இனங்கண்டு பண்பாட்டுச் சிந்தனையில் அணுகச் செய்தலாகும்.

**பயன்பாடு**

புறவுலகில் வாழும் மனிதன் பொருள்களைச் சார்ந்தே வாழ்ந்து வருகின்றான். இதனையே வள்ளுவப் பெருந்தகை பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்று கூறுகிறார். அவரது கூற்று இன்றையக் காலகட்டத்தில் பொருளின்மையின் இன்றியமையாமையினை உணர்த்துகிறது. மனித வாழ்வில் அன்றாடம் பயன்படுத்தப்பெறும் பொருள்களே புழங்கு பொருள்கள் என வரையறை செய்யலாம். நம் வாழ்வோடு இரண்டறக் கலந்திருக்கும் பொருட்களின் மீது நம் கருத்துக்கள், உணர்வுகள், மதிப்பீடுகள், விழுமியங்கள் போன்றவற்றைக் கொண்டு அவற்றோடு பல்வேறு நிலைகளில் உறவாடி வருவதைக் காணமுடிகிறது.

**முன்னுரை**

ஒவ்வொரு இனத்திற்குமான தனித்தன்மைமிக்க பழக்க வழக்கங்கள் அவ்வினத்தின் தொன்மைச் சின்னங்களாகவும் பண்பாட்டுக் கூறுகளாகவும் விளங்குகின்றன. பழக்கவழக்கங்கள், ஒரு இனத்தின்

நடத்தைமுறைகள், ஒழுகலாறுகள் ஆகியன பண்பாட்டுக் கூறுகளைப் படம்பிடித்துக் காட்டுகின்றன. ஒரு தனிமனிதனிடம் காணப்படும் பழக்க வழக்கங்களுக்கு அவ்வினக்குழுவே முக்கியக் காரணம் எனலாம்.

"தனிமனிதனிடம் இயல்பாகவே வந்தேறிய நடத்தைச் செயலைப் பழக்கம் என்கிறோம். பழக்கம் என்பது ஒரு கற்கும் பொருளாகும். இது தனிமனிதனிடத்தும் இயல்பாகவே வந்தமைந்த நடத்தையைக் குறிப்பதாகும். பழக்க உணர்ச்சிக்கு இன்றியமையாத கூறாகக், கருதப்படுகிறது. நனவுடன் தொடங்கிய செயல் நாளடைவில் நனவின்றி நிகழக்கூடியதாக ஆகிவிடும் செயலே பழக்கம் ஆகும்" என்று வாழ்வியல் களஞ்சியம் விளக்கமளிக்கிறது. எனவே தனிமனிதப் பழக்கவழக்கங்கள் ஓர் இனத்தின் பழக்கவழக்கத்தை எடுத்துரைப்பதை அறியமுடிகிறது.

**உளவியலின் நோக்கம்**

மக்களனைவரும் தங்கள் நடத்தையைப் பற்றியும் பிறரது நடத்தையைப் பற்றியும் அறிய எப்போதும் ஆர்வம் கொண்டவராக இருக்கின்றனர். மனித நடத்தையின் ஏதாவது ஒரு படிநிலையினை ஏதாவது ஒரு வழியில் எண்ணிறந்த சமூக அறிவியல்கள் ஆராய்கின்றன. ஆனால் அவ்வறிவியல்களின் நடவடிக்கைகள் அவர்களது அறிவார்வத்தை முழுவதுமாக நினைவுப்படுத்த உதவுவதில்லை. சான்றாக மனித இனவியல் குழுவாழ்வு பற்றியும் குறிப்பிடுகிறது எனலாம்.

உளவியல் உள்ளம் பற்றிய அறிவியல் என்று வரையறுக்கப்பட்டுள்ளது. உள்ளத்தின் வாழ்க்கையைப் பற்றியதோர் அறிவியலே உளவியல் என்று வில்லியம் ஜேம்ஸ் கூறுகின்றார். கடந்த காலங்களில் அதனை நினைவிருத்தல் என்று குறிப்பிட்டுள்ளனர்.

**சமூகஉளவியல்**

சமூகம் குழு அல்லது சமூகத்தில் ஏற்படும் தனியவனின் நடத்தையில் கவனம் செலுத்துகிறது. அது ஒரு தனியவன் தான் உறுப்பினராகவுள்ள சமூகத்தின் அமைப்பு, செயல்வினை ஆகியவற்றினால் எவ்வாறு உடன்பாடான வகையில் பாதிக்கப்படுகிறார் என்று ஆராய்கிறது. தனியவன் தன்குழுவின் வழக்கங்கள், சமூகப்பழக்கங்கள், சமூகத்தின் ஒரு வழிக் கொள்கைகள் ஆகியவற்றுக்கு ஏற்ப செயலுறுகிறான். பொதுக்கருத்து உருவாதல், நோக்குதல், அக்கறைகள் ஆகியவற்றின் தோற்றமும் மாற்றமும் போன்ற பல்வேறான சமூக நிகழ்ச்சிகளிலும் சமூக உளவியல் அக்கறை கொண்டுள்ளது.

பழக்கம் சமுதாயத்தின் பிரதிபலிப்பாக அமைவதுடன், மக்களின் பாரம்பரியத்தையும் வெளிப்படுத்துகிறது. எனவேதான் "பழக்கம் சமுதாயத்தை இயங்கச் செய்யும் சக்கரம் என்றும், சமூகப் பாதுகாப்புச் செயல் என்றும் மனிதனின் இரண்டாம் இயல்பு என்றும் சமூகவியல் அறிஞர் கூற்றை

எடுத்துக்காட்டுவார் பாஸ்கல் கில்பர்ட்." பழக்கத்தில் தொடர்ந்த நிலையே வழக்கமாகும். பழக்கவழக்கங்கள் மனித வாழ்வியல் நீங்கா இடம்பெறினும், அனைத்து மக்களிடத்தும் ஒரே மாதிரியாகக் காணப்படுவதில்லை. அவ்வகையில் ராஜம் கிருஷ்ணன் நாவல்களில் இடம்பெறும் படகர் இனமக்களின் பழக்க வழக்கங்களை ஆராய்வதன் மூலம் அவ்வினமக்களின் உள்ளத்தன்மையை இனங்கண்டுகொள்ள முடியும்.

**உணவு**

படகர்கள் உணவு முறையில், அசைவ உணவு உண்ணும் வழக்கம் காணப்படவில்லை. இவர்கள் முழுவதுமாக சைவ உணவினையே உண்ணுகின்றனர். இவர்களின் உணவு முறையில் பால், தயிர், மோர், வெண்ணெய் ஆகிய பசுவிடம் இருந்து பெறப்படும் உணவுப் பொருட்கள் அதிகம் காணப்படுகிறது. இவர்களின் உணவு உற்பத்தியும் தொழிலும் அதற்குத் தக்கவாறு, கால்நடை வளர்ப்பாகவும், கிழங்கு பயிரிடுவதாகவும் அமைகிறது. புலால் உண்பவர்கள் இவர்களிடையே இழிவாகப் பேசப்படுகிறனர் என்ற நிலையைப் படகர்களின் வாழ்வியலைக் கூறும் 'குறிஞ்சித்தேன்' நாவல் பின்வரும் வகையில் காட்டுகின்றது.

"துரையும் நம்மைப் போல் மனிதன்தான். சொல்லப்போனால் இழிகுலத்தோர் போல் ஆடும் மாடும் திண்பவன்" என்றும்.

'நீ விடு, டேய், நீ என்ன நினைத்தாய்? திருட்டுப் பயலே, உன்னை இந்தக் கையால் பால் ஊற்றி வளர்த்தோம் என்னை எப்படியடா மோசம் செய்தாய்? துரை மாரி மேசையா துடைக்கிறாய்? ஆடு மாடு தின்னும் ஹொாலையானே! போ, போடா, போ!"2 என்று இந்நாவலில் லிங்கையா என்ற கதாப்பாத்திரம் தனது மகனைத் திட்டும் பொழுது ஆடு, மாடு தின்பவர்கள் இழி குலத்தவர்கள் என்றும் கீழானவர்கள் என்றும் கூறுவதிலிருந்து இவர்களிடையே அசைவ உணவு முறை பழக்கத்தில் வந்திருப்பதை அறிந்துகொள்ள முடிகிறது.

இவர்களிடையே புலால் உண்பவர்கள் 'ஹொலையா' என்னும் கீழ் இனத்தவருடன் ஒப்பிடப்படுவதை நாவலின் பகுதி காட்டுகின்றது. இவர்கள் சாமையால் சமைத்த உணவில் நெய் ஊற்றி உண்ணும் பழக்கத்தைக் கொண்டுள்ளனர். கேழ்வரகினால் செய்யப்பட்ட களிக்கு மொச்சப்பயிர் போட்டுச் செய்த புளிக்குழம்பினை விரும்பி உண்ணுவதுடன் வீட்டிற்கு வரும் விருந்தினர்களுக்குப் பருகுவதற்கு மோர், தேநீர் கொடுக்கும் வழக்கம் இம்மக்களின் பண்பாட்டு நிலையைப் புலப்படுத்துகிறது.

**உடை**

'துணிகள் நடைமுறைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதாகவும் சில அர்த்தங்களையும் புலப்படுத்துவதாக அல்லது கலை நயத்தை வெளிப்படுத்துவதாகவும் அமைகின்றன. சமூக உறவுகளைத் திடமாக்குவதிலும், சமூக அடையாளங்களையும் விழுமியங்களையும் வெளிப்படுத்துவன ஆடைகள்"3 என குறிப்பிடுவது எண்ணத்தக்கதாகும்.

படகர் இனப்பெண்கள் வழக்கமாகக் கொண்டிருக்கும் இயல்பாக, அவர்களின் ஆடையில் காணப்படும் மாறுதல்களையும், பெண்களின் பொதுவான தோற்றத்தையும் குறிஞ்சித்தேன் நாவல் பின்வருமாறு கூறுகிறது.

'அவர்கள் வழக்கப்படி, மார்புக்கு மேல் வெள்ளை முண்டுத்தான் உடுத்தியிருப்பாள். இளவேய்கள் போல் தோள்கள் தெரியும். உருண்டையான கைகளில் வெள்ளிக் கடகங்களும், தளிர் விரல்களில் மோதிரங்களும் அணிந்திருப்பாள். உச்சந்தலையை மூடி வெளுப்பாக அவள் கட்டிக்கொண்டிருக்கும் வட்டுக்கு கீழே அடங்காத கருங்குழற்கற்றை, வட்ட மதியன்ன முகத்தின் அழகுக்கு அழகு செய்யும்."4 இது படகர் இனப்பெண்களின் உடை பழக்கவழக்கத்தை வெளிப்படுத்துகிறது.

**வீட்டின் அமைப்புமுறை**

மக்களின் அடிப்படைத் தேவைகளுள் ஒன்றான இருப்பிடத்தைத் தங்களது தட்பவெப்பநிலைக்கு ஏற்பவும், பொருளாதாரத்திற்கு ஏற்பவும் தங்களின் இருப்பிடங்களை அமைத்துக்கொள்ளும் நிலையை நாவல்கள் புலப்படுத்துகின்றன.

படகர்கள், பொதுவாக மலை உச்சியில் அல்லது சரிவில் உள்ள கிராமங்களில் வசிக்கின்றனர். அவர்களின் வீடுகள் எல்லாம் ஒரே வகையான அமைப்பைக் கொண்டதாக உள்ளன. படகர்கள் தாங்கள் வாழும் கிராமத்தை ஹட்டி என்று அழைக்கின்றனர். ஹட்டி என்றால் குடியிருப்பு பகுதி என்பது பொருள். ஹட்டியில் வீடுகள் தாழ்ந்த குறுகிய வாயில்களைக் கொண்டனவாயும் இரு முக்கியமான பகுதிகளை உடையனவாயும் அமைந்துள்ளது. வீடுகள் நேர்ப்பட ஒழுங்காக அமைந்திருக்கின்றன. இப்படிப் பல வரிசைகள் இருப்பதால் அவை பல தெருக்கள் போல் காட்சியளிக்கினறன. ஒவ்வொரு வீட்டிலும் ஓகமனை (உள்ளகம்), இதமனை (வெளியகம்) என்ற இரு பகுதிகள் உண்டு. இவை இரண்டையும் பிரிக்கும் இடத்தில் எல்லா இடங்களுக்கும் வெளிச்சம் தெரியும்படி தீபமாடம் ஒன்று அமைந்திருக்கும். இந்தத் தீபமாடம் வெளியகத்திலிருந்து உள்ளகத்திற்குச் செல்லும் வளைவு வாயிலுடன் இணைந்து அமைந்திருக்கும். உள்ளகத்தில் ஓர் ஒதுக்குப்புறம் ~ஆகோட்டு| என்று அழைக்கப்படும் அங்கு பால்படு

பொருட்கள் வைக்கப்படும். மேலும், உள்ளகத்திலேயே சமையலும் செய்வதால் அந்த அறைக்கு விலக்கான பெண்கள் செல்வதில்லை. இதனைக் குறிஞ்சித்தேன் நாவல் பின்வருமாறு காட்டுகிறது.

'ஒரே மாதிரியான ஹட்டியின் இல்லங்கள், தாழ்ந்து குறுகிய வாயில்களைக் கொண்டவையாய், இரு முக்கியமான பகுதிகளை உடையனவாய் அமையப்பெற்றவை. முன்புறம் சிறு வராந்தாவைப் போன்ற பகுதியை ஒட்டி, ஒவ்வொரு வீட்டிலும், வெளிமனை என்ற பகுதி உண்டு. அதை அடுத்து, உள்மனை என்ற பகுதியில் வாயிலுக்கு நேர்வளைவான வாயில் சமையற் பகுதியைப் பிரிக்கும். உள்மனையின் வலது ஓரத்தில், பால்மனை அல்லது பூசை அறை, சுவரோடு ஒட்டிய வளைவு வாயிலுடன் இணைந்திருக்கும். உள்மனையின் நடுவே, சமையலறை வாயிலில், சுவர்த்தண்டில், எல்லா இடங்களுக்கும் வெளிச்சம் தெரியும் வண்ணம் தீபமாடம் அமைக்கப் பெற்றிருக்கும். மேலே மூங்கிலால் ஆன சேமிப்புப் பரண்களும் உண்டு."5

இவ்வாறு படகர்கள் தங்களது வீட்டின் அமைப்பு முறையைச் செவ்வனே அமைத்துள்ளனர்.

**தொழில்**

மனித சமுதாயம் என்பது மக்களின் தேவைகளுக்காகத் தோன்றியது. எனவே சமுதாயத்தின் பல்வேறு தொழில்கள் தோற்றம் பெற்றன எனலாம். தொடக்ககாலத்தில் இவ்வாறு தேவைகளை ஈடுசெய்யத் தோன்றிய தொழில் முறையானது பிற்காலத்தில் இனங்களை அடையாளப்படுத்தும் அளவிற்கு ஓர் இனத்திற்குண்டான தொழில் இதுதான் என்று இனத்தையும் தொழிலையும் ஒன்றிணைத்தன. இதன் காரணமாகப் பொதுநிலையில் காணப்பட்ட சமுதாய மக்கள் தொழில் காரணமாக வேறுபடுத்தப்பட்டு பிரித்தறியப்பட்டனர். உழவர்கள், நெசவாளர்கள், குருமார்கள், தச்சர்கள் என்ற தொழில் சார்ந்த பகுப்பு முறைகளை இலக்கியங்களில் சங்ககாலம் தொடங்கி இன்றுவரை நாம் காணமுடிகிறது. இத்தகைய தொழில் சார்ந்த பகுப்புகள் காலப்போக்கில் அவர்கள் செய்யும் தொழிலுக்கேற்ப உயர்வு தாழ்வுகளைக் கற்பித்துக் கொண்டன.

'உற்பத்தித் சக்திகளின் மீது மனிதன், ஆதிக்கம் பெறுவது தான் மனிதகுல முன்னேற்றத்தின் ஊற்றுக் கண்ணாகும். இயற்கை நிலைமைகள், வரலாற்று கட்டங்கள் இவற்றில் அமைந்துள்ள வேறுபாடுகள் பல்வேறு மக்களின் வளர்ச்சியிலும் பல்வேறு வர்க்கங்கள், சமூக நிறுவனங்கள், பண்பாட்டுத்துறைகள் ஆகியவற்றின் வளர்ச்சி வேகத்திலும் வேறுபாடுகள் ஏற்படுத்துகின்றன. இதனால் வரலாறு முன்னேறுகிற பொழுது சமுதாயத்தின் ஒரு பகுதி அல்லது மற்றோர் பகுதியில் வேகமாகவோ மெதுவாகவோ வளர்ச்சி காணப்படும்"6 என்று ஏங்கல்ஸ் குறிப்பிடுவது போன்று உற்பத்திக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நோக்கில் தொழிற்பகுப்புகள் தோன்றியிருக்கக்கூடும். இதன் காரணமாகவே

தோல் சார்ந்த தொழில் புரிவோர் இழிந்தோர் என்றும், உணவுப்பொருள் உற்பத்தி செய்வோர் நடுத்தரமானவர்கள் என்றும் அதனை வாங்கி உண்டுவிட்டு பொழுதைக் கழிப்போர் உயர்ந்தோர் என்றும் கருதப்பட்டனர். இவ்வாறு உருவாக்கப்பட்ட தொழில், அதனை மேற்கொள்ளும் மக்களிடையே எந்நிலையில் காணப்படுகிறது என்பதனை நாவல்கள் காட்டுகின்றன.

மக்களின் வாழ்வியலைச் சித்தரிக்கும் போக்கில் எழுதப்பெற்ற நாவல்களில் அவர்களின் தொழில்நிலை மிகுதியும் பேசப்படுகின்றது. எனவே, குறிப்பிட்ட தொழில் செய்யும் மக்களிடையே அவர்கள் குறித்த மனப்போக்குகளும் தொழிலும் எந்நிலையில் இடம் பெறுகின்றன என்பதனை நாவல்களின் வழியாக பின்வருமாறு அறியலாம்.

படகர்கள் தங்களது முக்கியத் தொழிலாக விவசாயத்தை மேற்கொள்கின்றனர். மேலும் கால்நடை வளர்ப்பு என்பது இம்மக்களிடையே பரவலாகக் காணப்படும் தொழிலாக உள்ளது, படகர்களைத் தங்களது நிலங்களில், சாமை, கேழ்வரகு, கோதுமை, உருளைக்கிழங்கு, முள்ளங்கி, முட்டைகோஸ் போன்றவற்றை அதிகம் பயிரிடுகின்றனர். இவர்களிடையே தேயிலை பயிர் செய்யும் முறை அறிமுகமான பின்பு, தேயிலைச் சாகுபடி செய்யும் தொழில்முறை அதிகம் உருவாகியுள்ள நிலை இம்மக்களின் வாழ்வியல் மாற்றங்களையும், பொருளாதார வளர்ச்சியினையும் மேம்படுத்தியுள்ளது. படகர்களை தங்கள் நிலங்களில் கடுமையாக உழைக்கும் உழைப்பாளிகளாகக் காணப்படுகின்றனர்.

இவர்களது குடியிருப்புகள் குன்றுகளும் கானகங்களும் சூழ இருப்பதால் வனவிலங்குகளின் தாக்குதலுக்கு உள்ளாவதோடு பயிர்களும் அழிக்கப்படுகின்றன. இரவில் விலங்குகளிடமிருந்து பயிர்களைப் பாதுகாப்பதற்காக பரண் அமைத்து முறைகாவல் காக்கும் பழக்கத்தை கொண்டிருந்தனர் என்பதைக் குறிஞ்சித்தேன் நாவல் பின்வருமாறு காட்டுகிறது.

'இரவில் முள்ளம்பன்றிகள் கிழங்குகளைத் தோண்டிப்போடும், மான்கள் தளிர்களைத் தின்றுவிடும். இரவுக்கு இருவர், கால்நடையாக, ஊதுகுழலும், தீயும், நாயுமாய் துணைக்கொண்டு அந்தப் பரணில் இருந்து நட்ட பயிரைப் பாதுகாப்பார்கள்."

இவ்வாறு இயற்கை சார்ந்த இடையூறுகளால் பாதிக்கப்படும்போது அதனை அவர்கள் எதிர்கொள்ளும் விதத்தினையும் அது உணர்த்துகிறது.

மண் பற்றுக் கொண்டவர்களாகவும், தங்களது மண்ணைத் தாயாக மதிக்கக் கூடியவர்களாகவும் படகர்கள் இருப்பதை குறிஞ்சித்தேன் நாவல் பின்வருமாறு காட்டுகின்றது.

'அறியாத்தனம்! நேற்று பிறந்த நீ, என்னை அறியாத்தனம் என்று இகழ்கின்றாய். ஏய்! அந்த படிப்புச் சொல்லித்தந்த புத்தியடா இது? சோறும், துணியும் தந்த மண்ணடா, இந்த உடம்பின் இரத்தமெல்லாம்

இந்த மண்ணால் ஆனதடா, பெற்ற தாய்! உனக்கு தெரியுமடா பெற்ற தாயின் அருமை? படிப்பு படித்ததுமே பூமியைப் பணத்துக்கு கொடு என்று சொல்கிறாயே! காகித நோட்டும் அம்மையும் ஒன்றாகிவிட முடியுமடா? அம்மைக்கு விலையா?8

மலையில் மின்சார உற்பத்திச் செய்திடத் திட்டம் வசூலிக்கப்படும் பொழுது அதற்கான நிலம் தேவையாக இருந்ததனால் அதனைக் கேட்ட தன் மகனிடம் கொதித்தெழும் தந்தையின் உணர்வுகளின் வழி படகர் இன மக்களின் மண் குறித்த மன இயல்பினை மேற்கண்ட பகுதியின் வாயிலாக அறியமுடிகின்றது. மேலும், வளம்கொழிக்கும் மண்ணை இவர்கள் உளப்பூர்வமாக நேசிப்பதனைப் பின்வரும் பகுதி எடுத்துக்காட்டுகின்றது.

'குழம்பை ஊற்ற வந்தவளுக்கு, மண் என்ற பேச்சைக் கேட்டதும் திடுகிட்டாற்போல் கை அதிர்ந்தது. ஆம், அவள் சோகத்தில் உயிருக்கு உயிரான மண்ணைக் கூட மறந்தாளோ! காற்றும் நீரும் போல் அவள் வாழ்விலே கலந்திருந்த மண்ணை மூன் மாத காலமாக மறந்துவிட்டாயோ? சென்ற தடவை, ஒன்றுக்கு ஒன்பதல்லவோ அவளுக்கு அந்த மண் வாரி வழங்கி இருக்கிறது".

மண்ணினால் பயன்பெறும் படகர்களை அம்மண்ணை உயிருடனும் அன்னையுடனும் இணைத்துக் கூறும் மண்பற்று குறித்த இயல்புகளை அறியமுடிகிறது. மேலும், அறுவடைப் பண்டிகையைக் கொண்டாடிவிட்டு புதுக்கதிரைத் தெய்வத்துக்குப் படைத்தப் பின்புதான் அதனை உண்ண வேண்டும். என்ற பழக்கத்தை படகர்கள் கொண்டிருந்தனர். படைப்பதற்கு முன் உண்பதில் குற்றமில்லை. ஆனால், அப்படி உண்டவர் கிராமங்களில் நடைபெறும் புனிதக் காரியங்களுக்கும், விழாக் கொண்டாடும் உறவினர் வீடுகளுக்கும் சென்று கலந்து கொள்ளுவது கூடாது என்று கருதும் பழக்கத்தைக் கொண்டிருந்தனர்.

இவ்வாறு படகர் இன மக்கள் தாங்கள் செய்யும் தொழில் மீதும், மண் மீதும் கொண்டுள்ள பற்றினையும், பாசத்தினையும், மரியாதையினையும் இந்நாவல் வெளிப்படுத்துகிறது.

**தொகுப்புரை**

சாமையால் சமைத்த உணவில் நெய் ஊற்றி உண்ணும் பழக்கத்தைக் கொண்டுள்ளனர். கேழ்வரகினால் செய்யப்பட்ட களிக்கு மொச்சப்பயிர் போட்டுச் செய்த புளிக்குழம்பினை விரும்பி உண்ணுவதுடன் வீட்டிற்கு வரும் விருந்தினர்களுக்குப் பருகுவதற்கு மோர், தேநீர் கொடுக்கும் வழக்கம் இம்மக்களின் பண்பாட்டு நிலையைப் புலப்படுத்துகிறது.

குடியிருப்புகள் குன்றுகளும் கானகங்களும் சூழ இருப்பதால் வனவிலங்குகளின் தாக்குதலுக்கு உள்ளாவதோடு பயிர்களும் அழிக்கப்படுகின்றன. இரவில் விலங்குகளிடமிருந்து பயிர்களைப் பாதுகாப்பதற்காக பரண் அமைத்து முறைகாவல் காக்கும் பழக்கத்தை கொண்டிருந்தனர் என்பதை

உணர்த்துகிறது.பொருளியல் சார்ந்த பிற்கால வாழ்வியலில் அரசு அமைப்புகளுடன் போராட்ட வாழ்வியலை நேர்த்தியுடன் அமைத்துள்ளனர் என்பது அரசு ஆவணங்களே சான்றாகிறது.

**அடிக்குறிப்பு**

1. பாஸ்கல்கில்பர்ட், சமூகவியல் அடிப்படைக் கோட்பாடுகள் ப.96
2. இராஜம்கிருஷ்ணன், குறிஞ்சித்தேன், ப.111
3. ஆ.செல்லப் பெருமாள், சமூக மானிடவியல், ப.54
4. இராஜம்கிருஷ்ணன், குறிஞ்சித்தேன், ப.79
5. இராஜம்கிருஷ்ணன், குறிஞ்சித்தேன், ப.23
6. பே.மாதையன், சங்ககால இனக்குழு சமுதாயமும் அரசு உருவாக்கமும் ப.10
7. இராஜம்கிருஷ்ணன், குறிஞ்சித்தேன், ப.22
8. மேலது, ப.328
9. இராஜம்கிருஷ்ணன், குறிஞ்சித்தேன், ப.218

**பார்வை நூல்கள்**

1. இராஜம் கிருஷ்ணன் - குறிஞ்சித்தேன், தாகம் பதிப்பகம், தி.நகர், சென்னை-17, முதல் பதிப்பு - 1978

2. கைலாசபதி.க. -- தமிழ் நாவல் இலக்கியம், நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் , பிரைவேட் லிமிட், சென்னை, மூன்றாம் பதிப்பு - 1984

3. சந்தானம்.கா. - இந்தியாவும் பொதுநல சமுதாயமும், நவயுகப் பிரசுரலாயம், காரைக்குடி, இரண்டாம் பதிப்பு - 1947

ISSN:2582-9599

# பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

## வள்ளுவப் பெருந்தகையின் உளவியல் சிந்தனைகள்

28

**முனைவர் ந. பிரதீபா, உதவிப்பேராசிரியர்**
**தமிழ்த்துறை, பூசாகோஅர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி,**
**கோயம்புத்தூர்**

**ஆய்வு நோக்கம்** :

இலக்கியம் என்பது மனிதனின் மனம், சொல், எண்ணம், செயல் என மனதில் உண்டாகும் உள்ளுணர்வின் வெளிப்பாடே ஆகும். அவ்வாறு வெளிப்படும் உணர்வுகள் ஒழுங்கமைப்பில் சமூகத்தில் போற்றத்தக்கக் கூடியவையாகவும், மதிக்கத்தக்கக் கூடியவையாகவும் அமையவேண்டும். உள்ளத்து உணர்வுகளை வெளிப்படுத்தும் அதே நேரத்தில் மன உளவியலின் வழிகளை உணர்த்துகிறது. உணர்வும் உளவியலோடு தொடர்புடையதாகக் காணப்படுகின்றது. வள்ளுவப் பெருந்தகையும் உணர்வுகளின் முக்கியத்துவத்தைக் குறளில் வெளிப்படுத்தியுள்ளமை அறிய முடிகிறது. திருக்குறளில் உளநலக் கருத்துக்களை முன்னிருத்தி ஆய்வதே முக்கிய நோக்கமாகும்.

**ஆய்வுச்சுருக்கம்**

திருக்குறள் நாடு, மொழி, இனம், சமயம் ஆகியவற்றைக் கடந்து மானுட வாழ்க்கைக்கு மேன்மையுற வழிகாட்டக் கூடிய நூலாகும். திருவள்ளுவர் காலத்திலோ அவருக்கு முந்திய காலத்தில் நிகழ்ந்த அறமற்ற செயல்களைத் தம்மால் ஏற்க முடியாது அதை கண்டும் மனிதகுலம் எவ்வாறு வாழ வேண்டும் வாழ்வில் எவையெல்லாம் கடைபிடிக்க வேண்டும் தவிர்க்க வேண்டும் என்பதை இரு வரிகளில் வெளிப் படுத்தியுள்ளார். மனிதனின் அறிவுக்கு அவனது மனமும் அதனால் ஏற்படும் உணர்வுகளும் காரணம் என்பதை அறிந்த வள்ளுவப் பெருந்தகை ஒவ்வொரு குறளிலும் அறக்கருத்துக்களை அறிவியல் பூர்வமாக உணர்வதில் உளவியல் புதைந்து இருப்பதை அறியமுடிகிறது.

**முதன்மைச் சொற்கள்: இடுக்கண் அழியாமை , சினம் கொள்ளாமை, அன்புடைமை கனவுநிலை, ஊடல்**

**முன்னுரை**

திருக்குறள் நீதி நூல் மட்டுமன்று அது ஒரு வாழ்வியல் நூல். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட மனிதனுக்காக மட்டுமல்ல இருபத்தோராம் நூற்றாண்டின் புதிய தலைமுறையினர்க்கும் வழிகாட்டும் புரட்சி நூல். வள்ளுவத்தின் பொருண்மை காலந்தோறும் புதிய புதிய கருத்தாக்கங்களைத் தந்து இனம், மொழி, நாடு என்னும் எல்லைகளைக் கடந்து மனித வாழ்க்கையை வளப்படுத்துகிறது.வள்ளுவம் தான் தோன்றிய காலத்தோடு நின்று விடாமல் இந்த நூற்றாண்டு

மனிதனுக்கும் வாழச் சொல்லிக்கொடுக்கிறது. வாழ்க்கையைச் சொல்லிக்கொடுக்கிறது. வள்ளுவம் இலக்கியம் என்னும் நிலையில் நின்று விடாமல் மனித வாழ்வியல் கூறுகளைக் காட்டும் பதிவுகளாக உள்ளது .மானிடப் பண்பு இயல்புகளுக்கு ஓர் உறைவிடமாய் வாழ்க்கை, வழி நெறிகளுக்கான வழிகாட்டியாய் அமைந்துள்ளது திருக்குறள். நம் அன்றாட வாழ்வில் வெளிப்படுத்தக்கூடிய முக்கிய உணர்வுகளான இன்பம்,துன்பம், கோபம், அன்பு, கனவு,பொறாமை,ஊடல் அனைத்து வெளிப்பாட்டுத் தன்மைகளின் நெறிகாட்டியாகவும் அமைந்துள்ளது என்பதை உளவியல் நோக்கில் இக்கட்டுரை ஆராய முற்படுகிறது .

**இடுக்கண் அழியாமை**

மனித வாழ்வில் பலவித ஏற்றத்தாழ்வுகள் துன்பங்கள் சோகங்கள் துயரங்கள் நிறைந்ததாக காணப்படுகின்றன. எத்தகு சோதனைகள் வந்தாலும் அதனை எதிர் நிற்கும் வல்லமையுடைய தோல்வியைத் தழுவுவார் என்பதை இடுக்கண் அழியாமை அதிகாரத்தில் வள்ளுவர் பெருந்தகை பின்வருமாறு,

**இடுக்கண் வருங்கால் நகுக அதனை**
**அடுத்துஊர்வ தஃதொப்ப தில்** (குறள் - 621)

ஒருவனுக்கு விதிவசத்தால் துன்பங்கள் வருமனால் மனம் தளராது சிரித்து வாழவேண்டும். துன்பத்தை மேலும் அடக்க வல்ல ஒரு உபாயமும் அதுவே. இடையூறுகளையும் மகிழ்ச்சியோடு ஏற்று தாங்கி செயலை முடிக்கும் ஆற்றலைப் பெறுதல் வேண்டும். அஃது மனம் தளராது ஆற்றல் தரும் என்றும், ஒருவனுக்குத் துன்பம் தொடர்ந்து வந்து கொண்டிருக்கும் பொழுது மனவலிமை உடையவனிடம் துன்பம் படுதோல்வி அடையும் என்பதை,

**அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற**
**இடுக்கண் இடுக்கண் படும்** (குறள் - 625)

இக்குறட்பாக்களின் மூலம் துன்பத்தை கண்டு சிரிப்பது உள்ளத்திற்குச் சிறந்தது அதற்கு இணையான ஒன்று இல்லை என்கிறார். துன்பம் வந்தால் எதிர்த்துப் போராடுங்கள். போராட ஒரு முயற்சி, உற்சாகம், உத்வேகம் வேண்டும். அதற்கு ஒரு தன்னம்பிக்கை ஒரு மலர்ந்த முகம் வேண்டும். எனவே துன்பம் வந்தால் துவண்டுவிடாமல் சிரித்த முகத்தோடு போராடுங்கள். அதைவிடச் சிறந்த வழி இல்லை என்று எடுத்துரைக்கின்றார்.

**வெகுளாமை-சினம் கொள்ளாமை**

சினம் - கோபம் தீமையும் தீமை. கோபத்தால் விளையும் தீமை பலப்பல.கோபத்தால் ரத்த நாளங்கள் சூடேறி உடலைக் கெடுக்கிறது. ஏன் கோபம் வருகிறது? இதனால் கோபம் வருகிறது? கோபம் தோன்றும் களங்கள் எவை? விருப்பு வெறுப்புகள் தாக்கப்பட்டுள்ள மனித மனத்தில் தான் கோபம் எழும்

காலம் காட்டும் கடிகாரத்தை உற்று நோக்குங்கள் ! ஓடிக்கொண்டிருக்கிறது எந்த சூழ்நிலையிலும் தொடர்ந்து ஓடிக்கொண்டிருக்கிறது. கடிகாரங்களை சூழ்நிலை பாதிப்பதில்லை. அதுபோல நமது வாழ்க்கையும் ஒரு இயக்கம் என்பதை புரிந்து நாம் செயல்பட வேண்டும் வள்ளுவப் பெருந்தகையும் வெகுளாமை என்னும் அதிகாரத்தில் பத்துக் குறள்களில் சினத்தைப் பற்றிக் கூறுகிறார். வெகுளி மனிதனின் நகையை கொல்லும்; வகையைக் கெடுக்கும்; இனத்தை சுட்டெரிக்கும்; தோழமையைக் கெடுத்துப் பிரிக்கும் என்றெல்லாம் வெகுளியினால் வரும் கேட்டினை விவரிக்கின்றார் திருவள்ளுவர் வெகுளியை மறந்துவிட வேண்டும் என்று கூறுகின்றார்

**மறத்தல் வெகுளியை யார்மாட்டும்**

**தீய பிறத்தல் அதனான் வரும் (குறள்- 303)**

வெகுளியை மறந்துவிட வேண்டும். வெகுளியை யார்மாட்டும் மறந்து விடுக; யார்மாட்டும் வெகுளி வேண்டாம். அதனால் தீமையே வரும் என்றும்,

**தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்**

**தன்னையே கொல்லும் சினம் (குறள் - 305)**

தன்னைக் காத்துக் கொள்ளும் விருப்பம் உண்டா ? தன்னையே கொல்லும் சினத்தில் இருந்து காத்துக்கொள்ள அப்படி சினத்தில் இருந்து தன்னைத் தானே காத்துக் கொள்ளத் தவறினால் அந்த சினமே கொன்று விடும் என்றும் கூறுகிறார்.இதனையே நாலடியார்,

**காவா தொருவன்தன் வாய் திறந்து சொல்லுஞ் சொல்**

**ஓவாதே தன்னைச் சுடுதலால் - ஓவாதே**

**ஆய்ந்தமைந்த கேள்வி அறிவுடையார் எஞ்ஞான்றும்**

**காய்ந்தமைந்த சொல்லார் கருத்து. (நாலடியார் - 63)**

ஒருவன் நா காவாமல் வாய் திறந்து சொல்லும் சினச்சொல், இடைவிடாது தன்னையே வருத்தும் ஆதலால், ஓயாது ஆராய்ந்து அறிந்து அறிவையும், கேள்விஞானத்தையும் உடைய சான்றோர் எப்போதும் சினம் கொண்டு கடுமையான சொற்களைச் சொல்ல மாட்டார்கள் .

**அன்புடைமை**

உலகத்தில் சிறந்தது அன்பு. அன்பில் சிறந்த தவமில்லை. ஏன் ? அன்பே கடவுள்! அன்பே சிவம் ! இத்தகைய உயர்ந்த அன்புநெறி உலக உயிர்களைத் தழைத்து வளரச் செய்யும் அரிய உணவாகவும் மருந்தாகவும் விளங்குகிறது.ஒருவரின் மனதில் அன்பும் பாசமும் இருந்தால் அவரால் எந்த உயிர்களுக்கும் தீமை நேராது தனக்கென்று யோசிக்காமல் பிறருக்காக வாழும் குணம் படைத்தவர்களாக இருப்பார்கள் இது போன்ற அன்பானவர்களின் சிறப்புகளை வள்ளுவப் பெருந்தகை தமது குறள் மூலம் எடுத்துரைக்கிறார்.

**அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்**

**ஆர்வலர் புன்கணீர் பூசல் தரும் (குறள் - 71)**

உள்ளத்தில் இருக்கும் அன்பைத் தாழ்ப்பாள் போட்டு அடைத்து வைக்க முடியாது அன்புக்குரியவர் துன்பப்படுவதை கண்டால் கண்ணீர்த்துளி வாயிலாக அது வெளிப்பட்டுவிடும் என்றும்,

**அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு**

**என்போடு இயைந்த தொடர்பு (குறள் - 73)**

உயிரும் உடலும் போல் அன்பும் செயலும் இணைந்திருப்பதே உயர்ந்த பொருத்தமாகும் என்று கூறுவார். அன்பின் திருவுருவமாக விளங்கிய கண்ணப்பரை,சேக்கிழார் '**கும்பிட்ட பயன்**' என்றும் குறிப்பிடுகின்றார்.(குன்றக்குடி அடிகளார் நூல் வரிசை தொகுதி -2 ,தவத்திரு பொன்னம்பல அடிகளார் ப.159)அன்பு எளிய சொல்! ஆனால் அரிய வாழ்க்கை. அன்புடையவராக இருத்தல் எளிதன்று. விண்ணுலகம் கூட அன்பை நோக்கி ஏங்கி தவம் செய்கிறது.

**அறிவை விரிவு செய் !அகண்டமாக்கு!**
**விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை!**
**அணைத்துக்கொள் ! உன்னைச் சங்கம மாக்கு?**
**மானிட சமுத்திரம் நானென்று கூவு !**
**பிரிவில்லை, எங்கும் பேதமில்லை!**
**உலகம் உண்ண உண் ! உடுத்த உடுப்பாய் !**
**புகல்வேன் உடைமை மக்களுக்குப் பொது**
**புவியை நடத்து பொதுவில் நடத்து**

**( உலகம் உன்னுடையது கவிதை, பக்-140)**

என்று பாவேந்தர் பாரதிதாசன் சொன்ன புதுமையும் பொதுமையும் நிறைந்த நெறியினை நடைமுறைப்படுத்தவும் அன்புநெறி தழைக்கும்.

**கனவுநிலை**

கனவுகள் உடல் உணர்ச்சிகளின் மொத்த வெளிப்பாடுகளாக மட்டுமன்றி மறை மனத்தில் அமுக்கப்பட்ட பல ஏக்கங்களையும் வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளன. கனவுகள் நமது உறக்கத்தைப் பாதுகாப்பது, மறைமுக எண்ணங்களுக்கு வெளிப்படையான அறிகுறிகளைத் தருவது மற்றும் கனவு காண்பவரின் நிறைவேறா ஆசைகளை பூர்த்தி செய்வது ஆகிய மூன்று குறிக்கோள்களை அடிப்படையாகக் கொண்டு எழுகின்றன. **"கனவுகள் கடந்த கால நினைவுகள் மொழி சார்ந்த அடையாளங்கள் குழந்தைப் பருவ அனுபவங்கள் மற்றும் பாரம்பரிய எண்ணங்கள் என்ற நான்கு முக்கியமான மன வெளிப்பாடுகளை உள்ளடக்கியதாகும்." (தமிழிலக்கியத்தில் உளவியல் -முனைவர் கீதாவாசன் ப.17) படித்தவர்களாயினும் படிக்காதவர்களாயினும் இளைஞராயினும் முதியோராயினும் மனிதர்கள்**

**அனைவரும் ஈடுபடுகின்ற ஒரே படைப்பாக்கத் தொழில் 'கனவு' என்பதனை அடித்தளமாகக் கொண்டு சஷ் தனது ஆய்வை அமைத்தார்.(இலக்கியமும் உளவியலும் முனைவர் சி.இ. மறைமலை ப.49)** வள்ளுவப் பெருந்தகையும் கனவு பற்றிக் குறிப்பிடும் போது ,

**நனவினால் நல்கா தவரைக் கனவினால்**

**காண்டலின் உண்டென் உயிர் (குறள் -1213)**

நனவில் வந்து இன்பம் தராத வரை நான் கனவில் கண்ட காட்சியால் உயிர் நீங்காமல் நிற்கின்றது என்கிறாள் தலைவி.

**நனவினால் கண்டதூஉம் ஆங்கே கனவும் தான்**

**கண்ட பொழுதே இனிது (குறள் -1215)**

முன்பு நினைவில் காதலரே கண்டு மிகுந்த இன்பமும் அப்போது மட்டுமே இனிதாய் இருந்தது என்று கனவில் அவரை கண்டு மிகுந்த இன்பமும் கண்ட பொழுது மட்டுமே எளிதாக இருக்கிறது அதனால் இரண்டும் எனக்கு ஒத்தவையே என்று தலைவி கூறுகிறாள்.

உளவியல் பேரறிஞர்கள் நம் மறைமுக ஆசைக்களுக்கு கனவுகள் இன்றியமையாத் தன்மை என்று கூறினாலும் வள்ளுவப் பெருந்தகையும் கனவுகள் மறைமுகமான ஆசைகளை வெளிப்படுத்தும் அற்புதமான களம் என்ற உண்மையைக் கண்டறிந்து உலகிற்கு எடுத்துக் கூறியுள்ளார்.

**ஊடல்**

பிரிந்து சென்ற தலைவன் மீண்டும் தலைவியை வந்து அடையும் பொழுது தலைவி தலைவன் மீது ஊடல் கொள்வாள். அதாவது பொய் கோபம் கொள்வாள் பிறகு கோபத்தை மறந்து அவனோடு கூடி மகிழ்ந்து வாழ்வாள். இவையே சங்க இலக்கியங்களில் உள்ள பாடல்களில் இடம்பெறும் செய்தியாகும். திருக்குறளிலும் பல இடங்களில் இடம் பெற்றுள்ளன.நெஞ்சோடுபுலத்தல், புலவி, புலவி நுணுக்கம், ஊடல் உவகை என்னும் அதிகாரங்களிலும் இதனைப் பற்றிய பாடல்கள் உள்ளன.

**"உடல் என்பது பிணக்கிக்கொள்ளும் ஒரு வகை நடத்தைப் பாங்கு. இது உளவியல் அடிப்படையில் தோன்றுகிறது. மேலை நாட்டு அறிவியல் இதனை பல்வேறு கோணங்களில் பகுத்தாய்கிறது. நடத்தையியல் மேலைநாடுகளில் 19ஆம் நூற்றாண்டில் உருவானது. தமிழில் இந்த அறிவியல் கலை கிறிஸ்துவுக்கு முன்பே தோன்றி வளர்ந்துள்ளது. தொல்காப்பியர் இதனை மெய்ப்பாட்டியல் என்னும் தலைப்பின் கீழ் விளக்கியுள்ளார்".** (ஊடல் - தமிழ் விக்கிப்பீடியா மூலம் ) வள்ளுவப்பெருந்தகை

**ஊடலில் தோன்றும் சிறுதுனி நல்லளி**
**வாடினும் பாடு பெறும் (குறள்-1322)**

ஊடல் காரணமாக தோன்றும் சிறிய பிணக்கினால், காதலர் காட்டும் நல்ல அன்பு சற்று வாடுமாயினும், பின்பு பெருமை பெறும் என்றும்,

**ஊடலில் தோற்றவர் வென்றார் அதுமன்னும்**

**கூடலில் காணப் படும் (குறள் -1327)**

ஊடலில் தோற்றவரே வென்றவர் ஆவார். அவ்வெற்றி, ஊடல் தீர்ந்தபின் கூட மகிழ்தலில் அவரால் மிகுதியாக அறியப்படும் என்று இல்லற வாழ்வின் மிக நுட்பமான தன்மையை எடுத்துரைக்கின்றார்.

**முடிவுரை**

தனிமனிதன், குடும்பம், சமுதாயம், உலகம் என்ற முறைவைப்பை முறைப்படி வளர்த்து ஒன்றுக்கும் பிறிதொன்றுக்கும் இடையில் தொய்வில்லாமல் ஒன்று பிறிதொன்றின் நலனுக்கு இடையூறு இல்லாமல் வளர்த்து வழி நடத்தும் பெருமை திருக்குறளுக்கே உரியது. திருக்குறள் தனிமனிதனை நம்புகிறது முற்றிலும் முழுவதும் நம்புகிறது அவனை மனித சமுதாயத்தை வரலாற்று இடையீடின்றி எழுதும் பாத்திரம் என்றும் நம்புகிறது. அவனை அகத்தாலும் புறத்தாலும் வளர்த்து உறுதிப்படுத்த, நிலைநிறுத்த வள்ளுவப் பெருந்தகை முயற்சிக்கின்றார்.சிற்பிக்குச் சிலை வடிப்பதே நோக்கம். உழவனுக்குக் காடுகளைக் கழனியாக்குவதே நோக்கம். திருவள்ளுவருக்கு மனிதனை மனித சமுதாயத்தை வளர்ப்பதே நோக்கம். தனிமனிதனைத் தன்நிலைஒழுக்கத்தில் ஈடுபடுத்தி, வளர்த்து, துணையுடன் கூட்டி, அவ்வழி உலகுடன் இணைத்தும் இறையின்பத்துடன் இணைத்தும் புகழ் உண்டாக்குகிறார்.

**துணைநூற்பட்டியல்**


- **ஊடல் - தமிழ் விக்கிபீடியா மூலம்**
- **கீதாவாசன் முனைவர் - தமிழிலக்கியத்தில் உளவியல் - மெய்யப்பன் பதிப்பகம் 53, புதுத் தெரு, சிதம்பரம் -1**
- **தவத்திரு பொன்னம்பல அடிகளார் - குன்றக்குடி அடிகளார் நூல் வரிசை - தொகுதி -2, திருக்குறள்- மணிவாசகர் பதிப்பகம், 5/7 சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை - 600108**
- **பரிமேலழகர் உரை - திருக்குறள்- மணிவாசகர் பதிப்பகம், 5/7 சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை - 600108**
- **பாரதிதாசன் கவிதைகள் - திருக்குறள்- மணிவாசகர் பதிப்பகம், 5/7 சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை - 600108**
- **மறைமலை முனைவர் சி.இ - இலக்கியமும் உளவியலும் மணிவாசகர் பதிப்பகம், 55 லிங்கித்தெரு, சென்னை -1**

ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# நெடுநல்வாடையில் உளவியல் சிந்தனைகள்

29

முனைவர் ரா.பிரபா, உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை, குயின்ஸ் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி,
புனல்குளம், புதுக்கோட்டை.

**ஆய்வுச்சுருக்கம்**

மனிதர்கள் அனைவரும் தங்களின் நடத்தைகளைப் பற்றியும், பிறரது நடத்தையைப் பற்றியும் அறிய எப்போதும் ஆர்வம் கொண்டவர்களாக இருக்கிறோம். மனித நடத்தையின் ஏதேனும் ஒரு படிநிலையை ஏதேனும் ஒரு வழியில் எண்ணிறைந்த சமூக அறிவியல்கள் ஆராய்கிறது. உளவியல் (Psychology) என்ற வார்த்தையானது இரண்டு குறிப்பிட்ட கிரேக்க வார்த்தையில் இருந்து வந்தது.உளவியல் என்பதை மனவியல் என்றும் அழைப்பர். மனம் சார்ந்த செயல்பாடுகளின் கூறுகள் நம் உணர்வோடும், உயிரோடும் கலந்து இருக்கக்கூடிய மொழியான தமிழ் மொழியில் 2500 வருடங்களுக்கு முற்பட்ட காலத்தே அகம், புறம் என்ற இரு துருவங்களின் ஊடாக புலவர்கள் வெளிப்படுத்தியுள்ளனர். அனைத்து துறைச் சார்ந்த அறிவையும், கூறுகளையும், தன்னகத்தே கொண்ட இலக்கண, இலக்கியங்களைக் கொண்டு தகாது செம்மார்ந்த பண்பினையோடு பிறக்க, பிறக்க இளமையோடு மிளர்ந்து நிற்கின்றது. அக்காலத்தில் மனிதனின் இயல்பினையும், பண்பினையும் சூழல்களையும் எடுத்தியம்பிய புலவர்கள் காலப்போக்கில் பல அறிஞர்களால் அக்கூறுகளுக்கு பல்வேறு வடிவங்களுக்கு கொடுத்து படிம வளர்ச்சியின் காரணமாக பொருளோடு பொதிந்த பெயர்ச்சொற்களையும் உருவாக்கியுள்ளனர். இவ்வுருவாக்கத்தின் அடிப்படையில் சங்கம் வைத்து மொழிவளர்த்த இலக்கியங்களை ஆராயும்போது கட்டுக்கடங்காத கூறுகள் காலத்தால் முன்தோன்றிய இலக்கியங்களில் காணக்கிடக்கின்றது. இரு அம்சங்களையும், ஆழ்மனச் சிந்தனைகளையும் (அகம், புறம்) உள்ளடக்கிய உளவியல் கூறுகள் காணப்படுவதை வெளிக்கொணர முடியும்.

**கடவுச் சொற்கள்:** உளவியல், இலக்கியம், நெடுநல்வாடை, ஆழ்மனம், அகக்காரணி, புறக்காரணி.

**முன்னுரை**

காலத்தால் முன்தோன்றி, கருத்துக்களால் செழித்தோங்கி, பண்புகளால் வியப்பெய்தி பல்லாற்றானும் இளமைப்பெற்று எழிலோவியமாக விளங்கக்கூடியது தமிழ்மொழி. இம்மொழியில் அமைந்துள்ள சங்கால செய்யுட்களை உளவியல் போக்கில் அணுகி பல்வேறு நூல்கள் வெளிவந்திருக்கின்றது.உளவியலின் தந்தை சி்ஃமண் ஃபிராய்டு போன்ற முன்னோடிகளால் உளவியல் கோட்பாடுகளும், கொள்கைகளும் முன்வைக்கப்பட்டுள்ளது.ஆனாலும் இன்னும் இந்நோக்கில் முழுமையான வரையறைக் கொண்ட ஆய்வுகள் வெளிவரவில்லை என்பதை நாம் அறியும் ஒன்றாகும். உளவியல் (Psychology) என்ற சொல்லாட்சி பத்தொன்பதாம் நூற்றாண்டிற்கு பின்னர் பேராற்றல் கொண்டு விளங்கினாலும், உளவியல் குறித்த அறிவும், ஆக்கமும் சிந்தனையும் சங்க நூல்களில் நிலைபெற்று

இருந்துள்ளதை நாம் அச்செய்யுட்களைபயில்வதன் மூலம் உணர முடிகிறது. இவ்வுணர்வினை அடிப்படையாக கொண்ட உளவியல் சிந்தனைகளை நெடுநல்வாடையில் ஆராய்வதேஇக்கட்டுரையின் நோக்கமாகும்.

**உளவியல் எனும் அறிவியல்**

உளவியல் என்னும் சொல்லாடல் குறித்து பல்வேறு அறிஞர்களும் பலவிதமான வரையறைகளை காலத்திற்குகேற்றாற்போல் கூறுகின்றனர்.ஆரம்ப காலத்தில் உளவியலானது ஆன்மா இயல்புகளையும், செயல்களையும் ஆராயந்தறியும் ஒன்றாகவே இருந்தது.இவ்வாறுதோன்றிய உளவியல் தத்துவ இயலின் ஒரு பிரிவாகவே வளர்ந்து வந்தது.அரிஸ்டட்டில் என்ற கிரேக்க தத்துவ பேரறிஞர் எழுதிய ஆன்மாவின் இயல்புகள் (Dr.Asimal) என்னும் நூலே உளவியலின் முதல் நூலாக கருதப்படுகிறது.உளவியலின் ஆய்வுப்பொருளாகக் கருதப்பட்டு வந்த ஆன்மா பற்றியக் கருத்துக்களில் முரண்பாடுகள் எழுந்தது.இதனால் உளவியறிஞர்கள் உளவியலை மனிதனது மனம் அல்லது உள்ளம் என்பதன் செயல்களை விளக்கும் அறிவுப் பிரிவு எனக் கருதத் தொடங்கினர்.காலங்களுக்கு ஏற்றாற்போல் இவ்விளக்கமும் மாறத் தொடங்கியது.இவ்விளக்கத்தின் இறுதியில் உளவியலை நனவுநிலைச் செயல்களை விளக்கும் அறிவியல் என்று உளவியலாளர்கள் கருதத் தொடங்கினார்.

உளவியல் என்பது மனிதனின் மனச்செயல்பாடுகள் மற்றும் நடத்தைகள் பற்றிய அறிவயிலே ஆகும்.மனித மனம் செயல்படுவதைக் குறித்தும், மனத்தின் வெளிப்பாடகளான நடத்தை, குணம் குறித்தும் ஆராயும் (அறிவியல்) துறை உளவியல் ஆகும். (Psychology) (க்ரியாவின் தற்கால அகராதி ப.542) The Science of the mind - மனதத்துவ சாஸ்திரம் எனவும் பொருள் கூறப்படுகிறது. (கோனார் தமிழ் அகராதி ப.250) இந்த வகையில் உளவியலின் தந்தையாகக் கருதப்படும் 'சிஃமண்ட் பிராய்டு' (Sigmund Fraud) மனிதனின்இயல்பு, பாகுபாடு, செயற்பாடு என்னும் நிலைகளில் உளவியலை ஆராய்ந்து உளவியலுக்கு அறிவியல் அந்தஸ்து அளித்துள்ளார். இவரே இலக்கியப் படைப்புக்களை ஆராயப் பயன்பாடும் உளப்பகுப்பாய்வு (Psychoanalysis) பற்றியும் முதன்முதலில் எடுத்துக்காட்டுகளுடன் விளக்கியுள்ளார் மனிதனைப் பொறுத்தவரை சூழலின் நிகழ்வுகளில் ஒருவனுக்கு ஏற்படும், அளவுகளும், அவனது உள்ளார்ந்த செயல்களும், உணர்வும் உளவியல் ஆகும். இவ்வரையறைகளைப் பெற்ற உளவியலின் தாக்கம் இலக்கியங்களில் உள்ளமையைக் காணலாம்.

**நெடுநல் வாடை**

நெடுநல் வாடை என்னும் பெயருக்கு ஏற்ப பாட்டு முழுவதும் வாடைக்காற்றின் ஆட்சியைக் காண்கிறோம்.இதனை, இயற்றியவர் திருமுருகாற்றுப்படை இயற்றிய நக்கீரர ஆவர்.இது 188 அடிகளைக் கொண்டு அகமும், புறமுமாக இயற்றியுள்ளார்.நெடுநல்வாடை என்பது'நெடிய நன்பயக்கும் காற்று' என்று கொண்டால், தலைவிக்கு நெடியதாகவும் தலைவனுக்கு நல்லதாகவும் இவ்வாடை அமைந்ததாகக் கூறுவர். இப்பாட்டின் பெயரில் உள்ள இரண்டு அடைமொழிகளும் (நெடு, நல்) இருவேறு உள்ளங்களையும் அந்த

உள்ளங்களின் உணர்ச்சிகளையும் புலப்படுத்துவதாக உள்ளன. நெடுநல்வாடை அகமா, புறமா என்றொரு சூழ்நிலையில் 'வேம்புதலை யாத்த நோன்கால் எஃகாம்' என்ற குறிப்பால் வேம்பு என்பது பாண்டிய மன்னனுக்குரிய'பூ'ஆதலால் பாண்டியனைக் குறிப்பிட்டு இது புறம் சார்ந்த நூல் எனவும் கூறுவதற்கு சில உறையாசிரியர்கள் கருதுகின்றனர்.

**தொல்காப்பிய மெய்ப்பாடுகளின் வழி வெளிப்படும் உளவியல்**

மெய்யுணர்வு, மனவுணர்வு ஆகிய இரண்டு மொழிகளை தாண்டி அனைத்து உயிர்களுக்கும் மனிதர்களுக்கும் பொதுவானது.மொழியைக் கடந்து மனிதனை ஒன்றிணைக்கும் ஆற்றல் உணர்வுநிலைக்கு மட்டுமே உண்டு.இதனை தமிழண்ணல் சங்க இலக்கியத்திற்குப் பிரிதொரு 'பெயர் சூட்டு' என்று கேட்டால், தயங்காமல், உளவியல் இலக்கியம் எனக் குறிப்பிடலாம் என்கிறார். (தமிழண்ணல் சங்க இலக்கிய ஒப்பீடு ப.138) தொல்காப்பியர் மரபியலில் 'மனம்' என்ற ஒன்று மனிதருக்குள் தோன்றும் அடிப்படையினை உணர்வுகளின் இருப்பிடம் என்கிறார்.

**'ஆறறி வதுவே அவற்றொடு மனனே**

**நேரிதி னுணர்ந்தோர் நெறிப்படுத் தினரே'** (தொல். பொருள். 582)

இம்மனதில் எழும் உளவியல் சிந்தனைகளானது என்வகை மெய்பாட்டின் வழியே வெளிப்படும் என்பது சூத்திரங்களின் வாயிலாக உணரமுடியும்.

**'நகையே அழுகை இளிவரல் மருட்கை**

**அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று**

**அப்பால் எட்டே மெய்பாடு என்ப'** (தொல் காப்பியம் பொருள். 03)

இவ்வெண்வகை மெய்பாடுகளும் உணர்வுக்கும், தொழிற்பாட்டிற்கும் இடையே நடக்கும் காரண காரிய தொடர்பினை விளக்குகிறது.

ஐந்திணை ஒழுக்கங்களையும் மனதின் அடிப்படையில்தான் கோட்பாடுகளைக் கொண்டு முன்னுறுத்தி அவற்றின் உளவியல் மனப்பாங்கான உரிப்பொருளாக அமைத்துள்ளது இலக்கணங்களும், இலக்கியங்களும் என்பதுதான் உளக் கோட்பாட்டின் அடிப்படையில் அமைந்த இவ்விலக்கியங்களில் மனச்சிந்தனைகள் தோழி, செவிலி, தலைவி, நற்றாய், தலைவன் போன்றோரின் பொதுவுடைமையான நடத்தைகளை இலக்கியங்கள் கையாண்டுள்ளது. திணையொழுக்கங்களை உள்ளிருந்துதான் மேற்கண்டவர்களின் மனப்பாங்கின் வெளிப்பாடு அமைகிறது. புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என்றும் ஐந்திணைக்குரியமனச் சிந்தனைகளும் உளவியலே ஆகும்.

**பிரி நிலை**

பிரிதல் நிலையினால் அச்சவுணர்வு ஏற்படுகிறது, அல்லது வாடைக்காற்றின் கொடுமையினால் தன்னிடம் விட்டு நீங்கிய தனிமையிலும் அச்சப்படுகின்றன. இச்சூழலை வாடையின் தனிமையால் வருந்தும் மக்களைப் பற்றி பாடுகிறார்.

**'புலப்பெயர் புலம்பொடு கலங்கக் கோடல்**

**நீடுஇதழ் கண்ணி நீரலைக் கலவை**

**மெய்க்கொள் பெரும்பணி நலியப் பலருடன்**

**கைக்கொள் கொள்ளியர் கவுள்புடைபூஉ நடுங்க'** (நெடு. 5-8)

மழையின் காரணமாக மிகுதியான வெள்ளம் பெருகியது, விளைந்த கம்பினையுடைய முல்லை நில மக்கள் கோவலன் தம் ஆநிறைகைளை மேய்ச்சலுக்கு மேட்டு நிலங்களுக்கு கொண்டு சென்றனர். தன்னிடம் விட்டு நீங்கிய பிரிவில் கலங்கி நிற்கின்றனர்.இதேபோல் போர்களம் சென்ற தலைவன் நினைத்து தலைவியின் மனக்குமுறல்களின் வெளிப்பாட்டின் அவள் தோற்றத்தின் வாயிலாக வெளிப்படுகின்றார் ஆசிரியர்.தலைவனுடைய கூடிய நிலையில் முத்தாரத்தினை தாங்கிய மார்பில் இப்போது நீண்ட மங்கல நாண் மட்டுமே தொங்கியது. தன் துணையை பிரிந்த துயரில் உலர்ந்த கூந்தலையும், காதணி அணிந்த காதுகளும், சங்கு வளையல்கள் அணிந்த கைகளும், நூலாடை அணிந்த அழகிய இடையினையும் வடிவம் வரைந்து வண்ணம் தீட்டாத ஓவியமாக காணப்படுகிறாள் என்று தலைவியின் உளவியல் சார்ந்த சிந்தனையை வெளிப்படுத்தியுள்ளனர். இதனை,

**'வாயுறை அழுத்திய வறிதுவீழ் காதின்**

**பொலந்தொடி தின்ற மயிர்வார் முன்கை**

**வலம்புரி வலையொடு கடிகை நூல்யாத்து**

**வளைப் படுவாய் கடுப்ப வணக்குறுத்து'** (நெடு. 140-143)

இச்செய்யுள் சார்ந்து உரைக்கின்றது.இப்பிரிதல் நிலையினை ஏற்படும்போது பாலைநிலத்தின் அகவொழுக்கமாக கொள்ளப்படுகிறது.

**புணரும் நிலை**

புணர்தலும் புணர்தல் நிமித்தமும் குறிஞ்சி நிலத்திற்குரிய உரிப்பொருளாகக் கொண்டுள்ளனர்.போர்களம் சென்ற தலைவனைப் பிரிந்த தலைவி அவனை புணர்ந்துகொள்ளும்

நிலையறிந்து வாடுகிறாள்.தோழியர் அடிகளை வருடிக் கொடுத்தும், செவிலித் தாய் உகந்தைகளைச் சொல்லியும் ஆற்றுப்படாத தலைவி மனம் கலங்கி கூறுவதாக உளவியல் பயின்று வந்துள்ளது. இச்செய்யுளில்

**'விண் ஊர்பு திரிதரும் வீங்குசெலல் மண்டிலித்து**

**முரண்மிகு சிறப்பின் செல்வனொடு நிலைஇய**

**உரோகினி நினைவளள் நோக்கி நெடிது உயிரா**

**மாஇதழ் ஏந்திய மலிந்துவீழ் அரிப்பனி'** (நெடு. 161-164)

சாதிலிங்கம் பூசப்பெற்ற கட்டிலில் புதிதாகச் செய்யப்பெற்ற மெழுகுத் துணி ஓவியம் வரையப்பட்டிருந்ததையும், அவ்வோவியத்தில் மேடை ராசிமுதல் விண்ணில் செல்லும் ராசிகளையும், விண்மீன்களையும் வரைந்திருந்தனர். அதில் திங்களுடன் உரோகின்றையச் சேர்த்து வரைந்து இருந்தனர். இதைக்கண்ட தலைவி தானும் தலைவனோடு சேர்ந்திருக்க முடியவில்லையே என்று மனவெழுக்கிக் கொண்டு பெருமூச்சு விடுகிறாள்.

வாடைக்காற்றின் துயரினால் வாடும் தலைவியை பாலைநிலத்தின் தெய்வமான கொற்றவையை செவிலியருள் ஒருத்தி, தலைவன் தனிமைத்துன்பம் நீங்கி தலைவனோடு புணர்ந்து கொள்ள வேண்டும் என்று கூறுவதாக அமைந்துள்ளது. இதுவே உளவியலில் தக்க சான்றாக உள்ளது.இதனை,

**'இன்னா அரும்படர் தீர விறல்தந்து**

**இன்னே முடிகதில் அம்ம'** (நெடு. 167-168)

என்ற பாடல் அடிகளின் மூலம் அறியலாம்.

**இருத்தல் நிலை**

அகத்தில் சிறைப்பட்டுள்ள உளவியலைப் போன்று புறத்திலும் உளவியல் சிந்தனைகளை செறிவூட்டியுள்ளனர் புலவர்கள். இருத்தல் என்பது முல்லை நிலத்தின் பண்பாடும், போர் பாசறையில் களிற்றைக் கொன்று பெருஞ்செயலைச் செய்த வீரர்கள், பகைவர்களால் விழுப்புண் பட்டிருப்பதை அறிந்த அரசன் பாசறையில் வெளிவந்து விழுப்புண்களைக கண்டு மறத்தன்மையுடைய வீரனைப் பார்த்து முகம் மகிழ்ந்து ஆறுதல் கூறுகிறான். அவன் நடுசாமத்தும் உறங்காத மனநிலைக் கொண்டவனாக திகழ்கிறான்.அவனுடைய மனநிலைக் குறித்து பின்வரும் அடிகள் உணர்த்துகிறது.

**'தவ்வென்று அசைஇ தாதுளி மறைப்ப**

**நள்ளென் யாமத்தும் பள்ளி கொள்ளான்**

**சிலரொடு திரிதரும் வேந்தன்**

**பலரொடு முரணிய பாசறைத்தொழிலே'** (நெடு. 185-187)

மற்றொரு பாடலில் மற்றவரின் நிலை அறிந்து தான் அந்நிலையின் தன்மையை உணர்ந்தவளாக தோழி, செவிலி வாயிலாக உளவியல் வெளிப்படுகிறது. தலைவனைப் பிரிந்த தலைவி ஒப்பனை செய்யப்பெறாத தலைவன் நல்லடியை, மாந்தரின் மாந்தளிர் போன்ற அழகுடைய நிறத்தினையும் உடைய தோழியர் உறக்கம் வருவதற்கு தலைவிக்கு அடிவருடிக் கொடுத்தனர். அதனோடல்லாது நரைவிரவிய மென்மையான கூந்தலையுடைய, சிவந்த முகத்தையுடைய செவிலித் தாயார், தலைவியின் ஆற்றாமை மிகுதியை உணர்ந்து ஒன்றாகச் சேர்த்தும், சில பல சொற்களை பல முறை சொல்லி, இன்று வந்து விடுவார் நின் தலைவர் வருந்தாதே அவன் மனம் கொள்ளுமாறு கூறுகிறாள், அவனது உளப்பாங்கினை அறிந்து உரைப்பவளாக உளவியற் பாற்பட்டு அமைகிறது.

**'குறியவும் நெடியவும் உரைபல பயிற்றி**

**இன்னே வருகுவர் இன்துணை யோர்என**

**உகந்தவை மொழியவும்'** (நெடு. 154-156)

**இரங்குதல் நிலை**

அகப்பொருள் கூற்றின்படி நெய்தல் திணையின் இரங்கலும், இரங்கல் நிமித்தமும் உரிப்பொருளாகக் கொள்ளப்படுகிறது. உயர்திணையில் உணர்வுகளின் செயல்பாட்டினை நடத்தையாகக் கொண்டுள்ள இலக்கியங்கள், அஃறிணையிலும் மனக்கோட்பாட்டின் சிந்தனையோடு நக்கீரர் தம் பாடலில் வெளிப்டுத்துகிறார், புறாக்கள் வாடைக்காற்றின் மிகுதியால் தன் இணையோடு இணையாமலும், மன்றில் சென்று இறையைத் தேடி உண்ணாமலும், இரவு பகல் தெரியாமலும் மயங்கிச் செயலற்றும் கொடுங்கையைத் தாங்கும் பலகையில், 'இளவுகாத்த கிளி போல்', தன் கால் மாற்றி, மாற்றி இரங்கி நின்றன.

**'இரவும் பகலும் மயங்கக் கையற்று**

**மதலைப் பள்ளி மாறுவன இருப்ப'** (நெடு. 47-46)

தலைவனைக் காண தலைவியின் துயரினைக் கூற வரும்போது தலைவனுக்காக தலைவியோடு, தாங்கி அழகமைக்கப்பட்ட கட்டிலும் காத்து இரங்கி நிற்கின்றது என்றும் குற்றம் நீங்கிய நிறம் ஊட்டப்பெற்ற பல நிற மயிர்களை உள்ளடக்கிய போர்வையின் மேல் அரிமான் வேட்டையாடுவது போன்றும், கட்டடத்தில் முல்லை போன்ற பல வகை மலர்கள் மலர்ந்துள்ளது போலும் ஓவியம் வரைந்த மென்மையான

படுக்கையாக இருக்கிறது என்று ஓவியத்திற்கு உயிர் கொடுத்தது தலைவன், தலைவியின் துயரினை உளவியல் சிந்தனைகளின் வழி எடுத்துக்காட்டுகிறார்.

**'ஊட்டுறு பல்மயிர் வரைஇய வயமான்**

**வேட்டம் பொறித்து வியன்கண் கானத்து**

**முல்லைப் பல்போது உறழப் பூநிரைத்து**

**மெல்லிதின் விரிந்த சேக்கை மேம்பட'** (நெடு. 128-131)

அஃறிணையின் உளவியல் வடிவம் கொடுக்கும்போது அதற்கு உயிரும் கொடுத்து வடிவமைத்துள்ளார்.

**ஊடலின் உளவியல்**

ஊடல் என்பது மருத நிலத்தின் பாற்படும் ஒழுக்கமாகும்.இவ்வூடல் ஒழுக்கம் என்பது தலைவிக்கு தலைவன் மேல் எழுதும் பொய்யுறைக்கோபம் எனலாம்.இக்கோபம் தலைவிக்கு தலைவன் மேல் மட்டும் தோன்றக் கூடியதாக இலக்கியங்களில் காணலாம்.போருக்கு சென்ற தலைவன் வரவில்லை ஆனால் இயற்கைச் சூழ்ந்த புறக்காரணிகள் அனைத்தும் அவன் மீதுள்ள ஊடலை தலைவிக்கு அதிகப்படுத்துகிறது.இயற்கை எழில் பொருந்திய அனைத்து அஃறிணை உயிர்களும் பருவத்தே அதன் வினையை புரிகின்றன.ஆனால் போர்களம் சென்ற தலைவன் மட்டும் வரவில்லை என்றும் ஊடல் கொள்வதாக ஓர் உளவியல் கூற்று இங்கு தலைவியிடம் உவமைப் போல் காணப்படுகிறது.

மலர்கள் புதர்தோறும் மலர்ந்தன, கொக்குகள் நாரைகளும் சேர்ந்து இருக்கின்றன.சூழ்கொண்ட கருமேகங்கள் துவலைகளை தூவுகின்றன.நெற்கதிர்கள் முற்றி வளைந்து நிற்கின்றன.பாக்கு முலைகளும், கழுகு மரங்களின் மடல்களும் திரண்டு நீர் திரளும்படி வீங்கி பருத்து, முற்றி நின்றன.மலைஉச்சியில் சோலைகளின் பலவகை மலர்கள் மழைத்துளிகளைக் தாங்கி கொண்டு நிற்கின்றன.இவ்வாறு புறச்சார்ந்த அனைத்து இயற்கைவுணர்களையும் இயைந்தளிக்ககூடியவைகள் 'பருவத்தே பயிர் செய்து' நிற்கும்போது, தலைவன் தன்னை தேடிவாராக் காரணம் வினாவி ஊடல் கொள்கிறாள் தலைவி. இதனை,

**'வைங்கால் கொக்கின் மென்பறைத் தொகுதி**

**இருங்களி பரந்த ஈரவெண், மணல்**

**செவ்வரி நாரையோடு எவ்வாயும் கவரக்'** (நெடு. 15-17)

என்னும் மருதத்திணைப் பாடலில் தலைவியின் மனவெழுக்கியை கூறி அவளின் உளவியற் செயற்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் பிறிதொரு பாடலிலே தலைவியை பிரிந்து போர்களம் சென்று பகை அரசனை வெல்வதற்காகத் தன் பாசறையில் உள்ளான்.கார்காலம் வந்துவிட்டது என்பதை அறிவிக்க, வென்காந்தன் மொட்டுகளும் விரிய வாடைக் காற்றும் வீசுகின்றது.இவள் தலைவனின் பருத்த

தோளுக்காக ஏங்குகிறாள், அதனை அவன் புரிந்துகொள்ளாது முகபடாம் அணிந்த யானையின் மேல் இருக்கிறான் என்று நினைக்கிறாள்.தலைவியின் வருத்தமறிய தலைவனாக இருப்பது கண்டு ஊடல் கொள்வதற்கு சான்றாக அமைகிறது.

**தொகுப்புரை**

சங்க இலக்கியத்தில் செய்யுட்களின் வழி நாம் நோக்குங்கால் தலைவியை விடுத்து தலைவனின் பிரிவு என்பது பல நிலைகளில் அமைகிறது.அப்பிரிவினை தாங்காது தலைவியின் உள்ளமானது கலக்கம் அடைகிறது.அத்துயரத்திற்கு பல்வேறு அகக் காரணிகளும், புறக் காரணிகளும் காரணமாக அமைகின்றது.அகம் சார்ந்த உளவியலில் புறம் சார்ந்த போர் தொழில் பிரிதலும் காரணமாக அமைகின்றது.

ஆதலால் இயற்கையோடும் எழிலோடும் தனது மன நிலையை ஒப்பிட்டு தன் உளப்பாங்கினை வெளிப்படுத்துகிறாள் தலைவி.ஆனால் போர்களம் சென்ற தலைவன் அங்கு நிகழ்கின்ற போர்சூழலின் அம்சங்களை மையமாக வைத்து அவனது உளப்பாங்கு வெளிப்படுகின்றது. இருவேறுபட்ட மனநிலைகளின் தலைவன், தலைவியின் உளவியலை இச்செய்யுட்கள் வழி நமக்கு புலவர் எடுத்துரைக்கின்றனர். கார்காலத்தின் நிகழக்கூடிய வாடைக்காற்றின் பருவத்தால் தலைவியின் மனப்பாங்கினையும், அவளது நடத்தையும் ஒருபக்கம் உரைக்க, மற்றொரு நிலையில் தலைவியின் பிரிந்த துயரோடு, விழுப்புண்பட்டு போர்களத்தில் சாய்ந்த நிலையில் இருக்கக்கூடிய வீரர்களிடமும், வாய் இல்லாத யானை குதிரைகளிடமும் அன்பு செலுத்தி ஆறுதல் அளிக்கும் தலைவனுடைய கடமையுணர்ச்சியினையும் உளவியல் நோக்கோடு நோக்கும்போது உய்த்துணர முடிகிறது.

**துணைநின்ற நூல்கள்**

1. கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதி. க்ரியா சென்னை (2004)
2. ச.வே. சுப்பிரமணியன் சங்க இலக்கியம் பத்துப்பாட்டு, மணிவாசகர் பதிப்பகம், சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை 600108.
3. கு. சுந்தரமூர்த்தி தொல்காப்பியம் பொருளதிகாரம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர், சிதம்பரம்.
4. தமிழண்ணல் சங்க இலக்கிய ஒப்பீடு, (இலக்கிய கொள்கைகள), மீனாட்சி புத்தக நிலையம், மதுரை.
5. மு. வரதராசன் தமிழ் இலக்கிய வரலாறு, குணா பில்டிங் 2143, அண்ணாசாலை, தேனாம்பேட்டை, சென்னை 600018.

ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

30

# எட்டுத்தொகை அகநூல்களில் உளவியல்

**முனைவர் சே.பிரேமா, உதவிப்பேராசிரியர்,**
**தமிழ்த்துறை, பூசாகோஅர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி,**
**கோவை**

**ஆய்வுச்சுருக்கம்**

சங்க இலக்கியத்தில் எட்டுத்தொகையின் அகப்பொருள் நூல்களான நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு முதலியவற்றில் தலைவி, தலைவன், நற்றாய், செவிலி என்னும் உன்னதமான மாந்தர்கள் வாயிலாக வாழ்வில் ஏற்ற இடத்து வழங்கக்கூடிய செய்தியானது அகத்து உணர்வுகளை மேன்மையாக கொண்டும், சிக்கல்களுக்குத் தீர்வு காணும் நோக்கில் வினவிய செய்திகளும், செயல்படுத்தியச் செயல்களும் உளவியல் பாங்கில் அமைந்திருப்பதை இவ்வாய்வின் வழி அறியமுடியும்.

தலைவியின் வாழ்வு மேன்மை அடையும் எண்ணத்தில் தோழியும், செவிலியும், துறவியும், பாணனும் எண்ணிய உணர்வுகள் இக்கட்டுரையில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. அகவாழ்வில் ஒத்த தலைவனும் தலைவியும் இன்புற்று வாழவேண்டுமென்பதற்காகச் சிந்தனைகளைப் பதிவு செய்த புலவர்களின் உளவியல் சிந்தனை போற்றுதற்குரியதாகும் என்பதனையும் இவ்வாய்வில் அறியலாம்.

**முதன்மைச்சொற்கள்:** எட்டுத்தொகை அகநூல்கள், உளவியல் கோட்பாடு, வாழ்வியல் வெளிப்பாடு, அகத்துணர்வுகள்.

**முன்னுரை**

சங்க இலக்கியங்கள் குறித்த பல்வேறு ஆய்வுகள் நிகழ்ந்து வருகின்ற இக்காலக்கட்டத்தில், சங்க இலக்கியச் செய்யுள்களை உளவியல் நோக்கில் அணுகுதல் என்பது இன்றியமையாத ஒன்றாகும். சங்க இலக்கிய எட்டுத்தொகை நூல்களில் அகப்பொருள் சார்ந்த நூல்கள் முழுமையாகக் கிடைக்கப்பெற்றது இலக்கியத்திற்கு நன்மதிப்பை ஊட்டுவனவாக அமையப்பெற்றுள்ளது. எட்டுத்தொகை அகப்பொருள் சார்ந்த நூல்களான நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை மற்றும் அகநானூறு ஆகிய ஐந்து நூல்களில் அமையப்பெற்ற உளவியல் கூற்று அமையப்பெற்ற பாங்கினை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**உளவியல்**

ஆன்மா, உள்ளம், மனம் சார்ந்த கருத்துகள் நூல்களில் அதிகமாக காணப்படுகின்றன. ஆன்மா அல்லது ஆவியின் செயல்பாடுகளையும் உள்ளத்தின் சிந்தனைகளையும் ஆராய்ந்து அறிந்து எடுத்துக்கூற

மனவியல் தோன்றிற்று. தத்துவ சாத்திரத்தின்(Philosophy) ஒரு பிரிவாக மனவியல் இருந்து, பின் மனநூல், உளநூல் என்றும் அழைக்கப்பட்டன.

அரிஸ்டாட்டில் என்ற கிரேக்கத் தத்துவ அறிஞரின் "ஆன்மாவின் இயல்புகள்" என்னும் நூலே மனவியல் குறித்து எழுதப்பட்ட முதல் நூல் ஆகும் (Aristotle-384-322.B.C) மனவியலானது புலன்காட்சி (Sence perception), மனவுணர்ச்சி, எழுச்சி (Feeling and Emotions), மன ஊக்குவித்தல், சிந்தித்தல், கற்றல் என்று பல வளர்ச்சி நிலைகளைத் தாண்டி மனம், உள்ளம் எனும் ஆய்வியல் நிலையினை அடைந்த பிறகு உளவியல் என்று குறிக்கப்பட்டது.

**அகத்துணர்வுகள்**

அகப்பொருள் நூல்களில் தலைவி, தலைவன், தோழி, நற்றாய், செவிலித்தாய், பாங்கன் எனும் மாந்தர்கள் வாயிலாக அகத்துச் சிந்தனை பல்வேறு கோணங்களில் வெளிப்படுகின்றன. உவமை, உருவகம், படிமம், குறியீடு, முரண், அணி, யாப்பு எனும் இலக்கிய இலக்கண நோக்குடன் ஆராய்வதுடன் உளவியல் தடத்தில் ஆராயும்போது அகத்துணர்வுகள் பெரிதும் பாராட்டப்படும் அளவில் சிறப்பிடம் பெற்றுவிடுகின்றன.

**நற்றிணை**

பிரிவு உணர்த்திய தோழிக்குத் தலைவி உரைத்தச் செய்தியானது, அகத்து உண்மை நிலையினை உளவியல் பாங்கில் எடுத்துக்காட்டுவதாக அமையப்பெற்றுள்ளது.

**"நின்ற சொல்லர்; நீடுதோன்று இனியர்;**
**என்றும் என் தோள் பிரிபு அறியலரே'**
**தாமரைத் தண் தாது ஊதி, மீமிசைச்**
**சாந்தில் தொடுத்த தீம் தேன் போல,**
**புரைய மன்ற, புரையோர் கேண்மை;**
**நீர் இன்று அமையா உலகம் போலத்**
**தம் இன்று அமையா நம் நயந்தருளி,**
**நறு நுதல் பசத்தல் அஞ்சிச்**
**சிறுமை உறுபவோ? செய்பு அறியலரே! "**

நற்றிணை - குறிஞ்சி - கபிலர் - செய்யுள் -1

**தலைவிக்கூற்று**

என் தலைவன்; உரைத்த கூற்றினைக் காத்து நிற்பவர், இனிமை உள்ளம் உடையவர், என்றும் என் தோள் பிரியா அன்பினர், குளிர்ந்த குளத்தில் தோன்றிய தாமரையின் தாதுக்களை ஊதி, மேல்நோக்கி உயர்ந்த மலை இருக்கின்ற சந்தன மரத்தில் தேன் வண்டுகள் சேர்த்த தேனின் இனிமைக்கு நிகரானது அவரது அன்பு, நீர் இல்லாமல் உலகம் இயங்காது அதுபோல, அவர் இல்லாமல் என்னால் வாழ இயலாது. என் நுதலில் ஏற்படும் பிரிவுத்துயர் (பசலை நோய்) பார்த்து வருந்தி அஞ்சக்கூடியவர், என்ன செய்வதென

அறியாது என்னைப் பிரிந்து சிறுமை நிலை (துயர நிலை) அடைந்து விடுவாரோ என்றுணர்த்தும் இக்கூற்றில் 'தலைவன் தன்னை விட்டுப் பிரிய மாட்டான்' என்பதே உளவியல் உட்பொருளாக அமைந்துள்ளது.

**குறுந்தொகை**

தலைவன்மீது தலைவி மிகுந்த காதல் உடையவளாகவும், அன்புடையவளாகவும் இருக்கிறாள் என்பதனை அறிந்த தோழி அவர்களிடையே உள்ள நட்பினை சிறப்புடையதாகக் கருதுகிறாள். தலைவனின் உள்ளத்தில் தலைவியை மணம் புரியும் சிந்தனை மேலோங்க வேண்டும் எனும் நோக்கில் தோழி செயல்படுத்தியத்திட்டம் போற்றுதற்குரியதாக அமைந்துள்ளது.

**"நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று**
**நீரினும் ஆரள வின்றே சாரல்**
**கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு**
**பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே"**

குறுந்தொகை - தேவகுலத்தார் - குறிஞ்சி - செய்யுள் - 3

**தோழிக்கூற்று**

மணம் புரியாது ஒழுகும் தலைவன் வேலிப்புறத்து நிற்பதனை அறிந்து கொண்டு, தோழி அவன் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்கிற எண்ணம் பெற்றவளாகி, அவனது செவியில் படுமாறு தலைவியிடம் இவர்களது நட்பினை (உறவு முறை) பழித்துக் கூறினாள்.

**தலைவி உரைப்பன**

பெரும் மலைப்பகுதிகளில் உள்ள கரிய கொம்புகளை உடைய குறிஞ்சி மரத்தின் மலர்களைக் கொண்டு, பெரிய தேன்கூட்டினை வண்டுகள் (தேனீக்கள்) ஏற்படுத்துவதற்கு இடமாகிய நாட்டைபெற்றத் தலைவனோடு தான் செய்த நட்பானது, புவிப்பரப்பினைக் காட்டிலும் உயர்ந்தது!, கடலைக் காட்டிலும் கணக்கிட இயலா ஆழம் கொண்டது! என்று தலைவி உரைக்க, மறைவிலிருந்த தலைவன் இச்செய்தியினைக் கேட்டுக்கொண்டிருக்கிறான்.

தலைவியானவள் தலைவனோடு செய்த நட்பு மிகச்சிறந்தது, ஆதலால் 'நீட்டிக்காது தலைவியினை மணம் புரிய வேண்டும்' என்கிற தோழியின் உளவியல் அணுகுமுறை இப்பாடலில் சிறப்பிடம் பெறுகிறது.

**ஐங்குறுநூறு**

காதலன் காதலி எனும் உறவு திருமணமாக மாறவிருக்கும் செய்தியானது முன்னரே எடுத்துக்கூறும் மனப்பாங்குடன் இந்நிகழ்வு அமைகிறது.

**“அன்னை வாழிவேண் டன்னை உதுக்காண்**
**ஏர்கொடிப் பாசடும்பு பரியஊர்பு இழிபு**
**நெய்தல் மயக்கி வந்தன்று நின்மகள்**
**பூப்போல் உண்கண் மரீஇய**
**நோய்க்குமருந் தாகிய கொண்கன் தேரே”**

ஐங்குறுநூறு - அம்மூவனார் - நெய்தல் - செய்யுள் - 1

**தோழிக்கூற்று**

அன்னையே வாழ்க! மகிழ்வுடன் இங்கு பார்ப்பாயாக! உன் மகளின் பூப்போன்ற மையிட்ட கண்களில் தோன்றிய பசலை நோயைத் தீர்க்கும் மருந்தாகிய நெய்தல் நிலத் தலைவன் ஏறிவரும் தேரானது அடும்புக்கொடிகளைச் சக்கரத்தால் அறுக்கின்றது. அறுக்கப்பட்ட அந்தக் கொடிகள் குவளை மலர்களுடன் கலக்கின்றன. திருமணம் புரிய வேண்டும் என்கிற செய்தியுடன் தலைவன் வரும் காட்சியைத் தோழி அறிந்தனள்.

தான் அறிந்த செய்தி கேட்டுத் தலைவியும், தாயும் மகிழவேண்டும் என்பது தோழியின் ஆவல். அவன் வருகையை அறிந்த உன் மகளின் நுதல் முன்னைக் காட்டிலும் சிவந்து பொலிவு பெற்று மாற்றமடைந்துள்ளது. களவு வெளிப்பட்டும் மணமுடிக்காது, ‘தலைவன் பிரிந்தான் என அலர் கூறுவோர் சொல் மாறும் படியாக மணமுடிக்கத் தலைவன் வந்தனன் ‘ என்ற உளவியல் செய்தி அறியமுடிகின்றது.

‘நோயைத் தீர்க்கும் மருந்தாகியத் தலைவன்’ எனும் கூற்று உளவியல் பாங்குடன் அமைந்துள்ளது. உடல் நோய்க்கு மருந்து இட்டால் தீரும், ஆனால் உள்ளது நோய்க்கு ஏது மருந்து? ‘உற்றவன் வந்தால் தீரும்’ என்ற உளவியல் செய்தி இப்பாடலில் பெறப்படுகிறது.

**கலித்தொகை**

தன் மகளும், பிறர் மகனும் உடன்போக்கு சென்றதை அறிந்த செவிலித்தாய், அவர்களைக் காணும் பொருட்டு தேடும் வழியில் துறவியைச் சந்தித்து வினவ, ‘தாய் உரைத்தவைக்கு அன்னோர் உரைத்த கூற்றானது உளத்தினை ஆற்றுப்படுத்தும் கூற்றானது’ உளவியல் நோக்குதனை எடுத்துக்காட்டுவதாக அமையப்பெற்றுள்ளன.

செவிலித்தாய் தன் மகள் குறித்து வழியில் சந்தித்த வைணவத் துறவியிடம் உரைத்த உளச்செய்தியும், அதற்குத் துறவி எடுத்துரைத்த உளவியல் சிந்தனைக்கூற்றும், புலவர் பாலை பாடிய பெருங்கடுங்கோ எடுத்துரைத்த பாடலின் செய்திகள் பின்வருமாறு,

**"எறித்தரு கதிர் தாங்கி ஏந்திய குடை நீழல்,**
**உறித் தாழ்ந்த கரகமும், உரை சான்ற முக்கோலும்,**
**நெறிப்பட சுவல் அசைஇ வேறு ஓரா நெஞ்சத்துக்**
**குறிப்பு ஏவல் செயல் மாலைக் கொளை நடை அந்தணீர்!**
**வெவ் இடைச் செலல் மாலை ஒழுக்கத்தீர்! இவ் இடை,**
**என் மகள் ஒருத்தியும் பிறள் மகன் ஒருவனும்,**
**தம் உளே புணர்ந்த தாம் அறி புணர்ச்சியர்**
**அன்னார் இருவரை காணிரோ பெரும?"**

கலித்தொகை - பாலை பாடிய பெருங்கடுங்கோ - பாலை - செய்யுள் - 1(1-8 அடிகள்)

**செவிலிக்கூற்று**

அனல் கொண்ட ஞாயிற்றின் வெப்பத்தைத் தாங்கி, நிழல்தரும் குடைகளை உங்கள் கைகளில் ஏந்தி, உறியில் தொங்கும் தண்ணீர் கமண்டலத்தையும், முக்கோலையும் முறைப்பட தோளில் சுமந்து, இறைவனைத் தவிர வேறு எவற்றையும் சிந்தியாத எண்ணமுடன், ஐம்பொறிகளையும் நீர் ஏவிய வழியில் இயங்கும் விதமாக திறன்பெற்ற அந்தணர்களே! ஐயா, பிறர் அறியாமல் இணைந்த என் மகளும், ஒருத்தியின் மகனும் மற்றவர் அறியும் வகையில் சென்றுவிட்டனர். அத்தன்மையுடைய அவர்கள் இருவரும் இந்தப்பாதையில் செல்வதை நீவீர் கண்டீரோ? என வினவுகிறாள்.

**துறவிக் கூற்று**

**"காணேம் அல்லேம்; கண்டனம் கடத்து இடை;**
**ஆண் எழில் அண்ணலோடு அருஞ் சுரம் முன்னிய,**
**மாண் இழை மடவரல் தாயிர் நீர் போறிர்!**
**பல உறு நறும் சாந்தம் படுப்பவர்க்கு அல்லதை,**
**மலை உளே பிறப்பினும், மலைக்கு அவை தாம் என் செய்யும்?**
**நினையுங்கால், நும் மகள் நுமக்கும் ஆங்கு அனையளே!**
**சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க்கு அல்லதை,**
**நீர் உளே பிறப்பினும், நீர்க்கு அவை தாம் என் செய்யும்?**
**தேருங்கால், நும் மகள் நுமக்கும் ஆங்கு அனையளே!**

**ஏழ் புணர் இன் இசை முரல்பவர்க்கு அல்லதை,**
**யாழ் உளே பிறப்பினும், யாழ்க்கு அவை தாம் என் செய்யும்?**
**சூழுங்கால், நும் மகள் நுமக்கும் ஆங்கு அனையளே!**
**என ஆங்கு,**
**இறந்த கற்பினாட்கு எவ்வம் படரன்மின்!**
**சிறந்தானை வழிபடீஇச் சென்றனள்;**
**அறம்தலை பிரியா ஆறும் மற்று அதுவே".**

கலித்தொகை - பாலை பாடிய பெருங்கடுங்கோ - பாடல் - 9 (9- 24 **அடிகள்)**

**வினவிய செவிலித்தாயிடத்து துறவியின் கூற்று**

காணாது இருக்கவில்லை, கண்டோம். அழகான ஆணுடன் கடுமையான காட்டு வழியில் சென்ற அழகிய அணிகளை அணிந்த இளம்பெண்ணின் தாயோ நீங்கள்! நறுமணம் கமழும் சந்தனமானது, பயன்படுத்துபவர்களுக்கு பயன் கொடுப்பது இல்லாது, தான் பிறந்த மலைக்கு எந்த வகையில் பயன்படும்? சிறப்பு மிகுந்த வெள்ளை முத்துக்கள் அணிபவர்களுக்கு அழகைக் கொடுக்கிறதே தவிர, தாம் பிறந்த கடலுக்கு எந்த வகையில் பயன்படுகிறது?

ஏழு நரம்புகளில் எழும் இனிய இசை, இசைப்பவர்களுக்கு இன்பத்தை வழங்குகிறது. ஆனால் யாழ் எந்த மரத்தில் செய்யப்பட்டதோ அதற்கு உதவுவதில்லை!. அனைத்தும் சிந்தித்துப்பார்த்தால் உனக்கும் உன் மகளுக்கும் உள்ள உறவு அத்தகையதே! ஆதலால் இருமனம் கலந்து கற்பு நெறியை மேற்கொண்டு, தலைசிறந்த ஒருவனை ஏற்றுக்கொண்டு சென்ற உன் மகளை எண்ணி வருந்தாதீர்! அவள் சென்ற வழி அறத்தொடு ஒத்தது, கலங்காதே!

'செய்வதறியாது கலங்கிய நெஞ்சத்திற்கு துறவி அளித்த செய்திகள்' உளவியல் கோட்பாட்டினை நிறைவு செய்தவையாக அமைந்தன.

**அகநானூறு**

பொருள் ஈட்டுவதற்காகச் சென்ற தலைவன் மனை திரும்பாது இருப்பது கண்டு தலைவி, தன் துயரினை தன் இல்லம் நோக்கி வந்த பாணனிடம் பின்வருமாறு எடுத்துரைக்கிறாள்.

**"அரக்கத்து அன்ன செந் நிலப் பெரு வழி,**
**காயாஞ் செம்மல் தாஅய், பல உடன்.....................**
**மனையோள் சொல் எதிர் சொல்லல் செல்லேன்,**
**செவ்வழி நல்யாழ் இசையினென், பையென"**

அகநானூறு - ஒக்கூர் மாசுத்தனார் - முல்லை - செய்யுள் - 14

**தலைவி பாணனிடம் உரைத்தவை**

அரக்குப் போலச் செம்மண் நிலம், அதன் வழி எங்கும் காயாம் பூக்களானது சிதறிக்கிடக்கின்றன. ஈக்கள் மட்டுமல்லாது மூதாய் பூச்சியும் (தம்பலப்பூச்சி) ஆங்காங்கு மேய்ந்து கிடக்கின்றன. இதன் காரணத்தால் முல்லை நிலக்குன்றம் முழுவதும் பவளமும், மணியும் (சிவப்பு, நீலம்) கோர்த்து வைத்ததுபோலக் காட்சியளிக்கிறது. மேலும் பெண்மானுடன் சேர்ந்து கலைமான் புற்களை மேய்ந்து, காதலுடன் துள்ளி விளையாடுகின்றன.

ஆனிரைகள் அறுகம்புல்லை மேய்ந்து மடி நிரம்பியதும், பால் ஒழுகுகிறது. தன் கன்றுகளை நினைத்து அவை தம் மன்றத்திற்குச் செல்கின்றன. இத்தகைய காட்சிகள் புலப்படும் முல்லை நிலத்து மாலை நேரத்தில் என்னைக் காண என் தலைவன் வரவில்லை என்றால் பாண!......காலை வேளையில் என்னை நினைப்பாரோ? நீ சொல்., என்றவாறு தலைவி புலம்புகிறாள்.

மனையோள் உரைத்த மனவழுத்தச்சொல்லிற்கு விடை கூற முடியாத பாணன், தலைவியிடத்து பதிலேதும் உரைக்காது தலைவனைக் கண்டான். பாணன் தனக்குப் பாங்காயினர் கேட்கச், சொற்கள் ஏதும் உரைக்காது யாழ் மீட்டிச் செவ்வழிப்பண் இசைத்தான். யாழிசையால் விடயத்தை அறிந்து மனம் கலங்கிய தலைவன் தலைவியைக் காண, தேர்க்குதிரையை இழுத்துப்பிடிக்காது முடுக்கி ஓட்டினான். 'தலைவியின் மனக்குமுறல் பாணனின் யாழ் இசையோடு' காட்சிப்படுத்தப்பட்ட பாங்கு இப்பாடலில் உளவியல் நோக்கில் எடுத்தியம்புவதாக அமைகிறது.

**முடிவுரை**

தமிழின் இருகண்களாக இலக்கியங்களும் இலக்கணங்களும் விளங்குகையில் இலக்கியங்கள் முறையே சங்க இலக்கியத்தின் எட்டுத்தொகையில் அகப்பொருளாக அமைந்த ஐந்து நூல்களும் தனக்குரிய அமைப்புகளில் சிறப்பிடம் பெறுவனவாக அமைந்துள்ளன. கபிலரின் செய்யுள் வரிகளில் தலைவன் தலைவியை விட்டுப் பிரிய சிந்திக்கவே மாட்டான் என்பதும், தேவகுலத்தார் செய்யுள் வரிகளில் காலம் நீட்டிக்காது தலைவியை மணம் புரிய வேண்டும் என்கிற நோக்கில் தோழியின் உளவியல் அணுகு முறையும், அம்மூவனார் செய்யுள் வரிகளில் உடல் நோயைத் தீர்க்கும் மருந்தாகிய தலைவன் எனும் கூற்றில் உடல் நோய்க்கு மருந்து இட்டால் தீரும்! ஆனால், உள்ளது நோய்க்கு மருந்து உற்றவன் வந்தால் தீரும்! என்பதும், பாலை பாடிய பெருங்கடுங்கோ செய்யுள் வரிகளில் மகளுக்கும் செவிலிக்கும் உள்ள உறவினைத் துறவி உளவியல் முறையில் எடுத்துக்காட்டிய வரிகளும், ஒக்கூர் மாசாத்தனார் செய்யுள் வரிகளில் தலைவியானவள் அடைந்துள்ள மனத்துயரை வார்த்தைகளில் உணர்த்தாது மனமொத்த நல்லிசையில் பாங்கனிடத்து உரைத்த பாணனின் செயல்பாட்டிலும் தனித்துவமான உளவியல் சிந்தனைகள் மேலோங்கி இருப்பதை இவ்வாய்வின் வழி அறிய முடிகின்றன.

**துணைநூற்பட்டியல்**

1. நற்றிணை (மூலமும் உரையும்) - முனைவர் கோ. பரமசிவம், ஓலைச்சுவடித் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், ஸ்ரீ வேலன் அச்சகம், சிதம்பரம் - 608001
2. கலித்தொகை - புலியூர் கேசிகன், மா.ராசமாணிக்கனார், பூம்புகார் பதிப்பகம் , சென்னை- 14
3. அகநானூறு (மூலமும் உரையும்) - புலியூர்க் கேசிகன் சாரதா பதிப்பகம், சென்னை -முதல் 14 பதிப்பு, 2010
4. கற்போர் கற்றல் உளவியல் - டாக்டர்.பி.ரத்தினசபாபதி, டாக்டர். வ.சு. அறிவழகன் சாந்தா பப்ளிஷர்ஸ், ராயப்பேட்டை, சென்னை- 14
5. சங்க இலக்கியம் - பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை, பாரிநிலையம், பிராட்வே சென்னை - 01
6. சங்க இலக்கியம் (மூலமும் உரையும்) - அறிஞர். ச.வே. சுப்பிரமணியன், மணிவாசகர் பதிப்பகம், பாரிமுனை, முதற்பதிப்பு - 2010, சென்னை - 16

ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# பகவத் கீதையில் உளவியல்

முனைவர் தி.பார்த்திபன், நெறியாளர்
லெ.புவனேஸ்வரி முனைவர் பட்ட ஆய்வாளர்
மெய்யியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

31

**ஆய்வுச்சுருக்கம்**

இக்கட்டுரையில் பலவிதமான உளவியல் தன்மைகளையும் அவைகளிலிருந்து நம்மை நாமே மீட்டெடுப்பதற்பான சில வழிகளையும் பகவத்கீதையின் துணையோடு விளக்க முற்பட்டுள்ளோம். கோபம், ஆசை, ஏமாற்றம், பழிஉணர்வு மற்றும் பலவும் உளநோயே என்றாலும்கூட இதனால் உள்ளம் மட்டும் பாதிக்கப்படுவதில்லை. உடலும் சேர்ந்தே துன்பப்படுகிறது. எனவே, நாம் உடல் மன ஆரோக்கியத்தை பெறவேண்டும் என்ற அவாவே இவ்வாய்வு சுருக்கமாகும்.

**கலைச்சொற்கள்**: அகங்காரம், நுண்ணறிவு ஈவு, தூர திருஷ்டி, ராஜ்ய வெறி

**ஆய்வு நோக்கம்**

திட உடலும், தெளிந்த மனமும், உயர்ந்த அறிவுமே ஒரு மனிதனை மாமனிதனாக்கும் எனவே இம்மூன்றிலுமே நாம் முழு கவனம் செலுத்தி நன்மை அடைந்து நமக்கும், பிறர்க்கும் பயன்படும் வகையில் சீரும் சிறப்புமாக நல்முறையில் வாழ்ந்து நல்ல சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்பதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**முன்னுரை**

பகவத் கீதை என்பது மதம், மொழி, இனம் கடந்த ஒரு மகத்தான மனோதத்துவயியல் நூலாகும். உளவியல் பிரச்சினைகள் அனைத்திற்குமான தீர்வுகளை தன்னகத்தே கொண்ட ஒரு மாபெரும் பொக்கிஷம் ஆகும். ஆத்திக, நாத்திக மக்கள் அனைவருக்கும் உரியதே ஏனெனில் மனம் என்ற ஒன்று இருப்பவர்கள் அனைவருக்குமே அதில் எவ்வித பிரச்சினையும் வராமல் தன்னை பாதுகாக்க உதவுவதால் இது அனைவருக்கும் நல்வழி காட்டக்கூடிய நூலாகும். உளவியல் என்பது தமக்கும் பிறர்க்குமோ, தமக்கும் சமுதாயத்திற்குமோ அல்லது தனக்குள்ளேயே ஏற்படும் போராட்டங்களையோ அதனால் ஏற்படுகின்ற பாதிப்புகளையோ அதிலிருந்து மீளுவதையோ குறிப்பதாகும். ஆக இவ்விருவிதத்திலுமே பகவத்கீதை மனித சமுதாயத்திற்கு பக்கபலமாக துணை நிற்கிறது. எனவே பகவத்கீதையில் இருந்து சில நல்ல கருத்துக்களை மட்டுமே இக்கட்டுரையில் சிந்திக்க இருக்கின்றோம்.

**கீதை ஓர் சிறப்புக் கண்ணோட்டம்**

நமது ஒட்டுமொத்த இலக்கியங்களிலோ, புராணங்களிலோ, இதிகாசங்களிலோ, வேத உபநிடதங்களிலோ இல்லாத அளவிற்கு, சிறப்பினும் சிறப்பு வாய்ந்த தனக்குத்தானே நிகர் எனும் அளவிற்கு பாரதம் எனும் ஆன்மிக பூமிக்கு மணிமகுடமாய்த் திகழ்வது கீதையே ஆகும். புகழின் உச்சத்தில் இருப்பதாலேயே இது பல சர்ச்சைகளையும் சந்திக்க வேண்டியுள்ளது. இருப்பினும் தனிச் சிறப்புடையதே. எதிர்ப்பின்றி ஜெயிப்பதைவிட இத்தனை எதிர்ப்புகளையும் மீறி நிலைத்து என்றென்றுமே புதுப்பொலிவுடன் இருப்பதே இதன் உச்சபட்ச சிறப்பாகும். இத்தகைய தத்துவ நூலில் இருந்து சில உளவியல் சிறப்புக்கூறுகளை பற்றிச் சிந்திப்போம்.

**பிறழ்வான மெய்பாட்டு நிலை (Emotional Instability)**

இந்நிலை பிறப்பாலோ அல்லது வாழ்வில் ஏற்படும் உள்ளப் போராட்டங்களாலோ ஏற்படுவதை ஐசன்க் என்பவர் வெள்ளை எலிகளை வைத்து சோதித்துக் கண்டறிந்தார். இதுவே பிறழ்வான நடத்தை உளவியலுக்கும் காரணமாகிறது.[1] இந்நிலைதான் திருதராஷ்ட்ரனின் மனப்போராட்டங்களுக்கும் அவனது எண்ணத்தின் விளைவாக அவனுக்கு பிறந்த துரியோதனாதிகளுக்கும் ஏற்பட்ட ராஜ்யவெறி என்ற ஆழமான, அகங்காரமான கொள்கைக்கு அடிப்படையாக இருந்தது. இவர்களால் மற்றவர்களுக்கு துன்பத்தை மட்டுமே தர முடியுமே தவிர நல்லதை எதுவும் தர முடியாது. எனவே ஹிட்லர் போன்ற சேடிசம் நிறைந்தவர்களை அழிப்பதே தர்மம். அவரை அழித்திருந்தால் அவரால் பல பேர் கொல்லப்பட்டிருக்கமாட்டார்கள் என்று ஓஷோ கூறுவதாக சுகி சிவம் விளக்குகிறார்.

**'ஸேடிஸ்ட்' லிருந்து 'மெஸோசிஸ்ட்'**

நாம், நல்லவர்கள் - தீயவர்கள் என்று கூறுபவர்களின் அடிப்படைத் துவக்கத்தில் எந்த பேதமும் இல்லை. நல்லவர், தீயவர் இருவரும் ஒரேவித அகங்காரத்தின் பலத்திலேயே நிற்கின்றனர். தீயவர்கள் தங்கள் அகங்காரத்தை பூர்த்தி செய்வதற்காக மற்றவரை வதைக்கிறார்கள். நல்லவர்கள் தங்கள் அகங்காரத்தை பூர்த்தி செய்வதற்காக தங்களையே வதைத்துக்கொள்கின்றனர் என்பதுதான் வித்தியாசம். வதைப்பதில், கஷ்டப்படுவதில் வித்தியாசம் எதுவும் இல்லை.

அர்ஜுனன், இவர்களைக் கொல்வதை விட நான் மடிவது நல்லது என்கிறான். தீயவர்கள், மனோ விஞ்ஞான மொழியில் "ஸேடிஸ்ட்" ஆக இருக்கிறார்கள். நல்லவர்கள் தங்கள் அகங்காரத்தை நிரப்பும்போது "மெஸோசிஸ்ட்" ஆகிறார்கள். 'மெஸோசிஸ்ட்' என்பவன் தன்னையே இடித்துக் கொண்டிருப்பான். தனக்கே வேதனையளித்துக் கொள்ளும் எல்லா மனிதர்களும், நல்லவர்களாகி விட முடியும். நாம் ஒருவரை

பட்டினிபோட்டு சித்ரவதை செய்வது சட்டப்படி குற்றமாகும். ஆனால் தாமே ஒருவர் உபவாசம் இருந்து தன்னை வருத்திக்கொண்டால் சட்டம் தண்டிக்காது. இது ஒருவகை மெஸோசிஸ்ட் தன்மை ஆகும்.[3] இவர்களைக் கொல்வதற்குப் பதிலாக நான் இறந்து விடலாம் என்று அர்ஜுனன் கூறுகிறான். கூறும் விஷயம் ஒன்றேதான். கொலை செய்வது பற்றியே. அதில் மாறுபாடு இல்லை. ஆனால் அம்பின் இலக்கு மாறிவிட்டது. தன்னை வதைத்துக் கொள்வதில் கிடைக்கும் திருப்தி, பிறரை வதைப்பதில் கிடைக்காது என்பதுதான்.

இவ்வாறாக போரிலிருந்து பின்வாங்கும் அர்ஜுனனை பகவான் 'சைக்கோ அனாலிஸிஸ்' என்ற முறையில் கோழைத்தனமாக பின்வாங்காதே[4] என்றும் பலவகையான கர்ம, ஞான, பக்தி, த்யான யோகங்களைப் பற்றிய பாடங்களைப் புகட்டியும் அவனை அவனது சுவதர்மமாகிய போரை கைவிடாது கடமை ஆற்ற வலியுறுத்துகிறார்.

**ஆழ்மனசக்தி** **(subconscious mind)**

**தர்மக்ஷேத்ரே குருக்ஷேத்ரே ஸமவேதா யுயுத்ஸவ**

**மாமகா பாண்டவாஷ் சைவ கிம் அகுர்வத ஸஞ்ஜய - பகவத் கீதை 1.1**

இவ்வாறாக யுத்தமானது தர்ம பூமியில்தான் எப்போது நடந்து கொண்டே இருக்கிறது. ஆலயங்களிலும், மசூதிகளிலும் இன்றுதான் போர் நடக்கிறது என்றில்லை. ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்பே கிருஷ்ண பரமாத்மா போன்ற அவதார புருஷர்கள் வாழ்ந்திருந்த காலத்திலேயே உயர்ந்த குருக்ஷேத்திரத்தில், தர்ம பூமியில் யுத்தகளமாக்க மக்கள் கூடியிருந்தது என்பது அனைத்து மக்களின் ஆழ்மனதில் பதிந்திருந்த யுத்த தாகம், நாசம் செய்யத் தூண்டும் வெறி, மனிதனில் மறைந்திருந்த மிருகம் இவை அனைத்தும் ஒன்று திரண்டுதான் போருக்கு அடித்தளமாயிருந்தன.[5]

**தூரதிருஷ்டி மற்றும் டெலிபதி**

சஞ்சயன் அரண்மனையிலிருந்து போரைப் பார்த்ததென்பது பெரிய அபூர்வசக்தி ஒன்றுமில்லை. எந்த மனிதனாலும் முடியும்.[6] கொஞ்சம் சிரமம் பாராமல் முயற்சித்தால் கண்ணால் இங்கிருந்தே பிற பொருட்களைத் தொடாமலே நகர்த்துவது, தம் மனதில் நினைத்ததை பிறர் மனதில் தொலைதூரத்திலிருந்தே பதிய வைத்து நட்பு பாராட்டக்கூட முடியும் என்பதற்கு உதாரணம் தான் பிசிராந்தையார் மற்றும் கோப்பெருஞ்சோழன். மேலும் வள்ளலார் தனது சொந்த ஊருக்கு அருகில் கருங்குழி எனும் ஊரில் தண்ணீரில் விளக்கெரித்தார். இது போன்றவை மனோசக்தியால் சாத்தியமே. இப்பேற்பட்ட விஷேச சக்திகள் மனிதனைத் தீயவழியில் கொண்டு செல்வதால்தான் முனிவர்களும், யோகிகளும் பொதுமக்களுக்கு இவ்வகைக் கலைகளை அதிகம் தெரியப்படுத்துவதில்லை.[7]

**தாழ்வுமனப்பான்மை (Inferiority Complex)**

இங்கே (பாண்டவப் படையில்) சூரர்களாகவும், பெரிய வில்லாளிகளாகவும், யுத்தத்தில் பீமனுக்கும் அர்ஜுனனுக்கும் சமமானவருமான யுயுதானனும், விராட தேசத்தரசனும், மகா ரதனாகிய துருபத தேசத்து அரசனும் திருஷ்டகேதுவும், சேகிதானனும், வீரியமுடைய காசிராஜனும், புருஜீத் என்பவனும் குந்திபோஜனும், மனிதருள் முதன்மை வகிக்கும் சைபியன் என்பவனும், பேராற்றல் படைத்திருக்கும் யுதாமன்யுவும், வல்லமையுடைய உத்தமௌஜஸ் என்பவனும், சுபத்திரையின் புதல்வனும், திரௌபதியின் புதல்வர்களும் கூடியிருக்கின்றனர். இவர்கள் எல்லோரும் மகாரதர்களே யாவர். (பகவத்கீதை 1.4 - 1.6)

மேலே உள்ள ஸ்லோகத்தின்படி பார்த்தால் துரியோதனன் அதர்மவாதியாக இருப்பினும், தாழ்வு மனப்பான்மை கொண்டவன் அல்ல என்பது மேற்கூறிய ஸ்லோகத்திலிருந்து விளங்கும். ஆனால் வேடிக்கையான விஷயம் என்னவென்றால் மிக நல்ல மனிதர்கள்கூட தாழ்வுமனப்பான்மை எனும் நோயால் பீடிக்கப்பட்டிருப்பர், இவர்கள் கெட்டவர்களைவிட மிக மோசமானவர்களாகி விடுவார்கள். எவன் தன்னைப்பற்றி முழு நம்பிக்கையுடன் இருக்கின்றானோ, எவன் தன் திறமையில் திடமான விசேஷத்துடன் சந்தேகமின்றி இருக்கிறானோ அவன்தான் மற்றவர்களை தயக்கமின்றி புகழமுடியும்.[9] கெட்டவர்களின் நல்ல குணத்தையும் பாராட்டத்தான் வேண்டும். எனவேதான் வள்ளுவர் பின்வருமாறு கூறுகிறார்.

> **“எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
> **மெய்ப்பொருள் காண்பது அறிவு”** **- குறள் 423**

**டிஃபென்சிஸ் ஈகோ**

பகவானின் அறிவுரையையும் மீறி மீண்டும் மீண்டும் போர்புரிய பணிவாக மறுக்கிறான் அர்ஜுனன். ஆனால் அகங்காரம் எப்போதும் பணிவான மொழியாகவே வெளிப்படும். மிகப்பணிவான மனிதர்களிடம் ஆழ்ந்த அகங்காரம் குடிகொண்டிருக்கும் உண்மையில், பணிவு என்பது தற்காப்பு அகங்காரம் (டிஃபென்சிஸ் ஈகோ) ஆகும். வன்மை நிறைந்த அகங்காரம் என்பது கஷ்டத்தில் சிக்கிக்கொள்ள வாய்ப்புள்ளது. ஆனால் பணிவான அகங்காரம் முதலிலிருந்தே பாதுகாப்பானது (இன்ஷ்யூர்ட்). எனவே மிகப்பணிவாகப் பேசுபவர்களிடம் அவர்களது வாயை கவனிக்காமல் கண்களை கவனிப்பது நல்லது.[11]

**நுண்ணறிவும் நுண்ணறிவு சோதனைகளும்**

மகாமேதை (genius) அதாவது ஞானி எனப்படுகிறவர்களது நுண்ணறிவு ஈவு 135க்கு மேல் இருந்தால் அவர்களை மேதை என்றும் 140க்கு மேல் இருப்பவர்களை மாமேதை என்றும் உளவியலர் பலவகையில் மற்றோரையும் ஞானிகளையும் பட்டியலிட்டுள்ளனர்.[12] இது IQ போன்றதாகும்.

| | | |
|---|---|---|
| தத்துவ இயலறிஞர்கள் | சராசரி நு.ஈ | 170 |
| கவிஞர், கலைஞர், கட்டுரையாளர் | " | 160 |
| நாட்டுத் தலைவர்கள் | " | 160 |
| விஞ்ஞானிகள் | " | 155 |
| இசையாளர்கள் | " | 145 |
| ஓவியக்காரர் | " | 140 |
| போர்ப்படைத் தலைவர்கள் | " | 125 |

**நுண்ணறிவும் உளக்கோளாறும்**

நுண்ணறிவுக்கும் உளக்கோளாறுகளுக்கும் தொடர்பு உண்டு என்று கூறும் உளவியலாரும் உண்டு. பிறழ்வான உள்ளநிலை உடையவர்கள் பொதுவாக நுண்ணறிவு குறைந்தவர்களாகவே இருக்கிறார்கள் என்று கருதப்படுகிறது.[13]

**முடிவுரை**

இதுவரை பகவத் கீதை முதல் அத்தியாயத்தில் உள்ள சில உளவியல் செய்திகளைப்பற்றிப் பார்த்தோம். அனைத்து உளவியல் பிரச்சினைகளில் இருந்தும் நாம் விடுபட வேண்டுமானால் நாம் நம் மெய்ஞான அறிவையும் , ஆளுமைத்திறனையும், தன்னம்பிக்கையையும், கீதையில் கூறியது போன்ற பற்றற்ற செயல்களினால் ஏமாற்ற மற்ற வாழ்வைப் பெற்று பக்தியிலும், ஞானத்திலும் திளைத்து வாழ்தலே நம் பிரச்சினைகளுக்கான தலையாய தீர்வாகும். புத்தகங்கள் நல்ல நண்பன் என்பார்கள். எனவே படிக்கும் பழக்கத்தையும், இயற்கையை ரசிக்கும் தன்மையையும், இயற்கையை சீரழிக்காத பக்குவத்தையும் நாம் வளர்த்துக் கொண்டாலே பல மனநோய்களிலிருந்து விடுபட நல்ல வாய்ப்பாகும்.

**சான்றெண் விளக்கம்**

1. டாக்டர்.தா.ஏ.சண்முகம், உளவியல் (முதற் பாகம்), சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, ப.எண்கள் 23,24, 1960
2. சுகி.சிவம், எது தர்மம், கற்பகம் புத்தகாலயம், சென்னை, ப.எண் 15, 2016
3. மா.ராஜலஷ்மி, (இந்தியில் ஓஷோ), பகவத்கீதை ஒரு தரிசனம் (இரண்டாவது அத்தியாயம்), கண்ணதாசன் பதிப்பகம், சென்னை, ப.எண் 14, 2013
4. மேலது, ப.எண் 16
5. பி.சி.கணேசன், ஆழ்மன ஆற்றலை ஆக்கப்பூர்வமாகப் பயன்படுத்துவது எப்படி?, திருவரசு புத்தக நிலையம், சென்னை, ப.எண் 18, 2005

6. மா.ராஜலஷ்மி, (இந்தியில் ஓஷோ), பகவத்கீதை ஒரு தரிசனம் ((முதல் அத்தியாயம்), கண்ணதாசன் பதிப்பகம், சென்னை, ப.எண் 16, 2021

7. மேலது, ப.எண் 19

8. ஆர்.கே. கோவிந்தாச்சாரி, பகவத்கீதை, லியோ புக் பப்ளிஷர்ஸ், சென்னை, ப.எண் 33, 2018

9. மா.ராஜலஷ்மி, (இந்தியில் ஓஷோ), பகவத்கீதை ஒரு தரிசனம் ((முதல் அத்தியாயம்), கண்ணதாசன் பதிப்பகம், சென்னை, ப.எண் 22, 2021

10. எம். நாராயணவேலுப்பிள்ளை, திருக்குறள், நர்மதா பதிப்பகம், சென்னை, ப.எண் 92, 2012

11. மா.ராஜலஷ்மி, (இந்தியில் ஓஷோ), பகவத்கீதை ஒரு தரிசனம் (இரண்டாவது அத்தியாயம்), கண்ணதாசன் பதிப்பகம், சென்னை, ப.எண் 17, 2013

12. டாக்டர்.தா.ஏ.சண்முகம், உளவியல் ((முதற் பாகம்), சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, ப.எண் 114, 1960

13. மேலது, ப.எண் 115

ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

32

# உளவியல் நோக்கில் புலம்பெயர்ந்தோர் சிறுகதைகள்

**முனைவர் ஞா.பெஸ்கி, தமிழாய்வுத்துறைத்தலைவர்,**
**தமிழாய்வுத்துறை, தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி,**
**திருச்சிராப்பள்ளி**

**ஆய்வுச்சுருக்கம்**

சொந்தமண்ணை விட்டுத் துரத்தியடிக்கப்பட்டுப் பிற பகுதிகளைத் தஞ்சமாக அடைந்து வாழ்க்கையை மேற்கொண்டு வருகின்றவர்களால் படைக்கப்படுகின்ற இலக்கியங்களே புலம்பெயர்ந்தோர் இலக்கியம் எனப்படுகிறது. இஃது அரைநூற்றாண்டுக் காலத்திற்கும் மேலாக இலங்கையில் நிகழ்ந்து வந்த இனமோதலினால் புலம்பெயர்ந்துள்ள ஈழத்தமிழர்களின் படைப்பாகவே அறியப்படுகிறது. புகலிட இலக்கியமென்றும் ஆறாந்திணை இலக்கியம் என இஃது அறியப்படுவதும் உண்டு. கவிதை, சிறுகதை, புதினம், நாடகம் , பயண இலக்கியம், உரைநடை போன்ற பல வடிவங்களில் இஃது உருவாகி வருகின்றது. தன் வாழிடத்தைவிட்டுத் துரத்தியடிக்கப்பெற்ற நிலையில் பிறப்பிடம் குறித்த நினைவேக்கங்களும், புகலிடத்தின் முரண்பாட்டு வாழ்வியலும் புலம்பெயர்ந்தோரின் உளவியலோடு தொடர்புடையனவாய் அமைந்துள்ளன. எனவே பனுவல் வெளிப்படுத்தும் உளவியல், மனத்தின் வகைகள், உணர்ச்சியின் வகைகள், சொல்லாடல், ஒடிபஸ் மனவுணர்வு, சாவு குறித்த விழைவு உணர்ச்சி ஆகிய உளவியல் கூறுகளைப் புலம்பெயர்ந்தோர் சிறுகதைகளில் கண்டறிய இக்கட்டுரை முற்படுகிறது.

**கலைச்சொற்கள்**

நனவுமனம், நனவிலி மனம், கூட்டு நனவிலி மனம், இச்சை உணர்ச்சி, தன்னுணர்ச்சி, பண்பாட்டுணர்ச்சி, சொல்லாடல், ஒடிபஸ் மனவுணர்வு, எலக்ட்ரா மனவுணர்வு, சாவு குறித்த விழைவு உணர்ச்சி

**முன்னுரை**

வாசிப்பு என்பது இலக்கியப் பனுவலில் அமைப்புக்கும் அதனை நுகரும் வாசகனுக்கும் இடையே நிகழும் இருவழிச்செயல்பாடு ஆகும். எழுபதுகளின் இறுதியில் உருவாகத் தொடங்கிய வாசகர் மையத்திறனாய்வு படைப்பாளியின் மேலாண்மையைப் புறக்கணித்துப் புரட்சி படைத்தது. பனுவலின் வாசிப்பில் வாசகனைத் தனது பங்காளியாக்கிக் கொள்கிறது. சில நேரங்களில் வாசகனைப் படைப்பாளருக்குப் பதிலாக ஆற்றல் மிக்கதோர் ஆளுமையாக முன்வைக்கிறது. இத்தகைய வாசகனை மையமாகக் கொண்ட திறனாய்வுப்போக்குகளுள் ஒன்றாக உளவியல் அமைந்துள்ளது. இத்தகைய உளவியலின் கூறுகளைப் புகலிடச் சிறுகதைகளில் பொருத்தி ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**பனுவல் வெளிப்படுத்தும் உளவியல்**

*"இலக்கியம் நனவிலி மனதின் விசித்திரக்கற்பனைகளிலிருந்து பிறப்பதால் வாசிப்புச்செயற்பாங்கிலும் நனவிலி தாக்கம் பெறுகிறது. வாசகன் இலக்கியப் படைப்பைத் தனது நனவிலி மனதினுடைய தூண்டுதல்களின் அடிப்படையில்தான் வாசித்துப் புரிந்துகொள்கிறான். வாசிப்பின்போது வாசகனின் நனவிலிமனம், அந்நியமாகி நிற்கிறது. குற்றஉணர்வு, வெட்க மனப்பான்மை, தண்டனையின் அச்சம் இவற்றிலிருந்து முழுமையாக விடுதலை பெற்ற ஆனந்தத்தின் உறைவிடமாக விளங்குகிறது. Five readers reading என்ற ஆங்கிலப் புத்தகத்தில் நார்மன் ஹாலந்து ஐந்து வாசகர்களின் அனுபவங்களை விரிவாகப் பகுப்பாய்வு செய்கிறார்".* [கோபிசந்த் நாரங்க் (2005), ப.311]

ஐந்து வாசகர்களும் ஒரே இலக்கியப் பிரதிக்கு அவரவர் போக்கில் அர்த்தம் கொண்டதிலிருந்து அவர்களது இலக்கிய நோக்கில் பனுவலின் சிறப்புத்தன்மைகளை விட தத்தம் ஆளுமைதான் முனைப்பாக இருந்தது என்பதை நார்மன் எடுத்துக்காட்டினார். ஆகவே பனுவலின் புறவயத்தன்மை எத்தகையதாக இருந்தாலும் வாசிப்பு மற்றும் இலக்கியப் பார்வையின் செயற்பாங்கில் வாசகனின் அகவயமான அனுபவத்தையும் நனவிலியின் செயலாற்றலையும் புறக்கணிக்க இயலாது. ஏனெனில் உளவியல் சார்ந்த பொருண்மை மற்ற பொருண்மைகளையும் தனக்கேற்றபடி மாற்றவல்லது என்ற உண்மையை நார்மன் தெளிவுபடுத்தினார்.

*"நான் மற்றும் நான் அல்ல என்ற உணர்வு புலனறிவு சார்ந்த தீர்ப்புகளைத் தருகிறது. இது உலகைப் புரியவைக்கிறது. முதலில் ஒருவன் தனிநபர் (தனிப்பட்டவர்) அல்ல. அவனது சிந்தனைகள் என்பது அவனுடன் நிகழும் பேச்சு. அவன் அகம் பிற அகத்துடன் கொள்ளும் தொடர்பால் ஏற்படும் குறிகளின் தொகுப்பு தான் அவனைக் கட்டியமைக்கிறது. எல்லாச் சிந்தனைகளாலும் அவை எப்படிப்பட்டவையானாலும் குறிகளே. ஒரு தனிநபரின் தனிப்பட்ட தன்மை என்பது தனிப்பட்ட உணர்வுகளை அறிதல் மட்டுமல்ல. ஒரு குறிப்பிட்ட முறையில் செயல்படுதலும் ஆகும். அதாவது உள்முகச்செயல்பாடு ஆகும்"* [தமிழவன் (1992), ப.77]

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் உளப்பகுப்பாய்வுக் கோட்பாடுகளை உருவாக்கிய சிக்மண்ட் ஃபிராய்டு நனவுமனம், குறைநனவு மனம், நனவிலி மனம் ஆகிய மனத்தின் மூன்று வகைகளையும் , இச்சை உணர்வு, தன்னுணர்வு, பண்பாட்டுணர்வு ஆகிய உணர்வுகளின் மூன்று வகைகளையும் விளக்கியுள்ளார்.

**மனத்தின் வகைகள்**

*“நனவுமனம் என்பது உணர்வுசார்ந்தது. வெளிப்படையாகக் காணப்படுவது. ஆனால் தன்னிச்சையானது அல்ல. நனவிலிமனம், குறைநனவு மனம் ஆகியவற்றிற்குக் கட்டுப்பட்டது. நனவிலி மனம் என்பது உள்ளிருந்து நனவு மனத்தை இயக்கும் திறன் வாய்ந்தது. உள்ளத்தின் செயலுக்கும் ஆற்றலுக்கும் இது காரணமாக அமைந்தது.”* [தி.கு.இரவிச்சந்திரன் (2005), ப.561] நிறைவேறாத ஆசைகளின் பல்வேறு வடிவங்களுக்கு வடிகாலாக அமைவது இந்த நனவிலிமனமே ஆகும். நனவிலிமனத்திற்கு அடியே ஆழ்ந்துகிடப்பது அடிமனம் ஆகும். தனிமனித உளவியலைக் கட்டுப்படுத்துகிற இருண்மைப்பகுதியாக இது கருதப்படுகிறது. மனிதனின் நனவிலி மனத்திற்கு அப்பாலும் சில எண்ணப்பதிவுகள் உள்ளன என்பதன் அடிப்படையில் உருவானதே கூட்டுநனவிலிமனம் ஆகும். கூட்டுநனவிலி மனத்துள் காலங்காலமாகக் கடத்தப்பட்டு வருபவை மூலப்படிவங்கள் ஆகும். இதன் வழியே கடத்தப்பட்டு வரும் மூலப்படிவங்கள் மனிதனது கனவு, சமய வெளிப்பாடு, கலை, இலக்கியம், புனைகதைகள் போன்றவற்றில் குறியீட்டுத்தன்மையுடன் வெளிப்படுகிறது.

**உணர்ச்சியின் வகைகள்**

இச்சை உணர்ச்சி என்பது தன் தேவையை நினைத்த உடனே உடலின் துணையோடு நிறைவேற்றிக் கொள்ளத்துடிப்பதைக் குறிக்கும் உணர்ச்சியாகும். இந்த இட் என்பது இயற்கை உணர்ச்சி/ விலங்குணர்ச்சி/ இச்சை உணர்ச்சி எனப் பொருள்தரும் தன்மையது. இட் என்பது பாலுணர்வு சார்ந்தது என பிராய்டு கருதினார். இத்தகைய முழுவதும் பாலுணர்வு பொருந்திய சக்தியை லிபிடோ என அவர் குறிப்பிட்டார்.

மேற்கண்ட இச்சை உணர்ச்சியிலிருந்து தன்னுணர்ச்சி வளர்ச்சி பெற்றது. இச்சை உணர்ச்சியின் இயல்பை, வேகத்தைத் தடைப்படுத்தி மாற்றி அமைக்கும் உணர்ச்சியாகும். பண்பாட்டுணர்ச்சி அல்லது மிகைத்தன்னுணர்ச்சி என்பது சமுதாயத்தின் சட்டதிட்டங்களையும் அறநெறிகளையும் குறிக்கும்.

இச்சை உணர்ச்சி தன் தேவையை நிறைவேற்றிக் கொள்ளத் துடிக்கும் வேளையில் தன்னுணர்ச்சி, புறஉலகத்தின் ஏற்பின்மையை எடுத்துக்காட்டி அழுத்துகிறது. அவ்வாறு இல்லாமல் அழுத்தப்பட்ட இச்சை உணர்ச்சி நனவு மனத்தால்/ அறிவுஉணர்ச்சியால் இச்சையற்ற உணர்வுகளாக மாற்றி வெளிப்படுத்தப்படும்போது அழுத்தம் குறைகிறது.

புகலிடச்சிறுகதைகளில் பெரும்பாலும் ஈழம் குறித்த நினைவேக்கங்கள் பதிவுசெய்யப்பெற்றுள்ளன. ஏதிலியர்களாகத் தம் மண்ணை விட்டுத் துரத்தியடிக்கப்பெற்ற நிலையில்

நிறைவேறாத ஆசைகள் அவர்களின் நனவிலிமனத்தில் உறைந்துகிடக்கின்றன. தனிஈழம் என்பது மட்டுமல்லாமல் அமைதியான இணக்கமான வாழ்க்கை என்னும் ஆசையே பெரும்பாலான புகலிடச்சிறுகதைகளின் பனுவலிடையே ஊடுருவிக்கிடக்கிறது. ஆஸ்திரேலியா, நார்வே, கனடா, பிரான்ஸ், இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற பல நாடுகளிலிருந்து தனிமனித நனவிலி மனத்தின் எண்ணப்பதிவுகளாகப் புகலிடச்சிறுகதைகள் முகிழ்த்தபோதிலும் அவற்றினிடையே பொதுமையாக அமைந்த எண்ணப்பதிவுகளால் கூட்டுநனவிலிமனத்தினை உணரமுடிகிறது.

கிரிதரன் அமெரிக்கா சிறுகதையில் போரின் வன்முறையை, "*வெள்ளவத்தை பகுதியிலிருந்து வீடுகளிலிருந்து அடித்து விரட்டப்பட்ட தமிழர்கள், குடும்பம் குடும்பமாக தெகிவளைப் பக்கமாக ரெயில்வே தண்டவாளம் வழியாக ஓடுவது தெரிந்தது*" (வ.ந.கிரிதரன், அமெரிக்கா, ப.56) என்று பின்னோக்குநிலையில் குறிப்பிடப் பெற்றுள்ளது. புலிகள் இயக்கத்தைச் சார்ந்த சந்திரனின் தந்தை சின்னக்கண்ணுவைப் பிடித்து சித்திரவதை செய்ததை 'சூக்குமம்' கதையில் ஆசி.கந்தராசா குறிப்பிட்டுள்ளார். கருணாகரமூர்த்தியின் சுண்டெலி கதையில் "*எங்கள் தீவு தீப்பற்றிக் கொண்டுவிட்டது. இன்றைக்கு மூன்று இலட்சம் மக்கள் தங்கள் குழந்தைகளுடன் கூரைகளை இழந்து காட்டிலும் மரத்தின் கீழும் நிற்கிறார்கள் ஐயனே*" (பொ.கருணாகரமூர்த்தி, அவர்களுக்கென்று ஒரு குடில், ப.71) என்று பனுவல் வெளிப்படுகிறது. இவ்வாறு போரின் கொடுமையும் அதனால் விளைந்த புலம்பெயர்வும் அடிமனத்தில் பதிந்துகிடப்பதோடு அவை நனவிலி மனத்தின் வாயிலாக வெளிப்படுவதை வாசகன் உணரமுடியும். எனினும் பனுவலில் வெளிப்படும் போராளி இயக்கத்திற்கான ஆதரவில் இருவேறு நிலைப்பாடு என்பதற்கும் நனவிலி மனத்திற்கு அப்பால் உள்ள எண்ணப்பதிவுகளே காரணமாக அமைகிறது.

இச்சை உணர்ச்சியானது மேலும் மேலும் அடக்கப்படும்பொழுது அது நாளடைவில் மனஇறுக்கத்தைத் தோற்றுவித்துவிடுகிறது. மனஇறுக்கத்திலிருந்து விடுபட மனமானது துடித்துக்கொண்டிருக்கும் நிலையில் அது மனமாற்றத்தைத் தேடிக்கொண்டிருக்கும். புலம்பெயர்ந்து செல்லும் சூழலில் இச்சைஉணர்ச்சிக்கும் தன்னுணர்ச்சிக்கும் இடையேயான போராட்டமாக அது வெளிப்படுகிறது.

இலங்கையில் வாழ்ந்த காலத்தில் தமிழ்ப்பண்பாடு என்னும் பெயரில் ஒடுக்கப்பட்ட பாலுணர்ச்சியானது மேலைநாடுகளில் புறச்சூழலினால் தூண்டப்படும்போது தடையற்றதாக வெளிப்படுகிறது. இப்பின்னணியில் பல சிறுகதைகள் புகலிடத்தின் பாலியல் சிக்கல்களை எடுத்துரைப்பதாக அமைகிறது. எஸ்.பொ.வின் வீ, அவா, மறு, வேலி, ஆண்மைத்தொகுப்பில் இடம்பெறும் சிலகதைகள் ஆகியவற்றில் பாலியல் சிக்கல்கள் முதன்மையானதாகப் பதிவுசெய்யப்பெற்றுள்ளன. எனினும் வாழ்வது மேற்கத்திய நாடுகள் எனினும் பிறந்தது ஈழம் என்னும் எண்ணப்பதிவினால்

பண்பாட்டுக்கு எதிரான பாலியல் முரண்களை ஏற்றுக்கொள்ளமுடியாத நிலையையும் அறியமுடிகிறது. சான்று. சுமதிரூபனின் பவர்கட்.

சிறீசுவின் சிறுகதையில் மனதில் எழும் இச்சைஉணர்ச்சியை அடையாளம் கண்டு உணரமுடிகிறது. 'படுப்பது பற்றிய கதை'யில் லௌறா பற்றிய ஆசையானது பின்வருமாறு வெளிப்படுத்தப்படுகிறது. "*மார்பகங்கள் துருத்திப்பதற்குக் கீழே நாலங்குலக் கணக்கில் பளு. (இடுப்போரத்துக்கு மேல் மார்போரத்துக்குக் கீழ்.) கொள்ளையான, வெளுப்புச்சொள்ளையான சள்ளை மாமிசம் அவளுக்குப் பளுவில் பழு தந்து எனக்குச் சுதி தந்ததுண்மை. ஸ்பரிசித்துப் பரீட்சித்திருக்கிறேன்*" (அளவெட்டி சிறீசுக்கந்தராசா, சிறீசுவின் சிறுகதைகள், பக்.110) என்று இச்சை உணர்ச்சியின் வெளிப்பாட்டை இப்பனுவலில் கண்டறியமுடிகிறது.

தன்னுணர்ச்சியின் வெளிப்பாட்டைப் பனுவல் வெளிப்படுத்துகிறது என்பதைச் சக்கரவர்த்தியின் 'முதிர்கன்னி' சிறுகதை எடுத்துக்காட்டுகிறது. பயணமுகவனாகிய குலசிங்கம் முதிர்கன்னியாகிய அமுதா - வேறொருவருக்குத் திருமணம் செய்ய நிச்சயிக்கப்பட்டிருக்கும் நிலையில் பயணத்தின்போது இடைவெளியில் தங்கநேரிடும் சூழலில் உடலுறவு கொள்கிறான். எதிர்ப்பு தெரிவித்தால் தனது பயணம் தடைப்படும் என்ற அச்சத்தின் காரணத்தினால் அதற்கு உடன்படும் நிலையும் இங்கு இச்சை உணர்ச்சியே. ஆனால் அவளையே திருமணம் செய்யவிரும்பும் அவனின் விருப்பத்தை அவள், "*விருப்பம் இல்லா மாதிரி இருந்தாலும் நானும் சம்மதிச்சித்தான் நடந்த விசயம். தேவை எண்டால் இன்னும் நாலுநாள் சம்மதிக்கிறேன். கல்யாணம் கத்தரிக்காய் என்ற பேச்செல்லாம் வேணாம்*" (சக்கரவர்த்தி, யுத்தத்தின் இரண்டாம் பாகம், ப. 128) என்று மறுக்கும் நிலையில் அவளது தன்னுணர்ச்சி வெளிப்படுகிறது.

**நனவு மன உருவாக்கம்**

பொருண்மை உருவாக்கம் நான் என்ற உணர்வின் உருவாக்கத்தோடு சம்பந்தப்பட்டது. நான் என்ற உணர்வு எவ்வாறு உருவாகிறது என்பதை லக்கான் ஆய்வு செய்தார்.

*"மனிதனுக்கு நான் என்ற உணர்வு மிக முக்கியமாக இரண்டு கட்டங்களில் உருவாகிறது. ஒன்று 6-18 மாதக் குழந்தையாக இருக்கும்போது, இந்தப் பருவத்தில் தன்னில் முழுமையற்ற, ஓர்மையற்ற குழந்தை தனது உருவத்தைக் கண்ணாடியில் பார்க்கிறது. கண்ணாடியில் தெரியும் பிம்பத்திலிருந்து தனக்கு முழுமை உள்ளது என்ற உணர்வைப் பெறுகிறது. தனது முழுமை என்ற உணர்வு தன்னிறைவு என்ற உணர்வுமாகும். சுயதிருப்தி, தன்மீது தானே கொள்ளும் காதல், நான், தான் , எனது, சுயமையம் ஆகியவை உருவாகின்றன".* [ந. முத்துமோகன் (1998), ப.80]

இரண்டாவதாக, தந்தையின் தலையீட்டால் தான் தன் தாயிடமிருந்து விலக்கப்படுவதாக குழந்தை உணர்கிறது. இது குழந்தைப்பருவத்தில் தனக்கு நானுக்கு ஏற்படும் இழப்பு, அச்சுறுத்தல், துன்பம். இங்கு மீண்டும் நான் இறுகுகிறது. நிரந்தரமாக எனது என்னுடையவை குறித்த ஏக்கங்கள் நிலைப்பட்டுவிடுகின்றன. இது எதிர்மறை நான்.

இந்த நான் என்ற மையமும் என்னுடையவை குறித்த ஏக்கங்களும் பொருண்மை உருவாக்கமும் உண்மையில் கற்பனையானவை. உண்மையில் மனிதனுக்கும் உலகுக்கும் மனித உலக உறவுகளுக்கும் மையம் கிடையாது. மையமில்லாத நிலையே நமது சொந்தநிலை. இந்த நிலையை வெளிப்படுத்துபவை தாம் கனவுகளும், குழந்தை விளையாட்டுகளும், வேடிக்கைச்சிரிப்புகளும், நகைச்சுவையும், பிளவுண்ட மனமும் இவற்றைக் குறித்து நிற்கும் இலக்கியங்கள் தாம் மனிதனின் உண்மை இருப்பைத் தேடுபவை. இத்தகைய தன்மையில் அமைந்த சிறுகதைக்குச் சான்றாக, கிறியர்ஸனின் 'கிளித்தட்டு' சிறுகதையைக் குறிப்பிடலாம்.

நாள்தோறும் சிறுவர்கள் கிளித்தட்டு விளையாடிக்கொண்டிருந்தனர். அவர்களில் சைலாவும் பாலனும் மிக அன்பாக இருந்தனர். அமைதிஒப்பந்தம் முறிவடைந்த நேரத்திலும் அவர்கள் விளையாட்டு தொடர்கின்றது. ராணுவத்தினரின் தாக்குதலில் பாலன் ஊனமடைந்தான். எனினும் சைலா "*இப்ப என்ன கிளித்தட்டுத் தானே விளையாடமுடியாது? வாயேன் பதுங்குக்குழிக்குள்ளிருந்து பல்லாங்குழி விளையாடுவோம்*" (மா.கி.கிறிஸ்ரியன், புலமும் புறமும், ப. 155) என்று கூறுவதாக அமைந்துள்ள பனுவல் மனிதர்களின் உண்மை இருப்பைப் புலப்படுத்துவதாக அமைந்துள்ளது.

**சொல்லாடல்**

முத்துலிங்கத்தின் 'கம்ப்யுட்டர்' சிறுகதையில் தூண்டில் வாங்கச்சென்ற கடையில் பெண் கேள்விகளால் குடைந்ததால் கோபத்தை *"மரியாதை கருதி சிறுநீர் பெய்துகொண்டு பிடிப்பதற்கா? என்பதைக் கேட்கவில்லை என்று நினைக்கிறேன்"* (அ.முத்துலிங்கம், அ.முத்துலிங்கம் கதைகள், ப. 412) என்று பனுவலின் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளார். இது கோபமாக இருப்பினும் புகலிடத்தில் அமைந்துள்ள கடையில் தூண்டிலின் வகையறிந்து வாங்கத் தெரியாத அறியாமையின், இயலாமையின் வெளிப்பாடு என்பதை பனுவல் உணர்த்திவிடுகிறது.

**ஒடிபஸ் மனவுணர்வு**

பிராய்டின் கருத்தை, "*ஒவ்வொரு ஆண்மகன் மனத்திலும் பாலபருவத்தில் தாய் மீதான பாலுணர்வு இச்சை இருப்பதாகவும் அதன் காரணமாகத் தந்தை மீதான பொல்லாப்பு - கொலையுணர்வு- அவனிடம்*

*படிந்து கிடப்பதாகவும் அவர் விளக்கம் தருகிறார். இந்த மனவுணர்வுக் கோளமே குறிப்பிடும் மனவுணர்வே ஒடிபஸ் மனவுணர்வு ஆகும்"* [தி.சு. நடராசன் ( 2003), ப. 98] என்று தி.சு. நடராசன் முன்மொழிகிறார்.

ஆசி. கந்தராசாவின் 'அம்மா பையன்' சிறுகதையில் கணினி வித்தகரான பெங்லீ தன்தாயாகிய கிம்மின் மீது கொண்ட அன்பையும், தன்தாயை அவளது கல்லூரிப்பருவத்தில் கர்ப்பமாக்கிவிட்டுப் பிரிந்துசென்ற தந்தையாகிய சந்திரசேகரத்தின் மீது காட்டும் கோபத்தையும் ஒடிபஸ் மனவுணர்வுக்குச் சான்றாகக் கூறலாம்.

முத்துலிங்கத்தின் 'பூமத்தியரேகை' சிறுகதையில் மூன்று பெண்களை மனைவியாக்கிக் கொண்ட தந்தையின் மீதான வெறுப்பு மகனின், *"கட்டைவிரல் அடையாளம் வைக்கவும் தொண்டைக்குள் கையை விட்டு ஓங்களிக்கவும் என்னை அடிக்கவும் தான் வரும். உங்களுக்கு ஒரு பெயர் இருக்கு. அதை எழுதவருமா? கடைசிவரைக்கும் வராது'* (அ.முத்துலிங்கம், அ.முத்துலிங்கம் கதைகள், ப. 747) என்னும் வார்த்தைகள் வாயிலாக வெளிப்படுகிறது. தந்தையின் ஆதிக்க மேலாண்மைக்கு எதிரான குரலாகவும், அவருக்கு எதிரான தனது திறமையை வெளிப்படுத்தும் மேலாண்மையின் அடையாளமாகவும் இது அமைந்துள்ளது.

சுமதி ரூபனின் 'அம்மா இது உன் உலகம்' சிறுகதை இதற்கு எதிர்மாறானதாக அமைந்துள்ளது. ஒவ்வொரு பெண் மனதிலும் தந்தை மீதான- சகோதரர் மீதான ஈர்ப்பு காணப்படுவதாக பிராய்டு கருதுகிறார். இவ்வுணர்வு எலக்ட்ரா மனவுணர்வு என அழைக்கப்படுகின்றது. இறக்கின்ற வரையிலும் தந்தையோடு அன்பாக இருந்த ஆர்த்தி அம்மாவின் உணர்வுகளை மதிக்கத் தவறியிருந்தாள். தந்தையின் மறைவுக்குப்பின் அவள் தாயின் அன்பை உணருவதாக இச்சிறுகதை அமைந்துள்ளது. எனினும் தந்தையின் அன்பை அக்கட்டத்திலும், *"அம்மா, அப்பாமேல நான் வைச்சிருக்கிற பாசம் , மரியாதை, பக்தி, இது ஒண்டும் உங்களோட நான் இப்ப கதைக்கிறதால குறைஞ்சிடாது....உங்களைப் பற்றி நான் புரிஞ்சு கொள்ள ஆசைப்படுறன்... அதுதான் கேட்டன்"* (சுமதிரூபன், யாதுமாகி நின்றாள், ப.9) என்று விட்டுக்கொடுக்க இயலாத மனவுணர்வை இப்பனுவல் உணர்த்துகிறது. ஒடிபஸ் மனவுணர்வாகவே எலக்ட்ரா மனவுணர்வும் பிற்காலத்தில் பொருள் கொள்ளப்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

**சாவு குறித்த விழைவு உணர்ச்சி**

மனிதனின் பிறவியோடு வருகின்ற உணர்வுகளில் இதுவும் ஒன்று. இந்தச் சாவு விழைவு உணர்ச்சி அழிவாக்க நோக்கமுடையது. இது சார்ந்தவரையோ பிறரையோ அழிக்கும் முனைப்புடையது. அவல முடிவு கொண்டு வெளிப்பட்டுள்ள படைப்பாக்கங்களெல்லாம் இந்தச் சாவு விழைவு உணர்ச்சியின் வெளிப்பாடே.

இலங்கையில் செல்வாக்கோடு வாழ்ந்து மகனை நம்பி சிட்னிவந்து மூத்திரப்பை நோயால் அவதிப்பட்டார் சின்னத்துரை வாத்தியார். பின்னர் முதியோர் இல்லத்தில் சேர்க்கப்பட்டு இறந்துபோன துயரச்சம்பவத்தின் வருணனையைக் கொண்டு 'பாவனை பேசலன்றி' சிறுகதை அமைந்துள்ளது. இது சாவு விழைவுஉணர்ச்சியின் வெளிப்பாடாகும். குமார் மூர்த்தியின் 'வேஷம்' சிறுகதையில் நவநீதனின் வேலை கிடைக்காத மனவுணர்வால் செத்துப்போகலாமோ என நினைப்பதும் இவ்வுணர்ச்சி வயப்பட்டதே ஆகும்.

குறமகளின் 'அவள் கொடுத்த விலை' சிறுகதையில் தன் மனைவியைத் தன்குழந்தைக்கும், தனக்கும் எதிரே பாலியல்வன்புணர்ச்சிக்கு உள்ளாக்கிய கொடுமையால் குழந்தையைக் கூட கொல்லத்துணியும் நிலையையும் இத்தகுஉணர்ச்சிக்குச் சான்றாகச் சுட்டலாம். இவ்வாறு பல சிறுகதைகளில் சாவுவிழைவு உணர்ச்சியானது பதிவுசெய்யப்பெற்றுள்ளது.

**தொகுப்புரை**

புலம்பெயர்ந்தோர் சிறுகதைகளில் வாழ்க்கை குறித்த அச்சம், எதிர்காலம் குறித்த கனவுகள், தொலைந்துபோன கடந்தகாலம், காட்சிப்பதிவுகள் ஆகியன பனுவலின்வழி வெளிப்படும் உளவியல் கூறுகளாக அமைந்துள்ளன. இச்சைஉணர்ச்சி, தன்னுணர்ச்சி, மிகைத்தன்னுணர்ச்சி ஆகிய உணர்ச்சிகளை வெளிப்படுத்துவனவாகவும் ஒடிபஸ் மனவுணர்வு, எலக்ட்ரா மனவுணர்வு ஆகியவற்றை வெளிப்படுத்துவனவாகவும் இக்கதைகள் அமைந்துள்ளன. சாவு குறித்த விழைவு உணர்ச்சியானது பிறப்பிடம், புகலிடம் ஆகிய இருவேறு தளங்களில் அமைந்த வாழ்க்கையின் முரண்பாட்டால் உருவானதையும் இக்கதைகள் புலப்படுத்துகின்றன. இவ்வாறு புலம்பெயர்ந்தோர் என்னும் விளிம்புநிலையினரின் உள்ளப்பதிவை வெளிக்காட்டும் படைப்புகளாக இச்சிறுகதைகள் அமைந்துள்ளன.

**துணைநூற்பட்டியல்**

1. இரவிச்சந்திரன் தி.கு., சிக்மண்ட் ஃபிராய்ட், அலைகள் வெளியீட்டகம், சென்னை, முதற்பதிப்பு, 2005,
2. கோபிசந்த் நாரங்க், பாலசுப்பிரமணியம் எச்.(மொ. பெ.), அமைப்புமையவாதம் பின்அமைப்பியல் மற்றும் கீழைக்காவியஇயல், சாகித்திய அகாதெமி, புதுதில்லி, முதற்பதிப்பு, 2005.
3. தமிழவன், தமிழும் குறியியலும், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, முதற்பதிப்பு, 1992
4. நடராசன் தி.சு. , திறனாய்வுக்கலை, நியு செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, திருந்திய இரண்டாம் பதிப்பு, 2003
5. முத்துமோகன் ந., அமைப்பியல் பின்அமைப்பியல், காவ்யா வெளியீடு, பெங்களூர், முதற்பதிப்பு, 1998

ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# நேசத்துணை நாவலில் உளவியல் சிந்தனை

33

முனைவர் வ.மாலிக், தமிழ்த்துறைப்பேராசிரியர்,
சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி, ரஹ்மத்நகர்,
திருநெல்வேலி.

**ஆய்வுச்சுருக்கம்**

சமூகத்தில் அனைத்து வகையான மனிதர்களும் புனைகதைகளான நாவல்களிலும் சிறுகதையிலும் இடம் பிடித்தனர். தொடக்கத்தில் வர்க்கம், பால், ஜாதி, மதம் போன்ற பிரிவுகளை முன் வைக்காமல் பொதுநிலைப்பட்ட கதைகள் எழுதப்பட்டன. ஆனால் காலப்பொக்கில் இவைகளுக்குள் இருக்கக்கூடிய வேறுபாடுகள் முன் வைத்து எழுதப்பட்டன. ஆண்-பெண் வேறுபாடுகள் உணரப்பட்ட நிலையில் பெண் எழுத்தாளர்கள் பெண்ணின் உளவியல் சிந்தனையை மையப்படுத்தி எழுதினர். அவர்களும் திலகவதி முக்கியமானவர். அவருடைய "நேசத்துணை" நாவலை இக்கட்டுரைக்கு ஆராய்வது நோக்கமாகும். இக்கட்டுரைக்கு ஆராய்வது நோக்கமாகும்.

**திறவு சொற்கள்:** திலகவதி, பெண் உளவியல், குடும்ப உளவியல்

## முன்னுரை

உளவியல் என்பது மனித சிந்தனை, நடத்தை வளர்ச்சி, ஆளுமை, உணர்ச்சி, உந்துதல் மற்றும் பலவற்றை உள்ளடக்கிய ஒரு பரந்த துறையாகும், இந்த துறையை தற்கால நாவலாசிரியர்கள் தங்களுடைய நாவல்களின் படைப்பு கூறுகளில் கூற தவறுவது இல்லை, இந்தவகையில் நாவலாசிரியர் திலகவதி தன்னுடைய நெசத்துணை நாவலில் ஒரு அழகான குடும்ப உளவியல் சிந்தனையை முன்னெடுத்துள்ளார். அதை விளக்குவதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

## உளவியல் விளக்கம்

உளவியல் என்பது மனதின் செயல்பாடுகள் மற்றும் நடத்தைகளை அறிவியல் முறையில் ஆய்வு செய்வதாகும். உளவியலின் அடிப்படை ஆய்வு என்பது உள்ளுணர்வு அறியும் ஆற்றல், கவனம், மன உணர்வு அல்லது உணர்ச்சி வேகம் இயல்பு ஊக்கம் மூளை செயல்பாடுகள் ஆளுமை நடத்தை மற்றும் உள்ளார்ந்த தொடர்புகள் ஆகியவற்றை கொண்டதாகும்.

## உளவியலின் வகைகள்

1. வளர்ச்சி உளவியல்
2. தடயவியல் உளவியல்

3. தொழில்துறை நிறுவன உளவியல்

4. ஆளுமை உளவியல்

5. சமூக உளவியல்

6. குடும்ப உளவியல்

இந்த ஆறு வகைகளும் நேசத்துணை நாவலுக்கு பொருத்தமாக உள்ளது. இதனை பின்வருமாறு காணலாம்.

**வளர்ச்சி உளவியல்**

அறிவாற்றல் திறன்கள் அறநெறி சமூகசெயல்பாடு, அடையாளம் மற்றும் பிற வாழ்க்கைப் பகுதிக்கு உள்ளிட்ட ஆயுட்காலம் முழுவதும் மனித வளர்ச்சியையும், பொருளாதார வளர்ச்சியையும் பார்க்கும் ஒரு பகுதியாகும்.

“நேசத்துணை நாவலில் வரும் நளினி-வடிவேலு இருவரும் காதல் திருமணம் செய்து கொண்டு குடும்ப அழகியலை சிறப்புடன் கொண்டு செல்லும் ஒரு அழகான தம்பதியினர். நளினி கணவனுடன் சேர்ந்து சுயமாக தொழில் தொடங்குகிறான். தொழில் வளர்ச்சியை வீட்டில் இருந்து கவனித்துக் கொள்கிறாள். “சென்னையிலிருந்து ஆற்காடு வரை பரந்திருந்த அவனுடைய தொழில் பரப்பை நுங்கபாக்கத்தின் சிறிய வீட்டிற்குள் இருந்தபடி நளினி இயக்கினாள்” (ப.95). நடந்த வியாபாரத்தின் கணக்கு வழக்குகளை சரிபார்த்தாள் அதை விரிவுபடுத்தவும் செய்கிறாள். எதையும் முறையாக நோட்டு போட்டு எழுதி வைப்பாள். “ஒரு நோட்டுப் புத்தகம் நடப்புக் கணக்குக்கா மற்றது எதிர்கால வியாபார வளர்ச்சிக்கான திட்டங்களைச் செய்வதற்காக” (ப.108). இவ்வாறாக நளினி தன்னுடைய குடும்ப வளர்ச்சிக்கும் கணவனின் வளர்ச்சிக்கும் உறுதுணையுடனும் “வளர்ச்சி உளவியல்” என்ற வகைமையுடனும் செயல்படுகிறாள்.

**தடயவியல் உளவியல்**

சட்ட மற்றும் குற்றவியல் நீதி அமைப்பில் உளவியல் ஆராய்ச்சி மற்றும் கொள்கைகளைப் பயன்படுத்துவதால் கவனம் செலுத்துவது தடயவியல் உளவியலாகும். இந்த முறையை நேசத்துணை நாவலில் நாம் காணலாம். இந்த நாவலில் சுயதொழில் புரியும் நளினியை அங்கு தொழிலாளியாக பணிபுரியும் கேசவன் மணல் இறங்குவதில் ஏமாற்றுகிறான். ஒவ்வொரு யூனிட் மணலிலும் அரை யூனிட் மணலை குறைந்தே கொண்டு வந்து சேர்கிறான். இதனை கண்டறிந்த நளினி வடிவேலுவிடம் தெரிவிக்கிறாள். கேசவனை கூப்பிட்டு வடிவேலு விசாரிக்கும் போது கேசவன் தன் தவற்றை ஒப்புக்

கொள்கிறான். “வடிவேலுகிட்ட மணல் லோடு எடுத்தா யூனிட்லே மணல் அளவு கொறையுதுன்னு தானே சொல்வாரு கடைசியில் இவங்க பேர்தான் கெடும்” (ப.97) என நளினி கூறுகிறாள். கேசவனை வேலையை விட்டு நிற்கச் சொல்லுகிறாள். தொழிலாளிகளை நம்பி ஒப்படைக்கும் பணிகளை தொழிலாளி திறம்பட செய்யவில்லை என்றாள். நளினி போன்ற சுயதொழில் செய்பவர்களுக்கு நம்பிக்கை துரோகம் செய்யும் வேலையாளியை அடையாளம் கண்டு அந்த துரோகத்தை ஆதாரத்துடன் நிருபிக்கும் நளினி போன்ற பெண்களுக்கு குற்றம் செய்ய கூடியவர்களை இனம் காண முடிகிறது என்பதை இந்த வகை உளவியல் மூலம் பதிவு செய்யலாம்.

**தொழில்துறை நிறுவன உளவியல்**

பணி செயல்திறனை மேம்படுத்தவும் பணியாளர்களைத் தேர்ந்தெடுக்கவும் இந்த உளவியல் ஆராய்ச்சியைப் பயன்படுத்தலாம். இந்த வகை உளவியல் நிலைபாட்டை நளினி இந்த நாவலில் கையாண்டுள்ளன. நளினிக்கு உறுதுணையாக வரும் மங்களம் நளினியின் வீட்டு வேலையை பார்ப்பதுடன் குழந்தை கார்த்திக்கையும் கவனித்துக் கொள்கிறாள். இதனை நளினியே மங்களத்திடம் கூறுவாள் “வீட்டையும், குழந்தையையும் பார்த்துக்க நீ இருக்கிறதாலதான் எனக்கு அவருக்கு ஒத்தாசையா வியாபார சம்பந்தமாக ஏதாவது செய்யவோ கொள்ளவோ முடியுது” என்பாள் (ப.103) தன்னுடைய பணி சிறக்க மங்களம் போன்ற பெண்ணை தன் உதவிக்கு வைத்துக் கொள். அந்த சிந்தனையே தொழில் துறை நிறுவன உளவியலோடு பொருந்துகிறது. பணி என்ற பொதுவான செயல் சிறயதோ பெரியதோ ஆனால் அதை மேம்படுத்துவதற்கு பொருத்தமான பணியாளரை தேர்வு செய்ய வேண்டும் என்ற நளினியின் உளவியல் சிந்தை இதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஆளுமை உளவியல்**

ஆளுமை எவ்வாறு உருவாகிறது என்பதையும் ஒவ்வொரு நபரையும் தனித்துவமாக்கும் எண்ணங்கள், நடத்தைகள் மற்றும் குணாதிசயங்களின் வடிவங்களையும் புரிந்து கொள்வதில் கவனம் செலுத்தும் செலுத்துகிறது ஆளுமை உளவியலாகும்.

நேசத்துணை நாவலில் தலைமை மாந்தரான நளினியின் குடும்பமும் வடிவேலுவின் குடும்பமும் உள்ளது. இதில் நளினியும் - வடிவேலு காதல் திருமணம் புரிகிறார்கள். திருமணம் ஆன ஒரு வருடத்தில் நளினிக்கு கார்த்திக் என்ற ஆண்குழந்தை பிறக்கிறது. எதிர்பாராதவிதமாக நளினி விபத்தில் இறந்து விடுகிறாள். ஒருவருடம் கழித்து வடிவேலு மறுமணம் செய்கிறான் கஸ்தூரி என்ற பெண்ணை மற்றவர்களின் கட்டாயத்தில் திருமணம் செய்கிறான். நீண்ட மாமதமாக அவளிடம் பேசாமல் இருக்கும் வடிவேல் கஸ்தூரியின் குணநலன்களை பார்த்து இறுதியில் மனைவியாக ஏற்றுக் கொள்கிறான்.

நளினியின் அம்மாவும் அப்பாவும் வடிவேலுவை திருமணம் செய்ய நளினிக்கு ஒப்புதல் தரமறுக்கின்றனர். வடிவேலு அவர்கள் பெற்றோரிடம் பேசியும் திருமணத்திற்கு ஒப்புக்கொள்ள மறுக்கிறார்கள். இதனால் நளினி பெற்றோரை எதிர்த்து திருமணம் செய்கிறாள். "நளினியின் வீட்டில் இருந்து அவளுடைய அம்மாவும் தம்பியும் மட்டும் வந்திருந்தார்கள்" (ப.85) கடைசிவரை அவள் அம்மா அழுது கொண்டிருந்தாள்.

நளினியின் கணவன் வடிவேலு நளினியை முனைவர் பட்ட ஆராய்ச்சி படிப்பு படிக்க வைக்கிறான் படித்துக் கொண்ட நளினி அவனுடைய தொழிலை பார்த்துக் கொள்கிறாள். மனைவியை, மதிப்பு மரியாதையுடன் சந்தோஷமாக வைத்திருக்கும் பாத்திரமாக வடிவேலு படைக்கப்பட்டுள்ளான். "வடிவவேலு அவள் மீது காட்டும் அன்பும் நேசமும் உலகத்தைச் சொர்க்கமாக்குகிறர்" (ப.90) என்ற எடுத்துரைப்பின் மூலம் கணவன், மனைவி இருவரின் குடும்ப ஆளுமையையும், பொருளாதார ஆளுமையையும் நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது.

நளினி இறந்த பின்பு அவள் நினைவிலே வாழ்கிறான் வடிவேலு நீண்ட நாட்களுக்கு பின் கல்லூரி என்ற பெண்ணை திருமணம் செய்கிறாள். மகன் கார்த்திக்காக அவளுடன் இணைய வடிவேலுவின் மனம் மறுக்கிறது. கஸ்தூரியின் குணநலன்களை பார்த்த வடிவேலு நாளடைவில் மனம் மாறுகினான். கஸ்தூரியின் இந்த நல்ல குணம் அவனை மாற்றுகிறது.

நளினி-வடிவேலு-கஸ்தூரி இந்த மூன்று பாத்திரங்களும் தங்களுடைய குணத்தாலும், செயலாலும், குடும்ப நிம்மதியை முன்னிறுத்தி தங்களுக்குள் இருக்கக்கூடிய ஆளுமை உணர்வை அதிகாரம் இல்லாமல் அன்பு கொண்டு ஒவ்வொருவரும் ஒவ்வொருவரை வெற்றி காண முயல்கிறார்கள் என்ற குணாதிசயமே இந்த ஆளுமை உளவியலுக்கு நல்ல எடுத்துக்காட்டாகும்.

**சமூக உளவியல்**

குழுநடத்தை, தனிப்பட்ட நடத்தை மீதான சமூக தாக்கங்கள் அணுகுமுறைகள் தப்பெண்ணம், இணக்கம் ஆக்கிரமிப்பு மற்றும் தொடர்புடைய தலைப்புகளில் கவனம் செலுத்துவது அல்லது எண்ணங்கள் உணர்வுகள் மற்றுட் நடத்தை ஆகிய உளவியல் மாறுபாடுகளை குறிப்பது ஆகும்.

இந்த வகையில் நேசத்துணை நாவலில் வரும் தலைமை கதாபாத்திரம் நளினி தனது முனைவர் பட்ட ஆராய்ச்சி பற்றி கணவனிடம் கூறும் போது, கட்டட தொழிலாளியான சித்தாள்களின் பிரச்சனையை ஆய்வின் நோக்கமாக கொண்டு அவர்களின் பணிக்குள் இருக்கும் சிக்கல்களையும் தீர்வுகளை தீர ஆய்வு செய்தல் வேண்டும் என்கிறாள். இத்தகைய அக்கறை சமூக காரணிகளை வலியுறுத்துவதாக உள்ளது.

மேலும் இதில் தன்னுடைய முனைவர் பட்டம் வெறும் பட்டமாக இல்லாமல் ஒரு சமூக பிரச்சனையின் தீர்வாக வேண்டும் என்ற நளினியின் மனநிலையே இந்த சமூக உளவியலுக்கு எடுத்துக்காட்டாக உள்ளது.

**குடும்ப உளவியல்**

மேற்கூறிய ஐந்து வகையான உளவியலை உள்ளடக்கியதாக இந்த நாவல் இருந்தாலும் பெரும்பான்மையாக குடும்ப உளவியலை உள்ளடக்கியதாகவே உள்ளது. நவீன சமூகத்தில் ஒரு நபர் குடும்பத்தை எவ்வாறு உருவாக்குகிறார். என்பதையும், குடும்ப கட்டமைப்பில் உள்ள உறவுகளில் எழும் மோதல்களை எவ்வாறு சமாளிக்கின்றனர் என்பதையும் ஆசிரியர் நளினி மற்றும் கஸ்தூரி என்ற இரண்டு பெண் கதாபாத்திரம் மூலம் எடுத்துரைக்கும் எடுத்துரைப்பு பாராட்டுக்குரியது.

நளினியின் படிப்பும், திட்டமும் குடும்பத்தை சரியான நேரத்தில் ஆக்கபூர்வமான உதவி செய்வதை நோக்கமாக கொண்டுள்ளது. நளினியின் இத்தகைய குடும்ப உளவியல் பல கூறுகளை கொண்டு வாழ்க்கைத் துணைவருக்கும், பெற்றோருக்கும், குழந்தைக்கும் இடையிலான உறவை மகிழ்ச்சியுடன் கொண்டு செல்ல உதவுகிறது. இந்த பரஸ்பர அன்பு கணவன் - மனைவியை மரியாதைக்குரியவர்களாகவும், நீண்டகாலம் அன்பு நிறைந்த வாழ்க்கை வாழ உதவுகிறது. மேலும் குடும்ப மேம்பாட்டினை கருத்தில் கொண்டு இயங்கும் நளினியும், கஸ்தூரியும் குடும்ப உளவியல் சிந்தனையாளராக இந்த நாவலில் மையப்படுத்தப்பட்டுள்ளனர்.

**முடிவுரை**

தமிழின் இலக்கிய பரப்பு வடிவத்தாலும் வகைகளாலும் மாற்றம் அடைந்துள்ளது. வடிவ வகை மாற்றங்களை தீர்மானிப்பதில் ஒவ்வொரு காலகட்டத்திலும் வாழ்க்கை முறையில் பங்கு இருக்கிறது. வாழ்க்கை முறை மாற்றமே இலக்கியத்தின் மாற்றமாக அமையும் என்பது பொதுவானக் கருத்து. இந்த வாழ்க்கை முறை மாற்றம் உளவியலுக்கு தொடர்புடையதாக உள்ளது. மனஉணர்வு குடும்பம் சார்ந்த காரண காரியங்களில் வெளிப்படும் போது அது குடும்ப உளவியலாக பார்க்கப்படுகிறது. குடும்ப உளவியலின் அடிப்படை கணவன்-மனைவி புரிதலாகும். இதைத்தான் நேசத்துணை நாவல் கொண்டுள்ளது.

**துணை நூற்பட்டியல்**

1. நேசத்துணை (நாவல்), ஆசிரியர் திலகவதி, அம்தே பதிப்பகம், சென்னை
2. ரா.பிரேமா, பெண்ணிய அணுகுமுறையியல் (1999),தமிழ் புத்தக ஆலயம்,15, மாசிலா மணித் தெரு பாண்டி பஜார், தியாகராஜாநகர், சென்னை-17

ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# தமிழ் இலக்கியங்களில் ஊக்கக் கோட்பாடுகள்

34

**வீ. கோபிநாத், உதவிப்பேராசிரியர்,**
**மா. மீரா, இளம் அறிவியல் உளவியல் இரண்டாமாண்டு மாணவி**
**உளவியல் துறை, பூசாகோஅர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி**
**கோவை.**

**ஆய்வுச்சுருக்கம்** :

தமிழ் இலக்கியங்கள் என்பன அடிப்படையாக மனிதனை நல்வழிப்படுத்தி வாழ வழிகளையும் குறிப்புகளையும் எழுத்துவடிவில் கொடுப்பவை. அகம், புறம் என மனித வாழ்வைப் பிரித்து அவை இரண்டிலும் ஊக்கத்தின் சிறப்புகளையும் முக்கியத்துவத்தையும் நேரடியாகவும் மறைமுகமாகவும் தமிழ் இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன என்பதை சிலப்பதிகாரம், மணிமேகலை,நாலடியார், ஆத்திசூடி மற்றும் திருக்குறளில் இடம்பெற்றுள்ள செய்திகள் மூலம் தொகுத்தது தான் இக்கட்டுரை. உளவியல் சார்ந்த கோட்பாடுகளில் ஊக்க உந்துதல் கோட்பாடு, ஊக்க இழுத்தல் கோட்பாடு, மாஸ்லோவின் தேவைகள் படி அமைப்புக் கோட்பாடுகளின் கருத்துகளை நம் தமிழ் இலக்கியங்கள் எவ்வாறு எடுத்துரைக்கின்றன என்பதே இந்த ஆய்வுக் கட்டுரையின் சுருக்கம்.

**ஆய்வு நோக்கம்** :

உளவியலில் கூறப்படும் ஊக்கம் சார்ந்த செய்திகளும் கோட்பாடுகளும் தமிழ் இலக்கியங்களில் இடம்பெற்றிருப்பதை எடுத்துரைப்பதே இந்த ஆய்வுக் கட்டுரையின் நோக்கம்.

**கடவுச்சொற்கள்:** தமிழ் இலக்கியங்களில் ஊக்கக் கோட்பாடுகள், நாலடியார் - ஊக்கம் ,மணிமேகலை-ஊக்க உந்துதல், கோட்பாடு, சிலப்பதிகாரம் - ஊக்க இழுத்தல் கோட்பாடு ஆத்திசூடி, திருக்குறள் - மாஸ்லோவின் தேவை படியமைப்புக் கோட்பாடு

**முன்னுரை** :

ஊக்குவிப்பவன் ஊக்குவித்தால் ஊக்கு விற்பவன் கூட தேக்கு விற்பான் என்னும் சொல்வழக்கு ஊக்கத்தின் சிறப்பை எடுத்துரைக்கிறது. ஊக்கம் என்ற உந்து விசையால் தான் உலகம் ஒருவரின் திசையாக மாறும். உயிரினங்கள் எல்லாம் ஊக்கத்தால் தான் முன்னேறுகின்றன என்பதே அடிப்படையாக இருக்கிறது.

பிறந்து சிறந்த மொழிகளுள் சிறந்தே பிறந்த தமிழில் உருவான இலக்கியங்கள் பலவற்றில் ஊக்கத்தின் சிறப்பையும் முக்கியத்துவத்தையும் தமிழர்கள் எடுத்துரைத்து இருக்கிறார்கள்.

வரலாற்றில் சங்கம் மருவிய காலம் ,இருண்ட காலம் எனக் குறிப்பிடப்படக் காரணம் அப்பொழுது மக்களிடையே குழப்பம் ,அமைதியின்மை நிறைந்திருக்க, சங்க இலக்கியங்கள் தான் அவ்விருள் போக்க

வெளிச்சம் தந்தன. அந்த வெளிச்சம் தந்த சங்க இலக்கியங்களில் கூறப்படும் ஊக்கம் பற்றிய செய்திகளை எடுத்துரைப்பது தான் இந்த ஆய்வு கட்டுரை.

**உளவியல் பார்வையில் ஊக்கம் :**

உளவியலில் ஊக்கம் என்பது ஒரு லட்சியம் அல்லது குறிக்கோளை அடைவதற்காக அது தொடர்பான எண்ணங்களிலும் செயல்களிலும் ஈடுபடும் முயற்சியே ஆகும். ஊக்கமானது நடத்தை,எண்ணம் மற்றும் உணர்ச்சியுடன் செய்யப்படும் ஒன்று என்பதால்தான் இது மன மட்டத்தில் முக்கியமான செயல் முறைகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது .

**"ஊக்கம் என்பது வழிகாட்டுதலைச் செயல்படுத்தி, காலப்போக்கில் நடத்தையைப் பராமரிக்கும் உள் செயல்முறையாகும்"**

*- (ராபர்ட் ஏ பாரன் & கிரீஸ்வர் மிஸ்ராபக்கம் : 317)*

**"உந்துதல் என்பது இலக்குகளால் வலுவாக பாதிக்கப்படக்கூடிய ஒன்று"**

**(லோக்&லதம் : பக்கம் 320)**

**நாலடியார் நவிலும் நம்பிக்கை :**

நாலடியாரின் பொருட்பால், தாளாண்மையில் 196 ஆவது பாடலில் ஊக்கத்தின் சிறப்பும், ஊக்கமுடையார் மேன்மையும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

**"ஆற்றும் துணையும் அறிவினை உள்ளடக்கி**

**ஊக்கம் உரையார் உணர்வுடையார் ஊக்கம்**

**உறுப்பினால் ஆராயும் ஒண்மை உடையார்**

**குறிப்பின்கீழ்ப் பட்டது உலகு"**

(நாலடியார் - பொருட்பால் -தாளாண்மை பாடல் - 196)

இதன் பொருள் யாதெனில் ஒருவர் மேற்கொள்ளும் செயலை அது முடியும் வரை தம் திறனால், ஊக்கத்தால் மனதினுள் அடக்கிக்கொண்டு முயற்சிகளை வெளிப்படையாக உரையார் அறிவுடையார். அத்துடன் பிறர் முயற்சிகளையும் உறுப்புகளின் குறிப்பினால் ஆராய்ந்து அறிவர். இத்தன்மையுடையோர் கீழ் இருக்கிறது உலகு. சங்க இலக்கியங்களில் மறைமுகமாக ஊக்கத்தைப் பற்றிய செய்திகளும் அதன் சிறப்புகளும் பொதிந்துள்ளன. ஆனால் நாலடியாரில் ஊக்கம் பற்றிய செய்திகள் நேரடியாகவே இடம்பெற்றுள்ளன.

**மணிமேகலை கூறும் மன ஊக்கம்** :

இரட்டைக் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலையில் சிறைக்கோட்டம் அறக்கோட்டம் ஆக்கிய காதையில் ஊக்கத்தின் அவசியம் சீத்தலைச்சாத்தனாரால் எடுத்துரைக்கப்படுகிறது. "ஊக்க உந்துதல்" கோட்பாட்டின்படி அடிப்படை உயிரியல் தேவைகளில் இருந்து உருவாகும் இயக்கத்தின் மூலம் நடத்தை உள்ளே இருந்து உந்தப்படுகிறது. தீராத பசியால் வாடிய காயசண்டிகை அப்பசிப்பிணியைப் போக்க வீதியில் அலைந்து திரிந்து யாசகம் பெறும் செயலில் ஈடுபட்டாள். ஊக்க உந்துதல் கோட்பாட்டின் படி கூற வேண்டுமானால் அடிப்படை உயிரியல் தேவைகளிலிருந்து (பசியெடுத்தல்) உருவாகும் இயக்கத்தின் மூலம் நடத்தை (யாசகம் கேட்டல்) உள்ளேயிருந்து உந்தப்படுகிறது என்பதை மணிமேகலை உணர்த்துகிறது.

**"யானைத்தீ நோய்க்கு அயர்ந்து மெய் வாடி இம்**

**மாநகர்த் திரியும் ஓர் வம்ப மாதர் "**

(மணிமேகலை, சிறைக்கோட்டம் அறக்கோட்டம் ஆக்கிய காதை - பாடல் வரிகள் 132,133)

**சிலப்பதிகாரத்தில் சிறப்பிக்கப்படும் ஊக்கம்**

"குடிமக்கள் காப்பியம்" என்ற புகழ்பெற்ற சிலப்பதிகாரத்தில் மக்களுக்கு ஊக்கத்தின் சிறப்பை மதுரைக் காண்டத்தில் அடைக்கலக் காதையில் இளங்கோவடிகள் எடுத்துரைத்து சிறப்பிக்கிறார். இடையர் குல நங்கை ஆகிய வயதில் மூத்தவரும், அன்பும் கருணையும் உடையவராகிய மாதிரியின் பாதுகாப்பில் கண்ணகியை விடுவது தவறு இல்லை என்று உணர்ந்த கவுந்தியடிகள் சிறப்புமிக்க கண்ணகியை அடைக்கலப் பொருளாக மாதிரியிடம் தருகிறார். அத்தோடு அற உணர்வுடையார் தருகின்ற அடைக்கலப் பொருளை காக்கின்ற செயல் சிறிதளவே ஆயினும் அதனால் பெறுகின்ற இன்பம் மிகப்பெரியது என்பதை மாதரி அறியவேண்டும் என்பதற்காக சாரணர் தலைவன் ஒரு கதையைக் கூறுகிறார்.

புகார் நகரின் சிறந்த வணிகர்களுக்கு அளிக்கப்படும் "எட்டி" என்ற பட்டம் பெற்ற சாயலன் வீட்டுக்கு ஒருநாள் முனிவர் ஒருவர் வந்தார். அவரை சாயலன் மனைவி தனக்கு இருக்கும் குறை நீங்க அழைத்து உணவளித்தாள். அப்போது பயந்தபடியே ஒரு சிறிய குரங்கு வீட்டினுள் வந்து முனிவர் மீதம் வைத்த சோற்றையும் நீரையும் உண்டு பசியாறிய பின் அன்போடு முனிவரின் முகத்தைப் பார்க்க அதைப் புரிந்து கொண்ட முனிவரும் சாயலன் மனைவியை அழைத்து இந்த குரங்கையும் உன் பிள்ளைகளை போல பாதுகாத்து இரு என்றார். அந்த அருள்மொழியை ஏற்று அவள் அந்தக் குரங்கை வளர்த்து வந்தாள். அது இறந்த பின்பும்,அக்குரங்குக்காக தீவினை ஒழிய தானங்கள் செய்தாள். இதனால் அந்த

குரங்கானது மத்திம நாட்டிலுள்ள வாரணவாசி என்னும் நகரில் உத்தம கௌத்தன் என்பவருக்கு மகனாகப் பிறந்து அறிவு ,செல்வம், அழகு என அனைத்தும் சிறக்க வாழ்ந்து தன் 32வது வயதில் உயிர் நீத்து தெய்வ வடிவம் பெற்றது. இதன் பயனால் சாயலனும் அவரது மனைவியும் இருள் நீங்கி இன்ப உலகு எய்தினர் .

இவ்வாறு சாயலன் மனைவி செய்த தவத்தால் ஏற்பட்ட பயனால் தான் அவர்கள் இன்பமாய் முடிவுலகு எய்த இயன்றது. இத்தகைய சிறப்புமிக்க பயனை அடைந்த செய்தியை அறிந்து, கண்ணகியை அடைக்கலப் பொருளாக ஏற்று அழைத்துச் செல் என கவுந்தி அடிகள் கூறியவற்றை கேட்டு மகிழ்ச்சியடைந்த மாதிரி கண்ணகியை அழைத்துக் கொண்டு வீடு சென்றாள்.

**“சாரணர் கூறிய தகைசால் நல்மொழி**
**ஆர் அணங்கு ஆக , அறம் தலைப்பட்டோர்**
**அன்று அப்பதியுள் அரும் தவ மாக்களும்**
**தன் தெறல் வாழ்க்கைச் சாவக மாக்களும்**
**இட்ட தானத்து எட்டியும் மனைவியும்**
**முட்டா இன்பத்து முடிவுலகு எழுதினர்**
**கேட்டனை ஆயின் தோட்டு ஆர் குழலியோடு**
**நீடித்திராது, நீ போக என்று**
**கவுந்தி கூற உவந்தனள் ஏத்தி “**

(சிலப்பதிகாரம்- மதுரைக்காண்டம் , அடைக்கலக் காதை, பாடல் வரிகள் : 191 - 200)

**உளவியல்சார் பார்வையில் ஊக்க இழுத்தல் கோட்பாடு:**

“*ஊக்க இழுத்தல் கோட்பாட்டின்படி*” நமது நடவடிக்கைகள் என்பது வெளியிலிருந்து கிடைக்கும் பொருள் அல்லது புகழ் அல்லது நல் உணர்வைத் தரும் காரணிகளால் தீர்மானிக்கப்படுகிறது. ஆம் என்றென்றும் மனித மனம் அங்கீகாரத்துக்கும் புகழுக்கும் ஈர்க்கப்படுகிற ஒன்று. சரி இப்பொழுது சிலப்பதிகாரத்தில் இடம்பெற்றுள்ள இக்கோட்பாட்டின் சான்றினை உற்று நோக்குவோம்.

முன்பு கூறிய சிலப்பதிகார அடைக்கலக் காதையில் கவுந்தியடிகள் கண்ணகியை மாதிரியிடம் அடைக்கலப் பொருளாகத் தரும் நிகழ்வு ஊக்க இழுத்தல் கோட்பாட்டின் எடுத்துக்காட்டுதான் . மாதிரியிடம் கண்ணகியின் அருமை பெருமைகளை எடுத்துக் கூறி கண்ணகிக்கு அடைக்கலம் தருமாறு கவுந்தியடிகள் கூறியதோடு நிற்காமல் அதனால் விளையும் பயன்களை எடுத்துக் கூறுகிறார்.

பொதுவாகவே நாம் அறிந்திடாத ஒருவரை நம்முடன் அழைத்து சென்று அடைக்கலம் தர சிறிது தயக்கம் இருக்கும். எனினும் அடைக்கலப் பொருளாக வழங்கப்பட்டதை பாதுகாத்தால் ஏற்படும் நன்மைகளைப் பெற்று மேன்மை அடைய வேண்டும் என்ற நோக்கத்துடன் அந்த செயலை மாதரி செய்தாள். அடைக்கலம் தருவது என்னும் மாதரியின் நடவடிக்கை என்பது வெளியில் இருந்து கிடைக்கும் பொருள்/புகழ் / நல்லுணர்வு (இன்பமாய் முடிவுலகு எய்தல்) தரும் காரணிகளால் தீர்மானிக்கப்படுகிறது என்பதை சிலப்பதிகாரம் இங்கே எடுத்துரைக்கிறது.

**ஆத்திசூடி அறிவுறுத்தும் ஆள்வினையுடைமை** :

சுருங்கச் சொல்லி விளங்க வைப்பதில் திருக்குறளுக்கு அடுத்து இருப்பது தான் ஆத்திசூடி. தமிழ் இலக்கியத்தில் இரண்டு ஆத்திசூடிகள் இடம்பெற்றுள்ளன .ஔவையார் மற்றும் பாரதியார் இயற்றியவை. அவர்கள் வாழ்ந்த காலத்தில் தேவைப்பட்ட ஊக்கத்தை அவர்கள் எழுத்துவடிவில் தந்துள்ளனர்

**பாரதியின் புதிய ஆத்திசூடி** :

பாரதியின் ஆத்திசூடியை உளவியல் பார்வையில் பார்த்தால் ***எண்ணுவது உயர்வு****(7)* என்றும் ***பெரிதினும் பெரிது கேள்****(71)* என்றும் கூறுகிறார். இவ்வரிகள் 1943ஆம் ஆண்டு வகுக்கப்பட்ட மனித உந்துதலின் கோட்பாடு அல்லது *மாஸ்லோவின் தேவைகள் படி அமைப்பு கோட்பாட்டின்* சாரமே ஆகும். மனிதன் என்பவன் முடிவில்லாத தேவைகளை கொண்டிருப்பவன், ஒரு தேவை பூர்த்தி ஆனதுடன் அவன் மற்றொரு தேவையை நாடி நிற்பான். இத்தகைய தேவைகள் ஒரு வரிசை அமைப்பாக காணப்படும் என்பதே மாஸ்லோவின் தேவைப்படி அமைப்பு கோட்பாடு .

அந்த அமைப்பில் அடிப்படைத் தேவைகள் நிறைவேறிய பின் பாதுகாப்பிற்கான தேவைகள் ,அடுத்தபடியாக உடனிருப்பு மற்றும் அன்பிற்கான தேவைகள், அதன் அடுத்த படி மரியாதை மற்றும் முன்னேற்றத்திற்கான தேவைகள் கடைசி நிலையாக சுய உணர்தல் அதாவது புகழின் உச்சி எனலாம் .

இந்த ஆத்திசூடியின் வரிகள் சுய உணர்தல் நிலையை அடைய சிறந்த ஊக்கம் தருகிறது என்பது தான் நிதர்சனம். உயர்ந்த எண்ணத்தோடும் சிந்தனையோடும் ஊக்கத்தோடும் முயன்றால் மரியாதை நிலை அல்லது சுய உணர்தல் நிலையை அடையலாம் என்ற உளவியல் கருத்தை ஆத்திசூடி உணர்த்துகிறது.

**ஔவையாரின் ஆத்திசூடி** :

ஔவையாரின் ஆத்திசூடியில் ஊக்கத்தின் சிறப்பை ***ஊக்கமது கைவிடேல்****(6)* அதாவது வாழ்க்கையில் எத்தகைய சூழ்நிலையிலும் மேலும் மேலும் முன்னேற வேண்டும் என்னும் எண்ணத்தைக்

கைவிட்டு விடாதே என்றும், ***தக்கோன் எனத் திரி(56)*** அதாவது உன்னை உத்தமன் என்று சான்றோர் போற்றிக் கூறும் படி எக்காரியத்தையும் செய்வாயாக என்று ஊக்கமளிக்கிறார்.

இந்த கடைசி ஆத்திசூடியும் *மாஸ்லோவின் கோட்பாட்டின் சாரமே ஆகும்.* சான்றோன் என்ற நிலையை அடைய வேண்டும் அதாவது சுய உணர்தல் நிலையை அடைய வேண்டும் என்றால் அதற்காகத் தளராத ஊக்கம் தேவைப்படுகிறது என்பதே இதில் பொதிந்துள்ள உளவியல் கருத்து.

**திருக்குறள் கூறும் தன்னம்பிக்கைச் செய்திகள்** :

*இரண்டே முக்கால் அடியில் குறள்களை இயற்றிவிட்டு ஒரு கால் அடி மீதம் வைத்தது பிற்காலத்தில் உலகமே அதன் காலடியில் இருக்கும் என்பதற்காகவே* என்ற புகழ்பெற்ற திருக்குறள் ,உலகப்பொதுமறையாக இருந்து 1330 குறள்களிலும் மனித வாழ்வின் மேம்பாட்டிற்கான செய்திகளை முப்பாலில் 133 அதிகாரங்களில் எடுத்துரைக்கிறது.

மனிதனுக்கு நம்பிக்கை, ஊக்கம் ,நற்குணம் புகட்டும் செய்திகள் நிறைந்த திருக்குறளில் "ஊக்கமுடைமை" என்னும் அதிகாரம் அமைத்தும், பல்வேறு அதிகாரங்களில் பல இடங்களில் ஊக்கத்தை பற்றிய குறிப்புகளை அமைத்தும் சிறப்பித்துள்ளார் தெய்வப் புலவர் வள்ளுவர். மாஸ்லோவின் தேவை படியமைப்பு கோட்பாட்டை எடுத்துரைக்கும் திருக்குறளில் இருக்கும் ஒரு சான்று,

**"உள்ளுவது எல்லாம் உயர்வுள்ளல் மற்றது**

**தள்ளினுந் தள்ளாமை நீர்த்து "**

(திருக்குறள்-பொருட்பால் , ஊக்கமுடைமை( குறள் எண் : 596)

அதாவது உயர்ந்து சிறந்த குறிக்கோளை நோக்கியே எண்ணங்கள் இருக்கவேண்டும். நோக்கங்கள் கைகூடுவதில் இடர்பாடுகள் ஏற்பட்டாலும் உயர்ந்த எண்ணங்களுடன் கூடிய ஊக்கம் மேன்மை தரும். இங்குதான் மாஸ்லோவின் அடுத்த அடுத்த படியை அடையத் தேவையான ஊக்கம் தேவை என்ற செய்தி இருக்கிறது. நம் தமிழ் இலக்கியங்களில் ஊக்கத்தை உடைமையாகவும் பெருமையாகவும் கருதினர். அத்தகு சிறப்புமிக்க ஊக்கம் இல்லாதவர்கள் மற்ற உடைமைகளை உறுதியாகப் பாதுகாக்க இயலாதவர்கள் என்பதை ,

**"உடையர் எனப்படுவது ஊக்கம்அஃது இல்லார்**
**உடையது உடையரோ மற்று"**
திருக்குறள்-பொருட்பால் , ஊக்கமுடைமை (குறள் எண் : 591)

என்கிறார்.

இறுதியாக தோன்றியகாலம்தொட்டு ஊக்கத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தும் இரண்டு குறள்கள் உள்ளன. தமிழ் இலக்கியங்களில் சிறப்பையும் தமிழர்களின் அறிவையும் சேர்த்து எடுத்து இயம்புகிறது இவ்விரு குறள்கள்

**"தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்**
**மெய்வருத்தக் கூலி தரும்"**
(திருக்குறள் - பொருட்பால் ,ஆள்வினைஉடைமை(குறள் எண்: 619)

அதாவது வழிகாட்டிளின் (தெய்வம்) துணையும் அனுபவமும் வெற்றிபெற பெரிதாக உதவாத நேரங்களில் கூட விடாமுயற்சியும் அயராத உழைப்பும் (மறைமுகமாக செயலுக்கான தளராத ஊக்கம்) அவற்றிற்கான உரிய பலன்களை உறுதியாக அளிக்கும்.

**"வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்**
**உள்ளத் தனையது உயர்வு"**
(திருக்குறள்-பொருட்பால் , ஊக்கமுடைமை(குறள் எண் :595)

அதாவது நீர் பூக்களின் தாளின் நீளம் அவை நின்ற நீரின் அளவினவாகும், மக்களின் ஊக்கத்தின் அளவினதாகும் வாழ்க்கையின் உயர்வு.

**முடிவுரை** :

இளங்கோவடிகள் முதல் இன்றைய கவிஞர்கள் வரை ஊக்கத்தின் சிறப்பையும் முக்கியத்துவத்தையும் மறைமுகமாகவும் நேரடியாகவும் இருக்குமாறு தங்கள் படைப்புகளை இயற்றியுள்ளனர். தமிழின் வளர்ச்சி வரலாற்றில் மக்களை நெறிப்படுத்தும் பொறுப்பை எழுத்துகள் கொண்டு நிறைவேற்றியவை தான் தமிழ் இலக்கியங்கள். அத்தகு சிறப்பு மிக்க தமிழ் இலக்கியங்கள் மனித மேம்பாட்டிற்கான ஊக்கத்தையும் ,ஊக்கக் கோட்பாடுகள் சார்ந்த செய்திகளையும் உள்ளடக்கியவை என்பதற்கு இந்த ஆய்வுக்கட்டுரை ஒரு சிறிய சான்று.

***தமிழால் இணைவோம் ! தமிழால் உயர்வோம் !!***

**துணைநூற்பட்டியல்**


- **ஊக்கம்** - Psychology Indian subcontinent edition(5) by Robert A Baron and Girishwar Mishra. Page Number: 317
- **ஊக்கம்- லோக் & லதம்**- Psychology Indian subcontinent edition(5) by Robert A Baron and Girishwar Mishra- page number : 320
- **நாலடியார் - பொருட்பால் -தாளாண்மை பாடல்** - 196

- **மணிமேகலை- சிறைக்கோட்டம் அறக்கோட்டம் ஆக்கிய காதை- பாடல் வரிகள்**(132,133)
- **ஊக்க உந்துதல் கோட்பாடு** - Introduction to Psychology(7th edition ) by clifford T.Morgan,Richard A Morgan ,John R. Weisz, John Schopler- page number : 269
- **சிலப்பதிகாரம்- மதுரைக்காண்டம் , அடைக்கலக் காதை பாடல் வரிகள்** : 191 - 200)
- **ஊக்க இழுத்தல் கோட்பாடு** - Introduction to Psychology(7th edition ) by clifford T.Morgan Richard A Morgan ,John R. Weisz, John Schopler- page number : 270
- **புதிய ஆத்திசூடி- பாரதியார் - வரிகள்**: 6,56
- **மாஸ்லோவின் படியமைப்பு கோட்பாடு** - Introduction to Psychology(7th edition ) by clifford T.Morgan Richard A Morgan ,John R. Weisz, John Schopler-page number : 298
- **ஆத்திசூடி - ஔவையார் -வரிகள்** : 7,71
- **மாஸ்லோவின் படியமைப்பு கோட்பாடு** - Introduction to Psychology(7th edition ) by clifford T.Morgan Richard A Morgan ,John R. Weisz, John Schopler- page number : 298
- **திருக்குறள்-பொருட்பால் , ஊக்கமுடைமை( குறள் எண்** : 596)
- **மாஸ்லோவின் படியமைப்பு கோட்பாடு** - Introduction to Psychology(7th edition ) by clifford T.Morgan Richard A Morgan ,John R. Weisz, John Schopler-page number : 298
- **திருக்குறள்-பொருட்பால் , ஊக்கமுடைமை (குறள் எண்** : 591)
- **திருக்குறள் - பொருட்பால் ,ஆள்வினைஉடைமை(குறள் எண்**: 619)
- **திருக்குறள்-பொருட்பால் , ஊக்கமுடைமை(குறள் எண்** :595)

ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# உளவியல் நோக்கில் மணிமேகலை காப்பியத்தின் பெண்மாந்தர்கள்

ர.மேனகா, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை

பூசாகோஅர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி, கோவை.

35

**ஆய்வுச் சுருக்கம்**

இன்றைய கணித உலகில் தெரிந்து கொள்ள வேண்டிய செய்திகளோடும் மனிதகுல முன்னேற்றத்திற்குத் தேவைப்படும் விழுமியங்களோடும் தமிழ் மக்களின் அணியென ஒளிரும் காப்பியம் என "மணிமேகலை" காப்பியத்தைச் சொல்லமுடிகிறது. ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றாய் தமிழ்நாட்டுக்குரிய தமிழ்ப்பண்போடு தோன்றிய தனித்தமிழ் முதற்பெருங்காப்பியம், தமிழில் சமய உண்மைகளை விளக்கும் பெருங்காப்பியம். தமிழ் மகளைக் காப்பியத் தலைவியாய்க் கொண்டு "குலத்தால் பெருமை இல்லை, ஒழுக்கத்தால் பெருமையுண்டு" உயர்ந்த குறிக்கோளாய் கொண்டு விளங்கும் ஒரு சீர்திருத்தக் களஞ்சியம். ஒரு திறந்தவெளி சமுதாயத்திற்குத் தக்க சான்றாய் காப்பிய உலகில் தடம் பதித்த மணிமேகலை காப்பியத்தில் இடம் பெறும் பெண் மாந்தர்களின் உளவியல் குறித்து ஆராய்வதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைந்துள்ளது.

**முதன்மைச் சொற்கள்** - மணிமேகலை, இலக்கியம், உளவியல், மக்களின் செய்கைகள், உணர்ச்சிகள்,

**ஆய்வு நோக்கம்**

மனிதர்களின் மனம் விசித்திரமானது, எவருக்கும் எளிதில் புரியாதது, கட்டுக்குள் அடக்க முடியாதது. ஆதலால் மனிதர்களைப் பற்றி ஆராய முற்படும் வேளையில் அவர்களுடைய உளவியலைப் பற்றி ஆராய வேண்டியது அவசியமாகிறது. காப்பிய மாந்தர்களும் மனித வாழ்வின் பிரதிபலிப்பாகவே படைக்கப்படுகின்றனர். அதனால் அவர்களைப் பற்றிய உளவியல் நோக்கிலான ஆய்வு, கதை மாந்தர்களைச் சரியான கோணத்தில் ஆராய்ந்தறியவும். காப்பியத்தின் போக்கினையும், காப்பியப்புலவனின் நோக்கத்தினையும் புரிந்து கொள்வதற்காகவும் இவ்வாய்வின் நோக்கம் அமைக்கப்பட்டுள்ளது.

**உளவியல் கோட்பாடு**

மன உணர்வுகள் சமூக ஒழுக்கம் காரணமாக சுதந்திரமாக வெளிப்படாமல் அழுத்தப்படுகின்றன. இவ்வுணர்வுகளும் அடிமனத்தில் ஆழமாய் மையங்கொண்டிருக்கும் பாலியல் உணர்வுகளும் நனவிலி மனத்தின் ஊடாக அவனே அறியாத நிலையில் அவனுடைய சொல்லிலும், செயலிலும் வெளிப்படுகின்றன. மனிதனின் அடக்க முடியாத மன உணர்வுகளின் வடிகாலாய் அமைகிறது. தொடர்ந்து தாக்கப்படும் போது அவன் மனத்தளர்ச்சியடைகிறான். இதுவும் உடலியற் காரணமாகிறது. மனிதனின் எண்ண ஓட்டங்களே

ஒருவனுடைய நடத்தையை நிர்ணயிக்கின்ற காரணியாக அமைகின்றன. மனிதனின் அடிப்படை உணர்வுகள் பாலியல் தொடர்பானதே, இதில் மனமாற்றம் ஏற்படும் பொழுது அவனுடைய சிந்தனைகளும் வேறுபடுவதாக அமைகின்றது. மனம் அலைபாயும் போது மனக்கட்டுப்பாடு இருக்காது அதை நிலைப்படுத்த முடியாது என்பதை அறியலாம்.

**உளவியலின் நோக்கமும் பயனும்**

எந்த ஒரு செயலுக்கும் எதிர்ச்செயல் கண்டிப்பாக உண்டு அதுபோலவே எல்லா வகைச் செயலுக்கும் பயனும் உண்டு. மனிதனுக்குப் பல நன்மைகளும் நோக்கமும் உண்டாக உளவியல் ஓர் உந்து சக்தியாகச் செயல்பட்டு மனிதனை மேம்பாடு அடையச் செய்கிறது.

**உளவியலின் நோக்கம்**

ஒவ்வொரு இயல்பும் உலகின் ஓர் அம்சத்தின் இயற்கையை அறியும் பொருட்டு பல நிகழ்ச்சிகளையும் சேகரித்து உற்றுப் பார்த்து அவற்றை வகைப்படுத்தி விளக்க முயல்கிறது. உள்ளத்தின் இயல்பு எத்தன்மையுடையது, அஃது எவ்வகையில் செயல்படுகிறது, அதை எவ்வாறு அறிவது , மக்களின் செய்கைகள், உணர்ச்சிகள், எண்ணங்கள் போன்றவற்றை எவ்வாறு அமையவிடலாம் போன்ற கருத்துக்களை விளக்குவதே உளவியலின் நோக்கமாகும்.

உள்ளம் என்பது நனவு உள்ளத்தை குறிப்பதாகும். புலனுணர்ச்சிகள், சாயங்கள், மன உணர்ச்சிகள் போன்ற பல்வேறு கூறுகளின் அமைப்பே உள்ளமாகும். இவற்றின் இயல்புகளையும், அளவுகளையும் அறிவதே உளவியலின் நோக்கமாகும்.

**உளவியலின் பயன்**

உளவியல் என்பது உள்ளத்தைப் பற்றி அறியப்பட வேண்டிய உண்மைகளை எடுத்துக் கூறி அவற்றைக் கொண்டு வாழ்க்கை முறைகளையும் வகுத்து அதற்குத் தேவையான சோதனை முறைகளையும் உண்டாக்கி மனிதனுக்கு உதவி செய்து வருகிறது என்பதன் மூலம் உளவியல் மனிதனை மேம்பாடு அடையச் செய்ய வழிவகுக்கிறது.

**இலக்கியங்களில் உளவியலின் பங்களிப்பு**

இலக்கியத்தின் உட்பொருளையும், ஆழங்களையும் அறிய உளவியல் பயன்படுகிறது. உணர்வுகளிலும், உற்சாகத்திலும் அனுபவங்களை உள்வாங்கிப் புலப்படுத்துவதிலும் ஏனைய மனிதர்களிலிருந்து கவிஞர்கள் சற்றேனும் வேறுபட்டவர்கள் என்பதை அறியமுடிகிறது. மேலும்,

- ஒரு இலக்கியம் படைக்கும் போது அல்லது அது தோற்றம் பெறுவதன் வழிமுறைகளை உளவியல் நிலையில் புலப்படுத்துதல்.
- படைப்பாளியின் மனநிலையையும், படைப்பிற்குரிய காரணங்களை அறியவும் படைப்பாளியின் வரலாற்றையும் படைப்பில் காணமுடிகிறது.
- இலக்கியத்தில் இடம்பெற்றுள்ள கதைமாந்தர்களின் உணர்வுகளையும், செயல்களையும் விளக்குகின்றது.
- இலக்கியப் படைப்பிலுள்ள தனிச்சிறப்பான சொற்களையும், தொடர்களையும் மற்றும் சிறப்பான உத்திமுறைகளையும் உள்ளத்து உணர்வைப் பிரதிபலிப்புகளாகக் காணமுடிகிறது.
- இலக்கியத்தில் தொல்படிமம் முக்கிய இடம் பெறுகிறது என்பதை கருதுகோள்களாகக் கொண்டு அதன் உருவாக்கத்தையும் காணமுடியும்.
- இலக்கியம் வாசகரிடம் கொண்டுள்ள உறவையும், தாக்கத்தையும் காணலாம்.
- இவை தவிர கவிதை ஒரு மாறுபாடான மன எழுச்சியினால் உருவாக்கப்படுகிறது எனவும் கூறுகின்றனர். இலக்கியங்களில் இடம் பெறும் மனஉணர்வுகளை விளங்கிக் கொள்வதற்குத் துணைபுரியவும் உளவியல் பயன்படுகிறது.

**மணிமேகலை**

கருத்தைக் கவரும் கதைத்தலைவிக்கு வேண்டிய அழகும், அறிவும், பண்பும், தியாகமும், தொண்டுணர்வும் ஒருங்கே அமைய சாத்தனாரால் படைக்கப்பட்ட மாதரசியே மணிமேகலை எனலாம். காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்திருந்த பெருங்குடி மாசாத்துவான் மகனான கோவலனுக்கும் ஆடல், பாடல், அழகு என மூன்றிலும் ஒருங்கே தேர்ந்தவளான மாதவிக்கும் பிறந்தவளே மணிமேகலை. எனினும் இவர் மாதவியாலே "மாபெரும் பத்தினி மகள்" எனப் போற்றப்படும் சிறப்பிற்குரியவளாய் சுட்டப்படுகின்றாள். அத்தகைய உயர்குடிப்பிறப்பினளான அவளை இளமையிலேயே துறவற வாழ்வில் ஈடுபடுத்துவதை மாதவி,

**"மாபெரும் பத்தினி மகள் மணிமேகலை**
**அருந்தவப் படுத்தல் அல்லது யாவதும்**
**திருந்தாச் செய்கைத் தீத்தொழிற் படாஅள்"**

(ஊர் அலர் உரைத்த காதை 55-57)

என்று கூறுகின்றாள். ஏனென்றால் விலைமாதர் குலத்தில் பிறந்தவளைத் துறவற வாழ்வில் ஈடுபடுத்தாவிடில் கற்பில் சிறந்த தூயவளாய் வாழச் செய்வது அரிது என்பதை நன்கு உணர்ந்தவளது கூற்றாகவே மாதவியின் இக்கூற்று அமைந்திருப்பதைக் காணமுடிகின்றது. இது மாதவி கூறுவதாக

அமைந்திருந்தாலும் கதைமாந்தர் கூற்றாகப் படைப்பாளன் பேசுவதே உளப்பாங்கோடு உள்ளது என்பதை உணரமுடிகின்றது.

**மாதவி**

காவிரிபூம்பட்டினத்துக் கணிகையர்களுள் சித்திராபதிக்கு மகளாகப் பிறந்தவள். ஆடல், பாடல், அழகு மூன்றிலும் தலைசிறந்தவள். கோவலன்பால் காதல் கொண்டு மணிமேகலையைப் பெற்றெடுத்தாள். காதலன் கோவலனுக்கு உற்ற துயர் கேட்டு, வருந்தி துறவு பூணலே சிறந்தது எனத் துறவற வாழ்வைத் தேர்வு செய்து உள்ளத்தை அறநெறிக்கண் செலுத்துபவளாகச் சாத்தனரால் படைக்கப்பட்டுள்ளாள். இதனை,

**“காதல னுற்ற கடுந்துயர் கேட்டுப்**
**போதல் செய்யா உயிரொடு நின்றே**
**பொற்கொடி மூதூர்ப் பொருளுரை யிழந்து**
**நற்றொடி நங்காய் நாணுத் துறந்தேன்”**

(ஊர் அலர் உரைத்த காதை 38 - 41)

இதன் வழி சாத்தனாரது காலத்தில் கணவனை இழந்த பெண்கள் மேற்கொண்ட மூவகைப்பட்ட கற்பு முறையினை மாதவி பேணாது துறவு வாழ்வினைத் தேர்வு செய்திருப்பதாகக் காட்டி, பரத்தையர் குல மகளிரின் மறுமலர்ச்சிக்கு சமத்துவத்துக்கும் அடித்தளமிட்டுள்ள சாத்தனாரின் உளப்பாங்கினை உணர முடிகின்றது.

**சுதமதி**

மணிமேகலையின் தோழியாக வரும் சுதமதி பார்ப்பன குலத்தினள், தந்தையால் வளர்க்கப்பட்டவள், மாருதவேகன் என்னும் விஞ்சையனால் கவரப்பட்டு கற்பை இழந்த பின் விஞ்சையனால் கைவிடப்பட்டவள், சங்க தருமன் என்னும் புத்தத் துறவியால் தந்தையோடு சேர்த்து ஆதரித்தமையால் சுதமதி பௌத்த சமயம் பின்பற்றுபவளாய் மணிமேகலையின் செவிலித் தாய்போல சேவகம் செய்து வாழ்நாள் கழித்துவருபவளாய் ஆசிரியரால் படைக்கப்பட்டுள்ளாள். எனினும் அவள் சொல்வன்மையோடு உலகியல் அறிவும் அறச்சிந்தனை வாய்க்கப் பெற்றவளாகப் படைக்கப்பட்டுள்ளதால் மணிமேகலை எத்திறத்தினள் எனக் கேட்ட உதயகுமாரனுக்கு,

**“குருகுபெயர்க் குன்றம் கோன்றோன் அன்னநின்**
**முருகுச் செவ்வி முகந்து, தன் கண்ணால்**
**பருகாள், ஆயின் பைந்தொடி நங்கை**
**ஊழ்தரு தவத்தாள், சாப சரத்தி**
**காமற் கடந்த வாய்மையள்”**

(மணிமேகலா தெய்வம் வந்து தோன்றிய காதை 13-17)

என தவநிலை எடுத்துரைப்பதாகச் சுட்டப்பட்டுள்ளாள். இவள் சாத்தனாரின் அறவியல் சிந்தனையில் தலையாயதான துறவற வாழ்வில் மணிமேகலை வழிநடத்தும் சிறந்த துணைமாந்தராக உள்ளதை உய்த்துணர முடிகின்றது.

**காயசண்டிகை**

காஞ்சனன் என்னும் விஞ்சையனின் மனைவியான காயசண்டிகை மணிமேகலைக்கு ஆதிரை வரலாற்றை உரைத்து, உலகவறவிக்குச் செல்க என்று சொல்லுபவள். இவளது வடிவத்தால் மணிமேகலை அறச்செயல்களில் ஈடுபட்டாள். உதயகுமாரனின் இறப்பிற்குப் பின்னர் மணிமேகலையால் இவளது வடிவம் உதறப்பட்டது.

**ஆதிரை**

சாத்துவனின் மனைவியும் கற்பில் சிறந்தவளுமான ஆதிரை மணிமேகலை புனையா ஓவியமாய் நின்று ஏந்திய அட்சய பாத்திரத்தில் முதற்கண் பிச்சையிட்ட மாதரசி ஆவாள்.

**இராசமாதேவி**

சோழன் மாவண்கிள்ளியின் மனைவியும் உதயகுமாரனின் தாயுமான இராசமாதேவி மாதவியின் குலத்து வந்தவள். மகன் உதயகுமாரன் இறந்த செய்திக்கேட்டு மணிமேகலைக்குச் சூழ்ச்சித்திறனால் சொல்லொணாத் துயரிழைத்தவள், இன்னா செய்தாருக்கும் இனியவை செய்ய வேண்டும் என்ற சிந்தனையுள்ள மணிமேகலையால் அறவுரை கேட்டு, நல்லறிவு பெற்றவள்.

**சித்திராபதி**

நடன மங்கை மாதவியின் தாய் சித்திராபதி. இந்திரவிழாவிற்கு மாதவியும் மணிமேகலையும் பௌத்த சமயம் சார்ந்தமையால் வாராது இருந்தமைக்கு மிக்க சினம் கொண்டவள். உதயகுமாரனுக்காய் மணிமேகலையைப் பல முறை மனமாற்றம் செய்ய முற்பட்டவள். ஆண் முதன்மைச் சமுதாயத்தினரால் கட்டமைக்கப்பட்டுள்ள இழிகுலமான பரத்தையர் குலத்தை மனமார ஏற்றுக் கொண்டு வாழ்வினை விருப்பமுடன் வாழ்பவளாகவே படைக்கப்பட்டுள்ளாள். இராசமாதேவியால் "நன்மணம் பிறந்த நாடகக் கணிகையை என் மனைத் தருக" என்று தவமகளான மணிமேகலையை வேண்ட, மனம் உடைந்து வருந்துபவளாகவே படைக்கப்பட்டு சமுதாயத்தில் மாற்றம் நிகழத் தொடங்கியதாகப் படைக்கப்பட்ட பாத்திரமே சித்திராபதி என்பதை உணரமுடிகின்றது.

**முடிவுரை**

இவ்வாறாக மணிமேகலைக் காப்பியத்தின் பெண் மாந்தர்கள் உளவியல் நோக்கு ஆராயப்பட்ட போது, படைப்பாளியான சீத்தலைச் சாத்தனாரின் மனநிலையைப் பிரதிபலிக்கும் விதமாகவே கதைமாந்தர்களின் மனநிலையும் செயல்களும் அமைந்துள்ளதைக் காண முடிகின்றது. மேலும் தலைமைப் பாத்திரமான மணிமேகலை பாத்திரத்தை சாத்தனார் தன் குறிக்கோள் மற்றும் சிந்தனை முழுமைக்கும் ஏற்ற வடிகால் கொடுத்து வடிவமைத்துள்ளதை உணர முடிகின்றது. துணைப் பாத்திரங்கள் மற்றும் சிறுபாத்திரங்கள் தலைமைப் பாத்திரத்தினை வளர்த்தெடுக்கும் பணியில் படைப்பாளருக்கு ஊன்றுகோலாய் விளங்குவதைக் காண முடிகின்றது. ப்ராய்டின் "படைப்பாளர் உளவியல்" மட்டுமே இவ்வாய்வில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பிற உளவியலாளரான யுங், அட்லர் போன்றோரின் கருத்தை அடியொற்றியுமம் ஆய்வு நிகழ்த்த இடங்கள் உள்ளதையும் உய்த்துணர முடிகின்றது.

**துணைநூற்பட்டியல்**

1. கலாநிதி த.கலாமணி, இலக்கியமும் உளவியலும், ஜீவநதி வெளியீடு, 2018

2. சாமி.சிதம்பரனார், மணிமேகலை, மங்கை வெளியீடு, 2012

ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

36

# சங்க இலக்கியத்தில் உள்ளுணர்வுகள்

**முனைவர் பா.ரமணி, உதவிப்பேராசிரியர்**
**தமிழ்த்துறை, பத்மவாணி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம்.**

**ஆய்வுச்சுருக்கம்**

மனம் நன்முறையில் செயல்பட்டாலேயன்றி நம் செயல்கள் அனைத்தும் சிறப்படையும். அம்மனத்தைப் பற்றிய ஆய்வாக அமைவது உளவியல் ஆகும். இவ்உளவியலின் தந்தையாகச் சிக்மண்ட் ஃபிராய்டு கூறப்படுகின்றார். உளவியல் என்பது ஒரு பரந்துபட்ட ஆய்வாக அமைகின்றது. இவ்வுளவியலானது அறிவியல் என்ற பார்வையிலும் அணுகப்படுகிறது. இவ்வுளவியல் தன்மையை அறிந்த பல்வேறு அறிஞர்கள் சங்க இலக்கியங்களை உளவியல் இலக்கியம் என்றே கூறியுள்ளனர். நற்றிணை, குறுந்தொகை, கலித்தொகை, அகநானூறு, ஐங்குறுநூறு போன்ற இலக்கியங்கள் பெரும்பாலும் தங்கள் உள்ள உணர்வுகளை வெளிப்படுத்துவதாகவே அமைந்துள்ளது. பரந்துபட்ட இலக்கியங்களில் அமைந்துள்ள உள்ளுணர்வுகளை வெளிப்படுத்துவதாக இவ்வாய்வு அமைகின்றது.

**குறிச்சொற்கள்:** தலைவன், தலைவி, தோழி, மனம், உளவியல்

**முன்னுரை**

சங்க இலக்கியங்கள் பண்டைய தமிழரின் மரபினை எடுத்துரைக்கும் காலக்கண்ணாடியாகத் திகழ்ந்து வருகிறது. அவற்றுள் அகம், புறம் என்ற பகுப்பு அடங்கியுள்ளது. அகத்தில் தலைவி, தலைவன், தோழி, நற்றாய், செவிலி போன்றோரின் கூற்றுநிலை அமைகின்றது. இதில் ஒவ்வொருவரும் தன்மன உணர்வுகளை வெளிப்படுத்துகின்றனர் என்றால் மிகையில்லை. அவ்வகையில் சங்கஇலக்கியங்களில் காணலாகும் மன உணர்வுகளையும், உளவியல் என்பதன் கருத்தாக்கங்களையும் வெளிப்படுத்துவதாக இக்கட்டுரை அமைகின்றது.

**உளவியல்**

உளவியல் என்பது மனத்தைப் பற்றிய அறிவியல். ஆனால் மனம் என்பதை உடல் உறுப்புகளைப் போல காணமுடியாது. மனம் என்பதை மூளை மற்றும் நரம்பு மண்டலம் இவற்றின் நுண்ணிய செயல்பாடுகளின் ஒருங்கிணைத்த தொகுப்பாகத் திகழ்கிறது. மு.இராசமாணிக்கம், "மனிதர்களின் நடவடிக்கைகளை ஒழுங்கு முறையாக அறிகின்ற ஓர் அறிவியல். உளவியல் பல துறைகளை உடைய அறிவியலாகும். எல்லாத் துறைகளிலுமே அதனுடைய முக்கிய நோக்கம் மனிதர்களின் நடத்தையை முழுமையாக ஆய்வதாகும்" (உளவியல் துறைகள் (தொகுதி.2) ப.1) என்று கூறுவதன் மூலம் உடலியல்

மற்றும் உயிரியல் ஆகியவற்றுடன் முடிந்த பிணைப்புடன் காணப்படுவது உளவியல் என்பதறியலாம். மேலும்,

“நலமான வாழ்க்கைக்கு உடல்நலம், உளநலம் ஆகிய இரண்டும் இன்றியமையாதவை ஆகும். இவை இரண்டுமே கல்வியின் இறுதிக் குறிக்கோள்கள் ஆகும் என்று கூறுவது மிகையாகாது” (எஸ். சந்தானம், கல்வி உளவியல், ப. 514) என்பர் உளநூலறிஞர். மேலும் மனத்தைப் பற்றி மகரிஷி,

“மனம் என்பது மனித வாழ்வின் விளைநிலம், மனத்தின் தன்மை எதுவோ அதுதான் மனிதனின் தன்மை, மனத்தின் மாண்புதான் மனிதனின் மாண்பு மனத்தின் உயர்வு தான் மனிதனின் உயர்வு” (வேதாத்திரியச் சிந்தனைகள் தொகுதி, 4, ப. 33) என்கிறார்.

மேற்கூறிய கருத்துக்களின் வழி நம் உடலும் உள்ளமும் நன்முறையில் இருந்தால் தான் குறிக்கோள்களை அடையமுடியும் என்றும், மனத்தின் மாண்பினால் மட்டுமே மனிதன் உயர்வடைய முடியும் என்பதும் வலியுறுத்தப்படுகிறது. இம்மனமானது நனவுப்பகுதி, இடைநிலைமனம், நனவிலி மனம் என்று மூன்று நிலைகளைக் கொண்டதாகக் கூறுவர்.

**தொல்காப்பியர் கூறும் உளவியல்**

உளவியல் எனப்படுவது உள்ளத்தின் இயல்புகளைக் கூறுவது. உளம் + இயல் எனப் பிரித்தால் உள்ளத்தின் இயல்களைக் கூறுவது அல்லது ஆராய்வது எனப்பொருள்படும். உளவியலின் அடிப்படை உள்ளுணர்வு, அறியும் ஆற்றல், கவனம், மன உணர்வு அல்லது உணர்ச்சி வேகம், இயல்புஊக்கம், மூளை செயல்பாடுகள், ஆளுமை, நடத்தை மற்றும் உள்ளார்ந்த தொடர்புகள் ஆகியவற்றைக் கொண்டதாகும். இலக்கியப் படைப்பில் ‘உளவியல் உத்தி’ என்பது பற்றித் தொல்காப்பியம் விரிவாகவே பேசுகிறது. தொல்காப்பியர் குறிப்பிடும் ‘முன்னம்’ என்பது உளவியல் பூர்வமான இலக்கிய வெளிப்பாட்டு அம்சம் எனக் கொள்ளலாம்.

**“ஒழிந்தோர் கிளவி கிழவன் கிழத்தியொடு**
**மொழிந்தாங் குரியர் முன்னத்தின் எடுத்தே” (தொல். செய்யுளியல், 496)**

என்னும் நூற்பாவிற்கு விளக்கம் கூறுமிடத்து இதனை “இவ்விடத்து, இம்மொழி , இவர் இவர்க்கு உரிய என்று அவ்விடத்து அவரவர்க்கு உரைப்பது முன்னம்” (இளம்பூரணர், ப. 171) என்று உரைத்துள்ளார். ஆகையால் இவ்வடிப்படையில் சில சங்கச் சான்றுகளைப் பற்றி இக்கட்டுரையில் காணலாம்.

**எண்ண ஆராய்ச்சியைத் தூண்டுதல்**

மற்றவர்களின் சிந்தனையைத் தூண்டும் வகையில் அமைந்த சங்க இலக்கியப் பாடல் பின்வருமாறு.

**“அகவன் மகளே**

**மனவுக்கோப்பன்ன நன்னெடுங் கூந்தல்**

**அகவன் மகளே! பாடுக பாட்டே!**

**இன்னும் பாடுக பாட்டே, அவர்**

**நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே!** **(குறுந்.23)**

என்ற ஔவையார் பாடல் உளவியல் அமைப்புக்குச் சான்றாக அமைகின்றது. அதாவது இப்பாட்டில் தோழியானவள், கட்டுவிச்சியைப் பார்த்து நீ மேலும் மேலும் பாடுக என்றும், தலைவனின் மலையைப் பற்றி நீ மறுபடியும் பாடு என்றும் கேட்கும் பொழுது தாய் போன்றோரின் சிந்தையில் ஓர் ஆராய்ச்சியை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது. இதுவே முன்னம் என்று உரைக்கப்படுகிறது.

**துன்பத்தையும் இன்பமாகக் காணல்**

மனிதன் தனக்கு துன்பம் நிகழும் அதையே நினைத்துக் கொண்டிருந்தால் வாழ்க்கைத் துன்பமாகத் தான் அமையும். அவ்வாறில்லாமல் துன்பத்தையும் இன்பமாகக் காணும் பொழுது வாழ்வில் அனைத்தையும் துணிந்து செயல்படுத்தலாம் என்னும் கருத்துப்பட அமைந்த பாடல் பின்வருமாறு.

**“அன்னாய் வாழி வேண்டு அன்னை நம்படப்பைத்**
**தேன் மயங்கு பாலினும் இனிய அவர்நாட்டு**
**உவலைக் கூவற் கீழ்**
**மான் உண்டு எஞ்சிய கலிழி நீரே!** **(ஐங்குறுநூறு, 203)**

இப்பாடலில் தலைவி தலைவனுடன் திருமணம் செய்து அவனது ஊருக்குச் சென்ற பிறகு அங்கிருக்கும் வறுமை நிலையையும் இன்பமாக ஏற்றுக்கொள்கிறாள் . அதாவது குடிக்கின்ற நீர் கூட மான் உண்டு எஞ்சிய நீராகவே இருந்தாலும் அதுவும் இனிமையாகத் தான் இருக்கும் என்று கூறி எல்லவாற்றையும் இன்பமாகவே நோக்கும் மனப்பான்மையும் உளவியல் அடிப்படையிலானதாக அமைகின்றது.

**கூற்றுநிலை**

உளவியல் என்பது கூற்றுநிலை அடிப்படையில் வரும். அதாவது தான் கூற விரும்பும் அனைத்துக் கருத்துக்களையும் அவ்வாறே சில நேரங்களில் பேசவும் இயலாது, நினைத்ததை அவ்வாறே கூறிவிடவும் முடியாது. இந்த வரையறையைத் தான் உளவியல் என்பர். இதனைத் தொல்காப்பியம்,

**“ஊரும் அயலுஞ் சேரி யோரும்**
**நோய்மருங் கறிநருந் தந்தையுந் தன்ஐயும்**
**கொண்டெடுத்து மொழியப் படுத லல்லது**
**கூற்றவண் இன்மை யாப்புறத் தோன்றும்”** **(தொல். செய்யுளியல், 492)**

என்ற நூற்பாவின் வழி கொண்டெடுத்து மொழிதல் பற்றி விளக்குகிறது. இதற்கு அகநானூற்றின்,

**"அன்னாய் வாழி! வேண்டு அன்னை நம் படப்பைத்**
**தண் அயத்து அமன்ற கூதளம் குழைய**
**இன்இசை அருவி பாடும் என்னதூஉம்**
**கேட்டியோ வாழி! வேண்டு அன்னை நம் படப்பை**
**.....................................................................**
**சுடர்ந்து இலங்கு எல்வளை நெகிழ்ந்த நம்வயின்**
**படர்ந்த உள்ளம் பழுது அன்றாக**
**வந்தனர் வாழி! தோழி அந்தரத்து**
**................................................**
**அகல் வாய்ப் பாந்தட் படாஅர்ப்**
**பகலும் அஞ்சும் பனிக் கடுஞ் சுரனே" (அகம். 68)**

என்ற ஊட்டியார் பாடல் சான்றாக அமைகின்றது. இப்பாடலில் தோழியானவள் தலைவியிடம் தலைவன் இரவுக்குறியில் வருவதற்கு இது தான் தக்க தருணம் என்று கூறுவதாக அமைந்துள்ளது.

**மனப்போராட்டம்**

பொருளீட்டச் செல்லும் தலைவன் தான் செல்லும் வழியெல்லாம் தலைவியை நினைத்தே செல்கின்றான். அதனால் தலைவி மீது ஏற்படும் காம உணர்வானது அதிகமாகத் தோன்றுகிறது. ஆயினும் பொருளீட்ட சென்றதால் இடையில் திரும்பி வர முடியாத சூழல் நிலவுகிறது. அவ்வாறு திரும்புவது இவ்வுலகத்து இயல்பாக அமையாது. இவ்விரண்டு உணர்வுகளுக்கும் இடையே ஏற்படும் மனப்பேராட்டத்தை,

**"நினைத்தனென் அல்லனோ பெரிதே**
**நினைத்து மருண்டனென் அல்லனோ**
**உலகத்துப் பண்பே**
**.................................**
**அனைப் பெருங்காமம் ஈண்டுகடைக்**
**கொளவே" (குறுந். 99)**

என்ற ஔவையார் பாடலின் வழி அறிந்து கொள்ளலாம். இதுபோலவே நற்றிணையிலும் மனப்போராட்டமானது விளக்கப்பட்டுள்ளது.

**"புணரின் புணராது பொருளே பொருள்வயிற்**
**பிரிவின் புணராது புணர்வே" (நற். 16)**

இப்பாடலில் தலைவன் தலைவியோடு இருந்தால் பொருள் ஈட்ட முடியாது. எனவே பொருள் வேண்டி பிரிந்தால் தலைவியுடன் இன்பமாக இருக்க முடியாது என இருநிலைகளில் தலைவனின் உள்ளத்திற்குள் ஏற்படும் போராட்டத்தினை உணர்த்துகிறது.

**காமநோயினால் புலம்பல்**

சங்க காலத்தில் பெண் அதிகம் பேசமாட்டாள். அவ்வாறு இருக்கும் போது தன் காமநோயின் மேலீட்டால் தன் மனக்குமுறலை வெளிப்படுத்தியுள்ளமையை,

**"முட்டு வேன்கொல் தாக்குவேன்கொல்**
**ஓரேன், யானும் ஓர் பெற்றி மேலிட்டு**
**ஆஅ ஒல் எனக் கூவுவேன் கொல்**
**அலமரல் அசைவளி அலைப்ப, என்**
**உயவு நோய் அறியாது துஞ்சும் ஊர்க்கே" (குறுந். 28)**

என்ற பாடல் வெளிப்படுத்துகின்றது. இப்பாடலில் தென்றல் காற்று வருத்த, எனது வருத்துகின்ற காமநோயாகிய துன்பத்தை உணர்ந்து கொள்ளாமல், கவலையில்லாமல் தூங்கும் ஊரில் உள்ளவருக்காக, நான் சுவரில் முட்டிக் கொள்வேனா? கோல் முதல் கருவிகளால் தாக்கிக் கொள்வேனா? அல்லது கூக்குரலிட்டு கத்துவேனா? இன்னது செய்வேன் என்பதை அறியேன் என்கிறாள் தலைவி. இதில் ஒரு தலைவியின் உள்ளக்குமுறலைக் காட்டியுள்ளார் புலவர்.

**முடிவுரை**

உளவியல் என்பது மனத்தைப் பற்றிய அறிவியலாக விளங்குகிறது என்பதும் உடலும் உள்ளமும் நல்ல முறையில் இயங்கினால் அன்றி எச்செயலும் நடைபெறாது என்பதும் விளக்கப்பட்டுள்ளது. தொல்காப்பியர் கூறும் முன்னம் என்பதன் அடிப்படையாகக் கொண்டே தாயின் எண்ண ஆராய்ச்சியைத் தூண்டுவதாகச் சங்கப் பாடல் சான்று காட்டப்பட்டுள்ளது. தொல்காப்பியர் குறிப்பிடும் கொண்டெடுத்து மொழிதல் என்பதற்குக் கூற்றுநிலையிலான தோழி கூற்றுப் பாடல் சான்றுயுடன் விளக்கப்பட்டுள்ளது. துன்பத்தையும் இன்பமாகக் காணும் போக்கும் சான்றுடன் உரைக்கப்பட்டுள்ளது. தலைவனின் பிரிவுத்துயரால் ஏற்படும் மனப்பேராட்டம் பதிவுசெய்யப்பட்டுள்ளது.பெண்ணாக இருந்தாலும் காமநோயினால் ஏற்படும் உள்ள குமுறல் வெளிகாட்டப்பட்டுள்ளது.ஆக, சங்க இலக்கியங்களில் பல பாடல்கள் இத்தகைய உளவியல் அடிப்படையில் காணப்படினும் சில பாடல்கள் மட்டுமே இங்குப் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

**துணைநின்ற நூல்கள்**

1. இளம்பூரணர், (உ.ஆ.), தொல்காப்பியம், சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை, 2001.
2. கு.வெ.பாலசுப்பிரமணியம், அ.மா.பரிமணம் (தலைமை பதிப்பாசிரியர்கள்), 2007, குறுந்தொகை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை-98.

3. கு.வெ.பாலசுப்பிரமணியம், அ.மா.பரிமணம் (தலைமை பதிப்பாசிரியர்கள்), 2007, ஐங்குறுநூறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை-98.

4. கு.வெ.பாலசுப்பிரமணியம், அ.மா.பரிமணம் (தலைமை பதிப்பாசிரியர்கள்), 2007, நற்றிணை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை-98.
5. கு.வெ.பாலசுப்பிரமணியம், அ.மா.பரிமணம் (தலைமை பதிப்பாசிரியர்கள்), 2007, அகநானூறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை-98.
6. வே.இரா. மாதவன், பாஸ்கரன், க. இலக்குமணன், க. இலக்குமணன் சி. (ப.ஆசி)அனைத்துலக வேதாத்திரிய ஆய்வு மாநாட்டு வெளியீடு, தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 2006.
7. எஸ். சந்தானம், கல்வி உளவியல், சாந்தா பப்ளிசர்ஸ், சென்னை, 2002.

ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# சுந்தரர் தேவாரத்தில் உளவியல் சிந்தனைகள்

37

**இரா.ரெதிகா, உதவிப்பேராசிரியர்,**
**தமிழ்த்துறை, எஸ்.எம்.எஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,**
**பேரூர்.**

**ஆய்வுச்சுருக்கம்**

சிவபெருமான் மீது சகமார்க்கம் கொண்டு சுந்தரர் பாடிய தேவாரப் பாடல்களில் பயின்று வரும் உளவியல் சிந்தனைகளை விளக்குவதே இவ்வாய்வுக் கட்டுரையாகும்.

**ஆய்வுநோக்கம்**

ஆய்வுக்கட்டுரையின் நோக்கமானது, தோழனின் பண்புநலன்கள், தோழனின் உணர்வுகள், தோழனுக்குரிய உரிமைகள், இல்லற வாழ்வின் உளவியல் ஆகியவற்றை சுந்தரர் வெளிக்காட்டும் விதத்தை எடுத்துரைப்பதாகும்.

**முன்னுரை**

மனம் சார்ந்த உணர்வுகளே உளவியல். அத்தகைய மன உணர்வுகளைத் தொல்காப்பியர் நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை (**தொல்காப்பியம்**, **மெய்**-3) என்னும் எண்வகை மெய்பாடுகளுக்குள் வைத்து விளக்குகிறார். ஒரு மனிதனின் பெரும்பான்மையான உணர்வுகளை இவ்வெண் வகை மெய்பாடுகளே எடுத்தியம்புகிறது. அவ்வாறு இருக்க 63 நாயன்மார்களில் ஒருவரும், சமயக்குரவர்கள் நால்வரில் ஒருவருமான சுந்தர மூர்த்தி நாயனார் இறைவன் மீது பாடிய சுந்தரர் தேவாரத் திருப்பாட்டுகளில் பயின்று வரும் உளவியல் சிந்தனைகள் இக்கட்டுரையில் இடம்பெறுகின்றன.

உளவியல் சார்ந்த பல கருத்துக்களை சுந்தரர் தம் பாடல்களில் ஒவ்வொரு விதமாக வெளிக்காட்டுகிறார். அவ்வகையில் மனித வாழ்க்கையின் உண்மைத் தன்மையான "இன்பம் உள்ளது போலவே துன்பமும் உளதாதல் கண்கூடு" என்று பின்வருமாறு எடுத்தியம்புகிறார்.

**இன்பம் உண்டேல் துன்பம் உண்டு**
**ஏழை மனைவாழ்க்கை**
**முன்பு சொன்னால் மோழை மையாம்**
**முட்டை மனத்தீரே** (சுந்தரர்.தேவாரம். 7 பதிகம் - 68 பாடல்)

**தோழனின் பண்புநலன்கள்**

அடியோகங்கள் பெரியாரோடு நட்டல் இன்பம் தருவது என்று கருதியிருப்பேமே.ஆயினும் நீர் தலை மாலையை அணிந்துள்ளீர். மயானத்தில் வாழ்வீர். அங்குள்ள சாம்பலை உடல் முழுவதும் பூசிக் கொள்வீர். கொடிய பாம்பைக் கழுத்திலும் தோளிலும் கட்டி வைத்திருக்கின்றீர். தேவர்கள் கடலைக் கடைந்து கொணர்ந்து ஊட்டிய பெருவிடத்தை எளிதாக உண்டீர்.இவ் அண்டத்தைக் கடந்து அதற்குமேல் உண்ண அண்டத்துக்கும் அப்பால் இருப்பீர். அதனால் ஊனினது திரட்சியாக இவ்வுடம்பைச் சுமந்து கொண்டு உம்மோடு தொடர்பு கொள்ள வல்லேம் அல்லேம்.

**"பெரியாரொடு நட்பிணி தென்றிருத்தும்**
**அண்டம் கடந் தப்புற தும்இருந்தீர்"** (சுந்தரர். தேவாரம்.2 பதிகம் - 12 பாடல்)

இப்பாடலில் பெரியாரோடு சென்று நட்புக்கோடல் வேண்டும் என்ற நட்பின் பண்பு விவரிக்கப்படுகிறது. பெரியாரொடு கொள்ளும் நட்பு என்றும் இனிமைத் தரும் என்ற உளவியல் சிந்தனையும் வெளிப்படுகிறது. இக்கருத்தையே திருக்குறளும்,

**அரியவற்று ளெல்லாம் அரிதே பெரியாரைப்**
**பேணித் தமராக் கொளல்.** (திருக்குறள் - 443)

என்று, பெரியாரோடு கொள்ளும் நட்பு அரிதானது என எடுத்துரைக்கிறது.

இறைவரே! உம்மிடத்து உள்ளவை அறியாமையுடைய முயலகன், கொடிய பாம்பு, முண்டநாற்றம் வீசும் வெண்டலை, நெருங்கிய பல பேய்கள், பாட்டுப் பாடித் திரிகின்ற பூதங்கள், பாய்கின்ற புலியின் தோல், நன்மை, தீமை அறியாத பாரிடங்கள் என்னும் இவையே. இவற்றோடு அரையில் பெரிய மணியையுடைய பாம்பைக் கட்டிக்கொண்டு, எங்கட்குப் பொருந்தாத செயல்களையே மேற்கொண்டீர்.

**மூடாய முயலகன் மூக்கப் பாம்பு**
**முடைநா றியவெண் தலைமொய்த்த பல்பேய்**
**பாடா வருபூதங் கள்பாய் புலித்தோல்**
**பரிசொன் றறியா தனபா ரிடங்கள்**
**தோடார் மலர்க்கொன் றையும்துன் னெருக்கும்**
**துணைமா மணிநா கம்அரைக் கசைத்தொன்**
**றாடா தனவேசெய் தீர்எம் பெருமான்** (சுந்தரர் தேவாரம்.2 பதிகம் -பாடல் ; 13)

என்பதன் வழி தன்னோடு பொருந்தாதவர்களோடு, தன்னோடு ஒத்தப் பண்பில்லாதவர்களோடு நட்பு தோன்றாது என்னும் உளவியல் சார்ந்த தோழமைப் பண்பு வெளிப்படுகிறது.

ஏழிசைகளைப் போன்றும், அவ்விசைகளின் பயனாகிய பண்களைப் போன்றும், இனிய அமுதத்தைப்போன்றும் இன்பத்தைத் தந்து, அதன்மேல் என்னுடைய தோழனும் ஆகி, யான் செய்யும் குற்றங்களுக்கு உடன்பட்டு, மாவடுவின் வகிர்போலும், ஒளி பொருந்திய கண்களையுடைய பரவையை எனக்கு ஈந்து என்னை அடிமைகொண்டவனாகிய எனது திருவாரூர் இறைவனை, அறி வில்லாத எளியேன் பிரிந்து இவ்விடத்திற்றானே இருப்பேனோ! இரேன் ; விரையச் சென்று அவனை வணங்குவேன்.

**தோழனுமாய் யான்செய்யுந்**
**துரிசுகளுக் குடனாகி**
**மாழையொண்கண் பரவையைத்**
**தந்தாண்டானை** (சுந்தரர். தேவாரம்.51 பதிகம் பாடல் - 10)

இப்பாடலில் ஒரு தோழனின் குணநலன்கள் விளக்கப்படுகிறது. தோழமையின் செயல்பாடுகள் உளவியல் சிந்தனையோடு எடுத்துரைக்கப்படுகிறது.

**தோழனின் உணர்வுகள்**

திருவெண்ணெய்நல்லூரில் எழுந்தருளியுள்ள முதல்வனே! முன்பே நான் உனக்கு அடியவன். இப்போது அடியவன் அல்லேன் என எதிர்வழக்குப் பேசுவது பொருந்தாது. அப்பொருந்தாச் செய்கையை செய்தமையால் அறிவில்லாதவன் ஆனேன். ஆயினும் என்னை இகழாமல் ஏற்றருள்வாயாக.

**ஆதன்பொருள் ஆனேன் அறி**
**வில்லேன் அருளாளா** (சுந்தரர். தேவாரம்.1 பதிகம் 5 பாடல்)

என்னும் பாடல் வழி அறியாமல் தவறு செய்த நண்பனை மன்னித்து ஏற்றுக்கொள்ள சொல்லும் தோழனின் ஏக்க உணர்வை உளவியலோடு வெளிப்படுத்துகிறார் சுந்தரர்.

திருவெண்ணெய்நல்லூரில் எழுந்தருளியுள்ள அழகனே! உன்னை வணங்குவாரது துன்பங்களைப் போக்குபவனே! என்னை வலிந்து ஆட்கொள்ள வந்தாய். நான் முன்பே உனது அடிமை.

**தொழுவார்அவர் துயர்ஆயின**

**தீர்த்தல்உன தொழிலே** (சுந்தரர். தேவாரம்.1 பதிகம் - 9 பாடல்)

என்னும் பாடல் வழி ஒரு தோழன் மற்றொரு தோழனின் துன்பங்களில் பங்குக்கொள்பவனும், அவனது துயரங்களை துடைப்பவனுமாக ஆகிறான் என்ற தோழமையின் உணர்வுகள் வெளிப்படுகிறது. இதனையே திருக்குறளும்,

**அழிவி னவைநீக்கி ஆறுய்த்து அழிவின்கண்**

**அல்லல் உழப்பதாம் நட்பு.** (திருக்குறள் - 787),

என்று எடுத்துக்காட்டுகிறது.

திருநெல்வாயில் அரத்துறையின்கண் எழுந்தருளியிருக்கும் மாசற்றவனே!. அடியேன் ஒரு கண் இல்லாதவனாய் இருக்கின்றேன். வினவின் உன்னையின்றி வேறொரு பற்றுக்கோடு இல்லேன். ஆதலின் அடியேன் இறப்புப் பொருந்திய பிறவிக் கடலைக் கடந்து கரையேறிப் பிழைத்து போதற்குரிய ஒரு வழியினைச் சொல்லியருள்.

**அற்றார் பிறவிக் கடல்நீந்தி யேறி**

**அடியேனுய் யப்போவ தோர்சூழல் சொல்லே.** (சுந்தரர்.தேவாரம்.3 பதிகம் - 24 பாடல்)

அடியேன் மாதர்களின் வலையிற்பட்டு, பலாப் பழத்தில் வீழ்ந்த ஈயைப் போல அழிவதற்கு முன் அவர் மையலினின்றும் உய்வதற்குரிய ஒரு வழியைக் கூறுவாயாக.

**வாணார் நுதலார் வலைப்பட் டடியேன்**

**பலவின் கனியீயதுபோல் வதன்முன்**

**ஆணோடு பெண்ணா முருவாகி நின்றாய்**

**அடியேனுய் யப்போவ தோர்சூழல் சொல்லே.** (சுந்தரர்.தேவாரம்.3 பதிகம் - 30 பாடல்)

என்னும் பாடல்கள் தன் பிறவிக்கடலைக் கடப்பதற்கு வழிக்காட்டுமாறு தன் தோழனிடம் வேண்டுவதாக அமைந்துள்ளது. தோழர்களுக்கு இடையேயான உளவியல் கருத்துக்களை வெளிப்படுத்துகிறது.

**தோழனின் உரிமைகள்**

பித்தனே! பிறையைக் கண்ணியாகச் சூடியவனே! திருவெண்ணெய் நல்லூரிலுள்ள அருள்துறை என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் தலைவனே!

**பித்தாபிறை சூடிபெரு**

**மானே அருளாளா** (சுந்தரர். தேவாரம்.1 பதிகம் - 1 பாடல்)

என்னும் பாடலில் தன் மனத்தோடு பொருந்தியவனை பித்தனே என விழிக்கும் உளவியல் தன்மை வெளிப்படுகிறது.

ஓணகாந்தன் தளியில் கோயில் கொண்டிருக்கும் பெருமானே! நீர் பொய் சொல்லியே காலங் கழித்து, திருக்கோயிலின் புறத்தும் காணபட்டீர். அகத்தும் காணப்பட்டீர். ஆகவே, நீர் நும் அடியாரை மெய்சொல்லி ஆளமாட்டீர் போலும். இனி பின்வரும் நாட்களிலும் ஒன்றும் தரமாட்டீர் போலும்! இனி பின்வரும் நாட்களிலும் ஒன்றும் தரமாட்டீர் போலும்.

**பொய்ம்மை யாலே போது போக்கிப்**

**புறத்தும் இல்லை அகத்தும் இல்லை**

**மெய்ம்மை சொல்லி ஆள மாட்டீர்**

**மேலை நாளொன் றிடவுங் கில்லீர்** (சுந்தரர்.தேவாரம்.5பதிகம் - 48 பாடல்)

என்னும் பாடலில் உரிமையோடு தன் தோழனை எள்ளி நகையாடும் சுந்தரரின் மன உணர்வு வெளிப்படுகிறது.

திருவெண்காட்டையுடைய இறைவரே! படத்தையுடைய பாம்பினைத் தலையில் வைத்து, பாய்கின்ற புலியின் தோலை அரையிற்கட்டி, திரிபுரங்கள் எரிந்து ஒழியுமாறு வெகுண்டு, அவ்வூரில் உள்ள மூவர்க்கு அருள் பண்ணினீர். இன்ன பெருமைகளையுடையீராய் இருந்தும், தலை ஓட்டினைக் கையில் ஏந்திக் கொண்டு, பேரழகுடைய உருவத்துடன் மனைகள் தோறும் பிச்சைக்குத் திரிவது ஏன்?

**படங்கொள் நாகஞ் சென்னி சேர்த்திப்**

**பாய்பு லித்தோல் அரையில் வீக்கி**

**அடங்க லார்ஊர் எரியச் சீறி**

**அன்று மூவர்க் கருள்பு ரிந்தீர்** (சுந்தரர்.தேவாரம்.6 பதிகம் - 52 பாடல்)

என்னும் பாடலில் சுந்தரர் சிவபெருமானைத் தன் தோழனாகப் பாவிப்பதோடு மட்டுமின்றி, தன் தோழனை முன்னிறுத்தி கேள்விக் கேட்கும் சுந்தரரின் உணர்வு இங்கே வெளிப்படுகிறது.

**இல்லற உளவியல்**

நெஞ்சீரே! நம் இல்வாழ்க்கையை ஆளுதலையுடைய சுற்றத்தார். நம்மீது நிலையற்ற அன்புடையவரே.

**பொய்யர் கண்டீர் வாழ்க்கை யாளர்**

**பொத்தடைப் பான்பொருட்டால்**

**மையல் கொண்டீர் எம்மோ டாடி** (சுந்தரர். தேவாரம்.7 பதிகம் - 67 பாடல்)

என்னும் பாடலில் சமூகத்தில் ஒருவரின் இல்வாழ்க்கையை ஆள்வது சுற்றத்தார் என்ற இல்லற உளவியல் கருத்தை சுந்தரர் வெளிப்படுத்துகிறார். திருவாவூரில் உள்ள தந்தையே! தாய் தந்தை சுற்றத்தார் என்போர் முன்பு தம் மக்கட்குத் திருமணம் நிகழா நின்றது என மகிழ்வார்கள் பின்பு அவர்தாமே பிணம் என்று சொல்லி அகற்றிப் புறங்காட்டுவர்.

**மணமென மகிழ்வர் முன்னே**

**மக்கள்தாய் தந்தை சுற்றம்**

**பிணமெனச் சுடுவர் பேர்த்தே**

**பிறவியை வேண்டேன் நாயேன்** (சுந்தரர்.தேவாரம்.8 பதிகம் - 78 பாடல்)

**அச்சம் சார் உளவியல்**

நம்பியாரூரன் திருப்பரங்குன்ற பதிகத்தில் பாடிய திருப்பாடல்கள் பத்தும் தம் இறை மீதான 'அச்சம்' என்னும் உணர்வை அடிப்படையாகக் கொண்டு பாடப்பட்டவையாகும்.

இறைவரே! உம்மிடத்து அறியாமையுடைய முயலகன், கொடிய பாம்பு, முடை நாற்றம் வீசும் வெண்டலை, பல பேய்கள், பாட்டுப் பாடி திரியும் பூதங்கள், புலித்தோல், நன்மை தீமை அறியாத பாரிடங்கள் என்று பொருந்தாத செயல்களையே மேற்கொண்டீர். அதனால் அடியேங்கள் உம்மை அணுகி உமக்குப் பணிசெய்ய அஞ்சுவோம்.

**ஆடா தனவேசெய் தீர்எம் பெருமான்**

**அடிகேள் உமக்காட் செயஅஞ் சுதுமே** .( சுந்தரர்.தேவாரம்.2 பதிகம் - 13 பாடல்)

என்னும் பாடலில் இறைவனான உம்மோடு மேற்கண்டவை உடனிருக்க உம்மை நெருங்கிப் பணி செய்ய அஞ்சுகிறோம் என்ற உளவியல் சார் உண்மையை வெளிப்படுத்துகிறார்.

**முடிவுரை**

தோழமையோடு பங்குவைக்கும் உளவியல் சிந்தனைகள், இல்லற வாழ்க்கையில் பங்கு வைக்கும் உளவியல் தன்மைகள், இறைவன் மீது உண்டாகக் கூடிய உளவியல் சார் உணர்வுகளை சுந்தரர் வெளிபடுத்தியுள்ள பாங்கினை இக்கட்டுரையின் வயிலாக அறிந்து கொண்டோம்.

**துணைநூற் பட்டியல்**

1. சுந்தரர் தேவாரம் - ஏழாம் திருமுறை
2. திருவள்ளுவர் - திருக்குறள்
3. வள்ளலார் - திருவருட்பா
4. திருமூலர் - திருமந்திரம்
5. தொல்காப்பியர் - தொல்காப்பியம்